மகாமகம்

சிறப்பு மலர் - 2004

T-UN-693



ஏவி, இடர்க்கடல் இடைப் பட்டு இளைக்கின்றேனை
இப்பிறவி அறுத்து ஏற வாங்கி, ஆங்கே
கூவி, அமருலகு அனைத்தும் உருவிப் போக,
குறியில் அறுகுணத்து ஆண்டுகொண்டார்போலும்-
தாவி-முதல் காவிரி, நல் யமுனை, கங்கை,
சரசுவதி, பெற்றாமரைப்புட்கரணி, தெண்நீர்க்
கோவியொடு, குமரி-வரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே.

- திருநாவுக்கரசர் தேவாரம்

அட்டைப்பட விளக்கம்

முன் அட்டையில் காணப்பெறும் கல்சக்கரச்சிற்பம் குடந்தை நாகேஸ்வரன் கோயிலில் உள்ளது. சோழர் காலத்தியது. பிரபஞ்ச இயக்கம், காலச்சக்கரம், தர்மச்சக்கரம் ஆகியவற்றின் குறியீடாக விளங்குவது. பின் அட்டையில் காணப்பெறுவது மகாமகப் பெருவிழாவோடு மிகவும் தொடர்புடைய குடமூக்கு எனும் கும்பேஸ்வர சுவாமி திருக்கோயிலின் இராஜகோபுரமாகும்.

மேதகு ஆளுநர்

தமிழ்நாடு அரசு

P. S. RAMAMOHAN RAO

GOVERNOR OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

Raj Bhavan
Chennai - 600 022

MESSAGE

The Temples of Tamil Nadu reflect the cultural heritage of the region and constitute the State's main tourist attraction. The Mahamagam festival at Kumbakonam, slated to commence towards the end of this month, comes once in 12 years like the Kumbh and Singasth Melas of North India as also the Godavari and Krishna Pushkarams of Andhra Pradesh.

The conduct of the festival is an organizational ordeal and a logistic challenge. The State Government have spared no effort to provide adequate amenities for the lakhs of devotees from all parts of the State and the Country expected to attend the festival, so that they will have a comfortable time and carry back happy memories.

I am sure that the district authorities will strain every nerve to ensure that the festival will prove to be an unqualified success.

(P.S. Ramamohan Rao)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

நாள் ....26.2.2004........

வாழ்த்துச் செய்தி

நாள்தோறும் பூக்கும் மலர்களும் உண்டு; பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்களும் உண்டு. அதைப்போல, ஆண்டுதோறும் நடைபெறும் திருக்கோயில் திருவிழாவும் உண்டு; பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகத் திருவிழாவும் உண்டு.

மாசி மாதத்தில், குரு சிம்ம ராசியிலும், கதிரவன் கும்ப ராசியிலும் வரும்போது, முழு நிலா நாளில் மக நட்சத்திரமும் ரிஷப லக்கினமும் கூடிய நன்னாளே மகாமகத் திருநாள் ஆகும்! அந்தத் திருநாளில், கும்பகோணத்தில், மகாமகத் திருக்குளத்தில், தீர்த்தவாரி என்று அழைக்கப்படும் புனித நீராடல் நடைபெறுகிறது.

''சாற்றரும் எல்லா தீர்த்தப்
பயன் எல்லாம் சாருமாறு
மாற்றரும் புனித மான
மக தீர்த்தம் முழுகல் வேண்டும்''

– என்னும் புராணப் பாடல் இந்தப் புனித நீராடலின் சிறப்பை விளக்குகிறது.

கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, காவிரி, சரயூ, துங்கபத்ரா, கிருஷ்ணா ஆகிய ஒன்பது நதிகளும் மகாமகக் குளத்தில் நீராடி, தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்கின்றன என்பது ஐதீகம்!

பிறரைத் தூய்மைப்படுத்தும் நதிகளே தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள மகாமகக் குளத்தில் நீராடும் என்பதால், பக்தர்கள் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ள மகாமகக் குளத்தில் நீராடுகிறார்கள். கடல் வந்து குளத்தில் குளிப்பதைப் போல், மக்கள் திரள் வந்து மகாமகக் குளத்தில் குளிப்பது மகத்தான காட்சி!

'வடக்கே ஒரு கும்பமேளா! தெற்கே ஒரு மகாமகம்!' என்று சிறப்பித்துச் சொல்லும் அளவுக்குப் பெருமை உடைய இந்த மகாமக விழா இவ்வாண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் நடைபெறுகின்றது.

இந்த விழாவுக்கான ஏற்பாடு ஒவ்வொன்றும் எனது ஆணைக்கேற்ப தீர்க்கமாகச் சிந்தித்து, திட்டமிட்டு, செயல்படுத்தப்பட்டுள்ளது.

மகாமகக் குளத்தைத் தூர்வாரி நீர் நிரப்புதல், மக்கள் நீராடப் படிக்கட்டுகள் அமைத்தல்; 17 சைவ மற்றும் வைணவத் திருக்கோயில்களுக்கு ஆகம விதிப்படி குடமுழுக்கு நடத்துதல்; புறவழிச் சாலைகள் அமைத்தல்; மாநில, மாவட்டச் சாலைகளை மேம்படுத்துதல்; மாபெரும் கலையரங்கம் அமைத்தல்; பல்வேறு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 2000–க்கு மேற்பட்ட பேருந்துகளை இயக்குதல்; பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல்; மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல்; பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்; நியாயமான விலையில் உணவு வழங்கல் – ஆகிய எல்லா நடவடிக்கைகளும் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில் நடைபெறும் இந்தத் தன்னிகரற்ற விழாவில் கலந்து கொள்ளும் மக்கள் அனைவரும் இறையருள் பெற்று, அதன் மூலம் எல்லா நலங்களையும் பெற்று, இன்புற்று வாழ்க என்று மனதார வாழ்த்துகிறேன்.

விழாவின் வெற்றிக்குத் துணை நிற்கும் ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுகள்!

மகாமக விழாவின் மாபெரும் ஆன்மீக சக்தியால்
தமிழகம் தழைக்கட்டும்!
இந்தியா செழிக்கட்டும்!
உலகில் அமைதியும் இன்பமும் கொழிக்கட்டும்!

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்



மாண்புமிகு பி.சி.ராமசாமி
இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்

பி.சி.ராமசாமி
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை
அமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 25.02.2004

வாழ்த்துரை

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ''கோயில் நகர''மாம் திருக்குடந்தையில் நடைபெறும் மகாமகவிழா பார்போற்றும் ஒப்பற்ற விழாவாகும்.

புண்ணிய திருத்தலங்களில் மக்கள் செய்யும் பாவங்கள் கங்கையில் தீரும். ஆனால் அக்கங்கை நதியால் தீர்க்க முடியாத பாவங்களும் திருக்குடந்தை மகாமகத் தீர்த்தத்தால் தீரும் என்பது சிவபெருமான் அருளிய அருள்வாக்காகும்.

கங்கை, யமுனை, சரசுவதி, கிருஷ்ணா, கோதாவரி, காவிரி முதலான ஒன்பது நதி கன்னியர்களும், பிரம்மா உள்ளிட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் வந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகாமகத் திருக்குளத்தில் நீராடிப் புண்ணியம் பெறுவதாக நம் புராணங்கள் கூறுகின்றன.

ஊழிப்பெருவெள்ளத்தில் மிதந்து வந்த அமிர்தகுடம் குடந்தை எனவும், சிவபெருமான் அந்த அமிர்த குடத்தைப் பாணம் எய்து சிதைக்க, சிதறிய பல பாகங்கள் விழுந்த இடங்களே குடந்தையைச் சுற்றியுள்ள புண்ணிய திருத்தலங்கள் எனவும் நம் சமய சான்றோர்கள் தெளிவு படுத்துகிறார்கள்.

இத்தகைய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் முதன்மைமிக்க திருக்குடந்தையில் வரும் 6.3.2004 அன்று நடைபெறவுள்ள மகாமகத் தீர்த்த திருவிழாவிற்கு ஐம்பது லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்து நீராடவுள்ளனர்.

மகாமக விழா சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி கடந்த ஓராண்டு காலமாகவே சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் பகல் வேளையில் பக்தர்களுக்கு அமுது வழங்கும் அன்னதானத் திட்டம், ஏழை எளியவர்களுக்கு இலவசத் திருமணங்கள், நலிந்த திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள், திருக்குட நீராட்டு விழாக்கள் என நாளும் அறநிலையத்துறையில் பொற்காலத்தை நிகழ்த்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருக்குடந்தை மகாமக விழாவும் மகத்தான முறையில் நடைபெற ஆவன செய்து வருகிறார்கள்.

இத்தகைய மகாமக விழாவைச் சிறப்பிக்கும் வகையில் ''மகாமக விழா மலர்'' வெளியிடப்படுவது பக்தர்களுக்குப் பெரும் பயன் விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

மகத்தான மகாமக விழா சிறப்புறவும், ''மகாமகம் 2004 விழா மலர்'' தெய்வீக மணம் பரப்பவும் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்து மகிழ்கிறேன்.

அன்புடன்

பி.சி.ராமசாமி
25.2.2004

(பி.சி.ராமசாமி)

மாண்புமிகு ஆர்.வைத்திலிங்கம்

வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்

ஆர்.வைத்திலிங்கம்
வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : ....

வாழ்த்துச் செய்தி

பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூத்துக் குலுங்கும் குறிஞ்சி மலரை பொதுமக்கள் கண்டுகளிப்பது போல், பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள மகாமகக் குளத்தில் பக்த கோடிகள் புண்ணியம் பெற பக்திப் பரவசத்தோடு அகமும் புறமும் மகிழ்ந்திடும் வகையில் புனித நீராடி மகா மகத் திருவிழாவைக் கொண்டாடுகிறார்கள்.

பல இலட்சம் பக்தர்கள் கூடிக் கொண்டாடும் இத்திருவிழாவிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு போர்க்கால அடிப்படையில் திட்டப் பணிகளை செயல்படுத்தியிருப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நயவஞ்சக எண்ணம் கொண்டோரின் வஞ்சக வலைகளை உடைத்தெறிந்து, அவர்கள் ஏற்படுத்திய தடைக்கற்களை தகர்த்தெறிந்து படிக்கற்களாக்கி, சாதனைகள் படைத்த சத்தியத்தாயின் ஆட்சியில், பக்தர்கள் பேரானந்தம் அடைகிறார்கள் என்றும் பொலிவிழந்திருந்த தெய்வத் திருத்தலங்கள் அனைத்தும் அம்மா அவர்களின் ஆட்சியில் ஒளிவிட்டு பிரகாசிக்கின்றன என்றும், வெள்ளை உள்ளம் படைத்த நல்லெண்ணம் கொண்ட தமிழர்களெல்லாம் பாராட்டுகின்றார்கள்.

தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் இரண்டறக் கலந்து தமிழன்னையின் தவப்புதல்வியாய் மகம் நட்சத்திரத்தில் பிறந்த எங்கள் அம்மாவின் புனித ஆட்சி காலங்களில் மட்டுமே இரு முறை மகாமகம் பிறந்துள்ளது. அடுத்தடுத்து வரும் மகாமகமும் அம்மாவின் நல்லாட்சியில் தான் பிறக்கும் என்பதும் உறுதியாகிவிட்டது.

மகாமகத் திருவிழாவை முன்னிட்டு அம்மா அவர்கள் ரூ.50 கோடி மதிப்பில், கலையரங்கம், 57 கிலோ மீட்டர் சுற்றுச்சாலை, புதுப்பிக்கப்பட்ட நகரதார்ச் சாலைகள், வாய்க்கால் சீரமைப்புப் பணிகள், 45 சிறு பாலங்கள், 3 பெரிய பாலங்கள் உள்ளிட்ட புறவழிச் சாலைகள், சுகாதார வசதிகளுக்காக ஈராயிரம் கழிவறைகள், பக்தர்களின் வசதிக்காக ஈராயிரம் பேருந்துகள் மற்றும் 9 பேருந்து நிலையங்கள் போன்ற அரிய திட்டங்கள் செயல்படுவது கண்டு ஆனந்தம் அடைகிறேன்.

விழாவினையொட்டி வெளிவரும் 'விழா சிறப்பு மலர்' சிறப்புடன் அமைந்திடவும், மகாமகத் திருவிழா வெற்றியுடன் நடைபெற்றிடவும் நாளெல்லாம் 'அம்மா ஆட்சி' நம் ஆட்சி என வணங்கி வாழ்த்தி அம்மாவின் ஆட்சியில் நாம் வாழும் பெருமை கிடைத்ததற்கு எனது இதயங்கனிந்த வணக்கத்தையும் நல்வாழ்த்துக்களையும் காணிக்கையாக்குகிறேன்.

அன்புடன்

(ஆர்.வைத்திலிங்கம்)

திருமதி. லக்ஷ்மிப்ராணேஷ், இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்
மற்றும்
மகாமகம் உயர்மட்டக்குழுத் தலைவர்

லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 5.2.2004

வாழ்த்துச் செய்தி

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகப் பெருவிழா இவ்வாண்டில் சிறப்பாகவும், அமைதியான முறையிலும் நடைபெறவும், பல லட்சக்கணக்கான பக்தர்கள் கும்பகோணத்திற்கு வந்து இறையருள் பெறவும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

(லக்ஷ்மி ப்ராணேஷ்)



திரு. எல்.என்.விஜயராகவன், இ.ஆ.ப.,
அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
மற்றும்
மகாமகம் உயர்மட்டக்குழு உறுப்பினர்-அமைப்பாளர்

எல்.என்.விஜயராகவன், இ.ஆ.ப.,
அரசு செயலர்

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர்
வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 23.2.2004

''சீரார் திருவெழு கூற்றிருக் கையென்னும் செந்தமிழால்,
ஆரா வமுதன் குடந்தைப் பிரான்றன் அடியினைக்கீழ்,
ஏரார் மறைப்பொரு ளெல்லா மெடுத்திவ் வுலகுய்யவே,
சோராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணைநமக்கே''

என்று திருமங்கை ஆழ்வார் குடந்தை ஆராவமுதனைப் போற்றும் பெருமையுடைய பழம்பதியான திருக்குடந்தையில், திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல்பெற்ற திருக்குடமூக்கு, குடந்தைக் கீழ்க்கோட்டம், குடந்தைக்காரோணம் எனும் தொன்மைத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. மகாமகத்திருக்குளம், பொற்றாமரைப் புட்கரணி, காவிரி நதி ஆகிய புனிதத் தீர்த்தங்களையுடைய குடந்தையில் மாமக நன்னாளில் பாரத நாட்டின் புனித நதிகளெல்லாம் சங்கமிப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. அத்தகு சிறப்புடைய மகாமகத்திருவிழாவின் சிறப்பு அங்கமாக மலர் வெளியீடு நிகழ்வது அறிந்து பெருமகிழ்வுற்றேன்.

நாயன்மார்கள், தேவாரப் பனுவல்களில் சிவனாரைப் பூசிக்க அட்டபுட்பங்கள் சிறந்தவை என்று கூறுகின்றனர். பெரியாழ்வாரோ, தம் திருமொழியில் செண்பகம், மல்லிகை, பாதிரி, தமனகம், செங்கழுநீர், புன்னை, குருக்கத்தி, இருவாட்சி, கருமுகை என்ற மலர்களை வரிசையாகச் சொல்லி, ''எண்பகர் பூவும் கொணர்ந்தேன் இன்றிவை சூட்டவா'' என்று பரந்தாமனை அழைக்கின்றார். மணம் கமழும் மலர்கள் தாம் இறைவனுக்கு உகந்தவை ஆகும். அறிஞர் பெருமக்களின் கைவண்ணத்தால் தொடுக்கப்பட்டுள்ள இந்த ஆன்மிக மலர்க்கொத்தான ''மகாமகம் சிறப்பு மலர்'' வாடாமலராகத் திகழ்ந்து ஆன்மீகம், வரலாறு, கலை, பண்பாடு ஆகிய பல்வேறு துறை சார்ந்த அரிய செய்திகள் எனும் மணத்தை என்றென்றும் வீசும் என நம்புகிறேன். இம்மலர் சிறப்புற வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல் என் விஜயராகவன்

(எல்.என்.விஜயராகவன்)

திரு. பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.,

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு
மற்றும் அறநிலையத்துறை

பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும்
அறநிலையத் துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட கோயில்கள் வழிபாட்டு இடங்களாக மட்டுமின்றி கலை பண்பாடுகளை பேணிக்காப்பதும், போற்றுவதற்குரிய இடங்களாக அமைந்துள்ளன. இத்தகு சிறப்பு மிகு திருத்தலங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. காலத்தால் பல கோயில்கள் சிறப்பிழந்து பராமரிக்கப்படாத - வழிபாட்டுக்கும் இயலாத நிலையில் உள்ளது. இந்நிலையை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நலிவடைந்த கோயில்களை மேம்படுத்திட, கோயில்களின் பராமரிப்பு நிதியை தொடங்கி வைத்து, ஒருகால வழிபாடு நடைபெற வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் செயல்படுத்தினார்கள்.

கும்பகோணம் மகாமகம் பெருவிழா பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சிறப்பான விழாவாகும். இவ்விழாவால் தமிழ்நாடு பல சிறப்புகளை பெற்று வருகிறது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் புனித மகாமகம் சமயநெறி தழைத்திடவும், தமிழ்நாட்டின் பாரம்பரியத்தை காத்திடவும் நீர்வழிபாட்டின் மரபை ஒட்டி நடைபெறும் பெரும் திருவிழாவாகும். இத்திருவிழாவில் இந்தியாவில் பலமொழி பேசும் மக்கள் அனைவரும் ஏறத்தாழ 60 இலட்சம் பக்தர்கள் இப்புனித தலத்திற்கு வருகை தந்து மகாமக குளத்தில் புனித நீராடி இறையருள் பெறுவதால் இவ்விழா தேசிய விழாவாக கொண்டாடப்படுகிறது. இத்தகைய பெருமை மிக்க மகாமக திருவிழா தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் வருகின்ற மாசித் திங்கள் 23ஆம் நாள் (06.03.2004) அன்று மக நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளன்று இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவிற்காக கும்பகோணத்தில் அமைந்துள்ள வழிபாட்டு தலங்கள் அனைத்தையும் சிறப்பாக பராமரிப்பு பணிகளை செய்தும் மகாமக விழாவைக் கண்டும், தீர்த்தம் ஆடியும், புண்ணிய கோயில்களில் வழிபட்டும், 14 ஆயிரம் அசுவமேதயாகம் செய்வதால் உண்டாகும் பலன் யாவும் ஒருங்கு பெற வேண்டுகிறேன். மகாமக விழா சிறக்கவும் மகாமக விழா மலர் மணக்கவும் என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

பு.ஏ.இராமையா
1/3/2004

(பு.ஏ.இராமையா)



திரு. ஜி.இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,

ஆணையர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

ஜி.இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

தனி : 2833 48 15
நிகரி : 2833 48 16

119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம் சென்னை-600 034.
மின் அஞ்சல் : endowments_1@sancharnet.in

தேதி : 02.03.2004

வாழ்த்துரை

இந்தியத் திருநாட்டில், மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றால் சிறப்படைந்த தலங்கள் பல உள்ளன. இத்தகைய தலங்களில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பெற்ற சிவத்தலங்கள் 274. இவற்றுள் காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களுள், குடமூக்கு, குடந்தைக் காரோணம் ஆகிய மூன்றும் சிறப்பானவை ஆகும்.

''மூர்த்தி, தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பாரபரமே'' என்பார் தாயுமான சுவாமிகள்.

திருக்கோயில் நகராம் திருக்குடந்தையில் அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர், சோமேஸ்வரர், நாகேஸ்வரர், காசிவிஸ்வநாதர், பாணபுரீஸ்வரர், காளஹஸ்தீஸ்வரர், கௌதமேஸ்வரர், அபிமுக்தீஸ்வரர், ஆதிகம்பட்டவிஸ்வநாதர் ஆகிய அனைத்து மூர்த்திகளாலும், மகாமகத் தீர்த்தம், பொற்றாமரை தீர்த்தம், பகவத் தீர்த்தம், சங்கர தீர்த்தம் ஆகிய தீர்த்தங்களாலும் ஒரு புண்ணியதலமாக விளங்குகிறது.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட சிறப்பு வாய்ந்த அருள்மிகு சாரங்கபாணிசுவாமி, சக்கரபாணி, ராமசாமி ஆகிய திவ்விய தேசங்களாலும் பெருமைமிக்க மாநகர் கும்பகோணம் ஆகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்பெறும் 'மகாமகத்திருவிழா' நடைபெறும் சிறப்பு தலமும் திருக்குடந்தை எனும் கும்பகோணமே.

குருபகவான் சிம்மராசியில் மக நட்சத்திரத்தில் இருக்கவும், சூரியன் கும்பராசியில் சஞ்சரிக்கவும், பௌர்ணமி திதியுடன் வருகின்ற நாளே மகாமகம். கங்கை முதலான புண்ணிய நதிகளாகிய தேவதைகள் அனைத்தும் மகாமகத் தீர்த்தமாடி தாங்கள் பெற்ற பாவங்களை எல்லாம் நீக்கி புனிதம் பெற்றுக்கொள்வதாக தலபுராணம் கூறுகிறது.

ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் பாடல்பெற்ற இக்குடந்தை ஆலயங்களை வழிபட்டு மகாமகக் குளத்தில் தீர்த்தமாடுவோர் துன்பங்கள் நீங்கப் பெற்று இன்பத்தை அடைவர் என்பது திண்ணம். இவ்வாறு சிறப்பு பெற்ற மகாமகத்திருவிழா இவ்வாண்டு மார்ச் மாதம் 6ம் தேதி (06.03.2004) மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது.

சிறப்பு பெற்ற மகாமகத்திருவிழா பற்றிய ''மகாமக விழா மலர் 2004'' வெளிவருவதற்கும் அதனை வெளியிடும் மகாமக மலர் குழுவினருக்கும் எனது உளங்கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள

2.3.04

(ஜி.இராமகிருஷ்ணன்)



திரு. சி.கோசலராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் - தஞ்சாவூர்

அருளாளர்களின் ஆசியுரைகள்

ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

Phone : (04112) 222115
Fax : 224305

Email:- skmkanci@md3.vsnl.net.in.

Sri Chandramouleeswaraya Namaha:

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samsthanam

No.1, Salai Street, Kancheepuram - 631 502.

Date: 8. 1. 2004.

தங்களது 2.1.2004 கடிதமும் புத்தகமும் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது. வரும் மார்ச் மாதம் கும்பகோணத்தில் நடக்க இருக்கும் மஹாமக புண்ய காலத்தை முன்னிட்டு இறைப்பணி மலர் வெளியிட இருப்பதையும் அம்மலரில் ஆன்மீகம், வரலாறு, கலை, பண்பாடு இலக்கியம் போன்ற பல்வேறு கட்டுரைகளும் திருக்கோயில்களின் படங்களுடன் அமைய இருப்பதையும் அறிந்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

புண்ணிய பாரத பூமியின் பெருமைகளுள் தீர்த்தங்களும் ஒன்று. கங்கை, யமுனா, காவேரி, கோதாவரி ஆகிய புண்ய தீர்த்தங்களோடு இந்த புண்ய தீர்த்தங்களுக்கு 12 ஆண்டுக்கு ஒருமுறை விசேஷ புண்ய காலம் அமைகிறது. கங்கா நதிக்கு கும்பமேளாவும் கோதாவரி நதிக்கு புஷ்கர புண்யகாலம் அமைவது போல் கும்பகோண க்ஷேத்ரத்தில் மஹாமக புண்யகாலம் அமைகிறது. கும்பகோண க்ஷேத்ரம் ஸ்தலம். மூர்த்தி. தீர்த்தம். மூன்றிலும் சிறப்புடையது. குரு பகவான் சிம்மராசியிலும் சூர்யன் கும்பராசியிலும் சேரும் பௌர்ணமி தினம் மஹாமக புண்ய காலமாகும். இது 12 ஆண்டுக்கு ஒருமுறை வரும். இந்த மஹாமக தீர்த்த குளக்கரையில் 16 சிவலிங்க மண்டபங்களில் 16 சிவலிங்க மூர்த்திகள் அருள்பாலிக்கின்றன. இக்குளத்தில் 19 தீர்த்த கிணறுகள் உள்ளன. மஹாமக புண்ய காலத்தில் கங்கை முதலிய எல்லா புண்ய தீர்த்தங்களும் மஹாமக குளத்தில் ஸாந்நித்யம் பெறுகின்றன. அப்படிப்பட்ட பெருமையை வெளிப்படுத்தும் அம்மலரின் மூலம் மக்கள் மஹாமகத்தின் பெருமையை உணர்ந்து அந்த புண்ய காலத்தில் அக்குளத்தில் ஸ்நானம் செய்து புண்யங்களை அடைந்து உலகமெங்கும் ஸகல மங்களங்களையும் அடைந்து பரம க்ஷேமமாக வாழ வேண்டுமென்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹிக்கிறார்கள்.

For Sri Kanchi Kamakoti Peetam
Jagadguru Sri Sankaracharya Swamigal Mutt

P Neelakantan

Srikaryam & Agent



ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப
ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகன் சுவாமிகள்
ஸ்ரீ அஹோபில மடம்

SRIKARYAM
SRI AHOBILA MUTT
ஸ்ரீ அஹோபில மடம்
Camp ....

SRI AHOBILAMATH
8-A, AARTHI NAGAR,
(BEHIND [illegible] POLICE STATION)
EAST TAMBARAM, [illegible]-600 059.

Sri ____________

Date 14.01. 2003
(வங்கக் கடல் கடைந்த)

॥ श्रीमते श्री लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः॥

॥ श्रीमते श्री लक्ष्मीनृसिंह दिव्यपादुकासेवक श्रीवण्शठकोप श्री नारायण यतीन्द्र महादेशिकाय नमः॥

உலகத்தில் மிக உயர்ந்ததும், 'பண்ணிய நல்விரதமெல்லாம் பலிக்குமதான'துமான நாடு நம் பாரத நாடு. வட நாட்டில் 'தெளிந்த பெருந்தீர்த்தங்களான' புண்ணிய நதிகள் பலவற்றில் கும்பமேளா போன்ற நன்னாட்களில் புனித நீராடித் தூய்மைப் பெறுகின்றனர். தென்னாட்டில், குறிப்பாக, நம் தமிழ் நாட்டில் எம்பெருமான் உறைந்து அருள் புரியும் திருக்கோயில்களுக்குச் சென்று வணங்கி, கண்ணாரக் கண்டு களித்து வழிபட்டு தூய்மையடைகிறோம். அத்துடன் திருக்கோயில்களில் உள்ள மகோந்நதமான திருக்குளங்களில் நீராடியும் பலனைப் பெறுகிறோம்.

இவ்வகையில் திருக்குடந்தை - குடமூக்கு - கும்பகோணம் என்று வழங்கப்பெறும் திவ்ய தேசத்தில் மாமாங்க மஹோத்ஸவம் - மகாமகப் பெருவிழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசிமக நன்னாளில் கொண்டாடப்படுகிறது. அத்திரு நாளில் மகாமகக் குளத்திலும், ஆராவமுதாழ்வானான ஸ்ரீ சார்ங்கபாணிப் பெருமாள் கோயில் பொற்றாமரைக் குளத்திலும் புனித நீராடி எம்பெருமானை வழிபட வேண்டும் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்நன்னாளில் நீராடினால் கங்கை முதலிய புண்ணிய நதிகளில் ஸ்நாதம் செய்த பலன்களைப் பெறுவோம் என்னும் நம்பிக்கை.

இந்நீராட்டத்தின் பெருமையை, "தண்குடந்தை நகரும் பாடி பொற்றாமரைக்கயம் நீராடப் போனாள் பொருவற்றாள் என் மகள் உம் பொன்னும்ஃதே" என்று தாய்ப் பாசுரமாக முதலில் தமிழை வளர்த்த ஆழ்வார்களில் கடையரான திருமங்கை ஆழ்வார் அருளினார்.

இத்துணை பெருமை வாய்ந்த மகாமகத் திருவிழா நிகழும் ஸ்வபானு மாசி மாதத்தில் (மார்ச்-2004) நடைபெற இருக்கிறது என்பது அறிந்ததே. இந்த பெருவிழாவினையொட்டி ஆன்மீகம், வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் அறிஞர் பெருமக்கள் பலரின் கட்டுரைகளுடனும், திருக்கோயில்கள் குறித்த படங்களுடனும் சிறப்பு மலர் வெளியிடப்பட இருப்பதாக அறிந்து, ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம் மிகவும் ஸந்தோஷப்பட்டாயிற்று. ஏனெனில் இதுபோன்ற மலர்கள் பக்திநெறி குறைந்து அல்லல்பட்டுவரும் இந்நாட்களில், உய்யுமாறு எண்ணி உகந்து நிற்குமதான நன்மார்க்கத்தைக் காட்டுவது குறிக் கொண்டேயாம்.

ஆன்மீகத்தை காட்டும் மறைநெறி மட்டுமன்றி நம் நாட்டுப் பழம்பெரும் வரலாறுகளும், பழம்பெரும் தமிழ் பெருமக்களின் பண்பாடுகளும், கலைகள் பலவும், சங்க இலக்கியங்களும் ஒருமிடறாய் எம்பெருமானான திருமாலையும், அவன் பெற்று உலகத்தை ஆட்சி புரியுமவர்களாகத் திகழும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் முறையாக வணங்கி நன்மைகளைப் பெற வேண்டும் என்று பணிக்கின்றன. இவ்வுயர் நெறியின் மணத்தை இம்மலர் நன்கு பரப்ப வேண்டும் என்று ஸ்ரீமதழகியசிங்கர் பாரிக்கிறார்.

மகோன்னதமான இப்பெருவிழா ஒருவருடைய ஆட்சிக்காலத்தில் இருமுறை நடைபெறுகிறது என்பது பெரும்பாக்கியமாகக் கொள்ளவேண்டிய ஒன்று. இப்பெரும்பேற்றைக் கருத்திற்கொண்டு இப்பெருவிழாவினை மிகச்சிறந்த முறையில் கொண்டாடியும், மேன்மேலும் நீதிநெறி வழுவாதுநின்று அரசாட்சி செய்ய வேண்டும் என்றும், அது தன்னாலே 'தீங்கின்றி நாடெல்லாம் நன்மாரி பெய்து நீங்காத செல்வம் நிறைந்து' நிற்க வேண்டும் என்றும், ஆஸேது ஹிமாசலம் ஸஞ்சரித்து அருள்மாரி பொழியும் தம்முடைய ஆராத்யமூர்த்தியான ஸ்ரீமாலோலனான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை உள்ளிருத்தி 45-ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீநாராயண யதீந்தர மஹாதேசிகன் ஆசாஸித்தருளிகிறார்.

நியமனப்படி,

[signature]



ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
தருமை ஆதீனம்

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001

......26...2........2004

'' ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே ''

தென்னாட்டில் விளங்கும் பழமையான பெரிய நகரம் கும்பகோணம். இவ்வூரின் பழம்பெயர் குடந்தை என்பதாகும்.

கும்பகோணத்தில், குடமூக்கு, குடந்தைக் காரோணம், குடந்தைக் கீழ்க் கோட்டம் ஆகிய தேவாரத் தலங்களும், திவ்யப்பிரபந்தம் பெற்ற சாரங்கபாணிப் பெருமாள்கோயிலும் பிறகோயில்களும் உள்ளன.

இத்தலத்தில் நிகழும் மாசி மகவிழாவும் நிறைவுநாளில் நிகழும் தீர்த்த விழாவும் மிகச் சிறப்புடையன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்குள்ள தீர்த்தத் திருக்குளத்தில் நிகழும் மகாமக தீர்த்த திருவிழா உலகப் புகழ்பெற்ற பெருவிழாவாகும். புண்ணிய நதிகள் பலவும் இந்நாளில் இங்குள்ள மகாமகத் திருக்குளத்தில் நீராடுவதாக மரபு. இதனைப் பெரியபுராணத்தில் தெய்வச்சேக்கிழார்

''பூமருவும் கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில்''

எனக் கூறுகின்றார். திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத் தேவராத்தில்

''தாவிமுதற் காவிரிநல் யமுனைகங்கை
சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தை''.

எனத் தெரிவித்தருள்கிறார். புனிதமான இத்தீர்த்தவிழாவில் பலரும் கலந்து கொண்டு நீராடுவதால் தஞ்சை மன்னர் காலத்தில் இப்பகுதியை நிர்வகித்த கோவிந்த தீட்சிதர் இத்திருக்குளத்தைப் பெரிதாக அமைத்தும் நாற்புறமும் படிக்கட்டுகள் கட்டியும் பல ஆலயங்களிலிருந்து வரும் சுவாமிகள் எழுந்தருள மண்டபங்கள் அமைத்தும் திருக்குளத்தில் புண்ணிய தீர்த்தம் கிணறுகள் அமைத்தும் அழகுறுத்தினார்.

அரசு இவ்விழாவுக்கு வருவோர்க்கு வசதியாகப் போக்குவரத்து வசதிகள் முதலியனவற்றைப் பெரும்பொருட் செலவில் செய்துவருகிறது.

தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் முயற்சியால் இத்தலப்பெருமைகளை மக்கள் அறிந்து போற்ற உதவியாக மகாமக விழா மலர் வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்கிறோம்.

மகாகமக விழா சிறப்புற நடைபெறவும் விழா மலர் அரிய கட்டுரைகளுடன் வெளிவந்து மக்களை மகிழ்விக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை ஆதீனம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364 - 232021

நாள் 26.12.2003

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

அருள் வாழ்த்துரை

'இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே'.

தஞ்சைத் தரணியின் ஆன்மீகம் கலை, வரலாற்றுப் பாரம்பரியம் முதலியவற்றைச் சீரிய முறையில் வெளிப்படுத்தும் 'மகாமகப் பெருவிழா மலர்' வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இம்மலரின் மூலம் நமது ஆன்மீகப் பாரம்பரிய சிறப்புகள் உலகெங்கம் பரவிடவும், எங்கும் சாந்தியும், சமாதானமும் நிலவித் திருவருள் தழைத்திடவும் நமது வழிபடுகடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
காசித்திருமடம் - திருப்பனந்தாள்

உ

சிவ சிவ

Ph: 56655

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.

திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)

தேதி 6.1.04

வாழ்த்துரை

'ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆடும் தீர்த்தன் - என்பது மணிவாசகர்தம் திருவாய்மொழி. எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த தீர்த்தங்களில் நீராடி இறை வழிபாடாற்றல் சமய நெறியில் பொதுவான ஒன்று. அதில், மகாமகத்தில் குடந்தையிலும், கும்பமேளாவில் ஹரித்துவாரிலும் நீராடல் மிகப்பெரிய பயன்களை நல்கக் கூடியது என்பது பல்லாயிரம் பேர் தம் நம்பிக்கை. தாவி முதல் காவிரி முதலான நதிகள் வந்து கலப்பதாகிய மகாமகக் குளத்தில் மகாமக நாளில், தொழுது வணங்கி நீராடி, நீறும் ஆடி, நினைவினில் பெருமானின் திருவுருவமே ஆடி, அற்புதமான பரவசத்தை நல்கக்கூடியது மகாமகம். மொழி, மாநில வேறுபாடுகளின்றி நாடுமுழுவதும் உள்ளோர் வந்து நீராடுவது; கலைஞர்கள், இலக்கியகர்த்தாக்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள் ஆகியோர்தம் கூட்டமைப்பை உடையது. ஆகிய மகாமகப் பெருவிழாவையொட்டி பெருவிழா மலர் ஒன்று வெளியிடப்பெறுவது தக்கது மகிழ்ச்சி.

'காமியம் செய்து காலம் கழியாதே..... சாமியோடு சரசுவதியைப் பணி'... என்ற சமயக்குரவர்தம் வாக்கை நினைந்து, தீர்த்த நீராடிப்பரவசம் பெறும் மகாமக விழா மலர் நுட்பமான செய்திகள், தத்துவங்கள், கவிகள் ஆகியவற்றுடன் அழகுறு சொர்ண மலராய் மலர்ந்து பக்தி, கலை மணம் கமழச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

'சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப்பொருள் பாடி அப்பொருள் ஆமாபாடி'

சுபம்

மகாமகம் -2004

உயர்மட்டக்குழு

திருமதி. **லக்ஷ்மி பிராணேஷ்,** இ.ஆ.ப., தலைமைச் செயலாளர் - தலைவர்

திரு. **என்.நாராயணன்,** இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் நிதித்துறை, தலைமைச் செயலகம் - உறுப்பினர்

திரு. **வி.ஆனந்த்,** பொது மேலாளர், தென்னக இரயில்வே, சென்னை - உறுப்பினர்

திரு. **ஐ.கே.கோவிந்த்,** இ.கா.ப., காவல்துறைத்தலைவர், சென்னை - உறுப்பினர்

திரு.**எல்.என்.விஜயராகவன்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை - உறுப்பினர் மற்றும் அமைப்பாளர்

திரு. **எஸ்.இராமகிருஷ்ணன்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை - உறுப்பினர்

திரு. **எஸ்.பி.இளங்கோவன்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை - உறுப்பினர்

திரு. **ஆர்.ரெத்தினசாமி,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், எரிசக்தித்துறை - உறுப்பினர்

திருமதி. **ஷீலாராணி சுங்கத்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை - உறுப்பினர்

திரு. **கே.ஞானதேசிகன்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், உயர்கல்வித்துறை - உறுப்பினர்

திரு. **பி.இராமமோகன்ராவ்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், நெடுஞ்சாலைத்துறை - உறுப்பினர்

திரு. **சையத் முனீர்ஹோடா,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், உள்துறை - உறுப்பினர்

திரு. **வ.ராமதாஸ்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை - உறுப்பினர்

திரு. **என்.எஸ்.பழநியப்பன்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், பொதுப்பணித்துறை - உறுப்பினர்

டாக்டர். **என்.சுந்தரதேவன்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், வருவாய்த்துறை - உறுப்பினர்

திருமதி. **சாந்தா ஷீலா நாயர்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை - உறுப்பினர்

திரு. **பு.ஏ.இராமையா,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறை - உறுப்பினர்

திரு. **ஆர்.கற்பூரசுந்தர பாண்டியன்,** இ.ஆ.ப., அரசுச் செயலாளர், போக்குவரத்துத்துறை - உறுப்பினர்

திரு. **எஸ்.வி.வெங்கடகிருஷ்ணன்,** இ.கா.ப., கூடுதல் காவல்துறைத் தலைவர், (சட்டம் மற்றும் ஒழுங்கு) - உறுப்பினர்

திரு. **எஸ்.ஜார்ஜ்,** இ.கா.ப., காவல்துறைத் தலைவர், (மத்திய மண்டலம்) திருச்சி - உறுப்பினர்

திரு. **சி.கோசலராமன்,** இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் - உறுப்பினர்

திரு. **கே.சி.மஹாலி,** இ.கா.ப., காவல்துறைத் துணைத்தலைவர், தஞ்சாவூர் - உறுப்பினர்

திரு. **ஜெ.ராஜேந்திரன்,** இ.கா.ப., காவல்துறைக் கண்காணிப்பாளர், தஞ்சாவூர் - உறுப்பினர்

மகாமகம் -2004

மலர்க்குழு

திரு. **சி.கோசலராமன்,** இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்	- தலைவர்
திரு. **பெ.இராஜேந்திரன்,** திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை	- அமைப்பாளர்
திரு. **குடவாயில் பாலசுப்ரமணியன்,** சரசுவதி மகால் நூலகம்	- ஒருங்கிணைப்பாளர்
திரு. **க.இராஜநாயகம்,** இணை ஆணையர், அறநிலையத்துறை, மயிலாடுதுறை	- உறுப்பினர்
திரு. **சி.இளங்கோவன்,** இணை ஆணையர், அறநிலையத்துறை	- உறுப்பினர்
திரு. **வே.முருகன்,** வருவாய்க் கோட்ட அலுவலர், கும்பகோணம்	- உறுப்பினர்
திரு. **ஆர்.சத்தியமூர்த்தி,** நகராட்சி ஆணையர், கும்பகோணம்	- உறுப்பினர்
திரு. **வே.இலட்சுமணன்,** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)	- உறுப்பினர்
திரு. **வெ.அய்யப்பன்,** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு)	- உறுப்பினர்
திரு. **கே.பி.நல்லதம்பி,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்	- உறுப்பினர்
திரு. **இரா.முத்து,** மண்டல உதவி இயக்குநர், கலை பண்பாட்டுத்துறை	- உறுப்பினர்
திருமதி. **பானுமதி,** உதவி இயக்குநர், ஊராட்சிகள்	- உறுப்பினர்
திரு. **எம்.வளையாபதி,** முன்னோடி வங்கி மேலாளர், I.O.B.	- உறுப்பினர்
திரு. **சி.ராமலிங்கம்,** மண்டலப் போக்குவரத்து அலுவலர்	- உறுப்பினர்

மலர் பதிப்புக்குழு

முனைவர். **குடவாயில் பாலசுப்ரமணியன்,** சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

முனைவர். **இராசு.பவுன்துரை,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முனைவர். **பா.ஜம்புலிங்கம்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

திரு. **த.ம.சரபோஜி,** சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

திரு. **எஸ்.சுதர்ஷன்,** சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

திரு. **ஆர்.சுப்ரமணியன்,** சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

திரு. **என்.விசுவநாதன்,** சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

திரு. **வே.இலட்சுமணன்,** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர்

திரு. **க.கபிலர்,** உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, தஞ்சாவூர்.

பதிப்புரை

இந்தியத் திருநாட்டின் வரைபடத்தில் வரலாற்றுச் சிறப்பும், கலை நயமும் மிகுந்த கோயில்கள் அதிகம் உள்ள பகுதி எதுவென நோக்குவோமாயின் அது பொன்னி நதியால் வளம்பெறும் சோழ நாடேயாகும். அத்தகு சிறப்புடைய சோழ நாட்டின் கோநகரங்களுள் ஒன்றான குடந்தையம்பதி "கோயில்களின் நகரம்" என்று பன்னாட்டவரால் அழைக்கப்பெறும் சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

பன்னிரு ஆண்டுகளுக்கொருமுறை பாரத நாட்டு மக்கள் பெரும்பாலானவர்களின் கவனமும் இந்நகர் நோக்கித் திரும்புவது பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நிகழ்ந்து வரும் அற்புதமாகும். அலகாபாத் கும்பமேளா, நாசிக் புஷ்கரம் என வடபுலத்து நீராட்டுப் பெருவிழாக்கள் போன்றே, இந்நீராட்டுப் பெருவிழாவும் மகத்துவம் வாய்ந்ததாகப் போற்றப்பெறுகின்றது. இவ்விழாவின் அங்கமாகப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றபோதும் அதில் ஒரு சிறப்பு அங்கமாகத் திகழ்வது மலர் வெளியீடாகும். மன்னவர்கள் குடந்தை நகரில் பல கற்கோயில்களைச் சமைத்து வரலாறு படைத்தனர். அறிஞர் பெருமக்களோ ஒவ்வொரு மகாமகத்தின் போதும் தங்கள் சொற்கோயில்களைப் படைத்து குடந்தை எனும் கோயில் நகருக்கு மேலும் பெருமை சேர்த்து வருகின்றனர். அவ்வகையில் இந்த மகாமகப் பெருவிழாவின் தடையமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள், தொல்லியல் நிபுணர்கள், இலக்கிய வல்லுநர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், மாணவச் செல்வங்கள் எனப் பலரும் இணைந்து அருள்மணம் கமழும் ஒரு அரிய மலரைத் தங்கள் கைவண்ணத்தால் உருவாக்கியிருக்கிறார்கள். இம்மலர் படிப்போர் நெஞ்சத்தை ஈர்க்கும் திறம் படைத்ததாக மட்டுமல்லாமல் கண்ணுக்கு விருந்தளிக்கும் கலைப்பெட்டகமாகவும் மலர்ந்திருக்கிறது. குறிப்பாக சில்பி என்ற அமர ஓவியர் கற்றுத்தந்த ஒரு ஓவிய மரபை குடந்தை அரசு கவின்கலைக் கல்லூரி மாணவர்கள் மீண்டும் படைத்துக் காட்டியிருப்பது பாராட்டத் தகுந்ததாகும்.

இம்மலரை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக மலர்க்குழுவினருக்கும், பதிப்புக் குழுவினருக்கும், மலர் வெளியிட விளம்பரங்கள் மூலம் நிதி நல்கிய அறநிலையத்துறையினருக்கும், வங்கிகளுக்கும், நேர்த்தியாக அச்சிட்ட என்.எஸ்.பி.அச்சகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(சி. கோசலராமன்)

உள்ளுறை

1.	மகாமகம்	மகாகவி பாரதியார்	1
2.	இராஜசடங்கு என்னும் மகாமகப்பெருவிழா	இ. சுந்தரமூர்த்தி	3
3.	வரலாற்றில் முருகப்பெருமான்	இரா. நாகசாமி	5
4.	தாவி முதல் குமரி வரை	குடவாயில் பாலசுப்ரமணியன்	10
5.	குடந்தையில் சூரியன் வழிபாடு	கி. ஸ்ரீதரன்	14
6.	திருக்குடந்தைப் புராணம்	வே. இரா. மாதவன்	18
7.	பஞ்சகுரோசத்தலங்கள்	ப. நா. பாலசுப்ரமணியன்	22
8.	பழையாறைத் திருக்கோயில்கள்	சுபாஷிணி சாரி	32
9.	சப்தஸ்தானத் தலங்கள்	பா. ஜம்புலிங்கம்	40
10.	கும்பகோணம் திருப்புகழ்	ரா. கிருஷ்ணன்	46
11.	திரிபுவன வீரேச்சரம்	நா. மார்க்சீய காந்தி	49
12.	குடந்தைக் கீழ்க்கோட்டம்	மா. சந்திரமூர்த்தி	54
13.	திருவலஞ்சுழி க்ஷேத்திரபாலர் கோயில்	ஆ. பத்மாவதி	59
14.	அவனிபாஜன பல்லவேசுவரச் சிற்பங்கள்	மு. நளினி, இரா. கலைக்கோவன்	62
15.	புலனாடுமுன் புள்ளமங்கை செல்வோம்	மு. அகிலா	66
16.	சோழ மண்டலத்தில் பண்டைய நீர்ப்பாசனம்	த. ம. சரபோஜி	69
17.	சூழ்புனல் குடந்தையான்	எஸ். சுதர்ஷன்	73
18.	தளி அர்ச்சிப்போர்	இரா. சிவபாலன்	76
19.	கும்பேசர் குறவஞ்சி	ராம. கௌசல்யா	80
20.	குடந்தைக்கிடந்தான் கோயில்	அர. வசந்த கல்யாணி	86
21.	பரகாலன் பகர்ந்த பக்திநெறி	ஆ. வீரராகவன்	91
22.	மங்களாசாசன மாண்பும் அர்த்த பஞ்சகப் பாங்கும்	ஜே. அரங்கசாமி	95
23.	நல்லூர் மாடக்கோயில்	இரா. சிவானந்தம்	103
24.	திருச்சேலூர்	சீ. வசந்தி	109
25.	சப்தமங்கைத் தலங்கள்	என். செல்வராஜ்	117
26.	பேரேரியின் நடுவில் ஒரு சிவன்கோயில்	ச. பரணன்	122
27.	மகாமகத் திருக்குளம்	இராசு. பவுன்துரை	124
28.	அயல்நாட்டுக் கோயில்களும் - தீர்த்தவாரிகளும்	வ. மகேசுவரன்	127
29.	மழை நீர் சேகரிப்பில் மன்னர்களின் பங்களிப்பு	மு. மதியழகன்	131
30.	தமிழகம் போற்றும் மாசிமகத் திருநாள்	வெ. இராமமூர்த்தி	134
31.	ஏட்டுச் சுவடிகளில் குடந்தைப் புராணம்	ச. திலகம்	137
32.	கும்பேசமும் கோணேசமும்	எஸ். இராஜலக்ஷ்மி	142
33.	கும்பகோணம் இராமசாமிகோயில்	த. சந்திரகுமார்	145
34.	திருச்சத்திமுற்றம் சிவக்கொழுந்தீசர் திருக்கோயில்	கி. கந்தன்	148
35.	தஞ்சை ஓவியம்	எஸ். ராதா	152
36.	கலம்காரி ஓவியங்கள்	ஆர். எம்பெருமாள்	155
37.	திருவேரகத்தில் உருவாகும் திருவுருவங்கள்	க. மோகன்ராஜ்	157
38.	டபீர்பண்டிதரும் கும்பகோணமும்	சு. சாந்தி	160
39.	மகாமகமும் மங்கல நீராடலும்	திருஞானசம்பந்தம்	164
40.	Swastika	T.L.Subash Chandra Bose	167
41.	Sarasvati Mahal Library...	P.Perumal	171
42.	வானியலும் புனித நீராடலும்	சாமிநாதன்	176
43.	நதிகளின் சங்கமம் (கவிதை)	இரா. சுப்பராயலு	178
44.	நவநதிகள் நாடிவரும் திருக்குடந்தை (கவிதை)	துரை. ஜெகதீசன்	179
45.	தண்ணீர்த் தவம் (கவிதை)	ராகவ். மகேஷ்	180
46.	மகாமகம் - அரசு ஆற்றிய பணிகள்	சி. கோசலராமன்	181
47.	ஓவியத்தொகுப்பு	கவின்கலைக் கல்லூரி மாணவர்கள்	185

மகாமகம்

மகாகவி சுப்ரமணிய பாரதியார்
(1921-ஆம் ஆண்டு மகாமகத்தின்போது எழுதிய கட்டுரை)

24பிப்ரவரி 1921ரெளத்திரி மாசி 13

இந்த்ரனை தேவ தேவன் என்ப. மற்ற மனிதருக்கு வானவர் எப்படியோ, அப்படி வானவர்க்கவன் என்பது குறிப்பு. வடமொழியில் வால்மீகி, காளிதாஸர்களையும், தமிழில் கம்பனையும் புகழேந்தியையும், இங்கிலீஷ் ஷெல்லியையும், "கவிகளின் கவி" என்று சிறப்பித்துச் சொல்லுகிறார்கள். அதாவது, மற்ற மனிதருக்குக் கவிகளால் எத்தனை புதிய சுவை கிடைக்கிறதோ, அத்தனை புதிய சுவை கவிஞருக்கு அவ் வால்மீகி முதலியவர்களிடம் கிடைக்கிறதுதென்பது குறிப்பு.

அதுபோல கும்பகோணத்திலுள்ள அமிர்தவாவிகள் என்று சொல்லப்பட்ட பொற்றாமரைக் குளம், மஹாமகக்குளம், இவ்விரண்டும் புண்ய தீர்த்தங்களுக்குப் புண்யதீர்த்தமென்று புராணம் சொல்லுகிறது. அதெப்படியெனில் முற்காலத்தில் ஒன்பது தீர்த்த தேவதைகளும் ஈசனிடத்தில் சென்று, "கடவுளே, உலகத்திலுள்ள பாவிகளெல்லாரும் எங்களிடம் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களையெல்லாம் எங்களுக்குக் கரைத்து விட்டுவிட்டுப் புண்யாத்மாக்களாகிச் செல்லுகின்றனர். நாங்கள் சம்பாதிக்கும் இந்தப் பாவங்களுக்கெல்லாம் விமோசனம் அருள் புரிய வேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்தனர். அவர்களிடம் கருணை பாவித்து எம்பெருமான், "புண்ய தீர்த்தங்களே! பாவங்களாலே தீண்டப்படாத அமிர்த வாவிகள் இரண்டு நான் கும்பகோணத்தில் சமைத்திருக்கிறேன். அவற்றில் சென்று ஸ்நானம் புரிந்தால் உங்களுடைய பாவங்கள் விலகிவிடும்" என்று கட்டளை புரிந்தார்.

பன்னிரண்டு வருஷங்களுக் கொருமுறை இங்கு கங்கை முதலிய தீர்த்த தேவதைகள் வந்து ஸ்நானம் புரியம் ஸமயமாகிய மஹாமக புண்யகாலம் நேற்று (செப். 22) செவ்வாய்க்கிழமையன்று கும்பகோணத்தில் கொண்டாடப்பட்டது. லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் நேற்று அதில் ஸ்நானம் செய்திருப்பார்கள்.

ஆனால் இத்தனை பேர்களும் ஸர்வ பாபரஹிதர்களாய்ப் பரம சுத்தத் தன்மை யெய்தி விடுவார்களோ என்று சில மதப் பற்றில்லாதார் ஆக்ஷேபிக்கலாம். தீர்த்த ஸ்தலங்கள், புண்ய க்ஷேத்ரங்கள், எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கின்றன. யூதர்கள் யெருஸலேமைப் புண்யக்ஷேத்ர மென்கிறார்கள். கிருஸ்தவர்கள் யெருஸலேம், நஜரேத், ரோமாபுரி முதலிய பல பல புண்ய க்ஷேத்திரங்களைக் கொண்டாடுகிறார்கள். முஸ்லீம்கள் மக்கம், மதீனம், யெருஸலேம் முதலிய கணக்கற்ற க்ஷேத்ரங்களைக் கொண்டாடுகிறார்கள். பௌத்தர் கயை முதலிய ஆயிரக்கணக்கான புண்ய க்ஷேத்ரங்களைப் போற்றி வருகிறார்கள்.



ஆனால், மதப் பற்றுடையார், அஃதற்றோர் என்னும் இரு திறத்தாரும் உணர்ந்துகொள்ளும்படி, இதுபோன்ற தீர்த்த யாத்திரைகளின் தத்துவத்தை இங்கு விளக்குவோம். இவற்றில் பாவமழிந்து புண்யத் தன்மை பெற வேண்டுமானால், உண்மையான நம்பிக்கையிருக்கவேண்டுமென்று நம்முடைய புராதன ஹிந்து சாஸ்த்ரங்கள் மிகத்

தெளிவாக வற்புறுத்தியிருக்கின்றன. உண்மையான மனக்கோளின்றி கங்கையில் முழுகினாலும், மஹாமகத்தில் மூழ்கினாலும், பாபகர்மந்தொலையாதென்று சாஸ்த்ரங்கள் தெளிவுபடத் தெரிவிக்கின்றன. இனிமேல் நாம் பாவம் பண்ணுவதில்லையென்ற மனோ நிச்சயம் வேண்டும்.

தீர்த்த யாத்திரையின் அர்த்தமும் பயனும்

இந்தத் தீர்மானந்தான் பரிசுத்தத் தன்மை கொடுக்கிறது. ஒருவன் இந்த க்ஷணமுதல் பாவம்செய்வதில்லை யென்று மனவுறுதி செய்து கொள்ளுதலாகிய அக்நி மயமான செய்கையாலேயே அவன் அதுவரை செய்த பாவமெல்லாம் எரித்துவிடப்படுகிறது. "ஞானாக்நிஸ் ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேர்ஜுன" என்று பகவத் கீதையில் கடவுள் சொல்லியிருக்கிறார். பாவத்தை இனிச் செய்ய்வில்லையென்ற தீர்மானம் உண்மையாக இருக்கவேண்டும். ஞானமே அவ்வளவுதான். அதைக் காட்டிலும் பெரிய ஞானம் கிடையாது. சிலர் தவத்தால் ஞானமெய்த நாடுகிறார்கள். சிலர் தானத்தால், சிலர் ஆராய்ச்சியால், சிலர் தியானத்தால், சிலர் பூஜையால் ஞானமெய்த முயலுகிறார்கள். ஆனால் எல்லா வழிகளும் உண்மையான வழிகளே. இவையெல்லாம் ஞானத்தைத் தரும். ஆனால் எந்த வழியாலே தரும்? பாவத்தைத் தீர்த்துவிடுதலாகிய வழியிலே தரும். அவற்றால் பாவம் நீங்கும். அதனால் மோக்ஷம் அல்லது அறிவு மயக்கம் தெளியும். அதிலிருந்து ஞானமுண்டாகும். ஞானமாவது எல்லாம் கடவுள் மயமென்ற அனுபவம். பாவமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவித்தல். இங்ஙனமே, புண்யமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பக் கலப்பில்லாத சுத்தமான இன்பம் விளைவித்தற்குரிய செய்கையென்பது சாஸ்த்ர கோடிகளின் பரம ஸித்தாந்தம். எல்லாம் ஆத்மா எல்லாம் கடவுள் ஆதலால், எல்லாம் தான் என்ற ஞானத்தால் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் குணம் நீங்கிவிடும். அதாவது பாவம் போய்விடும். நியாயம் புண்யம், அநியாயம் பாவம். ஹிதம் புண்யம், அஹிதம் பாவம். ஸத்யம் புண்யம், அஸத்யம் பாவம். திருப்பதி புண்யம், துக்கம் பாவம்.

மரணமாவது பாவத்தின் கூலியென்று கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறது.

"இங்ஙனம் பாவத்தைத் துறந்துவிட விரும்புவோனுக்கு மனோ நிச்சயமும், ஞான உதயமும் கதியாயின், பணச் செலவு செய்து ரயிலேறிக் கும்பகோணத்துக்கும், காசிக்கும் ராமேசுவரத்திற்கும் ஏன் போக வேண்டும்?" என்று சிலர் வினவக்கூடும்.

மன மாறுதல்கள் சாசுவதமான இடத்தே விரதங்கள் என்று கூறப்படும். பெரிய சாசுவதமான ஸங்கல்பங்கள் விரதங்களெனப்படும். இந்த விரதங்கள் மனிதருடைய நினைப்பில் நன்றாக அழுந்தும் பொருட்டு ஆன்றோர் உலகமெங்கணும் இவற்றுக்குச் சில சடங்குகள் வகுத்திருக்கிறார்கள். கல்வி தொடங்கப் போகிறபோது ஒரு சடங்கு நடத்தப்படுகிறது. விவாகம் பண்ணும்போது மிகவும் கோலாகலமான கிரியைகள் நடக்கின்றன. புதிய வீட்டில் குடிபுகும்போது ஒரு சடங்கு நடத்துகிறோம். இவற்றின் நோக்கம், நாம் ஏதேனும் அமங்களத்தை நீக்கி மங்களத்தை சாசுவத உடைமையாகச் செய்துகொள்ள வேண்டுமென்பதேயாம். நான் மேலே கூறியபடி, மரணம் பாவத்தின் கூலி என்று கிறிஸ்தவவேதம் சொல்லுவதைக் கருதுமிடத்தே, அமங்களமனைத்திலும் அமங்களமானது பாவமென்று விளங்குகிறது. எனவே, மங்களங்களிற் சிறந்தது புண்யமென்பதும் வெளிப்படையாம்.

இப்படிப்பட்ட பாவத்தைக் களைந்து புண்யத்தைப் போர்த்துக்கொள்வதாகிய ராஜ விரதத்துக்கு ஒரு சடங்கு வேண்டாவோ? அவ்விதச் சடங்கே மஹாமக முதலிய புண்ய தீர்த்த யாத்திரை யென்க.

இராஜ சடங்கு என்னும் மகாமகப் பெருவிழா

முனைவர். இ.சுந்தரமூர்த்தி
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

திருக்கோயில்கள் சமுதாய அறநிலையங்களாக விளங்குகின்றன. பழந்தமிழ்ச்சான்றோர் திருக்கோயிலை மையமாக வைத்தே அனைத்துச் சமுதாயப் பணிகளையும் மேற்கொண்டனர். அருளாளப் பெருமக்களும் தலங்கள் தோறும் சென்று மக்கட்கு அருளுணர்வையும், சமுதாய விழிப்புணர்வையும் ஊட்டினர். திருக்கோயில்களை அருங்கலைகளைப் போற்றி வளர்க்கும் நிறுவனங்களாக அமைத்தனர்.

தமிழகத்தின் பலநூறு ஆண்டுகளின் பெருமைகளையும், அரியகலை, தொழில் நுட்பங்களை விளக்கும் அரிய கருவூலங்களையும் தமிழர்தம் பல்வேறு திறமைகளையும் திருக்கோயில்கள் நமக்குக் காட்டுகின்றன. திருக்கோயில்கள் மன்னர்தம் ஆளுமைத்திறங்களுக்குச் சான்றாகவும் விளங்குகின்றன. திருக்கோயில்களில் நடைபெறும் அரிய விழாக்கள் நம்முடைய பண்பாட்டையும், வரலாற்றையும் காட்டுவனவாக அமைகின்றன.

திருக்கோயில்களின் திருத்தலமாக விளங்குவது கும்பகோணம். திருக்குடந்தை என்றும் குடமூக்கு என்றும் குடவாயில் என்றும் போற்றப்பெறும் இத்திருத்தலம் வரலாற்றில் தனிப்பெறும் புகழ்பெற்ற நகர். சோழர்கள் ஆட்சியில் கலைமலிந்த திருநகரமாய்ப் பொலிந்த தஞ்சையின் வரலாற்றோடு பெருந்தொடர்பு உடையது.

காவிரிப் பகுதியில் கடலோடு ஆறுகலக்கும் பகுதி முக்கோணவடிவத்தில் அமைந்திருக்கும். குடத்தின் மூக்குப்பகுதி போல் அமைந்திருப்பதால் அப்பெயர் பெற்றது. 'குடக் காவிரி நாடா அகளங்கா' என்று விக்கிரம சோழனைப் பாராட்டுவர். இலக்கியங்களிலும், திருமுறைகளிலும், கல்வெட்டுகளிலும் கும்பகோணம் 'குடமூக்கு' என்றே அழைக்கப்பெறுகின்றது. திருஞானசம்பந்தர் திருக்குடமூக்கைச் சார்ந்து வழிபட்டதைச்

திருஞானசம்மபந்தர் திருக்குடமூக்கினைச்சேர வருவார்தம் பெருமானை வன்தமிழில் திருப்பதிகம்
உருகாநின்று உளமகிழக் குடமூக்கை உகந்திருந்த
பெருமான்எம் இறை என்று பெருகுஇசையால் பரவினார்

திருஞானசம்பந்தரால் பாடும் பேறுபெற்ற கும்பேசுவரர் கோயில் புகழ்பெற்ற கோயில். 'குடமூக்கின் பெருமான் எம் இறைவன்' என்று கும்பேசுவரர் போற்றப்படுவார். கும்பகோணத்தில் கொண்டாடப்பெறும் மகாமகம் உலகப் புகழ் பெற்றது. 21ஆம் நூற்றாண்டின் முதல் மகாமகம் இந்த ஆண்டு (2004) நிகழவுள்ளது.. 20ஆம் நூற்றாண்டில் எட்டு மகாமகங்கள் நிகழ்ந்துள்ளன. *(1909, 1921, 1933, 1945, 1956, 1968, 1980, 1992)*

'அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும் புறத்தூய்மை நீரான் காணப்படும்' என தூய்மையையும், நீரையும் வள்ளுவர் தம் சிந்தனையால் இணைத்துப் புலப்படுத்தியுள்ளார். புறத்தூய்மையை மட்டுமல்ல அகத்தூய்மையையும் நீராட்டால் பெறலாம் என்பதைக் காட்டுகிறது இத்தகைய நீராட்டு மகாவேள்விகள்.

சென்ற நூற்றாண்டில் 1921ஆம் ஆண்டு நடந்த மகாமகம் குறித்து மகாகவி சுப்பிரமணிய பாரதி ஓர் அரிய கட்டுரையை எழுதியுள்ளார். தீர்த்த ஸ்தலங்கள், புண்ணிய ஷேத்திரங்கள் எல்லா மதத்தாருக்கும் பொதுவாக அமைந்திருக்கின்றன. பாவத்தைத் துரத்திட விரும்புபவர்க்கு ஒரு மனோ உறுதியை இத்தகைய விழாக்கள் நமக்கு தெளிவுறுத்துகின்றன என்று குறிப்பார்.

'பாவத்தைக் களைந்து புண்ணியத்தைப் போட்டுக்கொள்வதாகிய ஒரு ராஜ சடங்கு' என்று மகாமகத்தை மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார்.

சேக்கிழார் மகாமகத்தில் நீராடுவதை,

தூமருவும் மலர்க்கையில் தொழுது
வலம்கொண்டணைந்து

காமர்கெட நுதல்விழித்தார் கழல்
பணிந்து கண்களித்தார்

என்று நெகிழ்ந்துரைப்பார்.

பவுர்ணமியும் மகநட்சத்திரமும் சேரும் மாசி மாதத்தில் இயற்கை அழகு பொலிய விழாக்கள் நடைபெறுகின்றன. இத்தகைய மகாமக விழாக்கள் காலந்தோறும் நடந்து வந்ததை வரலாற்றுக் கல்வெட்டுக் குறிப்புகள் பல காட்டுகின்றன. காலந்தோறும் ஆண்ட அரசர்கள் பலரும் கும்பகோணம் திருக்கோயில்களுக்கு அரிய பலபணிகளைச் செய்திருக்கிறார்கள். கோவிந்ததீட்சிதர் நாயக்க மன்னர் காலத்தில் விளங்கிய புகழ்பெற்ற அமைச்சர். அவ்ர் கும்பகோணம் திருக்கோயில்களுக்குப் பல அரிய பணிகளைச் செய்தார். பல நதிகளும் மகாமகத்தின்போது கும்பகோணத்தில் சங்கமித்துத் தூய்மையுறுவதாக ஒரு கருத்து நிலவுகிறது. வடபுலத்தில்கும் பமேளாவும், ஆந்திரத்தில் புஷ்கரமும் போன்று தமிழகத்தில் மகாமகம் மிகப்பெரிய ஒரு பெருவிழாவாகும். 'பொங்கு காவிரி மருங்கின் போய் ஒரு கணப்போதும் தங்குவார்க்கு பெரும் பேறு' என்பர். 'பூமருவும் கங்கை முதல் பல நதிகளும் இங்கே வந்து மகாமகம் ஆடுகின்றது' என்று பெரியபுராணர் + றுகின்றது.

கங்கை முதலிய ஆறுகள் குடந்தையில் மூழ்கிப் பெரும் பேறு பெறும் என்பர் பரஞ்சோதி முனிவர். அப்பர்பெருமான் 'தாவி முதல் காவிரி, நல் யமுனை, கங்கை, சரஸ்வதி, பொற்றாமரை, புற்கரணி, தென்னீர் கோவியோடு குமரிவரும் தீர்த்தம் சூழ்ந்த குடந்தை' என்று பாடுவார். நதிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒரு ஒருங்கிணைப்புக் குறியீடாக மகாமகம் விளங்கியதை முன்னையோர் பாடி மகிழ்ந்தனர். இத்தகைய சிறப்பு மிக்க குடவாயில் எனப்படும் குடந்தை பன்முகச்சிறப்புகளுடன் மகாமகப் பெருவிழாவில் மேலும் பொலிவுபெறுகின்றது. திருக்கோயில்களும், திருமடங்களும் நிறைந்த திருக்குடந்தை முன்னையோர்தம் கலை, சமய, பண்பாட்டு சிறப்புகளைப் பறைசாற்றும் பெரிய கலைக்கோயிலாகத் திகழ்கிறது. தமிழால் சமயம் வளர்ந்ததும், சமயத்தால் தமிழ் வளர்ந்ததும் வரலாற்று நிகழ்வுகள். அத்தகைய வரலாற்று நிகழ்வுகளால் பெரும் புகழ் பெற்று விளங்குவது கும்பகோணம். மக்கள் வெள்ளம் சங்கமிக்கும் மகாமகக் குளம் மானுட சமயத்தைத் தூய்மைப்படுத்தும் ஒரு குறியீட்டு விழா. வரலாறு போற்றும் இப்பெருவிழா காவிரித்தாய் தன்னருளால் மேன்மேலும் சிறப்புடன் பொலியுமாக



வரலாற்றில் முருகப்பெருமான்

டாக்டர். இரா. நாகசாமி, எம்.ஏ.,பி.எச்.டி.,

தமிழ்நாட்டின் தனிப்பெருங் கடவுள் முருகவேள். தமிழ் தந்த கடவுளாகவே அவரை நாம் போற்றி வணங்குகிறோம்.

வரலாற்றில் முருகப் பெருமானது நிலை மிகச்சிறந்ததாகும். சங்க காலத்தில் நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையும், பரிபாடலில் வரும் செவ்வேளின் திறனும் யாருடைய மனத்தைத் தான் கவரா?

''சீர்கெழு செந்திலும்
செங்கோடும் வெண்குன்றும்,
ஏரகமும் நீங்கா இறைவன்''

என்று சிலப்பதிகாரத்தில் வரும் இளங்கோவடிகளின் வாக்கு, பக்திப்பெருக்கை ஊட்டும். இதன் அடிப்படையில்தான் சுப்பிரமணிய சுவாமியின் வழிபாடு தமிழ்நாட்டு வரலாற்றில் பின்பு இடம் பெற்றுள்ளது.

கி.பி. 5,6-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் வட எல்லையில் பேரரசை நிறுவிய பல்லவர்கள் முருகப் பெருமானின் பக்தர்கள் தாம். பல்லவ அரசர்களில் முந்தியவர்கள் அனைவரும் தங்களைப் பரமப் பிரம்மண்யர்கள் என்று செப்பேடுகளில் கூறிக்கொள்கின்றனர். பிரம்மண்யத்தின் தெய்வம்- அதுவும் நல்ல பிரம்மண்யத்தின் தலைவர் - சுப்ரமண்யர். அதனால்தான் ஏரகத்து உறையும் எம்பெருமானை, அந்தணர் போற்றிய முறையைத் திருமுருகாற்றுப்படை,

''இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல''

என்று குறிப்பதைக் காணலாம். இருவர்ச்

சுட்டிய பல்வேறு தொல்குடி' என்ற இத்தமிழ்த் தொடரையே பல்லவ மன்னர்கள் 'உபயகுல பரிசுத்தர்கள்' என்று தங்களை அழைத்துக் கொள்ளும்போது ஆள்கின்றனர். பல்லவர்களில் காஞ்சிக் கயிலாயநாதர் கோயிலைக் கட்டியவன் இராஜசிம்ம பல்லவன். இவன்காஞ்சிக்கல்வெட்டில் தங்கள் மூதாதையர்களைக் குறிக்கும் போது பிரம்மணயர்கள் என்றே குறிக்கிறான்.

அப்பெருமன்னன் அடுத்துத் தன்னைக் குறிக்கும் போது, 'பரமேசுவரரிடத்திலிருந்து எவ்வாறு குகன் குமாரனாகச் சுப்பிரமணியனாகத் தோன்றினானோ அவ்வாறு நான் என் தந்தையான பரமேசுவரனிடமிருந்து சு-ப்ரமண்யம் உடைய குமாரனாகப் பிறந்தேன்' என்று கூறிக்கொள்கிறான்; கூறிப் பெருமைப்படுகிறான். இதிலிருந்து இம்மன்னனுக்கு முருகப்பெருமானிடம் உள்ள ஈடுபாடு நன்கு விளங்குகிறது. பல்லவர்களைப் பலகாலம் எதிர்த்து வந்த சாளுக்கியர் தங்களை மகாசேனருடைய அடியை எப்பொழுதும்

தொழுபவர்களாகக் கூறிக் கொள்கிறார்கள்.

இதுபோன்று மன்னர்கள் போற்றிய கலையிலே முருகப் பெருமானுடைய உருவங்கள் இலக்கியத்துக்கு ஏற்பப் பல நிலைகளில் படைக்கப்பட்டன.

இராஜசிம்ம பல்லவன் தோற்றுவித்த மாமல்லபுரத்துத் திரிமூர்த்தி குகை என்று வழங்கும் குகைக்கோயில் முதல் கருவறையில் முருகப் பெருமானின் அழகுத் திருவுருவம் உள்ளது. இங்கே சுப்பிரமணியர் நின்ற நிலையில் நான்கு கை உடையவராகச் 'சன்னவீரம்' பூண்டு விளங்குகிறார். மேலிரு கைகளில் அக்ஷமாலையும் குண்டிகையும் பூண்டு விளங்குகிறார். கீழிரு கைகளில் இடக்கையைத் துடையிலும் வலக்கையை அபயமாகவும் வைத்துள்ளதைக் காணின்,

**''விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை
அசை இயது ஒரு கை''**

என்ற திருமுருகாற்றுப்படையின் அடிகளே நினைவுக்கு வரும். பெரும்பாலும் பல்லவர் காலத்தில் சுப்பிரமணியப் பெருமானின் திருக்கோலங்களில் மேலிரு கைகள் அக்ஷமாலை யும் குண்டிகையும் கொண்டு விளங்குவதையும், மார்பில் வீரச்சங்கிலி தரித்து விளங்குவதையும் காணலாம். திரிமூர்த்தி குகையில் உள்ளவாறே, காஞ்சிக் கயிலாயநாதர் கோயிலிலும், மற்றப் பல்லவர் கோயில்களிலும் காணலாம். சிவாலயங்களில் தேவகோஷ்டங்களில் லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி முதலிய உருவங்களைப் போல், சுப்பிரமணியர் திருவுருவமும் விளங்கி வந்ததைப் பல்லவர் கோயில்களில் காணலாம். உதாரணமரக, காஞ்சி முக்தேசுவரர், மாதங்கேசுவரர் ஆலயங்களில் முருகப்பெருமானின் உருவங்களை வடபுறச் சுவரில் காணலாம். இவ்வாறே பிற்காலங்களில் தேவகோஷ்ட மூர்த்திகளாகச் சிற்சில இடங்களில் சுப்பிரமணியரின் சிலையுரு வத்தை வைத்தார்கள். திருவொற்றியூர் ஒற்றிமூதூர் உடையார் ஆலயத்தில், பல்லவர் காலத்திய பிள்ளையார், சுப்பிரமணியர் உருவங்கள் உள்ளன. இம்மூர்த்தியைக் கல்வெட்டுகள் குமாரசுவாமித் தேவர் என்று குறிக்கின்றன.

பல்லவர் காலத்தில் மற்றொரு விசேஷ உருவமும் தலை சிறந்து விளங்கியது. அதுதான் முருகனின் குழவிப் பருவத்து நிலை. சோமஸ்கந்த உருவாகக் கருவறையின் உள்ளேலிங்கத்தின் பின்னர் இது உள்ளதைக் காணலாம். இங்கே முருகப்பெருமான் உமையன்னையின் மடியில் அழகே உருவாக அமைந்துள்ளதைப் பார்த்தால், அந்தக் குழந்தையைத் தொட்டுப் பார்த்து ஆனந்தபரவசம் அடையத்தான் விருப்பம் எழும். அக்காலத்தில் சிவபெருமானுக்கு எடுத்த ஆலயங்கள் அனைத்திலும் இந்த அற்புத உருவத்தைக் காணலாம். கல்வெட்டுக்களிலும், 'சிவபெருமான் குகனுடன் கூடியே இங்கு எந்நாளும் வாசம் செய்யட்டும்' என்று பொறித்துள்ளனர்.

இத்திருவுருவங்களைக் காண்போர்,

**''ஆல்கெழு கடவுட் புதல்வ ! மால்வரை
மலைமகள் மகனே ! மாற்றோர் கூற்றே !
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி''**

என்று போற்றித் துதிபாடிச் சென்னிமேல் கைகூப்பி, மெய்ம்மறந்து கூத்தாடுவர் என்பது உறுதி.

திருச்சி மலையின் கீழேயுள்ள குடைவரைக் கோயிலிலும், குன்றக்குடிக் குடைவரைக் கோயிலிலும், பரங்குன்றிலும் முருகனின் திருவுருவங்களைக் காணலாம். குன்றக்குடியில் உள்ள திருவுருவம் ஒரு கையில் கோழி பூண்டு விளங்குகிறது.

மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலையில் லாடன் கோயில் என்று தற்போது கூறப்படும் குடைவரைக் கோயில் ஒன்று உள்ளது. அது முருகப்பெருமானுடையது. அங்கு இரண்டு கை மட்டும் பூண்டு தேவசேனையுடன் மட்டும் அமர்ந்து முருகன் காட்சியளிப்பதைக் காணலாம். இது ஓர் சிறப்பு வாய்ந்த அம்சமாகும்.

''செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்''

என்ற அடிகளே இவ்வுருவுக்கு அடிப்படையோ?

நெல்லூர் மாவட்டத்துக் கூடூர்த் தாலுகாவில் மல்லம் என்ற சிற்றூர் உள்ளது. அங்கே சுப்பிரமணியருக்கு ஓர் ஆலயம் நந்திவர்ம பல்லவனின் காலத்துக்கு முன்னரே இருந்தது என்று அறிகிறோம். அங்குள்ள கல்வெட்டில் நந்தி வர்மன் காலத்தில், சுப்பிரமணிய தேவருக்கு ஐம்பது கழஞ்சு பொன் பரிசு கொடுத்தது குறிப்பிடப் பட்டுள்ளது.

பல்லவர்களுக்குப் பின்பு தமிழ்நாடு முழுவதையும் விஜயாலயன் வழிவந்த சோழர்கள் கைப்பற்றினர். அவர்களில் ஆதித்தன், பராந்தகன், ராஜராஜன் முதலியோர் மிகச் சிறந்தவர்கள். இவர்கள் காலத்தை முந்திய சோழர் காலம் என்பர். இக்காலத்தில் பல கோயில்கள் எழுந்தன. அவற்றில் முருகப் பெருமானுடைய திருவுருவங்கள் உள்ளன.

திருச்சியிலிருந்து அரியலூர் செல்லும் வழியில், முப்பது கல் தொலைவில் கீழையூர் என்ற ஊர் உள்ளது. அங்கு இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று அகத்தீஸ்வரம் என்றும், மற்றது சோழீசுவரம் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

அகத்தீசுவரம் என்ற கோயிலில் பின்புறக் கோஷ்டத்தில் சுப்பிரமணியர் உருவம் நின்ற நிலையில் உள்ளது. நான்கு கைகள் பூண்டுள்ள இச்சிலையில் மேலிரு கைகளில் வஜ்ரமும் சக்தியும் காணப்படுகின்றன. சக்தியின் அடிப்பகுதி மணி போல் விளங்குகிறது. தலையின்மேல் ஓர் கொற்றக்குடை உள்ளது. மற்றொரு முக்கியமான அம்சம், முருகப்பெருமானின் சென்னி. அழகிய முடியின் அடியில் மலர்க்கண்ணிகள் உள்ளன. இது முருகவேளுக்கு உகந்த காந்தள்கண்ணி.

''சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியு மறியா மரன் பயில் அடுக்கத்துச்
சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்''

என்று குறிப்பிடப்படும் காந்தள் கண்ணி

மாலை தமிழ் நாட்டுப் பண்டைய செவ்வேளின் சிற்பங்களில், முடியை அலங்கரிக்கும் காந்தள் கண்ணியை காணலாம். முருகவேளின் உருவம் என அறிவதற்கு உதவும் முக்கிய ஏதுவாக இது திகழ்கிறது. அகத்தீசுவரத்து முருகவேள் தலையில் இந்தக் காந்தள் மாலை மிகவும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதன் அருகிலுள்ள சோழீசுவரத்திலும், பின்புறம் கோஷ்டத்தில் முருகப்பெருமான் அமர்ந்த திருக்கோலத்தில் காணப்படுகிறார். மேல் கைகளில் சக்தியும் வஜ்ரமும் கைமாறி விளங்குகின்றன. இவர் தலையின் பின்புறம் சோதி வடிவாகக் காட்டப்பட்டுள்ளது. செவ்வேள் சோதி உருவுடையவன் அல்லவா? திருமுருகாற்றுப்படை,

''பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி''

என்று தானே அவனைப் போற்றுகிறது? இவ்விரு சிற்பங்களும் சமகாலத்தவை.

இக்காலத்தில் பல செப்புத் திருமேனிகள் ஆலயங்களில் செய்து வைக்கப்பட்டன. இவை மிகவும் சிறப்பு வாய்ந்தவை. காவிரிப்பூம் பட்டினத்து பல்லவனீச்சரத்தில் ஓர் அற்புதமான செப்புத் திருமேனி உள்ளது. அதில் முருகப் பெருமான் உமாதேவியின் அருகில் குழந்தையாக மலர்களைக் கையில் ஏந்திப் பீடத்தின் மேல் அமர்ந்துள்ளார். அவர் குழந்தையாக இருந்த போதும், பிறந்த ஞான்றே இந்திரனின் தருக்கழித்தார்அல்லவா?

''பதுமத்துப் பாயற்
பெரும்பெயர் முருகநிற் பயந்த ஞான்றே
அரிதமர் சிறப்பின் அமரர் செல்வன்
எறியுமிழ் வச்சிரங் கொண்டு
வந்தெறிந்தென
அறுவேறு துணியும் அறுவ ராகி
ஒருவனை வாழி ஓங்குவிறற் சேஎய்
ஆரா உடம்பின்நீ அமர்ந்துவிளை யாடிய
போர்''

என்ற பரிபாடல் அடிகளுக்கு ஒப்ப, வளராத குழந்தைத் தோற்றத்தை யுடையவனாய் இருந்த போதிலும், இந்திரனின் தருக்கைத் தடிந்த சீற்றம் இந்தச் செப்புத் திருமேனியில் திகழ்வதைக் காணலாம். கும்பகோணத்துக்கு அருகில் உள்ள தண்டற் தோட்டம் என்ற ஊரில் சுப்பிரமணியரின் மிக அழகிய திருமேனி ஒன்று உள்ளது.

பிந்திய சோழர் காலத்திலும் பல நிலைகளில் முருகப்பெருமானின் உருவம் உள்ளதைக் காணலாம். இவற்றில் முக்கியமாக கோபுரங்களில் கோஷ்டங்களை அலங்கரித்தவைகளைக் குறிப்பிடலாம்.

தில்லைக்கோயிலில் நான்கு கோபுரங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் உட்புறத்து வலப்புறம் சுப்பிரமணியர் திருவுருவம் உள்ளதைக் காணலாம். மேற்குக் கோபுரத்தே மட்டும் இருமருங்கிலும் சுப்பிரமணியர் உருவம் உள்ளது. இதில் இடப்புறம் உள்ளது, அணிமுகங்கள் ஓர் ஆறும், ஈராறு கையும் பூண்டு மயில்மேலமர்ந்து சூர்மாத்தடிந்த அற்புதத்தோற்றம்; முருகப்பெருமான் சூரனைப் போரில் வெற்றிகண்ட காட்சியைச் சித்தரிக்கும் சிற்பம். சோழர் காலச் சிற்பங்களில் இதுதான் மிகச் சிறந்தது. மற்றப் பக்கம் உள்ள முருகன் உருவத்தின் மேல் கல்வெட்டு உள்ளது. இது சுப்பிரமணியப் பிள்ளையார் என்றே முருகனைக் குறிக்கிறது.

இதிலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரை சுப்பிரமணியரைப் பிள்ளையார் என்று குறிக்கும் வழக்கம் இருந்தது என்பதை அறியலாம். நச்சினார்க் கினியார் தம் உரையில் முருகப்பெருமானைப் பிள்ளையார் என்றே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

இது போன்று இன்னும் எவ்வளவோ திருவுருவங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் தமிழ் இலக்கியத்தையும்தமிழ் மரபையும்அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவை. இத்தகைய அரிய பெருமானைத் தமிழகம் தலைமேல் தாங்கி வணங்குவதைக் காணலாம். முருகப் பெருமானின் உருவைத் தலைமேல் தாங்குதல் இன்று நேற்றல்ல, தமிழகத்தின் பண்டை மரபு என்பதைக் காட்டத்தானோ என்னவோ, ஒரு சிற்பி திருவொற்றியூரில் சிறந்த சிற்பம் ஒன்றைச் செய்துள்ளான்.

இவன் இராஜேந்திர சோழனின் கட்டளைப் படி இக்கோயிலைத் தோற்றுவித்தவன். இவன் பெயர் ரவி என்ற வீரசோழப்பெருந்தச்சன். இவன் செய்துள்ள ஆச்சரியமான துவாரபாலகர் உருவம் கோயில் வாயிலை அலங்கரிக்கிறது. அதன் முடியைப் பார்க்கவேண்டும். முருப்பெருமானின் திருவுருவம் ஒரு புறமும், பிள்ளையாரின் உருவம் மற்றொரு புறமும், நெற்றிப் பட்டையில் நடமாடும் ஆடவல்லாரின் உருவமும் உள்ளன. இவை மிக மிகச் சிறியவை.

துவாரபாலகர் முடியிலுள்ள இவை ஓர் அங்குல நீளந்தான் இருக்கின்றன. இருந்த போதிலும் என்ன அற்புதமான அமைப்பு ! முருகப் பெருமானின் உருவம் நின்ற நிலையில் உள்ளது. இதுபோன்ற படிமங்களைப் பல முறை கண்டும் காணாத கண்ணினராய்ச் செல்கின்றோம். புறக்கண் மட்டும் போதுமா? ஒளிப்பிழம்பான தெய்வீக வடிவுகளைக் காண அகக்கண் ஒன்றும் வேண்டும் ! அது இருந்தால் போதுமே ! போகும் ஆலங்களில் எல்லாம் முருகப் பெருமானின் திவ்யத் திருமேனியைக் காணலாமே !



தாவி முதல் குமரி வரை

டாக்டர். குடவாயில் பாலசுப்ரமணியன், M.A., M.Phil., Ph.D., தஞ்சாவூர்.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எல்லா மாநிலங்களிலும் நடைபெறும் வைதிகச் சடங்குகளில் பூரணகும்பம் என ஒரு சிறு பாத்திரத்தில் (சொம்பு அல்லது குடம்) நீரை நிரப்பி அதனை மாவிலைக்கொத்து, தேங்காய் ஆகியவற்றால் மூடி, அந்தப் பாத்திரத்தில் உள்ள நீரில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, சிந்து, காவிரி என்ற ஏழு நதிகளும் சங்கமிக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொள்கின்றனர். இதனால் அந்த நீர் புனிதம் பெறுகின்றது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் அனைத்துச் சடங்குகளும் நிகழ்கின்றன. இதனை ''பாவனா'' என வடமொழியிலும், ''கற்பித்தல்'' என தமிழிலும் கூறுவர். இதே அடிப்படையில்தான் மகாமக நாளில் மகாமகக் குளத்துநீரை புனிதம் உடையதாக, இந்திய நதிகளின் சங்கமமாகக் கருதுகிறோம்.

வியாழம் என்கின்ற கோள்தெய்வம் சிம்ம இராசியில் இருக்கும்போது, மாசி மாதத்து மக நட்சத்திரத்து நிறைமதி நாளில், கும்ப இராசியில் இருந்து கதிரவன் அவனை நோக்கும் இடபலக்கின புனித நேரத்தில் குடந்தையம்பதியின் மகாமகக் குளத்தில் ஒன்பது புனித நதிகளும், உலகிலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் பிரவகித்து சங்கமிப்பதாகத் தொன்மங்கள் உரைக்கின்றன.

லக்னே வ்ருஷப ஸம்ஜ்ஞே து மஹாமகோத்ஸவே பரே
ஸன்னிதௌ கும்பலிங்கஸ்ய தீர்த்தே பாபாபனோதகே
குரௌ மிருககேந்த்ரகே மாகே மகர்க்ஷே
பூர்ணிமாதினே.

அந்நன்னாளில் தேவர்களும், நதி தெய்வங்களும், குடந்தையம்பதியில் நீராடி புனிதம் பெறுவது போன்றே நாமும் நீராடுவதால் புனிதம் பெறுகிறோம். குடந்தையில் இந்திய நதிகள் பலவும் உறைகின்றன என்ற கூற்றை திருநாவுக்கரசு பெருமானார் குடமூக்கு திருக்கோயிலில் பாடிய பதிகத்திலும், குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பதிகத்திலும் விளக்கமுற செப்பியுள்ளார்.

''நங்கையாள் உமையாள் உறைநாதனார்
அம்கையாளொடு அறுபதம் தாழ் சடைக்
கங்கையாள் அவள் கன்னி எனப்படும்
கொங்கையாள், உறையும் குடமூக்கிலே''
(V-22 : 2)

''ஓதாநாவன் திறத்தை உரைத்திரேல்
ஏதானும் இனிது ஆகும்; இயமுனை
சேதா ஏறு உடையான் அமர்ந்த இடம்
கோதாவிரி உறையும் குடமூக்கிலே''.
(V-22 : 4)

''காமியம் செய்து காலம் கழியாதே
ஓமியம் செய்து அங்கு உள்ளத்து உணர்மினோ
சாமியோடு சரசுவதி அவள்
கோமியும் உறையும் குடமூக்கிலே''.
(V-22 : 8)

இப்பதிகத்தின் வாயிலாகக் கங்கை, யமுனை, கோதாவரி, சரசுவதி, கோமி (கோமதி) எனும் ஐந்து நதிகளும் குடந்தையில் உறைவதாகக் கூறியுள்ளார்.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பதிகம் பாடும் அப்பரடிகள்,

''கோலமணி கொழித்து இழியும் பொன்னி நன்னீர்க்
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே''
(VI-75 : 5)

என்று பொன்னியாம் காவிரியின் பெருமையை ஒரு பாடலில் பேசுகின்றார்.

ஏவி, இடர்க்கடல் இடைப்பட்டு இளைக்கின்றேனை
இப்பிறவி அறுத்து ஏற வாங்கி, ஆங்கே
கூவி, அமருலகுஅனைத்தும் உருவிப் போக,
குறியில் அறுகுணத்து ஆண்டுகொண்டார்போலும்-
தாவி-முதல் காவிரி, நல் யமுனை, கங்கை,
சரசுவதி, பொற்றாமரைப்புட்கரணி, தெண்நீர்க்

கோவியொடு, குமரி-வருதீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே.
- திருநாவுக்கரசர் தேவாரம் (VI-75 : 10)

என்று குடந்தைக்கு வரும் தீர்த்தங்களின் சிறப்புரைக்கின்றார்.

இப்பாடலுக்கு உரை எழுதிய அறிஞர் பெருமக்கள், ''முதன்மை பொருந்திய காவிரி, நல்யமுனை, கங்கை, சரசுவதி, பொற்றாமரை, பிறதாமரைத் தாடகங்கள் தெளிநீர்க் கிருட்டிணை, குமரி ஆகிய தீர்த்தங்கள் தாவி வந்து சூழ்ந்த குடந்தைக் கீழ்க்கோட்டத்துத் திகழும் கூத்தனார் என் வினைக்கு ஈடாகத் தம்மால் செலுத்தப்பட்டுத் துன்பக் கடலில் வீழ்ந்து துன்புறகின்ற என்னைக் கூவிக்ரையேறும்படி எடுத்து இப்பிறவியை அறுத்து யான் விண்ணவர் உலகம் எல்லாவற்றையும் தாண்டி தனது சிவலோகத்தில் சென்று சேரும்படி மாயை கலவாத தம் அருட்குணம் ஆற்றனுள்ளும் படுத்து என்னை அருட்கொண்டவர் ஆவார்'' எனக் கூறியுள்ளார். (தருமபுரம் தேவாரப்பதிப்பு).

இவ்வறிஞர் பெருமக்கள் இப்பாடலின் மூன்றாம் அடியில் காணப்பெறும் ''தாவி'' நான்காம் அடியில் காணப்பெறும் ''வரு தீர்த்தம்'' எனும் இரு சொற்களையும் ''தாவி வரு தீர்த்தம்'' என இணைத்துப் பொருள் கண்டுள்ளனர். இவ்வுரை மிகச்சிறந்த உரை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இருப்பினும் இப்பாடலடிகளுக்கு மேலும் ஒரு வகையில் பொருள்காண இயலுகின்றது.

''தாவி முதல் காவிரி நல்யமுனை, கங்கை, சரசுவதி, பொற்றாமரைப் புட்கரணி, தெண்ணீர்க் கோவியொடு குமரி வரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தை''- என்பதை, தாவி எனும் காஷ்மீர நாட்டில் ஓடும் புனித நதி, காவிரி, யமுனை, கங்கை, சரசுவதி, குடந்தை நகரில் உள்ள பொற்றாமரைக் குளம், தெளிந்த நீரையுடைய கோவி எனும் கோதாவரி ஆறு, குமரிக் கடற்தீர்த்தம் ஆகியவை வந்து சூழ்ந்துள்ள குடந்தை என்று பொருள் கொள்ளுதல் மேலும் சிறப்பாக அமையும். தாவி எனும் நதி இமயமலையில் தோன்றி, காஷ்மீர நாட்டில் ஓடி சீனாப் எனும் நதியோடு, இணைந்து, பின்பு சிந்து நதியோடு ஒன்றுகிறது. காஷ்மீரத்தின்புனித நதியான தாவிக் கரையில்தான் ஜம்மு எனும் பேரழகு நகரம் திகழ்கிறது. புனிதநதி என்பதால்தான் ஜம்மு நகருக்குச் செல்லும் தொடர் வண்டிக்கு 'ஜம்மு தாவி விரைவு வண்டி' (Jammu Tawi Express) என்று பெயரளித்து அந்நதிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இந்த நதிப் பள்ளத்தாக்கில்தான் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஷ்மீரசைவம் மலரத் தொடங்கி எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் உச்சநிலை எய்தியது.

அப்பரடிகள் காலத்தில் சைவ சமயம் காஷ்மீரப் பகுதியில் வேரூன்றத்தொடங்கிய காரணத்தால்தான் நாவுக்கரசர் இந்தியாவின் வடகோடியில் உள்ள தாவி நதியை முதலில் சுட்டி பிறகு எல்லா நதிகளையும் குறிப்பிட்டு இறுதியாகத் தென்கோடியில் உள்ள குமரி தீர்த்தத்தில் முடித்துள்ளார். தாவி நதி போன்றே கோமி என்று கோமதி நதியையும், கோவி என்று கோதாவரியையும் , குடந்தைப் பதிகங்களில் குறிப்பிட்டுள்ளார். கோமதி என்பது கங்கையின் உபநதியாகும். வேதம், உபநிஷத்துக்கள், தர்க்கசாத்திரம், சமண சமய நூல்கள், பௌத்த நூல்கள் ஆகியவற்றில் நுண்மான் நுழைபுலம் கொண்டவராகத் திகழ்ந்த அப்பரடிகள் கயிலை வரை சென்று வந்தவர் என்பதால் இந்திய நாட்டின் நிலவியல் அமைப்புகள் பற்றியும், சைவம் தழைத்த இடங்கள் பற்றியும் நன்கறிந்தவர் என்பதில் மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை. எனவேதான் காஷ்மீர நாட்டு தாவி நதியில்

தொடங்கி, கன்னியாகுமரி சங்கமத்து தீர்த்தத்தை நிறைவாகக் கொண்டு குடந்தையின் சிறப்பை இப்பாடலில் கூறியுள்ளார் என்பது பொருத்தம் உடைய உரையாக அமையும். குடந்தையில் சங்கமிக்கும் நதிகளாக கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கன்யா (மகாநதி) கோதாவரி, காவிரி, பயோஷ்ணா -(பாலாறு) என்று பவிஷ்யோத்தர புராணம் கூறுகிறது. இதே செய்தியை அகோரமாதவர் எழுதிய கும்பகோணப் புராணம், மீனாட்சிசுந்தரம் பிள்ளை எழுதிய திருக்குடந்தைப் புராணம் ஆகிய பிற்கால நூல்களும் எடுத்துக் கூறுகின்றன. வீரசிங்காதன புராணமோ கங்கை, கோதாவரி, நருமதை, காவேரி, யமுனை, தாமிரவர்ணி, வாணி, சிந்து, வேகவதி என்ற ஒன்பது நதிப் பெண்கள் குடந்தை வந்ததாகக் கூறுகின்றது.

கும்பகோணம் காசி விசுவநாதர் கோயிலில் நவ கன்னிமார் எனும் கங்கை, யமுனை, நர்மதா, சரஸ்வதி, காவிரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, சரயு ஆகிய ஒன்பது நதித் தெய்வங்களின் திருவுருவங்களும் வழிபாட்டில் உள்ளன. இந்த ஒன்பது சிற்பங்களில் ஏழு சிற்பங்கள் இருகரங்களுடனும், இரண்டு சிற்பங்கள் நான்கு கரங்களோடும் உள்ளன. அவற்றில் ஒரு சிற்பம் சங்குசக்கரம் ஏந்தியுள்ளது. மற்றது அக்கமாலையும், தாமரை மலரையும் ஏந்தியுள்ளது. இச்சிற்பங்கள் ஒன்பது நதிப் பெண்கள் என்றும், இல்லை என்றும் சிற்பவியல் ஆய்வாளர்களிடையே இருகருத்துக்கள் உண்டு.

சிற்பங்களில் நதிப்பெண்கள்

புனிதமான ஒன்பது நதி தெய்வங்களின் சிற்பங்களை இரண்டாம் இராஜராஜன், தான் எடுப்பித்த தாராசுரம் கோயிலில் இடம் பெறச் செய்துள்ளான். ராஜகம்பீரன் எனும் திருமண்டபத்தின் கோஷ்டம் ஒன்றில் கங்கையின் முழு உருவச்சிலையையும், விமானத்தோடு இணைந்துள்ளமேற்தள மண்டபத்தில் உள்ள எட்டு கோஷ்டங்களில் எட்டு நதித் தெய்வங்களையும் சிற்பங்களில் படைத்துள்ளான். அவற்றில் ஒரு சிற்பம் தற்பொழுது அங்கிருந்து இடம்பெயர்ந்து விட்டது. கீழ்மண்டபத்தில் முழு உருவமாகத் திகழும் கங்கை ஒரு கரத்தில் நீர்ப்பாத்திரத்தையும், மறுகரத்தில் மலரையும் ஏந்தியுள்ளாள். அதுபோன்றே மற்ற நதிப்பெண்களும் மலரும், நீர்ப் பாத்திரம் கரங்களில் ஏந்தி இருந்தாலும், இடுப்புக்குக் கீழாகவுள்ள உடற்பாகம் நதியின் சுழலாகவே காணப்படுகிறது. சோழர்கால நடராஜர் செப்புத் திருமேனிகளில் கங்கையைப் பாதி பெண் உடலாகவும் இடுப்புக்கீழே நீர்ச்சுழலாகவும் காட்டுவது அக்கால கலைமரபாகும். இதே மரபை தாராசுரத்தில் பின்பற்றி எட்டு நதிப் பெண்களையும் சிற்பங்களாக வடித்துள்ளனர். எனவே, தமிழ்நாட்டிலேயே தாராசுரம் திருக்கோயிலில் மட்டும் தற்போது எட்டு நதிப்பெண்களையும் (மறைந்தது ஒன்றுபோக) சிற்பமாகக் காணமுடியும்.

கி.பி. 1535 - 1675 வரை ஆட்சிசெய்த தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் கும்பகோணத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள திருச்சேறை சாரநாதப் பெருமாள் கோயில் முன்புள்ள **சார புட்கரணி** எனும் குளக்கரையில் காவிரிக்குத் தனிக்கோயில் எடுத்து அங்குக் கருவறையில் காவிரித் தாயையும், அவள் மடியில் கண்ணபிரானைக் குழந்தையாகவும் காட்டும் சிற்பத்தை வடித்து வழிபாடு செய்துள்ளனர். மக்கள் பார்வையிலிருந்து முழுவதுமாக விலகி இருந்த இந்த காவிரித் தாயின் கோயிலில், காஞ்சி மாமுனிவர் சந்திரசேகரேந்திரர் அவர்களின் வேண்டுகோளின் படி ஆண்டுதோறும் ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று தஞ்சை மாவட்டத்து விவசாயிகள் சார்பில் சிறப்பு வழிபாடு நிகழ்வது நிறைவளிப்பதாக உள்ளது.

தாராசுரம் திருக்கோயில் உள்ள நதிப்பெண்கள் சிற்பங்கள்



குடந்தையில் சூரியன் வழிபாடு

கி.ஸ்ரீதரன்
தொல்லியல் துறை
சென்னை

தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற நகரங்களில் கும்பகோணமும் ஒன்று. காஞ்சீபுரத்தை அடுத்து கும்பகோணத்தை கோயில் நகரம் என அழைக்கும் பெருமை உடையதாக விளங்குகிறது. மூர்த்தி - தலம் - தீர்த்தம் என்ற சிறப்பும் உடையதாக விளங்குகிறது. இத்தலம் குடமூக்கு, குடந்தை என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

"குடமூக்கே குடமூக்கே என்பீராகில்
கொடு வினைகள் தீர்ந்தரனைக் குறுகலாமே" என்று போற்றுகின்றார் அப்பர் பெருமான்.

குடந்தையிலும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களில் உள்ள கோயில்களிலும் சூரியன் வழிபாடு சிறந்திருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இன்றும் அத்தலங்களில் சிறப்பான வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நமக்கு நல்வாழ்வு அளிக்கும் சூரியனை மக்கள் வழிபடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. சூரியனின் ஒளி உயிர்களுக்கும் இயற்கைக்கும் மிகவும் இன்றியமையாதது. எனவேதான் பொங்கல் திருநாள் அன்று பொங்கலிட்டு சூரியனுக்குப் படைத்து வணங்குகிறோம்.

தமிழகத்தில் சங்க காலத்தில் சூரியன் வழிபாடு சிறந்திருந்ததைப் பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பூம்புகாரில் பகல் வாயில் உச்சிக்கிழான் கோட்டம் என்ற கோயில் இருந்ததாக சிலம்பு கூறுகிறது. ஆனால் அக்காலத்தில் வழிபடப்பெற்ற சூரியன் திருமேனி எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது என்பதை அறிய முடியவில்லை.

பல்லவ மன்னர்கள் காலத்திலிருந்து தான் சூரியன் திருமேனிகளை கோயில்களில் காணமுடிகிறது. மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தவம் என்று அழைக்கப்படும் சிற்பத்தொகுதியில் சூரியனுடைய வடிவம் காணப்படுகிறது. மேலும் விமானத் தேவதையாகவும் சூரியனைப் போற்றுவதைக் காண்கிறோம். திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் உள்ள கீழ்க்குடைவரைக் கோயிலில் சிவன், கணபதி, முருகன், பிரம்மா, திருமால், துர்க்கை ஆகியோருடன் சூரியனையும் வழிபட்டதற்கு அடையாளமாக மற்ற திருமேனிகளுடன் சூரியன் திருமேனியும் அழகிய சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. சிவ வழிபாட்டினை சைவம் என்றும், திருமால் வழிபாடு வைணவம் என்றும், முருகன் வழிபாடு கௌமாரம் என்றும், சக்தி வழிபாடு சாக்தம் என்றும் கூறுவதைப்போல சூரிய வழிபாட்டினை சௌரம் என்று குறிப்பிடுவார்கள்.



அர்த்தநாரிசூரியன் - தாராசுரம்

சோழர் காலத்தில் சூரியன் வழிபாடு மேலும் சிறப்படைந்தது. சைவ சமயத்தில் சூரியனை சிவபெருமானின் வடிவமாகவே வழிபடுவது சிறப்பாகும். சிவபெருமானின் அட்டமூர்த்தி வடிவங்களில் ஒன்றாக சூரியன் விளங்குகிறான். எனவே சூரிய வழிபாடு சிவாலயங்களில் சிறப்பாக நடைபெறுகிறது. சோழர்காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் எட்டு பரிவார ஆலயங்களில் சூரியனுக்குத் தனி சன்னதி ஏற்படுத்தப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. கோயிலில் வடகிழக்கு மூலையில் மேற்கு நோக்கிய சன்னதியில் சூரியன் திருமேனி வழிபாடு நடைபெறும். சூரியன் திருமேனி நின்ற நிலையில் தன் இரு கைகளில் தாமரை மலர்களை ஏந்தி நிற்கின்ற கோலத்தில் காணலாம். தலைக்குப் பின்புறம் ஒளிவட்டம் போல பிரபை காணப்படும். சோழர் காலத்தில் செப்புத்திருமேனியாகவும் அமைத்து சூரியனை வழிபட்டனர். ஆதித்த பட்டாரகர், ஆதித்தேசுவரம் உடையார் என்றெல்லாம் சூரியன் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டு அழைக்கப்படுவதைக் காணலாம். சோழர் காலக் கோயில்களில் பலவற்றில் சூரிய ஒளி இறைவன் மீது குறிப்பிட்ட சில நாட்களில் படுவதுபோல கட்டட அமைப்பு காணப்படுவதைக் காணலாம். இத்தகைய தலங்களை பாஸ்கர சேத்திரங்கள் என்றும் அழைப்பர்.

குடந்தையில் உள்ள நாகேசுவரர் ஆலயத்தில் சூரிய வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் 11, 12, 13 தேதிகளில் சூரிய ஒளி இறைவன் மீது பட்டு வழிபாடு நடைபெறுகிறது. மேலும் இத்திருக்கோயிலில் முதல் திருச்சுற்றில் வடகிழக்குப் பகுதியில் சூரியனுக்கு என்று தனி சன்னதி அமைந்துள்ளது. இது தனிக் கோயில் போன்று அமைந்துள்ளது சிறப்பானது. கருவறை சுவரில் அமைந்துள்ள தேவகோட்டங்களில் சௌரவிநாயகர் மற்றும் ஆதித்யன், பாஸ்கரன், ரவி, பானுமூர்த்தி ஆகிய சூரிய வடிவங்களும் அமைந்திருப்பது சிறப்பானது. கருவறையில் சூரியன் தன் இரு கரங்களில் தாமரை மலர்களைத் தாங்கிய நிலையில் காட்சி தருகிறார். கருவறைசுவரில் காணப்படும் கல்வெட்டுகளில், இக்கோயிலில் சூரியனுக்கு சிறப்பாக வழிபாடு நடைபெற தானம் அளித்ததைப் பற்றி குறிப்பிடுகிறது.



மேலும் இக்கோயிலுள்ள தேர்போன்ற கட்டட அமைப்பு உள்ள நடராசர் சபை மண்டபத்தின்இரு பக்கங்களிலும் கல்லால் ஆன சக்கரங்களும் அதனை இழுத்துச் செல்வது போல் குதிரைகளும் அழகிய சிற்ப வடிவில் காட்சி தருகின்றன. சக்கரங்களின் ஆரங்களாக சூரியனின் 12 வடிவங்கள் அழகுற செதுக்கப்பட்டுள்ளன. இரு சூரிய வடிவங்களுக்கு இடையே தாமரைத் தண்டங்களையும் காணலாம். சூரியனின் பன்னிரண்டு வடிவங்களாக 1.வைகர்த்தன் 2.விவச்சுதன் 3.பகன். 4.மார்த்தாண்டன் 5.பாஸ்கரன் 6.ரவி 7.லோகப்பிரகாசன் 8.லோகசாட்சி 9.திருவிக்ரமன் 10.ஆதித்தன் 11.திவாகரன் 12.அங்கிசமாலி ஆகிய வடிவங்களைக் கூறுவதுண்டு. எனவே இக்கோயிலில் உள்ள கல்சக்கரங்களில் காணப்படும் துவாதச ஆதித்யர்கள் எனப்படும் 12 சூரிய திருமேனிகளின் வழிபாடு

குடந்தை அருகே உள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோயிலிலும் சிறந்திருந்தற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

சூரிய மண்டலத்தில் திகழும் உருத்திரன் என்னும் சிவபெருமான் அர்த்த நாரீசுவரராக நான்கு முகங்களும் எட்டு கரங்களுடன் சிவசூரியனாகக் காட்சி தருகிறார். சிவ மகாபுராணம் இத்திருமேனியைச் சிறப்புடன் குறிக்கிறது. குடந்தை அருகே உள்ள தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலில் மகா மண்டபத்தின் கிழக்கு தேவகோட்டத்தில்அரிய சிவசூரியன் வடிவினைக் காணலாம். மூன்று முகங்கள் நான்காவது முகம் தெரியவில்லை. தலைக்குப் பின்புறம் பிரபை எட்டுகரங்களில் தாமரை, அட்சமாலை, கத்தி, தண்டம், பாசம், கபாலம் ஆகியவற்றைத் தாங்கியும், நின்ற கோலத்தில் அர்த்தநாரீசுவரர் வடிவத்துடன் காணப்படும் அற்புத சூரியன் வடிவினை இங்கே கண்டு வழிபடலாம். அத்திருமேனி அமைந்த தேவகோட்டத்தின் மேற்பகுதியில் அர்த்தநாரி சூரியன் என்று சோழர்காலச் செந்தூர வண்ண எழுத்துக்களில் எழுதியுள்ளதையும் காணலாம்.

சிவபெருமானைச் சூரியன் வழிபட்டத் தலங்களைப் பற்றி திருமுறைகளில் குறிப்புகள் காணப்படுகின்றன. குடந்தையைச் சுற்றி திருமங்கலக்குடி, திரு இன்னம்பர், திருநாகேசுவரம் போன்ற தலங்கள் இத்தகைய சிறப்பு பெற்று விளங்குகின்றன.

குடந்தையை அடுத்த திருநாகேசுவரம் என்னும்தலத்தில் சந்திரன், சூரியன், நாகமும் வழிபட்டதை

சந்திரனொடு சூரியர் தாமுடன்
வந்து சீர் வழிபாடுகள் செய்த பின்
ஐந்தலை அரவின் பணி கொண்டருள்
மைந்தர் போல் மணி நாகேச்சுரவரே

என்று அப்பர் பெருமான் போற்றுகின்றார்.

குடந்தை அருகே அமைந்துள்ள நவக்கிரகத் தலங்களுள் ஒன்றான கஞ்சனூர் சுக்கிரன் தலமாக விளங்குகிறது. இவ்வூருக்கு அருகில் உள்ள தலம் சூரிய மலை என்று அழைக்கப்படுகிறது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் சூரியகோடீசுவரர் என அழைக்கப்படுகிறார்.

ஆடுதுறை அருகே உள்ள திருமங்கலக்குடி தலத்தில் சூரியனும் எட்டு கிரகங்களும் சிவபெருமானை வழிபட்டன என்பர்

மங்கலக் குடியீசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வனும் விண்ணோடு
மண்ணும்நேர்
சங்கு சக்ரதாரி சதுமுகன்
அங்கத்தியனும்அர்ச்சித்தாரன்றே
-அப்பர் குறுந்தொகை

இங்கு சூரியன் வழிபட்ட இறைவன் பிராணவரதேசுவரர் என்றும், அம்பிகை மங்கலநாயகி என்றும் போற்றி அழைக்கப்படுகின்றார்கள்.

திருமங்கலக்குடிக்கு அருகே தனிச் சிறப்பு வாய்ந்த சூரியனார் கோயில் அமைந்துள்ளது. இங்கு வழிபட்ட பின்னரே சூரியனார்கோயிலில் வழிபாடு செய்ய வேண்டும் எனக் கூறப்படுகிறது. சூரியனுக்காகக் கட்டப்பட்ட தனிக்கோயில் தமிழகத்திலேயே இது ஒன்றுதான் என்ற புகழ்வாய்ந்தது. முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்ட இக்கோயில் குலோத்துங்க சோழமார்த்தாண்டாலயம் என கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது. கருவறையில் சூரியன் தன் இரு தேவியர்களான உஷா - பிரத்யுஷா ஆகியோருடன் எழுந்தருளி அருள்புரிகின்றனர். சூரியனின் வாகனமான குதிரை கருவறைக்கு எதிரில் வைக்கப்பட்டுள்ளது. கருவறையைச் சுற்றி சந்திரன், அங்காரகன், புதன், சுக்கிரன், சனி, இராகு-கேது ஆகியோருக்கு தனித்தனிச் சன்னதிகள் உள்ளன. குரு பகவான் மட்டும் கருவறைக்கு நேர் எதிரில் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் அமைந்துள்ள சண்டிகேசுவரர் தேஜஸ் சண்டீசர் என

அழைக்கப்படுகிறார். நவக்கிரகத் தலங்களில் முதன்மைத் தலமாக விளங்கி மக்களால் சிறப்பாக வழிபாடு நடைபெற்று வருகிறது. இதுமட்டுமல்லாமல் காவிரி பாய்ந்து வளப்படுத்தும் சோழ நாட்டில் பல திருக்கோயில்களில் சூரியனுக்கு சிறப்பாக வழிபாடுகள் நடைபெற்றதை கல்வெட்டுகளின் மூலம் அறிகிறோம். கலைச் சிறப்புமிக்க அரிய திருமேனிகளும் வழிபடப் பெற்று வருகின்றன.

குடந்தை அருகே உள்ள கங்கை கொண்ட சோழபுரத்தில் சௌரபீடம் என்று அழைக்கப்படும் சூரியன் திருமேனி சிறப்பாக வழிபடப்பெறுகிறது. மேற்பகுதியில் மலர்ந்த தாமரை மலரும் அதன் இரு பக்கங்களில் இரு சக்கரங்களும் உள்ளன. முன் பகுதியில் ஏழு குதிரைகள் இழுக்கின்றன. அருணன் தேர் ஓட்டுகின்றான். மேற்பகுதியில் எட்டுத் திசைகளிலும் எட்டு கிரகங்கள் உள்ளன. சாளுக்கிய நாட்டுக் கலைப் பாணியுடன் விளங்கும் இச்சிற்பம் இராஜேந்திர சோழனால் தனது வெற்றியின் சின்னமாக அந்த நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அரிய கலைப்படைப்பாகும்.

சிதம்பரம் கோயில் மேற்குக் கோபுரத்தில் தேவகோட்டத்தில் மூன்று முகங்களும் எட்டுக் கரங்களும் உடைய சூரியன் சிற்பம் காணப்படுகிறது. ஒற்றைச் சக்கரம் உடைய தேரின் மீது ஆதவன் நின்ற வண்ணம் உள்ளார். இத்தேரை நான்கு குதிரைகள் இழுத்துச் செல்கின்றன. இவரை சூரிய நாராயணன் என அழைக்கின்றனர். இது மட்டுமல்ல சிதம்பரம் நகரில் செங்கழு நீர்ப்பிள்ளையார் கோயிலில் உள்ள சிற்பம் மிகவும் அற்புதமானது. இதில் சூரியன் தனது இரு தேவியருடன் காட்சி தருகிறார். ஒற்றைச் சக்கரம் உடைய தேரை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. சூரியன் உருவத்திற்குப் பின்புறத்தை நன்கு மலர்ந்த தாமரை மலர் அலங்கரிக்கிறது. ஒவ்வொரு இதழிலும் மேஷம், ரிஷபம் என 12 இராசிகளும் செதுக்கப்பட்டு அரிய சிற்ப வடிவமாகக் காட்சி தருகிறது.

சூரிய வழிபாடு சோழ மன்னர்கள் காலத்தில் உன்னத நிலையில் இருந்ததை வரலாற்றுச் சான்றுகளால் அறிகிறோம். குறிப்பாக குடந்தையைச் சுற்றியுள்ள பல திருக்கோயில்களில் சூரியன் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்தலங்களுக்குச் சென்று வழிபட்டு நலமடைவோம்!

சூரியன் 108 சிவாலயம்
பாபநாசம்



சூரியன் சன்னதி
நாகேசுவரன் கோவில்
கும்பகோணம்

தேர் சக்கரமும், குதிரையுமும்
நாகேசுவரன் கோவில் - கும்பகோணம்

திருக்குடந்தைப் புராணம்

முனைவர். வே.இரா.மாதவன்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தஞ்சை மாவட்டத்தில் கோயில்களும் தீர்த்தங்களும் நிரம்பியுள்ள தலம் கும்பகோணம். சைவம், வைணவம் ஆகிய இரு சமயப் புகழும் கொண்ட இப்பெரும்பதியின் பெயர் தோன்றிய வரலாறும் சிறப்பும் பழைய நூல்களில் பரவலாகக் கூறப்பெறுகின்றன. கும்பகோணம், திருக்குடந்தை, குடமூக்கு, பாஸ்கரக்ஷேத்திரம் எனப் பலவாறு வழங்கப்பெறும் பெயர்கள் இவண் குறிப்பிடத்தக்கன.

குடமூக்கு, குடந்தை, கும்பகோணம்

இன்றைய கும்பகோணம் நகரம் பழங்காலத்தில் 'குடமூக்கு' என்று அழைக்கப்பட்டது. ஓர் ஆறு கடலோடு சேரும் பகுதி குடம் போன்று உள்ளதால் அப்பகுதி 'குடநாடு' எனப்படும். ஆங்கிலத்தில் இதனை டெல்டா என்பர். காவிரியின் டெல்டா பகுதி ஒரு குடம்போன்றுள்ளது. அக்குடத்தின் மூக்கில் அமைந்துள்ள நகரம் 'குடமூக்கு' அல்லது 'குடந்தை' என்னும் பெயர் பெற்றுள்ளது. பழைய இலக்கியங்கள், தேவாரத் திருமுறைகள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் குடமூக்கு அல்லது குடந்தை என்னும் பெயர்களே காணப்படுகின்றன. கி.பி.பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் விசயநகர ஆட்சியில் பல தமிழ்ப் பெயர்கள் வடமொழி மாற்றம் பெற்றன. குடமூக்கு என்னும் பெயர் வடமொழியில் கும்பகோணம் என மாறி அதுவே நிலைத்து விட்டது. அருணகிரிநாதர் கால முதலாகக் இப்பெயர் வழங்கி வருகிறது. தமிழில் திருக்குடந்தை என்ற பெயரும் தொடர்ந்து வருகின்றது.

'குடமூக்கின் பெருமான் எம் இறைவன்' என்று திருஞானசம்பந்தரால் பாராட்டப்பெற்ற இறைவன் கோயில் இன்று 'கும்பேஸ்வரர் கோயில்' எனப் பெறுகிறது. குடமூக்கு என்னும் பெயர் கும்பகோணம் ஆன பின்பு இறைவன் என்ற சொல் ஈசர் ஆகியுள்ளது. கல்வெட்டுகளில் உடையார் திருக்குட மூக்கு உடையார் கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

காசியை விட வீசம் அதிகம்

இன்றைய மகாமகக் குளக்கரையிலுள்ள காசி விசுவநாதர் கோயிலே 'திருக்குடந்தைக் காரோணம்' ஆகும். இதை, 'கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம் - மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் பெருங்கோயில்' என்பர் திருஞானசம்பந்தர். எனவே, இங்கு 1360 ஆண்டுகட்கு முன்பிருந்தே மகாமகப் பெருவிழா கொண்டாடப்பட்டு வருவது தெளிவாகிறது.

மக்கள் பல புண்ணிய நதிகளிலும், தீர்த்தங்களிலும் நீராடித் தங்கள் பாவங்களைக் கழுவுகிறார்கள் இப்பாவங்களைச் சுமந்து வரும் கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதை, சரஸ்வதி, காவிரி போன்ற நதி தீர்த்த மாதர்கள் பன்னிரெண்டு ஆண்டுகட்கு ஒருமுறை இம்மகாமகக் குளத்தில் மகாமகத்தன்று நீராடி அப்பாவங்களை நீக்கித் தூய்மையடைகின்றனர் என்பது மரபு. அவ்வேளையில் நாமும் அக்குளத்தில் நீராடுவதால் தேவர்கள் அனைவரையும் தரிசனம் செய்த புண்ணியம்கிடைக்கும் என்பர்.

மேலும், பல ஊர்களிலுள்ளவர்களின் பாவங்கள் கங்கையில் நீராட நீங்கும். அதே காசியிலுள்ளவர்கள் செய்த பாவங்கள் கும்பகோணத்தில் நீராட விலகும். இதைக் கொண்டு எழுந்ததே 'காசியை விட வீசம் அதிகம் குடந்தை' என்ற முதுமொழி. இவற்றை விளக்கும் புராண வரலாறுகளும் குறிப்பிடத்தக்கன.

புராண வரலாறு

பேரூழிக் காலத்தில் பிரமனின் வேண்டுகோளுக்கிணங்கி இறைவன் அளித்த அமுத கலசம் தங்கிய இடமே கும்பகோணம் என அழைக்கப்பட்டது என்பது புராண வழக்கு. அப்பேரூழிக் காலத்தில் பிரமனின் வேண்டுகோளின்படி சிவபெருமான் தோன்றி, ஓர் அம்பினால் அமுத கலசத்தின் மூக்கை உடைத்தார்; அதனுள் இருந்த அமுதம் சிதறிப் பரவி இரண்டு இடங்களில் தேங்கியது; அதில் ஒன்று மகாமகக்

குளமானது; மற்றொன்று ஏமபுட்கரணி பொற்றாமரை ஆனது. குடம் உடைந்து அமுதம் சிந்திய இடங்களெல்லாம் புனிதக் கிணறுகளாகமாறின; வேடன் உருவில் இருந்த பெருமான் அமுதம் சிந்திய மண்ணைச் சிவலிங்கமாக்கி, அதைப் பூசை செய்து அதற்குள் ஐக்கியமானார்; அந்தச் சிவலிங்கமே கும்ப வடிவில் இருப்பதால் ஆதி கும்பேஸ்வரர் எனப் பெற்றது எனப் பல புராண வரலாறுகள் கூறப்பெறுகின்றன.

பொதுவாக, அமுத குடத்தினின்று அமுதம் கோணமாகச் சுற்றி விழுந்ததினால் கும்பகோணம் என்றும், நான்முகன், திருமால், உருத்திரன் மூவரும் இருந்து சூரியனால் பூசிக்கப் பெற்றதனால் பாஸ்கர க்ஷேத்திரம் என்றும், குடத்தை இடமாகக் கொண்டதால் குடந்தை என்றும், அமுதத்தையும் குடமூக்கில் லிங்கமாக வைத்துப் பூசித்ததால் குடமூக்கு என்றும் இத்தலம் அழைக்கப்பெற்று வந்துள்ளதை இப்புராண வரலாறுகள் சுட்டுகின்றன.

மூர்க்க நாயனார் போன்ற சிவனடியார்கள் தொண்டு செய்து வாழ்ந்ததும், ஏமரிசி பூசித்ததுமான இத்தலம் ஞானசம்பந்தர் மற்றும் அப்பர் பாடல் பெற்ற சிறப்புடையதுமாகும்.

திருக்குடந்தைப் புராணம்

இத்தல வரலாறுகளை விளக்கி நான்கு தலபுராணங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவை : 1 கும்பகோணத் தலபுராணம், 1406 பாடல்கள் கொண்டது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 2. கும்பகோணப் புராணம், 1118 பாடல்கள் கொண்டது. ஆசிரியர் அகோர தேவர் (17ம் நூ.) 3. கும்பகோணப் புராணம், ஆசிரியர் ஒப்பிலாமணிப் புலவர் (18 ஆம் நூ) 4. திருக்குடந்தைப் புராணம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றியது, 70 படலங்களும் 2384 பாடல்களும் கொண்டது.

1865 ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் தாசில்தாராக இருந்த சிவகுருநாதபிள்ளை மற்றும் பல சைவப் பெருமக்கள் வேண்டுகோளுக்கிணங்க மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கும்பகோணம் பேட்டைத் தெருவிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் தங்கியிருந்து இந்தத் திருக்குடந்தைப் புராணத்தை இயற்றியளித்துள்ளார். முதலில், ஸ்ரீ சங்கராசாரியர் மடத்து வித்துவானாகிய மண்டபம் நாராயண சாஸ்திரிகள் முதலியவர்களிடமிருந்து இப்புராணத்தை வடமொழியிலிருந்து இவர் தமிழ் வசனமாக மொழிபெயர்த்து வைத்துக் கொண்டுள்ளார், பின்பு, புராணத்தை இவர் செய்யுள் நடையாகச் சொல்லச் சொல்ல இவருடைய மாணாக்கர் திருமங்கலக்குடி சேஷையங்கார் என்பவர் ஏட்டில் எழுதி வந்துள்ளார்.

இப்புராணத்தில் சிறுசிறு பகுதிகள் ஒவ்வொரு நாளும் இயற்றப்பட்டு, அன்றன்று பிற்பகலில் ஸ்ரீ ஆதிகும்பேசுவரருடைய ஆலயத்தின் முன்மண்டபத்தில் அவை அரங்கேற்றப்பட்டுள்ளன. வித்துவான் தியாகராச செட்டியார் போன்ற பல அறிஞர்கள் நாள்தோறும் தவறாமல் வந்திருந்து இப்புராணம் முழுவதும் கேட்டறிந்து பாராட்டி மகிழ்ந்துள்ளனர். புராண அரங்கேற்றம் முடிந்ததும் இப்புராணச் சுவடியை வெகுவிமரிசையுடன் யானை மேலுள்ள தவிசில் வைத்து ஊர்வலம் செய்வித்துள்ளனர். புராணம் பாடிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்கு மிகுந்த மரியாதைகள் செய்து, பெரிய மேனாப் பல்லக்கில் அமர்த்தி, அவரைச் சுமந்து ஊர்வலம் செய்து, தமிழுக்கும் பெருமை சேர்த்து, அக்கால வழக்கத்தையும் புலப்படுத்தியுள்ளனர் என்பதை டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் தம் சரிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1866 ஆம் ஆண்டு தை மாதம் அச்சிடப்பெற்ற இத் திருக்குடந்தைப் புராணம் இலக்கியச் சிறப்புகள் பல கொண்டதாகும். இத்தலத்தின் சிறப்புகள் முழுவதையும் இப்புராணத்தில் காணலாம்.

இப்புராணத்திலுள்ள சிறப்புச் செய்திகள் சில:

மார்க்கண்டேய முனியும் திருமாலும்

இத்தலத்தில் மார்க்கண்டேய முனிவர் பூமிதேவியை மகளாகப் பெற எண்ணி உப்பில்லாத உணவைப் புசித்துப் பல வருடங்கள் தவமிருந்தனர். அவர் தவத்திற்கு மகிழ்ந்து அத்தேவி மகளாக அவதரித்து வந்தாள். அப்பொழுது அவளை மணந்து செல்ல எண்ணித் திருமால் மூப்பு வேடம் பூண்டு வந்தனர். அவரை மார்க்கண்டேயர் வினவுதலும் அவர்விடை கூறுதலுமாக உள்ள ஒரு செய்யுள்:

"வந்தது பசித்தீ மாற்ற வென்றனன் மாயக் கள்வன்
அந்தநன் மொழிகேட் டைய வலவண வுணவுண் டிங்கே
நந்தவுண் டிடுவாய் கொல்லோ என்றனன் நற்ற
வத்தோன்
எந்தமண் ணேனும் உண்பேன் என்றனன் விரூத்த
மாயன்"

(திருநாகேச்சுரப் படலம், பா.22)

இதில், 'எந்த மண்ணேனும் உண்பேன்' என்பது விரைவாக உலகினர் கூறும் வாக்கியமாக இருந்தாலும் மண்மகளைத் திருமால் விரும்பிய குறிப்பும் காணப்படுகின்றது.

இராசிகளில் கும்பம்

சிவபெருமான் அமுத கும்பத்தில் தோன்றியதைக் கூறும் ஆசிரியர், அதில் பன்னிரெண்டு இராசிகளின் பெயர்களும் தொனிக்குமாறு பாடியிருக்கக் காணலாம்.

அப்பாடல் வருமாறு:

"மேடமூர் மதலை கடகமென் மலர்க்கை விளங்கருஞ்
சிங்கமென் மருங்குல்
ஆடக மகரக் குறைச்செவி மீனம் அடுவிழி படைத்துலாங்
கன்னி
மாடமர் தரவ விருச்சிக மிதுனம் மரூஉந்தனு வதுவென
அடியார்க்
கூடவோர் இடபந் தோன்றிடும் பொருளோர்
கும்பத்துத்தோன்றி தன்றே".

(கும்பேசுவரப் படலம், பா.31)

கும்பேசுவரரும் சார்ங்கபாணியும்

அக்காலத்தில் சைவ வைணவ சமயத்தவர் இருவரும் இத்திருக்குடந்தைப் புராண அரங்கேற்றத்தைத் தினமும் உடனிருந்து கேட்டு இன்புற்றுப் பாராட்டி மகிழ்ந்தனர் என அறிகிறோம். "கும்பேசுவரரையும் ஆராவமுதப் பெருமாளையும் அடியார்கள் தந்தை தாயென்று போற்றுவார்களாயின் பலவகைப் போகங்களையும் நுகர்ந்து சிவலோக வாழ்வைப் பெறுவார்கள்" என்னும் பொருளமைய ஆசிரியர் பின்வருமாறு பாடி மகிழ்கின்றார்.

"எண்ணிய கும்ப லிங்கநா யகரை இலங்கும்ஆ ராவமு
தரைச்சீர்
நண்ணிய சைவர் யாவருங் கண்டு நாடொறுந் தந்தைதா
யென்றே
கண்ணிய சிறப்பிற் போற்றிடு வாரேற் கருதுபல்
போகமுந் துய்த்துப்
புண்ணிய மிகுந்த பெருஞ்சிவ லோகம் புக்குவாழ்ந்
தமர்வது சரதம்."

(ஆராவமுதப் படலம், பா.70)

ஸ்ரீ கோமளவல்லித்தாயார் பிள்ளைத்தமிழ்ப் பாட்டு

மகாவித்துவான் பிள்ளையவர்கள் பிள்ளைத்தமிழ் பாடுவதிலும் வல்லவர். இவர் இத்திருக்குடந்தைப் புராணம் பாடி அரங்கேற்றி வருகையில், சார்ங்கபாணிப் பெருமாள் கோயில் தர்மகர்த்தாவாக இருந்த ஸ்ரீநிவாச பட்டாச்சாரியார் என்பவருடைய விருப்பத்தின்படி இப்புராணத்தில் ஆராவமுதப் படலத்தில் ஸ்ரீகோமளவல்லித் தாயாருடைய அவதாரத்தைக் கூறுமிடத்து, பத்துப் பருவங்களையும் பத்துப் பாடல்களில் அமைத்து (பா.26-35) இனிமையாகப் பாடியுள்ளார்.

பிள்ளைத்தமிழ் நூல்களில் அம்புலிப் பருவத்திற்குரிய செய்யுட்கள் பத்தாக அமைக்கப் பெறும். இவ்வரிய செய்திகளை ஒரே செய்யுளில் அமைத்துள்ள மகாவித்துவான் அவர்களின் திறன் இப்புராணத்தின் மற்றொரு சிறப்பாகும்.

"முன்னநீ யுகித்த விடத்திவ ளுதித்தாள் முயற்கறை
சிறிதுமில் லாதாள்
நன்னர்நீ யிந்தத் தலத்தினை யடைந்தால் நைதலற்
றுயர்வது சரதம்
உன்னரும் விடவா யாயிர மமைந்த உரகமற்
றிவண்மொழி கேட்கும்
மன்னவம் புலியே வருகென வழைக்க மகிழ்ந்தனள்
கோமள வல்லி."

(ஆராவமுதப் படலம், பா.32)

என்னும் இச்செய்யுளில், 'முன்னநீ.... உதித்தாள்' என்றதனால் சாமமும், 'முயற்கறை சிறிதுமில்லாதாள்' என்றதனாற் பேதமும், 'நன்னர்நீ... சரதம்' என்றதனால் தானமும், 'உன்னரும்... கேட்கும்' என்றதனால் தண்டமும் ஒருங்கே குறிப்பிக்கப்பட்டுள்ளன.

காவிரி நீராடல்

ஸ்ரீகோமளவல்லித் தாயார் காவிரியில் நீராடிய காட்சியை மிக அழகாக விவரிக்கின்றார் இப்புராண ஆசிரியர்.

**"கயல்விழிக் கயலைச் சைவல நறிய கருங்குழ லாயசை
வலத்தை
அயல்வரால் கணைக்கா லாகிய வராலை அங்கொடி
மருங்குனுண் கொடியை
இயல்பல கமல முகமது லாக இயைபல கமலத்தை நட்க
உயலுற வந்த கோமள வல்லி உவந்துநீ ராடினள்
பொன்னி."**

(ஆராவமுதப் படலம், பா.34)

இவ்வாறு, இலக்கிய நயம்மிக்க பாடல்கள் பல இப்புராண நூலில் உள்ளன. அவை விரிப்பின் பெருகும். கவிதைச் சிறப்பும், புலமைச்சிறப்பும், தலபுராண வரலாற்றுச் சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற இத்திருக்குடந்தைப் புராணத்தை முழுவதுமாகப் படித்துணர்ந்து போற்றி நலம்பல பெறுவோமாக.

கம்போடியாவில் கணபதிப்பெருமான்

ஒரு கையில் ஏடும், மறு கையில் எழுத்தாணியும் கொண்டு மகாபாரதக் கதையை எழுதுகின்றவராகக் காணப்பெறும் கணபதிப் பெருமானின் இச் செப்புத்திருமேனி கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். அரிய இத்திருமேனி கம்போடிய நாட்டில் ''அங்கோர்தாம்'' எனும் ஊரில் உள்ள பாயான் **(Bayon)** கோயிலில் உள்ளது. முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் கம்போடியாவோடு தமிழகம் கொண்டிருந்த தொடர்பும், அம்மண்ணில் இந்தியக் கலாச்சாரங்கள் மலர்ந்ததுமே இத்தகைய தெய்வத் திருவுருவங்கள் அங்கு காணப்படுவதற்குக் காரணமாகும்.

பஞ்சகுரோசத்தலங்கள்

ப.நா. பாலசுப்பிரமணியன், சென்னை.

வரலாற்றுச் சிறப்பும் புனிதச் சிறப்பும் பக்திச் சிறப்பும் மிக்க ஆலய நகரமாகத் திகழ்வது குடந்தை என்ற கும்பகோண நகரம்.

பிரளய காலத்தில் ஈசனது ஆணைப்படி விடப்பட்ட அமுதகும்பம் இங்கு வந்து தங்கி கும்பத்தின் மூக்கு வழியே அமுதம் பரவியதால் குடமூக்கு என்றும் கும்பகோணம் என்று அழியாப்புகழ் பெற்ற அற்புதத்தலம்.

காந்த சக்தியைக் குறிக்கும் அமுதம் நிரம்பிய மண்ணும் அமுதமும் கலந்து உருவாக்கிய கும்பத்திலிருந்து சிவனாரது திருவுளப் பாங்கின்படி அம்புபட்டு கலசத்தின் மூக்கு வழியாக அமுதம் வெளிப்பட்டு கும்பகோணத்தையும் ஐந்து குரோச அளவிற்கு இந்நகரைச் சுற்றியும் நனைத்தது. நகரத்தையடுத்துள்ள அமுதம் நனைத்த இவ்விடங்களில் அமைந்துள்ள ஆலயங்கள் பஞ்ச குரோசத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. குரோசம் என்ற சமஸ்கிருதச் சொல்லிற்கு ''கூப்பிடு தூரம்'' என்றும் பொருளுண்டு.

இப்பஞ்சகுரோசத் தலங்கள்,

1. திருவிடை மருதூர் (கிழக்கு)
2. திருநாகேஸ்வரம் (தென்கிழக்கு)
3. தாராசுரம் (தென்மேற்கு)
4. சுவாமிமலை (வடமேற்கு)
5. திருப்பாடல வனம் (கருப்பூர்) (வடகிழக்கு)

ஆகிய ஐந்து அற்புதத் திருத்தலங்களாகும். இப்பஞ்ச குரோசத்தலங்களுக்கு நாம் இப்போது யாத்திரை மேற்கொள்ளலாமா?

1. திருவிடை மருதூர்

வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர்
வந்து ஈண்டிப்
பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம்
பொலிவு எய்தத்
திருந்திய நான் மறையோர் சீரால் ஏத்த
இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே
- ஞானசம்பந்தர்

ஆலயங்கள் நிறைந்த நம் இந்தியத் திருநாட்டில் மூன்று அர்ஜுன க்ஷேத்ரங்கள் பெரும் புகழோடு விளங்குகின்றன. தமிழகத்திற்கு வடக்கே ஆந்திர தேசத்தில் விளங்குவது ஸ்ரீ சைலம் (மல்லிகார்ஜுனம்). தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் விளங்குவது அம்பாசமுத்திரத்திற்கு அருகில் அமைந்துள்ள திருப்புடைமருதூர் (புடார்ஜுனம்) க்ஷேத்ரம். இவ்விரு ஆலயங்களுக்கு இடையே கும்பகோணத்திற்கு அருகில் அமைந்துள்ள க்ஷேத்ரம் மத்யார்ஜுனம் என்ற திருவிடைமருதூர். இத்தலத்தினை உய்யக் கொண்ட சோழ வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவிடை மருதூர் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. கும்பகோணத்திற்கு நேர் கிழக்கில் எட்டு கி.மீ. தூரத்தில் மயிலாடுதுறை மார்க்கத்தில் அமைந்திருப்பது இவ்வாலயம். இறைவன் இங்கு நித்திய வாசம் செய்து அன்பர்களுக்கு எளிதாய் அருள் பாலிப்பது கண்கூடு. அர்ஜுனம் என்ற சொல் மருத மரத்தைக் குறிக்கும். சண்பகாரண்யம், சத்திபுரம், தபோவனம், ஜோதிநகர், சர்வதீர்த்தபுரம், முத்திபுரம் முதலாகப் பன்னிரண்டு பெயர்களாலும் இத்தலம் அழைக்கப்படுகின்றது.

இவ்வாலயத்திலமைந்துள்ள ஜோதி லிங்கத்தை சிவபெருமானே - தன்னைத் தானே -ஆத்மபூஜை செய்திருக்கிறார். இதனால் இத்தலத்து ஈச்வரர் மகாலிங்கம் என்றழைக்கப் படுகிறார்.

மகாலிங்கரை, 'மகாதேவ' என்ற திருநாமத்தைச் சொல்லி ஆராதித்தால் கோடி பிரம்மஹத்தி பாவங்கள் விலகும் என்று பிரம்மபுராணம் உத்தர காண்டத்தில்;

கோடயோ ப்ரஹ்மஹத்யானாம்
அகம்யாகம கோடய:
ஸத்ய ப்ரளய மாயாந்தி மஹா தேவேதி
கீர்த்தனாத்

என்று கூறுப்பட்டுள்ளது.

இவ்வாலயம் நான்கு பிரகாரங்கள் கொண்டு விளங்குகிறது. அழகு மிக்க வீதிகளையும் சேர்த்தால் மொத்தம் ஐந்து பிரகாரங்கள் வெளிச்சுற்று 'அசுவமேதச்சுற்று' வலம் வருபவர் எல்லா நன்மைகளும் பெறுவது திண்ணம். சித்தப்பிரமை உள்ளவர் இச்சுற்றை ஒரு மண்டலம் சுற்றி வந்தால் அப்பிரமை விலகுவது இன்றளவும் பிரத்யட்சம். இரண்டாவது சுற்றான கொடு முடிச்சுற்றைச் சுற்றி வந்தால் கயிலை மலையைச் சுற்றிய புண்ணியம் கிட்டும். மூன்றாவது பிராகாரம் - ஸ்வாமியை வலம் வரும் சுற்று - கருவறையைச் சுற்றியது பிரணவச்சுற்று எனப்படுகிறது. இச்சுற்றில் பிரணவ ஒலியாக 'ஓம்' என்ற நாதம் வெளிப்படுகிறது. அம்மன் ஆலயத்தில் உள்ளது உள் பிரகாரம்.

ஆலயம் பரந்து விரிந்து அமைந்து அற்புத அழகோடு விளங்குகிறது. கோயிலுக்கு உள்ளே நுழைந்ததும் மண்டபத்தில் கொடி மரத்திற்கு முன்னால் படித்துறை வினாயகர் சந்நிதி.

ஸ்வாமி சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையில் ஜோதி ஸ்வரூபமாக போக சக்தியோடு மகாலிங்கர், மருதவாணன், மருதவனேசன், மருத நாயகன், மருதிறைவன் எனப்பல நாமங்கள் இவருக்கு.

தல விநாயகரான ஆண்ட பிள்ளையார், அகத்தியலிங்கம், காசிபலிங்கம், உரோமசலிங்கம், கோடிலிங்கம், சேரலிங்கம், சகஸ்ரலிங்கம், பஞ்ச பூதலிங்கம் ஆகிய மூர்த்திகளுக்கு தனிக் கோயில்கள்.

இம்மட்டோ? அர்த்த நாரீசுவரர், தட்சிணாமூர்த்தி, சப்த கன்னியர், நடராஜர், பிட்சாடணமூர்த்தி ஆகிய மூர்த்தங்களும் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

கொடு முடிச்சுற்றிற்குத் தெற்கே அம்மன் கோயில், கிழக்கே நோக்கிய சந்நிதி ஈசனுக்கு வலப்பக்கம் அம்பாளின் வாசஸ்தலம். சாதாரணமாக சிவாலயங்களில் ஈசனுக்கு இடது புறமாக அம்பாள் சந்நிதி அமைந்திருக்கும். மாறாக இத்தலத்தில் அம்பாள் ஈசனின் வலப்பக்கம் தனது சந்நிதியில் எழுந்தருளியிருக்கிறார். 'ப்ருகத் சுந்தர குசாம்பிகை' - பெரு நல முலையம்மை என்பது அம்பாளின் திருநாமம். உரோமச முனிவர் வேண்டியபடி தாயார் வலப்புறம் அமர இறைவன் காட்சி தந்ததால் தாயார் சந்நிதி வலப்புறம் அமைந்திருக்கக் காரணமாகிறது. சிறந்த திருமேனிப் பொலிவோடு கருணை பொங்கித் ததும்பும் கண்களோடு ஒளிவீசும் தன்மையோடு ஜோதிர்மய மகாலிங்கத்தின் அந்தப் பரப்பிரம மத்தின் பட்ட மகிஷியாக, 'உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகமாக' சுடர்விட்டு பிரகாசமாக அம்பாள் அருள் பாலிக்கிறார்.

அம்பாள் ஆலயத்தின் வாயிலில் வடக்கைப் பார்த்தபடி மோனத்தவம் புரியும் அமர்ந்த நிலையிலான அற்புதக் கோலத்தில் மூகாம்பிகை சந்நிதி. அம்பிகையின் இடப்பக்கம் மேரு மலையான ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. இதனை, லலிதா சகஸ்ர நாமத்திற்கு பேருரை கண்ட சாக்த உபாசகர் பாஸ்கர ராயர் பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகிறது. காசி விசுவநாதர் ஆலய விமானம் போல உயரமான விமானத்தோடு கூடிய சந்நிதி ஸ்ரீ சக்கரநாயகி அன்பர்களுக்கு அனுதினமும் அருள் பொழியும் அற்புதம்.

அவ்வாலயத்தின் மேற்குக் கோபுரத்தை யடுத்து முருகன் கோயில் ஒன்று உள்ளது. பிரணவப் பிராகாரத்தின் வட மேற்கில் கிழக்கு நோக்கிய ஒரு முருகன் சந்நிதியும் கோயில் தல விருட்சமான மருத மரத்தின் மேற்கே அழகிய மண்டபங்களோட மைந்த ஆறுமுகன் சந்நிதியும் அமைந்துள்ளன. நீல மயில் மீது பன்னிரு கர வேலன் இரு தேவியரோடு கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். நான்கு திருப்புகழ்ப் பாக்களால் அருணகிரி நாதர் முருகனைப் பாடிப் பரவியுள்ளார்.

மிடைபடு மலமாயையால் மிககலவிய அறிவேக
சாமிநின் விதரண சிவஞான போதகம் வந்து
தாராய்

என்று இகபர சௌபாக்யம் தந்தருளும் சத்குரு நாதனான முருகனிடம் அருணகிரிநாதர் வேண்டுகிறார்.

கீழ்த்திசை ராஜகோபுரத்திற்கு வெளியே காருண்யாம்ருத தீர்த்தம், பூச தீர்த்தம், கனக தீர்த்தம், பாண தீர்த்தம், பராசர தீர்த்தம், சோம தீர்த்தம், பதும தீர்த்தம், பாண்ட தீர்த்தம், கங்கா கூபம் ஆகிய தீர்த்தங்கள் ஆலயத்தின் தீர்த்தப் பெருமையை பறை சாற்றுகின்றன.

வரகுண பாண்டியனின் பிரம்மகத்தி தோஷம் நீங்கப் பெற்றது இவ்வாலயத்தில் தான். சிவவாக்கியர், காளி, அகத்தியர், கபிலர் முதலானோர் வழிபட்டுய்ந்த தலம். தேர் மேடையாக அமைந்த வடக்கிலுள்ள முருகன் சந்நிதி. தேர்க்கால்கள் பன்னிரண்டு ராசிகளின் தேவதைகள். விதானத்தில் அரசனின் கொலுக்காட்சி சிற்பமாக அமைந்துள்ளது. சோழர் கால, நாயக்கர் காலச் சிற்பங்கள் மண்டபத் தூண்களையும் பிற இடங்களையும் அலங்கரிக் கின்றன. மராட்டிய அரசகுலப் பெண்மணி காதல் - கல்யாணம் நிறைவேறாது தன்னைப் போன்றே பித்தளையில் பாவை விளக்குச்செய்து கோயிலுக்கு அளித்திருக்கிறாள் இப்பாவை விளக்குகள் இறைவன் சந்நிதிமுன் இன்றும் ஒளிர்வதைக் கண்டு மகிழலாம்.

அச்சுதப்ப நாயக்கர் (கி.பி. 1590-1600) இவ்வாலயத்தில் உயர்ந்த மண்டபங்களை நிர்மாணித்த செய்தி, இவரது மகனான இரகுநாத நாயக்கர் எழுதிய 'சங்கீத சுதா' என்ற நூலின் (சுலோகம் 38-44)

மாயூர மத்தியார்ஜுன கும்பகோண
ஸ்ரீ சம்பகாரண்ய முகஸ்தலேஷு
மஹத்தரம் மண்டப மாததான
பக்த்யா மஹத்யா பர மச்யுதேந்ர:

ஆகிய வரிகளால் தெரிய வருகிறது.

ஆலயத்தில் மொத்தம் 160 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டவற்றில் முப்பத்து மூன்றே முழுமையாகவும் மற்றவற்றின் குறிப்பும் வெளியாகியுள்ளன. முதலாம் குலோத்துங்கனின் 38-ம் ஆட்சியாண்டில் நிலங்கள் அளக்கப்பட்டு வரிக்கூறு செய்யப்பெற்றது, கோவில் விழாக்களில் நடனமாகவும் இசைபாடவும் உள்ள ஏற்பாடுகளில் திருத்தங்கள் செய்யப்பெற்றன. அக்காலத்தில் ஸ்வாமி திருமஞ்சனத்திற்கு (அபிஷேகம்) மண் குடங்களிலேயே நீர் கொண்டு வரப்பட்டது. நிலக் கொடை, விளக்கெரிக்கக் கொடை ஆகிய செய்திகள் கல்வெட்டுக்கள் தெரிவிப்பவை.

'மத்யார்ஜுன மான்மியம்' தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ.வே. சாமிநாதய்யரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தேவார மூவரது பதிகங்கள், மாணிக்கவாசகரது 13 பாடல்கள், பட்டினத்தாரின் திருவிடை மருதூர்

மும்மணிக்கோவை, திருவிடைமருதூர்க் கலம்பகம், திருவிடைமருதூர் உலா, அருணகிரிநாதரது நான்கு திருப்புகழ்ப் பாடல்கள், மருதவனப் புராணம், மருதவாணர் தோத்திரப் பதிகம், திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்து அந்தாதி ஆகியன இத்தலத்தைப் பற்றிய இலக்கியக் கருவூலங்களாகும்.

2. திருநாகேஸ்வரம்

நழுவில்வா னோர்தொழ நல்கு சீர்
மல்குநாகேச்சுரத்
தழகர்பா தந்தொழு தேத்தவல்லார்க்
கழகாகுமே
- ஞான சம்பந்தர்.

சீரோற்கும் யோககீச்சுரர் நின்று வந்து
வணங்குதிரு.நாகீச்சுர மோங்கு நங்கனிவே
- அருட்பா.

சோழ வளநாட்டில் காவிரியாற்றுத் தென்கரைத் திருத்தலமாகத் திகழ்வது திருநாகேஸ்வரம். சேக்கிழார் சுவாமிகளின் சிந்தையை மிகவும் ஆக்கிரமித்து அவரால் பல திருப்பணிகளைப் பெற்றது. கும்பகோணம் - காரைக்கால் மார்க்கத்தில் நகருக்குக் கிழக்கே நான்கு கல் தூரத்தில் அமைந்துள்ளது.

''மாயவனை மறையவனை மறையோர்தங்கள்
மந்திரனை .... திருநாகேச் சரத்துளானை''

ஆலயத்தின் மூலவராகப் பெற்று விளங்கும் தலம் சண்பகவனம், கிரிகன்னிகைவனம் முதலிய வேறு பெயர்களும் கொண்டது. கோயில் பெயரே ஊரின் பெயராயமைந்த சிறப்பும் உண்டு.

மிகுந்த விஸ்தீரணத்திலமைந்துள்ள ஆலய வளாகம். கம்பீரமான ராஜகோபுரத்தைத் தாண்டி பக்தி மீதூற ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறோம். ஸ்வாமி கோவில், ஈச்வரன், இடையில் முருகன், அம்பாள் என்று சோமாஸ்கந்த அமைப்பில் அபூர்வமாக உள்ளது கண்டு உளம் பூரிக்கிறோம்.

நிருத்த விநாயகர், நந்தி, விநாயகர் முதலான சந்நிதிகள். சூர்ய புஷ்கரணி, நூற்றுக்கால் மண்டபம் தாண்டி இரண்டாம் பிராகார மதிற்சுவர்களை ஒட்டி அலங்கார மண்டபம் உள்ளிட்ட பிற மண்டபங்கள் மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஈசனை - திருநாகேஸ்வரரை நன்கு பிரார்த்தித்துக் கொண்டு மேலே சென்றால் முதல் பிராகாரத்தின் மேற்புறத்தில் விநாயகர், சந்திரசேகரர் மண்டபம், முருகன் சந்நிதி, பஞ்சலிங்கம், இலக்குமி, பள்ளியறை முதலான சன்னதிகள். வடபுறத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களும், நடராஜரும் - தென்புறத்தில் சேக்கிழார், பாலறாவாயர், அம்பாள், நால்வர் வீற்றிருக்கக் காணலாம். நடு மண்டபத்தில் சண்பக விநாயகர், ஸ்ரீ நாகநாதர், சண்முகர், மலைமகளாகிய தேவி ஆகியோரை கிழக்கு நோக்கிய சன்னதிகளில் வழிபடலாம்.

மற்றொரு தேவியான கிரிகுசாம்பாள் (மலை முலையாள்) கோயில் கிழக்கு நோக்கி தனியே அமைந்துள்ளது. சுதையால் ஆன உருவமாதலால் அபிஷேகம் கிடையாது. தை மாதத்தில் மட்டும் புனுகு சார்த்தப்படுகிறது. இத்தலப்புராணம், பெருமானுக்கு இரண்டு வடிவங்களும் தேவிக்கு இரண்டு வடிவங்களும் உள்ளதாகப் பேசும். இத்தலத்து ஈஸ்வரனை, சண்பகாரண்யேச்வரர், திருநாகேஸ்வரம் உடையார் மகாதேவர் முதலிய பெயர்களால் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இத்தலம் நவக்கிரகத்தலங்களில் ராகு ஸ்தலமாக விளங்குகிறது. நாகராஜன் வழிபட்ட தலம். ராகு, கேது தோஷங்கள் நிவர்த்தியாகும் தலம். சர்ப்பதோஷம் நீங்க நாகராஜன் திருமேனிக்கு

தேவியுடன் ரிஷபாந்திகர் - சோழர்காலச் செப்புத்திருமேனி

அபிஷேகம் செய்து பலன் பெறும் அன்பர்கள் அநேகம். நாகராஜனது திருமேனியில் அபிஷேகம் செய்யப்படும் பால், நீல நிறமாவதை இன்றும் காணமுடியும்.

இவ்வாலயத்து முருகன் ஒருமுகமும், நான்கு கரங்களும் கொண்டு மயிலுடன் நின்ற கோலத்தில் இருபுறமும் தேவியரோடு கிழக்கு நோக்கி விளங்குகிறார். மூலவரைப் போன்றே உற்சவர். மயில் மீதமர்ந்த ஆறுமுகப் பெருமான் மற்றொரு உற்சவ மூர்த்தி. இத்தல முருகனை 'ஆசார வீனக்குதர்க்க துட்டர்கள்' எனத் தொடங்கும் திருப்புகழால் அருணகிரி நாதர் போற்றிப் பாடியுள்ளார். தீயவை தவிர்க்க வேண்டுமென வலியுறுத்தும் இத்திருப்புகழ் 'நாகேச நாமத் தகப்பன் மெச்சிய பெருமானது' திருவருளினால் வன்முறையும் தீச்செயல்களும் அழிந்து பட ஆறுமுகனுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

கண்டராதித்த சோழர் சுவாமி கோவிலை நிர்மாணித்தவர், சேக்கிழார் பெருமான் உள் மண்டபம் நிர்மாணித்தார், ஸ்ரீ கோவிந்த தீட்சிதர் வெளி மண்டபத்தை கட்டியவர் என்பது வரலாறு.

சிற்பச் சிறப்புக்களுக்கும் இவ்வாலயத்தில் குறைவில்லை. முன் மண்டபத் தூண்களில் குதிரை, சிங்கம் முதலான வடிவங்கள் சுவாமி கோயில் பிராகாரத்தில் சிங்கம் தாங்கும் தூண்கள் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. நூற்றுக்கால் மண்டபம் கல்சக்கரங்களோடு தேர் போன்ற வடிவில் அமைந்துள்ளது சிறப்பு. இம்மண்டப அதிஷ்டானத்தில் பரத நாட்டியச் சிற்பங்கள் பாங்குடன் காட்சியளிக்கின்றன.

நந்திதேவர், விநாயகர், கௌதமர், நளன், பராசரர், பாண்டவர்கள், வசிஷ்டர், இந்திரன், பிரமன், பகீரதன், நாக அரசர்களான ஆதிசேஷன், தக்ககன், கார்க்கோடகன் முதலானோர் இத்தலத்து ஈசனை உளமாற வழிபட்டுப் பேறு பெற்றதாக தலபுராணம் விரிவாகப் பேசுகிறது.

சூர்ய தீர்த்தம், கன்யா தீர்த்தம், இந்திர தீர்த்தம், கௌதம தீர்த்தம், நாக தீர்த்தம் எனப் பல்வேறு தீர்த்தங்கள் இவ்வாலயத்திற்கு தீர்த்தச் சிறப்பை சேர்ப்பவை.

திருநாகேச்சுரப்புராணம், திருநாகேச்சரப் பதிற்றுப்பத்தந்தாதி, திருநாகேச்சுரக்கோவை ஆகியவற்றோடு ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் அருளிய தேவாரம் அருணகிரிநாதரது திருப்புகழும் சேர்ந்து திருநாகேச்வரத்துப் பெருமை பேசும் இலக்கியங்களாகும்.

பழமையான ஆலயம் என்றால் கல்வெட்டுக்களுக்கா பஞ்சம்? பதினாறு கல்வெட்டுக்கள், இவ்வாலயத்திற்கு அளிக்கப்பட்ட ஆபரணங்கள் நிலக்கொடை முதலானவற்றை பரக்கப் பேசுகின்றன.

முதலாம் ராஜேந்திர சோழனது ஆறாவது ஆட்சியாண்டில் உடையார் ராஜேந்திர சோழ தேவரது சேனையில் இளைய குஞ்சர மன்னராயிருந்த அடிகள் ஆச்சான் என்பவரால் உய்யக்கொண்டார் வளநாட்டைச் சேர்ந்த திரைமூர் நாட்டிலுள்ள திருநாகேஸ்வரமுடையார் கோவிலுக்கு இரத்தினங்களும், முத்துக்களும் பதித்த பொன் ஆபரணம் அளிக்கப்பட்டது.

பரகேசரி வர்மனுடைய பதினாலாவது ஆட்சியாண்டில் கோவிலுக்குப் பொன், வெள்ளிப் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

முதல் பிராகாரத்து வடபுறச்சுவரில் காணப்படும் கல்வெட்டு, இரண்டாம் ராஜராஜ சோழனது பத்தொன்பதாவது ஆட்சியாண்டில் குலோத்துங்க வளநாட்டைச் சேர்ந்த திருநறையூர் நாட்டில் பஞ்சவன் மாதேவிச் சதுர்வேதி

மங்கலத்தின் பகுதியான சிவபாதசேகர மங்கலத்தில் உள்ள நிலங்கள் திருநாகேஸ்வரரர் உடையார் கோவிலுக்கு வழங்கப்பெற்றதைத் தெரிவிக்கிறது.

முதலாம் ராஜேந்திர சோழனது 24 மற்றும் 31வது ஆட்சியாண்டுகளில் ''ராஜேந்திர சோழன் காசு'' என்ற பொன் நாணயம் வெளியிடப்பட்டது.

தஞ்சைப் பெரியகோயிலைப் பற்றிய குறிப்பும் மெய்ப்பொருள் நாயனார்க்கு மீலாடுடையார் என்ற மற்றொரு பெயர் இருந்ததும், கோயில்களை மகாசபையார் கவனித்து வந்ததும் கல்வெட்டுகள் கூறும் செய்திகளாகும்.

பழமைச்சிறப்பு, சிற்பச்சிறப்பு இவற்றோடு வேண்டுவோர்க்கு நலம் யாவும் நல்கும் தலம் திருநாகேஸ்வரம்.

3. தாராசுரம்

இரண்டாம் ராஜராஜன் எடுப்பித்த கற்கோயில் அல்ல அல்ல கலைக்கருவூலம் தாராசுரம் ஐராவதேச்வரர் ஆலயம். ராஜராஜேச்வரம் காலப்போக்கில் மக்கள் வாயில் அசைபோடப்பட்டு மருவி தாராசுரம் என இன்று புகழோடு விளங்குகிறது. கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் செல்லும் வழியில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வாலயம்.

ஆலயத்திற்கு வெளியே பலிப்பீடம். ஆலய நுழைவாயிலின் இருபுறமும் அழகு கொஞ்சும் சிற்ப வேலைப்பாடுகள். கருவறை, முக மண்டபம், மகா மண்டபம் என்ற வகையோடு கிழக்கு நோக்கி அமைந்துள்ளது ஆலயம்.

ஆலயத்திற்குள் நுழைந்ததுமே நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துவது தேர்ச்சக்கரம் போன்ற கல்சக்கரங்களுடன் கூடிய இராஜகம்பீர மண்டபம். இம்மண்டபத் தூண்கள் சிற்பக் களஞ்சியம். கோயிலே தேர்வடிவில் அமைந்துள்ளது.

மகா மண்டபத்தில் ஒப்பிலாத கண்ணப்பர், மோகினி ஆகியோரது சிற்பங்கள். வெளிப்புறச் சுவற்றில் அமைந்துள்ள தேவ கோஷ்டங்களில் சரபதேவர், அகத்தியர், சரசுவதி, சூரியன், வீரபத்திரர் முதலான அற்புதத் திருவுருவங்கள்.

ஐராவதேச்வரர் எழுந்தருளியுள்ள கருவறை. கருவறையைச் சுற்றி தடாக அமைப்பு. வரப்பின் மேல் சிறு சிறு நந்திகள். அற்புதமான விமானம். வடக்கு கர்ண துவாரப்படிக்கட்டுப் பகுதியில் பெரிய சண்டேசர். இவருக்கு எதிரே ஆறு கரங்களுடன் மகிஷாசுர மர்த்தனி.

ஆலயத்து ஈசனை பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடப்பட்டது தக்கயாகப்பரணி. இதற்குச் சான்று கூறும் வகையில் மகாமண்டபச் சுவரில் தக்கன் யாகத்தை அழித்த வீரபத்திரரின் வடிவம் இடம் பெற்றுள்ளது போலும்!

மூல ஆலயத்தை அடுத்து அமைந்துள்ளது தேவநாயகி கோயில். பிற்காலச் சோழர்களது கட்டிடக்கலை வளர்ச்சியின் ஒரு புதிய அம்சமாகத் திகழ்வது அம்மன் ஆலயம். அழகிய திருக்கோலத்தில் அம்மன். வாயில் கோபுரம் போல சதுர அமைப்பில் புதுமையான அம்மன் ஆலய விமானம்.

ஐராவதேச்வரர் ஆலயச்சிற்பச்சிறப்புக்களை சொல்லி மாளாது! ஆலயம் பற்றியும், சிற்பச் சிறப்புகள் குறித்த விவரங்களோடும் அழகிய படங்களோடும் இரண்டு தொகுதிகளாக திறமான புலமையை வெளிநாட்டார் வணக்கம் செய்வது உண்மை என்று நிலைநாட்ட பிரஞ்சு மொழியில் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாற்றையும் சீரிய சிவ வழிபாட்டையும் சொற் சித்திரங்களாக விளக்குவது சேக்கிழார் அருளிய பெரிய புராணம். இவ்வாலய கருவறை அதிஷ்டானங்களில் (அடித்தளப் பகுதி) நாயன் மார்களின் வரலாறும் சிவ வழிபாட்டின் நேர்த்தியும் சிற்பங்களில் காட்சிகளாகச் செதுக்கப்பட்டுள்ளது எல்லோரது சிந்தனையையும் கவருவதாயுள்ளது. சிற்பங்களுக்கு விளக்கமாக நாயன்மார்களது பெயரும் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பு. திருச்சுற்று மாளிகைச் சுவரில் சிவ தீட்சை பெற்ற 108 சிவனடியார்களின் உருவங்களைக் காணலாம்.

ஒரே நேரத்தில் உருவாக்கப்பட்ட விமானம், அர்த்த மண்டபம், முக மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட பூரணமான ஆலய அமைப்பாக அரிய காமகோட்டமாக அமைந்துள்ளது தேவநாயகி அம்மன் ஆலயம். ஐராவதேச்வரர் ஆலய அமைப்பினை கட்டிடக்கலைப் பாணியைப் பின்பற்றியே அம்மன் ஆலயம் அமைந்துள்ளதன் அடிப்படையில் கல்வெட்டுச் சான்றெதுவும் இல்லாத நிலையில் ஈச்வரர் ஆலய நிர்மாணம் முடிந்ததைத் தொடர்ந்தே அம்மன் ஆலயம் அமைந்ததெனத் துணியலாம்.

ஐராவதேச்வரர் ஆலய விமானத்தில் சிறப்புடைய பல்வேறு சிற்பங்கள், சிற்பங்கள் உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட சிறப்பான கற்கள் என விமானம் தனித்துவச் சிறப்புடையதாக விளங்குகிறது.

மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை பலலட்சம் செவழித்து ஆலயம் அழிந்துபடாமல் செப்பனிட்டுப் பேணி வருவதைப் பாராட்ட வேண்டும். கலைக்கருவூலமான தாராசுரம் ஆலயத்தையும் அதன் சிற்ப விசித்திரங்களையும் கண்டு மகிழ ஆயிரம் கண்கள் வேண்டும்.

4. சுவாமிமலை

தகையா தெனக்குள் அடிகாண வைத்த தனி
ஏரகத்தின் முருகோனே
தரு காவிரிக்கு வடபாரிசத்தில்
சமர்வே லெடுத்த பெருமாளே.

- திருப்புகழ்

ஆறுமுகன் உறையும் ஆறுபடை வீடுகளுள் நான்காவதாக விளங்குவது திருவேரகம் என்ற சுவாமிமலை. சங்க காலந்தொட்டே புகழ் பெற்ற திருத்தலம்.

உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாநவில் மருங்கில் நவிலப்பாடி விரையுறு நறுமலர்
ஏத்திப் பெரிதுவந்துள்ளஏரகத்து உறைதலும் உரியன்
அதா அன்று. - திருமுருகாற்றுப்படை

சங்கமிரந்த தமிழையெல்லாம் உண்டு திகழ்ந்த சிங்கமான நக்கீரர், தாம் அருளிய திருமுருகாற்றுப் படையில் கூப்பிய கைகளோடு அரிய மறைகளை ஆசாரியரிடத்தே கேட்ட கேள்விப்படியே அந்தணார் மந்திரங்களை நாவார உச்சரித்து நறுமணம் கமழும் மலர்களை ஏந்தியவராய் வழிபாடு செய்யும் ஏரகத் தமர்ந்த முருகனைப் போற்றிப் பரவுகிறார்.

சுவாமிமலை, கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் வழியில் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவனார் மனம் குளிர குமரன் தம் தந்தைக்கு பிரணவப்பொருளை அவர் செவி குளிர உபதேசித்த திருத்தலம். சுவாமிக்கே நாதனாக முருகன் திகழ்வதால் சுவாமிநாதனாக இங்கு விளங்குகிறார். கட்டுமலை மீது கிழக்கு நோக்கி நின்ற

திருக்கோலத்தில் பிரம்மசாரியாக ஊர்த்துவ சிகையுடன் தண்டாயுதபாணியாக விளங்குகிறார். ஞான சக்திதரனாக விளங்கும் முருகன், வைரவேல் ஏந்தியும், தங்கக் கவசம் பூண்டும், ராஜ அலங்காரத்துடனும் பல்வேறு கோலங்களோடு கோலாகலமாகக் காட்சி தருகிறார்.

மூன்று திருச்சுற்றுக்களை உடையதாக அமைந்துள்ளது இவ்வாலயம். தமிழ் ஆண்டுப் பெயர்களைக் கொண்ட படிகளில் ஏறிட 32-வது படியை அடைந்ததும் விளங்குவது இரண்டாவது திருச்சுற்று. மேலே நேத்ர விநாயகரை வணங்கி, உள்ளே சென்றால் அன்பர்களுக்கு அருளினை வாரி வழங்கும் சுவாமிநாதனின் சந்நிதி. கண்கள் குளிர மனம் மகிழ முருகனை வணங்கி கீழிறங்கி வந்தால் மீனாட்சி அம்மையையும் சொக்கநாதப் பெருமாளையும் தரிசிக்கலாம்.

உற்சவ மூர்த்தி ஆறுமுகப் பெருமான் இருதேவியரோடு அற்புதத்திருக்கோலத்துடன் காட்சியளிக்கிறார். வில்லேந்திய வேலனாக மற்றொரு மூர்த்தமும் உண்டு.

வச்சிர தீர்த்தம் (கோயில் கிணறு), குமாரதாரை (காவிரித்துறை), சரவண தீர்த்தம், நேத்திர புஷ்கரணி, பிரம்ம தீர்த்தம் என்ற ஐந்து புண்ணியப்புனல்களும், நெல்லிமரம் தல விருட்சமாகவும் கொண்டது சுவாமிமலை.

கேகய நாட்டு அரசர் தம் பிணி நீங்கி அருள் பெற்றார். மதுரை மாரியப்ப சுவாமிகள் அருள் பெற்றதும், அருணகிரிநாதர்,

''சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவஞான முத்தி பரகதியும் நீ கொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா''

என்று சகலரின் சார்பிலும் வேண்டியதும் வரலாறு.

38 முத்தான திருப்புகழ்ப் பாடல்களால் சுவாமிநாதனைப்பாடி மகிழ்ந்துள்ளார் அருணகிரி நாதர். திருவெழுகூற்றிருக்கை என்ற சித்திரக் கவியான இரத பந்தமும் பாடும் பேறு பெற்றவர் அருணகிரி நாதர்.

குமார தந்திர முறைப்படியும், காரணாகம முறையிலும் அனுதினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வியாழக் கிழமையும், மாத சஷ்டி, விசாகம், கார்த்திகை நாட்களும் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. சித்திரைப்பெருவிழா, கந்த சஷ்டி விழா, திருக்கார்த்திகை விழா, பங்குனிப் பெருவிழா (வள்ளி கல்யாண விழா) என வருட முழுவதும் ஆலயம் சிறப்புவிழாக்கோலத்தோடு விளங்குகிறது.

''காவிரியின் வடபுறஞ் சுவாமிமலை மிசை விளங்கு தேவர் பெருமானான'' சுவாமிநாத ஸ்வாமிகள் பெருமை சிந்தைக்கும், சொல்லுக்கும் அப்பாற்பட்டது.

5. திருப்பாடலவனம்

கருப்பூர் என்று தற்காலத்தில் அழைக்கப் படும் ஊரில் அமைந்துள்ளது திருப்பாடலவனம் ஆலயம். கும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் சாலையில் வடக்குப் பகுதியில் சுமார் 2 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

''பாடலம்'' என்றால் பாதிரி மரத்தைக் குறிக்கும். பாதிரி மரத்தை தலவிருட்சமாக கொண்டே தேவாரப்பாடல் பெற்ற நடுநாட்டுத் திருத்தலமான ஸ்ரீபாடலீஸ்வரர் ஆலயம் திருப்பாதிரிப்புலியூரில் (கடலூர்) இருப்பதைப் பலரும் அறிவார்கள். இதே போல இந்த ஆலயமும் திருப்பாடலவனம் என்று அழைக்கப்படுகிறது.

பஞ்ச குரோசத்தலங்களுள் ஐந்தாவதாகக் கருதப்படும் இவ்வாலயத்து இறைவன் சுந்தரேசர் -அழகான ஈசர் என்றழைக்கப்படுகிறார். இறைவியின் திருநாமம் அபிராமி என்பதாகும். அருள் வேண்டி வழிபடும் அன்பர் அனைவர்க்கும் நல்லன எல்லாம் நல்கி, தனம் தந்து அத்தனத்தால் நல்ல கல்வி தந்து எந்நாளும் தளர்வறியா மனம் தந்து அருள் பாலித்து வருகிறார் இவ்வாலயத்து அன்னை அபிராமி. ஆலயத்துத் தீர்த்தம் ''ப்ரம்ம தீர்த்தம்'' என்று அழைக்கப்படுகிறது.

ஆலயம், தீர்த்தம் என்றால் புராணச் செய்திகள் இல்லாமலா? திருக்குடந்தைப் புராணம், இவ்வாலயத் தடாகத்தில் அகத்திய முனிவர் நீராடி அழகு கொஞ்சும் அற்புத ஈஸ்வரனும் சுந்தரேசரை வழிபட்டு அவர் அருளினால் செயற்கரிய செயலில் யாவும் புரியும் ஆற்றல் பெற்றதாகப் பேசுகிறது. யாக்ஞ வல்க்ய முனிவர் இவ்வாலயத்து ஈசனைப் பூசித்து இறைவனோடு இரண்டறக் கலந்து முக்தி பெற்றதாகவும், சுரதன் என்ற அரசனும் குபேரன் போன்றோரும் இவ்வாலயத்தில் வழிபாடியற்றி எண்ணற்ற பேறுகளைப் பெற்றதாகவும் புராணம் விவரிக்கிறது.

வல்லமை யாவும் படைத்த ''வல்லம்மை'' என்ற பெயரோடு அன்பர் அனைவருக்கும் வல்லமை வாரி வழங்குபவளாக அம்பாள் பெட்டியில் வைக்கப்பட்டு ஈசன் சந்நிதியில் விளங்குகிறார். அம்பாளிடம் உத்தரவு பெற்று விமரிசையாக விழாக் கொண்டாடுகிறார்கள்.

அருள் நல்கும் அற்புதத்தலமாக, பழமைச் சிறப்பு மிக்க ஆலயமாக, கவினுறு கலைச் சிறப்புடைய கோவிலாக திருப்பாடலவனம் ஆலயம் விளங்குகிறது.

பஞ்ச குரோசத்தலங்களுக்கு அவசியம் சென்று வழிபட்டு எல்லோரும் நலம் யாவும் பெறுவோமாக.



பழையாறை திருக்கோவில்கள்

சுபாஷிணி சாரி, எம்.ஏ.,
தஞ்சாவூர்.

வரலாற்று ஏடுகளின் பக்கங்களில் தன் சுவடுகளை பெருமையோடு பதித்துச்சென்ற சோழ மன்னர்களின் இரண்டாம் தலைநகராகவும், விஜயாலயன் முதல் மூன்றாம் ராஜராஜன் முடிய சோழப் பெருமன்னர்களின் வாழ்விடமாகவும் விளங்கிய பெருமைமிகு நகரம் பழையாறை யாகும். இப்பெருநகரத்தின் பெருமைகளை யெல்லாம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 20 நூற்றாண்டு வரையுள்ள பல இலக்கியங்கள் சிறப்பாகப் பேசுகின்றன. 1500 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பெற்ற இந்நகரம் சோழப்பேரரசர்களின் ஆட்சிக்காலமான 430 ஆண்டுகாலம் தமிழகத்தின் வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுத்தனியிடம் பெற்றது.

ஆறை, பழைசை, மழபாடி, பழையாறு என்ற பெயர்களையெல்லாம் பெற்றிருந்த இப்பெருநகரம் மாமன்னன் முதல் ராஜராஜன் காலம் வரை "பழையாறை" என்றும் அவனது வெற்றித்திருமகனான முதல் ராஜேந்திரன் காலம் முதல் "முடிகொண்டான்" என்ற அவனது சிறப்புப்பெயரால் "முடிகொண்ட சோழபுரம்" என்றும் வழங்கப்பட்டது. இரண்டாம் ராஜராஜன் காலத்தில் பழையாறையின் ஒரு பகுதி அவனது பெயரால் "ராசராசபுரம்" எனப்பட்டது. இதை "பழையாறையாகிய ராசராசபுரம்", கீழ்ப் பழையாறையாகிய ராசராசபுரம் என்னும் கல்வெட்டு வரிகள் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

சோழப்பேரரசின் நிகரற்ற மன்னனாய் விளங்கிய மாமன்னன் முதல் ராசராசனை வீரமும், விவேகமும் உள்ளவனாய் வளர்த்து ஈடு இணையற்ற வெற்றிகளையும், பெரும்புகழையும் பெற வைத்ததில் செம்பியன் மாதேவியார், ஆழ்வார் பிராந்தகன் குந்தவையார் இருவருக்கும் பெரும் பங்குண்டு. இந்த பேரரசிகள் விரும்பி வாழ்ந்ததும், பல அரசாணைகளைப் பிறப்பித்ததும் இந்த பழையாறை அரண்மனையிலிருந்துதான் என்றால் இப்பெருநகரின் பெருமையை யாரால்தான் விரித்துரைக்க முடியும்!?

இவ்வளவு பெருமைகளையும் தன்னுள் அடக்கிய இப்பெருநகரம் இன்று பழையார், பட்டீச்சரம், திருச்சத்திமுற்றம், அரிச்சந்திரம், பாற்குளம், முழையூர், சோழன் மாளிகை, தாராசுரம், திருமத்தடி, கோணப்பெருமாள் கோவில், ஆரியப்படையூர், பம்பைப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர் எனப்பல சிறு கிராமங்களாகப் பிரிந்து கும்பகோணம் எனும் பெரு நகரைச் சுற்றி அமைந்து அதன் பெருமைக்குப் பெருமை சேர்க்கின்றன.

"வீர சோழியம்" என்ற தமிழ் இலக்கணநூல் சுந்தரச் சோழன் காலத்தில் எழுதப்பட்டது. இந்நூல் சுந்தரச்சோழனின் புகழை விரித்துரைக்கும்போது, அப்பெருமன்னன் பழையாறை திருக்கோவிலில் இருந்த இந்திரன், சூரிய தேவன் ஆகியவர்களின் திருமேனிகளுக்கு யானை, 7 குதிரைகள் போன்றவைகளையும், செந்தழல் வண்ண மேனியராம் சிவனார்க்கு திருவுலாக்காணும் வண்ணம் பல்லக்கையும் அளித்தார் என்கிறது. அந்த சுவையான பாடல் இதோ..

"இந்திரன் ஏறக்கரியளித்தார், பரி ஏழளித்தார்,
செந்திரு மேனித் தினகரர்க்குச் சிவனார்
மணத்துப்
பைந்துகில் ஏறப் பல்லக்களித்தார் பழையாறை
நகர்ச்
சுந்தரச் சோழரை யாவரொப்பாரித்
தொன்னிலத்தே".

இவ்வாறு இரண்டாம் பராந்தகனாம் சுந்தரச் சோழரை "பழையாறை நகர்ச் சுந்தரச் சோழர்" என்று சொல்வதன் மூலம் சுந்தரச்சோழர் மனம் உவந்து வாழ்ந்த நகர் பழையாறை என்பதை அறிகிறோம்.

நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணுமனமே - என ஆழ்வார் பன்னிருவரில்

ஒருவரான திருமங்கை மன்னனால் விளிக்கப்படுவதும் இந்நகரமே.

பழையாறை நகரை மூன்றாம் நந்திவர்ம பல்லவன் வெற்றி கொண்டதை "படையாறு சாயப் பழையாறை வென்றான்" என்று நந்திக்கலம்பகம் என்ற நூல் பெருமிதத்தோடும் எடுத்தியம்புகிறது.

தன் மனைவி, மகன் ஆகியோருடன் தராசுத்தட்டில் ஏறி தன்னையே சிவபெருமானுக்கு அர்ப்பணித்த அமர் நீதி நாயனார் பிறந்ததும், வாழ்ந்ததும், வணிகம் செய்து பின்னர் சிவபதம் பெற்றதும் இந்தப் பழையாறை மண்ணில் தான்.

மாமன்னன் ராஜராஜன் தான் கட்டிய தஞ்சைப் பெருங்கோவிலுக்கு எண்ணற்ற திருமேனிகள், பூசை மற்றும் நித்ய வழிபாட்டுக்கும் தேவையான பொருட்கள், பாத்திரங்கள், ஆபரணங்கள் போன்றவற்றைக் கொடையாக அளித்தார். மேலும் அக்கோயிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய ஓதுவார்களையும் இசைக்கருவிகளை இயக்கும் இசை வல்லோரையும் நியமித்தார். அவ்வரிசையில் தன் 29ம் ஆட்சி ஆண்டில் கோவிலில் ஆடற்பணிபுரிய 400 பேரை வரவழைத்து தஞ்சையில் குடியேற்றினார். அந்த ஆடல் மகளிர் 400 பேரில் 30 நடனப் பெண்களை வழங்கிய பெருமையையும், வளமையையும் பழையாறை கோவில்கள் கொண்டிருந்தன என்பது வரலாறு நமக்குக் காட்டும் உண்மையாகும்.

வரலாற்றுப் பெரும் புகழ் கொண்ட பழையாறை மாநகர் ஆன்மீகச் சிறப்பாலும் முன்னிலை வகித்தது. அப்பெருமைசால் நகரில் பத்தொண்பது திருக்கோயில்கள் இருந்தன. அவற்றில் காலவெள்ளத்தால் சில அழிந்தன.

கோவில் நகராம் குடந்தை நகருக்கு இணையாக கோவில்களைக் கொண்டிருந்த பழையாறைபதியின் கோவில்கள் பற்றி வரும் பகுதியில் காண்போம்.

திருமேற்றளி : பழையாறை மாநகரின் நான்கு திசைகளிலும் கீழ்த்தளி, மேல்தளி, வடதளி, தென்தளி எனும் கோவில்கள் இருந்தன. இவ்வரிசையில் மேற்றிசையில் அமைந்த திருக்கோவில் திருமேற்றளி கைலாசநாதர் கோவிலாகும். கல்வியிற் சிறந்த காஞ்சி மாநகரில் ஒரு மேற்றளி இருந்தது. அக்கோவில் இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடி வழிபட்டவர்.

"பாடும் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர் வாய்ச்
சீரும்புறவில் திருமேற்றளி சிவனை ......"

என்று காஞ்சிபுரத்து மேற்றளி இறைவனைப் பாடிப்பரவிய நம்பியாரூரரே நமது திருப்புறம்பியப் பதிகத்தில் "அங்கம் ஓதி ஓர் ஆறை மேற்றளி நின்றும் போந்து வந்து இன்னம்பர்த் தங்கினோமையும்" என்று ஆறை மேற்றளி இறைவனைப் போற்றுகிறார்.

காஞ்சி மாநகரில் நிகழ்ந்த மேற்றளி போலவே சோணாட்டுப் பழையாறையிலும் ஒரு மேற்றளி இருந்தது. இக்கோயில் ஈசனை திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் தெய்வத் தமிழால் பாடி வணங்கினர் என சேக்கிழார் பெருமான் தமது பெரியபுராணத்தில் உரைக்கிறார்.

அந்த மேற்றளி "திருமத்தடி" என பேச்சு வழக்கில் வழங்கப்படுகிறது. பெரும் ஆலயமும் நாளடைவில் சுருங்கி இன்று ஒரு சிற்றாலயமாகி விட்டது.

முன்னாட்களில் கம்பீரமாக உயர்ந்து நின்ற இராஜகோபுரம் இன்று இடிபாடுகளுக்கிடையில் காட்சி நல்குகிறது. திருச்சுற்றையும், பரிவார ஆலயங்களையும் காலவெள்ளம் அழித்து விட்டது. கருவறையில் "தாராலிங்கம்" எனும் பல்லவர்கால லிங்கவடிவம் பாங்குற அமைந்து அருளை அள்ளி வழங்குகிறது. கண்டு மகிழவும், கரம் சேர்த்து வணங்கவும் தான் ஆட்கள் இல்லை. எழில் மிக்க பல்லவர் கால சண்டீசர் திருமேனி ஒன்று அர்த்த மண்டபத்தில் உள்ளது. அந்த மண்டப உட்சுவரில் பதிக்கப்பெற்றுள்ள சுழன்றாடும் நாட்டிய அணங்கு ஒருத்தியின் சிற்பம் கண்டு இன்புறத்தக்கது. மேலும்

கதிரவன் அம்பிகை, கணபதி, சேத்திர பாலர் சிற்பங்கள் போன்ற சோழச் சிற்பகலையின் அற்புத வடிவங்களும் அங்கு உள்ளன.

கருவறை புறச்சுவர் கோஷ்டங்களில் பத்மாசனமிட்ட இரண்டு லகுளீச பாசுபத சிவவடிவங்கள் சுகாசனக் கோலத்தில் உள்ளனர். இவை இரண்டும் காண்பவர் சிந்தையைச் சுண்டி இழுக்கும் எழில் பெற்றவை. கருவறை புறச்சுவரின் வடபுறகோட்டத்தில் நான்முக சண்டேசரின் அரிய சிற்பம் பொருத்தப்பட்டுள்ளது. இக்கோயிலைப் போற்றி பாதுகாக்க வேண்டியது நம் கடமையாகும்.

கீழப்பழையார் சோமநாதர் ஆலயம் :

அப்பர் அடிகளும், திருஞானசம்பந்த பெருமானும் "பழையாறை" என்றும், ஆறை என்றும், தமது தெய்வத்தமிழால் போற்றி துதித்த தலம் இந்தகோவில் ஆகும். பழையாறை நகரின் கீழ்த்தளி இதுவே ஆகும்.

> "பார்மகிழ வாழும் பழையாறை ஊர் மேவும்
> சோமகலாநாயகிசேர் சோமேசா"

எனத் தமது சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பாவில் பழையாறை இறைவனின் பெருமையை உமாபதி சிவாச்சாரியர் கூறுகிறார்.

நுழைந்ததும் நம்மை வரவேற்பது மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய ராஜகோபுரம். இதன் பிரஸ்தளம் வரை செங்கல்லால் ஆனது. மேலநிலைகள் இடிபாடுற்றுள்ளன. இக்கோபுரத்தின் நிலைக்காலில் கொடிப்பெண்கள், குதிரைமேல் வீரர்கள், பலவிதமான கொடி வேலைப்பாடுகள் என எழிலுற அமைக்கப்பட்டுள்ளன.

வெளித்திருச்சுற்றில் விளங்கும் மண்டபத்து கற்சிற்பங்கள், குறிப்பாக நரசிம்மரின் இரண்யவதை கதை சிற்பங்கள் நம் சிந்தையை கவரும் விந்தைமிக்கவை. கருவறை அர்த்த மண்டபம், முக மண்டபத்துடன், இக்கற்றளி உள் திருச்சுற்றில் பாங்குற அமைந்துள்ளது. பிற்கால சோழர்கலை அமைதியுடன் திகழும் இக்கற்றளியின் உள்மண்டபத்தில் நாயக்கர் கால ஓவியங்களும் பாங்குற அமைந்துள்ளன. இராவணன் கயிலை மலையைப் பெயர்க்கும் காட்சியும், மலைமீது செஞ்சடை அண்ணலும் மலைமகளும் அமர்ந்துள்ள காட்சியும் இராவணன் மலையை பெயர்க்கும் காலை மலை மகள் அஞ்சி நடுங்கி இறைவரைத் தழுவும் காட்சியும் தத்ரூபமாக அமைந்து நம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கொள்ளை கொள்கின்றது.

இதே போன்று வனப்பு நிறைந்த கொற்றவை மற்றும் கஜசம்காரமூர்த்தி சிற்பங்கள் உள் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன. கருவறை கோஷ்டங்களில் ஆலமர் செல்வர், அம்மையப்பர், நான்முகன் திருவுருங்கள் அமைந்துள்ளன. இத்தளியின் அமைப்பே அழகிய வேலைபாடுமிக்க சக்கரங்கள், தேரை இழுக்கும் யானைகள், குதிரைகள் பல்வேறு ஆடல் தோற்றம் காட்டும் மகளிர் சிற்பங்கள் என தேர் போன்ற அமைப்புடன் விளங்குகின்றது. இக்கோவிலும், தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோவிலும் அமைந்துள்ள அமைப்புமுறையை, ஒற்றுமையை கூர்ந்து நோக்கும்போது இத்தளி இரண்டாம் இராஜராஜன் காலத்தில் அமைக்கப்பட்டு இருக்கலாம் என்பது உறுதியாகின்றது. சேக்கிழார் சிற்பம் அமைந்துள்ள மிகச்சில கோவில்களில் இக்கோவிலும் ஒன்று.

வடதளி :

பழையாறை சோழர்களின் தலைநகராய் விளங்கி அவர்களால் போற்றி சிறப்பிக்கப்பட்ட ஒரு திருநகரம். இந்நகரின் ஒரு பகுதியே 'முழையூர்' என்னும் சிற்றூர் ஆகும். இங்கு ஒன்றை அடுத்து மற்றொன்றாக இரண்டு சிவாலயங்கள் உள்ளன. இதில் வடபுறம் உள்ள கோவிலே ஆறை வடதளியாகும். இக்கோவில் தற்போது "வள்ளலார் கோவில்" என்றும் "தர்மபுரீசர்" கோவில் என்றும் வழங்கப்படுகிறது.

வாகீசப் பெருந்தகையும், ஞானசம்பந்தரும், சேக்கிழாரும் இத்திருக்கோவிலை ஆறை வடதளி என்றே அழைக்கின்றனர். அமணர்கள் இத்திருக் கோவிலை ஆக்ரமித்து மறைக்க அப்பர் பெருமான் அது கண்டு மனம் வருந்தி உண்ணாநோன்பு இருந்து "பழையாறைச் சோழ மன்னன்" உதவியுடன் இறைவனின் கோவிலை வழிபாட்டுக்குரியத் தாக்கினார். அவற்றுக்கு கொடைகளையும் அளித்தார். வாகீசப் பெருமான் அகம் மகிழ்ந்து இறைவனை வழிபட்டார். இச்செய்தியை நினைவுகூறும் விதமாக அப்பர் பிறந்த ஊரான திருவதிகை வீரட்டானேஷ்வரர் திருகோவிலில் திருவிழா நடைபெறுகிறது என்பது சிறப்புச் செய்தியாகும்.

வடதளி மாடக்கோவிலாகும். இக்கோவில் நுழைவுகோபுரம் இடிபாடுற்றுள்ளது. அடித்தளம் மட்டுமே எஞ்சியுள்ளது. இத்தளத்தின் எஞ்சியிருக்கும் வேலைப்பாடுகளிலிருந்து இஃது ஒருகாலத்தில் எழில் மிக்க ஐந்து நிலைக்கோபுரமாக இருந்து இருக்கலாம் என்பதை அறிய முடிகிறது. இக்கோபுரத்தைச் சுற்றி இருந்திருக்கவேண்டிய மதில் சுவர் முற்றிலும் அழிந்து சுவடுஇல்லாமல் போய்விட்டது. மாடக்கோவிலின் சுற்றுப்புறத்தில் பல்லவர்கால தாராலிங்கங்கள் எட்டும், வட்ட அமைப்பை உடைய சில சிவலிங்கங்களும், தலையற்ற இரண்டு நந்திகளும் புதையுண்டு கிடக்கின்றன. மேற்கு நோக்கி உள்ள படிகளில் ஏறும்போது இடப்புறச்சுவரில் அமர்நீதி நாயனார், அவர் தம் துணைவியார், அவர்களின் குழந்தைகள் சிற்ப வடிவில் உள்ளனர். இந்த அமர்நீதி நாயனார் பழையாறைப்பதியில் பிறந்து நல்லூரில் சிவப்பேறு பெற்றவர். வீணையேந்திய ரிஷபாந்தகர்சிற்பம் இதை அடுத்து உள்ளது. கருவறையில் மிகப்பழைமையான பெரிய தாராலிங்கம் அமைந்துள்ளது.

கண்படைத்தவர்அனைவரும்காணவேண்டிய இறைவனின் லிங்க வடிவம், "தர்மபுரீசர்" எனப்படுகிறது. மகாமண்டபத்துடன் இணைந்து விளங்கும் திருமுன்னில் அம்மன் விமலநாயகி என்ற திருப்பெயருடன் விளங்குகிறார். கோஷ்டங்களில் துர்க்கை, பிள்ளையார், நான்முகன், வீராசனத்தில் ஆலமர் செல்வர், லிங்கோத்பவர் திருவுருவங்கள் எழிலுற அமைந்துள்ளன. உள் மண்டபச்சுவரில் காலத்தால் பழைமையானசிற்பம் பதிக்கப்பட்டுள்ளது. சோழர்கால இசைக்கருவிகள் (மத்தளம், குடமுழா, உடுக்கை) மூன்றை வாசிக்கும் மூன்று ஆடவர்கள் இச்சிற்பத் தொகுதியில் உள்ளனர். மாமன்னர் இராஜராஜன் இந்த ஆறை வடதளியில் இருந்து பதின்மூன்று ஆடற்பெண்களைவரவழைத்து தஞ்சைப் பெரிய கோவிலில் ஆடற்பணிபுரிய நியமித்தான்.

முழையூர் பரசுநாதர் கோவில் :

ஆறை வடதளிக்கு இணையாக தெற்குப் பக்கம் மேற்கு நோக்கிய நிலையில்இந்த ஆலயம் உள்ளது. ஓரளவு நல்லநிலையிலும் பராமரிப்பிலும் இருந்தாலும், இக்கோவிலில் சோழர் காலக் கலையம்சங்கள் இருந்தாலும், பிற்காலத் திருப்பணிகள் பெற்றதால் பிற்காலக் கட்டுமானப் பணியே காணப்படுகிறது. இத்தலத்து இறைவர் பரசுநாதர் என்றும், இறைவி ஞானம்பிகை என்றும் அழைக்கப்படுகிறார்கள். மகாமண்டபத்தின் வலப்புறம் "உச்சிஷ்ட மஹாகணபதி" சிற்பம் காணவேண்டிய ஒன்று. இங்குள்ள பல்லவர்கால சண்டீசர், ராஜராஜன் காலத்ததான உடைபாடுற்ற ஆலமர் செல்வர் சிற்பம் ஆகியவை எழில் மிக்கவை. தஞ்சைப் பெரிய கோவிலின் தளிச் சேரிப் பெண்டிர் கல்வெட்டைப் பார்த்தால் இக்கோவிலைச்சேர்ந்த நக்கன் பெற்ற திரு, நக்கன் ஆச்சம், சிறிய நக்கன் ஆச்சம், நக்கன் பட்டி என்ற நான்கு ஆடல் மகளிர் தஞ்சைப் பெரியகோவிலில் ஆடல் பணிபுரிய நியமிக்கப்பட்டனர் என்பது தெரிகிறது. விஷ்ணு ஆலயங்களில் மட்டுமே சிறப்பாக கொண்டாடப்படும் அக்ஷயதி ருதியை விழா இந்தச்சிவன் கோவிலில் மட்டும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மாமன்னன் இராஜராஜன் காலத்துக்கும் முந்தைய இக்கோவில் வடதளிக்குத் தென்புறம் செம்மாந்து நிற்கின்றது.

திருச்சத்தி முற்றம்:

பட்டீஸ்வரம் திருக்கோயில் அருகிலேயே அதற்கு இணையாக வடபுறத்தில் கிழக்கு நோக்கி உள்ள ஆலயம் திருச்சத்தி முற்றமாகும். உமையவள் இறைவனை நோக்கித் தவம் இருந்தாள். முடிவில் இறைவனால் வரவழைக்கப்பட்ட வெள்ளத்தைக் கண்டு அஞ்சி தாம் அமைத்த லிங்கத்திருமேனியைக் காக்க இறைவனை ஆரத்தழுவி முத்தமும் கொடுத்தாள் அன்னை. இறைவியின் தழுவலால் அகம் குழைந்து அருள் செய்த அண்ணலின் இலிங்கத்திருமேனியையும், இறைவியின் திருமேனியையும் இங்கே கண்டு இன்புறலாம்.

நுழைந்ததும் தென்படுவது ஐந்து நிலைக் கோபுரம். சோழர் கால்க்கலை அமைதியில் விளங்கும் இத்திருக்கோயில் ஒரு கற்றளியாகும். சோழப்பேரரசர்களும், விஜய நகர அரசர்களும் வாரி வழங்கிய கொடையால் வளம் பெற்ற திருக்கோயிலின் வரலாற்றை இங்குள்ள கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். முன்மண்டபம், கருவறை, இவற்றோடு விளங்கும் இக்கற்றளி தூய்மையுடன் விளங்கி காண்போர் சிந்தையை குளிரச்செய்கிறது. உள்மண்டபப் புறச்சுவர் கோட்டங்களில் கணபதி, நடராசர், அகத்தியர், கொற்றவை போன்ற தெய்வவுருவங்களும், கருவறை புறச்சுவர்க் கோட்டங்களில் ஆலமர் செல்வர், பிரம்மாவும், லிங்கோத்பவரும் உள்ளனர். கருவறையில் இறைவன் "சிவக்கொழுந்தீசர்" என்ற திருநாமத்துடன் விளங்குகிறார். கல்வெட்டுகள் இவரை "திருச்சத்தி முற்றமுடையார்" திருச்சத்தி முற்றமுடைய நாயனார் திருச்சத்திவனப்பெருமாள்எனப்பெருமிதம் பொங்க அழைக்கின்றன. 'சக்திவனம்' என்பது இவ்வூரின் மற்றொரு பெயராகும் பாலறாவாயரான ஞான சம்பந்தப் பெருமானும், அப்பரடிகளும் தமது தீந்தமிழ்ப்பாக்களால் இவ்வூர் இறைவனை போற்றி வழிபட்ட பழமை வாய்ந்த திருத்தலம் என்பதை சேக்கிழார் பெருமானது பெரிய புராணத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

இப்பழையாறைப் பழம்பதியில் சைவ நாயன்மார்கள் பெயர்களால் மடங்கள் சில இருந்தன. அவ்வகையில் இத்திருச்சத்திமுற்றத்து அம்மன்கோவில் அருகில் கோவிலின் கிழக்குப்பக்கத்தில் இருந்த திருஞானசம்பந்தன் மடம் பற்றி பல கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். கோயில் அருகில் இடிபாடுற்ற நிலையில் அம்மடத்தை இன்றும் காணலாம்.

பட்டீச்சரம்:

சோழநாட்டில் உள்ள எண்ணற்ற சிவன் கோயில்களில் இப்பழையாறை நகரின் ஒரு பகுதியாக விளங்கும் பட்டீச்சரமும் ஒன்று. தேவாரப்பாடல் பெற்ற 274 தலங்களில், காவிரிக்குத் தென்கரையிலுள்ள 127 தலங்களில் 23வது தலமாக இக்கோயில் விளங்குகிறது.

பழையாறை நகரில் நான்கு திசைகளிலும் விளங்கும் தளிகளின் இடையே கம்பீரமாக விளங்கும் பேராலயம் இப்பட்டீச்சரமாகும். புராணத்தின்படி காமதேனுவின் புதல்வியான பட்டி வழிபட்டதலம். ஞான சம்பந்தரடிகள் இவ்வூரை "பழையாறை மழபாடி" எனக் குறிக்கிறார். இக்கோயில் 7ம் நூற்றாண்டுக்கு முன்பே எழுப்பப்பட்டது.

சோழர்களாலும், பிற்காலத்தில் விஜய நகர அரசர்களாலும் பல திருப்பணிகள் செய்யப்பட்டு பல்வேறு கால கட்டடக் கலை அமைதிகளுடன் இக்கோயில் எழிலுடன் விளங்குகிறது. விஜய நகர மன்னர்களின் மகா மண்டலேஸ்வரனாகத்திகழ்ந்த திருமலை தேவ மகாராயன் காலத்தில் பல திருப்பணிகள் இக்கோயிலில் செய்யப்பட்டன.

ஐந்து பெரிய கோபுரங்களும், மூன்று பிரகாரங்களும் உடைய இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறை மகாமண்டபம் விஜய நகர அரசர் வீரப்ரதாபதேவமகாராயரால் கட்டப்பட்டது. முகமண்டபத்தூண்களில் இடம் பிடித்த பைரவர், காளி, அர்த்தநாரி, வில்லேந்திய

வேலவர், யாழ்மீட்டும் நங்கை சிற்பங்கள் நம் கருத்தைக் கவருபவை. மகா மண்டபத்திலேயே இதைக்கட்டுவித்த வீரப்பிரதாபரின் உருவமும், திருமலை ராயனின் உருவமும் உள்ளன. இக்கோவில் தஞ்சை நாயக்கர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டு ஏற்றமும், சிறப்பும் கொண்டன. குறிப்பாக கோவிந்த தீக்ஷிதர் இக்கோவிலில் புரிந்த திருப்பணிகள் மிகப்பல. அவர் மற்றும் அவரது மனைவியின் எழில் மிக்க சிலைகளை அம்மன் சந்நதி முகமண்டபத்தில் காண்கிறோம். இத்தலத்து இறைவன் "பட்டீசர்", இறைவி "பல்வளை நாயகி" இவ்வம்மையின் கருவறை முன்பு உள்ள முகமண்டபம் பல சிற்பநுட்பங்களுடன் எழிலார்ந்த தோற்றத்துடன் விளங்குகின்றது.

விஜயநகரகால ஆக்ஞாகணபதி, மதவாரண விநாயகர், எழில் பொங்கும் வடவாயிற் செல்வியான துர்க்கை, வள்ளி தேவசேனையுடன் கூடிய குமரக்கடவுள், க்ஷேத்திரபாலர்திருமேனிகள் அழகு பொங்கும் அருள்திருமேனிகள். இங்குள்ள நாயக்கர் கால ஓவியங்கள் நம் சிந்தையில் கொள்ளைகொள்ளும் பேரெழிலோடு விளங்குகின்றன.

இங்கு நடக்கும் விழாக்களிலேயே தனிச்சிறப்பு பெற்று விளங்கும் விழா ஞானசம்பந்தருக்கு இறைவன் முத்துப் பந்தரை வழங்கும் விழாவாகும். பல்வளை நாயகி உடனிலங்க அருள்மழை பொழியும் பட்டீசரை தரிசிக்க இத்தலம் செல்லுங்கள்.

பஞ்சவன் மாதேவீச்சரம்:

சோழர்குலத்தின் புகழ்விளக்கமாய் முதல் இராஜராஜனின் மனைவியும், பழுவேட்டரையர் திருமகளுமாகிய பஞ்சவன் மாதேவியார் சிவபதவி அடைந்த பின்னர் அவர்களை பள்ளிப்படுத்தி எழுப்பப்பட்ட கற்றளியே பஞ்சவன் மாதேவீச்சரம் கோவில். இது பட்டீச்சரத்திலிருந்து திருமேற்றளி கோயில் செல்லும் பாதையில் திருமலைராயன் ஆற்றின் வடகரையில் இராமநாதன் கோவில் என்ற புதுப்பெயருடன் அமைந்துள்ளது.

அறப்பணிகள் பல செய்த தம் சிற்றன்னையை பெருமைப்படுத்தும் வகையில் முதல் இராஜேந்திரன் கட்டிய கோவிலாகும். கிழக்கே கோபுர வாயிலும், முன்மண்டபம், அர்த்த மண்டபம், அம்மன் கோவில், கருவறை, திருச்சுற்றில் பரிவார ஆலயமாக சண்டீசர் கோவில் போன்றவற்றுடன் இக்கோவில் விளங்குகிறது. கருவறை மற்றும் மண்டபத்தின் கோட்டங்களில் உள்ள இறைதிருவுருவங்கள் இராஜேந்திரன் கால சிற்ப அற்புதங்கள். கருவறைமுன்னுள்ள நந்தியும், துவார பாலகர்களும், சிம்மத்தூண் ஒன்றும், பழுவேட்டரையர் காலக் கலை அமைதியுடன் அமைந்து நம் சிந்தையை குளிர்விக்கின்றன. இக்கோவிலின் கருவறை அதிட்டானத்தில் உள்ள முதல் இராஜேந்திரனின் ஏழாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டுகள், "க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு, திருநறையூர் நாட்டு பழையாறை ஆகிய முடிகொண்ட சோழபுரத்து பள்ளிப்படை பஞ்சவன் மாதே வீச்சரம்", என்று இக்கோவிலை சொல்கின்றன. மேலும் இராஜேந்திரன் இக்கோவிலுக்கு வழங்கிய அறக்கொடைகளையும், இக்கோவிலை நிர்வாகம் செய்த லகுலீசபாசுபத மடத்தலைவர் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கின்றன. ஒரு அரசியின் நினைவாக அவளது ஆன்மீகப் பணிகளை போற்றும் வண்ணம் எடுக்கப்பட்ட இந்த ஆலயம் இன்றளவும் நல்ல நிலையில் இருப்பது தனிச்சிறப்பாகும்.

நந்தி புரவிண்ணகரம்:

இந்தத்தலம் தற்போது நாதன் கோவில் எனப்படுகிறது. வைணவம் வளர்த்த பெரியோரில் ஒருவரான திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலம். பல்லவர்காலத்தில் இத்தலம் "பழையாற்று நந்திபுரம்" என வழங்கப்பெற்றது. இரண்டாம் நந்திவர்மப்பல்லவனால் திருப்பணி செய்யப்பட்ட இக்கோவில் பிற்கால திருப்பணிகளால் பல்லவர்கால கட்டடக்கலை அமைதியை

இழந்துள்ளது. பல்லவர்காலக் கலை அமைதியுடன் கூடிய நெடுமாலின் திருமேனி அழகு பொங்கும் திருவுருவாகும். "பழையாற்று நந்திபுரத்தையும்", "நந்திபுரத்து ஆயிரத்தளியையும்" ஒன்றென சிலர் கூறுவர். "நந்திபுரத்து ஆயிரத்தளி" தஞ்சை கண்டியூர் அருகே வீரசிங்கம்பேட்டையில் இருந்து அழிவுற்றது என முனைவர் திரு.குடவாயில் பாலசுப்பிரமணியன் தமது அண்மைக்கால ஆய்வுகளில் கண்டறிந்து வரலாற்று உலகுக்கு மெய்ப்பித்துள்ளார். இத்தலத்து பெருமைகளை திருமங்கையாழ்வார் பாசுரங்கள் மூலமும், "நந்திபுரமகாத்மியம்" எனும் நூல் மூலமும் தெரிந்து இன்புறலாம்.

கோபிநாதப்பெருமாள் கோவில் :

தற்போது "கோணப்பெருமாள் கோயில்" என்று அழைக்கப்படும் இந்த ஆலயமே பண்டைய கோபிநாதப்பெருமாள் கோயிலாகும். கி.பி. 1450ம் ஆண்டு மல்லிகார்ஜுன தேவராயர் சாசனம் இவ்வூரை "திருச்சத்திமுற்றமான முடிகொண்ட சோழபுரத்தில்" இருந்ததாக சொல்கிறது. பழையாறை மாநகரின் வடமேற்கே செம்மாந்து இருந்த இக்கோயிலின் பெரும்பகுதி காலத்தின் கோலத்தால் மறைந்துவிட்டாலும் இன்றும் பண்டைய எச்சங்களைக் காணலாம். திருமலை தேவ மகாராயனால் 15 ஆம் நூற்றாண்டில் இச்சோழர்காலத்து கற்றளி புதுப்பிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள திருமேனிகள் அனைத்தும் பிற்காலத்தவை.

ராஜராஜேச்சரம் :

இரண்டாம் இராஜராஜனால் எழுப்பப்பெற்ற இராஜராஜபுரம் பண்டு பழையாறை நகரின்ஒரு பகுதியாக விளங்கியது. அந்நகரில் "இராஜராஜ புரி" என்னும் "இராஜராஜேச்சரம்" என்னும் கலைக்கோவிலை இரண்டாம் இராஜராஜசோழன் கட்டினான். தற்போது "ஐராவதீஸ்வரர்" எனும் பெயரால் இறைவன் அழைக்கப்பெறுகிறார். சிற்பக்கலையின் அற்புதப்புதையலாய் ஈசன் திருக்கோவிலும், அம்மையின் திருக்கோவிலும், அருகருகே அழகுக்கோலத்துடன் அருள்காட்டி நிற்கின்றன.

இராஜகம்பீரன் எனும் திருமண்டபம் காண்போரை மெய்மறக்கச் செய்யும் சிற்ப அற்புதம். ஆலயத்தின் ஒவ்வொரு சிறுகல்லும் கூட கலைநுணுக்கத்தோடு வடிக்கப்பட்டு காண்போருக்கு பல கதைகளைச் சொல்கின்றன. சைவம் தழைக்கச்செய்த செம்மல்களான 63 சிவனடியார்களின் வாழ்க்கைக் கதை தொடர்சிற்பங்களாக்கப்பட்டு நம்சிந்தையை நிறைக்கின்றன. தெய்வத்தமிழ் புலவராம் சேக்கிழார் பெருமான் தம் பெரியபுராணம் எனும் தெள்ளுதமிழ் நூல் இங்கு கல்லிலே வடிக்கப்பெற்று கோவிலுருக்கொண்டுள்ளது.

திருப்பதிகம் பாடி இறைவனைப்போற்றி 108 பிடாரர்களின் திருவடிவங்கள் பெயர்குறிப்புகளோடு இங்குள்ள திருச்சுற்றில் அமைந்துள்ளன. தேவி பாகவத (புராண) காட்சிகள் தொடர் சிறபங்களாக்கப்பட்டுள்ளன. அரியதிருமேனிகளான அர்த்த நாரி சூரியன் அமுத கலசத்துடன் அம்மை, சரபமூர்த்தி, ஆலமர்செல்வர், சண்டீசர் போன்றவையும் இவ்வாலயத்தில் இடம்பெற்றுள்ள பெரும் புலவராம் ஒட்டக்கூத்தர் இயற்றிய "தக்கயாகப்பரணி" எனும் நூலின் பாட்டுடைத்தலைவராக இருப்பவர் இக்கோவில் இறைவரே. அப்பெருநூல் அரங்கேறிய இடமும் இதுவே. ஒட்டக்கூத்தரது பள்ளிப்படைக் கோவிலும் இவ்வூரிலேயே அமைந்துள்ளது. மற்றொரு சிறப்பம்சமாகும். அழகுக்கலையாம் ஆடற்கலையின் நுணுக்கங்கள் எல்லாம் அழகு பொங்க கல்லில் வடிக்கப்பட்டு நம் நெஞ்சை அள்ளுகிறது.

நந்திகேஸ்வரம் :

பழையாறையில் இருந்திருக்கக்கூடும் என

சில வரலாற்று அறிஞர்களால் கருதப்படும் நந்திகேஸ்வரம் ஒரு வைப்புத்தலமாகும் திருநாவுக்கரசு பெருமான் தம் திருவடைவுத் திருத்தாண்டகத்தில் இந்நந்திகேஸ்வரத்தை வைப்புத்தலமாக குறித்துள்ளார். இது நாதன் கோவிலில் உள்ள விஷ்னு கோவிலுக்கு சற்று வடக்காக இருந்து அழிந்த ஆலயம் என முனைவர் திரு குடவாயில் பாலசுப்பிரமணியம் தன் தல ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளார். ஆலயம் திகழ்ந்த இடத்தில் மிகப்பெரிய சிவலிங்கத்திருமேனி ஒன்றும், நந்தி ஒன்றும், புதையுண்டு கிடக்கின்றன.

முடிகொண்ட சோழபுரமாம் பழையாறை நகர் கோவில்கள் நகராகும். இவ்வூரிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் தற்போது ஓரளவு நல்ல நிலையில் உள்ள கோவில்கள் தவிர முற்றிலும் அழிந்த கோவில்கள் பற்றியும் தஞ்சைப் பெரியகோவில் தளிச்சேரிபெண்டிர் பற்றிய கல்வெட்டு மூலம் நாம் அறிந்துகொள்கிறோம். 30 நடனப் பெண்களை தஞ்சை ராஜ ராஜீச்சரத்துக்குத் தந்து பெருமை பெற்றது பழையாறைபதி. இதில் 13 ஆடல் மகளிர் ஆடற்பணிபுரிந்த திருக்கோவில்கள் முற்றிலும் சுவடழிந்தன.

தஞ்சைப் பெரியகோவில் கல்வெட்டுக்கூறும் "அரையெருமான்தளி" எனும் கோவில் திருமலைத்தேவ மகாராயன் கல்வெட்டுக்கூறும் "அரையபெருமாள் தளியா"? இது ஆய்வுக்குரிய விஷயம். மேலும் தஞ்சைக் கல்வெட்டுக்கூறும் சங்கீஸ்வரம், முள்ளூர்நக்கன் தளி, அருண்மொழி தேவீச்சரம், பாற்குளம், அரிச்சந்திரம் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும்.

பழையாறையின் ஒரு பகுதியாக "அவனிநாரணபுரம்" எனும் பகுதி விளங்கியது. இதை விக்கிரம சோழனின் 5 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகிறது. "சோழன் மாளிகை" எனும் சிறுகிராமத்தில்தான் பழைய சோழ அரண்மனை உயர்ந்து நின்றது. இன்று அது அழிந்துவிட்டது இந்த முடிகொண்ட சோழபுரமாம் பழையாறை அரண்மனையில் சோழரை வெற்றிக்கொண்டு கி.பி.1231 ஆம் ஆண்டு மாறவர்மன் சுந்தரபாண்டியன் வீராபிஷேகமும், விஜயாபிஷேகமும் செய்து கொண்டான். மேலும் பழையாறை மாநகரின் நான்கு திசைகளிலும் செம்பொன்னாலான வெற்றித் தூண்களை நாட்டினான். இச்செய்திகளையெல்லாம் பாண்டியர் கல்வெட்டுகள் வெற்றிப்பெருமிதத்தோடு விரித்து உரைக்கின்றன.

பழையாறை நகரத்தின் ஒரு பகுதியான உடையாளூரில் மாமன்னன் இராஜராஜனின் நினைவைப் போற்றும் வகையில் எடுக்கப்பட்ட திருமாளிகை அழிந்து மறைந்தது. எனினும் எஞ்சிநிற்கும் அவனது உருவச்சிலை, அந்த மாளிகை பற்றிகூறும் கல்வெட்டுத்தூண், ஆகியவை அவன்புகழை காலம் காலமாய் கூறிநிற்கின்றன.

சோழப்பேரரசு மறைந்தது, சோழமன்னர்கள் மறைந்தனர், அவர்தம் அரண்மனை கூட தகர்ந்தது. ஆயினும் அவர்களால் திருப்பணிகள் பலபெற்ற திருக்கோயில்கள் நல்லநிலையில் உள்ளன. தமிழகத்தை ஆண்ட பெருமன்னர்களின் செல்லப்பிள்ளையாய் போற்றப்பட்டு, பாண்டியர் படையெடுப்பால் பொலிவிழந்த இப்பெரு நகரில் பார்வைபடும் இடமெல்லாம் ஆலயங்கள்தான்.

அக்கோவில்களை, அதன் பெருமைகளைப் போற்றுவோம், அவற்றைச் சீரிய முறையில் பாதுகாப்போம்.

வானத்து மீன்கள் உள்ளளவும் வாழட்டும் பழையாறைக் கோவில்கள்.

சப்தஸ்தானத் தலங்கள்

முனைவர் பா. ஜம்புலிங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் .

தஞ்சாவூர் மாவட்டத்துக் கோயில்கள்

தமிழ்நாட்டில், குறிப்பாக தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய சோழ நாட்டில் எங்கு பார்க்கினும் கோயில்களை அதிகமாகக் காணமுடிகிறது. அவற்றில் சைவ, வைணவக் கோயில்கள் முறையே நாயன் மார்களாலும், ஆழ்வார்களாலும் போற்றப்பட்டு வந்துள்ளனவாகும். ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற முதுமொழி அனைவரும் அறிந்த ஒன்றாகும். தமிழ்நாட்டில் காஞ்சீபுரத்திற்கு இணையாக கோயில்கள் உள்ள மாவட்டம் என்ற பெருமை தஞ்சாவூர் மாவட்டத்திற் குரியதாகும். தமிழ்நாட்டில் காணப்படுகின்ற கோயில்களில் மொத்த எண்ணிக்கையில் சரிபாதி தஞ்சாவூர் மாவட்டத்திலும், மற்ற பாதி ஏனைய மாவட்டங்களிலும் உள்ளதாகக் கூறுவர்.

தொடர்புடைய தலங்கள்

தலங்களை கீழ்கண்டவாறு வகைப்படுத்தி விழா எடுப்பதும், இறைவன் புகழ்பாடுவதும் தொன்று தொட்டு இருந்துவரும் ஒரு நிகழ்வாகும். சமுதாய ஒன்றுமை மேலோங்கவும், பாகுபாடின்றி அனைவரும் கலந்துகொண்டு இறைவன் அருளைப் பெறவும் ஆங்காங்கு பல கோயில்களைத் தொடர்பு படுத்தி விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. முத்தித்தலங்களாக திருவாரூர் (பிறக்க முத்தி), வாரணாசி (இறக்க முத்தி), திருவண்ணாமலை (நினைக்க முத்தி), தில்லை (தரிசிக்க முத்தி) ஆகிய தலங்களைக்கூறுவர். இவ்வாறு காணப்படும் பல்வகைப் பகுப்புகளில் கீழ்கண்ட தலங்களும் அடங்கும்.

அட்ட வீரட்டத் தலங்கள்
பஞ்ச பூதத்தலங்கள்
சப்த விடங்கத் தலங்கள்
சப்த ஸ்தானத் தலங்கள்
சப்த மங்கைத் தலங்கள்
பஞ்ச குரோசத் தலங்கள்

அட்ட வீரட்டத்தலங்கள் என்ற நிலையில் இறைவன் எண்வகை வீரச்செயல்களைப் புரிந்த இடங்களாக திருக்குறுக்கை (காமனை எரித்தமை), திருக்கண்டியூர் (பிரமனின் தலையைக் கொய்தமை), திருக்கடவூர் (காலனைக் காய்ந்தமை), திருக்கோவிலூர் (அந்தகனை அழித்தமை), திருப்பறியலூர் (தக்கனைத் தடிந்தமை), திருவிற்குடி (சலந்தரனைத் தடிந்தமை), திருவதிகை (திருபுரத்தை எரித்தமை), திருவழுவூர் (யானையின் தோலை உரித்தமை) ஆகிய தலங்களைக் கூறுவர். பஞ்சபூதத்தலங்கள் என்ற நிலையில் திருவாரூர்/கச்சியேகம்பம் (நிலம்), திருவானைக்கா (நீர்), திருவண்ணாமலை (தீ), தில்லை (ஆகாயம்), திருக்காளத்தி (காற்று) ஆகிய தலங்களும்; சப்தவிடங்கத்தலங்கள் என்ற நிலையில் திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக் காரோணம் (நாகப்பட்டினம்), திருக்காராயில், திருக்கோளிலி (திருக்குவளை), திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய தலங்களும்; சப்தஸ்தானத் தலங்கள் என்ற நிலையில் திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய தலங்களும்; சப்தமங்கைத் தலங்கள் என்ற நிலையில் சக்கரமங்கை, அரிமங்கை, சூலமங்கை, நந்திமங்கை, பசுபதிமங்கை, தாழமங்கை, புள்ளமங்கை ஆகிய தலங்களும்; பஞ்ச குரோசத்தலங்கள்; என்ற நிலையில் குடந்தையைச் சுற்றியுள்ள தாராசுரம், சுவாமிமலை, கருப்பூர், திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம் ஆகிய தலங்களும் அமையும்.

சப்தஸ்தான விழாத்தோற்றம்

சப்தஸ்தான விழாவோடு தொடர்புடைய சப்தஸ்தானத்தலங்களைப் பற்றி இக்கட்டுரையின்

கண் விவாதிக்கப்படுகிறது. தலங்களைத் தரிசிப்பதற்கு முன்பாக அவ்விழா பற்றிச் சிந்திப்பது சற்று பொருத்தமாக அமையும். நந்திகேஸ்வரப் பெருமானின் திருமணத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்விழா அமைவதாகப் புராணச் செய்திகள் கூறுகின்றன.

சிலாத முனிவர் யாகசாலை நிலத்தை உழுதபோது அவருக்குப் பெட்டியில் கிடைத்த குழந்தை செப்பேசன். அக்குழந்தை கிடைத்த நாள் பங்குனித் திருவாதிரை என்றும், கிடைத்த இடம் திருவையாற்றிற்கு அருகேயுள்ள அந்தணக்குறிச்சி என்றும் கூறுவர். செப்பேசன், தமக்கு ஆயுள் 16 ஆண்டுகளே என்பதறிந்து கழுத்தளவு திருக்குளநீரில் நின்று கடும் தவம்புரிந்தான். ஐயாறப்பரின் பேரருட்காட்சியால் கங்கா நீர், சந்திர நீர், அம்மையின் திருமுலைப்பால், நந்திவாய் நுரை நீர், கமண்டல நீர் ஆகிய ஐந்து வித தீர்த்தங்களால் அபிடேகம் செய்யப்பெற்றார். அதன் பின் ஐயாறப்பர் செப்பேசருக்கு ஞானோபதேசமும், நந்தீசர் என்னும் தீட்சாநாமமும், சிவ கணத்தலைமையும், முதல் குருநாதர் தகுதியும் அருளினார். அத்துடன் நில்லாது ஐயாறப்பர் தாமே முன்னின்று திருமழபாடியில் வியாக்கரபாதரின் திருமகளாம் சுயசாம்பிகையை பங்குனி புனர்பூசத்தன்று திருமணம் செய்து வைத்தார்.

நந்தியோடு தொடர்புடைய தலங்கள்

அனைத்துச் சிவாலயங்களிலும் நந்தியின் சன்னதி கர்ப்பக்கிரகத்தின் முன்னர் சிவலிங்கத்தை நோக்கி அமையப் பெற்றிருக்கும். அவற்றுள் சில தலத்து நந்திகளின் சிறப்பைப் பார்க்கும் போது நந்தி அவதாரத்தலமாக திருவையாறு, கொம்பொடிந்த தலமாக திருவெண்பாக்கம், நந்தி சங்கமத்தலமாக திருக்கூடலையாற்றூர் திருநணா (பவானி), நந்தி விலகிய தலங்களாக திருப்புன்கூர், பட்டீச்சரம், திருப்பூந்துருத்தி, நந்தி நின்ற கோலமாக உள்ள தலமாக திருமாற்பேறு, நந்தி திருமணத்தலமாக திருமழபாடி, நந்தி பிரதோஷத்தலமாக திரு அரிசிலி, நந்தி கோபுரத்தைப் பார்த்தவாறுள்ள தலமாக திருவல்லம், நந்தி தலைதிரும்பியுள்ள தலமாகத் திருநெல்வாயில் அரத்துறை ஆகிய தலங்களைச் சிறப்பாகக் கூறலாம்.

விழா நிகழ்முறை

ஐயாறப்பர் நந்தியெம்பெருமானுடன் (மண மக்களுடன்) சித்திரை மாதம் முழுமதி நாளுக்கடுத்த விசாகத்தில் புறப்பட்டு ஏழூர்களுக்கும் செல்வார். ஐயாறப்பர் கண்கவர் வடிவமைப்புடைய கண்ணாடிப் பல்லக்கிலும், நந்தியெம்பெருமான் அழகுமிகும் வெட்டிவேர் பல்லக்கிலும் செல்வர். ஏழூர் இறைவரும் அவரவர்தம் கண்ணாடிப் பல்லக்கில் எழுந்தருளி இவர்களை எதிர் கொண்டழைத்துச் சென்று மரியாதை செய்து, அவர்களுடன் தாமும் திருவுலாவிற்கு எழுந்தருளுவர். இந்த இனிய விழா தமிழகத் திருக்கோயில் விழாக்களில் புகழ் பெற்றதாகும். ஏழு திருத்தலங்களுக்கும் பக்தர்கள் தேவாரம் ஓதிக்கொண்டு பல்லக்கோடு கூட்டம் கூட்டமாகச் செல்வர்.

திருவையாற்றினைத் தலைமையாகக் கொண்டு அத்திருத்தலத்தை முதன்மைப்படுத்தி நடைபெறும் இவ்விழா சோழர் காலம் தொடங்கி இன்றுவரை நடைபெற்றுவரும் விழாவாகும். சப்தஸ்தான விழா என்றாலே அடியார்கள் அனைவருக்கும் முதற்கண் நினைவில் வருவது சைவசமயக் குரவர் நால்வராலும் பாடல் பெற்ற திருவையாறு திருத்தலமேயாகும். தேவாரத்திலும், தேவாரத்தலத்தைச் சார்ந்த ஊர் மக்களிடத்தும் வாழ்வோரிடையே உறவையும், ஒருமைப் பாட்டையும், அன்பையும் வளர்ப்பதே இவ்விழாவின்

நோக்கமாகும். இவ்விழாவில் திருவையாறு தொடங்கி திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் போன்ற அனைத்துத் தலங்களைச் சேர்ந்த பல்லக்குகள் ஒன்றுசேர்ந்து இறுதியில் திருவையாற்றில் விழா முடிவடைகிறது. இத் தலங்களின் சிறப்பைத் தொடர்ந்து காணலாம்.

திருவையாறு

சப்தஸ்தானத்தலங்களில் முதன்மைத்தலம் சோழ நாட்டு வடகரையில் அமைந்துள்ள திருவையாறு ஆகும். இறைவன் பஞ்சநதீஸ்வரர், இறைவி தர்மசம்வர்த்தினி. மூவராலும் பாடப்பெற்ற இத்தலத்திற்கு 18 பதிகங்கள் உள்ளன. தலத்திற்குள் தலமாக திருவாரூரில் காணப்படுவது போன்று இத்தலத்தின் உள்ளே இரு தலங்கள் உள்ளன. அவை அப்பருக்கு கயிலைக் காட்சியருளிய சுவாமி கோயிலான தென் கயிலாயம் மற்றும் வட கயிலாயம் ஆகியவையாகும். அப்பர் பெருமான் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த அற்புதமானது ஆண்டுதோறும் கயிலைக் காட்சித் திருவிழாவாக ஆடி அமாவாசையன்று நடைபெறுகிறது. தென் கயிலாயம் என்றும் பஞ்சவன்மா தேவீச்சுரம் என்றும் வழங்கப்படும் சிவன் கோயில் ஐயாறப்பர் கோயில் வளாகத் தென்திசையில் உள்ளது. முதலாம் இராசேந்திர சோழனின் மனைவியான பஞ்சவன் மாதேவியால் இக்கோயில் கட்டப்பட்டது. வடக்யிலாயம் என வழங்கப்படும் கோயில் லோகமாதேவீஸ்வரம் எனவும் அழைக்கப்பட்டது. முதலாம் இராசராசனின் பட்டத்தரசியான தந்திசக்தி விடங்கியரான லோகமாதேவியரால் இக்கோயில் கட்டப்பட்டது. சுந்தரரும், சேரமானும் வந்தபோது இறைவன் காவிரி வெள்ளத்தை ஒதுங்கி வழிவிடச் செய்து காட்சி தந்த பெருமையும் இத்தலத்திற்கு உண்டு.

ஏழு நிலைகளையுடைய கிழக்கு கோபுரமே பிரதான வாயிலாகும். வலப்புறம் பெரிய மண்டபம் உள்ளது. இதில் வல்லப விநாயகர், தண்டாயுதபாணி சன்னதிகள் உள்ளன. உள் கோபுரம் மூன்று நிலைகளையுடையது. வலப்புறம் அம்பாள் கோயிலுக்குப் போகும் வழியுள்ளது. தெற்கு வாயிலில் வெளிப்புறம் ஆட்கொண்டார் சன்னதி உள்ளது. பிரகாரத்தில் தொடர்ந்து வலம் வரும் போது விநாயகர் சன்னதி உள்ளது. அடுத்து மேலக்கோபுர வாயில். அடுத்துள்ள கோயிலும் விநாயகர் சன்னதியேயாகும். அடுத்து இடப்புறம் வடகயிலாயம் உள்ளது. வலம் முடித்து மூன்றாவது கோபுரம் கடந்து துவார விநாயகராகவுள்ள இரட்டை விநாயகர்களையும், தண்டபாணியையும் வணங்கி உட்சென்றால் கொடிமரம் சித்தி விநாயகர் உள்ளார். இப்பிரகாரத்தை வலம் வந்து கொடிமரம் தாண்டி, படிகள் ஏறினால் பெரிய மண்டபம். மூலவர் நுழைவு வாயிலுக்குப் பக்கத்திலுள்ள மண்டபத்தில் ஓர் இரும்புப் பேழையில் மரகதலிங்கம், ஸ்படிக லிங்கம், ஸ்படிக அம்பாள் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு நாள்தோறும் காலையில் பூஜை நடைபெறுகிறது. சுதையாலான துவாரபாலகர் உருவங்களைக் கண்டு தொழுது துவார விநாயகரையும், முருகனையும் வணங்கி உள்ளே சென்றால் நேரே பஞ்சநதீஸ்வரர் சன்னதி உள்ளது. உள் பிரகார அலங்கார மண்டபத்தின் சுவர்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. பவானிநாதர், சிவலிங்கம், ஆதிவிநாயகர், நவக்கிரகங்கள், பஞ்ச பூதலிங்கங்கள், சந்திரசேகரர் சன்னதி ஆகியவை உள்ளன. அடுத்து பிரகாரத்தில் சித்தி விநாயகர், விசுவநாதர், விசாலாட்சி, தண்டபாணி உருவத் திருமேனிகள் உள்ளன. வில்லேந்திய முருகப் பெருமானும், செல்வ விநாயகரும் உள்ளனர். ஆவுடை விநாயகர், மகாலட்சுமி, சரஸ்வதி கூடியுள்ள சன்னதி, சண்டேசுவரர் சன்னதி போன்றவை உள்ளன. நடராசர் சன்னதி அழகாக

உள்ளது. மூலவர் சுயம்புமூர்த்தியாக உள்ளார். கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி உள்ளார். சுவாமி ஜடாதாரியாக இருப்பதாகவும் அதனால் இவ்வுள் பிரகாரத்தில் எவரும் நுழைந்து வலம் வரக்கூடாது என்பர். வெளிவரும் போது இடப்பக்க மூலையில் மெய்கண்டார், உமாபதிசிவம், அருணந்திசிவம் ஆகியோரின் சன்னதிகள் உள்ளன. அம்பாள் ஆலயம் தனிக்கோயிலாக கிழக்கு நோக்கிய வண்ணம் உள்ளது.

திருப்பழனம்

சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்றான இத்தலம் சோழ நாட்டு வடகரையில் திருவையாறுக்கு அண்மையில் அமைந்துள்ளது. இறைவன் ஆபத்சகாயர், இறைவி பெரியநாயகி, இத்திருக்கோயிலின் வெளிச்சுற்றில் விநாயகர், சுப்பிரமணியர் சன்னதிகள் உள்ளன. விநாயகரைத் தொழுது வாயிலைக் கடந்து உட்சென்றால் இடப்புறத்தில் பிரகாரத்தில் சப்தமாதர்கள், விநாயகர், வேணுகோபாலர் சன்னதிகளும், பல்வகைப் பெயர்களில் அமைந்த சிவலிங்கங்களும், நடராச சபையும், பைரவர், நவக்கிரகமும் உள்ளன. உள் மண்டபத்தில் நுழைந்ததும் நேரே மூலவர் காட்சி தருகிறார். வெளிப்பிரகாரத்தில் அம்பாள் சன்னதி உள்ளது. இத்தலத்தினை சம்பந்தர், அப்பர், மணிவாசகர் உள்ளிட்ட பல நாயன்மார்கள் போற்றிப் பரவியுள்ளனர்.

திருச்சோற்றுத்துறை

சப்தஸ்தானங்களில் ஒன்றான இத்தலத்திற்கு திருவையாற்றிலிருந்து செல்லலாம். இவ்வூர் சோழ நாட்டுத் தென்கரையில் உள்ள தலம். வழிபடும் அடியவர்களின் பசிப்பினி தீர இறைவன் உணவு வழங்குபவன். எனவே, சோற்றுத்துறை என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். ஊர்ப்பெயருக்கேற்ப சப்தஸ்தான விழாவில் ஏழூர் வலம் வரும் அடியவர்களுக்கு இங்கு அன்னம் பாலிப்பு நடைபெறுகிறது. இறைவன் சோற்றுத்துறை நாதர், இறைவி அன்னபூரணி. மூவர் பாடல் பெற்ற இத்தலத்தின் வெளிச் சுற்றில் அம்பாள் கோயில் உள்ளது. அம்பாள் திருமணக்கோலத்தில் உள்ளார். மூன்று நிலை ராஜகோபுரத்தின் வலப்புறம் விநாயகரும், இடப்புறம் முருகனும் உள்ளனர். முன் மண்டபத்தில் நடராசசபை உள்ளது. அர்த்த மண்டப நுழைவு வாயிலில் ஆறுமுகப் பெருமானின் தனிக் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு அம்மன்னன் விளக்கெரிக்கவும், நிவேதனத்திற்காகவும், விழாக்கள் எடுக்கவும் நிலமும், பொன்னும் தந்த செய்திகளை சோழர் காலக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

திருவேதிகுடி

சோழ நாட்டுத் தென்கரைத் தலமான இத்தலம் தஞ்சாவூர் திருவையாறு பேருந்துச் சாலையில் திருக்கண்டியூருக்கு அருகில் உள்ளது. திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்தஸ்தலங்களுள் இத்தலமும் ஒன்று. சம்பந்தராலும், அப்பராலும் பாடப்பெற்ற இத்தலத்தின் இறைவன் வேதபுரீசுவரர், இறைவி மங்கையர்க்கரசி. கிழக்கு நோக்கிய இக் கோயில் சிறிய ராஜகோபுரத்தைக் கொண்டுள்ளது. அம்பாள் சன்னதி தெற்கு நோக்கியுள்ளது. மகாமண்டபத்தில் தல விநாயகரான வேத விநாயகர் இறைவன் நான்கு முகங்களாலும் அருளிச்செய்யும் நான்கு வேதங்களையும் செவிசாய்த்துக் கேட்கும் நிலையில் உள்ளார். சிவலிங்கத்திருமேனியாக மூலவர் உள்ளார். வாழைமடுவில் உற்பத்தி யானதால் வாழைமடு நாதர் எனவும் அழைக்கப்படுகிறார். இத்தல இறைவன் வேதிகுடி மகாதேவர் எனவும், பரகேசரி சதுர்வேதி மங்கலத்து மகாதேவர் எனவும் அழைக்கப்படுகிறார்.

இக்கோயில் முதலாம் ஆதித்த சோழன் காலத்தைச் சேர்ந்ததாகும்.

திருக்கண்டியூர்

சோழநாட்டுத் தென்கரைத்தலம். தஞ்சை திருவையாறு பேருந்துச் சாலையில் தஞ்சையிலிருந்து ஒன்பது கி.மீ. தொலைவில் உள்ளது. இத்தலம் சம்பந்தராலும், அப்பராலும் பாடப்பெற்றதாகும். அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்றான இத்தலம் பிரமன் சிரத்தை தம் சூலத்தால் கொய்த காரணத்தால் கண்டனபுரம், கண்டியூர் எனப் பெயர் பெற்றது. சாதாதப முனிவர் பிரதோஷத்தில் காளத்தி சென்று தரிசனம் செய்துவந்தார். ஒருமுறை கண்டியூர் வந்தபோது, காளத்திக்கு நேரத்தில் செல்ல முடியாமல் போனபோது இறைவன் அவருக்குக் காளத்தி தரிசனத்தை இத்தலத்தில் காட்டியருளினார். பிரமகத்தி தோஷம் நீங்கும் தலமாக இத்தலம் சொல்லப்படுகிறது. இறைவன் பிரமசிரக் கண்டீஸ்வரர், இறைவி மங்களநாயகி. கல் வெட்டில் இறைவன் திருவீரட்டானத்து மகாதேவர் என்றும் திருக்கண்டியூர் உடைய மகாதேவர் என்றும் குறிப்பிடப்படுகிறார். ராஜகோபுரம் ஐந்து நிலை களுடன் உள்ளது. ஏழூர்த் திருவிழாவின் போது சுவாமி இங்கு வந்து இறங்கி ஐந்தாவது தலமாகச் சற்று இளைப்பாறிச் செல்வார். அம்பாள் சன்னதி தெற்கு நோக்கியது. விநாயகர், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர், மகாலட்சுமி, விஷ்ணு துர்க்கை உள்ளிட்ட பல சன்னதிகள் உள்ளன. வெவ்வேறு மூர்த்தங்களில் விநாயகர், சூரியன், அமர்ந்த கோலத்தில் அர்த்த நாரீஸ்வரர் காணப்படுகின்றார். கோஷ்டத்தில் பிரமன், லிங்கோத்பவர், தட்சிணா மூர்த்தி, பிட்சாடனர் ஆகியோரின் திருமேனிகள் உள்ளன. துவார பாலகர் களின் பக்கத்தில் சாதாதப முனிவர் உருவம் உள்ளது. சப்தஸ்தான லிங்கங்கள், பஞ்ச பூதலிங்கங்கள், சாதாதபருக்குக் காட்சி தந்த காளத்திநாதர் சன்னதி முதலியவை காணப் படுகின்றன.

திருப்பூந்துருத்தி

திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப் பள்ளிக்குச் செல்லும் சாலையில் கண்டியூரை அடுத்துள்ள தலம். பூந்துருத்தி காடநம்பி அவதரித்த இத்தலத்தில், நந்தி விலகியுள்ளது. அப்பர் உழவாரத் தொண்டுசெய்த தலமென்று எண்ணி, காலால் மிதிக்கவும் அஞ்சி வெளியில் நின்ற ஞான சம்பந்தருக்கு இறைவன் நந்தியை விலகச் செய்து காட்சி தந்ததாகக் கூறுவர். ஞானசம்பந்தப் பெருமானின் பல்லக்கை அப்பர் பெருமான் தன் தோளில் சுமந்த பெருமை கொண்டது இத்தலம். அப்பரால் அமைக்கப்பட்ட மடம் கோயிலுக்கு எதிரில் சற்று தள்ளி உள்ளது. இங்கிருந்துதான் அவர் திரு அங்கமாலை உள்ளிட்ட பல தாண்டகங்களையம், பல பதிகங்களையும் பாடியருளினார். மேலை, கீழை என இரு பிரிவாக உள்ள இவ்வூரில் மேலைப் பூந்துருத்தியில் தான் இக்கோயில் உள்ளது. இறைவன் புஷ்பவனேஸ்வரர், இறைவி சௌந்தரநாயகி, ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன்கிழக்கு நோக்கியுள்ளது. கருவறையின் தென்புறம் தென்கயிலையும், வடபால் வடகயிலை யுமாகிய கோயில்கள் உள்ளன. உள் பிரகாரத்தில் விநாயகர், சப்தமாதர்கள், நால்வர் வரலாற்றுச் சித்திரங்கள் உள்ளன. கோஷ்டமூர்த்தங்களில் வீணாதர தட்சிணாமூர்த்தி திருமேனி மிகவும் சிறப்பானது.

திருநெய்த்தானம்

சோழநாட்டு வடகரைத்தலமான இத்தலம் திருவையாற்றுக்கு மிக அருகில் உள்ளது. சம்பந்தர், அப்பர் ஆகியோரால் பாடப்பபட்ட இத்தல இறைவன் நெய்யாடியப்பர், இறைவி பாலாம்பிகை. கிழக்கு நோக்கிய ராஜகோபுரம். அம்பாள் கோயில்

தெற்கு நோக்கி தனிக்கோயிலாக உள்ளது. உள் பிரகாரத்தில் விநாயகர், முருகன் சன்னதிகள் உள்ளன. கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா ஆகியோரின் மூர்த்தங்கள் உள்ளன. கல்வெட்டுகளில் இத்தலம் இராஜராஜ வளநாட்டு பைங்காநாட்டு திருநெய்த்தானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தலம் ஏழூர்த் தலங்களில் ஏழாவது தலமாகும்.

ஜீவாத்மாவாகிய நந்தி, திருவருள் துணைக் கொண்டு ஆறு ஆதாரங்களான சாக்ரத், சொப்பணம், சுஷீத்தி, துரியம், துரியாதீதம், அதீதாந்தம் ஆகியவற்றை முறையே அடைந்து இறுதியில் தன்மயம் என்னும் நிலையை அடைந்து சிவனோடு ஐக்கியம் ஆவதைக் குறிக்கும் தத்துவ விளக்கத்தைக் கொண்டு விழா கொண்டாடப்படும் இத்திருத் தலங்களுக்குச் சென்று இறையருள் பெறுவோமாக!

சேங்கனூர் - திருவாய்ப்பாடி. (ஸ்ரீ சண்டேச்வரர்)



திருசேய்ஞலூர்

குடந்தை - சென்னை நெடுங்சாலையில் திருப்பனந்தாளுக்கு முன்பாக நெடுஞ்சாலையிலிருந்து 1 கி.மீ. தொலைவில் சேங்கனூர் என்ற பெயரில் திருசேய்ஞலூர் உள்ளது. சண்டேச நாயனார் பிறந்த பதி இவ்வூராகும். சிறு வயதில் 63 நாயன்மார்களிலேயே மிக இளம் வயதில் இறைவனது திருவருளைப் பெற்றவர் இவராவர். இவர் பசுக்கள் மேய்த்த இடமான திருவாய்ப்பாடி, இவ்வூருக்கு அருகிலேயே உள்ளது. சிவபெருமானுக்குச் சூட்டப்பெறும் மலர் மாலைகளும், நிவேதிக்கப்படும் உணவும், அணிவிக்கப்படும் ஆடையும் சண்டேசப் பெருமானுக்கே உரியதாகும். அதனால்தான் சோழர்காலக் கல்வெட்டுச் சாசனங்களில் ஆலயச் சொத்துக்கள் அனைத்தும் சண்டேகேஸ்வரருக்கே உரியதாகக் குறிப்பிடப் பெற்றிருக்கும்.

கும்பகோணம் திருப்புகழ்

''திருப்புகழ் அமுதன்'' வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்

அற்புத மிகப்புகழான திருப்புகழை விருப் பொடு பாடிய அருணகிரிநாத சுவாமிகள், தேவார மூவர் மற்றும் ஆழ்வார்களுக்குப்பின் பலதல வழிபாடு செய்து முருகப்பெருமானின் திருவருளில் திளைத்தவர். இன்று நமக்குக் கிடைத்துள்ள திருப்புகழ்ப்பாடல்கள் 1329-ல் 216 தலங்களைப் பாடிப் பரவியுள்ளார். அவர் வாழ்ந்த 14-ஆம் நூற்றாண்டில் மக்களின் சமுதாய, கலாசார நிலைகளை பலவாறாகத் திருப்புகழில் பேசுகிறார். சமயாதீத நிலையில் அறுவகைச் சமய வழிபாட்டையும் ஒருங்கிணைக்கும் அவரது பக்திநிலை அற்புதமானது.

திருப்புகழ்ப் பாடல்களை இரண்டு பகுதி யாகப் பிரித்தால் முதற்பகுதியில் அக்கால மக்களின் வாழ்வியல் முறைகளையும், வாழ்வின் நிலையா மையும், நெறிகெட்டு தவறான பாதையில் செல்வோர் தடுமாறி வீழ்வதையும் விரிவாகச் சொல்லி பாடலின் பிற்பகுதியில் முருகப் பெருமானது பெருங்கருணையைப் போற்றி வாழ்வு சிறக்க வேண்டுவார். விநாயகர், சிவபெருமான், அம்பிகை, திருமால் ஆகியோரது பெருமைகளையும் பேராற்றலையும் புகழ்ந்து, முருகனுடன் அவர்களது உறவு முறையை இணைத்து புகழும் பாங்கு அவருக்கு முன்னே வேறு எந்த நூலிலும் காணமுடியாத அருமை யாகும். அவரது சந்தப்பாடல்கள் எப்படி தனிச் சிறப்புடையதோ அதே போன்று சமயாதீதநெறியும் சிறப்பானதாகும். அந்த நிலையில் திருப்புகழைப் படிப்பவர்களுக்கு வாழ்வியல் நெறி, இறையருள் நெறி, பக்தி நெறி, ஞானநெறி எனப்பல அருமை யான நெறிமுறைகளை உணர்ந்து இன்புறமுடியும்.

கந்தபுராணம், ராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம், பாகவதம், தசாவதாரம், சிவபுராணம் என்றும் பலவகைப்புராணச் செய்தி களை திருப்புகழ்பாடல்களில் ஆங்காங்கே படித்து சுவைக்க முடியும். தாம் பெற்ற அருள் அனுபவங் களையும், பெருமைகளையும் திருப்புகழில் பதிவு செய்து நாமும் அந்த அருளைப்பெற வழிகாட்டி யாகச் செய்துள்ளார். ஒருதலத்தைப்ற்றி பாடும் போது அதில் மற்றொரு தலத்தையும் குறிப்பிட்டுச் சொல்லுவார். ஒரு தலத்திற்கு பலபெயர்கள் இருப்ப தையும் சுட்டிக்காட்டுவார். தலப்பெயரை மறை பொருளாகவும் காட்டுவார்.

அருணகிரிநாதர் சென்று வழிபட்ட தலங்களில் ''கும்பகோணம்'' என்ற தலமும் ஒன்றாகும். தேவாரம், திவ்யப்ரபந்தங்களில் குடமூக்கு, திருக்குடந்தை என்று கும்பகோணத்தை குறிப்பிடும். ஆனால் கும்பகோணம் என்ற பெயர் வழக்கு இலக்கியத்தில் முதலில் திருப்புகழில் தான் காணமுடிகிறது. இன்று நமக்குக் கிடைத்துள்ள திருப்புகழ்ப் பாடல்களில் (தணிகைமணி வ.சு. செங்கல்வராயப்பிள்ளை மற்றும் வாரியார் சுவாமிகள் பதிப்புபடி) கும்பகோணத்திற்குரிய பாடல்கள் ஏழு. இப்பாடல்களில் கும்பகோணம், கும்பகோண நகர், திருக்குடந்தை முதலான பெயர்கள் வருகின்றன.

பாட்டு முதலடி	முடிவு அடி
1. 'இந்து கதிர்ச்சேர்'	- கும்பகோணத்தாறு முகப்பெருமாளே'
2. 'தும்பிமுகத்தானை'	- 'கும்பகோணத்தாறு முகபெருமாளே'
3. 'கெண்டைநேர்'	- 'கும்பகோணத்தில் உறை பெருமாளே'
4. 'பஞ்சு சேர்நிர்த்தம்'	- 'கும்பகோணத்திற் பெருமாளே'
5. 'மாலைதனில்'	- 'கும்பகோண நகர் வந்த பெருமாளே'
6. 'கறுத்தகுஞ்சி'	- திருக்குடந்தையில் உறைதரு கந்தப்பெருமாளே'

7. 'செனித்திடுஞ்' - 'திருக்குடந்தையில் வாழ்
முருகாசுரர் பெருமாளே'

இந்த ஏழு திருப்புகழ் தவிர ''கும்பகோணமொ டாரூர்..... என்று தொடங்கும் க்ஷேத்திரக் கோவைத் திருப்புகழில் முதல் தலமாக கும்பகோணம் குறிப்பிடப் பெறுவது சிறப்புக்குரியதாகும்.

''கும்பகோணத்தாறு முகப்பெருமாளே' என்ற வரியில் ஓர் அருமையாக செய்தி பொதிந்துள்ளது. கும்பகோணம் ஆதிகும்பேச்வரர் திருக்கோயிலில் அமைந்துள்ள கார்த்திகேயர் வடிவம் ஆறுமுகங்களும் ஆறுகரங்களும் கொண்டு திகழ்கிறார். அவரது கரங்களில் ஜபமலை, கட்கம் (கத்தி), வஜ்ரம், கேடயம் ஆகியவைகளுடன் வலது கரம் அபயமாகவும், இடதுகரம் பாதி மூடிய (சுசீஹஸ்தம்) நிலையிலும் உள்னள. (கும்பகோணம் அருகிலுள்ள ராஜராஜேச்வரம் என்னும் தாராசுரம் ஐராவதேச்வரர் கோயிலில் விளங்கும் கார்த்திகேயன் வடிவம் ஆறுமுகங்களும் ஆறுகரங்களுடன் திகழ்வது குறிப்பிடத்தக்கது) ஆறு முகங்களும் ஆறுகரங்களுடன் கொண்ட வடிவம் 'கார்த்திகேயன்' என்று குமாரதந்திரம் என்னும் சிற்பநூலும், தணிகைபுராணமும் குறிப்பிடுகிறது. எனவே, அருணகிரிநாதர் ஆதிகும்பேச்வரர் திருக்கோயிலில் ஆறுமுகனைத் தரிசித்தபோது ''கும்பகோணத்து ஆறுமுப்பெருமாள்' என்று குறிப்பிடும் அழகை நம்மால் சுவைக்க முடிகிறது.

'கும்பகோணநகர்' என்று குறிப்பிடும் ''மாலைதனில் வந்து'' என்று தொடங்கும் திருப் புகழில் ஓர் அருமையான வேண்டுகோளை நமக்காகச் சொல்கிறார். காலையில் எழுந்து உன்னுடைய திருநாமங்களையே சொல்லி அன்பான உமையின் குமரனே என்று ஓதி, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் விளக்கும்படியானசக்தியை அடைந்து ஞானாகாச வெளியை ஞானக்கண் கொண்டு நான் காண உன் திருவருளை என்று பெறுவனோ !

''காலையில் எழுந்துன் நாமமெமொ ழிந்து
காதல்உமை மைந்த என ஓதிக்
காலமும் உணர்ந்து ஞானவெளி கண்கள்
காணஅருள் என்று பெறுவேனோ''

இந்த அருமையான வேண்டுகோளை தினமும் காலையில் எழுந்தவுடன் முருகனிடம் வேண்டித் துதிக்க வேண்டும் என்பார் வான்கலந்த குகத்திருவாரியார் சுவாமிகள்.

'பஞ்சுசேர் நிர்த்த'... என்று தொடங்கும் மற்றொரு திருப்புகழில் செம்மையான சொற்கள் அமைந்துள்ள சித்ரத் தமிழால் உன்னுடைய செம்பொன்னுக்கு ஒப்பான அன்பைப் பெற மாட்டேனோ ! என்று கேட்பார்.

''செஞ்சொல் சேர் சித்ரத் தமிழால்உன்
செம்பொன் ஆர்வத்தைப் பெறுவேனோ
கும்பகோணத்திற் பெருமாளே''

இந்த வேண்டுகோளை முருகப்பெருமான் உடனே ஏற்று கும்பகோணம் அருகில் உள்ள சுவாமி மலையில் ''திருஎழுகூற்றிருக்கை'' என்னும் சித்ரகவியைப் பாட அனுக்ரகம் செய்தார் என்பது சுவையான செய்தி. ''ஒருருவாகிய... என்று தொடங்கும் இந்த திருஎழுகூற்றிருக்கையில் நிறைவாக'' காவிரி வடகறை மேவிய குருகிரி என்று குறிப்பிடுகிறார். அருணகிரியார் பாடி நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் சித்ரக்விப்பாடலில் அமைந்தது இப்பாடல் ஒன்றே. சுவாமிமலை சுவாமிநாத சுவாமி திருக்கோயிலில் இதனை ரதபந்தமாக தேர்வடிவில் சலவைக்கலில் அமைத்துள்ளனர், சென்னை திருவல்லிக்கேணி

முருகன் திருவருட்சங்கத்தார். இதனை வடிவமைத்து பதிக்கும் பணி அடியேனுக்குக் கிடைத்ததில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி.

வயது முதிர்ச்சியால் தலைமுடி வெளுத்து, வெள்ளைப்பற்கள் எல்லாம் விழுந்து, சுறுசுறுப்பான புத்தியும் மருட்சியடைந்து, மயக்க அறிவாகி, நோயால் கலக்கம் அடைந்து, இவ்வாழ்க்கைப் போதும், போதும் என்னும் மனநிலைவர, நீர்வற்றிப் பழுத்த பழமாய், நிமிர்ந்தோங்கி இருந்த முதுகு வளைந்து, கழுத்திலே கோழையும் இருமலும் ஒதுங்கி நிற்க, கொழுத்திருந்த மேனியானது வற்றிச்சுருங்கி, ஒருதடியை கையில் நடுக்கத்துடன் பிடித்து அவமதிப்புக்கு இடமான மனைவியும் இகழ, பக்கத்திலுள்ள பிள்ளைகளும் வசையினால் பழிக்க, அறிவில்லாத பொருள் போலாகி, உடல் முழுதும் அழுக்கு சேர, வேதனைப்படும் உடலுக்கு இடமாம் சேறு போன்ற பிறப்பு என்னும் கடலில் அழிந்து போவது ஒழிந்து பெருமைவாய்ந்த உனது திருவடிகளை சரண்புகுந்து என்று நான் பொருந்தி இருப்பேனோ ? என்று வாழ்வின் நிலையாமையை உணர்த்தி திருக்குடந்தையில் உறைதரு கந்தப்பெருமானின் திருவடிகளை ''கறுத்த குஞ்சியும்'' என்று தொடங்கும் கும்பகோணம் திருப்புகழில் வேண்டுகிறார்.

''பணியா என வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரனே'' என்று கந்தரநுபூதியில் அழைப்பார். ''தினைப்புனத்திலே வள்ளி மீது ஏற்பட்ட அன்பினால் அவளது பாதத்தில் அடைக்கலம் நான் என்று நீ கூறத் தனது திருப்புயங்களை உனக்கு தந்த மயக்கவல்ல மான் போன்ற வள்ளியை அணைபவனே ! என்று வள்ளியாகிய ஜீவாத்மாவுக்கு குற்றேவல் செய்யும் சேவகனாக பரம்பொருள் தவஞ்செய்வோர்கள் பொருட்டு பரமனாக வெளித்தோன்றி வந்து அருளும் குழந்தை கிருபாகரன் திருக்குடந்தையில் வாழும் முருகன் ! என்று வியக்கிறார்.

''தினைப்பு னந்தனி லேமய லால்ஒரு
மயிற்ப தந்தனி லேசர ணானென
திருப்பு யந்தரு மோகன மானினை
அணைவோனே
சிவக்கொ ழுஞ்சுட ரேபர னாகிய
தவத்தில் வந்தருள் பாலக்ரு பாகர
திருக்குடந்தையில் வாழ்முரு காசுரர்
பெருமாளே''.



ஸ்ரீ சோமேஸ்வரர் திருக்கோயில் - செப்புத் திருமேனிகள்

ஸ்ரீ காசி விசுவநாதர் கோயிலிலுள்ள - ஒன்பது நதி தெய்வங்கள்

ஸ்ரீ நாகேஸ்வரர்



பெரியநாயகி

கோமளவல்லித் தாயார் - ஸ்ரீ சார்ங்கபாணி

சீதாபிராட்டி உடனுறை ஸ்ரீ இராமபிரான் - இலக்குவன் - அனுமன்
இராமசாமி திருக்கோயில்

விஜயவல்லி - ஸ்ரீ சக்கரபாணி - சுதர்சனவல்லி

ஸ்ரீ ஆதிவராகப்பெருமாள் பூமிதேவி

கல்கருடன் - நாச்சியார்கோயில்



திரிபுவன வீரேச்சரம்

முனைவர். நா.மார்க்சிய காந்தி,
தொல்லியல் துறை, சென்னை.

தமிழகத்தைக் கோயிற்களஞ்சியம் ஆக்கிய பெருமை சோழ மன்னர்களைச் சாரும். ஒவ்வொரு கோயிலும் ஒருபெருங்களஞ்சியம் ஆகும். அவற்றுள் தனிப்பெருங்களஞ்சியமாகக் கருதத்தக்கது திரிபுவன வீரேச்சரம் என்ற பண்டையப் பெயரையும், கம்பஹரேஸ்வரம் என்ற இன்றையப் பெயரையும் கொண்டு திகழும் திருபுவனம் சிவன்கோவில் ஆகும் கும்பகோணத்திற்கு வடமேற்கே 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ள இவ்வூர், பட்டுச் சேலைகள் தயாரிப்பு மூலம் தமிழக மக்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்த ஊர். நெடிதுயர்ந்த விமானத்தையும், மூன்று கோபுரங்களையும் கொண்டு தொலைவிலேயே காண்போரை ஈர்க்கும் சீர்மையது, இக்கோயில்.

கோயிலும், இறைவனும்

இப்பெருங்கோயிலை மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1178-1218) தனது, 34-ஆம் ஆட்சியாண்டுக்குச் சற்று முன் அதாவது கி.பி. 1212வாக்கில், எடுத்து, திரிபுவனவீரன் என்ற தன் பட்டப்பெயரில் திரிபுவன வீரேச்சரம் என்று அழைத்து மகிழ்ந்தான். இப்பெயர் கோயிலுக்கு இன்றும் வழங்குகிறது. இறைவன் கம்பஹரேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். வடமொழியில் கம்ப என்றால் நடுக்கம்; ஹரர் என்றால் தீர்த்தவர். சோழ மன்னன் ஒருவனுக்கு ஒரு பிராமணனைக் கொன்றதால் வந்த நடுக்கம் தீர்த்து வைத்தவர். ஆதலின் இவ்விறைவன் இப்பெயர் பெற்றார் என்பது த்லவரலாறு தரும் கதை. இம்மன்னன் தன் கல்வெட்டில், 'அரிபிரமன் தொழ நின்ற நாயகர்க்கு அகிலம் எல்லாம் தொழுதுபோற்ற தான் கோயில் எடுத்ததாகத் தெரிவிக்கிறான். வராக வடிவில் திருமாலும், அன்ன உருவில் பிரம்மனும், சிவனாரின் அடியும் முடியும் காணச்சென்று, நெடிதுயர்ந்த மண்ணும் விண்ணும் தொட நெடுந்தூணாய் ஒளிப்பிழம்பாய் நின்ற சிவனாரின் எல்லை காணாது, திரும்பி வந்து தொழுது நின்றனர். இதனைக் குறிக்கும் வகையில் 'அரிபிரமன் தொழநின்ற நாயகர்' (கம்ப+அரர்; கம்பமாய் நின்ற சிவனார்) என்று தான் எடுத்த கோயிலிலுறையும் இறைவனுக்குப் பெயரிட்டு வணங்கினான். இப்பெயரை வடமொழியாக்கம் செய்தபோது, 'நடுக்கம் தீர்த்த' என்ற பொருள் அதன்மீது படிய, அப்பெயரடிப்படையிலும் ஒரு தலபுராணம் எழுதப்பெற்று வரலாற்று உருவமும் பெற்றுவிட்டது.

குலோத்துங்க சோழனும், கோயிற் திருப்பணிகளும்

திரிபுவன வீரேச்சரம் என்ற இத்திருக்கோயிலைக் கட்டுவதற்கு முன்னமேயே மூன்றாம் குலோத்துங்கன் பலபெரிய திருப்பணிகளைச் செய்து முடித்துள்ளான். தான் செய்த திருப்பணிகளை எல்லாம் அவ்வக்ஃகோயில்களில் அவன் பொறித்து வைக்கவில்லை. எனினும் இத்திரிபுவனம் கோயிலில் அவை அனைத்தையும் தொகுத்து வடமொழிப் பாடல்களாக எழுதி வைத்துள்ளான். அதே நேரத்தில் இச்செய்திகளை தன்மெய்கீர்த்திப் பகுதியாக்கிப் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியாமலை சேரனூர் ஆகிய ஊர்களில் தமிழிலும் கல்வெட்டுகளாகப் பொறித்து வைத்துள்ளான். சிதம்பரத்தில் ஆடவல்லான் திருமுன்னர் மண்டபத்தையும், சிவகாமி அம்மைக்குத் கோபுரத்தையும், காஞ்சிபுரத்தில் ஏகாம்பர ஈஸ்வரருக்குக் கோயிலையும், மதுரை ஆலவாய் அண்ணலுக்குக் கோயிலையும், திருவிடைமருதூர்ச் சிவனார்க்குக் கோயிலையும், தாராசுரம் இராஜராஜேஸ்வரத்துக் கோயிலையும், திருவாரூர் வன்மீக நாதருக்கு கோயிலையும், ஆடற் சபையையும், கோபுரத்தையும் கட்டுவித்தான் என்று மேற்குறித்த தமிழ், வடமொழிக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. 'புனல் வையைச் சேரபாண்டியன் மண்டலத்துத் திறைகொண்ட பசும்பொன்னும், இறையிலியும்' கொண்டுவந்து இத்திருப்பணிகளையெல்லாம் குலோத்துங்கன் செய்தான். இத்திருப்பணிகள் எல்லாம், ஏற்கனவே கட்டப்பட்டிருந்த பழைய

கோயில்களில் செய்த புதிய திருப்பணிகள் ஆகும்.

அரசகுருவும் - ஆலய நிர்மாணமும்

குலோத்துங்க சோழனின் குரு சோமேஸ்வரர் என்னும் ஈஸ்வர சிவர் ஆவார். இந்த இராஜகுரு பதினெட்டு சிவபுராணங்களையும் தெளிய உணர்ந்தவர்; சிவபிரானின் உயர்குணங்களைக் கூறும் உபநிஷதங்களின் உண்மைப் பொருளை விரித்துரைக்க வல்லவர்; சைவ தரிசனத்தைத் தெளிந்து கண்டவர்; சித்தாந்த ரத்னாகரம் என்ற அரிய நூலை எழுதியருளியவர். இத்தகைய சிறப்புகள் பொருந்தியவரும், ஸ்ரீகண்ட சம்புவின் குமாரரும், தனது குருவுமான சோமேஸ்வரர் எனும் ஈஸ்வர சிவர் என்பாரைக் கொண்டு இவ்வுலகிற்கு அம்மை அப்பனாக விளங்கும் பார்வதி பரமேஸ்வரரை இத்திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்வித்தான் என்று மற்றொரு வடமொழிப் பாடல் கல்வெட்டு கூறுகிறது.

கோயிலமைப்பும், கட்டிடச் சிறப்பும்

இக்கோயில் விமானம் 60 அடிக்கு 60 அடி அடித்தளம் கொண்டதாக, 6 தளங்களையுடையதாக நெடிதுயர்ந்து நிற்கிறது. கருவறையினை ஒட்டி அர்த்தமண்டபமும் தொடர்ந்து இடைக்கழியும் உள்ளன. இடைகழியின் இருபுறங்களிலும் அழகிய வாயிற்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மகாமண்டபமும் முகமண்டபமும் கட்டப்பட்டுள்ளன. முகமண்டபத்தின் இடப்புறத்தே (தெற்கில்) நீண்டதாக மற்றொரு மண்டபம் தேர்வடிவில் பெரிய சக்கரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முன்புறம் (மேற்கில்) வாயிற்படிகளும் உள்ளன. இந்த மண்டபத்தின் வழியே முகமண்டபத்திற்குச் செல்ல தெற்கில் நுழைவாயில் உள்ளது. மண்டபங்களிருக்கும் பகுதியில் சோமாஸ்கந்தருக்கும், கணபதிக்கும் விமானங்களுடன் கூடிய சிறிய கோயிலைமைப்புகள் உள்ளன.

கருவறையைச் சுற்றியுள்ள முதல் திருச்சுற்றில் கிழக்கு நோக்கிய நிலையில், சிவன் சன்னதிக்கு இணையாக தேவிக்குத் திருக்காமக் கோட்டமாகிய தனிச் சன்னதியும், தெற்கு நோக்கியதாக அமைந்த சிறிய சண்டேசுவரர் சன்னதியும், வடகிழக்கு மூலையில் தெற்கு நோக்கியதாகச் சரபமூர்த்தி சன்னதியும் உள்ளன. இம்மூன்று தனிச் சன்னதிகளும் முதல் திருச்சுற்றின் வடதிசையிலேயே அமைந்துள்ளன. அடுத்த திருச்சுற்றில், நந்தி மண்டபம், பலிபீடம், கொடி மரம் தவிர, வசந்த மண்டபம் என்னும் அலங்கார மண்டபம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

முதல் வெளி கோபுரம் 107 அடி உயரமும், 5 தளங்களும் தளம்தொறும் வாயில்களும் உடையதாக மிகவுயர்ந்து காணப்படுகிறது. உபபீடத்தின் மேல் கட்டப்பட்டுள்ள இக்கோபுரத்தின் நுழைவாயிலின் இடப்புறம் மூன்றாம் குலோத்துங்கனின் வடமொழிப் பாடற்கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. மேற்கிலும் 5 நிலைகளையுடைய கோபுரம் இருந்திருக்கின்றது. தற்பொழுது இடிபாடுகளுடன் திகழ்கின்றது. இரண்டாம் உள்கோபுரம் மூன்று நிலைகளையுடையது.

கருவறை உட்சுவர், வெளிச்சுவர் என்று இருசுவர்கள் இன்றிப் பெருத்த ஒரே சுவராகக் கட்டப்பட்டு, உள்வழி அமைப்பு (ப்ரதக்ஷிண பதம்) இன்றி, உயர்ந்த உபபீடம், அதன்மேல் அதிட்டானம் என்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவான உறுப்புகளைக் கொண்டிருப்பினும், உபபீடத்தின் உள்ளடங்கிய ஆனால் அகன்ற கழுத்துப்பகுதி பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு (கலபாதம்) பல அழகிய சிற்பங்களைக் கொண்டு விளங்குவது இக்கோயிலின் தனிச்சிறப்புகளுள் ஒன்று. இவ்வமைப்பு முறை கருவறை தொடங்கி முகமண்டபம் வரை தொடர்ந்து உள்ளது. இதன் மேலுள்ள அதிட்டானத்திலும், கண்டப் பகுதி பிரிக்கப்பட்டு, அவற்றில் கணங்களின் நடனச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உபபீடத்தின் மீது நடந்து சுற்றிவரத்தக்க அளவினதாக (ஆளோடி)

நடைவழியொன்றும் கட்டப்பட்டுள்ளது. இடைக்கழியில் அமைக்கப்பட்டுள்ள வாயில்கள் சோழரின் மிகப் பெரிய கோயில்கள் நான்கிலும் (தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகியன பிற மூன்று) உள்ள தனிச்சிறப்பாகும். இந்தவகையில் இதுவே கடைசிக் கோயில். இவ்வாயில் உபபீடம், அதிட்டானம் ஆகிய பகுதிகளை இணைக்கும் நிலையில் இருதள வகையினதாகவும், யானையின் துதிக்கை அமைப்பினதாகவும் கைப்பிடியும், பிடியின் கீழே படியின் பக்கவாட்டில் சிறிய விமானம், சிம்பன் போன்ற பல சிற்பங்களையுடையதாகவும் அமைந்திருப்பது இவற்றின் குறிப்பிடத்தக்க சிறப்பாகும். இக்கோயிலமைப்பின் மற்றொரு சிறப்பு, கோயில் கட்டப்பட்ட காலத்திலேயே தேவிக்கெனத் தனிச் சன்னதி அமைத்துத் தேவியை எழுந்தருள்வித்ததாகும். சோழர் கோயில்கள் எதிலும் இதற்கு முன்னர் தனிக்கோவில் தேவிக்கென அமைக்கப்பெறவில்லை.

சிற்பங்களும் - கதைகளும்

நெடிது உயர்ந்த விமானமும், சிறந்த பரப்பீடும் (பத விந்யாசம்) பெரிய பல மண்டபங்களும், தனிச் சன்னதிகளும் கொண்ட பெருமைமிகு கட்டடச் சிறப்பில், இக்கோயிலில் உள்ள சிற்பங்களின் மாட்சி அடங்கிப் போய் விட்டதென்றே கூறலாம். எனினும் நறுக்குத் தெறித்தாற் போன்ற சில கோட்டச் சிற்பங்களும், தனிச் சிற்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. கருவறைக் கோட்டச் சிற்பங்களான, தெற்கில் சிவனாரும் (தெட்சிணாமூர்த்தி), மேற்கில் அரிபிரமன் தொழ நின்ற நாயகரும் (லிங்கோத்பவர்), வடக்கில் உலகு படைத்த உத்தமனும் (பிரமன்), அர்த்த மண்டப வடக்கில் அரிதாகக் காணக் கிடைக்கும் அறுவகை துர்க்கையும், தெற்கில் கணபதியும், கிழக்கே வாயிலில் கத்தியும் கேடயமும் ஏந்தி அவர்களுக்கே உரிய கோபமும் கொடுமையும் இன்றி அன்பும் அருளும் ததும்ப நிற்கும் வாயிற் காவலர்களும் அவ்வகையில் குறிப்பிடத்தகுந்தவர்கள். இதுபோல, தேவி கோயிலின் கோட்டங்களிலும், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன. இவையன்றி இக்கோயிலில் தனியாக மாடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள கொடிப் பெண்ணின் சிற்பம் எழிலானது. வலக்காலை ஊன்றி, இடக்காலை மடித்து மலர்க்கொடியோடு இணைந்து தானும் ஒரு கொடியாக நிற்கும் இவ்வெழில்மிகு பாவையின் சிற்பம் உண்மையிலேயே கண்கொள்ளாக் காட்சி.

முன்னரே குறிப்பிட்டபடி இக்கோயிலின் உபபீடங்கள் அனைத்திலும் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இராமாயண, புராண காட்சிகளும், நடனக் காட்சிகளும், விலங்குகளின் சண்டை காட்சிகளும் இந்தப் பகுதியை நிறைத்து செய்யப் பெற்றுள்ளன. இராமாயணக் கதையில், பஞ்சவடியில் இராமர், சீதை, இலக்குவன் இருப்பது தொடங்கி, இறுதியில் வான்மீகி முன்னிலையில் அசுவமேத யாகத்தில் லவகுசர்கள் தம் கதையைக் (இராமாயணத்தை) கூறுவது வரை தேர்ந்தெடுக்கப்பட்ட காட்சிகளால் இராமாயணம் சிற்பமாகச்செதுக்கப்பெற்றுள்ளது.

சூர்ப்பனகை இராமனைச் சந்தித்துப் பின் இலக்குவனால் மூக்கறுபடும் கதைப்பகுதி நான்கு காட்சிகளாக்கப்பட்டுள்ளது. முதலில் சூர்ப்பனகை அழகிய பெண் வடிவிலும், இறுதியில் அரக்க வடிவிலும் காட்டப்பட்டுள்ளாள். சூர்ப்பனகையின் உருச்சிதைக்கும் இலக்குவன் அவள் தோள் மீது சிறுபிள்ளைப் போல சித்தரிக்கப்பட்டிருப்பது, அவளது பெரிய அரக்க உருவினை நுட்பமாக உணர்த்துகின்றது. அடுத்தது இராவணன் சீதையைக் கவர்ந்து செல்லும் கதைப் பகுதி. பத்துக் காட்சிகளாக இடம் பெறுகின்றது. மாரீசனின் பொய்மான் தோற்றமும், இராமன் வில்லால் எய்தல், இராவணன் வருகை, முனிவர் உருவில் சீதைமுன் தோன்றல், சக்கரங்களுடன் கூடிய தேரில் (புட்பக விமானம்?) இராவணன் நிற்க, முன்னால் சீதை அமர்ந்திருக்க தேரோட்டி ஓட்டுதல், சடாயுவுடன் போர், இறுதியில் பயணம் தொடருதல் ஆகியன சிற்பங்களாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. அடுத்து இலங்கையில் திரிசடை, சரமை சூழ அசோகவனத்தில் சீதை அமர்ந்திருக்கும் காட்சியும், பின்னர் இராம இலக்குவர் சுக்கிரீவனுடன் கொள்ளும் தொடர்பு, வாலி இறப்பு, தாரை புலம்பல் அங்கதன் வடிவம்

ஆகியன ஒரே காட்சியாக உள்ளன. மீண்டும் இலங்கையில், அனுமன் சீதையை அசோகவனத்தில் சந்தித்தலும், கணையாழி பெறுதலும், அதன்பின் இராம-இராவணன் போர், இராவணன் வீழ்ச்சி, மண்டோதரி புலம்பல், விபீடணன்-இராமன் இருக்கை ஆகியனவும், இராமன், இலக்குவன், சீதை ஆகியோர் சிவனை (லிங்கம்) வழிபடுவூதைத் தொடர்ந்து, ஆடலும், பாடலுமாக ஒரு காட்சியுடன் (அயோத்தி மகிழ்ச்சி) முதற்கதை முடிவதாக கருதலாம். இருப்பினும் தொடர்ந்து இலக்குவனும் சுமந்திரனும், சீதையை வான்மீகி தவப்பள்ளியில் விடுதல், அங்கு லவகுசர் பிறப்பு, லவகுசர் தம் கதையை (இராமாயணம்) வால்மீகியிடம் விரித்துரைத்தல், ஆகியனவும் இடம் பெறுகின்றன. இறுதியில் மரவுரி தரித்த நிலையில் கையில் வில்லுடன் மூன்று ஆடவரும், ஒரு பெண்ணும் இடம் பெறுவதாக ஒரு காட்சி உள்ளது.

புராணச் சிற்பங்கள் என்ற வகையில், சரபமூர்த்தி புராணக்கதை சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. நரசிம்மர் தூணில் இருந்து வரும் தோற்றம், யோக நரசிம்மராகிக் ஹிரண்யகசிபுவின் மார்பைப் பிளத்தல், பின்னர் நரசிம்மரை அமைதிப்படுத்தும் நோக்கில் சரபர் ஒடுக்கும் காட்சி ஆகியன இடம் பெறுகின்றன. இப்புராணக் காட்சிகளுக்கு இடையே, சிம்மமும் யானையும், மானும் யானையும் சண்டையிடும் காட்சிகளும், நடனக் காட்சிகளும் மாறிமாறி இடம் பெறுகின்றன. சிம்மமும் யானையும் போரிடும் காட்சி குறைந்தது நாற்பது இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கருவறை உபபீடத்தில் மேற்றிசையில் கொடிப்பெண் விநாயகர், சங்கநிதி, பதுமநிதி ஆகியனவும், வடதிசையில் பெரும்பாலும் நடனக் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. முன்னால் உள்ள தேர்வடிவ மண்டபத்தில் இன்று எஞ்சியுள்ள ஒரு சக்கரத்தில், பன்னிரு மாதங்களைக் குறிக்கும் 12 ஆரக்கால்களும், இடையே பன்னிரு சூரியர்களும் சிற்பங்களாக்கப்பட்டுள்ளனர்.

சரப மூர்த்தியும், திரிபுவன வீரதேவனும்

முன்பே குறிப்பிட்டபடி, முதற் திருச்சுற்றில் வடகிழக்கு மூலையில், தென்றிசை நோக்கியதாகச் சரபமூர்த்திக்கெனத் தனிச்சன்னதி இங்குள்ளது. ஹிரண்யனைக் கொன்றவுடன், தன் சினத்தினை அடக்க இயலாத நிலையில் இருந்த நரசிம்ம மூர்த்தியை அமைதிப்படுத்த உலகம் சிவனை வேண்ட, அவரும் மனிதன், பறவை, விலங்கு ஆகியவற்றின் உறுப்புகள் இணைந்த ஓர் உருவெடுத்து நரசிம்மரை அமைதிப் படுத்தியதாகப் புராண வரலாறு கூறப்படுகிறது. சரபம் என்பது, சிங்கத்தை வெல்லும் வல்லமை பொருந்திய எட்டுக்கால்களையுடைய பறவையைக் குறிக்கும். இருப்பினும் காமிகாகமம், உத்தர காரணாகமம் போன்றஆகமங்கள் சிவனின் இந்த வடிவத்தினை விவரிக்கின்றன. மனித உடல், சிம்ம முகம், இரு இறக்கைகள், நீண்ட வால், எட்டுக்கால்கள் ஆகியன உடையதாக இவ்வுருவம் அமையும் என்பது ஆகமங்கள்தரும் விளக்கம். ஸ்ரீதத்வ நிதி என்ற நூல், சரபர் 32 கைகளுடன் விளங்குவார் என்கிறது. பெருத்த, பயங்கரமான ஓசையுடன் விண்ணில் தோன்றிய சரபமூர்த்தி, நரசிம்மரை அடக்கி, அவரது தோலை ஆடையாகவும், அவரது தலையினைத் தன் மார்பிலணியும் அணிகலமாகவும், மகுடமாகவும் புனைந்துகொண்டார் என விவரிக்கப்படுகிறது. இந்தச் சிவமூர்த்தத்தினை எழுந்தருளுவிப்பதன் மூலம், ஒருவனின் எதிரிகள் அழிவர்; போர்களில் பெருவெற்றிகிட்டும்; நோய்கள் தீரும்; அனைத்து நன்மைகளும் கிட்டும் என்று உத்தர காமிக ஆகமம் கூறுகின்றது. சரஹோபநிசதம், 'சர' என்பது ஜீவன் அல்லது ஆன்மாவைக் குறிக்கும்; சரபரின் ஒளி பொருந்திய பாதங்கள்ஹரியே (விஷ்ணுவே), அவர் உயிர்களுக்கு மேனிலை உலகினைக் கொடுப்பார் என்று உரைக்கிறது. இந்த உபநிஷதமும் 108 உபநிஷதங்களுள்ஒன்றாகும்.

இத்தகைய சிறப்புகள் பொருந்திய சரபமூர்த்திக்கு திரிபுவனத்தில் தனிச்சன்னதி கட்டுவித்து, செப்புத் திருமேனியினையும் எழுந்தருள்வித்துள்ளான் குலோத்துங்கன். பிற்காலச் சோழர்களால் சரபமூர்த்தி வழிபாடு பெரிதும் போற்றப்பட்டதாகத் தெரிகிறது. விக்கிரம சோழன் எடுத்த துக்காச்சி கோயிலிலும் இவனது பாட்டனான இராசராசன்(II) எடுத்த தாராசுரம் கோயிலிலும், சரபமூர்த்திக்குத் தனிச் சன்னதிகள் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டம், திருக்கோஷ்டியூரிலும் சரபமூர்த்தியை எழுந்தருளச் செய்திருந்த குறிப்பு உள்ளது. திருவாரூர் கோயிலில் மேலைக் கோபுரத்தில் சரபமூர்த்தியின் சுதையுருவம் உள்ளதாக அறிகிறோம்.

திரிபுவனத்தில் உள்ள சரப மூர்த்தியின் செப்புத்திருமேனி 3 சிம்மக் கால்களுடனும், இடுப்புக்குக் கீழ் உடலும், முகமும் சிம்ம உருவிலும், நீண்ட வாலுடனும், 4 மனிதக் கைகளுடனும் விளங்குகிறது. முன் காலில் எட்டுக் கரங்கள் கொண்ட நரசிம்மரை பிடித்திருக்க, நரசிம்மன் இருகைகளைத் தலைமேல் கூப்பிய நிலையில் அபயம் என்று வணங்குவதாக உருவகிக்கப்பட்டுள்ளார். மேலிரு கரங்களில் மான் மழுவேந்தியும், கீழிரு கரங்களில் பாசமும்(?) அனலும் ஏந்திய வராகக் காட்சியளிக்கிறார். இச்செப்புத் திருமேனியை எழுந்தருள்வித்ததில் இருந்து, இம்மூர்த்தியின் வீதியுலாவுக்கும், திருவிழாவுக்கும் ஏற்பாடு செய்திருந்தான் என்பதும் உறுதியாகிறது. தனக்கு மூவுலக (மூன்று நாடுகள்) வெற்றியையும், திரிபுவன வீரன் என்ற பட்டத்தையும் அருட்பிரசாதமாக சரபரே அளித்தார் என்று நம்பி திரிபுவன வீரதேவன் வழிபட்டிருப்பானோ? தமிழகத்தில் சரபரின் செப்புத் திருமேனி இங்கு மட்டுமே உள்ளது என்ற தனிச்சிறப்பும் திரிபுவனவீரேச்சரத்திற்கு உண்டு.



குடந்தைக் கீழ்க்கோட்டம்

திரு.மா. சந்திரமூர்த்தி
மேனாள் துணை இயக்குனர். தொல்லியல் துறை, சென்னை.

குடந்தைக் கீழ்க்கோட்டம் எனும் திருக்கோயில் கும்பகோணம் பேருந்து நிலையத்திற்குச் சற்று தொலைவில் அமைந்துள்ளது. குடந்தையில் அமைந்துள்ள மிகப் பழைய கோயில்களில் இதுவும் ஒன்றாகும். "குடந்தைக் கீழ்க் கோட்டம்" என்பது இக்கோயிலின் பழைய பெயர். தற்போது "நாகேசுவரன் கோயில்" என்ற பெயரில் வழங்கி வருகிறது.

ஆதிசேடன், சூரியன் ஆகியோர் இத்தலம் வழிபட்டதாகப் புராணம் கூறும். ஆண்டுதோறும் சித்திரை 10,11,12 ஆகிய மூன்று நாட்களில் காலை 6.00 மணி முதல் 6.50 மணிக்குள் சூரியனின் ஒளிக்கதிர்கள் இலிங்கத் திருமேனியின் மேல் விழுவதும் சூர்ய பூஜை நிகழ்வதும் குறிப்பிடத்தக்க அரிய காட்சியாகும். இவ்வாலயத் திருச்சுற்றில் சூரியனுக்கென்று தனிச்சன்னிதி ஒன்றும் உள்ளது.

குடந்தைக் கீழ்க் கோட்டம்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமான் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார். இதனைக் குடந்தைக் கீழ்க்கோட்டம் எனப் போற்றியுள்ளார். அப்பர் சுவாமிகள் அருளிய திருத்தாண்டகப் பதிகங்கள் ஒவ்வொன்றும் குடந்தைக் கீழ்க்கோட்டத்தை, "குடந்தைக் கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே" என்று கூறுவது குறிப்பிட்டத்தக்கது.

ஆதித்தசோழன் - கற்றளி

இக்கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் செங்கற்கோயிலாகத் திகழ்ந்திருக்கவேண்டும். இக்கோயில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதித்தசோழனால் கற்றளியாக எடுப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கோயிலின் கருவறை, விமானம், அர்த்தமண்டபம் ஆகிய அங்கங்கள் ஆதித்தசோழன் காலத்துக் கட்டடக்கலையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இக்கோயில் உபானம் முதல், முதல் தளம் வரை கருங்கற் திருப்பணியாகும். அதன் மேலுள்ள கிரீவமும், சிகரமும், சீரிய சுதை வேலைப்பாடு கொண்டவை. கிரீவமும் சிகரமும் சதுர வடிவம் கொண்டவை. சிகரத்தைத் சுற்றியுள்ள கபோதங்களைத் தாங்கும் நிலையில் விமானம் தாங்கிகளும் எண் திசைக்காவலர்களும் சுதை வடிவில் காட்டப்பட்டுள்ளனர். கிரீவக்கோட்டத்தில் கிழக்கே உமாமகேசுவரரின் அமர்ந்த கோலமும், தெற்கே தட்சிணாமூர்த்தியும், மேற்கே திருமகள், நிலமகள் சூழ வைகுந்தநாதரும், வடக்கே தேவியர் சூழ நான்முகனும் சுதை வடிவில் காட்சியளிக்கின்றனர். இக்கோயில் முதல் தளத்தில் சாலைகளின் நடுவே வேலைப்பாடு மிக்க தெய்வ உருவங்களைக் காண்கிறோம். தெற்குக் கோட்டத்தில் ஈகத்தில் இளநகைத் தவழ வீணை மீட்டும் தென்திசைச் செல்வனைக் காண்கிறோம். பக்கங்களில் இசைக்கேற்ப நடமாடும் நாட்டிய உருவங்களையும் மேற்குக் கோட்டத்தில் ஐந்துதலை அரவத்தின் கீழ் தனித்து அமர்ந்துள்ள வைகுந்தநாதரையும் காணலாம் பக்கங்களில் மண்டியிட்டுக் கைகளை நீட்டி முத்திரைக் காட்டும் சிவகணங்களின் சிறிய உருவங்கள் எழில் கூட்டுவன. வடதிசையில் நான்முகன் நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் அருள் வழங்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. இடையிடையே உள்ள மாடங்களில் அழகிய ஆண்களும், பெண்களும், நாட்டிய மகளிரும் காட்டப்பட்டுள்ளனர். முதல் தளத்தில் கபோதகத்தை அலங்கரிக்கும் நாசிகளில் கூட எழில்மிகு சிற்பத் தலைகள் செதுக்கப்பட்டுள்ளன.

கல்லிலே கலை

இவ்வாறு கல்லிலே கலை நிறைந்த சிற்பங்களைத் தோற்றுவித்த சோழர்காலச்சிற்பிகள் கருவறையின் கோட்ட மாடங்களில் பெரும் தெய்வ உருவங்களையும் இடையிடையே பேரழகு மிக்க இளவரசர், இளவரசி, அமைதியில் விளங்கும் பௌத்த துறவிகள், வீரர்கள் முதலிய சிற்ப

உருவங்களையும் வியக்கதகும் வகையில் தோற்றுவித்துள்ளனர். தெற்குக் கோட்டத்தில் தட்சிணாமூர்த்தியும் மேற்கில் விடையின் மீது சாய்ந்த நிலையில் அர்த்தநாரியும், வடக்கில் நான்முகன் நின்ற கோலமும் சிற்ப வடிவில் காண்கிறோம். இவற்றில் தட்சிணாமூர்த்தியின் உருவம் காலத்தால் பிற்பட்டது.

மடந்தைபாகனார் கோயில்

மாதொருபாகனான அர்த்தநாரியின் வடிவம் ஆதித்தன் காலத்துக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. வலப்புறம் சிவனும், இடதுபுறம் உமையுமாக நின்ற கோலத்தில் இவ்வுருவம் காட்சியளிக்கிறது. வலப்பாகத்திலுள்ள சிவனது, மேல்கை நீண்ட மழுவைப் பற்றியுள்ளது. இடப்பாகத்திலுள்ள உமையின் கரம் வட்டமான கண்ணாடியைப் பிடித்துள்ளது. அணிகளும், ஆடைகளும் அங்க அமைப்பும் இறைவனுக்கும் - இறைவிக்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளது. இச்சிற்பத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்று மாதொரு பாகனாகத் தோன்றும் சிவன் இங்கு விடையோடு தோன்றுவது. கருவறையின் மேற்குக் கோட்டத்தில் அர்த்தநாரியைத் தோற்றுவிக்கும் பண்டைய வழக்கை இச்சிற்பம் நமக்கு மெய்ப்பிக்கிறது. கி.பி.15-ஆம் நூற்றாண்டில் இக்கோயில் மடந்தைபாகனார் கோயில் என்ற பெயரில் வழங்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்தத் துறவி

அர்த்தமண்டபப் புறச்சுவரிலிருந்து வருவோமானால் முதலில் அருள் வழங்கும் நிலையில் இளந்துறவியின் மெலிந்த கோலமும், அடுத்தக் கோட்டத்தில் சுருண்ட கேசமும், நீண்ட தொள்ளை காதுகளும், அகன்ற மார்பும் இடது தோளில் அங்கியும், இடையில் மடிப்புடன்கூடிய ஆடையும் அணிந்து நிற்கும் முதிர்ந்த பௌத்தத்துறவியின் நின்றகோலமும் அவர்கள் முகத்தில் தோன்றும் ஆழ்ந்த அமைதியும் பார்ப்போர் கவனத்தை ஈர்த்துச் சிந்திக்க வைக்கின்றன. இவற்றால் பண்டைய சமயக் கோட்பாடுகளையும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்து சமயத்தின் தனித்தன்மையும் நன்கு உணரலாம்.

அழகிய அணங்கு

அடுத்துள்ள கோட்டத்தில் அழகிய பெண் அணங்கு இடக்கையில் மலர் ஏந்தி வலக்கையைத் தொடை மீது வைத்து கொண்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். அடுத்து தட்சிணாமூர்த்தியின் இடதுபுறம் அழகே உருவான பேரழகின் தோற்றம் பெண்ணுருவில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. இவளது இடக்கை தொடையிலும் வலக்கை வழங்கும் முத்திரைக் காட்டியும் அமைந்திருக்கக் காண்கிறோம். மலர்ந்த பூக்களையுடைய இவளதுதலைக் கோலமும், பொலிவான முகமும், உயர்ந்த புருவமும், நீண்ட மூக்கும், குவிந்த உதடுகளும், கீழ் நோக்கி முறுவலிக்கும் பார்வையும், இடையழகும், மேலாடையற்ற மேனியின் பருவ அழகும் நெஞ்சத்தைக் கவர்வன. இச்சிற்பம் முற்காலச் சோழகர் கால அரசமாதேவியின் உருவை நினைவூட்டுகின்றன.

எழில்மிகு சிற்பங்கள்

அவ்வாறே வனப்புடைய மற்றொரு இளநங்கை கையில் தொடி அணிந்து மேற்கையில் கல் பதித்த கேயூரம் பூண்டு, கழுத்திலும், மார்பிலும் வேலைப்பாடு மிக்க கழுத்தணிகளையும் ஆரங்களையும் அணிந்து வலக்காலை முன் வைத்து நடந்து வரும் கோலத்தில் காட்சியளிக்கிறாள். மேற்கு மாடத்தில் மணி வேலைப்பாடு மிக்க தலைப்பாகை அணிந்து முகத்தில் மீசை தரித்து வலக்கையால் எச்சரித்தவண்ணம் நிற்கும் வீரனின் உருவமைப்பைக் காணலாம். இவ்வாறே கையில் தாமரை மலர் ஏந்தி உடலை வலப்புறம் திருப்பி நிற்கும் அரசகுமாரனின் நின்ற கோலம் கண்ணைக் கவர்கிறது. அடுத்து அனல் வடிவில் நீண்ட தலைப்பாகை அணிந்து நிற்கும் ஆணின் நின்றகோலம் காட்சி அளிக்கிறது. இவ்வாறு

எல்லாக் கோட்டங்களிலும் பேரழகு மிக்கச் சிற்பங்ளைக் காண்கிறோம்.

இராமாயணச் சிற்பங்கள்

இப்பெண் சிற்பங்களைச் செதுக்கிய சோழர் காலச் சிற்பிகள் அதிட்டானத்தின் கண்டப் படைகளில் சிறுசிறு சிற்பங்களையும் செய்து தம் திறனை வெளிப்படுத்தியுள்ளனர். அதிட்டானத்தில் கண்டப்படைகளில் உள்ள இராமாயணச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இராமன், இலக்குவணன், சீதையை, குகன் படகில் அழைத்துச் செல்வது, வாலி-சுக்ரீவன் சண்டை முதலிய சிற்பங்களைக் காணலாம். இராமாயணச் சிற்பங்கள் ஆதித்தசோழன் காலத்துக் கோயில்களில் தொடர் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளதற்கு இக்கோயில் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

இக்கோயில் முதல் திருச்சுற்றை வலம் வருவோமானால் ஸ்ரீபிரளயகால ருத்திரர், ஸ்ரீவலம்சுழிவிநாயகர், ஐயனார், சுப்ரமணியர், வள்ளி, தெய்வயானை, கஜலட்சுமி, சண்டிகேசுவரர், வைத்தீசுவரர், சூரியன், படைவேட்டு அம்மன் ஆகிய தெய்வ உருவங்களைக் கண்டுகளிக்கலாம்.

சூரியன் சன்னிதி

இக்கோயிலில் சூரியனுக்கென்று தனிச்சன்னிதி எழுப்பப்பட்டுள்ளது தனிச்சிறப்புகளில் ஒன்று. இச்சன்னதி மேற்றிசை நோக்கி அமைந்துள்ளது. இரு கைகளில் தாமரை ஏந்தி நிற்கும் சூரியனைக் கருவறையில் காண்கிறோம். சூரியன் தலையில் பின்புறம் ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. கருவறை வாயிலின் இருபுறமும் தாமரையும், அல்லியையும் ஏந்தி நிற்கும் சூரியன் - சந்திரன் ஆகிய இருவரின் உருவங்களையும் காணலாம். கருவறையிலுள்ள சூரியன் கி.பி.9 -ஆம் நூற்றாண்டைச் சார்ந்துள்ளது. ஆதித்தசோழன் காலத்தியது. ஒரு தளக்கோயிலான இதன் கருவறைப் புறச்சுவர்களில் தாமரை மற்றும் சூரியனின் பல்வகை வடிவங்களைக் காணலாம்.

கங்கை கொண்ட விநாயகர்

முதலாம் ராஜேந்திரன் தன் கங்கை வெற்றியின் நினைவாகத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த சிற்பங்களில் இவ்வுருவம் குறிப்பிடத்தக்கது. இது பாலர் காலக் கலைப்படைப்பாகும். கி.பி.1025க்கு முற்பட்டது. இவ்வுருவம் மலர்ந்த தாமரையைப் பீடமாகக் கொண்டு, நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது.

விநாயகரின் வலக்கை ஒடிந்த தந்தத்தைப் பிடித்துள்ளது. இடக்கை இனிப்பு உருண்டைகள் நிறைந்த தட்டைத் தாங்கி நிற்கிறது. இடம்புரியாக வளைந்த துதிக்கை இனிப்பு உருண்டையைப்பற்றி உள்ளது. இடக்கை நீண்ட கதாயுதத்தைக் கொண்டு அமைந்துள்ளது. விநாயகரின் காலடியின் இருபுறமும் இருவர் பலாப்பழத்தை தாங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளனர். விநாயகரின் வலது காலின் முன்புறம் அவரது வாகனமான மூசிகம் தலையை மேலே தூக்கிய நிலையில் அமர்ந்துள்ளது.

விநாயகரின் பின்புறம் வேலைப்பாடு மிக்கக் கல்திருவாசி இணைக்கப்பட்டுள்ளது. திருவாசி பக்கங்களில் இரு யானைத்தலைகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் துதிக்கைகள் அமுதக்கலசத்தைத் தாங்கி நிற்கின்றன. திருவாசியின் பக்கங்களை ஒட்டி இரு கந்தர்வர்கள் பூக்குடலை ஏந்திப் பூச்சொரிகின்றனர். மேல்இருபக்கங்களில் மேகக் கூட்டங்களின் நடுவே மாலை ஏந்திய நிலையில் கந்தர்வர்கள் இருவர் படுத்த நிலையில் மிதந்து வரும் நிலையில் காட்டப்பட்டுள்ளனர். கந்தர்வக் கன்னிகள் இருவர் அவர்கள் மீது அமர்ந்து பவனி வருகின்றனர். திருவாசியின் மேல்முனையில் சிம்மமுகம் காட்டப்பட்டுள்ளது. கருப்புக்கல்லால் செதுக்கப்பட்டுள்ள இச்சிற்பம் இக்கோயில் முகமண்டபத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள சிறு சன்னிதியில் உள்ளது.

கல்தேர்

நடராஜர் மண்டபம் இக்கோயில் இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்து உள்ளது. இதனைக் கூத்தாண்டார் கோயில் என்று கூறுவர். தேர் வடிவிலுள்ள இம்மண்டபத்தை குதிரைகளும், யானைகளும் இழுத்துச் செல்வதுபோல் அமைக்கப்பட்டுள்ளது.

மண்டபத்தின் முகப்பிலுள்ள படிகளின் இருபுறமும் இருபெருங்கல் யானைகள் முன்நோக்கி விரைந்துச் செல்லும் நிலையில் காட்டப்பட்டுள்ளன. யானையின் மேலுள்ள வேலைப்பாடு மிக்க அம்பாரியில் அரசனும் யானையை ஓட்டிச்செல்லும் பாகனும் காட்டப்பட்டுள்ளனர். உறுதியான நீண்ட தந்தத்தையும் முறுக்கேறிய துதிக்கையையும் வலவான கால்களையும் திண்மையான உடல்வாகுடன் பெருத்த மத்தகத்தையும் கொண்ட யானை வீறு கொண்டு செல்லும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. யானையின் வளைந்த துதிக்கை அழகிய இளைஞனை வறைத்து நிற்கிறது. கீழ்புறம் உள்ள யானையின் துதிக்கையில் கனத்த மீசையைக் கொண்ட வீரனின் உருவம் சிக்குண்டு நிற்கிறது. இந்தயானையின் முன் இடக்காலில் அழகிய பெண்அணங்கு மிதியுண்டு அபயக்குரல் எழுப்புகிறாள்.

அவ்வாறே இம்மண்டபத்தின் பின்பக்கங்களில் இருபெரும் யானைகளின் உருவங்கள் காட்டப்பட்டு உள்ளன. யானை மீது இளவரசர்கள் உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. இவ்விருயானைகளின் துதிக்கைப் பிடியிலும் வீரர்கள் காட்டப்பட்டுள்ளனர். சோழர்காலத்தைச் சார்ந்த இக்கல் யானைகளின் மேல் மராட்டியர் காலத்தில் சுதையும் வண்ணமும் பூசப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் இருபுறமும் இருபெரும் தேர்ச்சக்கரங்கள் கல் அச்சில் பொருத்தப்பட்டுச் சுழலும் நிலையில் இயற்கையாகக் காட்டப்பட்டுள்ளது. இத்தேர்க்கால்கள் 8 அடி விட்டம் உடையது. இக்கால்களில் ஆரங்களுக்கு நடுவே 12 ஆதித்தியர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

இச்சக்கரம் முழுதும் மராட்டியர் காலத்தில் வண்ணம் பூசப்பட்டுத் திகழ்ந்துள்ளது. இவ்வண்ணப் பூச்சுகளின் எச்சங்களை ஆங்காங்கே காண்கிறோம். 8 அடி விட்டமுள்ள இச்சக்கரமும் ஒரேகல்லில் அமைந்து பார்ப்போரை வியப்பில் ஆழ்த்துகிறது.

பாய்ந்துச்செல்லும் புரவிகள்

இச்சக்கரத்தின் முன்புறம் மண்டபத்தை இழுத்துச் செல்லும் நிலையில் பாய்ந்துச் செல்லும் இருகற்குதிரைகளைக் காண்கிறோம். வீறுகொண்டு விரைந்துச் சொல்லும் இக்குதிரைகளின் வேகத்தைக் குறைக்கும் நிலையில் கடிவாளம் முகத்தில் காட்டப்பட்டுள்ளது. கனைக்கும் குதிரையின் முகபாவமும், பக்கங்களில் வெறிக்கும் திறந்த கண்களும், நிமிர்ந்த கொண்டிடப்பூவும், மேல் நோக்கி விரிந்தக் காதும், நீண்டஉடல்வாகும், வலுவானக் கால்களும், கத்தையாக நீண்டுத் தொங்கும் வாலும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. உயிருள்ள குதிரை பாய்ந்து வருவது போன்று பார்ப்போரை வியக்க வைக்கிறது. தொலைநோக்குப் பார்வைக்குக் கல்தேர் நகர்ந்து வருவது போன்ற பிரம்மிப்பை ஏற்படுத்துகிறது.

இம்மண்டபத்தின் அதிட்டானங்களின் இடையேயுள்ள கண்டப்பகுதிகளில் பலவகை நாட்டியப் பெண்கள் நடனமாடும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கண்டத்தில் நடனமாடும் பெண்களை அடுத்து ஆடவல்லபெருமான்ஆனந்தக் கூத்தாடுவதும், அருகில் அன்னை சிவகாமி அதனைப் பார்த்து களிப்பதும், மகிழ்வு பொங்க நிற்கும் அதிகார நந்தியின் வடிவமும் நேரில் கண்டு களிக்க தக்கவை. இதனை தொடர்ந்து 12 அடியார்கள் வரிசையாக வணங்கி நிற்கும் காட்சியைக் காண்கிறோம். இவ்வாறு மேல் திசையிலும் உடலை எழிலாக

வளைத்துக் கைகளை மடக்கி முத்திரைக்காட்டி நடனமிடும் மங்கையரைக் காணலாம்.

இம்மண்டபத்தின் கருவறைப்பகுதியில் கோபாலன் குழலூத, சிவகாமி தாளமிட, குடந்தைக் கூத்தர் ஆனந்தத் தாண்டவமாடும் அழகிய திருக்கூத்தை சிலை வடிவில் கண்டு களிக்கலாம். கூத்தாடும் இப்படிமம் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. குடந்தைக் கூத்தருக்குப் பிற்காலத்தில் தனிமண்டபம் எடுப்பித்துச் சிறப்பித்துள்ளனர். யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலியோரின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கூத்தாண்டார் மண்டபத்தின் முன் வரிசையில் இரு சிம்மத் தூண்கள் அலங்கரிக்கின்றன.

ஊர்த்துவ தாண்டவ மண்டபம்

கூத்தாண்டவர் மண்டபத்தின் எதிர்புறம் ஊர்த்துவ தாண்டவ மண்டபம் உள்ளது. இரண்டாம் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. கிழக்குப் பார்த்த இச்சன்னிதியின் கருவறையில் முயல்கன் மீது வலதுகாலை ஊன்றி இடதுகாலைத் தலைமீது தூக்கிப் பத்துக் கரங்களில் தாண்டவம் ஆடும் ஊர்த்துவதாண்டவ மூர்த்தியின் சுதைச்சிற்பத்தைக் காண்கிறோம். பத்துக் கரங்களில் வலது மேற்கை தலையின் உச்சியைத் தொடுகிறது. இடது காலும் உச்சி வரை உயர்ந்து நிற்கிறது. கீழ் இருகைளைத் தொடைகளுக்கு நடுவே கொண்டு உடுக்கையையும், பிரம்பையும், பிடித்துத் தாளம் போடுகிறார். இதனை ஊர்த்துவதாண்டவம் என்றும் லதாவிரிசிகத்தாண்டவம் என்றும் கூறுவர்.

இச்சன்னிதியின் முகமண்டபம் வேலைப்பாடு மிக்கசிற்பத்தூண்களைக் கொண்டு விளங்குகிறது. சிற்பத்தூண்களில் அதிட்டானம், சுவர், கால், கபோதகம், விமானம் போன்ற சிற்றாலயத்தின் அங்கங்களும், கூடுகளும், சாலைகளுக்கு இடையிடையே பல்வகைச் சிற்ப உருவங்களும், நடனக் கோலங்களும் நிறைந்திருக்கக் காண்கிறோம். வேலைப்பாடு மிக்க இந்நான்கு தூண்களும் மரவேலைப்பாடு கொண்ட விதானத்தைத் தாங்கி நிற்கின்றன. விதானத்தின் உட்கூடுகள் வலுவான சாத்துகளும், இடையிடையே மரச்சட்டங்களும், யாளிகளும் பூமுனைகளும் செறிந்த வேலைப்பாடுகளுடன் விளங்கக் காண்கிறோம். இம்மண்டபக் கீழ்ச்சுவரில் கீழ்க்காணும் கல்வெட்டு உள்ளது.

1. கலியுகாதி சிவமயம் ருசூஉயஎ.அஷ்யளு புரட்டாசி மீ உ
2. தஞ்சாவூர் ஜில்லா பாடகச்சேரி ஸ்ரீல ஸ்ரீல ராமலிங்கஸ்வாமி
3. கள்வேண்டுகோளின்படி இராமநாதபுரம் ஜில்லா ஷண்முக
4. நாதபுரம் சிவமதம்நாட்டுக்கோட்டை செட்டி ஜாதி மெ.மெ
5. மெய்யப்ப செட்டியார் முத்துக் கருப்பி ஆச்சி கனிஷ்ட்ட
6. குமாரர் ராமஸாமி செட்டியார் செய்து வைத்த
7. உபயம் 18.09.1926.

பத்ரகாளி அம்மன்

ஊர்த்துவதாண்டவர் எதிர்புறம் சுற்றுமதிலை ஒட்டி பத்ரகாளியின் நின்ற கோலம் சுதை வடிவில் காட்சியளிக்கிறது. எண்கரங்களில் வாள், கேடயம், கத்தி திரிசூலம், மணி, கபாலம் முதலிய ஆயுதங்களை ஏந்தி இரு கால்களையும் தரையில் ஊன்றி நடனமாடும் கோலத்தில் காட்டப்பட்ட நிலையிலுள்ளது. காலின் இருபுறமும் இரு பணிப்பெண்கள் காட்டப்பட்டுள்ளர். ஊர்த்துவதாண்டவ மூர்த்தி போன்ற நின்று நடனமிடும் காளியின் கோலமும் சுதையால் ஆனது. இவை கி.பி.18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

கவின்மிகு சிற்பங்களுடன் கலைக்கோயிலாகவே எழுப்பப்பட்டுள்ள கீழ்க் கோட்டத்துச் சிற்பங்களை நேரில் கண்டு இன்புற வேண்டியது கண்களுக்கு கிட்டியபேறு எனக்கருதி ஒவ்வொருவரும் இக்கோயிலை வலம் வரவேண்டும்.

திருவலஞ்சுழி சேத்ரபாலர் கோயில்

டாக்டர் ஆ. பத்மாவதி, தொல்லியல் துறை, சென்னை

திருவலஞ்சுழி, கும்பகோணத்திலிருந்து ஆறுகிலோமீட்டர் தொலைவில் மேற்கில் உள்ளது. இவ்வூரிலுள்ள புகழ்பெற்ற கபர்தீஸ்வரர் கோயிலின் தோப்பில் ஒரு சிறிய கோயில் சேத்ரபால பிள்ளையாருக்கு எடுக்கப்பட்டது. இக்கோயில் வாயிற் கோபுரத்தின் இடதுபுறம் கோயிலின் தென்கிழக்கு மூலையில் தென்னந்தோப்பில் அமைக்கப்பட்டிருக்கிறது.

முதலாம் இராஜராஜசோழனின் 25ஆம் ஆட்சியாண்டில் கி.பி. 1010ல் அவனது அரசி தந்தி சக்திவிடங்கியாரால் இக்கோயில் கட்டப்பட்டது. இராஜராஜன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலில் 'நாம் எடுப்பித்த திருக்கற்றளி' என்று கூறியது போல இதே அரசி தந்திசக்தி விடங்கியார் திருவையாறு பஞ்சநதேஸ்வரர் கோயிலை எடுத்து, 'நாம் எடுப்பித்த திருக்கற்றளி' என்று கூறியதுபோல இச்சேத்ரபாலர் கோயில் கல்வெட்டிலும்,

''உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் மஹாதேவியார் தந்திசக்திவிடங்கியாரான ஸ்ரீ ஓலோக மஹாதேவியார் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குட மூக்கின்பால் திருவலஞ்சுழி நாம் எடுப்பித்த திருக்கற்றளிப் பிள்ளையார் சேத்ரபால தேவர்'' என்று கூறப்பட்டுள்ளது. இச்சிறிய கோயிலை கட்டிய செய்தியையும் மிகப் பெருமையுடன் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

இக்கோயிலை எடுத்த இராஜராஜசோழனின் அரசியும் இரு மகள்களும் முதலாம் இராஜேந்திர சோழனின் தேவியாரும் இக்கோயிலுக்கு தானமளித்திருப்பதை நோக்க அரண்மனைப் பெண்டிர் இக்கோயிலை முக்கியமானதாகவும் தங்கள் சேத்ரத்தைக் காவல் புரியுமாறு வேண்டினர் என்றும் கருத முடிகிறது. உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருமகளார் விமலாதித்த தேவியார் மஹாதேவியார் ஸ்ரீ குந்தவை நங்கையாரும் மற்றொரு மகள் நடுவில் பெண் பிள்ளை நங்கையார் மாதேவடிகளும் தந்தி சக்திவிடங்கியாரும் ஏராளமான பொன் ஆபரணங்களை இக்கோயில் சேத்ரபால தேவருக்கு அணிவித்து மகிழ்ந்திருக்கின்றார்கள்.

ராஜராஜனும், ராஜேந்திரசோழனும் அவர்கள் தேவியரும் சேத்ரபால தேவர் திருவடிகளை அட்டித் தொழுத பொற்பூக்கள், கள்ளிப்பூக்கள் 36 மற்றும் 30, தவளை வாய் ஒன்று, சவக்கம் ஒன்று, சவக்கத்தில் தாலி, முத்தில் கோத்த மாங்காய் 2, அரசிலை ஒன்று ஊர்த்துவகேசம் உள்பட திருமுடி ஒன்று, வளையல் போன்ற ஏராளமான பொன்னாபரணங்களை வழங்கி மகிழ்ந்திருக்கின்றனர்.

இச்சிறிய சேத்ரபாலர் கோயில் கருவறை, முகமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கருவறையில் சேத்ரபாலர் மிகவும் நேர்த்தியாக எடுப்பான தோற்றமுடையவராக மிகவும் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறார். அவரது ஜடாபாரம் ஜ்வாலா மகுடமாகக் காணப்படுகிறது. தெய்வீக அழகு மின்னும் முகமும், கோரைப்பற்களும் அத்தெய்வத்தின் தன்மையை எடுத்தியம்புகின்றன. செவிகளில் மகர குண்டலங்கள் அணி செய்கின்றன. கழுத்தில் சரப்பளி என்ற அணிகலன் உள்ளது. புரிநூல் முண்ட மாலையாகக் காட்சியளிக்கின்றது. உதர பந்தமும் இடையில் சிறு மணிகள் கோத்த அரைஞாணும், அதன் கீழே பாம்பு அரைஞாணும் காணப்படுகின்றன. நீண்ட மணிகள் கோத்த மாலை ஒன்று தோள் முதல் கணுக்கால் வரை நீண்டுள்ளது. கால்களின் பின்புறத்திலிருந்து வளைந்து வரும் அரவம் காணப்படுகிறது. அவரது எட்டு கரங்களில் முன்னிரு கரங்களும் உடைந்துவிட்டன. வலக்கரங்களில் அம்பு, பாசம், கத்தி, சூலம் ஆகிய ஆயுதங்களும், இடக்கரங்களில் வில், மணி, கபாலம்? (உடைந்துள்ளது) மணி ஆகியவையும் காணப்படுகின்றன. இச்சிலை யோனிபீடத்தில் நிற்கின்றது. அபிஷேக நீர் செல்ல பீடத்தில்



வழிவிடப்பட்டிருக்கிறது. இக்கோயிலின் தேவ கோஷ்டங்களில் சிவனின் பல்வேறு உருவங்கள் அமைக்கப் பட்டிருந்தன. தஞ்சை பெரிய கோயில் விமானத் தினின்றும் மாறுபட்டு வேசர வடிவில் அமைந்திருந்தது.

தற்போது இக்கோயில் முற்றிலும் அழிந்து விட்டது. இங்குள்ள சிற்பங்களும் தஞ்சாவூர் ஆர்ட் கேலரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. இக்கோயில் சேத்ரபாலதேவர் தற்போது இச்சிதைந்த கோயிலிலிருந்து தஞ்சாவூர் மணிமண்டபத்திலுள்ள இராஜராஜன் அருங்காட்சியகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாக்கப்படுகிறார்.

இராஜராஜன் தஞ்சை பெரியகோயிலைக் கட்டி முடித்து அவனது 25-ம் ஆட்சியாண்டு 275-வது நாளில் குடமுழுக்கு விழா செய்தான். அந்த வருடம் கி.பி. 1010 ஏப்ரல் மாதமாகும். அதே ஆண்டில் தான் அவனது அரசி தந்திசக்தி விடங்கியாராகிய ஓலோக மாதேவியார் திருவலஞ்சுழி கோயில் வளாகத்தில் சேத்ரபால தேவருக்குத் தனிக்கோயில் அமைத் திருக்கிறார்.

முதலாம் இராஜேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டினைச் சேர்ந்த கல்வெட்டொன்றில் தந்தி சக்தி விடங்கியார் இக்கோயில் சேத்ரபால தேவருக்குக் கொடுத்த பொற்பூக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இராஜராஜ சோழனின் 29-வது ஆட்சியாண்டில் இராஜராஜனும் தந்திசக்தி விடங்கியாரும் திருவிசலூர் மஹாதேவர் கோயிலில் ஹிரண்ய கர்ப்பம் செய்த பொன்னிலிருந்து அத்தேவி தான் எடுப்பித்த இச்சேத்ரபால தேவருக்கு இரண்டு பொற்பூக்கள் செய்து பரிசளித்திருக்கிறார்.

தந்தி சக்தி விடங்கியார் பரிசளித்துள்ள இப் பொற்பூக்கள் தொடர்பான செய்தி இராஜராஜன் கல்வெட்டில் கூறுப்படாமல் இராஜேந்திர சோழன் கல்வெட்டில் கூறப்பட்டிருப்பதேன்? ராஜராஜன் அப்போது உயிருடன் இல்லை என்று தானே பொருள். அதாவது கி.பி. 1015-ல் இராஜராஜன் உயிருடன் இல்லை எனலாம்.

இராஜேந்திர சோழனின் மற்றோர் கல் வெட்டும் இக்கோயிலில் காணப்படுகின்றது. மூன்றாம் ஆட்சியாண்டு நாள் 221-ல் மன்னன் செய்த தானத்தைக் குறிப்பிடுகிறது. திலபர்வதம் புக்கருளி ஸ்ரீ சேத்ரபால தேவருக்கு பன்னிரண்டு பொற் பூக்களை ஸ்ரீ பாத புஷ்பமாக அட்டித் திருவடி தொழுதிருக்கிறான். அப்பூக்கள் கோயிலுக்கு அளிக்கப்பட்டன. அதே ஆண்டு நாள் 227-ல் இராஜேந்திர சோழனின் அரசியார் வளவன் மகாதேவியார் ஒரு பொற்பூவைத் தானமளித் திருக்கிறார்.

''தில பர்வதம் புக்கருளி''

என்பதில் - திலம் என்றால் எள், பர்வதம் என்றால் மலை என்று பொருள். என்னால் செய்யப்பட்ட ஒரு மலையில் புகுந்து செய்த ஒரு சடங்கையே இக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இச்சடங்கு பற்றி லிங்கபுராணத்தில் விளக்கப் பட்டிருக்கிறது. அதாவது, தில பர்வத தானம் செய்ய நினைப்பவர் தனது கைகளால் பத்து முழ நீளமுள்ள இடத்தில் தண்ணீரைத் தெளிக்க வேண்டும். பின்னர் இச் சடங்கைச் செய்யும் பிராமணன் பஞ்ச கவ்ய நீரை அதன் மேல் தெளிக்க வேண்டும். தானம் செய்பவர் இதன் மேல் யந்த்ர சக்கரங்களை வரைய வேண்டும். பின் துணியால் அச்சக்கரம் மூடப்பட்டு அதன் மேல் அழகிய மலர்கள் தூவப்படும். அதில் எள்விதைகளை மலை போல் குவித்து வைக்க வேண்டும். இந்த எள் குவியல் தானம் செய்பவரின் உயரத்தைவிடக் குறைவாக இருத்தல் கூடாது. அவர் உயரத்திற்குக் குவிக்கப்பட வேண்டும். இந்த எள் மலையின் மீது புதுத்துணியால் மூடவேண்டும். சிவ வழிபாட்டிற்காக ஆயிரம் கலசங்கள் வைத்து



வழிபடவேண்டும். இதில் ஒரு கலசம் பிரதானத் தெய்வமாகிய உமாபதியாகப் பாவிக்கப்பட்டு எள் மலையின் நடுவில் வைத்து வழிபடப்பட வேண்டும். இதைச் சுற்றிலும் திசைக்காவல் தெய்வங்கள் எட்டு திசைகளிலும் அமைக்கப்படும். அத்தெய்வங்கள் ஒவ்வொன்றும் மும்மூன்றுத் தங்கத்துண்டுகளால் நிறுவப்பட்டு ஹோமங்கள் செய்யப்படும்.

எள் மலையின் வடிவமாக இறைவன் அங்குள்ளார் என்றும் முறைப்படி அனைத்து வழிபாடுகளும் நடந்து முடிந்த பின்னர் இறைவன் அங்கிருந்து அகன்று விடுவார் என்றும் கருதப் பட்டது. துலாபார நிகழ்ச்சியில் தானம் செய்வது போலவே இங்கும் தானம் வழங்கப்படும் இந்த எள் மலையும் அதில் நிறுவப்பட்டிருக்கும். தங்கக்கட்டிகளும் சுருதிகள் வல்ல ஒரு ஏழை பிராமணனுக்கு தானம் வழங்கப்படும். அத்தனை அறத்தானங்களிலும் இத்தானமே மிகப்பெரிய தானம் என்று கூறுகிறது லிங்க புராணம்.

இது போன்றதொரு சடங்கையும் தானத்தையும் தான் இராஜேந்திர சோழன் செய்திருத்தல் வேண்டும்.

''தில பர்வதம் புக்கருளி'' என்று கூறப்பட்டிருப்பதால் இராஜேந்திரன் எள் மலையில் புகுந்து வந்து சடங்கு செய்திருக்கிறான். ஹிரண்ய கர்ப்பச்சடங்கின் போதும் கர்ப்பத்தினுள் புகுந்து வெளிவரும் நிகழ்ச்சி நடத்தப்பெறும். இவ்விரு சடங்குகளும் சேத்ர பாலதேவரோடு தொடர்புடையதாக இருந்தி ருக்கிறது. ஹிரண்ய கர்ப்பம் செய்த தந்திசக்தி விடங்கி அதே பொன்னில் பொற்பூக்கள் செய்து சேத்ரபாலருக்கு அளித்த செய்தியும் திலபர்வதம் புகுந்து இராஜேந்திரன் பொற்பூக்கள் அளித்த செய்தியும் கூறப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. ஹிரண்ய கர்ப்பம் புதுப்பிறவி எடுத்து ஆயுள் நீடிக்கவேண்டி செய்யப்படுவது போல திலபர்வதச் சடங்கும் அதற்காகச் செய்யப்படும் சடங்காகவே தோன்றுகிறது. இச்சடங்குகளோடு சேத்ரபாலருக்கு உள்ள தொடர்பு எதுவாக இருக்கும்?

அகோர வழிபாட்டில் அக்னிக்கு யாகசாலை அமைக்கப்படுகின்ற போது யந்த்ர சக்கரங்கள் அமைக்கப்பட்டு, அதில் ருத்ரன், தாய் தெய்வங்கள், யக்சர்கள், அசுரர்கள், கோளங்கள், ராக்சசர்கள், நட்சத்திரங்கள், விஸ்வர்கள் மற்றும் சேத்ரபாலர்கள் ஆகியோரை அமைத்து வழிபாடு செய்யப்படும். எனவே சேத்ரபாலர் அகோர வடிவானவர் என்பது அவரது உருவ அமைதியின் மூலமும் லிங்க புராணத்தின் மூலமும் பெறப்படுகிறது.

சிவனின் அகோர வடிவமான சேத்ர பாலதேவர், ஹிரண்ய கர்ப்பம் புகுதல், திலபர்வதம் புகுதல் போன்ற மறுபிறவித் தொடர்பான ஆயுளை நீடிக்கச் செய்யும் சடங்கின் மூலம் வழிபடப் பட்டிருப்பதால் சிவனைக் கூற்றுவனாகச் சித்தரிக்கும் உருவம் என்று கொள்வதில் தவறில்லை. அதனாலேயே தங்கள் சேத்ரத்தையும் உயிரையும் காத்து ஆயுளை நீடிக்கச் செய்யும் பொருட்டு சேத்ரபாலதேவர் வழிபாடு செய்யப் பட்டிருக்கிறார் என உறுதியாக நம்பலாம்.

அவனிபாஜன பல்லவேசுவரச் சிற்பங்கள்

மு.நளினி, இரா. கலைக்கோவன்
டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் அமைந்துள்ள சீயமங்கலத்தை அடையத் திண்டிவனம் வந்தவாசிச் சாலையில், தெள்ளாறுவரை பயணித்து, அங்கிருந்து ஏறத்தாழ எட்டுக் கிலோமீட்டர் தொலைவிலுள்ள தேசூரை அடையவேண்டும். தேசூரிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது பின்தங்கிய சிற்றூரான சீயமங்கலம். ஊரின் புறத்தே, சற்றுத் தொலைவிலிருந்து பார்த்தாலே அடையாளம் காணுமாறு கோபுர, விமான எழுச்சிகளுடன் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் பரிவான அரவணைப்பில் குதூகலித்து நிற்கிறது முதலாம் மகேந்திரவர்மனின் படைப்பான அவனிபாஜன பல்லவேசுவரம். இக்குடைவரையின் முகப்புத்தூண்களிலும் கோட்டங்களிலும் எழிலார்ந்த சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

1. கோட்டச் சிற்பங்கள்

போர் வீரர்களைக் குறிக்கும் இவ்விரு சிற்பங்களுள் வடக்கர் சிதைந்த இடக்கையில் கேடயமும் தலைக்கு மேல் உயர்த்திய வலக்கையில் தடியும் கொண்டுள்ளார். தெற்கர் இடக்கைக் கேடயத்தைத் தலைக்கு மேல் உயர்த்திக் குடைபோல் பிடித்தபடி, வலக்கையிலுள்ள தடியை இடப்புறமாக உயர்த்தியுள்ளார். இருவர் இடுப்பிலும் வலப்புறத்தே குறுவாளுக்கான உறை காட்டப்பட்டுள்ளது. பின்னோக்கிச் சீவிவிடப்பட்டுள்ள இவர் தம் சடைப்புரிகள், தெற்கருக்கு நெற்றிப் பட்டையொன்றாலும், வடக்கருக்கு மூன்று பதக்கங்கள் பொருத்தப்பட்ட முகப்பணியாலும் அடக்கப்பட்டிருந்தும் இருவருக்குமே முடிக்கற்றைகள் அவர்தம் இருபுறத்துப் பக்கவாட்டிலும் தெற்கருக்கு மட்டும் அவரது தோள்களிலுமெனப் பரவியுள்ளன. தெற்கருக்கு நெற்றிப்பட்டையின் ஒரு பகுதி வலப்புறத்தே யாப்புள் நுழைந்து வந்த பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது இவரது சடைமண்டலத்தில் பட்டையின் மீதமர்ந்தபடி வலப்புறத்தே பிறை.

வடக்கருக்கு இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் வலச்செவியில் பூட்டுக் குண்டலமும் அமையத் தெற்கருக்கு வலச்செவியில் பனையோலைக் குண்டலம், இடச்செவி வெறுஞ்செவியாக நீண்டுள்ளது. இருவருக்குமே உதரபந்தம் உள்ளதெனினும், வடக்கரின் பந்தம் இடப்புறம் முடிக்கப்பெற்றுத் தொங்கல்கள் பறக்குமாறு காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தெற்கருக்கு வலக்கையில் பட்டை வளை. இடைப் பட்டாடை முழங்காலளவில் மடிப்புகள் வைத்துச் சுருக்கிக் கட்டப்பட்டு, கொசுவம் இடுப்பருகே அமைய ஆடையை இறுக்கும் அகலமான அரைக்கச்சின் பட்டையான முடிச்சுத் தொங்கல்களில் நீளமானது வலத்தொடையில் படர்ந்துள்ளது. நெறித்த புருவத்துடன் இருக்கும் இருவருக்குமே அடர்த்தியான மீசை. வலப்பாதம் திரயச்ரமாகவும் இடப்பாதம் அக்ரதலசஞ்சாரமாகவும் அமையுமாறு மண்டலநிலையில் ஆடும் வடக்கரும், இடப்பாதத்தைப் பார்சுவமாக்கி வலப்பாதத்தை அக்ரதலசஞ்சாரமாய் உயர்த்தி அதே மண்டலநிலையில் ஆடும் தெற்கரும், கைகளில் வாளுக்கு மாறாகத் தடியிருந்த போதும் சங்க காலத்து ஒள்வாள் அமலை வீரர்களையே நினைவூட்டுகின்றனர்.

2. தூண் சிற்பங்கள்

1. நந்தி தேவர்

வடக்கு அரைத் தூணின் மேற்சதுரத் தென்முகத்தில் உள்ள புடைப்புச் சிற்பம் சிவபெருமானை நந்தி தேவராய்க் காட்டுகிறது. தமிழ்நாட்டுக் கலைவரலாற்றில் நந்திதேவர் சிற்ப வடிவில் இடம்பெறும் முதலிடம் இதுவெனலாம். நான்கு திருக்கைகளுடன் நின்ற நிலையில் காட்சியளிக்கும் சிவபெருமானின் வலப்பாதம் சமத்திலும், முழங்காலளவில் மடக்கிய இடக்காலின் பாதம் பார்சுவத்திலும் உள்ளன.

இறைவனின் பின்னிரு கைகளில் மானும் அக்கமாலையும் வலமுன்கை தொடையிலிருக்க, இடமுன்கை, பக்கத்தில் சிவபெருமானுக்காய்த் தலைதிருப்பி நின்றிருக்கும் நந்தியின் நெற்றியில் முழங்கை ஊன்றுமாறு தாங்கலாக நெகிழ்த்தப்பட்டு இடத் தொடையருகே காட்டப்பட்டுள்ளது. இக்கையின் கட்டைவிரல் நந்தியின் முகவாயை வருடுமாறு உள்ளது. கழுத்தில் சரப்பளியும் நிவீதமாய் பிரம்ம முடிச்சுடன் முப்புரிநூலும் உதரபந்தமும் கைகளில் தோள்வளைகளும் வளைகளும் இடையில் அரைக்கச்சு இருத்தும் கோவண ஆடையும் அணிந்துள்ள சிவபெருமானின் இடத்தோளின் பின் சூலம். அரைக்கச்சின் முடிச்சுத் தொங்கல் வலத்தொடையில் படர்ந்திருக்க இடைக்கட்டின் முடிச்சுத் தொங்கல் வலப்புறம் காட்டப்பட்டுள்ளது.

இறைவனின் இடப்புறத்தே மரமொன்றின் நிழலில் உமை. கரண்ட மகுடத்தோடுள்ள அம்மையின் இடக்கை இடுப்பிலிருக்க, வலக்கை முழங்கையளவில் மடிந்து வலச்செவியருகே உள்ளது. வலச்செவி வெறுஞ்செவியாயிருக்க, இடச்செவியில் பனையோலைக் குண்டலம். கைகளில் தோள்வளை, வளையல்கள், மகுட உச்சியிலிருந்து பின்னப்பட்ட நீளமான சடை இடப்புறம் தோளுக்காய் நெகிழ்ந்திறங்குவதைப் பார்க்கமுடிகிறது. இடப்புறம் அமைந்த கொசுவம், தொங்கலுடன் மிக மெல்லிய இடுப்பாடை கழுத்தில் இரு ஆரங்கள் மற்றோர் அணி ஸ்வர்ண வைகாக்ஷமாகலாம். இருபாதங்களையும் இறைவனுக்காய்த் திருப்பியுள்ள அம்மையின் ஒருக்களிப்பு, அவரின் நின்ற கோலத்திற்குத் தனியழகு சேர்க்கிறது. இறைவனுக்குப் பின் நிற்கும் நந்தி, இருவருக்கும் இடையில் உடலின் முன்பகுதி இருக்குமாறு இறைவனுக்காய் முகம் திருப்பியுள்ளது.

2. ஆடவல்லான்

தெற்கு அரைத்தூணின் மேற்சதுர வடமுகத்திலுள்ள கோட்டத்தில் காணப்படும் ஆடற்கோல சிவபெருமான் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றின் முதல் ஆடல் நாயகனாவார். மிக அற்புதமான இந்த ஆடற்கோலமே, சோழர்களின் ஆனந்தத் தாண்டவப் படைப்பிற்குப் பல்லவர்கள் காட்டிய புஜங்கத்ராசித முன்னோடி. சிவபெருமானின் வலக்கால் தரையில் பார்சுவமாய் ஊன்றியிருக்க, இடக்கால் வலப்பாதத்தின் மீது தன் உடல் இருக்குமாறு படமெடுத்த நிலையில் பாம்பொன்று சிவபெருமானின் வலமுழங்காலைக் கொத்தவருவது போல் நாவை நீட்டியுள்ள இப்பாம்பையே கார்க்கோடகன் என்று சகளாதிகாரம் குறிப்பிடுகிறது.

கணுக்கால்களில் பெருமணிகள் பதித்த மணிச்சரத்தாலான சதங்கையும் கைகளில் தோற்வளைகளும் முத்து வளையல்களும் அணிந்துள்ள சிவபெருமானின் கழுத்தில் சவடி நிவீதமாய் பிரம்ம முடிச்சுடன் கூடிய முப்புரிநூலும் அலங்கரிக்கப்பட்ட உதரபந்தமும் பெற்றுள்ள இறைவனின் இடையை மரமேறுவோர் போல் கட்டிய ஆடை அலங்கரிக்கிறது. ஆடையை இறுக்கும் பட்டையான அரைக்கச்சின் முடிச்சுகள் இருகால்களுக்கு இடையில் இறங்கி, வலத்தொடைமேல் படிந்து பறக்கும் வண்ணம் ஆடும் சிவபெருமானின் வலமுன்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடமுன்கை நெகிழ்கையாய் உள்ளது. பின்கைகளில் வலப்புறம் தீயகல். இடப்புறம் பரசு. செவிகளிரண்டிலும் பனையோலைக் குண்டலங்கள். நெற்றிப்பட்டம் சூழ்ந்த சடை மகுடத்தின் இருபுறத்தும் விரிசடைப்புரிகள். இவற்றுள் ஒன்றிரண்டு, தோள்களிலும் தவழ்ந்துள்ளன. நெற்றிக் கண்ணராய், குறுஞ்சிரிப்புச் சிந்தும் இதழ்களுடன் பிறைசூடிய பெம்மானாய் இறைவன் ஆடும் இந்தத் திருக்கூத்தைத்தான் சம்பந்தர் தம் முதல் திருமுறையில் புயங்கராக மாநடம் என்றாரோ?

ஆடும் பெருமானின் இடப்புறம், நெகிழ்கையாய் இறங்கும் அவர்தம் இடக்கரத்தின் கீழே பூதகணமொன்று முக்காலியின் மீது

அமர்ந்தவாறு அலங்கரிக்கப்பட்ட ஒரு முக முழவை இயக்குகிறது. வலக்கை தட்ட உயர்ந்திருக்க, இடக்கை மத்தளத்தின் மீது தட்டி இசை கூட்டுகிறது. இளநகை காட்டி விழித்து நோக்கும் இக்கணத்தின் பார்வையில்தான் எத்தனை பொருள் பொதிந்த நோக்கு. பெருவயிறும் இடுப்பில் அரைக்கச்சு இருத்திய கோவண ஆடையும் வஸ்திர முப்புரிநூலும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் கொண்டுள்ள இக்கலைஞரின் சடைமகுடமாய்க் கொள்ளத்தக்க தலையலங்காரத்தின் பின்பகுதி தேன்கூடு போல முதுகிற்காய்ச் சரிந்திறங்கியுள்ளது. சிவபெருமானின் உயர்த்திய இடக்காலருகே, கோவண ஆடையும் பெருவயிறும் உதரபந்தமும் மூன்று முகப்பணிகள் அமைந்த மகுடமும் அணிந்துள்ள மற்றொரு பூதகணம், இருகைகளையும் கூப்பிய அஞ்சலி நிலையில் இறைவனை வியந்து வணங்கியபடி காட்சியளிக்கிறது. இதன் வலச்செவியில் பனையோலைக் குண்டலம்.

3. பெண்சிற்பங்கள்

அரைத்தூண்களின் மேற்சதுர மேற்குமுகக் கோட்டங்களில் இடம்பெற்றுள்ள இரு பெண்களுள், வடக்கர் இடக்கையில் பூக்குடலை ஏந்தி வலக்கையால் அதிலுள்ள பூக்களை எடுப்பது போல் காட்டப்பட்டிருக்க, உபவீதமாய் முப்புரிநூல் அணிந்துள்ள தெற்கர் இடக்கையை இடுப்பிலிருத்தி வலக்கையைக் கடகமாக்கி, அதில் நீலோத்பல மலரேந்திக் காட்சியளிக்கிறார். இவர்தம் பாதங்கள் கருவறை நோக்கித் திரும்பியிருக்க, இருவரும் சற்றே கருவறைக்காய் ஒருக்களித்துள்ளனர். முழங்காலுக்குச் சற்று மேல்வரையுள்ள இடையாடையின் முடிச்சுத் தொங்கல்களும் கொசுவமும் பின்புறம் காட்டப்பட்டுள்ளன. மாறுபட்ட கலைக்கோலங்களுடைய இவ்விருவர் கணுக்கால்களிலும் சிலம்புகள் தெற்கரின் வலச்செவி வெறுஞ்செவியாய் இருக்க இடச்செவியில் பனையோலைக் குண்டலம் வடக்கர் இரு செவிகளிலும் குண்டலங்கள் பெற்றுள்ளார்.

3. கருவறைக் காவலர்கள்

இரு காவலர்களுமே நேர்நோக்கிய பார்வையினர். சடைமகுடம், மகுடம் மீறிய அடர்த்தியான சடைக்கற்றைகள், செவிகளில் பேரளவிலான பனையோலைக் குண்டலங்கள், கழுத்தில் சரப்பளி, கைகளில் தோள்வளை மற்றும் பட்டை வளைகள், உபவீதமாய் முப்புரிநூல் ஆகியன இருவருக்குமே பொதுவாக உள்ள அலங்கரிப்புகள். வடபுறத்தார் வலக்காலை திரயச்ரமாய் ஊன்றி, இடக்காலை முழங்காலளவில் மடக்கிக் கருவறைக்காய்ப் பாதம் திருப்பியுள்ளார். இப்பாதம் அக்ரதலசஞ்சாரமாக வலப்பாதம் மீது நிறுத்தப்பட்டுள்ளது. இவரது பாதங்களுக்காக உபரிக்கம்பு இடம்விட்டுள்ளது. இவரது வலக்கை இடுப்பிலிருக்க, பக்கவாட்டில் நிறுத்தப்பட்டுள்ள உருள்பெருந்தடியின் மீது முழங்கைப் பகுதி தாங்கலாக இருக்குமாறு உயர்த்தப்பட்டுள்ள இடக்கை கடகத்திலுள்ளது. உதரபந்தமும் வஸ்திர முப்புரிநூலும் அணிந்துள்ள இவரது இடையில் அரைக்கச்சு இருத்தும் மரவுரியாடை இடைக்கட்டும் பெற்றுள்ள இவரது தலைக்குப் பின் இருபுறத்தும் சூல இலைகளும் தலைக்குமேல் சூலத்தின் நடுத்தண்டும் காட்டப்பட்டுள்ளமையால் இவரைச் சூலதேவராகக் கொள்ளலாம். வல்லம் வயந்தேசுவரத்தில் இதுபோல் சூலதேவர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இடக்காலை நேராக ஊன்றி, வலக்காலை முழங்காலளவில் மடக்கிப் பாதத்தை அக்ரதலசஞ்சாரமாக்கி, இடப்பாதத்தின்மீது கணுக்கால் இருக்குமாறு நிறுத்திக் கருவறைக்காய் அப்பாதம் திருப்பியுள்ள தெற்கர், பிரம்ம முடிச்சமைந்த அலங்கார முப்புரிநூலை உபவீதமாய்ப் பெற்றுள்ளார். தாங்குதள உபரிக்கம்பின் மேற்பரப்பே தளமாக நிற்கும் இவரது அரைக்கச்சு இருத்தும் இடைப் பட்டாடையின் கொசுவம் இடப்புறம்

காட்டப்பட்டுள்ளது. அரைக்கச்சு முடிச்சின் நீளத்தொங்கல் வலத்தொடைமீது நெகிழ, தொடைவரை சுருக்கப்பட்டுள்ள பட்டாடையின் மேல் இடைக்கட்டொன்றும் அணியப்பட்டுள்ளது. அதன் முடிச்சுத் தொங்கல்கள் இடப்புறம் நெகிழ்ந்துள்ளன. வலப்புறத்தே நிறுத்தியிருக்கும் உருள் பெருந்தடியை இடக்கையால் பிடித்திருக்கும் இவரது வலக்கை, இடக்கை விரல்களைத் தொட்டவாறு நெகிழ்கரமாகத் தாழவிடப்பட்டுள்ளது. இவரின் இடப்பாதமும் வலமுழங்காலும் தடியும் சிதைவுக்காளாகியுள்ளன.

அவனிபாஜனத்தில் திகழும் இப்பல்லவர் காலச் சிற்பப் புதையல்கள் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றின் காலத்தால் முற்பட்ட தனித்துவங்கள். இவ்வரிய சிற்பங்களைப் பற்றிய முழுமையான அளவிலான படப்பிடிப்பு, இறைவடிவங்களின் தோற்ற வரலாற்றையும்இலக்கியப் பிரதிபலிப்புகள் சிற்பங்களானமையையும் தெள்ளிதின் விளக்கவல்லது.

புனலாடும் முன் புள்ளமங்கை செல்வோம்

மு.அகிலா, M.A.,M.L.I.S.,D.S.S.,PG.D.T.A.,

உலகில் மனித இனத் தோற்றமும், நாகரிக எழுச்சியும் நதிக்கரையோரங்களில்தான் தோன்றின என்று அறிவியலும், வரலாறும் கூறுவதை இந்து சமயப் புனிதத் தலங்களும், புராண இதிகாசங்களும் மெய்ப்பிக்கின்றன. தண்புனல் கொழிக்கும் காவிரிக் கரையோரம் புதுப்புனலால் பொலிவு பெற்றுத் திகழும் கோயில் நகரம் கும்பகோணம் ஆகும். பேரூழிக் காலத்தில் படைத்தற் தொழிலுக்கு உதவும் அமுத கலசம் மிதந்து வந்து சேர்ந்த இடம் என்றும், இறையருளால் அமுதம் பெருகி வழிந்தோடிய புனிதத் தீர்த்தக் குளத்தைப் பெற்று, மீண்டும் உலகத் தோற்றத்திற்கு காரணமாய் அமைந்த புண்ணியத் தலம் என்றும், புராணங்களால் போற்றப்பெறும் மாண்பினைப் பெற்றது திருக்குடந்தை நகராகும். உலகப் புகழ் பெற்ற மகாமகத் தீர்த்தத் திருவிழா நடைபெறும் ஒரே தென்னிந்தியத் திருத்தலம் கும்பகோணம் மட்டுமேயாகும்.

கும்பகோணம் மற்றும் அதைச்சுற்றிலும் சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட புராண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சைவ, வைணவத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. மூர்த்தி, தலம் இரண்டையும் விட தீர்த்தத்தால் புகழ்பெற்ற குடந்தை நகரம், சைவ, வைணவ ஒருமைப்பாட்டுத் தலமாகவும் விளங்கி வருகிறது. குறிப்பாக இப்பகுதியில் அமைந்துள்ள சைவக் கோயில்களில் வைணவக் கருத்துகளை வெளிப்படுத்தும் சிற்ப அமைப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவ்வாறான ஒரு சைவத் திருக்கோயிலை இங்கே அறிமுகப்படுத்தி, இவ்வாண்டு மகாமகம் காணவரும் அனைவரும் கண்டு இறைவன்அருள்பெற்று இன்புற வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கும்பகோணம்-தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் உள்ளது பசுபதிகோயில் எனத் தற்போது வழங்கப்பெறும் புள்ளமங்கை எனும் ஊர். திரு ஆலந்துறை மகாதேவர் கோயில் எனக் கல்வெட்டுகளில் இவ்வூர் கோயிற்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. ஆளுடைய பிள்ளையார் ஆகிய திருஞான சம்பந்தப் பெருமானின் புள்ளமங்கை திருப்பதிகத்தில் “புளமங்கை ஆதியவர் கோயில் திருவாலந்துறை தொழுமின்” என்று இக்கோயிலைப் போற்றியுள்ளார்.

குடமுருட்டி ஆற்றின் தென்கரையில், ஆலமரத்தை தலமரமாகக் கொண்டு விளங்கும் நீர்த்துறைத் தலமாதலால் இக்கோயில் ஆலந்துறை என விளங்கியுள்ளது.

உலக உயிர்கள் கடைத்தேற அமுதம் பெறவேண்டி பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய ஆலம் மற்றும் காளம் எனும் இரு விஷங்களையும் இறைவன் அமுது செய்த இடம் என்பதும், பிரம்மன் பூசித்த தலம் என்பதும் இக்கோயில் தலபுராணச் செய்திகளாகும். எனவே, இத்தல இறைவனை வழிபட்டு, பின்னர் அமுதம் தேங்கிய குடந்தை மகாமகத் தீர்த்தக் குளத்தில் நீராடுவதே முழுமையான பயனை அளிக்கும் என்பர் பெரியோர்.

இம்முறைப்படி வழிபடுதலால், கடும் விஷம் போன்ற துன்பங்களை முதலில் இறை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதன் மூலம், இறுதியில்அமுதம் போன்ற நிலைத்த பேரின்பப் பேறாகிய இன்பத்தைப் பெறலாம் எனும் சைவ சித்தாந்தம் உணர்த்தும் கருத்தை உய்த்துணரலாம்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலேயே செங்கற் கோயிலாக விளங்கிய புள்ளமங்கை மகாதேவர் கோயில், சம்பந்தரால் பாடல் பெற்ற சிறப்பினை உடைய தலமானதால், முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907-955) காலத்தில், கி.பி. 910-ல் கற்றளியாக எடுப்பிக்கப்பட்டது. கருவறை, அர்த்த மண்டபம் மட்டுமே பராந்தகன் காலத்தியன. ஏனைய கட்டுமானங்கள் பிற்காலத் திருப்பணிகளாகும். கிழக்கு நோக்கிய, 25 அடி சதுரமான கருவறையில் இலிங்க வடிவில் வீற்றிருக்கும்இறைவன், மகாதேவர், ஆலந்துறை நாதர், பிரம்மபுரீஸ்வரர், பசுபதீஸ்வரர், பசுபதி நாதர் எனும் பல பெயர்களால் வழங்கப்படுகிறார்.

கருவறை வாயிலின் இருபுறமும் கருமமே கண்ணாக இரு துவாரபாலர்கள், ஒரு கையில் தண்டூன்றி, ஒயிலாக நிற்கின்றனர். அவர்களது வலது கையின் அசைவிற்கேற்ப, மார்பில் அணிந்த முத்துமாலை சற்று சரிந்து கிடப்பது, கற்சிற்பம் உயிர் பெற்று அசைந்து விட்டதோ என எண்ணச் செய்கிறது. கருவறையின் நுழைவாயில் மிக அழகுற அமைக்கப் பட்டுள்ளதுடன், கருவறை நிலை மீது ஆலிலைக் கண்ணன் துயில்வது போன்ற சிற்பம், வேறு எந்தச் சிவாலயங்களிலும் காணக் கிடைக்காத ஒன்றாகும்.

கருவறை, அர்த்தமண்டப வெளிச் சுவர்களில் சோழர் காலக் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. இவற்றில் முதலாம் பாராந்தகனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே (கி.பி. 910) இக்கோயிலில் உள்ள மிகப் பழமையான கல்வெட்டாகும். ரிக், சாம வேதங்களில் சிறந்திருந்த புள்ளமங்களம் வாழ் அந்தணர்களுக்கு முதலாம் இராஜராஜன் வழங்கிய ஓர் கொடைச் செய்தியைக் காணும்போது, "வேதம் பயின்று ஏத்திப் புலன்கள் தமை வென்றார் புகழ் அவர் வாழ் புளமங்கை" எனச் சம்பந்தர் ஓர் பதிகத்தில் இவ்வூர் பற்றிக் கூறியுள்ளது பொருத்தமாயுள்ளது.

கருவறையின் தென்சுவரில் புதிதாக அமைக்கப்பெற்ற ஆலமர் செல்வரும், அவருக்கு இருபுறமும் சோழர்கால சனகாதி முனிவர் நால்வரும் மோனநிலையில் அருளுபதேசம் பெறுகின்றனர். கருவறை மேற்குச் சுவரில் உள்ள தேவகோட்டத்தில் இருபுறமும் பிரமன், திருமாலது முறையீடும், நடுவில் அனற்பிழம்பாய் தோன்றிய இலிங்கத்தினின்று வெளிப்படும் அண்ணலது தோற்றமும், கீழே அடிதேடிச் சென்ற வராக முக திருமாலும், மேலே முடி தேடிப் பறந்து செல்லும் பிரம்மனும் என இலிங்கோத்பவ மூர்த்தியின் புராணம் கண்முன் விரிகிறது. கருவறையின் வடபுற தேவகோட்டத்தில் அரைவட்டக் குடையின்கீழ், தலையில் சடாமகுடம் திகழ நான்கு திருமுகங்களுடன், நான்கு கரங்களில் அமிர்த கலசமும், அக்கமாலையும், அபய ஹஸ்தமும், துடைமீது இருத்தியும், இருபுறமும் முனிவர் வணங்க, நீண்ட மெல்லிய உருவத்துடன் நேர்த்தியான அணிகலன்கள் பூண்டு சாந்தமான முகத்துடன் காட்சியளிக்கும் பிரம்மனைக் காணலாம். அர்த்தமண்டபத் தென்சுவற்றில் இருபுறமும் பூதகணங்கள் துதிக்க, அழகிய குடையின்கீழ் அமர்ந்த கணபதி காட்சியளிக்கிறார்.

அதே போன்று அர்த்தமண்டப வடபுற தேவகோட்டத்தில் துர்க்கை மகிஷாசுர மர்த்தினியாக நிற்கும் திருக்கோலம் இக்கோயிலுக்கே தனிச்சிறப்பைத் தருகிறது. திருநாகேஸ்வரம், பட்டீஸ்வரம், புள்ளமங்கை ஆகிய இம்மூன்று கோயில் துர்க்கைகளும் ஒரே சிற்பியால் செய்யப்பட்டவை என்றும், இம்மூன்றுமே மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும் சொல்லப்படுகிறது. கருங்கல் குடையின்கீழ், எருமைத் தலைமீது நின்று, சங்கு, வாள், சூலம், சக்கரம், கேடயம், வில் முதலிய ஆயுதங்களை ஏந்தி திரிபங்கியாய், முன் இடக்கையை தொடையில் இருத்தி, முன் வலக்கை அபய முத்திரையுடன் முதுகில் அம்பறாத்தூணியுடன், அழகிய ஆபரணங்களுடனும் திகழ்கிறாள் "கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்ற நங்கை" இருபுறமும் அவளது வாகனங்களான சிங்கமும், கலைமானும் நிற்பது அரிதான காட்சியாகும். துர்க்கைக்கு தலைப்பலி, சதைப்பலி வழங்கும் வீரர் சிலைகள் விம்மிதத்துடன் திகழ்கின்றன.

பிரகாரத் தளவரிசை சற்று உயர்த்தப்பட்டுள்ளதால், அதிஷ்டானப் பகுதி சற்று பள்ளமான அகழி அமைப்பில் காணப்படுகிறது. பத்மபந்தம், கபோதபந்தம் எனும் இருவகை அதிஷ்டானங்கள் ஒருங்கே மிக அழகுடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன. அதிஷ்டான யாளி வரிக்கு மேலே வரிசையாக இராமாயணக் காட்சிகளும், விஷ்ணுவின் அவதாரங்களும் நுட்பமான சிற்றுருவச் சிற்பங்களாகச் சித்தரிக்கப்

பட்டுள்ளன. இதற்குக் கீழே கபோதத்தின்அடியில் உள்ள கண்டப் பகுதியில் சைவ புராணச் சிற்பங்களும், சிவனாரது சிற்றுருவச் சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சீதை, இலக்குவனுடன் ராமர் வனவாசம் ஏற்று படகில் கங்கையைக் கடக்கும் சிற்பமும், மாரீசனின் மாயமான் வடிவும், மாரீச வதமும் ஒரே சிற்பத் தொகுதியில் வடிக்கப்பட்டுள்ளதும் சிறப்பானவை. இவற்றின் அருகே சபரி, ராம இலக்குவணரை வரவேற்று உபசரிக்கும் காட்சி உள்ளது. இவற்றின் கீழே உள்ள கண்டப்பகுதியில் கஜசம்ஹாரர், காளியின் மகிஷ வதம், கால சம்ஹாரர், பிட்சாடனர், ரிஷபவாகனர் எனச் சிவாம்ச சிற்பங்கள் மிக நுட்பமாக அமைக்கப்பட்டுள்ளன. இது போன்றே ஜடாயு வதம், ஜடாயு மோட்சத்தைக் காணும் ராம லக்குவணர், அடுத்து ஆதிசேடன் மீது அரிதுயில் கொள்ளும் அனந்தசயன மூர்த்தி காண்போர் கண்ணைக் கவரும் நேரத்தில், அதற்கு கீழ் வரிசையில் சண்டீசர் அனுக்கிரகம் பெறும் அற்புதத் தொகுப்பு நம் கருத்தைக் கவருகிறது. ஆதிவராக மூர்த்தி பூமிதேவியை மீட்டு வரும் காட்சியும், அதற்குக் கீழுள்ள அடுக்கில் சிவதாண்டவ மூர்த்தியின் சிற்பத்தையும் ஒருங்கே காணும்போது, சைவ, வைணவ வேறுபாடுகள் மறைந்து உலகைக் காத்தருள பரம்பொருள் கொண்ட வேறுவேறு வடிவங்களின் கருணைத் தன்மையே மனதில் நிறைகிறது.

அதிஷ்டானத்திற்கு மேலுள்ள தேவகோட்டங்களுக்கு அருகில் கோஷ்ட பஞ்சரங்களும், கொடிக் கருக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கொடுங்கை மற்றும் யாளி வரிமானமும் உள்ளன. இவற்றுடன் விமான மேல் தளத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள அழகிய பெண் சிற்பங்கள், கும்பகோணம் நாகேஸ்வரன் கோயில் தேவகோட்டச் சிற்பங்களின் பாணியை நினைவூட்டுவனவாக உள்ளன. சோழர் காலக் கலைத் திறனுக்கு சிறந்த சான்றாகத் திகழும் இக்கோயிலில் பிற்காலக் கட்டுமானச் சேர்க்கைகளும் உள்ளன.

கோயிலின் கிழக்கில் மூன்று நிலைகளைக் கொண்ட ராஜகோபுரம் ஒன்றும், உள்ளே சென்றால், பெரிய முன்மண்டபமும் உள்ளன. இதன் வடக்கில் தெற்கு நோக்கி நின்றநிலையில் அருள்புரியும் அல்லியங்கோதை எனும் சௌந்தரநாயகி அம்மன் ஆலயம் உள்ளது. பிரகாரத்தில் கணபதி, முருகன் மற்றும் வடக்கில் பழங்கால சண்டீசர் சந்திகளும் உள்ளன. நால்வர் சந்நிதியும், நவக்கிரகங்களுக்கு மத்தியில் நந்தி வீற்றிருக்கும அபூர்வ நவக்கிரக சந்நிதியும் காணப்படுகின்றன.

இத்தகைய அரிய கலைப் பண்பாட்டுக் கருவூலமாகவும், சைவ, வைணவ ஒருமைப்பாட்டுத் தலமாகவும் விளங்கும் புள்ளமங்கையுறை திருஆலந்துறை மகாதேவரை வணங்கிய பின்னர் குடந்தை சென்று அமிழ்தம் நிறை புனித மகாமகத் தீர்த்தத்தில் நீராடி, இறையருள் பெறுவோமாக!



சோழமண்டலத்தில் பண்டைய நீர்ப்பாசனம்

த.ம. சரபோஜி. எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ.(வரலாறு)
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

ஒரு நாட்டின் வளமைக்கும், வலிமைக்கும் அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது நீராதாரமே ஆகும். ஒரு நாடு வளம்பெற்ற நாடாகவும், கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் சிறந்தும் திகழவேண்டு மாயின் நிலையான நீர் வளத்தினைப் பெற்றிருக்க வேண்டும். இதனை உணர்ந்தே ஔவையார்,

**''வரப்புயர நீர் உயரும்
நீர் உயரநெல் உயரும்
நெல் உயரக்குடி உயரும்
குடி உயரக்கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயரும்''
என்று பாடினார்.**

வள்ளுவரும் தம் குறளில்,

***''நீரின்றியமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு''***

என்று நீர் வளத்தின் அவசியத்தை உணர்த்துகின்றார்.

தொடக்கக்காலத்தில் ஆற்றங்கரைகளில் தான் மனித நாகரிகம் தோன்றி வளர்ந்தது. மனித இனம் பல்கிப் பெருகிப் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல நேர்ந்தபொழுது, தான் வாழும் இடங்களில் ஆண்டு முழுவதும் நீர்வளம் குறையாது திகழவேண்டும் என்பதற்காகக் குளங்களும், ஏரிகளும், ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுகளும் அமைக்கத் துவங்கினர். இந்நிலை படிப்படியாக உயர்ந்து சோழர்கள் காலத்தில் உச்சநிலையை எய்தியது.

சோழ மண்டலம் வளமும், வலிமையும் பெற்ற நாடாகத்திகழ்ந்தமைக்கு காரணம் சோழ மன்னர்களின் நீர்வள மேலாண்மைத் திறனே யாகும். இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் சோழ மண்டலத்தில் வெட்டப்பெற்ற ஆறுகள், ஏரிகள், கட்டப்பெற்றஅணைக்கட்டுகள் பற்றி ஏராளமாகக் குறிப்பிடுகின்றன. வான் பொய்ப் பினும் தான் பொய்யாத காவிரியாறும், அதன் கிளையாறுகளும் சோழ நாட்டை என்றும் வளம் குன்றா நாடாக்கி, சோழநாடு சோறுடைத்து என்று புகழ்ந்துபேசப் பெற்றதை அறியமுடிகிறது. இந்நாட்டை காவிரி நாடு, பொன்னி நாடு என்றும் புலவர்கள் போற்றினர்.

இளங்கோவடிகள்,

**''வாழியவன்றன் வளநாடு மகவாய்
வளர்க்குந்தாயாகி
ஊழியுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி
காவேரி''**

எனப் போற்றுகிறார்.

பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார் எனும் புலவர் கரிகாற் பெருவளத் தானைப் பாடும்பொழுது,

**''சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோனே''**

என்று காவிரியின் வளம் பெற்று விளங்கும் சோழ நாட்டையும், அத்தகைய வளம் பொருந்திய நாட்டை கரிகாலன் ஆட்சி புரிவதையும் சிறப்பிக்கின்றார். இப்பெருமன்னனே சோழ மண்டலத்தில் ''காடு கொன்று நாடாக்கிக் - குளந்தொட்டு வளம் பெருக்கி''னான் என்று பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடுகிறார். மேலும் இம்மன்னன் காவிரியின் இருபுறமும் கரை அமைத்தான் எனும் செய்தி கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தரின் விக்கிரம சோழனுலாவில் ''பொன்னிக்கரை கண்ட பூபதி'' எனும் பாடல் வரியாலும், எவ்வாண்டில் இச்சீரிய செயலைச் செய்தான் என்பதை,

ஏரி நீரை வெளியேற்றும் சோழர்கால மதகு



''தொக்க கலியின் மூவாயிரத்துத்
தொண்ணூற்றில்
மிக்க கரிகால வேந்தனுந்தான் -பக்கம்
அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை
கண்டான்
மலைக்கும் புயத்தானும் வந்து''

எனும் பழைய வெண்பாவினாலும் அறிய முடிகிறது. புண்ணிய குமாரனின் கி.பி. ஏழாம் நூற்றாண்டு மேல்பாடி செப்பேடுகளிலும், பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் வெளி வந்த கங்கைகொண்ட சோழனுடைய திருவாலங் காட்டுச் செப்பேடுகளிலும், வீரஇராசேந்திர சோழனுடைய கன்னியாகுமரி கல்வெட்டிலும் கரிகாலன் காவிரிக்கு கரை அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது. சோழர்கள் காலத்தில் காவிரிக் கரையினைப் பராமரிப்பதற்காகக் ''காவிரிக்கரை வினியோகம்'' எனும் வரி வசூல் செய்யப் பெற்றதை திருப்பழனம் மற்றும் திருச்செந்துறை கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் ''வெண்ணுக்கரை எள்ளுப்பாறு'' என்று உரை எழுதுகின்றார். வெண்ணாற்றில் படகுகளில் எள் பொதி ஏற்றிச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். இத்தகு சிறப்பு வாய்ந்த வெண்ணாற்றில் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள கச்சமங்கலம் எனும் ஊரில் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. இந்த அணை இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பு அமைக்கப்பெற்றிருக்கலாம். இந்த அணையிலிருந்து வெண்ணாறு செல்லும் வழியில் 3 கி.மீ தூரத்திற்குக் குன்றுகள் நிறைந்துள்ளன. இக்குன்றுகளை வெட்டி அகற்றி இயற்கையான முறையில் ஒரு தடுப்பணை அமைத்துள்ளனர். இவ்வணையின் இரண்டு பக்கமும் மதகுகள் அமைத்து மேடான பகுதிகளுக்கு நீரைக் கொண்டு சென்று பாசனம் செய்துள்ளனர். இடது பக்கம் பிள்ளை வாய்க்கால் எனும் கால்வாய் அமைத்து வீரசிகாமணிப் பேரேரியில் நீரைத் தேக்கி அப்பகுதி வளம் பெறச் செய்துள்ளனர். வலது பக்கம் ஆனந்தகாவேரி எனும் கால்வாய் வெட்டுவித்து அதன் மூலம் முன்பு ராஜசுந்தரி சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப்பெற்ற கள்ளப்பெரம்பூர் ஏரியில் நீரைச் சேமித்து பயன்பெறச் செய்துள்ளனர்.

கோவிலடிக்கு அருகில் வீர இராசேந்திர சோழனால் அமைக்கப்பெற்ற பேரணையின் வலிமையினை உணர்ந்து வியந்த ஆங்கிலேயர் அந்த அணையின் மேலேயே பாலம் கட்டியமை சோழர்களின் கட்டுமானத் திறனுக்குச் சான்றாகும்.

பேராறுகளின் கிளையாகப் புதிய ஆறுகள் வெட்டுவதற்கு இயலாத நிலப்பரப்புகளில் ஆங்காங்கே பெரும் ஏரிகள் அமைத்து சோழ நாட்டை வளப்படுத்தியுள்ளனர். செந்தலைக் கல்வெட்டால் அறியப்படும் முதற்பராந்தகன் வெட்டுவித்த மிகப்பெரும் ஏரியான வீரசிகாமணிப் பேரேரியைப் (அள்ளூர் - அழிசிக்குடி) பராமரிக்க அமண்குடியில் இருந்த சமணர்களுக்கு இம்மன்னன் நிவந்தங்கள் (கொடை) அளித்த செய்தியை

அறியமுடிகிறது. மேலும் இக்கல்வெட்டு இந்த ஏரியைப் பராமரிக்கும் பொறுப்பை ஆரம்பவீரன் என்பவன் மேற்கொண்டான் எனவும், இதற்குப் பொருளுதவி அளித்தவர் புத்தாமூர் எனும் ஊரில் சமணப்பள்ளி ஒன்றை நிருவகித்த கனகசேன பிடாரர் என்றும் குறிப்பிடுகிறது.

முதல் இராசேந்திர சோழனின் படைத் தளபதியான இலங்கையை வெற்றிகொண்ட ஜெயமூரி நாடாள்வான் என்பவன் இவ்வேரியைப் பராமரிப்பு செய்ததையும் செந்தலை கல்வெட்டு கூறுகின்றது.

பிற்காலச் சோழ மன்னர்கள் பல்வேறு ஆறுகளையும், ஏரிகளையும் அமைத்ததற்கானச் சான்றுகளைக் கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. தஞ்சைக்கு வடபுறத்தில் ஓடும் வடவாறு ''வீரசோழ வடவாறு'' என்றும், கொள்ளிடம் பேரணையில் இருந்து பிரிந்து வடக்கே ஓடி வீரநாராயணன் ஏரியில் (வீராணம் ஏரி) கலக்கும் வடவாறு ''மதுராந்தக வடவாறு'' என்றும், கல்வெட்டுச் சாசனங்கள் மூலம் அறியமுடிகிறது. இவ்விரண்டு ஆறுகளும் வீரசோழன், மதுராந்த சோழன் எனும் சிறப்பு பெயர் பெற்ற முதல் பராந்தக சோழனால் வெட்டப்பட்டிருத்தல் வேண்டும். இதேபோல் மண்ணியாற்றுக்கும், குஞ்சரமல்லன் பேராறு என்று பெயர் வழங்கியிருத்தலால், குஞ்சரமல்லன் என்ற சிறப்புப் பெயர் பெற்ற முதல் பராந்தகனே இவ்வாற்றையும் திருத்தியமைத்து நாட்டிற்குப் பயன்படச் செய்திருக்கவேண்டும். குளித்தலை யிலிருந்து பிரிந்து வெண்டயம்பட்டி ஏரியில் வந்து கலக்கும் உய்யக்கொண்டான் ஆறும், கோனேரி ராசபுரத்திற்குஅண்மையில் ஓடும் கீர்த்திமான் ஆறும் முதல் இராசராச சோழனால் வெட்டப் பெற்றவையாகும். முடிகொண்ட சோழன் எனும் சிறப்புப் பெயர் பெற்ற கங்கைகொண்ட சோழனால் முடிகொண்டான் ஆறும், வீரசோழன் எனும் ஆறு, வீரஇராசேந்திர சோழனாலும், விக்கிரமனாறு, விக்கிரம சோழனாலும் சோழ நாட்டை வளம் செய்யும் பொருட்டு வெட்டப் பெற்றனவாகும்.

தஞ்சைச்செம்புலநாடு என்று அழைக்கப்பட்ட சோழ மண்டலத்தின் ஒரு பகுதி ஏரியூர் நாடு என்றே வழங்கப்பட்டதை முதல் இராசராசனின் கல்வெட்டால் அறியமுடிகிறது. வட ஆற்காடு மாவட்டம் சோழசிங்கபுரத்திற்கு அருகில் ''சோழவாரிதி'' என்ற ஏரியும், சிதம்பரத்திற்கு மேற்கே உடையார் குடியில் முதல் பரந்தகனால் வெட்டப்பெற்று இன்றும் மிகப்பெரும் நிலப் பரப்பினை தன்னுள் அடக்கியிருக்கும் வீராணம் ஏரியும் அவ்வப் பகுதிகளை வளம் பொழியச் செய்துள்ளன. தென்னார்க்காடு மாவட்டம் உலக புரத்திலுள்ள கண்டராதித்தப் பேரேரி, கண்டராதித்த சோழனாலும், திருச்சி மாவட்டம் திருமழபாடி அருகே கண்டராதித்த சோழரின் மனைவி செம்பியன் மாதேவியாரால் வெட்டப்பெற்ற செம்பியன் மாதேவிப் பேரேரியும், உத்தம சோழனால் வெட்டப்பெற்ற மதுராந்தகப் பேரேரியும் குறிப்பிடத் தக்கவையாகும்.

சுந்தர சோழன் மற்றும் அவரது புதல்வி குந்தவையாராலும் வட ஆற்காடு மாவட்டம் பிரம்மதேசம் என்ற ஊரில் முறையே சுந்தரசோழப் பேரேரி, குந்தவைப்பேரேரி எனும் இருபெரும் ஏரிகள் வெட்டப் பெற்றுள்ளன.

முதல் இராசேந்திர சோழன், தான் புதிதாக அமைத்த தலைநகரமான கங்கைகொண்ட சோழபுரத்தின் மேற்கே ''சோழகங்கம்'' என்ற பெயரில் மிகப்பெரும் ஏரியை வெட்டுவித்தான். பொன்னேரி என்று போற்றப்பெற்ற இவ்வேரியில் கங்கையிலிருந்து, தான் கொணர்ந்த கங்கை நீரை இட்டு (ஜலஸ்தம்பம் - நீர்மயமானதூண் நிறுவி) பின் மழைநீரை நிரப்பியதாக திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தாலுக்காவில் உள்ள முனியூரில் குலோத்துங்க சோழனால், குலோத்துங்க சோழப்பேரேரி வெட்டப் பெற்ற செய்தியை அவ்வூர்க் கல்வெட்டால் அறியமுடிகிறது.

சோழ மண்டலம் முழுவதும் வெட்டப்பெற்ற ஏரிகளைப் பராமரிக்க ஏரி வாரியம் எனும் அமைப்பை ஏற்படுத்தி திறம்பட பராமரித்தனர். இவ்வாறு ஏரிகளைப் பராமரிக்க இறையிலி நிலங்களும், பொருட்களும் வழங்கப்பெற்றன. ஏரி ஆயம் எனும் வரியும் வசூலிக்கப்பெற்றது. இவ்வாரியத்தின் நிருவாகப் பொறுப்புகளை மேற்கொள்ளும் வாரிய உறுப்பினர்கள் ஊதியம் பெறாமல் கௌரவப் பதவியாகவே கருதி பணி புரிந்தனர். ஆனால், அவர்களுக்கு உதவிபுரியவும், ஆவணங்களை முறையாக வைத்திருக்கவும் ஊதியம் பெற்ற அலுவலர்கள் நியமிக்கப் பெற்றனர். இவர்கள் மத்தியஸ்தர்கள் என்று அழைக்கப் பட்டனர். இவர்களுக்கு ஒருநாளைக்கு 4 நாழி நெல்லும், ஓர் ஆண்டிற்கு 7 கழஞ்சு செம்பொன்னும், இரண்டு வேட்டியும் கொடுக்கப் பெற்ற செய்திகளை அறியமுடிகிறது.

ஊர்ச் சபையினர் ஒவ்வொரு ஆண்டிலும் மழைக்காலம் துவங்குமுன்னர் தங்கள் ஆளுகைக் குட்பட்ட ஏரிகளில் தூர் எடுத்து அவற்றை ஆழப்படுத்தினர். கிராம சபைகள் தங்களின் முக்கியக் கடமையாக இதைக் கருதின. ஒவ்வொரு ஏரிக்கும் தனிக் கட்டளைகள் அமைக்கப் பட்டிருந்தன.

ஏரியின் உள்ளே இரண்டு கற்களை உயரமாக நட்டு, இரண்டு கற்களுக்கிடையில் குறுக்கு வாட்டில் ஒன்றோ அல்லது இரண்டோ நடுவில் துளையிடப்பெற்ற கற்பலகைகள் அமைத்து, துளையின் இடையே கழியைச் செருகி கழியின் அடியில் உருண்டைக்கல்லை இணைத்திருந்தனர். கழியை உயர்த்தினால் அடிப்பகுதியில் அமைக்கப் பெற்ற குழாய் வழியே நீரை வெளியேற்றும் அமைப்பையும் செய்திருந்தனர். இத்தகைய அமைப்பிற்கு குமிழி என்று பெயர். குமிழிக் கற்களில் கொடையாளர்களின் பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப்பெற்றிருக்கும்.

சோழர்கள் ஆட்சியில் ஆறுகளில் பொங்குநீர் உள்ள காலங்களில் பாசனத்திற்கு எவ்விதத் தடையுமின்றி நீர்ப்பாய்ச்சிக் கொண்டனர். நீர்த்தட்டுப்பாடு உள்ள காலங்களில் அவரவர் நிலங்களின் விழுக்காட்டிற்கேற்ப வரிசையிட்டு

கல்லணை



பங்குவிகிதப்படி நீர்ப்பாய்ச்ச வேண்டுமென்று வரைமுறைகள் வகுத்திருந்ததை திருப்பதியில் உள்ள தமிழ்க்கல்வெட்டு எடுத்துரைக்கின்றது.

நிலங்கள் விற்கப்படும் பொழுதும், தானம் கொடுக்கும்பொழுதும் அந்நிலங்கள் எந்த ஆறு, ஏரி, குளம் இவற்றின் பாசனம் பெற்றது என்று ஆவணங்களில் குறிப்பிடும் வழக்கமும் இருந்தது. இவ்வாறு சோழ மன்னர்களும், மக்களும் நீர்வளம் குன்றாது காத்துசோழ நாட்டை வளம்பெறச் செய்தனர்.

சூழ்புனல் குடந்தையான்

எஸ். சுதர்ஷன், M.A., M.L.I.S.,
சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

கங்கையிலும் புனிதமானக் காவிரியாற்றின் கரையில் அமைந்துள்ளது கும்பகோணம் என்னும் நகரமாகும். காவிரியை ''மஹாபாக்கியவதி'' என ஸ்ரீபாகவதமும், ''ஸத்ய புனாது காவேரீ பாபமாமரணாந்திகம்'' என்பதாக சாஸ்திரங்களும் கொண்டாடுகின்றன. இந்நதியைச் சோழ நாட்டுக்கே தாய் என்றும்; தட்சிண கங்கை என்றும்; விரஜா நதி என்றும் கும்பகோண மாகாத்மியம் புகழ்கின்றது. நூற்றெட்டு திவ்ய தேசங்களில் நாற்பது ஸ்தலங்கள் இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ளமை இந்நதிக்கு மேலும் பெருமை அளிக்கின்றது. இந்த ஆறு ஸ்ரீரங்கத்திற்கு மேற்கே இரு கிளைகளாகப்பிரிந்து ஸ்ரீரங்கநாதனுக்கு மாலையாக அமைந்ததுபோல் குடந்தை நகரத்திற்கு மேற்கே இருபிரிவுகளாக பிரிந்து சயன திருக்கோலத்தில் இருக்கும் அமுதனுக்கு மாலைபோல் விளங்குவது ஒரு தனிச் சிறப்பாகும். மேலும்இக்காவிரியை ''சூழ்புனற் குடந்தையே தொழுமின்'' ''பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தை'' என திருமங்கையாழ்வாரும், ''காவிரி நல் நதி'' என குலசேகர ஆழ்வாரும் ''பொன்னி தென்பால் திருமால் சென்று சேர்விடம்'' என நம்மாழ்வாரும், ''கடந்தகால் பரந்த காவிரிக் கரைக்குடந்தை'' என திருமழிசையாழ்வாரும் பரக்கப்புகழ்ந்திருக்கின்றனர் என்றால் இந்நதியின் மூலம். இப்பகுதி பெற்ற தூய்மையையும், வளத்தையும் பற்றி சொல்லவும் வேண்டுமோ?

நீர்வளமும், செழுமையும் பெற்ற இக்கும்பகோணத்தைச் சுற்றிலும் ஒன்பது திவ்ய தேசங்கள் அமைந்திருப்பது விசேஷமாகும். இந்த அமைப்பைக் காணுமிடத்து ஆராவமுதனை நடு நாயக மணியாகக் கொண்டு இந்த ஒன்பது திவ்ய தேசத்து எம்பெருமான்களும் நவரத்ன மணிகளென அமைந்துள்ளனர். இப்பதின்மரும் அர்ச்சையில் ஒரு அழகிய தசாவதாரம் போல் விளங்குகின்றனர் என்பர் சான்றோர்.

ஆழ்வார்கள் 'செழுமா மணிகள் சேரும் திருக் குடந்தை' 'நலத்தால் மிக்கார் குடந்தை', வாழ்தொல்புகழார் குடந்தை' விலங்கு நூலர் வேத நாவர் நீதியான கேள்வியார் வலங்கொளக் குடந்தை என தமது திவ்யப்ரபந்தங்களின் மூலம் குடந்தை மாநகரை ஞானிகள், பக்தர்கள் , வேதியர்கள் வாழும் இடம் என்பதாகப் புகழ்ந்துள்ளனர்.

இப்படிப்பட்ட குடந்தையில் எழுந்தருளியுள்ள ஆராவ முதனைச் சேவித்தால் அவர் செய்த பாவங்கள் அனைத்தும் தீர்ந்து விடும். இதனை இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தின் மூலம் அறியலாம். பொதுவாக நம்மால் செய்யப் பட்ட பாபங்கள் புண்ணிய க்ஷேத்ரங்களில் நாசமடையும்: புண்ணிய க்ஷேத்ரங்களில் செய்யப் பட்ட பாபம் காசியில் நாசமடையும்; காசியில் ஏற்படும் பாபம் கும்பகோணத்தில் மறையும்; கும்பகோணத்தில் செய்யப்பட்ட பாபம் கும்பகோணத்திலேயேதான் நாசமுறும் என்பதாக இந்த க்ஷேத்ரமாகாத்மியம் கூறுகிறது. எனவே இதற்கு நிகரான க்ஷேத்ரம் பாரினில் வேறொன்றும் இல்லை எனில் அது மிகையாகாது.

அகில உலகங்களையும் ஆக்கி, காத்து, அழிப்பவனாயும், அளவற்ற கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாயும்; தீய குணங்கள் துளியும் இல்லாத வனாயும்; லக்ஷ்மீ ப்ரியனாயும்; கருணையின் கடலாகவும் திகழும் பகவானிடத்தில் பக்தியில் ஆழ்ந்து திளைத்து மற்றோரையும் இப்பேரானந் தத்தை அனுபவிக்குமாறு செய்த ஆழ்வார்களால் பாடப் பெற்ற ஸ்தலங்களை திவ்யதேசங்கள் என்பர். இப்படிப்பட்ட திவ்யதேசங்கள் நூற்றெட்டுள் உயிர் நாடி போன்றது ' திருக்குடந்தை' இத்தகைய சிறப்புக்குக் காரணங்கள் பல உண்டு. ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்திற்கு ஆதாரமாக விளங்கும். திவ்ய ப்ரபந்தங்களை மீட்ட பெருமை திருக்குடந்தைக்கே சாரும். இஃதே திருவாய்



மொழியின் விளைநிலமல்லவா? ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீமந்நாதமுனிகள் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு புத்துயிர் அளித்து இதை நிலைநாட்டிய ஆசார்யனாவார். ஒரு நாள் அவர் ஆராவமுதனை ஸேவிக்கச் சென்றபோது ஸந்நிதியில் ஒருவர் 'ஆராவமுதே!' என்று தொடங்கும் பாசுரங்களை மிக உருக்கமாகப்பாடக் கேட்டு; மெய்மறந்து உள்ளம் கரைந்து, ஆனந்தக் கடலில் மூழ்கினார். 'ஆராவமுதே, யாழினிசையே, அறிவின்பயனே, அரியேறே, பொற்சுடரே, பவளக்குன்றே என்ற ஆழ்வாரின் சொற்கள் அமுதிலும் இனியனவாக அவரை பரவசமாக்கின. உயர்ந்ததான ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமத்தில் சொல்லப் பெற்றுள்ள நாமாவளிகளைக் காட்டிலும் ஆழ்வார்களால் மேலே சொல்லப்பெற்ற பெயர் களால் அவரது உள்ளம் நெகிழ்ந்தது. பாசுரத்தைப் பாடியவர் 'குருகூர்ச்சடகோபன் குழலில் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்' என்று முடித்தார். இதனைக் கேட்ட நாதமுனிகள் இப்பதிகம் தவிரஏனைய பாசுரங்கள் எங்கு கிடைக்கும் என்று வினவ அந்த பக்தர் தமக்குத் தெரியாது என்றும், அவைவெகு காலமாகப் பிரசாரத்தில் இல்லை என்றும், கூறி விட்டார். மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரைப் பற்றி இயற்றிய 'கண்ணினுற் சிறுத்தாம்பு' என்ற பதினொரு பாக்கள் கொண்ட ஒருநூல் மட்டும் நாத முனிகளின் விடாமுயற்சியால் கிடைத்தது. அதை சிரத்தையுடன் பாராயணம் செய்து நம்மாழ்வாரை உபாஸிக்க; ஆழ்வாரது கிருபையினால் 'ஆராவமுதே' என்றபதிகம் அடங்கிய திருவாய் மொழி மட்டுமல்லாது எல்லா ஆழ்வார்களது திவ்யஸீக்திகளையும் பெற்றார். நாத முனிகளைக் கொண்டு இந்த இணையற்ற தமிழ்மறையை உலகிற்கு மீட்டுத்தந்த பரமோக பகாரகன் ஆராவமுதனே!. எனவேதான் இந்த க்ஷேத்திரத்தை 'திவ்வியப்பிரபந்தம் விளைந்த திருப்பதி' என்றும்; தமிழ் மறைதந்த வள்ளல் என்றும் சான்றோர் அழைப்பார்.

இத்தலத்து எம்பெருமானை (ஆராவமுதனை) பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார் ஆகிய ஏழுபேரும் மங்களாசாஸனம் செய்துள்ளனர்.

இக்கோயில் மூலவரை ''ஏரார்கோலம் திகழக் கிடந்தாய்'' என்றும்; உத்ஸவரை ''நாற்றோ ளெந்தாய்'' என்றும் நம்மாழ்வார் மங்களாசாஸனம் செய்திருப்பதால் இத்திவ்யதேசம் உபய ப்ரதான திவ்ய தேசம் என்று அழைக்கப் படுகிறது. மேலும் 'சார்ங்க மென்னும் வில்லடாண் தன்னை' என்ற பெரியாழ்வார் மங்களாசாஸனப்படி எப்பொழுதும் இவ்வெம்பெருமான் அழகிய வில்லைக் கையில் தரித்திருப்பது தனிச் சிறப்பாகும்.

எம்பெருமான் சயனத்திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களைக் குறிப்பிடும் போது ''நாகத்தணைக் குடந்தை...'' என குடந்தை ஆராவமுதனுக்கு முதலிடம் அளிக்கிறார் திருமழிசையாழ்வார். அதோடு மட்டுமின்றி ''நடந்த கால்கள் நொந்தவோ... பேசுவாழி கேசனே'' என்ற பாடலின் மூலம் - முன்னொரு காலத்தில் இராமனாக அவதரித்த போது, காடு, மலை முதலிய பிரதேசங்களில் நடந்ததனாலும், இராவணனைக் கொல்ல இலங்கைக்குச் சென்றதனாலும் கால்கள் நொந்த ஆயாசம் தீரச் சயனித்திருக்கிறாயோ? பூமிப் பிராட்டியை பாதாளத்திலிருந்து மீட்க எடுத்த முயற்சியின் களைப்பினால் கண் வளர்ந்திருக் கிறாயோ? எதனால் என்பதை, எழுந்தருளி இருந்துக் கூறவேண்டும் என்று பரிவுடன் ப்ரார்த்திக்க, ஆராவமுதனும் அந்நிலையிலேயே அதாவது

உத்தான சாயியாகவே இருந்து இன்றளவும் அவ்வாறே காட்சியளிக்கிறார் என்ற அழகுமிகு ஆராதவமுதனின் கருணையை விவரிக்கிறார்.

இப்படிப்பட்ட விசேஷங்களோடு கூடிய காவிரிக்கரையிலமைந்த குடந்தை மாநகர்க் கிடந்த ஆராவமுதனின் திவ்ய க்ஷேத்ரத்தில்; பன்னிரெண்டு ஆண்டிற்கொருமுறை குரு சிம்ம ராசியில் பிரவேசிக்கும் மகாமகத்தன்று, நாமும் இந்நகர் சென்று மகாமக பொற்றாமரைக் குளங்களில் நீராடி பாவங்கள் நீங்கிப் பெருவாழ்வு வாழ்வோமாக.



திருப்பாலைத்துறை நெற்களஞ்சியம்

திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் திகழாமல், மக்கள் நலனுக்காகப் பல்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றிவந்தன. மக்கள் விளைவிக்கும் நெல்லை இயற்கையின் சீற்றங்களால் அழியாமல் பாதுகாக்க கோயில்கள் தோறும் நெற்களஞ்சியங்களை அமைத்திருந்தனர். அத்தகைய நெற்களஞ்சியங்கள் சிலவற்றைத் திருவரங்கம் திருக்கோயிலில் இன்றும் காணலாம். தஞ்சாவூர் மாவட்டம் திருப்பாலைத்துறை சிவாலயம் திருஞானசம்பந்தரின் பதிகம் பெற்ற தலம். இங்கு தஞ்சை நாயக்க மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பெற்ற மிகப்பெரிய நெற்களஞ்சியம் உள்ளது. வட்ட அமைப்பில் கூம்பு வடிவக்கூரையுடன் ஏறத்தாழ 60 அடி உயரத்துடன் செங்கற்களால் இக்களஞ்சியம் கட்டப் பெற்றுள்ளது. அழியும் நிலையில் இருந்த இக்களஞ்சியத்தை தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையினர் அண்மையில் புதுப்பித்துள்ளனர்.

தளி அர்ச்சிப்போர்

இரா. சிவபாலன், எம்.ஏ., எம்ஃபில்., ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி, சிவகாசி.

சைவசமயம் வேதத்தைப் பொதுவாகவும் ஆகமங்களைச்சிறப்பாகவும் கொண்டது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களும் ஆகமங்கள்கூறும் நெறியே. இவை நான்கும் பதியாகிய சிவனை அடையும் வழிகள். சைவசமயத் தோத்திர, சாத்திரங்கள் ஆகமங்களை அடியாகக் கொண்டவை. தென்னாட்டில் ஆகம வழிபாடு முதன்மைப் படுத்தப்பட்டபோது இதற்கெனத் தோன்றிய மரபினராகச் சிவப் பிராமணர்கள் திகழ்ந்தனர். பண்டைய பல்லவ, சோழ, பாண்டியப் பேரரசுக் காலத்தே அவர்கள் பெருமதிப்புடன் சமுதாயச் செல்வாக்கு மிக்கோராகத் திகழ்ந்துள்ளனர்.

சமயக்குரவருள் முதல்வரான திருஞான சம்பந்தர் காலத்தே வைதிக வழிபாடே பெரும்பான்மை இடம் வகித்திருந்தது போலும். ''வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கத்'' தோன்றியவராகப் பெரிய புராணம் இப்பிள்ளையைச் சுட்டுகிறது. ஆனால் சுந்தரர் காலத்தே ஆக வழிபாடுகளும், அதற்கெனத் தனிக்குல மரபும் சைவசமயத்தில் கொடுமுடியாகத் திகழ்ந்துள்ளது. இதனால் சுந்தரர் தான் பிறந்த மரபினையே,'' முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கும் அடியேன்'' என்று இறைவராய்க் கூறுகிறார். வேதநெறியிலிருந்து ஆகம நெறிக்குக் கிடைத்த அங்கீகாரமாக இதனைக் கொள்ளலாம். திருமேனி தீண்டுவோரைத் தொகையடியார் களாக்கிச் சமய, சமுதாய அங்கீகாரத்தைச் சுந்தரர் அளித்திருப்பது இங்கு உற்றுநோக்கத்தக்கது. தமிழில் ஆகமங்களை முதன்மையாகக் கொண்ட ஆதிசைவ மரபினைக் குறிப்பிடும் முதன்மை நூல் திருத்தொண்டர் தொகையே இம்மரபிலேயே சடையனார், இசைஞானியார், சுந்தரர், சடங்கவியார், ஹரதத்தர், ஈசான சிவம், உமாபதி சிவம் போன்ற புகழ்பெற்ற அடியவர்கள் தோன்றியுள்ளனர்.

பண்டைய கல்வெட்டுகளில் இம்மரபினர் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகள், உருத்திரர்கள், பட்டுடைய உருத்திரர்கள், தளி அர்ச்சிப்போர், தளி உடையோர், பட்டன், சிவப்பிராமணன் என்று சுட்டப்பட்டுளனர். சமூக அமைப்பில் கோயில் வளர்ச்சி நிலையைத் தொடங்கும் போதே இவர்கள் பெரு மதிப்புப் பெற்றிருந்தது வியப்பைத் தருகிறது.

பல்லவ அரசன் முதலாம் பரமேசுவரவர்மன் எடுப்பித்த கூரம் வித்யாவிநீத பல்லவ பரமேஸ்வர கிருஹத்தில் தளிஅர்ச்சிப்போருக்கு அர்ச்சனா போகமாகப் பொருளும், மனையும் அளித்த செய்தியைக் கூரம் செப்பேடு கூறுகிறது. இதில் வேதம் கற்ற அந்தணர்கட்குப் பிரமதேயமும் தளி அர்ச்சிப்போர்க்கு சூலக்கொடையும் அளிக்கப் பட்டுள்ளது. இச்செய்தி வேதப் பிராமணர் களிலிருந்து சிவப்பிராமணர்கள் வேறானவர்கள் என்பது உறுதியாகிறது. இதில் அரசனிடம் நிவந்தம் பெற்ற சிவப்பிராமணன் ஆச்சார்ய பட்ட முடையவன் என்பதை ''கூரத்தாசாரியார் மகன் அனந்த சிவாசாரியார்'' என்று பெயர் சுட்டப் பட்டுள்ளதிலிருந்து அறியலாம். இத்தளி அர்ச்சிப் போரின் தொழிற்கடமைகளைக் கல்வெட்டுகள் வகைமைப் படுத்தியுள்ளன.

1. திருத்தளி இறைவனாகிய சிவனை அர்ச்சிப்பது.

2. இறைவனுக்குத் திருமுழுக்குச் செய்வது.

3. சந்தியா தீபம், திருநொந்தாவிளக்கு ஏற்றுவது.

4. திருமஞ்சனநீர் கொணர்தல், திருவமுது அட்டல், படைத்தல் பரிகலன்களைச் சுத்தமிடல்.

ஸ்ரீ பலிக்குத் தூபமும் தீபமும் கொண்டு பரிசாரகம் செய்வது.

என்ற ஐந்து தொழிற்கடமைகளை உடையவர் களாதலால் இவர்கள் பஞ்சாசார்ய தேவ கன்மிகள் என்றழைக்கப்பட்டனர். 'பஞ்சாசார்யர்' என்ற

சொல்லுக்கு ஐவர் குழு, ஐந்து கடமை (ஆசாரம்) செய்வோர் எனப் பொருளாகும். ஆகம முறைப் படிச்சிவனது நிர்மாலியம் சண்டேசருக்கு உரியது. இறைவனது நிர்மாலிய உடமை அர்ச்சிப்போருக்கு உரியதாதலால் 'ஆதிசண்டேஸ்வர தேவ கன்மிகள்' என்றும் இவர்கள் அழைக்கப்பட்டனர். மேலும் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் ''இக்கோயிற் குடங்கொடு குச்சியுங் கொண்டு கோயில் புகுவார்'' என்று பூசிக்கும் நம்பிகளின் தொழிற்பாட்டினைச் சுட்டிகின்றன. இச்செய்தி கொங்கினில் கோயில் வழிபாட்டு நெறியில் ஆகம மரபினர் தம் குலச் செழுமையை விளக்குவதாக அறியலாம். இவ்வாறு குடம் கொண்டு திருமஞ்சனம் செய்தலும் தருப்பையால் கிரியைகள் செய்வதும் புதிய வரவானதால் குடமும் குச்சியும் தொழிற்படு கடைமைக்குரிய சின்னமாயிற்று. இப்பெருமக்களின் சமுதாயப் பணிகளைக் கல்வெட்டுகள் வகைப் படுத்தியுள்ளன.

1. ஸ்ரீ பண்டாரத்திலே நிவந்தத்திற்கு ஒடுக்கின மூலதனத்திற்கு உரிய பொலிசை (வட்டி)யைப் பெற்று நிவந்தத்தை இடையறாது நடத்துதல்.

2. அரசின் அனுமதியுடன் சாசனித்து நீர்வார்த்து அட்டித்தருதல்.

3. நிவந்தக்காரர்கள் அளிக்கும் நிலம், பொன், பசு, சாவாமூவா பேராடு ஆகியவற்றை நேரிடையாகப் பெற்றுக் கொண்டு இறைவழிபாடு நிகழ்த்துதல்.

4. காணியாட்சி உரிமை, அர்ச்சனா போகம், அர்ச்சனா விருத்தி ஆகியவற்றைப் பெரும் உரிமை.

உபையத் தீட்டு அளிக்கும் தகுதி உடையவர்களாகத் திகழ்வது போன்றவற்றை வகைப்படுத்தலாம்.

நிவந்தத்திற்குரிய முதலை அழிக்காது பொலிசை யால் வழிபாடு செய்வது இவர்களது தலையாய கடமை ஆகும். இதனைச் சிவப்பிராமணர்களே சாசனத்தில் உறுதிப்படுத்துவதை,

''திருப்பணிகளுக்கு உடலாகச் செல்வதாக முதல் குடுத்த காசு இருபதும் இக்கோயில்ச் சிவப்ராமணன் தீண்டிக் கூத்தனுஞ் சூரியன் தாங்குவானும் இப்பசுமுப்பதும் இக்காசு இருபதுங் கைக்கொண்டு சந்திராத்தித்தவரை இப்பசுவாற் திருநந்தா விளக்கு ஒன்றும் செலுத்தி முதலழியாதே வைத்து''

என்ற முதலாம் குலோத்துங்களின் செய்யாறு வன்மீகநாதர் கோயிற்கல்வெட்டு வழி அறியலாம்.

பஞ்சாசார்ய தேவகன்மிகள்

பட்டாடை அணிந்து தளி அர்ச்சிப்பது தீட்டிற்கு அப்பாற்பட்டது. எனவே பட்டாடை அணிந்த இவர்களது ஐந்து கடமைகளை உத்தம சோழனது அவனிகந்தர்ப்ப ஈஸ்வரத்துக் கல்வெட்டு, ''நாளாலி ஸ்ரீகோயிலில் கூத்தப் பெருமானையும் ரிஷப வாகனப் பெருமானையும் முதலாக மற்றுமுள்ள திருமேனிகளையெல்லாம் அர்ச்சிப்பானொருவனும், இவர்க்கே உபசரிப் பானொருவனும், திருவமுது அடுவானொருவனும், ஸ்ரீ பலிக்கு விளக்கும் தூபமும் காட்டுவானொரு வனும், பரிகலங்கள் மாற்றி பூசக் கடவானொரு வனுமாக இப்பணிகள் செய்துடையாரறுவர்க்கு'' என்று விளக்கமாகப் பணிமுறையைச் சுட்டுகிறது. இப்பஞ்சாசார்யர்கள் திருமேனி தீண்டியும், அருச்சித்தும் தொழிற்கடமை இயற்றுவதால் இன்றளவும் கேரளத்தில் தளி அர்ச்சிப்போரைத் 'திருமேனி' என்றழைக்கின்றனர்.

ஸ்ரீ கார்யம் செய்வோர்

சோழர்கல்வெட்டுகளில் சிவப்பிராமணர்கள் திரிபுவனசண்டேஸ்வரகன்மிகள், மகாதேவ கன்மிகள், மகேஸ்வர கன்மிகள், ஸ்ரீகார்யம் செய்யும் சிவப்பிராமணர்கள் பொதுப்பெயராலும், பட்டன், பண்டிதன் என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப் பட்டனர். இவர்களது நூலறிவு, கல்விப் பெருமை யினை முதலாம் இராஜராஜனது திருக்கோவிலூர்க் கல்வெட்டு,

''நான்மறை தெரிந்து நூன்முறை உணர்ந்து
ஆங்கு அருச்சனா விதியோடு தெரிச்ச
ஆகமத் தொழில் மூவெண்பெயருடைய
முப்புரி நூலோர்''

என்று சுட்டுகிறது. இம்மன்னன் காலத்தே அரசன், அரசமாதேவியின் பெயராலே சிவப்பிராமணர் கட்குப் 'பட்டன்' என்ற சிறப்புப் பெயர் வழங்கப் பட்ட செய்தியை,

திருவையாறுடையார் சிவபிராமணன் ஆரூரன் ஐயாறனான ராஜராஜபட்டன்.

சிவபிராமணன் வாளுவன் சிவபாத சித்தன் பரதேவனான ஏலோகமாதேவிப் பட்டன்

என்று முதலாம் ராஜராஜன், அவனது பட்டது அரசி தந்த சக்தி விடங்கியான உலோக மாதேவியின் பெயராலே 'பட்டன்' என்ற விருது வழங்கப்பட்டடிருப்பதைத் திருவையாற்றுக் கல்வெட்டு உணர்த்துகிறது.

இம்மரபினரிடையே குழுறையும் வழக்கத்தில் இருந்துள்ளமையை விக்கிரம சோழனது திருநெய்த் தானத்துக் கல்வெட்டு, ''அறுபத்து நால்வபட்டன், நாற்பத்து எண்ணாயிரத்தோன், எழுவணை சிவன்'' என்று இவர்களது குழுவினைப் பெயருடன் சுட்டுகிறது. தளி அர்ச்சிக்கும் இம்மரபினர் முறையே இருபது, முப்பது, நாற்பது, நாற்பத்து எட்டு தொண்ணூறு என்று தமக்குள்ளே வட்டம் அமைத்துப் பணிச்சுழற்சி (Turn Duty) அடிப்படையில் ஸ்ரீ கார்யம் செய்தமையைக் கல்வெட்டுகள் புலப்படுத்தியுள்ளன. இத்துடன் பெயர்களில் தொழிற்நிலை, கோத்திரம் ஆகியனவும் முதன்மைப் படுத்தப்பட்டிருந்தமையை பரத்துவாசி ஐய்யடிகள் ஐயாறன், கௌசிகன் திருவாரூரு டையாரைப் பூசிக்கும் குரவசேரி ஸ்ரீ மூலத்தான முடையான் பட்டன் போன்ற பெயர்களில் அறியலாம்.

கணப்பெருமக்கள்

கோயிலை மையமாகக் கொண்டு பணி செய்யும் குழுக்களாக மூலபருடையார், பதிபாத மூலத்தார், தேவ கன்மிகள், அகநாழிகைப் பணி செய்வோர், சமயத்தோர், கணப்பெருமக்கள் போன்றவை இயங்கி வந்தன. சோழர் காலத்தே ஸ்ரீ மூலட்டானத்துப் பெருமானடிகளைத் தீண்டுவோரும், தளி அர்ச்சிப்போரும் குழு அமைப்பில் ஆதிக்கம் பெற்றிருந்தமையை அவர்கள் தம் பெயரிலே அமைந்துவரும் முன்னொட்டு (prefix) பின்னொட்டு (Suffix) ஆகிய அடைவுகளான ஸ்ரீ மூலத்தானமுடையான் பட்டன்' ஸ்ரீ கார்யம் செய்கின்ற நக்கன் ஸ்ரீ மாறபட்டன் போன்ற பெயர்கள் வழி அறியலாம். இதனைச் சுந்தரசோழனது மேலப்பழுவூர்க் கல்வெட்டு ஒன்று

''அவனிகந்தர்ப்ப ஈஸ்வரத்து தேவ கன்மிகளோமும், பதிபாத மூலத்தோமும், பட்டுடையோமும், சமையத்தோமும் மற்றும் எப்பேர்ப்பட்டடோமும்'' என்று முறைப்படுத்தும் போது அர்ச்சிப்போர்களே முதனிலை பெற்றுள்ளமை புலப்படுகிறது. இத்தகைய சிறப்புப் பெற்ற இம்மரபினர் இடையே போலிகள் தோன்றிய தாலும் ஊழல் புகுந்ததாலும் ஆளும் கணத்தாரால்

தண்டனை பெற்ற செய்தியைக் குடுமியான் மலைக் கல்வெட்டுகள் உறுதிப் படுத்தியுள்ளன. இதனால் மாற்று வழியாக மலை நாட்டிலிருந்து கி.பி.13-ஆம் நூற்றாண்டில் மலையாளப் பிராமணர்கள் தளி அர்ச்சிக்கும் பணிக்குப் பாண்டிய நாட்டில் குடியமர்த்தப்பட்ட செய்தியை வீரபாண்டியனின் திருநெல்வேலிக் கல்வெட்டு,

''மலைமண்டலத்து மலையாளப் பிராமணரில் ஆராதிக்கும் மேல்மனை நாராயணன்'' என்று குறிப்பிடுகிறது. இவர்களே இன்றைக்கு நம்பூதிரிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

தொண்ணூறு வட்டம்

பாண்டிய நாட்டில் நெல்லை - ஆத்தூரில் அமைந்த ஜடாவர்மன் வல்லப தேவனின் கல்வெட்டு சிவப்பிராமணர்கள் தம் தொழில் முறையில் அமைத்திருந்த வட்டத்தைக் குறிப்பிடுகிறது. அத்தோடு மட்டுமின்றிக் காணி ஆட்சி பெற அடிப்படைத் தகுதியாகத் தொண்ணூறு நாட்கள் கோயிற்பணி செய்தாக வேண்டும் என்றும் உறுதிப்படுத்துகிறது. இதனை,

''சந்திராதித்தவற் செய்வதாகப் பொலியூட்டு இக்கோயிலில் தொண்ணூறு வட்டமுறை செய்து காணியான சிவப்பிராமணர்க்கு ஸமைந்து அடைவு முதலிகள் பாரத்து வாசன் பார்க்கரன் தேவநான நித்த கல்யாணபட்டனும் பாரத்துவாசன் பார்க்கரன் சூரிய தேவநான வீரபத்திர பட்டனும், பாரத்துவாசன் சிவதேவன் சோமனும் காடன் சிங்கன் இருபத்தைவனும் உள்ளிட்ட சிவப்ராமணரோம்'' என்று கல்வெட்டு சுட்டுகிறது. இக்கல்வெட்டு குறிப்பிடும் நால்வர் குழுவில் ஒவ்வாருவருக்கும் 90 நாட்கள் பணிச் சுழற்சி முறை வைத்து ஒரு ஆண்டினை நான்காகப்பகுத்துப் பணிமுறைமை வகுத்துள்ளனர். (4x90=360) இந்நால்வருள் முதல் மூவரும் ஒரு பிரிவாகவும், காடன் சிங்கன் என்பான் வேறு பிரிவினைச் சார்ந்தவன் என்பதும் குறிப்பிடத் -தக்கது. இக்கல்வெட்டு சுட்டும் நித்த கல்யாணப் பட்டன், வீரபத்திரபட்டன், சிவதேவன்சோமன் ஆகிய மூவரும் பாரத்துவாசகோத்திரப் பிரிவினையும், காடன் சிங்கன் இருபத்தைவர் குழு என்ற பிரிவினையும் சார்ந்தவன் என அறிய முடிகிறது. இம்முதல் மூவரும் அடைவு முதலிகளாக ஏனைய சிவபிராம்மணர்களுக்குள் முன்னுரிமை பிரதி நிதித்துவம் (Senior Representative system) பெற்றோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருஞ்சிறப்புக் பெற்றிருந்த இம்மரபு விசய நகரப் பேரரசுக் காலத்தே ஏற்பட்ட சமுதாய, பொருளாதார மாற்றத்தால் காணியாட்சி மாற்றம் பெற்றது. இதனால் நிலைகுன்றிய இம்மரபினர் இன்று தொழில்முறைக் கலைஞர் களாகப் பெயரளவில் 'குருக்கள்' என்று கருதப் படுகின்றனர். காலவெள்ளம் அடித்துச் சென்ற வரலாற்று எச்சங்களில் சிலவற்றை மட்டும் இன்று ஆவணங்களாகக் கொண்டு இச்சமுதாயம் 21-ஆம் நூற்றாண்டில் இயங்கி வருகின்றது என்பது வரலாற்று மறு சுழற்சி எனலாம்

கும்பேசர் குறவஞ்சி

முனைவர். ராம. கௌசல்யா
முதல்வர், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு.

இயல், இசை, நாட்டியம் என்னும் முத்தமிழின் கூட்டு குறவஞ்சி நாடகம் ஆகும். பவனி வரும் இறைவனையோ அரசனையோ தலைவனையோ காணும் தலைவி அவன் மீது மையல் கொள்கிறாள். அவனை அடையத் தவிக்கிறாள். அவளுடைய சகி குறி செல்லும் குறத்தியை அழைத்து வருகிறாள். குறத்தி மலை வளம் நாட்டு வளம் தன்குலப் பெருமைகளை யெல்லாம் பேசி தலைவியின் கையைப் பார்த்து அவள் கவர்ந்தவன் யாரெனக் கூறி அவனை அவள் அடைவது உறுதி என்றும் நல்வாக்கு அளிக்கிறாள். பரிசுப் பொருட்களைப் பெற்றுச் செல்கிறாள். சிங்கியை குறத்தியை அவள் கணவன் தேட எதிர்ப்படும் அவளிடம் கேள்விகள் கேட்க அவளும் சளைக்காமல் பதில் சொல்கிறாள். இருவரும் சமாதானமாகி மகிழ்கின்றனர். மங்களத்துடன் நாடகம் நிறைவு பெறுகிறது. இது குறவஞ்சி நாடகத்தின் பொதுவான அமைப்பாகும்.

ஏராளமான குறவஞ்சி நாடகங்கள் இருக்கின்றன. அவற்றுள் கும்பேசர் குறவஞ்சி குறிப்பிடத்தக்கதாகும்.

இயற்றியவர்: கும்பேசர் குறவஞ்சி நாடகத்தை இயற்றியவர் பாபநாச முதலியார் என்பதை நூலின் பாயிரம் தெரிவிக்கிறது. தம் பெயரையே அடையாளம் சொல்லாகக் கொண்ட (முத்திரை) ஸ்வராம முத்திரைக்காரராக இவர் விளங்குகிறார். நூலில் ஆங்காங்கே இதனைக் காணலாம். சான்றாக

''அவனிபுகழ் முத்தமிழ்க் கவிராச சேகரன்
அருள்பாப ராச நேசன்
ஆதிகும் பேசர்மேற் குறவஞ்சி நாடகம்
அன்புட னுரைத்து வைத்தான்''
(பாயிரம்)

''...குறத்தியாரே தெரிசனம் பாவநாசஞ் செய்திருந் தலர் சொல்வீரே''
(தலைவி தலங்களை வினாவுதல்)

''பாயவி நாசர் தந்த பைந்தமிழ் வாழிதானே''
(வாழ்த்து)

ஆறொன் பதுக்கு மரும்பாவ ராசம்
(குறத்தி வருகை)

தெரிசனம் பாவநாச மென்ற அகல கிரிகள்
(குறத்தி மலைகளைக் கூறுதல்)

இப்படிப்பட்ட ஸ்வநாம முத்திரைதவிர தல முத்திரை/க்ஷேத்திர முத்திரை, தேவதா முத்திரை ராஜ முத்திரை போஷக முத்திரை, பிரபந்த முத்திரை ஆகிய முத்திரை வகைகளை ஆங்காங்கே பொருத்தமாகப் பொருள் கெடாமல் அமைத்துத் தந்திருக்கிறார்.

பாபநாச முதலியார் : இந்நூலாசிரியரான பாபநாச முதலியார் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் வாழ்க்கை குறித்த முழுமையான செய்திகள் கிடைக்கவில்லை. இவர் இயற்றிய மூன்று கீர்த்தனைகள் கிடைக்கின்றன. அவை

நடமாடித் திரிந்த - காம்போதி-கண்டசாபு
முகத்தைக் காட்டி - பைரவி - மிஸ்ர சாபு
பேறும் நல்ல த்யாகர் - பூர்விகல்யாணி -மிஸ்ரசாபு

இவர் பாடல்கள் ராக பாவம் ததும்ப உள்ளன. தாளங்களும் சாதாரணமாகப் பழக்கத்திலுள்ள ஆதி தாளத்தில் இல்லாமல் சாபு தாளங்களில் அமைந்துள்ளன. இவை பழிப்பது போலப் புகழும் நிந்தாஸ்துதி என்னும் வகையில் உள்ளன. இவர்தம் படைப்பான கும்பேசர் குறவஞ்சி குறவஞ்சிகளுக்கே உரிய முத்தமிழ் ஆட்சியோடு இவர்தம் தனி முத்திரைகளையும் பதித்திருக் கின்றன. இத்தகைய சிறப்புக்கள் காரணமாக

இவர் முத்தமிழ்க் கவிராஜ சேகரர் என்று கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

பதிப்பு : டாக்டர் உ.வே. சாமிநாததையர் அவர்கள் கும்பேசர் குறவஞ்சியின் ஏட்டுப் பிரதிகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தாம் அதனைப் பதிப்பிக்க எண்ணி வைத்திருந்திருக்கிறார்கள். ஐயரவர்களுடைய திருமகனார் எஸ். கல்யாண சுந்தரம் ஐயர் அவர்களால் 1944 இல் அடையாறு உ.வே.சா. நூலகத்தின் மூன்றாம் வெளியீடாக கும்பேசர் 'குறவஞ்சி நாடகம்' பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. இதன் முழுப்பொறுப்பையும் நூல் நிலையத் தலைவராக விளங்கிய ருக்மணி தேவி அவர்கள் ஏற்றிருந்திருக்கிறார்கள். இதன் இரண்டாம் பதிப்பு 1961 இல் வெளிவந்திருக் கிறது. மூன்றாம் பதிப்பும் அதே நூலக வெளியீடாக ம.வே.பசுபதி, இரா. மேகலா, கா. சாயிராம் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு 2002 இல் வெளிவந்திருக்கிறது.

காலம் : தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னனான ஏகோஜி காலத்தில் இயற்றப்பட்ட குறவஞ்சி இது. காப்புப் பகுதியில் இலக்குமி துதியாக வரும் பாவில்

''இரவலர் தருவான் தஞ்சையேகோசி ராசன்'' (யாசிப்பவர்களுக்குக் கற்பகத்தரு போன்றவன்) என்றும், குறத்தி வாசல் வளம் கூறும் பாடலின் மூன்றாவது சரணத்தில்,

துளசி ராசனருள் சுந்தர புசபெல
வளவ னேகபதி மகரா சன்பணி
(வாசலிது)

என்றும் மன்னர் ஏகோசி போற்றப்படுகிறார். ஆக, இது தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரான ஏகோஜி (1676-1683) காலத்தில் எழுந்த நூலாகும்.

மேடையில் நடிக்கப் பெற்றமை : கும்பகோணம் பேட்டை நகரில் வசித்த செல்வந்தரான கோப்புக் குமர பூபன் என்பாரின் திருமகனார் கோப்பு நடராச செட்டியார் என்பவர் நாட்டியக் கலைஞர்களைக் கொண்டு நடிக்கச் செய்திருக்கிறார் என்ற செய்தி பாயிரத்தின் வாயிலாகத் தெரிகிறது. இவர் ஒரு செல்வந்தர்; கோயில் தர்மகர்த்தாவாக விளங்கியவர்; கும்பேசுவரர் கோயில் திருப்பணிகள் பல செய்தவர்; பல அணிகலன்களும் அளித்தவர்; இவர் ஒரு மகாமகத் திருவிழாவில் அம்மன் தேர் சாய்ந்து சிவபதம் அடைந்தார்; ஆகிய செய்திகளை முதற் பதிப்பின் முகவுரை தெரிவிக்கிறது.

இக்குறவஞ்சி கும்பகோணத்தை அடுத்த சூலமங்கலத்தில் 1835-1875 காலகட்டங்களில் ஆண்டு தோறும் வசந்தோற்சவத்தின் நான்காம் நாள் நடிக்கப்பட்டதாகப் பேராசிரியர் சாம்பமூர்த்தி தெரிவிக்கிறார். சூலமங்கலம் பாகவத மேளா நாடகங்கள் நிகழ்ந்தப்பட்ட ஊர். இங்கு கலைஞர்கள் ஆடுவதற்குக் கிடைத்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

அண்மைக் காலத்தில் 1967 இல் காலஞ்சென்ற கே.என். தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் இயக்கத்தில் சென்னையில் தமிழிசைச் சங்க பண்ணாராய்ச்சிக் கூட்டத்தில் மேடையேற்றப் பட்டது. சங்கீத கலாநிதி எம்.எஸ்.வசந்தகுமாரி அவர்கள் இதற்கு இசையமைப்புச் செய்து பாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கும்பேசர் குறவஞ்சி நூலமைப்பு : நூலின் தொடக்கமான காப்புப்பகுதி, கணபதி, அம்பிகை, சுப்ரமணியர், திருமால், பிரமன், கலைமகள், இலக்குமி துதிகளைக் கொண்டிருக்கிறது. பிறகு மரபான தோடயமும், மங்களமும் பாடப்பட்ட பிறகு, முதல் பாத்திரமான பிள்ளையார் பாத்திரப் பிரவேசம் நடைபெறுகிறது. இவர் நிருத்த கணபதி,

வல்லப கணபதி, கட்டியக்காரன் தோன்றி தலைவியான செகன் மோகினியின் வரவை அறிவிக்கிறான். செகன் மோகினியின் வருகை (ஆரபிராக அகவல்) அவள் பேரழமை வருணிக்கிறது. அற்புதமான கேசாதிபாத வருணனை. இவள் பொற்றாமரைக் குளத்தின் மேற்புறத்தில் நிற்கிறாள். அங்கு தவள விடைமேல் பவனி வந்த கும்பேசரைக் கண்டவள் மையல் கொள்கிறாள், துதிக்கிறாள். வசந்த காலத்து அந்தி நேரம் இவளுக்கு இங்கு ஆலமாய் (கரும்பு விஷமாக) கசக்கும் காலமாக இருக்கிறது. மன்மதன் (அடடா மன்மதப்பயலே), நிலவு (நிலவே இங்கேன் வாராய் என் நிலவரமறியாமல்), தென்றல் (வாவா தென்றலே வந்து பார்) ஆகியவற்றை வெறுத்துப் புலம்புகிறாள். தன் மையலைக் கும்பநாதருக்கு எடுத்துக் செல்ல 'சகி வந்தாளில்லையே' என்று தவிக்கிறாள். அப்போது அவளுக்கு அன்பான, சிறுவயது முதல் சிநேகம் பூண்ட, சகி வருகிறாள்.

சகியும் இவள் நிலைக்கு இரங்கி கும்பேசரை ஏத்துகின்றாள். 'குறி சொல்லக் குறத்தி வருவாள்; குறி கேட்கலாம்' என்று கூறுகிறாள். சகியின் கூற்றாக வரும் நீண்ட அகவலில் கும்பகோணத் -தின் பெருமை, நிலவளம், நீர்வளம், ஊரழகு, கும்பேசர் பெருமை, குறத்தியின் வருணனை ஆகியவை சிறப்பாகப் பேசப்படுகின்றன. குறத்தியைக் குறி சொல்ல அழைக்கிறாள் சகி. குறத்தியும் தோன்றி, கும்பேசர் கோயில் வாசல் வளங்களை உரைக்கிறாள். செகன்மோகினி வினவியபடி, மலைகள், கும்பேசர் நாட்டு மலை வளம், தேசங்கள், அண்டகோளத்தின் அதிசயம், நதிகள், தலங்கள் ஆகியவற்றைக் கூறுகிறாள். தேசங்களைக் கூறும்போது தொடர்புடைய புராணச் செய்திகளோடு கூறுகிறாள். சிலவறறின் பெயர்களை நேராகவும் (''அரசன் சுடலைக் காத்தருள் காசி தேசம்'' போல்வன) சிலவற்றின் பெயர்களைத் தொடர்புடைய செய்திகளால் புரிந்து கொள்ளும் படியும் (''அன்னை வாக்கிய பரிபாலனன் தேசம்'' போல்வன) தருகிறாள். தலங்களைக் கூறும் பாடலில் அனுபல்லவியில் சிற்றம்பலம் என்று தொடங்கி, மூன்று சரணங்களில் வரிக்கு நான்கு தலங்களாக 12 தலங்களின் பெயர்களைக் கூறுகிறாள். நேரடியாக ஊர்ப் பெயரைத் தராமல் புராணச் செய்திகளின் வாயிலாக அவற்றை உணர்த்துகிறாள். அப்பாடலின் முதல் சரணம் :

கலைச்சிக்கு வளைகின்ற கங்காள னாரூர்
கல்லானை வளர்கின்ற கழைதின்ற தோரூர்
வலச்செவிமேற் ப்ரணவந்தான் வழங்கி வருமோரூர்
மணலொருகாற் சிவலிங்க வடிவான தோரூர்
(தரிசிக்குந் தலஞ் சொல்வேனம்மே)

(இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஊர்கள்: திருப்பனந்தாள், மதுரை, விருத்தாசலம், இராமேசுவரம்).

தான் குறி சொன்னவர்களையும், அவர்களிட மிருந்து பெற்ற பரிசுகளையும் அடுக்குகிறாள். குறி சொல்ல செகன்மோகினியின் கையினைக் காட்டச் சொல்கிறாள். அவள் குலதெய்வம் கேட்கும் பொருள்களாக ஒரு பட்டியலை ஒப்புவிக்கிறாள். அவளுக்கொன்றும் வேண்டாமாம். கும்பநாதர்க்கு அவள் மேல் தயவுண்டாம். சகன்மோகினிக்குக் குறி பலிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவும் கேட்கிறாளாம். முறைப்படி சடங்கு களுடன் தெய்வங்களை அழைக்கிறாள். தலைவி மனத்திலுள்ளவர் கும்பலிங்கர் என்று அவர் அடையாளங்களைக் கூறுகிறாள். சிவபெருமானின் பெருமைகளடங்கிய அடையாளங்களை சரளமான நடையில் விவரிக்கிறாள். ராசியில் ஒன்று சொல் என்று கேட்க கும்பராசி என்றும் நூற்றியெட்டில் ஓரிலக்கம் கேட்க 12 என்றும் சகன்மோகினி

விடையிருக்கிறாள். நீ ஆசை வைத்தவள் குடந்தைக் கும்பலிக்கேசர் இதோ வந்தார் என்று குறி சொல்லி முடிக்கிறாள் குறத்தி. சம்மானம் பெற்றுக் கொள்கிறாள்.

அடுத்து குறவஞ்சியின் பிற்பகுதி தொடங்குகிறது. சிங்கனின் கையாளான குளுவனும் பின்னர் சிங்கனும் தோன்றுகின்றனர். சிங்கியைக் காணாமல் தேடிக் கொண்டிருக்கிறான் சிங்கன். பறவைகளுக்குக் கண்ணி வைத்தலும் அவைபடுத்தலுமாகிய பகுதிகளில் பலவகைப் பறவைகளின் பெயர்கள் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ காணக் கிடைக்கின்றன. சிங்கியின் பிரிவால் தவிக்கும் சிங்கன் அவள் அடையாளங்களையும் அவள் குணங்களையும் விவரித்துப் புலம்புவதோடு அவளைக் கண்டு பிடித்துத்தந்தால் அவருக்கு வேண்டியதெல்லாம் தருவதாக பட்டியலொன்றும் தருகிறான். அப்போது அங்கு வரும் சிங்கியைக் கண்டு சிங்கன் ஏச, அவளும் எதிர் பேசுகிறாள். இருவருக்கும் வாக்கு வாதம் நடக்கிறது. இருவரும் சமாதானமாகி ஆனந்தமாக இருக்கும்போது அவர்களுக்குக் காட்சிதர மங்கையுடன் கும்பநாயகர் வருகின்றார். தரிசனம் தருகிறார். வாழ்த்து விருத்தத்துடன் நாடகம் நிறைவடைகிறது.

பாடல்களின் வகைகளும் அமைப்பும்

இந்நாடகத்தில் ஆசிரிய விருத்தம், அகவல், விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா ஆகிய பா வகைகளுடன் கீர்த்தனைகளும் இடம் பெற்றிருக்கின்றன. தரவு கொச்சகக் கலிப்பாக்கள் விருத்தம் என்று பிரதிகளில் காணப்பட்டமையால் அவ்வாறே பிரசுரித்திருப்பதாக முதற்பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோடயம், மங்களதரு ஆகியவை நாடகத்தின் தொடக்கத்தில் இடம் பெறுகின்றன. பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் அமைப்புட னேயே பெரும்பாலான பாடல்கள் காணப் படுகின்றன. பல்லவி, சரணங்கள் மட்டும் கொண்டவையும், அங்கப்பாகுபாடின்றி சரணங்களாகவே காணப்படுகின்ற பாடல்களும் உண்டு. பாடல்களில் காணப்படும் மூன்று சரணங்களும் பொதுவாக 4 அடிகளைக் கொண்டிருக்க குறத்தி மலைவளம் கூறும் பாடலில் சரணங்கள் நீண்டு காணப்படுகின்றன.

இராக தாளங்கள்

எல்லாப் பாடல்களுக்கும் இராகங்கள் குறிப்பிடப்படவில்லை. சிலவற்றிற்கு மட்டுமே இராகங்கள் தரப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் இராகங்கள் பந்துவராளி, மத்தியமாவதி, சௌராஷ்டிரம், நீலாம்பரி, சங்கராபரணம், பைரவி, ஆரபி, காம்போதி, அடானா என்றும் பல்லவி, அனுபல்லவி கிடைக்காமல் சரணம் மட்டும் கிடைத்திருக்கும் 37 வது பாடலின் இராகம் 'செண்டா' என்றும் உள்ளது. இதன் இராகம் 'கண்டா'வாக இருக்கலாம். செகன்மோகினி தோன்றும் அகவலுக்கும் ஆரபி என்று இராகம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாளங்கள் நாடகம் முழுவதற்குமே குறிப்பிடப்படவில்லை.

ஜதிகள்

பொதுவாக, குறவஞ்சி நாடகங்கள் பாரநாட்டியத்தை அடிப்படையாக் கொண்டவை. ஆகவே ஜதிகளுக்கு சிறப்பிடம் உண்டு. நர்த்தன கணபதி ''திந்திமி திந்திமி திங்கணதோமென்று'' வருகிறார். கட்டியக்காரன் தோன்றும் பாடலின் அனுபல்லவி முழுதும், சரணங்களின் கடைசி வரிகள் ஆகியன ஜதிகளாகவே உள்ளன.

குறவஞ்சியோ ''கிறுதக் கிடதிமி'' யடைவுட னெழுந்து வருகிறாள்.

பாத்திரங்கள்

இக்குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் மங்களாம்பிகை உடனுறை அருள்மிகு கும்பேசுவரர் தலைவி : சகன்மோகினி சகி, குறத்தி, குறவன், குளுவன் ஆகியோர் ஏனைய பாத்திரங்கள். நாடகத்தின் தொடக்கத்தில் விநாயகரும், கட்டியக்காரனும் தோன்றுகிறார்கள்.

தலைவி சகன் மோகினியை விட குறத்தியே அதிகம் இடம் பெறுகிறாள். அவள் தோன்றும் போதும், பிறர் வாக்கிலும் அவளின் பாத்திரம் மிக அழுத்தமாக இருக்கிறது. ''இவள் நாட்டுக் குறத்தியல்ல; தெய்வக் குறத்திக்குள்ளே ஞானக் குறத்தி. மாத்திரைக் கோலும் குறக்கூடையும் வைத்திருக்கிறாள். பொய்யுரையாதவள். மெய்க்குறி சொல்பவள். இன்பமாகப் பேசுபவள். தளுக்காக இருப்பவள். வாக்குச் சாதுர்யத்தால் எவரையும் வெல்லும் திறன் படைத்தவள். உமைபாகர் மகனுக்குப் பெண் கொடுத்த இனம் அவள். இவள் சாதியை வினவிய போது கூறும் பதில் இவள் சாதாரணக் குறப்பெண் அல்ல என்று திகைக்க வைக்கிறது.

''ஆண் பெண் இரண்டு சாதியல்லவோ'' நான் என்பது உண்மையில்லை. ''மேற்பூச்சே'' ''பெரியோர் நல்லோர் எங்கே பிறந்தென்ன'' அச்சொன்றும் அதில் இரண்டு அடையாளமாச்சே''

அச்சு-உடம்பு; இரண்டு - ஆண், பெண். இவள் அண்ட கோளத்தின் அதிசயத்தை விவரிக்கும் போதும் இவளை அதிசயித்து நோக்கவே தோன்றுகிறது. சுபத்திரைக்கு வந்திருப்பது சந்நியாசி அல்ல அரசன் என்று சொன்னவளும், குந்திக்குப் பிள்ளை மந்திரம் சொன்னவளும் இவள் தான். யுகங்களைக் கடந்து நிற்கும் இவளது பாத்திரப் படைப்பு பிரமிக்க வைக்கிறது.

மொழி நடை : பாத்திரங்களுக்கேற்ற மொழி நடை கையாளப்பட்டுள்ளது. கும்பேசர் வருணனை யின் கம்பீரமும், சிங்கன் - சிங்கி பாடல்களின் எளிமையும் பாத்திரங்களுக்கு உயிரூட்டுகின்றன. எதுகை, மோனை அழகுகளுடன் இசைப்பாடல்கள் அமைந்திருக்கின்றன.

சிரித்த முகமலர் முளைத்த தனகிரி
சுருட்டு மயிர்கன முறுக்க மலரிதழ்
கறுத்த விழிகண்ணைப் பறிக்க வருசின்னச்
சிறுக்கி யவள்தனக் கிறுத்த குடிநான்

போன்ற சரணங்களில் சந்தம் துள்ளுவதைக் காணலாம்.

கட்டியக்காரன், சகன்மோகினி, குறத்தி ஆகியோரின் வருகையைத் தெரிவிக்கும் பாடலில் (பாத்திரப் பிரவேசம்) தெலுங்கு மொழி வரிகள் காணப்படுகின்றன. பச்சிமம், நாளிகேரம் மோதகம், பூஷணம், பாஷணம் போன்ற சமஸ்கிருதச் சொற்களும் ஆங்காங்கே இடம்பெற்று உள்ளன. இவை பாபநாச முதலியாருடைய பன்மொழி அறிவைக் காட்டுகின்றன.

பழமொழிகள், பேச்சு வழக்குச் சொற்கள், உரையாடற் பாங்கு ஆகியன சூழ்நிலைக்கேற்ப அமைந்து கதையை அழுத்தமாகக் கொண்டு செல்கின்றன.

புராண, இதிகாசச் செய்திகள் : பிரளய காலத்தில் மிதந்து வந்த அமுதக் கலசத்திலிருந்து பிறந்தது குடந்தை என்பது முதல் குடந்தை தொடர்பான புராணச் செய்திகளையும், பொதுவான புராண இதிகாசச் செய்திகளையும் இயல்பாக நாடகம் முழுவதும் தாராளமாகத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

குடந்தை தொடர்பான, காவிரி, அரிசிலாறு, காசிபன் மடு, பொற்றாமரைக்குளம், பேராரவாரப் பிள்ளையார், வல்லப விநாயகர், மங்கை நாயகி, காயாரோகணம், குலோத்துங்கன் காளி, நவநதிகள், ஆராவமுதர், ஈழந்திறை கொண்டார், ஆராவமுதர் பகவதீர்த்தம், பல வயல்களின் பெயர்கள் போன்றவை காணப்படுகின்றன.

சிவபக்தர் : தலைவியின் விரகதாபத்தையும், சிங்கன் - சிங்கி பகுதிகளில் சிருங்காரத்தையும் இயல்பாகக் கையாளும் ஆசிரியர் கும்பேசர் தொடர்பாகப் பேசும் போது ஆழ்ந்த சிவபக்தராக விளங்குகிறார்.

இலக்கியத் திறன், கற்பனை வளம், அணி நலன்கள், பன்மொழி ஆற்றல், சரளமான சொல்லாட்சி, இசை நாட்டியப் பாங்கு, சிறந்த நாடக உத்தி, செவ்வியலின் கம்பீரம், நாட்டுப் புறக்கூறுகளின் பங்கு, அறிவியல், புவியியல், நாட்டு நடப்பியல் அறிவு இதிகாச புராண வரலாற்றுச் செய்திகள் ஆகியன பரக்கக் காணப்படும் கும்பேசர் குறவஞ்சி நாடகம் முத்தமிழ் கவிராஜ சேகரர் பாபநாச முதலியாரின் வெற்றிகரமான கலைப் படைப்பாகத் திகழ்கிறது.



குடந்தைக் கிடந்தான் கோயில்

அர. வசந்தகல்யாணி, எம்.ஏ., எம்.ஏ., டி.இ.ஏ.,
தொல்லியல் துறை, சென்னை.

**"அங்கமாறும் வேதநான்கு மாகிநின்ற வற்றுளே
தங்குகின்ற தன்மையாய்த டங்கடல்ப ணத்தலை
செங்கண்நாக ணைக்கிடந்த செல்வமல்கு சீரினாய்
சங்கவண்ண மன்னமேனி சார்ங்கபாணி யல்லையே"**

என்று திருமழிசையாழ்வார் தம் பாசுரத்தில் போற்றப்படும் குடந்தைக் கிடந்தான் கோயில் மிகச்சிறந்த வைணவக் கோயில். ஆழ்வார் பன்னிருவருள் பெரியாழ்வார் முதலாக பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் என எழுவர் மங்களாசாசனம் செய்த திருக்கோயில். 108 திவ்யதேசங்களுள் திருவரங்கம், திருவேங்கடம், குடந்தை என்று மூன்றாவதாக வைத்து எண்ணத் தக்க பெருமை பெற்றது. திருவரங்கத்திற்கு அடுத்து இக்கோயிலைத்தான் அதிக எண்ணிக்கையிலான ஆழ்வார்கள் பாடியுள்ளனர்.

தலபுராணம் : இத்தலத்தில் கோமளவல்லித்தாயாரை மணம்புரிதற் பொருட்டு சார்ங்கபாணி வைகுந்தத்திலிருந்து தேரில் வந்ததாகக் கூறப்படுகிறது. அதனால் தான் இக்கோயிற் கருவறை விமானம் தேரையொத்துக் கட்டப்பட்டிருப்பதாகக் கூறுவர். இருபக்கங்களிலும் குதிரையும், யானையும் பூட்டப்பட்ட கல் தேரைக் காணலாம். பக்கத்திற்கு இரண்டு சக்கரங்கள் வீதம் இரண்டு பக்கங்களிலும் நான்கு சக்கரங்களுடன் இத்தேர் காணப்படுகிறது. சக்கரங்களின் (உட்சுற்றில்) ஆரங்களில் இசைக்கலைஞர்கள் மத்தளம் கொட்டும் நிலையிலும், நாட்டியப் பெண்கள் நடனமாடும் நிலையிலும் 12 சிற்பங்கள் காணப்படுகின்றன.

இறைவனின் (ஆராவமுதன்) திருக்கோலம் : இக்கோயிற் சன்னதி கிழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. நீள்சதுரக் கருவறையில் பெருமாள் பாம்பின் மீது பள்ளிகொண்ட நிலையில், கிழக்கே திருமுகமண்டலங் கொண்டு காட்சியளிக்கிறார். திருக்கரங்களுள் வலக்கரம் சயனத்தில் ஊன்றிய நிலையிலும், இடக்கரம் முழங்கால்வரை உடலைத்தொட்டு நீண்டும் காணப்படுகின்றன. சர்வாலங்காரப் பிரியனான பெருமாள் தலையில் அழகிய கிரீடமகுடமும், காதுகளில் மகரக்குழையும், செவிப்பூவும், கழுத்தில் கண்டசரமும் அணிந்து, மணிகள் பதித்த தோள்வளையும், புரிநூலும், உதரகச்சையும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை நீண்ட ஆடைக்கட்டும், காலில் தண்டையும் பாடகமும் பூண்டு அழகேயுருவாகக் காணப்படுகிறார். திருமாலின் வலது மார்பில் ஸ்ரீவத்சம் காட்டப்பட்டுள்ளது. ஐந்தலை அரவில் பள்ளிகொண்டுள்ள பெருமாளின் திருமுகத்தருகே திருமகளும், திருவடியருகே பூமகளும் அமர்ந்து வணங்க, உந்திக்கமலத்தில் நான்முகனின் அமர்ந்த கோலமும், பக்கங்களில் சப்தரிஷிகள், சூரியன், தேவர், வானவர், கந்தர்வர், கின்னரர் ஆகியோர் ஆராவமுதனின் அழகுகோலத்தைக் காணும் நிலையிலும் அழகுறக் காட்டப்பட்டுள்ளனர். இத்திருக்கோலத்தைத் தான் நம்மாழ்வார்

**"ஆராஅமுதே அடியேன் உடல் நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய வுருக்கு கின்றநெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே" என்றும்,
"கன்னார் மதிள்சூழ்குடந் தைக்கிடந்தாய்"என்றும்,
"திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய் காண வாராயே" என்றும்**

நெஞ்சுருகப் பாடி மகிழ்ந்துள்ளார்.

இன்னும் அவரே ''அந்தணர் மந்திரமொழியுடன் வணங்க ஆடுஅரவு அமளியில் அறிதுயில் அமர்ந்த பெரும'' என்று ஆடுஅரவு அமளியிற் கிடந்த கோலத்தை நம் கண்முன் காட்டுகிறார்.

நின்ற, இருந்த, கிடந்த கோலங்களுள் இங்கு இறைவன் காட்சி தரும் இந்தச் சயனக் கோலத்தைக் குறிப்பாக உத்தான சயனம் என்று குறிப்பர். அதாவது அறிதுயிலிலும் எழுந்திருப்பது போன்ற பாவனையில் அமைந்திருப்பது உத்தான சயனம்.

போகசயனமூர்த்தியான இவர் அருள்தர எழுந்திருப்பது யாருக்காக? பன்னிருவருள் ஒருவரான திருமழிசைபிரானுக்காக.

"நடந்தகால்கள் நொந்தவோ நடுங்குஞால மேனமாய்
இடந்தமெய்கு லுங்கவோவி லங்குமால்வரைச்சுரம்
கடந்தகால்ப ரந்தகாவி ரிக்கரைக்கு டந்தையுள்
கிடந்தவாறெ ழுந்திருந்து பேசுவாழி கேசனே"

இப்பாசுரத்திற்கு ஏற்றவாறு சயனப்பெருமாள் சற்றே எழுந்திருப்பது போன்ற பாவனையில் இருக்கிறார். இவரே ஆராவமுதன் எனப் போற்றப்படும் கருவறைத் தெய்வம். தெவிட்டாத திருக்கோலம் என்பதால் தான் ஆராஅமுதன் என்று அழைக்கப்பட்டான் போலும்.

சார்ங்கபாணி : இக்கோயிலில் அருட்காட்சி தரும் உற்சவமூர்த்தியே சார்ங்கபாணி. இத்திருக்கோயில் இப்பெயராலேயே சார்ங்கபாணி கோயில் என்று வழங்கப்படுகிறது. இராமபிரான் கையிலுள்ளது கோதண்டம், அர்ச்சுனன் கையிலுள்ளது காண்டீபம் என்பது போல் சார்ங்கம் என்பது திருமாலின் கையிலுள்ள வில்லின் பெயர். செப்புத்திருமேனியான உற்சவமூர்த்தியின் மேலிரு கரங்கள் சங்கு சக்கரம் ஏந்தியுள்ளன. கீழ் இடக்கை நீண்ட கதையின் மீது அமைந்துள்ளது. அதன்மேல் சார்ங்கம் சார்த்தப்பட்டுள்ளது. வலக்கரம் அபயகரமாக உள்ளது. திருமாலின் இடையில் கட்கம் எனும் குறுவாள் செருகப்பட்டுள்ளது. கிரீடமகுடம் தலையிலும், மகரக்குழை காதுகளிலும், கண்டசரம் கழுத்திலும், தோள்வளை, கைவளையும், காலில் தண்டையும், பாடகமும் அணிந்து இடையில் நீண்ட பீதாம்பரம் அணிந்து எழிற்கோலத்தில் காட்சியளிக்கிறார். இவரைத் திருமழிசையாழ்வார்

" அங்கமாறும் வேதநான்கு மாகிநின்ற வற்றுளே
தங்குகின்ற தன்மையாய்த டங்கடல்ப ணத்தலை
செங்கண்நாக ணைக்கிடந்த செல்வமல்கு சீரினாய்
சங்கவண்ண மன்னமேனி சார்ங்கபாணி யல்லையே"

என்று சார்ங்கனாகப் பாடுகின்றார். திருமாலின் வலப்புறம் ஸ்ரீதேவியும், இடப்புறம் பூதேவியும் தாமரைப்பீடத்தில் இரு கரங்களுடன் நின்றகோலத்தில் காட்சியளிக்கின்றனர்.

கோமளவல்லித்தாயார் சன்னதி : தாயார் சன்னதி மூலவர் சன்னதியில் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. சதுரமான கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் ஆகிய கட்டட அமைப்புகளைக் கொண்டுள்ளது. தாயார் கால்களைப் பத்மாசனக்கோலத்தில் கொண்டு மேலிரு கரங்களில் தாமரை மலர் பற்றிக், கீழிரு கரங்களில் அபய வரத முத்திரை காட்டி அமர்ந்துள்ளார். தாயாரின் முன்னே உற்சவத் திருமேனிகாணப்படுகிறது.

கவின்மிகு கட்டடக்கலையும் கலைநிறை சிற்பங்களும் : கருவறை விமானம் தேர் போல் அமைந்து அடியவர்களின் மனதில் பக்திப்பெருக்கினை உண்டாக்குகின்றது. வைகுந்தத்திலிருந்து சார்ங்கபாணியாக இறைவன் இறங்கிவந்த தேரின் வடிவல்லவா? இக்கட்டட அமைப்பின் செய்நேர்த்தி கொண்டு இதனை கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜய நகரர் காலத்தது என்று கருதலாம்.

கருவறையின் முன்புறமுள்ள எளிய அர்த்தமண்டப வாயிலை இரு துவார பாலகர் சிற்பங்கள் காத்து நிற்கின்றன. கருவறை அர்த்தமண்டபப் புறச்சுவர்களை வேலைப்பாடு மிக்க அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்களில் குந்துசிம்மங்கள் காட்டப்பட்டுள்ளன.

அர்த்தமண்டபத்தின் முன்புறம் வேலைப்பாடு மிக்க 12 தூண்கள் அலங்கரிக்கும் திருமாமணி மண்டபம் அமைந்துள்ளது. தூண்களின் இடையிடையே நடனச்சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இம்மணிமண்டபத்தின் விதானத்தை விரிந்த தாமரை மலர்களும் அவற்றின் முதல் வட்டத்தில் அன்னப்பறவைகளும் இரண்டாவது வட்டத்தில் மகிழ்ந்து நிற்கும் வானரக்கூட்டங்களும் மூன்றாவது வட்டத்தில் வரிசையாகச் செல்லும் யாளிக் கூட்டத்தை வீரர்கள் துரத்துவது போன்றும் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. நான்காவது வட்டத்தில்

இராமாயணச் சிற்பங்கள் பல இடம் பெற்றுள்ளன. இராமபிரான் 7 மராமரங்களை அம்பால் எய்வதும் இராமன் முன் அனுமனும் சுக்ரீவனும் வணங்கிநிற்பதும், வாலி, சுக்ரீவன் சண்டைக்காட்சியும் இராமன் வாலியைக் கொல்வதும் ஆகிய இராமாயணக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. விதானத்தின் நான்கு மூலைகளிலும் உள்ள ஒருமுகமும் ஆறுஉடலும் கொண்டு அதாவது ஒருமுகம் ஆறு உடல்களுக்கும் தனித்தனியே பொருந்துவது போன்ற பெண்ணின் சிற்பம் பார்க்கத்தக்கது. இத்தூண்கள் கி.பி.15, 16-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த விஜயநகரர் காலத்தவை.

இம்மண்டபத்தின் தென்மேற்கு, வடமேற்கு மூலைகளில் தக்ஷிணாயன, உத்தராயன வாயில்கள் எனப்படும் இரு வாயில்கள் உள்ளன. ஆடி முதல் மார்கழி முடிய தக்ஷிணாயன வாயிலும் தை முதல் ஆனி முடிய உத்தராயன வாயிலும் மாறிமாறித் திறந்திருக்கும்.

தக்ஷிணாயன வாயிலிலிருந்து வலம் வருவோமானால் தெற்குக் கோட்டத்தில் தூணிலிருந்து நான்கு கரங்களுடன் வெளிப்படும் சிங்க முகத்தானின் உருவமும் கீழே இரணியனின் சிறிய வடிவமும் அதனையடுத்து இரணியனும் சிங்கமுகத்தானும் சண்டை செய்யும் காட்சியும் சிங்கப்பிரான் இரணியனை மடியில் கிடத்தி அவன் வயிற்றைக் கிழிக்கும் காட்சியும், சங்குசக்கரம் ஏந்தி யோகாசனத்தில் அமர்ந்திருக்கும் நரசிம்மன் உருவமும் உள்ளன. மேற்குக் கோட்டத்தில் சங்கு சக்கரம் ஏந்தி நான்கு கரங்களுடன் திருமால் வாசுதேவனாகக் காட்சியளிக்கிறார். வடதிசைக் கோட்டங்களில் ஓங்கி உலகளந்த உத்தமனான திரிவிக்கிரமனின் பேருருவம் எண்கரங்களோடும், நிலமகளும் திருமகளும் சூழ ஐந்தலை அரவத்தின் மீது அமர்ந்திருக்கும் வைகுந்தநாதரின் சிற்பமும் காணலாம். அடுத்து முதலையின் வாயிலிருந்து யானையைக் காத்துக் காட்சி கொடுக்கும் திருமாலின் கருடவாகனக் காட்சியும், குழலூதும் வேணுகோபாலனையும் அவனது இசையில் மயங்கும் ஆநிரைகளையும் ரிஷிகளையும் காணலாம். திருமாமணிமண்டபத்தின் வெளிப்புறமாடத்தில் இராமன் சன்னதி உள்ளது. இங்கு சிலையும் கணையும் ஏந்தி நிற்கும் இராமபிரான் அவரது வலப்புறத்தில் சீதாப்பிராட்டி, இடப்புறத்தில் இலக்குவன், திருவடியின் கீழ் பணிந்து நிற்கும் அனுமன் ஆகியோரைச் சிற்பவடிவில் காணலாம்.

மூலவர் உறையும் கல்தேர் கருவறைத் திருச்சுற்றில் கண்ணாடிமாடம், தாயார் சன்னதி, பாதாள ஸ்ரீநிவாசர் சன்னதி, சேனைமுதல்வர் கண்ணாடிமாளிகை சன்னதி, ஸ்ரீதேவி பூதேவி சமேதராக மேட்டு ஸ்ரீநிவாசர் சன்னதி, படஸ்ரீநிவாசர் சன்னதி ஆகியன உள்ளன.

முதல் திருச்சுற்றின் உள்வாயில் நாயுடுவாசல் என்று அழைக்கப்பெறுகிறது. இதற்கு முன்புறம் அகன்ற பெரிய மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் வடதிசையில் வேணுகோபாலர் சன்னதியும் இராமன் சன்னதியும் அதன் முன்புறம் ஊஞ்சல் மண்டபமும் அதனையடுத்து நவநீதகிருஷ்ணன் சன்னதியும் உள்ளன. இம்மண்டபத்தைச் சுற்றி இரண்டாம் திருச்சுற்று மதில் எழுப்பப்பட்டுள்ளது. இம்மண்டபத்தை அலங்கரிக்கும் சித்திரத்தூண்களும், யாளித்தூண்களும், அணியொட்டி மற்றும் கர்ணக்கால் தூண்களும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நேர்த்தியான சிற்ப வேலைப்பாடுகளுடன்திகழ்கின்றன.

வடமேற்கு மூலையில் ஆண்டாள் சன்னதி உள்ளது. இம்மண்டபத்தின் கீழ்ப்புற வாயில் மஞ்சக்கோபுரவாசல் என்று அழைக்கப்பெறுகின்றன. இதன் முன்புறம் கொடிமண்டபமும் இடப்புறம் நூற்றுக்கால் மண்டபமும், வலப்புறம் தேசிகர் சன்னதியும் உள்ளன.

கோபுரச் சிற்பங்கள் : *108* நாட்டிய கரணங்கள் சிற்ப வடிவில் தஞ்சாவூர், சிதம்பரம் போன்ற ஊர்களில் காணப்படுகின்றன. தஞ்சாவூர் பெரியகோயிலில் விமானத்தின் முதற்தள உள்திருச்சுற்றில் 108 நாட்டிய கரணங்கள்

செதுக்கப்பட்டுள்ளன. சிதம்பரம் நடராஜர் கோயிலில் 108 நாட்டிய கரணங்களும் அக்கரணங்களுக்குரிய பரதரின் நாட்டிய சுலோகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. அதுபோல சார்ங்கபாணி கோயிற் கோபுரத்தில் நாட்டிய கரணச் சிற்பங்கள் உள்ளன. அழகிய இந்த நாட்டிய கரணச் சிற்பங்கள் சிலவற்றில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தற்போது விஷ்ணு கோயிலிலிருந்தாலும் ஊர்த்துவதாண்டவம் (தாண்டவ சிவன்), காளிதாண்டவம் என்று அந்தந்தச் சிற்பங்களின் கீழ் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளதால் இச்சிற்பங்கள் சிவன் கோயிலைச் சார்ந்ததாக இருத்தல் வேண்டும். இச்சிற்பங்களின் கலைஅமைதி மற்றும் காலம், சிற்பங்களிலுள்ள கல்வெட்டு எழுத்தமைதி ஆகியன இக்கோபுரத்திலுள்ள பிற சிற்பங்களிலிருந்து வேறுபட்டும், காலத்தால் முற்பட்டும் இருக்கின்றன. இந்த நாட்டிய கரணச் சிற்பங்கள் கி.பி.12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலச் சோழர் காலத்தவை என்றும் கருதப்படுகிறது. எனவே இவை கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரர் காலத்தில் வேறொரு சிவன்கோயிலில் இருந்து இங்கு கொண்டு வந்து வைத்துக் கட்டப்பட்டுள்ளன என்பது அறிஞர்கருத்து.

இக்கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலேயே ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பழம் பெருமையும் சிறப்பும் உடையது. ஆனால் அக்காலத்தைச் சார்ந்த கல்வெட்டு, கலைச்சான்றுகள் ஏதும் இல்லை. இங்குள்ள கட்டட மற்றும் சிற்பக்கலை அமைதி பெரும்பாலும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகவும் அதற்குப் பிற்பட்ட காலத்தவையாகவும் உள்ளன. இங்குள்ள காலத்தால் முற்பட்ட கல்வெட்டு கி.பி.1385-ஆம் ஆண்டைச்சார்ந்தது.

தேரும்-திருக்குளமும் : கருவறையே தேர் போன்று அமைந்துள்ள சிறப்புமிகு இக்கோயிலில் இரண்டு மரத்தேர்கள் மிக அழகிய சிற்ப வேலைபாடுகளுடன் உள்ளன. தென்னிந்தியாவிலேயே திருவாரூர்த்தேரை அடுத்து இரண்டாவது பெரிய தேராக இக்கோயிற் தேர் கருதப்படுகிறது.

இக்கோயிலுக்குரிய அழகிய குளத்தின் நான்கு மூலைகளிலும் சிறு மண்டபங்களும் நடுவே நீராழிமண்டபமும் காணப்படுகின்றன. மேலும் குளத்தின் ஒரு கரையில் பதினாறுகால் மண்டபமும் உள்ளது.

கல்வெட்டுகள் : இக்கோயிலில் ஒன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு இந்தியக்கல்வெட்டு ஆண்டறிக்கை 1927 மற்றும் 1951-ல் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு கல்வெட்டு சிவன்கோயிலோடு தொடர்புடையது.

கருவறை முன்மண்டபத்திலுள்ள கல்வெட்டுகளுள் ஒன்று கி.பி. 1385-ஆம் ஆண்டைச் சார்ந்தது. விஜயநகர மன்னன் வீரவிருப்பண்ண உடையார்சகம் 1307 (கி.பி. 1385)-ல் பாம்பூர்நாட்டுத் திருக்குடமூக்கில் ஆராவமுதாழ்வார்க்கு நைவேத்திய பூசைகளுக்காகக் குலோத்துங்கசோழ நல்லூர்க் கட்டளையில் நிலம் அளித்துள்ள செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது (415/1951). இக்கல்வெட்டே இங்குள்ள, இக்கோயிலைச் சார்ந்த கல்வெட்டுகளுள் பழமையானது. குடமூக்கு குடந்தை என்று தேவாரம், திருவாய்மொழி, கல்வெட்டுகளில் குறிக்கப்படும் இவ்வூர்ப் பெயர் இக்கல்வெட்டில் தான் முதன்முதலாக கும்பகோணம் என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளது என்பது நோக்கத்தக்கது. இன்னொரு கல்வெட்டும் இவன் காலத்ததாக இங்கு காணப்படுகிறது. இக்கோயிற் கருவறை முன் உள்ள மண்டபத்தில் இக்கல்வெட்டு காணப்படுவதால் கோயில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இருந்திருத்தல் வேண்டும் என்பது உறுதி.

விஜயநகரமன்னன் சதாசிவதேவ மகாராயர் காலத்துக் கல்வெட்டு ஒன்று சக ஆண்டு 1482 (கி.பி. 1560)-ல் குண்டுகுல கோத்திரத்தைச் சார்ந்த நுனிபாப்பு செட்டியார் மகன் கனக செட்டியார்

சாரங்கபாணி கோயிலுக்கு நிலம் வாங்குவதற்காக 25 பொன் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது (இ.க.ஆ.அ. 293/1927).

மற்றொரு கல்வெட்டு தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாதநாயக்கன் காலத்தைச் சார்ந்தது. சகம் 1551 நாயக்கப் பிரதானி கோவிந்த தீட்சதர் மகாமடத்தில் ஆசாரவாசல் மற்றும் அனந்தகல்யாண மண்டபம் எடுத்ததைத் தெரிவிக்கிறது (இ.க.ஆ.அ. 290/1927).

இன்னொரு கல்வெட்டு விப்ரசபாபதீஸ்வர முடையார் கோயிலில் பிரதிஷ்டை செய்த விநாயகர் சன்னதி பூசைகளுக்காகக் குலோத்துங்கசோழன் கீழையூருடையான் என்பான் நிலம் கொடையாக அளித்ததைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு வேறொரு சிவன்கோயிலைச் சார்ந்தது (இ.க.ஆ.அ. 294/1927).

இதனையடுத்து குறிப்பிடத்தக்க கல்வெட்டு கிருஷ்ணதேவராயர் காலத்தது. சகம் 1438 (கி.பி.1516)-ல் சாரங்கபாணி தேவருக்குக் கொடை கொடுத்ததைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளது.

போற்றிப்பரவுவோம் : ஆழ்வார்களால் பாடப் பெற்ற பெருமையுடையதும், மிக அழகிய கட்டடக்கலை அமைப்புகளுடனும் சிற்பவேலைப்பாடுகளுடனும் உள்ள இத்திருக்கோயில் வரலாற்றைக் காக்க வேண்டியது அனைவரின் கடமையாகும். எனவே ''குடமூக்கில் கோயிலாக் கொண்டு படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணை மேல்சேர்ந்த ஆராஅமுதனை, குருமணித்திரளை, இன்பப்பாவினைப், பச்சைத்தேனை, பைம்பொன்னை'' வணங்கிப் போற்றுவோம்.



பரகாலன் பகர்ந்த பக்திநெறி

நியாய சிரோமணி, வேதாந்த ஆசார்ய, திவ்யபிரபந்த வித்வான்
ஒப்பிலியப்பன்கோயில்
ஆ.வீரராகவன், M.A., B.Ed., B.L.I.S.,

வையகமொண் பொய்கை பூதம் பேயாழ்வார்
மழிசையர்கோன் மகிழ்மாறன் மதுரகவி
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டுசித்தன்
பூங்கோதை தொண்டரடிப்பொடிபாணாழ்வார்
ஐயன் அருட்கலியன் எதிராசர் தம்மோடு
ஆறிருவர் ஓரொருவர் அவர்தாம் செய்த
துய்யதமிழ் இருபத்துநான்கின் பாட்டின் தொகை
நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே.
(பிரபந்தஸாரத்தில் - ஸ்வாமிதேசிகன்)

ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப் பெற்ற திருத்தலங்கள் ''திவ்யதேசங்கள்'' எனப் போற்றப்பெறுகின்றன. ஆழ்வார்கள் என்றால் ஆழ்ந்த குணக்கடலாம் திருமாலின் திருக்குணங்களில் ஆழங்காற்பட்டு அனுபவித்துத் திளைத்தவர்கள், திகைத்தவர்கள், என்பது பொருள். அத்தகைய பெருமைதனை உணர்ந்து அனுபவிப்பவர்களும் அதிலே ஆழ்வார்கள் என்றால் அதுவும் மிகையல்ல. திவ்யம் என்ற சொல் 'திவிபவம்' என்றவாறு விரித்துரை கொள்ளின் ஆகாசத்தில் இருப்பது எனப்பொருள் தருகின்றது. அங்கிருந்துதான் இறங்கிவந்தது. அங்கேயே நம்மைச் சேர்க்கவல்லது. அத்தகைய தேசமே திவ்யதேசம். அங்கேதான் நாம் பரம் முதல் அர்ச்சை ஈறாக அடியவர் உகந்த அமுதினைப் பருகிக் களிக்கின்றோம். பின்னானார் வணங்கும் சோதியே அர்ச்சைநிலை.

அர்ச்சைநிலை ஈறாக அமைந்தவற்றை ஸ்ரீபிள்ளை உலகாசிரியர் ஆவரண ஜலமாகப் பரமபதத்தையும், திருப்பாற்கடல் போலே வ்யூஹத்தையும், பெருக்காறாக விபவத்தையும், பூகதஜலம்போல் அந்தர்யாமி ஸ்வரூபத்தையும் கூறியவராய் ஜலம், சமுத்திரம், புயற்காற்று, பூமியினுள் இருக்கும் நீர் இப்படி படிப்படியாகப் பெருகிய நீர் வெள்ளக்காடாகி வடியுங்கால் தேங்கும் மடுக்களே அர்ச்சை என்று அறுதியிட்டார் போலும். அந்த அர்ச்சை எனும் மடுக்களில் ஆழந்துகிடப்பரே ஆழ்வார்கள். அவர்களின் அனுபவப் பெருக்கே அருளிச்செயல் (நாலாயிர திவ்யப் பிரபந்தம்) என்ற ஆழ்வார்ப் பாசுரங்கள்.

அர்ச்சையில்தான் ஆழ்வார்களும், ஆசார்யர்களும், பெரிதும் ஈடுபட்டனர். அர்ச்சை என்பது கல்யாண குணங்கள் பொருந்திய திவ்யமங்கள விக்ரஹம். உருவ வழிபாட்டிற்கு உதவுவதும் இந்த அர்ச்சை நிலைதான். அர்ச்சையில் ஈடுபட்ட தொண்டரடிப் பொடியாழ்வார், ''இச்சுவை தவிரயான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்று தமது திருமாலையில் சுட்டியுள்ளார். இக்கருத்தினை அடியொற்றி ஸ்வாமி தேசிகன், ''ஸத்யம் சபே வாரண சைலநாத! வைகுண்டவாஸேபி நமே பிலாஷ:'' என்று வரதராஜஸ்வத்தில் கூறியமைக் குறிப்பிடத்தக்கது.

ஆழ்வார்களுள் கடைக்குட்டியானவர் பரகாலன் எனப்படும் திருமங்கை ஆழ்வார். நீலன் என்ற இயற்பெயரைக் கொண்டு குமுதவல்லியின் மணாளனாகக் குறையலூர் வாழ்வேந்தன் பரகாலனாக விளங்கி வந்தார். இவருக்கு ஆலிநாடன், அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார்சீயம், கொங்குமலர்க் குழலியர்வேள், மங்கைவேந்தன், கொற்றவேல், பரகாலன், கலியன் போன்ற பெயர்களும் உண்டு. இவர் பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய ஆறு பிரபந்தங்களை இயற்றியுள்ளார்.

பரகாலன் என்றால் பிறருக்கு எமன் போன்றவன் என்பது பொருள். பரகாலன் தம் பிரபந்தம் மூலம் பகர்ந்த பக்திநெறிகள் குறித்துச் சிறிது பார்ப்போம்.

பரகாலன் ஒரு சிற்றரசனாக விளங்கியவன். அவன் குமுதவல்லியை மணக்க விருப்புற்றான். குமுதவல்லி, ''அந்தணர் ஆயிரம்பேர்களுக்கு உணவளித்து, வேதியருள் சிறந்தவரைத்தான் நான் மணப்பேன்'' என்றுகூற, பரகாலனும், திருநரையூர் (நாச்சியார்கோயில்) திவ்யதேசத்தில் அருள்பாலித்துவரும் எம்பெருமானிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் ஏற்று, குமுதவல்லியின் கட்டளைகளை நிறைவேற்றத் தொடங்கினான். செல்வம் வேண்டி கொள்ளையும் அடித்தான். ஒரு சமயம் பரகாலன் தன்னுடைய எஜமானருக்கு செலுத்தவேண்டிய தொகையின்றித் தவித்தான். அப்பொழுது எம்பெருமான், ''நீ காஞ்சி நகர் வா, செல்வம் அளிக்கிறேன்'' என்று கூறினான். காஞ்சி நகர் மேவியும் பரகாலனின் கொள்ளைப்பணி இறுதியுறவில்லை. ஒரு திருமணக் குழுவினர் எதிர்வரக் கண்டு, அவர்களிடம் நகை அனைத்தையும் கொள்ளையடித்து, கால் மெட்டியையும் விடாது, பல்லால் கடித்து இழுத்தான் பரகாலன். பல்வலி கண்டதே தவிர, மெட்டி வரவில்லை. ஆதலால், தன் இயலாமையையும், வந்தவர் ஸாதாரண மனிதரல்ல என்ற உண்மையையும் ஒருவாறு புரிந்து கொள்ளும் தருணத்தில் எம்பெருமான், செல்வத்துள் பெரும்செல்வமான பெரும்பதத்தை நாராயணா எனும் நாமத்தை பரகாலனுக்கு உபதேசித்தான். அப்பொழுதுதான் திருமங்கை மன்னன் தன் நிலையையும் உணர்வெனும் பெரும் பதத்தையும் தெரிந்து, ''தன் வாழ்நாளில் பெரும் பகுதியினை வீணடித்தேன். குறிக்கோளின்றி பல்லுயிரைக் கொன்றேன். இரந்தவரிடம் இனிய மொழி பயின்றுமிலேன். பாலகனாய்ப் பல தீமைகளையும், பெரியனாகிப் பிறர்க்கு உழைப்பதனையும், நரகம் புகும் பாபங்களையும் செய்தேன், உன்னையும் மறந்தேன். அதனால் இடும்பைப் குழியில் பிறந்தேன். இனி நின்னுருவம் மறப்பேனல்லேன். பிறிந்தேன் பெற்ற மக்கள் பின் உதவாதறிந்தேன். நீ பணித்த அருள் என்னும் ஒள்வாளுருவி (பெரிய திருமொழி) பிரதிகூலமாகிய அனைத்தையும் வெட்டி எறிந்து நின்னடிக்கே அடிமை பூண்டேன். செல்கதிக்கு நற்றுணையாக 'நாராயணா' என்னும் நாமத்தைப் பற்றினேன்'' என்றுரைக்கின்றார்.

அந்த நாராயண நாமமே நான் நாவினாலுய்ய நள்ளிருளளவும் பகலும் நானழைப்பதாகும். ''ஹரிர்நாமைவ நாமைவ நாமைவ மம கேவலம்'', ''கலௌ ஸங்கீர்த்ய கேசவம்'' என்கிறபடியே ''கண்டேன் நான் கலியுகத்ததன் தன்மை கருமமாவது (உனக்குப் பணி செய்திருப்பதையே கைங்கர்யமாக) என்றனுக்கறிந்தேன்''. ஆதலால்அழுந்தூர் மேற்றிசை நின்றவனை நோக்கி உறுதிப்பாட்டுடன் ''நின்னடியன்றி மற்றறியேன்'' எனப் பாடுகிறார். அதன் பெருமையையும்,

ஏத்தியுன் சேவடி எண்ணியிருப்பாரை
பார்த்திருந்தங்கு நமன்தமர்பற்றாது
சோத்தம் நாம் அஞ்சுதுமென்று தொடாமை நீ
காத்திபோல் கண்ணபுரத்துறை யம்மானே!

நாட்டினாயென்னை யுனக்கு முன் தொண்டாக
மாட்டினேனெத்தனையே கொண்டென் வல்வினையை
பாட்டினாலுன்னை என்னெஞ்சத் திருந்தமை
காட்டினாய். கண்ணபுரத்துறைம்மானே.
(பெரிய திருமொழி)

என்பதாகப் பரவிப் போற்றுகிறார்.

ஆழ்வார் அஞ்சனமாமணியைப் போற்றுவதுடன் அடியார்களின் பெருமையையும் திருச்சேறைப்பதிகத்தில் குறிப்பிடுகின்றார். எம்பெருமானுடைய பூசனையைச் செய்யும் பேறு உடையவருக்கு ஒருகுறையும் வாராது, எமபடர்களும் அவர்களை நெருங்கமாட்டார். போதோடு புனல்தூவும் புண்ணியரே விண்ணவரில் பொலிவார். அவர்களின் பாதம் என் தலைமேல் வைத்துப் போற்றக்கூடியது. அவ்வெம்பெருமானை கையாரத் தொழுது, கண்ணாரக் கண்டுருகுவாரைக் காண்பதே நாம் பெற்ற பேறு. அவனுக்கு அடிமை, அவனடியார்க்கடிமை என்று ''அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம்மடியாரடியோங்களே'' என்ற நம்மாழ்வாரின் கூற்றுப்படி திருமங்கையாழ்வாரும் ''ஆளானார்க்காளாம் என் அன்புதானே'' என்று திருவாய் மலர்ந்தருளி உள்ளார். அடியார் பெருமை உரைத்த ஆழ்வார், எம்பெருமான் அடியார் பக்கல் கொண்டுள்ள வாத்ஸல்யாதி குணானுபவத்தைக் கூறும்போது எம்பெருமான் தொண்டர் தங்கள்

கொண்டுள்ள வாத்ஸல்யாதி குணானுபவத்தைக் கூறும்போது எம்பெருமான் தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பு போன்றவன். அடியார் மனத்தென்றும் தேனாகி, அமுதாகித் திகழ்பவன். என் உள்ளத்துள்ளும், கண்ணுள்ளும் நீலக்கண்கள் பனிமல்க நின்றவன் என்று விவரிக்கின்றார். இருப்பினும் அவனுடைய ஸ்வரூபம் இன்னதென்று காட்டிக்கொடுக்காமல் என்னை இழுக்கடித்தவன். ஆதலால் நானும்,

ஆசைவழுவாதேத்தும் எமக்கிங்கிழுக்காய்த்து
அடியோர்க்குத்
தேசமறிய உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு
காசினொளியில் திகழும் வண்ணம் காட்டீர்
எம்பெருமான்
வாசிவல்லீர் இந்தளூரீர் வாழ்ந்தேபோம் நீரே.

சொல்லாதொழியகில்லேன் அறிந்தசொல்லில்
நும்அடியார்
எல்லாரோடுமொக்க எண்ணியிருத்தீரடியேனை
நல்லாரறிவீர் தீயாரறிவீர் நமக்கிவ்வுலகத்து
எல்லாமறிவீர் ஈதேஅறியீர் இந்தளூரீரே.
(பெரிய திருமொழி)

என்று அவன்மீது கோபமுற்றேன். எல்லோரோடு மொக்க என்னை நினைத்து விட்டானே என்று வருந்தி, அவனது காதலியாகவேமாறி, பரகால நாயகியாக அவனை நினைந்துருகி,

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் கைவளைகள்
எண்ணோ கழன்ற இவையென்ன மாயங்கள்
பெண்ணானோம் பெண்மையோம் நிற்க! அவன்மேய
அண்ணல்மலையும் அரங்கமும் பாடோமே
(பெரிய திருமொழி)

என மனமுருகிப் பாடினேன். இச்சூழ்நிலையில் எனக்கோர் அச்சம் மேலெழுகிறது.

அப்பா! நானோ அழுக்குடம்பன். எச்சில் உள்ள வாயைப் பெற்றவன். அவ்வாயால் உன் திருவெட்டெழுத்தினைக் கற்று அதன் பெருமையையும் பறைசாற்றினேனே. இப்படி நான் செய்யக்கூடாததைச் செய்து, பாவமே செய்து பாவியானேன் என்பதாய் பெரிய திருமொழியாகிய ஆயிரத்தோடென்பத்துநாலு பாட்டைக் கவிபுனைந்த நாலுகவி பெருமாள், எனதென்பதும், யானென்பதும் இன்றி, எம்பெருமானிடம் தான் செய்த தவற்றிற்கு மன்னிப்புக் கோரினார். பக்திக்குப் புறந்தூய்மை தேவையாயினும் அகந்தூய்மையே சிறந்தது என்னும்படியாக எம்பெருமானும் நேரில் காட்சியளித்து, 'நீ அஞ்சாதே' என்று கூறி மறைந்தார். எம்பெருமானுடைய காட்சி ஆழ்வாருக்கு மகிழ்ச்சி ஊட்டியதாய் அமைந்தது. உடன் எம்பெருமானை
ஊட்டியதாய் அமைந்தது. உடன் எம்பெருமானை
என்பெலாம் உருக, நெஞ்சமென்னும் அன்பினால் ஞான நீர் கொண்டு நீராட்டி, சொன்மாலைச் சூட்டி, மனத்தினால் பூசித்து மகிழ்ந்தார்.

இவ்விதம் ஆழ்வாருடைய அனுபவத்தில் இருந்து நமக்குத் தெரிவது எத்தனை பிறசெயல் மேற்கொண்டு எம்பெருமானை அடைய முயன்றாலும் அடைவதரிது. அவனை அடைய ஒரே வழி அவனிடம் நாம் பக்தி கொள்வதே என்பதனை,

பேசினார் பிறவிநீத்தார் பேருளான் பெருமைபேசி
ஏசினார் உய்ந்துபோனார் என்பதிவ்வுலகின் வண்ணம்
பேசினேன் ஏசமாட்டேன் பேதையேன் பிறவி நீத்தற்க்கு
ஆசையோ பெரிதுகொள்க! அலைகடல் வண்ணர்பாலே.
(திருக்குறுந்தாண்டகம்)

என்னும் பாசுரத்தால் மிக அழகாக, ஆழ்வார் விளக்கியுள்ளார்.

இவ்வாறாகத் தன் அனுபவத்தினைத் தெளிவுபடுத்திய திருமங்கையாழ்வார், வையகத்தோர் அனைவரும் பக்தியிலே விரைந்து ஈடுபாடுகொள்ள வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு நாராயணின் நாம வைபவத்தையும், நாரணனை அடைவதற்கான வழிமுறைகளையும் கூறுகிறார்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அப்படிப் பெறற்கரிய பிறப்பினைப் பெற்றும், இவர் அவர் என்று காலங்கழிக்காமல் நான் கூறுவதைக் கேளுங்கள்', என்று 'எம்பெருமான் நாமத்தைப் போற்றி, புனல்சூழ்ந்த குடந்தையானைத் தொழுது . வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக் கோயிலே வணங்கி நற்பொருள் காண்மின்! பாடிநீர் உய்மின்! துஞ்சும்போது அழைமின்! துயர்வரில் நினைமின்! துயரிலீர் சொல்லினும் அந்நாமம் நன்மையே பயக்கும். நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணா என்னும் நாமம். ஆதலால் நாராயணன் குடிகொண்ட கோயில்தோறும் தலயாத்திரை மேற்கொண்டு புண்ணியத்தைச் சேகரிப்பீர். பிறகு பார்ப்போம் என காலந்தாழ்த்தாதீர். காலம்

கடத்தினால் மூப்பு வந்துவிடும். கோல் துணைத் தேவைப்படும். கூட்டிப்போகும் புதல்வரும் 'இது என் அப்பர். மூத்தவர்' என்பார். அத்தருணம் விழிகெட்டு வழி தெரியாது. செவிப்புலனும் கெட்டுவிடும். உடம்பில் வலு இருக்காது. அலைந்து திரியவும் முடியாது. இசை சொட்டப்பேசும் இளநங்கையர் 'பைய நடமின்!' என்றுரைப்பதுடன் வாசலடைத் திகழ்வர். சலங்கொண்ட சொல்லால் பேசி நம்மை நோக்கி சிரிப்பர். 'கிழவன்' என்று கூறவும்தயங்கமாட்டார். ஆதலால் குனிசேர்ந்து உடலம் கோலில் தளர்ந்து இளையாத முன்னரே வதரி (பத்ரிகாச்ரமம்), திருநரையூர் (நாச்சியார்கோயில்) போன்ற திவ்யதேசங்களுக்குச் சென்று அலங்கலாய தண்டுழாய்க்கொண்டு, ஆயிரநாமம் சொல்லி, வணங்கி மகிழ்வாயாக',

'எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கேதும்
நானுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப் பள்ளியானே.
(பெரியாழ்வார் திருமொழி)

என்று பாடியருளிய பெரியாழ்வாரின் கருத்திற்கிணங்க திருவெட்டெழுத்தையும் ஜபித்து, சக்கரம்போல் சுழன்றுகொண்டிருக்கும் சம்சாரக் கடலிலிருந்து கரை சேர முயற்சிப்பாயாக. மேலை விண்ணோரும், மண்ணோரும் தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய் தேசமாய்த் திகழ்வது திருவேங்கடம் முதலான திவ்யதேசங்கள். உண்ணாவிரதம் போன்ற ஊண்வாடும் செயல்களாலும் ஐந்து தீயிடை நின்று தவமியற்றியும்,

'இளப்பினை இயக்கம் நீக்கி இருந்துமுன்
இமையைக்கூட்டி
அளப்பில் ஐம்புலனடக்கி அன்பவர் கண்ணேவைத்து
துளக்கமில் சிந்தைசெய்து தோன்றலும் சுடர்விட்டு,
ஆங்கே
விளக்கினை விதியில் காண்பார்....'
(திருக்குறுந்தாண்டகம்)

என்னும்படியான உயோக நிலையாலும் அடையப்படும் பரப்பிரம்மத்தை மிகவும் எளிதான பக்தியினால் அடையலாம். இதனால் யோக நிலையினைக் காட்டிலும் பக்தி நிலை சிறப்பு வாய்ந்தது என்பது தெளிவு. திருமார்பனைச் சிந்தையுள் வைத்து, திருநாமம் பிதற்றி நுந்தம் பிறவித்துயர் நீங்கப் பெறலாம். அவன் உங்கள் மனத்தே இருத்தும்படி வாழவல்லீர். நானும் வாழ்நாளின் மிகுதியை வீணடித்துப் பின் திருவழுந்தூர் (தேரழுந்தூர்), திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் கோயில்), திருக்குடந்தை, திருக்கண்ணபுரம் போன்ற தலத்துறையும் எம்பெருமான்களை அடைந்து, உய்ந்து, பிழைத்து, பிறவாமை பெற்றுத் திளைத்தேன்'.

''ஸ்திதே மனஸி விக்ரஹே குணினி தாது ஸாம்யே
ஸதி ஸ்மரேத் அகிலதேஹினம்'' என்ற அபீதிஸ்தவக்
கூற்றினை நினைவுகூறும் வண்ணம் ஸப்த
தாதுக்களும் உடம்பில் நிலையுற்றிருக்கும்போதே
''நின்றவினையும் துயரும் கெட மாமலரேந்தி
சென்று பணிமின்! எழுமின்! தொழுமின்!
தொண்டீர்காள்''
(பெரிய திருமொழி)

என்று பக்திநெறிதனைப் பரகாலன் பாங்குறப் பரவி முடித்தார்.

பகவானின் நாமம் கண்டு கேட்டுற்று உய்ந்து அடியோர்க்கும் தேசமறியச்செய்து, பரம்முதல் அர்ச்சை ஈறாக அவதாரப் பெருமைகளையும் விளக்கி, ''எனக்கென்றும் தேனும் பாலும் அமுதுமாய திருமால் திருநாமம்'' என நாம வைபவத்தையும் போற்றிப்பரவி இறுதியில், ''நானும் சொன்னேன் நமரும் உரைமின்! நமோ நாராயணமே'' என்றுகூறி அனைவரையும் எம்பெருமானை அனுபவிக்கத்துணையாக விரைவுபடுத்தி அவனைப் பெற்றுய்ய விரதம், யோகம் முதலான கடுமையான அனுஷ்டானங்கள் தேவையில்லை என்றும் தெளிவித்து, சுலபமான பக்திக்கு இறங்கிவரும் மனத்துக்கு இனியான் எம்பெருமான் என்பதனையும் எடுத்துக்காட்டி ''ஆசையோ பெரிது கொள்க! அலைகடல் வண்ணர்பாலே'' என இயம்பும்படியாய் அமைந்திருக்கின்றது பரகாலன் பக்திநெறி.

நாராயணா என்னும் திருநாமம் ''குலம்தரும், செல்வம் தந்திடும், அடியார் படுதுயராயின வெல்லாம் நிலம்தரம் செய்யும், நீள்விசும்பருளும், அருளொடு பெருநிலமளிக்கும், வலம்தரும் மற்றும் தந்திடும், பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலம்தரும்'' (பெரிய திருமொழி) சொல்லுமாகும்.

இவ்வாறாக நாமமகிமையையும்,

'நாராயாணா! ஓ! மணிவண்ணா! நாகணையாய்!
வாராய்! என் ஆரிடரை நீக்காய்'' (சிறிய திருமடல்)

எனக் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து கஜேந்திரனைக் காத்தவன் தன் பெருமையையும் அறிந்த நாம் மகாமகத் திருநாளாம் இப்பொன்னாளில் தீர்த்தங்களில் நீராடி, திருத்தலம் பலமேவித்தரிசித்து இன்புறுவோமாக.

மங்களாசாசன மாண்பும், அர்த்தபஞ்சகப் பாங்கும்

முனைவர் ஜே.அரங்கசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கொந்துலாம் பொழில் சூழ்ந்த, குடந்தை மேவிய குருமணித்திரளான எம்பெருமான் ஸ்ரீ சார்ங்கபாணியையும் உடனுறை கோமளவல்லித் தாயாரையும் கண்குளிர நோக்கி இறையானந் தத்தில் திளைத்த ஆழ்வார்கள், தாங்கள் பரமபதத்திலண்ண கிடந்த இந்த சேஷ -சாயி கோலத்தைச் சேவித்து மங்களாசாசனத்தின் மூலம் தங்கள் பேருணர்வுகளைப் பக்திப் பரவசத்துடன் அம்மானிடத்தே வெளிப்படுத்துகின்றனர். அவற்றுள் தென்குருகூர்ச்சடகோபன் தமக்குப், ''ப்ராப்யமும் (அடைவதுவும்) ப்ராபகமும் (அடைவிப்பதுவும்) எம்பெருமான் திருவடி மலர்களன்றி வேறொன்றில்லை'' என்றவாறு அமையும் பத்து பனுவல்களும் அடங்கும். இவை நம்மாழ்வார் திருமொழி என வகைப்படுத்தப் பெறுகின்றன. இறையின்பத்தை விச்லேஷத்தால் (பிரிவாற்றாமையால்) வெளிப்படுத்தும் பாங்காலும் ஸ்ரீ வைணவ சமயத்தின் தத்துவக் கருத்துக்களைச் செரிவாக உள்வாங்கிய முறைமையாலும் இவை ஏற்றமிக்கவை. ஈண்டு தேவாமிருதமாம் இப்பாடல்களில் காணக்கிடக்கும் ஆழ்வாரது உளப்பாங்கையும், ஊடாடிடும் அர்த்தபஞ்சக வெளிப்பாட்டையும், அப்பாடல்களுக்கு அமைந்த ஆச்சாரிய பெரு மக்களுடைய உரைகளில் பெரியவாச்சான் பிள்ளையினது உரைக்கு முக்கியத்துவம் கொடுத்து சுருக்கமாக ஆராயப் பெறுகின்றன.

தென்குருகூர் வண்சடகோபன், வானமா மலைதோத்தாத்ரிநாதனின் திருவடிப் பேற்றால், அவனுக்கு அங்கே மங்களாசாசனம் செய்தும் தான் விரும்பிய பயன் கிட்டா நிலையில் அவரது ஸ்வாபிமதம் (தன் விருப்பம்) ஈடேறாதவாறே மிகவும் துக்கித்து, 'எல்லா தசைகளிலும் (நிலைகளிலும்) எம்பெருமானே உபாயம்' என்றவாறு இவருக்கு பிரேமதசையில் (காதல் நிலையில்) ப்ரீதி (அன்பு) மிக்குற்று, திருக்குடந்தையில் மாயாமூர்த்தியாய் திகழக் கிடந்து கண்வளர்ந்தருளும் ஸ்ரீசார்ங்கநாதனிடம் தன்னை முழுமையாக ஏற்று பிரிவால் தரியாமலிருக்கும் (தாங்க முடியாமலிருக்கும்) தனது ஆர்த்தியை (துயரத்தை) போக்க வேண்டும் என்று இறைஞ்சி, இங்கும் இவர் மங்களாசாசனம் இயற்றி எம்பெருமானிடத்தே கைங்கர்யம் (ஏவல்பணி) கொள்பவராகிறார். அதுசமயம், ஸ்ரீபரதாழ்வான் பெருமாளிடம் சென்று திருமுடிசூடியருள வேண்டி நிற்குமாப்போலேயும் கம்சனுடைய ஆணைக்கிணங்க அக்ரூரர் கோகுலத்திற்கு ஸ்ரீ கிருஷ்ணனை அழைக்கச் சென்று அவன்முன் நிற்குமாப்போலேயும், ஸ்தநந்தயப்ரஜை (பால் குடிக்கும் குழந்தை) தாய்முலை நினைத்து ஏங்குமாப்போலேயும்' ஆழ்வார்திகழக்கிடந்தானிடம் நிற்பாராகிறார். இருப்பினும், பேரருளாளன் முகங்கொடுத்து திருவடி தொடர்பைக் காட்டா தொழிகையாலே, இவர் தனது எம்பெருமானுடைனான விடவொண்ணாத போக்கியத்தை (அனுபவிக்கும் முறைமையை) எண்ணி, தனது ஆகிஞ்சன்யத்தை (திக்கற்ற நிலையை) அனுசரித்தும் அனன்யகதித்துவத்தை (எம்பெருமானன்றி வேறு கதி இல்லாத நிலையை) உணர்ந்தும் அவருக்கு பிரபத்தி செய்து இத்திருமொழியின் வழியாக ஆண்டையிடம் சரணம் புகுவாராகிறார்.

இத்திருமொழியின் அமைவிற்கு வேறொரு சிறப்பும் உண்டு. ஆழ்வார் பல திவ்ய தேசங்களில் நம்பெருமானுக்கு மங்களாசாசனம் தட்டாது செய்தே போகினும் அவருக்கு முக்கிய பலமான ''நித்திய கைங்கர்யம்'' தட்டியே செல்கின்றது. இந்நிலை ஸ்ரீவைணவ முதல் ஆச்சார்யனைப் பாடாய்ப்படுத்தி இப்பத்தினை விளைத்ததாயிற்றது. இத்தால் இவருக்கு பெருமான்மீது கொண்ட மகாவிசுவாசம் மேலும் ஆழங்கால்பட்டதன்றி

குறையவில்லை. பரமபதவாசன் தனது பக்தர்களுக்கு உடனடியாக காட்சிக் கொடாமைக்குத் தக்க காரணங்கள் இருக்கலாம். அதாவது, இறைவன் தனது பக்தனை இன்னும் சிலகாலம் இப்பூவுலகில் வைத்திருந்து இவனுடைய ஆன்மாவோடு இன்னும் போக்கியலாபம் பெறலாம் என்பதாலன்றோ இங்ஙனமாயிற்று. இவ்வுண்மையை பிள்ளைலோகாச்சாரியரது ஸ்ரீவசனபூஷணமும், ''பரமாத்மனான இவனுடைய சரீர ஸ்திதிக்கு (இருப்பிற்கு) ஏது (காரணம்) கேவல (தனித்த) பகவதிச்சையிறே (பகவானுடைய விருப்பமன்றோ)'' என்று ஆணித்தரமாக வரிக்கும். இருப்பினும் ஆழ்வார், எம்பெருமான் மீது கொண்டிடும் மகாவிசுவாசத்தை விடாது, ஸ்ரீபரதாழ்வான் ஸ்ரீராமபிரான் வனவாசம் முடிந்து திருவயோத்திக்கு திரும்பும் வரையிலும் காத்திருந்ததைப் போலவே திருக்களிப்புப் பேற்றிற்குப் பொறுத்தே இருந்தார். இருப்பினும் இவர், கிடைக்காவிடினும் விடவொண்ணாத எம்பெருமானுடனான போக்கியத்தைக் காதலி காதலன் தன்னுடன் கூடவில்லையே என்று ஏங்கி அவ்வேக்கத்தையே இன்பமாய் அனுபவிக்குமாப் போலே இத்திருமொழியின் மூலம்தான் இறையின்பத்தை அனுபவித்த முறைமையை வெளிப்படுத்துபவராகிறார். பெரியவாச்சான் பிள்ளையும் இவ்வுண்மையை, ''அங்கு ஸ்ரீ பரதாழ்வானுக்குப் பெருமாள் முகங்காட்டாதொழிந்தது, தம் ப்ரதிக்ஞைதலைக் கட்டுகைக்காக (கொள்கை நிறைவு பெறுவதற்காக) இங்கு ஆழ்வாருக்கு முகங்காட்டாதொழிந்தது ப்ரபந்தம் தலைகட்டுகைக்காகவும் விடாயைப் (தாகத்தைப்) பிறப்பித்து முகங்கொடுக்கைக் காகவும்'' என்று சுருக்க விளக்கமாகச் சுட்டிடுவார்.

நாலாயிர திவ்வியப்பிரபந்தத்திற்கு ஸ்ரீவைணவ ஆச்சாரியர்கள், ஆழ்வார்களுடைய உள்ளக்கிடக்கைக்கு ஏற்ப மகோன்னதமான பொருட்செறிவுடன் மாபெரும் உரைகள் செய்து ஸ்ரீமன் நாராயணனுக்குத் தொண்டு செய்துள்ளனர். இவ்வறிவுக் கொடையின் வழிப்படியாக ஸ்ரீவைணவ சமயத்தின் மூலம் மதப்புரட்சி செய்த மகான் ஸ்ரீராமானுஜர் ஆழ்வார்களுடைய எண்ணங்கள் அடியாக பிரம்மசூத்திரத்திற்கு 'ஸ்ரீபாஷ்யம்' என்னும் மாபெரும் உரையை வடித்து, அதன்வழிஸ்ரீ வைணவத்தின் தாத்பர்யங்களை 'விசிஷ்டாத்வைதம்' என்ற தத்துவப் பிரிவாக இச்சமயத்திற்கு அமைத்துக்கொடுத்தார். இவ்வாறான கால வளர்ச்சியில், ஆச்சாரியர்களுள் ஸ்ரீராமானுஜரை அடியொற்றி சமயப் பணியைச் செய்தவரான ஸ்ரீ வேதாந்ததேசிகர் விசிஷ்டாத்வைத தத்துவத்திற்கு, ஒவ்வொருவருடைய நிதர்சனமான அனுபவத்தை அடிப்படையாக வைத்து 'அர்த்தபஞ்சகம்' (ஐந்து பொருண்மைகள்) என்றவாறு அடிப்படைச் சட்டகங்களை அமைத்து அதனை ஸ்ரீவைணவ உலகிற்கு கொடையாக்கினார். அவையாவன: 1) நம்மால் அனுபவிக்கப்பெறும் இறைவனுடைய ஸ்வரூபம். 2) இறை அனுபவத்திற்கு உட்படும் ஜீவான்மாவினுடைய ஸ்வரூபம். 3) ஜீவான்மா இறைவனை அடையத் தடையாக இருந்திடும் கட்டு அல்லது வினைப்பயனின் ஸ்வரூபம் 4) ஜீவான்மா இத்தடையை நீக்கி இறைவனை அடைய கடைபிடிக்க வேண்டிய உபாயங்கள். 5) இடையூறு நீங்கி ஜீவான்மா அனுபவிக்கும் முக்கிய பலமாகிய பகவதனுபவத்தின் ஸ்வரூபம். ஈண்டு, இவ்வைந்து பொருண்மைகள் ஆழ்வாரது இத்திருமொழியின் வரிகளிலும் அதற்கான உரைகளிலும் பொதிந்திருக்கும் பாங்கினை ஆய்வு நோக்கில் நுணுகி ஆராயப்பெறுகின்றன. இதனால் ஆழ்வார் பாடல்களில் எங்ஙனம் ஸ்ரீ வைணவ சித்தாந்தம் திட்பமாகவும் நுட்பமாகவும் ஊடாடிக் கிடக்கின்றது என்பதை தெளியலாம்.



இறைவனுடைய ஸ்வரூபம் வெளிப்பெறுகை

நம்மாழ்வார் தனது சடத்துவமான உடம்பையே நீராக்க நின்றுள்ள திகழக்கிடந்தானது அழகைக் கண்குளிரக் கண்டும், உணர்ந்தும், குளிர நோக்கியும் இருக்க, அவன் இவரை முழுமனதுடன் அனைத்து பேரின்பம் நல்கவில்லை. இதனாலே ஆழ்வார் இத்திருமொழியின் முதல் பாடலில் தனது ஏக்கத்தை அவனிடம் வெளிப்படுத்துகிறார். அதுபொழுது, இவர் குடந்தைக் கிடந்தானை, 'ஆராவமுதே' என்றதனால் இறைவன், பக்தன் யாவராயினும் அனைத்துக் காலங்களிலும் அவன் மேலே விழுந்து வரையறையற்று அனுபவித்தாலும் அப்பக்தனுக்கு திருப்தியோ! திகட்டுதலோ! வாராமல் அமுதனை மேலும் மேலும் அனுபவிக்கவேணும் என்னும் நிலையில் அவன் பேரின்பச் சுரங்கமாக இருப்பானாகிறான். இவ்வுண்மை உள்வைத்தே உரையாசிரியரும், '' அனுபவியாநின்றாலும் பயாப்திபிறவாதபடி (போதும் என்ற எண்ணம் ஏற்படாதவாறு, நிரதிசயபோக்யமான (இதனினும் வியப்பிற்கிடமான அனுபவம் இல்லாததான) விஷயத்தை இழந்திருக்கவோ நாட்செல்ல நாட்செல்ல விடாயைப் பிறப்பிக்கும் விஷயமென்க'' என்று நுணுகுகிறார். அடுத்து, 'அன்பாயே' என்றதனால் அன்பே எம்பெருமானது உள்ளீட்டுறைச்சி என்பது அறியப்பெறுகிறது. இவ்வார்த்தையுடன் பாடல் அமைப்பு, ''உடலம் நின்பாலன்பாயே'' என்று இருப்பதால் இறையன்பு அசேதனமான சடத்துவ உடலத்தையும் உருக்கிவிடும் என்ற உண்மை வெளிப்பெறுகிறது. ஆச்சாரியனும் இத்தகைய இறையன்பை மையமாகப் பொருள்கொண்டு உடல் உருகும் தன்மையைப் பற்றி, ''ஆத்மவஸ்து உத்தேச்யத்திலே (கருதிய பொருளிலே) ஈடுபட்டு அழியாமைக்கு கட்டின கரையாயிற்று சரீரம். அதுவும் அழிந்ததென்க. சேதநாசேதனவிபாகமற (உணர்வுடைய-உணர்வற்ற பொருட்களென்னும் வேறுபாடின்றி) அழிக்கவல்ல உன்பக்கலிலே அசித்ரவ்யமன்றியே (உணர்வற்ற பொருளென்று கொள்ளாது) ப்ரேமத்தையிட்டுச் (அன்பை உள்ளீடாக வைத்துச்) செய்தது என்னலாம்படியிருக்கை. அன்னமயமாயிருக்கை யன்றிக்கே ப்ரேமமயமாயிருக்கை'' என்று விளக்குவதை எண்ணி நாமும் நம் சரீரத்தை ஆராவமுதனின் அமுத நினைவாலேயே உருக்கிக் கொள்ளலாம். ஆழ்வாரது, 'நெடுமாலே' என்று விளிக்கும் வார்த்தையைக் கொண்டு, இறைவன் பிரபஞ்சத்தில் தேவர்கள் உள்ளிட்ட சேதனங்களுக்கும் சடத்துவமான அசேதந வஸ்துக்களுக்கு தலைவனாகவிருக்கும் ஸர்வேச்வர நிலை அறியப்பெறுகிறது. ஆழ்வார் இவ்விடத்தே இறையானந்தத்தை அனுபவிக்க முயன்று அது முழுமையாக முடியாத நிலையில் நெடுமாலே என்று விளிப்பாராகிறார். ஆச்சார்யரும் இதற்கு, 'தன் வ்யாமோஹாதி சயத்தைக் (வியக்கத்தகும் அன்பின் பெருக்கைக்) காட்டி சைதில்யத்தைப் (அழிவு ஏற்படாதவாறு, பிறப்பியா நிற்கிறவனென்னுதல்' என்று உரைக்கின்றார். அடுத்து, எம்பெருமானை, 'கிடந்தாய் கண்டேன்' என்றதிலிருந்து, இறைவன் ஆத்மவஸ்துவுடன் எஞ்ஞான்றும் பிரியா நிலையில்அருளித்துக்கொண்டு இருக்கும் அவனது கருணையுள்ளம் அறியப்பெறுகிறது.

இரண்டாவது பாடல்முதல் பாடலமைவிலேயே அமைந்து, ஆழ்வாரால் இறைவன், 'எம்மானே' என்று விளிக்கப்பெற்ற, 'எம்மாவுருவம்' என்றவாறு அவனுருவம் விளக்கம் பெறுகிறது. 'எம்மானே' என்றதனால் இறைவன் தன் ஆணையினால் பிரபஞ்ச நிகழ்வுகளுக்கும் சிறப்பாக ஆத்மவஸ்துவின் நலனிற்கும். காரணகர்த்தாவாகிறான். இதற்கு உரையும்,

'உடையவன் நினைத்தபடியன்றோ உடமை 'என்று சுருக்கும். அடுத்து, 'எம்மாவுருவம்' என்றதனால் பக்தர்களுக்கு தான் எந்த உருவம் எடுத்தால் அதன்வழி அவர்களது பக்தியால் மிக்கிடும் ஆர்த்தி (துயர்) தொலையும் என்பதை அறிந்து அவ்வுருவம் கொண்டிடும் பரநிலையில் நின்றானது எளிமைத் தன்மை விளக்கப் பெறுகிறது. இதற்கு, 'அதுதான் அப்ராகிருத (பிரகிருதிக்கு அப்பாற்பட்ட) திவ்யஸம்ஸ்தா நமாயிருக்கை (போக்கியத்திற்கான இடமா யிருக்கை)' என்று உரையமையும்.

இத்திருமொழியின் நான்காம்பாடல், ஆழ்வார் எம்பெருமானைக் கூப்பிட, அவனும் வாராமை கண்டு, தான் எண்ணியது நிகழவில்லை என்று துன்பப்படும் இவரது பாங்கை விவரிக்கிறது. ஈண்டு எம்பெருமானது பூர்த்தியானது அவரவர் அறிவிற்கு உட்பட்டு மட்டும் அமையாது அதனைத் தாண்டியுமே இருக்கின்றது. ஆழ்வாரும் இவ்வுண்மையை, 'செலக்கான்கிற்பார்காணுமளவும் செல்லுங்கீர்த்தியாய்'! என்று புகழ்ந்துபாடுகின்றார் அடுத்து இறைவன் எல்லா ''உலகுடைய ஒரு மூர்த்தி'' என்று சுட்டப்பெறுகின்றான். இத்தால், எல்லா உலகங்களிலும் உள்ள சேதனாசேதனங் களைத் தனக்குச் சேஷமாக ஏற்றுக்கொண்டு அவற்றை உள்வாங்கியுள்ள அவனது அத்விதீயவிக்ரஹமான (மற்றற்ற வடிவான) அவனது அர்ச்சை நிலை ஆச்சரியம் மிக அறியக்கிடக்கிறது.

ஐந்தாம் பாடலில், ஆழ்வார் தனது எம்பெருமானுடனான பிரிவுத்துயரை அவனிடமே வெளிப்படுத்தியும் அவனைக்காணப்பெறாமை யால் இறுதியாகவாவது அவனுடைய திருவடிப்பேற்றைப் பெற்றிடும் பாக்கியத்தைப் பெற விழைகிறார். இங்கு இவர் இறைவனை 'செந்தாமரைக் கண்ணா' என்றவாறு உயிர்களுடன் அவன் கொண்டிடும் 'காப்பவன்' - காக்கப்பெறுவன' என்னும் தொடர்பு ஆழ்வாரால் நினைக்கப்பெற்று, தான் இறைவனுக்கு கட்டுப்பட்டு அவனைக் குளிர நோக்கிடத் தகுதியிருந்தும், அவனால் பார்க்கப் படாத நிலையில் தரிப்பு கூடிடும் வகையை உணர்ந்து இவர் தவியாய் தவிப்பாராகிறார். பிள்ளையும் இத்தவிப்பை, 'ரக்ஷணபரிகரமுடையவனே (காக்கும் குழாங்களையுடைவனே), என்னார்த்திதீர நோக்குகைக்கு போக்யதையுண்டாயிருக்க, ,இழக்கவோ,! என்று சுட்டுகிறார்.

இத்திருமொழியின் ஆறாம் பாட்டில், ஆழ்வார் இறைவனிடம் அவனை அனுபவிக்கவே பிறவியெடுத்துள்ள தனக்கு மற்றவற்றில் நாட்டம் ஏற்படாதவாறு தனது த்வத்ப்ராப்திந் தங்களைப் (உன்னை அடைய இடையூறான தொடர்புகளை) போக்கி அவனையே அடைவ தற்கான வழிமுறைகளைக் காட்டுவிக்க அவனருளையே இறைஞ்சி வேண்டுகிறார். ஆழ்வாரும் இந்நிலையில் இறைவனை, 'வானோர் கோமானே' 'யாழினிசையே' 'அமுதே', 'அறிவின் பயனே' என்று கண்ணீர் மல்கி ஏத்துகின்றார். இவ்விடத்தில் 'வானோர்கோமானே' என்றதனால் இறைவனுடைய எளிமைத் தன்மை புலப்பெறுகிறது. அதாவது, பரமபதம் விட்டு இறைவன் குடந்தையில் கிடந்ததனால் வானோர்கள் 'விச்லேஷயோக்யதையும் (பிரிந்திருக் கிறார்கள் என்னும் தன்மையும்) இல்லாதவர் களானார்கள்' என்று சுட்டி லீலாவி ஸ்வரூபம், குணங்கள், போக்யதைகள் முதலியன அளவிடற்கரியதாய் இருக்கும் தன்மைகள் விளக்கப் பெறுகின்றன. மேலும் இறைவனது குண பூதியிலுள்ளவர்களுக்கு சுலபனாக அவன் கோவில்களில் அர்ச்சையாய் (பூசைத்திருமேனியாய்) இருக்கும் பெருமை பேசப்பெறுகிறது. அடுத்து, 'யாழினிசையே' என்றதனால் இறைவன் தன்னை அனுபவிக்கின்றவர்களுடைய அனைத்துப்

புலன்களுக்கும் இனிமையாக அனுபவிக்கும் திருப்பொருளாக மாறி அமைந்திருக்கும் பாங்கு அறியப்பெறுகிறது. தொடர்ந்து 'அமுதே' என்றதனால் இறைவன்அனைவராலும் பாரபட்சமின்றி அனுபவிப்பதற்கு ஏற்ற நிலைக்கலனாக இருக்கும் மேன்மை விளம்பப்பெறுகிறது. மேலும் 'அறிவின் பயனே' என்றதனால் பக்தர்களுடைய அறிவால் அறியப்பெறுவதால் அறிவிற்கு முழுமையான பிரயோஜனமாகவிருக்கும் அவனது அரும்பெரும் தன்மையும் பக்தர்களுடைய மனத்தால் அறியப்பெற அவன் முற்றிலும் ஏற்புடையவனாக இருக்கும் அவனது சான்றாண்மையும் தெளியப்பெறுகின்றன.

ஏழாவது பாடலில், ஆழ்வார் இறைவன் அவனது அழகைத் தனக்குக் காண்பித்து தனது அடிமைத்தன்மையை ஏற்று பின் திருவடி தொடர்பால் உலகக் கட்டை நீக்கிட அவனிடமே பணிகிறார். ஈண்டு இறைவன், ' பொற்சுடரே' என்று சுட்டப்பெற்று, விலக்ஷணமான (சிறப்பான) பொன்போலே ஸ்ப்ருஹணியமான (கவர்ந்திழுக்கும் தன்மையதான) ஒளியை யுடைய வனே! என்று குறிக்கப்பெற்று இறைவனது '! 'ஸர்வாதிக' (அனைத்திலும் விஞ்சிய) நிலை போற்றப்பெறுகிறது. அடுத்து, அவனை, செங்கட் கருமுகிலே' என்றதனால் உயிர்களின்பால் அவனது வாத்ஸல்யமான தாயன்பு மிதமிஞ்சி அமைந் திருப்பது ஏற்றம் பெறுகிறது. தொடர்ந்து,' 'எரியேபவளக்குன்றே' என்று குறிக்கப் பெற்று, அவனைஏற்காதவர்களுக்கு அவன் அநபிபவ நீயனாயும் (தவிர்க்க முடியாதவனாயும்) அநுகூலர்க்கு அவன் ஔஜ்வல்யத்தாலே (ஒளியினாலே) ஸ்பருஹாவிஷயமாயிருக்கையும் (விருப்பத்தால் அடைய முடியாத பொருளாயிருக் கையும்) தக்கவாறு எடுத்துரைக்கப்பெறுகிறது.

ஒன்பதாம் பாடலில், ஆழ்வார், தான் எம்பெருமானுக்கு அடிமையாய் இருக்கும் தாழ்ச்சிமையை அவனுக்கே உணர்த்தி அங்ஙனமே தன்னை ஆதரிக்க வேண்டி அலமருந்துபவராகிறார். அதுபொழுது, இறைவன் 'ஆதிமூர்த்தி' என்று விளிக்கப்பெற்று நித்யசூரிகளுக்கும் தலைவனாக விருக்கும் அவன் இப்பிரபஞ்சத் திற்கும் முதல் காரணமாகவிருக்கும் அவனது பேராண்மை பகரப்பெறுகிறது. இதன்வழி இறைவன் நித்ய விபூதியில் இருப்பவர்கள் இறையின்பத்தை அனுபவிப்பதற்கு இடமாகவும், லீலாவிபூதியில் இருப்பவர்களுக்குத் தங்களது இருப்பை அறிந்து கொள்வதற்கு இடமாகவும் இருக்கின்ற உண்மை விளக்கம் பெறுகிறது. இவ்வுண்மையை ஆச்சாரியரும், ''அங்குள்ளார்க்கு போகஹேதுவாய் (அனுபவிக்கைக்கு காரணமாயும்) இங்குள்ளார்க்கு ஸ்த்தாஹேதுவாயிருக்கை (உருவமறிய காரணமாயிருக்கை)'' என்று உரைக்கின்றார்.

இவ்வளவிலும் ஆழ்வார் திருக்குடந்தையில் திருவருள் காட்சி கிடைக்கப்பெறாமையால், இன்னும் எத்தனை திவ்ய தேசங்களுக்குச் சென்று அர்ச்சாமூர்த்தியை மங்களாசாசனம் செய்வது என்ற ஏக்கத்தை ஆழ்வார் பத்தாவது பாடலில் வெளிப்படுத்துகிறார். அதுபொழுது, இவர் எம்பெருமானை, 'என்மாயா!' என்று ஆச்சரியம் வெளிப்பட விளிக்கின்றார். இதன்மூலம் இறைவன் பக்தர்களுக்கு கண்ணால் காட்சி கொடுக்காது, மனதால் அருவமாய் நின்று அருளிக்கும் அவனது ஆற்றலுடைமை சுட்டப்பெறுகிறது. இப்படியாக, இறைவன் அநாச்ரிதர்களுக்கு (அண்டாத வர்களுக்கு) அனுபவிக்கவொண்ணா தவனாயும் ஆச்ரிதர்களுக்கு (அண்டியவர்களுக்கு) அனுபவிக்க உகந்தவனாயும் இருக்கும் அவனது சௌசீல்ய (எளிமைக்) குணம் தக்கவாறு எடுத்துரைக்கப் பெறுகிறது.

ஜீவான்மாவின் குணங்கள் வெளிப்பெறுகை :

இத்திருமொழியின் ஒன்று, மூன்று, பத்து ஆகிய பனுவல்களில் நம்மாழ்வார் இறைவன் முன் தன்னை, 'அடியேன்' என்று பவ்வியமாக கூறிக்கொள்கிறார். இதற்கு, ஜீவான்மா எம்பெருமானுக்கு அது எப்பொழுதிலிருந்து இருக்கிறதோ அப்பொழுதிலிருந்து அடிமைப் பட்டது என்பது பொருள். அதாவது, சேஷத்துவமே ஜீவான்மாவிற்கு ஸ்வரூபம். ஸ்ரீவசனபூஷணமும் இவ்வுண்மையை, ''தாஸ்ய்மிறே (அடிமையன்றோ) அந்தரங்க (உள்ளீட்டு) நிரூபகம் (இலக்கணம்)'' (சூத்திரம் 74) என்றும் ''அஹங்காரமாகிற ஆர்ப்பைத் (அழுக்கைத்) துடைத்தால் ஆத்மாவிற்கு அழியாத பேர் அடியான் என்றியே'' (சூ.78) என்றும் உறுதிப்படுத்தும். இவ்வுண்மையானது இரண்டாவது பாடலில் வரும் 'என்னை ஆழ்வானே' என்ற வார்த்தையால் இறுதி செய்யப்பெறுகிறது. அழகிய மணவாள ஜீயரும் தமது உரையில் இவ்வார்த்தைக்கு, ''என் சத்தைப் பழியாமல் அனுபவித்துக் கொண்டு போருமவனாய்'' என்று கூறி இக்கருத்திற்கு வலிமை சேர்க்கிறார். ஆழ்வாரும் தான் எம்பெருமானுக்கு எஞ்ஞான்றும் அடிமை என்பதை ஏழாவது பாடலில் 'பிரியாவடிமை' என்ற பதத்தால் ஊர்ஜிதப்படுத்துகிறார். தொடர்ந்து, இவர் ஒன்பதாவது பாடலில் தான் எம்பெருமானுக்கு அடிமையாயிருத்தலை அவனே மனமுவந்து ஏற்பவனாகிறான் என்பதை ''இசைவித்தென்னை உன்தாளிணைக்கீழ் இருத்துமம்மானே'' என்று முடிக்கிறார். இவ்வுண்மையைப் பெரியவாச்சானது, ''நெடுநாள் விமுகனான (ஈடுபாடற்றவனான) என்னையும் அடிமையிலே இசைவித்து என்னிசைவுக்கு எதிர்சூழல் புக்குத்திரிந்த உனக்கு அபேக்ஷிதம் செய்யக் (விருப்பம் ஈடேற்றக்) குறையென்? நான் அர்தியாதேயிருக்க (துக்கிதனாகவேயிருக்க) என்கார்யம் செய்த நீ, இன்று இரக்கச்செய்தே விளம்புகிறதென்? பரகுபரகு என்று திரியாதபடி உன் திருவடிகளே விஷயமாம்படி (பொருளாகும் படி) பண்ணுமவனே'' என்று உரைப்பதோடு உரசிப்பார்க்கலாம். இவ்வாறாக, ஜீவான்மா எம்பெருமானுக்கு எஞ்ஞான்றும் தனது விருப்பத்தின்பால்பட்டு அடிமைப்பட்டே இருக்கிறது என்ற ஆழ்வாருடைய கருத்து இறுதிசெய்யப்பெறுகிறது.

ஜீவான்மா எம்பெருமானை அடைய முடியாமைக்கான இடையூறு :

ஜீவான்மா இதுகாறும் எடுத்த பிறவிகளிலும் இப்பிறவியிலும் எம்பெருமானுக்கு இதன்மீது வெறுப்புத் தோன்றும்படி செய்திட்ட செயல்களாலும் நீதிநெறிமுறைகளைச் சாற்றும் ஆணையிடும் நூல்கள் பரிந்துரைக்கும் செயல்களைச் செய்யாமையினாலும் ஏற்பட்ட தீவினையாலேயே இது இவ்வுலகிலேயே உழன்று கொண்டேயிருந்து பரமபதத்திற்குச் சென்று ஸ்ரீமன் நாராயணனுக்கு காலதேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டு நித்ய கைங்கர்யம் செய்யமுடியாத நிலைக்கு ஆட்பட்டு விட்டது. நம்மாழ்வார் இக்கருத்தை ஐந்தாம் பாடலில், ''தழுவல்வினையால் பக்கம் நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்''. என்று சுட்டி, தான் இறைவனை அடைய முடியாமைக்கு வருந்துகிறார். தீவினை பற்றிய இக்கருத்தைப் பிள்ளையும், ''உடன் வந்தியாய் ஒருத்தரால் போக்கவொண்ணாத ப்ரேமத்தாலே கிட்டாது என்றாலும் விடாதேயிருக்கிற அதிமாத்ர ப்ராவண்யமென்கை (பாவத்தின் வலிமை என்க)'' என்கிறார். வடக்குத் திருவீதிப் பிள்ளையும், ''உடன்வந்தியான வல்வினை என்னைத்தழுவி விடாதேநிற்கிற காதலாகிற ப்ரபலபாபத்தாலே'' என்று உரை

செய்கிறார். இதனைத் தொடர்ந்து சடகோபனும், வினைப்பயனைப் போக்க இறைவனிடமே, ''என் தொல்லைவினையைறுத்து, உன்னடி சேரும்'' என்று இறைஞ்சி ''தீராவினைகள் தீர என்னை ஆண்டாய்'' என்றும் கூறிடுவார். இதனால் ஜீவான்மாவிடமுள்ள வினை அல்லது கட்டு என்னும் தடை இதனுடைய முயற்சியினால் மட்டும் அல்லாது இறைக்கருணையாலேயே முற்றிலுமாக இல்லை செய்ய முடியும் என்ற உண்மை சந்தேகத்திற்கிடமின்றி அறுதியிடப் பெறுகிறது.

ஜீவான்மா எம்பெருமானை அடையச்செய்திடும் உபாயங்கள் :

ஆழ்வார், ஜீவான்மாவின் பிறவியால் அதனுடன் இணைந்திட்ட தடையான வினைப்பயனைப் போக்கி இறைவனை நேரடியாக அனுபவிக்க 'பக்தி' 'பிரபத்தி' என்னும் வழிகளை முன்மொழிகிறார். ஈண்டு, பக்தி என்பது அவனருள் கொண்டு அவனிடம் முழு ஈடுபாட்டுடன் எவ்வித பிரதியுபகாரமும் எதிர்பார்க்காமல் ஒருமுக நோக்குடன் அவனையே வழிபட்டு அவனுடன் இணைதல் என்பதாகும். பிரபத்தி என்பது ஜீவான்மா எதனையும் எதிர்பார்க்காது இறைவனுடைய திருக்கருணையினைப் பற்றாகக் கொண்டு அவனுடன் முழுநம்பிக்கையுடன் முற்றிலும் முடிவுமாக 'தான்' என்ற எவ்வித இருப்பும் தன்னிடம் இல்லாது அவனிடம் முழுமையாகச் சரணமடைதலைக் குறிக்கும். இத்திருமொழியின் அமைவைக் காணும் பொழுது இதன் வரிகளில் பொதிந்திருக்கும் உள்ளீட்டுப் பொருள் பக்தியையும் பிரபத்தியையும் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

இப்பின்னணியில் ஆழ்வார் முதல் பாடலில் எம்பெருமானிடம் மாளாத பக்தி கொண்டதால் பெற்ற பேரின்பம் சடத்துவ உடலையே உருக்குவதாக, ''அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து கரைய உருக்குகின்ற'' என்று இறையன்பை உள்வாங்குகின்றார். இரண்டாம் பாடலில் ''என்னை ஆழ்வானே'' என்றவாறு இறையின்பம் முழுமையாக கிடைக்காவிடின் ''என்னான் செய்கேன்'' என்று ஏங்கி உள்ளம் உருகி பக்தி வழிப்படுகிறார். மூன்றாவது பாடலில், 'எம்பெருமான் ஒருவனே தனக்கு வழியும் முடிவும் என்றவாறு ''உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்'' என்று தான் மனமுவந்து அவனருளும் நாள்வரையிலும் காத்துக்கிடக்கும் நிலையில் ''அடியேனருவாணாள் சென்னாளெந்நாள் அந்நாள் உனதாள்பிடித்தே செலக்காணே'' என்று பிரபத்தியின் வழிப்பட்டு பொறுமைகாட்டுகிறார். ஆழ்வாரும் நான்கு மற்றும் ஐந்தாவது பாடல்களில் எம்பெருமானான உன்னைக் காணவேண்டி அலப்பாய் ஆகாசத்தை நோக்கி யழுவன் தொழுவன் என்று கூறுவதுடன் ''பக்க நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்'' என்று அவனாணையை எதிர் நோக்கிறார். அடுத்து ஆறு மற்றும் ஏழாவது பாடலில் ஆழ்வார் 'அவனடி சேருவதே தனக்கு இறுதி முடிவு' என்றவாறு அவனிடம் பிரபத்தியால் முற்றிலும் சார்பு பெற்று ''தரியேனினி உன்சரணம் தந்து என்சன்மம் களையாயே'' என்று வேண்டி நிற்பாராகிறார். இதைப்போலவே எட்டு, ஒன்பது, பத்தாவது பாடல்களில் தன்னுடைய வேண்டுதலுக்கு இசைந்து முழுக்கருணையையும் பொழித்து பிறவியை நீக்கி எஞ்ஞான்றும் எம்பெருமானுடன் இருந்திடல் வேண்டுமென்றவாறு அவனது அருளாணையை வேண்டி ஆழ்வாரும் ''இசைவித்தென்னை உன்தாளிணைக்கீழ் இருத்துமம்மானே'' என்று முடிக்கிறார். பெரியவாச்சான் பிள்ளையும் மேற்கூறியவாறு

பக்தி/ பிரபத்தி பற்றிய கருத்துக்களை உள்வாங்கி அவற்றை நயம்பட தன்னுரையின் உள்வைத்து ஆழ்வார் கூற்றுபோல ''என்னை அடிமை கொள்ளுகைக்குத் திருக்குடந்தையிலே வந்து ஸந்நிஹிதனானவனே (நிலைத் தருளுபவனே) ஸம்ஸாரிகளை யநுபவிப்பக்கவந்து கிடக்கிற உனக்காட்பட்டும் பரமபதத்தி லிருப்பிலேயாதல் அவதாரங்களிலே யாதல் ஆசைப்பட்டேனோ ஆருடைய வஸ்து இங்ஙனம் அலமந்து (தலைசுற்றி) திரிகிறது. இன்னமும் எத்தனை திருப்பதிகள் தட்டித்திரியக் கடவேன்'' என்று கூறி இத்திருமொழிக்கான தனது உரையை முடிக்கிறார். முக்கிய பலமாம் பகவதனுபவமான நித்திய கைங்கர்யம்

ஆராவமுதனும் பக்தி பிரபத்தி உபாயங் களைக் கடைப்பிடித்த பெத்தான்மாவாகிய இந்த ஜீவனைத் தனக்கு சேஷத்துவத்தைச் செய்யவைத்து ஆட்கொள்ளுகிறான். இறைவன் இச்செயலை லீலாவிபூதியில் நிகழ்த்த வைத்து பக்தன் தனது சடத்துவ உடலை ஒரு நிலையில் நீத்தபின்னர் நித்யவிபூதியான பரமபதத்திற்கு ஏவ விட்டு, அங்கு நித்ய கைங்கர்யம் செய்ய ஆட்படுத்தி நித்திய முக்தர்களுடனும் இவனை ஒன்று சேர்க்கின்றான். பிறகு, அங்கு இது நாள் வ்ரை கர்மத்தின் தொடர்பால் இழந்திருந்த கைங்கர்யங்களை யெல்லாம் அப்பொழுதிலிருந்தே ஒன்று சேர்த்துச் செய்யுமாறுஅருள்புரிந்து இவனை முடிவில் ஆட்கொள்ளுகிறான்.

இவ்வாறு திருக்குடந்தை சென்று திகழக்கிடந்தானிடம் நித்ய கைங்கர்யம் வேண்டி நிற்கும் இவ்வாழ்வாருடைய நிலையைப் பெரியவாச்சான்பிள்ளையும் ''பரமபதம்கலவிருக் கையாயிருக்க இங்கே வந்து கண்வளர்ந் தருளுகிறது குறைவாளர் குறைதீர்க்கைக்காண பின்பு நம்மபேக்ஷிதம் செய்யாதொழியக்கூடாது'' என்று உரைப்பாராகிறார். ஆழ்வாரும் இங்ஙனமாக தமது குறையைத் திகழக்கிடந்தானிடம் விச்லேஷமாகக் கூறி அதன் பின்புலத்தில் சம்ச்சேலஷமாக இறையின்பத்தை முழுமையாக மாந்தி பரமபதம்சென்று அங்கே ஸ்ரீமன் நாராயணனுக்கு நித்ய கைங்கர்யம் இயற்றிடும் நிலைக்குப் பரிபக்குவம் அடைகிறார். ஆழ்வார் தனது இந்நிலையை இத்திருமொழியின் பலஸ்ருதியில் ''மழலைதீரவல்லார் காமர்மானேய் நோக்கியர்க்கே'' என்று முடிக்கிறார். இவ்வரிக்கு பெரியவாச்சான் பிள்ளையும் ''இவருடைய பாவவ்ருத்யோடே (அனுபவநிலையைப் போல) கற்கவல்லர்கள் மானேய் நோக்கியர்க்கு காமுகரைப்போல் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு (ஸ்ரீமன் நாராயணன்) போக்கியராவர்'' என்று உரை சாதிக்கிறார்.

ஆம்! இம்முற்றிய நிலை கைகூடுவது ஸ்ரீவைகுண்டத்தில் நித்யகைங்கர்ய சாதிப்பிலே. ஆக நாமும் திருக்குடந்தையில் திகழக்கிடந்தான் ஆராவமுதனைப் பிரபத்தியால் அடைந்து இங்கு முக்கிய பலனை முதல்நிலையில் பெற்று, தொடர்ந்து பரமபதத்திற்கு ஏகி எஞ்ஞான்றும் நித்யகைங்கர்யம் புரிந்து அதனடியாக ஸ்ரீமன் நாராயணனுடைய அனந்தகோடி கல்யாண குணங்களில் ஈடுபட்டுத் தோய்ந்து குணபூர்த்தியைத் தட்டாது அடைவோம்! வாருங்கள்!!

நல்லூர் மாடக்கோயில்

இரா.சிவானந்தம், M.A., M.L.I.S., M.Phil., P.G.D.E.A.,
தொல்பொருள் ஆய்வுத்துறை - சென்னை.

நல்லூர் என்னும் சிறப்பு வாய்ந்த இச்சிவத்தலம், தஞ்சை மாவட்டம் கும்பகோணம்-தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் உள்ள பாபநாசத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இத்திருத்தலத்தில் வாழ்ந்து சிவபுரியை அடைந்த அமர்நீதிநாயனார், திருநாவுக்கரசருக்கு இறைவனால் திருவடி சூட்டியது, கோவண நாடகம், பாதாள அறையிலிருந்து செப்புத்திருமேனிகள் கண்டெடுக்கப்பட்டது, ஆடவல்லான் தலைக்கோல் ஏந்தியிருப்பது, கல்வெட்டுச் செய்திகள் ஆகியச் சிறப்புகளை இக்கட்டுரையில் காண்போம். இக்கோயில் இறைவனது பெயர் பெரியாண்டேசுவரர், கல்யாண சுந்தரர், பஞ்சவர்ணேசர் என்பன. இறைவி பெயர் பர்வதசுந்தரி, கல்யாணசுந்தரி என்பன. பிருங்கி முனிவர் வண்டு உருவில் பூசித்ததால் திருமேனி முழுவதும் துளைகள் உள்ளன. அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டிய தலமாதலால் அகத்தியலிங்கமும், கல்யாணசுந்தரக்கோலமும் கருவறையில் இருக்கின்றன. இறைவன் பொன் வண்ணத் திருமேனியாக விளங்குகிறார். ஒரு நாளைக்கு ஐந்து வண்ணமாய்த் தோன்றுகிறார் என்பது புராணச் செய்தியாகும். நல்லூர் அருள்மிகு கல்யாணசுந்தரேசுவரர் திருக்கோயில் திருவாவடுதுறை திருமடத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயில் அழகிய மாடக்கோயில் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கோச்செங்கணனால் திருப்பணி செய்யப் பெற்ற மாடக்கோயில் ஆகும். திருமங்கையாழ்வார் திரு இலச்சினை பெற்றத் தலமான திருநறையூரில் பாடிய பாசுரத்தில் ''இருகிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்கு எழில் மாட மெழுபதுசெய் துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்'' என்று கோச்செங்கட் சோழனால் எழுபது மாடக் கோயில்கள் சிவனுக்கு கட்டப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மாடக்கோயில்கள் சாதாரண தரைத்தளத்தனின்றும் உயரமாக கட்டப்பட்டு மேல் தளத்தில் கருவறை அமைக்கப்பெற்றிருக்கும். இம்மாதிரியான மாடக்கோயில்களை தற்போது நல்லூர், நாலூர், மற்றும் கீவளூர் (நாகை அருகே உள்ளது) ஆகிய ஊர்களில் கீவளூர் (நாகை அருகே உள்ளது) ஆகிய ஊர்களில் பார்க்கலாம். நல்லூர், சோழநாட்டு தலங்களுள் காவிரியின் தென்கரையில் அமைந்த தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் 83வது தலமாகும். இத்தல இறைவனைப் பரவி சம்பந்தர் 3 பதிகங்கள், திருநாவுக்கரசர் 2 பதிகங்களுமாக மொத்தம் 5 பதிகங்கள் பாடியுள்ளனர்.

அமர்நீதி நாயனார் புராணம்

சோழநாட்டுப் பழையாறை என்னும் ஊரில் அமர்நீதி நாயனார் பிறந்தார். இவர் வணிகர் குலத்தைச் சேர்ந்தவர். பொன், மணி, துகில் ஆகியவற்றை வாணிகம் செய்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்தார். சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தும், அவர்களுக்கு வேண்டுவன அறிந்து கந்தை, கீள், உடை, கோவணம் ஆகியவற்றையும் உதவி, சிறந்த சிவனடியாராக வாழ்ந்து வந்தார். திருநல்லூர் சென்று அங்கு திருமடம் நிறுவி அன்பர்களுக்கு உணவு அளித்து மகிழ்ந்தார். பின்னர் சுற்றத்தாருடன் திருநல்லூரிலே குடியேறினார்.

ஒரு நாள் சிவபெருமான் தனது கோவணப் பெருமையை காட்டி அருள் அருளிக்கும் பொருட்டு வேதியர் குலத்துப் பிரம்மச்சாரி உருவங்கொண்டு அமர்நீதியார் திருமடத்திற்கு வந்தார். சிவனடியார்களுக்கு நன்னமுது ஊட்டிக் கந்தையும், கீளும், உடைகளும், அழகிய வெண்கோவணங்களும் ஈகின்றது கேட்டு உம்மைக் காண வந்தேன் என்றார் பிரம்மச்சாரியார். அமர்நீதியார், இத்திருமடத்திலே மறைப் பெருந்தவர்கள் அமுது செய்ய அழைப்பதுண்டு. நீரும் இங்கு இன்று அமுது செய்தருள வேண்டும் என்று வேண்டினார். அதற்கிசைந்து நான் காவிரியில் நீராடி வருகிறேன், மழை வரும் பொருட்டு இந்த காய்ந்த கோவணத்தை



உம்மிடத்தில் பாதுகாப்பாக வைத்திருந்து தருவாயாக என்று கூறி தன்கைத்தண்டின் மீதிருந்த இரண்டிலொன்றை அவிழ்த்துக் கொடுத்து விட்டு காவிரியிற் நீராட சென்றார். அவரும் அக்கோவணத்தைத் தமது கோவண வகைகளிலிருந்து தனியிடத்திற் வைத்தார்.

வேதியர் அக்கோவணத்தை அவ்விடத்திலிருந்தது போக்கி விட்டார். பின்னர் மழையில் நனைந்ததால், தண்டின் மேலிருந்த கோவணம் ஈரமாயிற்று, ஆதலால்நான் தந்த கோவணத்தை கொண்டு வாரும் என்றார். வேதியர் செய்ததை அறியாத நாயனார் தாம் வைத்திருந்த இடத்தில் கோவணத்தை காணாது திகைத்து நின்றார். தன் கோவண வகைகளிலும் தேடியும் கிடைக்கவில்லை. வேதியர் புனைவதற்கு வேறொரு கோவணங்கொண்டு அவர் முன் வந்து 'அடிகளே! நீர்தந்த கோவணத்தை நான் வைத்த இடத்திற் கண்டிலேன். வேறிடத்தில் அதனை ஒளித்தார் பிறருமில்லை. அது மறைந்த வழியை அறிந்திலேன். இது அதிசயம்!' என்றுரைத்து வேறு நல்ல கோவணங்கொண்டு வந்து, 'இது கிழிந்த கோவணமன்று, நெய்தமைத்தது, ஈரத்தை மாற்ற இதனைச் சாத்தி. எனது பிழையைப் பொறுப்பீராக' என்று வணங்கினார். கோவணம் கொடுப்பவன் என்றும் நாளும் உலகிலே நீர் சொல்லுவித்தது என் கோவணம் கொள்வது துணிந்ததோ? என சினங்கொண்டதைப் போல் கூறினார். 'அறிந்து செய்ததன்று, சிறியேனது பெரும்பிழையை பொறுத்தருளுக இனி தாங்கள் பணித்தபடி செய்வேன், நல்ல பட்டாடைகள், மணிகள், முதலியவற்றில் கோடி கொண்டருளுக' என்று பயத்துடன் பலமுறை பணிந்தார். வேதியர் சினந்தணிந்தது போன்று காட்டி 'எனக்கு உன் மணியும் வேண்டாம், பொன்னும் வேண்டாம் எனது கோவணத்துக்கு நேர் கோவணமே வேண்டும்' என்றார். அதற்கு அமர்நீதியார் இசைந்து ஒருதுலை (தராசு) நாட்டி ஒரு தட்டில் வேதியர் தந்த அவரின் மற்ற கோவணத்தை இட்டு மற்றொரு தட்டில தம் கையிலிருந்த கோவணத்தையிட்டார். தட்டுகள் நேராக நிற்கவில்லை. மேலும் அடியார்களுக்கு அளிக்க வைத்திருந்த கோவணங்களை எடுத்து ஒவ்வொன்றாக இட்டும் தட்டு நேர் பெறவில்லை. அமர்நீதியார் அதிசயித்து அதன் மேலும் பல பட்டாடைகளையும் பலவகைத் துகில்கள், பொன், வெள்ளி, மணிகள் முதலிய தனது தனங்களையும் இட்டார். அப்போதும் தட்டு மேலே நின்றிருந்தது. தம்முடையதாக எண்ணிய அனைத்தையும் இட்டபின்னும் நேராகாததைக் கண்டு, தாமும் தமது மனைவியாரும் மற்றும் மைந்தனும் துலையில் நிற்க இசைய வேண்டுமென வேதியரை இறைஞ்சினர், அவரும் இசைந்தனர். அவ்வாறே மூவரும் அத்தனித்துளியை வலங்கொண்டு நின்று திருநல்லூர் இறைவனை வணங்கி ஐந்தெழுத்தை ஒதித் தட்டின் மீதேறினார்கள். இறைவனது கோவணமும் அன்பு குறைபடா அடிமைத் தொண்டும் ஒப்பாவன. ஆதலினால் அத்துலை நேர்நின்றது. வேதியராய் வந்த இறைவன் மறைந்து ஆகாயத்திலே தேவியருடன் காட்சியளித்தார். துலை மேனின்ற அன்பரும், மைந்தரும், மனைவியாரும் தம்மைத் தொழுதுகொண்டேயிருக்கும் அழிவில்லாத சிவபதம் கொடுத்து அருளினார். இம்மூவரும் இறைவனது சிவபுரியை அடைந்தனர். இக்கோயிலில் அமர்நீதிநாயனாரின் கற்திருவுருவச்சிலை உள்ளது சிறப்புறத்தக்கது.

கோவண நாடகம்

அமர்நீதிநாயனார் புராணம் இக்கோயிலில் நாடகமாக நடிக்கப்பட்டு வந்துள்ளது. இந்நாடகம் கோவணநாடகம் என்று அன்றைய மக்களால் அழைக்கப்பட்டுள்ளது. இந்நாடகம் திருநல்லூர் நாயனார் கோயிற் திருநாடகம் எனப்பட்டது. இந்நாடகத்தை இக்கோயில் தேவரடியார் நெற்றிக்கண் நங்கை கற்று ஆடியுள்ளார். இவருக்கு இறையிலியாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. இவருக்குப் பின் இவர் சந்ததியரும், சந்ததியர் ஆடவில்லை என்றால் அவர்கள் வேறு ஆடற்கலைஞரைக் கொண்டு ஆட்டுவிக்கவேண்டும் என்றும் இரண்டாம் இராசாதிராசர் 12வது ஆட்சியாண்டு கல்வெட்டு தெரிவிக்கிறது. ஆடற்கலையை சிறப்பிக்கும்

வண்ணம் முன்னர் கூறியபடி இக்கோயில் ஆடவல்லான் திருமேனியின் மூன்றாவது வலக்கரத்தில் தலைக்கோல் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திருநாவுக்கரசருக்கு திருவடி சூட்டிய நல்லூர்த்தலம்

திருநாவுக்கரசர் காவிரியாற்றின் இருகரையுலுஞ் சென்று செம்பொன்பள்ளி, மயிலாடுதுறை, திருத்துருத்தி, வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, கோடிகா, ஆவடுதுறை, இடைமருது, நாகேச்சுரம், பழையாறு முதலிய தலங்களை வணங்கித் திருச்சத்தி முற்றத்தைச் சென்றடைந்தார். உமாதேவியாரது அன்பிற் சிறந்த பூசனையையேற்று என்றும் மகிழும் இனிய பெருமானாகிய சிவக்கொழுந்தீசரை இறைஞ்சி நின்று ''எம்பெருமானே, கொல்லுந் தொழிலுடைய கூற்றுவன் என்னுயிரை இவ்வுடம்பினின்று பிரித்து வருத்துவதற்கு முன்னமே நின்னுடைய செந்தாமரை மலர் போலும் அழகிய திருவடிகளை என் தலைமேற் சூட்டியருள்வாயாக'' எனவேண்டி

கோவாய் முடகி யடுதிறற் கூற்றம் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவ டென்மேற் பொறித்துவை போகாவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய் முழங்குந் தழற்கைச்
சூதவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

இத்திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். அவ்வேண்டுகோளைச் செவிமடுத்த சிவபெருமான், நாவுக்கரசை நோக்கி நல்லூருக்கு வா எனப்பணித்தருளினார். திருநல்லூரை அடைந்து இறைவனை வணங்கி மகிழ்ந்தெழுந்தார். அப்பொழுது சிவபெருமான், 'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்' என நாவுக்கரசருக்கு உணர்த்தி, அவர்தம் சென்னிமிசைப் பாதமலர் சூட்டியருளினார். திருநாவுக்கரசர் தமக்கு அருள்புரிந்த இறைவனது பெருங்கருணைத் திறத்தை வியந்து,

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே

எனவரும் திருத்தாண்டகச் செந்தமிழ்மாலை பாடிப் பரவிப் போற்றினார். திருநாவுக்கரசடிகள் இப்பதிகத்தில் அமைந்த திருப்பாடல்களின் இறுதி தோறும் 'திருவடி என்தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே' எனத் திருநல்லூரிற் சிவபெருமான் தம் சென்னிமிசைத் திருவடி சூட்டியருளிய அற்புத நிகழ்ச்சியை நினைந்துருகிப் போற்றியுள்ளதைக் காணலாம்.

திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டவர் நம்பியும், இந்நிகழ்ச்சியை, 'நற்றவன் நல்லூர்ச்சிவன் திருப்பாதம்தன் சென்னிவைக்கப்பெற்றவன்' என்னும் இப்பாடல் வரிகளால் குறிப்பிடுகிறார். திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருவடி சூட்டியருளியதால் இன்றும் இக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு விஷ்ணு கோயில் போன்று திருவடி தலைமேல் வைக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

அமர்நீதிநாயனார் மற்றும் திருநாவுக்கரசு நாயனாரது நிகழ்ச்சிகள் சிற்பவடிவிலே தாராசுரம் கோயிலில் காணலாம்.

பாதாள அறையில் கிடைத்த நல்லூர் செப்புத்திருமேனிகள்

நல்லூரில் ஒரு பாதாள அறையிலிருந்து மொத்தம் 16 செப்புத் திருமேனிகள் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் இரா.நாகசாமி அவர்களால் வெளியுலகுக்கு கொண்டு வரப்பட்டது ஒரு சுவையான செய்தியாகும். நல்லூரில் ஒரு பாதாள அறையில் செப்புத்திருமேனிகள் இருப்பதாகவும் இவ்வறைக்கு செல்லும் பாதை ஒருவருக்கு மட்டும் தெரியும் என்று கோவில் நிர்வாகி தெரிவித்தார். அந்த ரகசியம் தெரிந்தவரிடம் தொடர்பு கொண்ட போது, இது எங்கள் குடும்ப இரகசியம், அவ்வறையில் செப்புத்திருமேனிகள் எதுவும் இல்லை, அவற்றில் இருந்த ஆபரணங்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்டுவிட்டன என்றும் தெரிவித்துள்ளார். திரு. இரா.நாகசாமி அவர்கள் சென்னை வந்து தமிழக அரசிடம் தெரிவித்தவுடன், அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் முன்னிலையில் அறையை உடைத்து உள்ளேச் செல்ல அரசு உரிய ஆணை வழங்கியது.

உரிய முன்னேற்பாடுகளுடன் கோவிலுக்குச் சென்றபோது, அங்கு அறையோ அல்லது

கதவுக்ளோ எதுவும் தென்படவில்லை. ஆனால் சுவற்றில் வழிக்கான அடையாளம் தென்பட்டுள்ளது, அச்சுவற்றை இடித்தவுடன் உள்ளே இரண்டு மரக்கதவுகள் பூட்டி சீல் வைக்கப்பட்ட நிலையில் இருந்தன. பூட்டையோ தாழ்ப்பாளையோ திறக்க முடியாத நிலையில் அக்கதவு உடைக்கப்பட்டது. ஒரு சிறிய காலி அறை இருந்தது, இவ்வறையில் தரை முழுவதும் மண் நிரம்பியிருந்தது. அந்த ரகசியம் தெரிந்த நபர் எல்லோரையும் வெளியே இருக்கக்கூறிவிட்டு, அவர் உள்ளே சென்று ஒரு மூலையில் நிரம்பியிருந்த மண்ணை நான்கு அடி தோண்டி அச்செங்கற்தரையில் சில கற்களை அகற்றினார். அதனடியில் கருங்கற் தரை தென்பட்டது. கதவு போல் அக்கருங்கற் தரையை அகற்றியவுடன் பாதாள அறைக்கு செல்ல கீழே படிக்கட்டுகள் சென்றன. இவ்வறை 6 அடி உயரம், 305 x 152.5 செ.மீ. நீள அகலத்தில் இருந்தன. இவ்வறையில் வெளிச்சமில்லை, ஆனால் சுவற்றின் சிறு துளை வழியாக காற்று வருகின்றன. அவ்வறை காலியாக இருந்தது, அதனையடுத்து பக்க அறையில் 16 செப்புத்திருமேனிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் காலத்தால் முற்பட்ட ஆதித்தியன் கால நடராஜர் (ஆடவல்லான்), செம்பியன் மாதேவி காலத்திய தேவி, முதலாம் இராசராசன் காலத்திய கல்யாணசுந்தரர் செப்புத்திருமேனிகள் சிறப்புவாய்ந்தவையாகும். மேலும் பிற்காலச் சோழர் கலைப்பாணியைச் சார்ந்த இரு பார்வதி திருமேனிகள், 13 நூற்றாண்டு மற்றும் 16 நூற்றாண்டைச் சேர்ந்த இரு ஞானசம்பந்தர் திருமேனிகள், காளி, பிடாரி, அய்யனார் திருமேனிகள், 43 செ.மீ. அளவுள்ள கல்யாணசுந்தரர் திருமேனி, கணேசர், போகசக்தி, சோமாஸ்கந்தர், சுந்தரமூர்த்தி நாயனாருடன் பரவைநாச்சியார் திருமேனிகள் கிடைத்துள்ளன. இத்திருக்கோயில் இறைவன் கல்யாணசுந்தரரின் இரு செப்புத்திருமேனிகளில் ஒன்று இராசராசன் காலத்தைச்சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆடவல்லான் - தலைக்கோல்

தமிழ் நாட்டுக் கலைகளில் ஆடற்கலைக்கென்று ஒரு சிறப்பு உண்டு. ஆடற்கலையின் தெய்வமாக இந்திரன் மகன் சயந்தனை மக்கள் வழிபட்டு வந்தனர். சயந்தனைக் குறிக்க ஒரு கோல் அடையாளமாகப் போற்றப்பட்டது. ஏழுசாண் நீளமுள்ள

மூங்கிலாலான இக்கோலின் கணுக்கள் தோறும் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு இடையிடையே பொற்கட்டு இடப்பட்டிருக்கும். இத்தகைய தலைக்கோல் ஆடல்வல்லாருக்குப் பரிசாக தாழ்ப்பாளையோ திறக்க முடியாத நிலையில் அக்கதவு உடைக்கப்பட்டது. ஒரு சிறிய காலி அறை இருந்தது, இவ்வறையில் தரை முழுவதும் மண் நிரம்பியிருந்தது. அந்த ரகசியம் தெரிந்த நபர் எல்லோரையும் வெளியே இருக்கக்கூறிவிட்டு, அவர் உள்ளே சென்று ஒரு மூலையில் நிரம்பியிருந்த மண்ணை நான்கு அடி தோண்டி அச்செங்கற்தரையில் சில கற்களை அகற்றினார். அதனடியில் கருங்கற் தரை தென்பட்டது. கதவு போல் அக்கருங்கற் தரையை அகற்றியவுடன் பாதாள அறைக்கு செல்ல கீழே படிக்கட்டுகள் சென்றன. இவ்வறை 6 அடி உயரம், 305 ஜ 152.5 செ.மீ. நீள அகலத்தில் இருந்தன. இவ்வறையில் வெளிச்சமில்லை, ஆனால் சுவற்றின் சிறு துளைவழியாக காற்று வருகின்றன. அவ்வறை காலியாக இருந்தது, அதனையடுத்து பக்க அறையில் 16 செப்புத்திருமேனிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் காலத்தால் முற்பட்ட ஆதித்தியன் கால நடராஜர் (ஆடவல்லான்), செம்பியன் மாதேவி காலத்திய தேவி, முதலாம் இராசராசன் காலத்திய கல்யாணசுந்தரர் செப்புத்திருமேனிகள் சிறப்புவாய்ந்தவையாகும். மேலும் பிற்காலச் சோழர் கலைப்பாணியைச் சார்ந்த இரு பார்வதி திருமேனிகள், 13 நூற்றாண்டு மற்றும் 16 நூற்றாண்டைச் சேர்ந்த இரு ஞானசம்பந்தர் திருமேனிகள், காளி, பிடாரி, அய்யனார் திருமேனிகள், 43 செ.மீ. அளவுள்ள கல்யாணசுந்தரர் திருமேனி, கணேசர், போகசக்தி, சோமாஸ்கந்தர், சுந்தரமூர்த்தி நாயனாருடன் பரவைநாச்சியார்

திருமேனிகள் கிடைத்துள்ளன. இத்திருக்கோயில் இறைவன் கல்யாணசுந்தரரின் இரு செப்புத்திருமேனிகளில் ஒன்று இராசராசன் காலத்தைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆடவல்லான் - தலைக்கோல்

தமிழ் நாட்டுக் கலைகளில் ஆடற்கலைக்கென்று ஒரு சிறப்பு உண்டு. ஆடற்கலையின் தெய்வமாக இந்திரன் மகன் சயந்தனை மக்கள் வழிபட்டு வந்தனர். சயந்தனைக் குறிக்க ஒரு கோல் அடையாளமாகப் போற்றப்பட்டது. ஏழு சாண் நீளமுள்ள மூங்கிலாலான இக்கோலின் கணுக்கள் தோறும் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு இடையிடையே பொற்கட்டு இடப்பட்டிருக்கும். இத்தகைய தலைக்கோல் ஆடல்வல்லாருக்குப் பரிசாக அளிக்கப்படும். அது ஆடற்கணிகையர் பெறும் பட்டமாகவும் அமையும். இதனை சிலப்பதிகாரத்தில் மாதவியை குறிப்பிடும் போது ''மலைப் பருஞ் சிறப்பிற் றலைக் கோலரிவையும்'' குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

ஆடற்கலையின் பொற்காலமாகத் திகழ்ந்தது சோழபெருவேந்தர்கள் காலம் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆடவல்லான் என்பது நடராஜரைக் குறிக்கும். தமிழகத்தில் கிடைத்திருக்கின்ற அரிய ஆடவல்லான் படிமங்களில் நல்லூர் ஆடவல்லான் படிமம் மிகச்சிறப்பானது. இப்படிவமம் கி.பி.9 - கி.பி10 நூற்றாண்டுகளில் வடிக்கப்பெற்றது என்பது அறிஞர்களின் கருத்தாகும். ஆடவல்லான் திருமேனி, அரிதாக அமர்ந்த நிலையிலுள்ள முயலகனின் தலைமீது வலது காலை ஊன்றி இடது காலை தூக்கிய நிலையில் எட்டுத் திருக்கரங்களுடன் எழில்மிகுத் தோற்றத்துடள் வடிக்கப்பட்டுள்ளது. வலக்கரங்களில் துடியும், ஏடும், தலைக்கோலும் காணப்படுகின்றன. நான்காவது வலக்கரம் அபய முத்திரையுடன் அமைந்துள்ளது. இடக்கரங்களில் தீயகலும், மணியும், முத்தலைப் பாம்பும் உள்ளன. மேலும் நான்காவது இடக்கரம் வேழ முத்திரையுடன் அமைந்துள்ளது.

வலது கரங்களில் மூன்றாவது கரத்தில் தலைக்கோல் ஏந்தியுள்ளதால் ஆடற்கலைக்கு அளித்த சிறப்பையும், ஆடற்கலைத் தெய்வமான சயந்தனும் அடக்கம் என்பது மிக தெளிவு. தலைக்கோலுடன் உடைய நல்லூர் ஆடவல்லான் படிமம் சிறப்பு வாய்ந்தது.

கல்வெட்டுச் செய்திகள்

இத்திருக்கோயில் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1911ல் 23 (40-62) கல்வெட்டுகளும் மற்றும் வரலாறு இதழ் 11ல் 3 கல்வெட்டுகளும் ஆக மொத்தம் 26 கல்வெட்டுகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் மிகப் பழமையான கல்வெட்டு உத்தம சோழனின் 10வது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். முதலாம் இராசராசனின் 15வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, போசள மன்னன் வீரராமநாதன் கல்வெட்டு ஆகியவற்றுடன் பிற பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளும் உள்ளன.

இவ்வூர் உத்தம சோழன் காலத்தில் நல்லூர் என்றும், இராசராசன் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் பிராமணர்களுக்கு கொடையளித்ததால் தன்னுடைய மனைவியாகிய பஞ்சவன்மகாதேவியின் பெயரால் பஞ்சவன்மகாதேவி சதுர்வேதிமங்கலம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இராஜாதிராஜர் காலம் வரை பஞ்சவன்மகாதேவி சதுர்வேதிமங்கலம் என்றே இவ்வூர் அழைக்கப்பட்டுள்ளது. பின்னர் இவ்வூர் திருநல்லூர் என்றே அழைக்கப்பட்டுள்ளதை கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.

நல்லூர் கோயில் இறைவன் இளங்கோயில் மகாதேவர் என்று அழைக்கப்பட்டுள்ளார். இளங்கோயில் என்பது கோயில் வகைகளுள் ஒன்றாகும். இளங்கோயில் என்பது பழைய திருக்கோயிலைப் புதுப்பிக்குந் திருப்பணியினைத் தொடங்குமுன், நாள் வழிபாடு தடையின்றி நிகழ்தற் பொருட்டுக் கருவறையிலுள்ள பெருமானை வேறோர் இடத்தில் எழுந்தளியிருக்கும்படி வேண்டியமைத்துக்

கொண்டு கோயில் என்று கூறுவர். இடைக்கால வழிபாட்டிற்கென அமைத்துக்கொள்ளப்பெற்ற இச்சிறிய கோயிலைப் பாலாலயம் எனவும் வழங்குவர். கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில்களுள் இதுவும் ஒன்றென அறிஞர் கருதுவர். மேலும் கல்வெட்டுகளில் இவ்விறைவன் மகாதேவர் திருநல்லூர் நாயனார் என்றே அழைக்கப்பட்டுள்ளதை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இக்கோயிலுக்கு விளக்கு, நிலம் தானமாக அளித்துள்ளதை இக்கோயில் கல்வெட்டுகள் சுட்டுகின்றன. இறைவனுக்குச் செங்கழுநீர் மாலை தினமும் சூட்ட வேண்டி நன்கொடையாக நிலம் கொடுத்துள்ளனர். நாராயணன் ஏகவீரன் என்பவன் முதலாம் இராசராசன் 15வது ஆட்சியாண்டில்

முதலாம் இராசராசன் 15வது ஆட்சியாண்டில் இக்கோயிலில் மண்டபம் கட்டுவித்துள்ளான். இம்மடத்தின் ஆச்சாரியராகத் திகழ்ந்தவர் தத்தனுடையார் ஈசானதேவர். இவர் திருவிடைமருதூர் மாளிகை மடத்தின் தலைவராகக் குறிப்பிடப்படுகிறார்.

அகம்படி விநாயகப் பிள்ளையார் கோயில் திருநல்லூர் நாயனார் கோயிலில் பணிபுரிந்த அகம்படையர்களால் மூன்றாம் இராசராசன் 5வது ஆட்சியாண்டில் கட்டப்பட்டது.

இவ்வகையில் நல்லூர் திருத்தலம் சமய, சமுதாய, கலை மற்றும் வரலாற்றுச் சிறப்புகளைப் பெற்று விளங்கிய பெருமையுடையத் தலமாக திகழ்கிறது.



திருச்சேலூர்

சீ. வசந்தி, தொல்லியல்துறை, சென்னை.

கும்பகோணத்திலிருந்து, தஞ்சை செல்லும் வழியில் பண்ணாரவாடைப் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி சிறது தூரம் நடந்து சென்றால், முற்காலச் சோழர் காலத்திய திருச்சேலூர் கோயில் உள்ளது.

இத்திருக்கோயில் சைவ நாயன்மார்களால் பாடப் பெறாவிடினும், வைப்புத்தலமாக்க கருதப்படுகின்றது. சேக்கிழார் திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தில் இவ்வூரை குறிப்பிடுகின்றார். மத்ஸ்ய அவதாரம் எடுத்த திருமால் வழிபட்ட இத்தலம் ஸ்ரீமச்சபுரிஸ்வரர் கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. இதற்குச் சான்றாக இக்கோயிலின் நுழைவு வாயில் முன் மண்டபத்தில் வடபுற முகப்பில் மீன் ஒன்று லிங்கத்தை வழிபடும் சிற்பம் காணப்படுகின்றது.

கோயில் அமைப்பு

இக்கோயில் பெரிய திருச்சுற்று, நந்தவனம், கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், முன்மண்டபம் போன்ற கோயில் அமைப்புகளுடன் இறைவிக்கு எனத் தனிச் சன்னதியையும் கொண்டுள்ளது. இறைவன் மத்ஸபுரீஸ்வரர் என்றும், இறைவி சுகுந்த குந்தளாம்பிகை என்றும் வணங்கப்படுகின்றனர். கல்வெட்டுக்களில் இறைவன் திருச்சேரூர் உடைய பெருமாள், திருச்சேலூர் மகாதேவர் என வழங்கப் படுகின்றார்.

கி.பி. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த கருவறை, இறைவன், லிங்கவடிவிலும், இறைவி நின்ற திருக்கோலத்திலும் காட்சியளிக்கின்றனர். இறைவியின் திருவுருவம் கி.பி. பதிநான்கு - பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தாக இருக்கக் கூடும். கருவறையைச் சுற்றியுள்ள தேவகோட்டங் களில் முறையே தட்சிணாமூர்த்தி, மேற்கில் திருமால், வடக்கில் பிரம்மா மற்றும் துர்க்கை ஆகிய இறை திருவுருவங்கள் காணப்படுகின்றன. கருவறையின் மேல், விமானத்திற்கு இடைப்பட்ட பகுதியில் பூதகணங்கள் வரி, யாளிவரி, யானை வரி ஆகியவை காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் தொடக்கத்திலும், யாளி, யானை வரியின் நடுவில் வீரன் இடது காலை நீட்டி, வலக்காலை மடக்கி வலக்கையில் வாளுடன் உயர்ந்து மடித்து இடது கையில் கேடயத்தைத் தாங்கியிருக்கும் கோலம் கண்களை விட்டு அகலாது.

முதல் திருச்சுற்றில் சிறிய திறந்தவெளி மண்டபத்தில் குழந்தை வடிவத்தில் சம்பந்தர் கைகளில் தாளங்களுடனும், சுந்தரர் கூப்பிய கரங்களுடனும், அப்பர் கூப்பிய கரமும் உழவாரப் படையையும் கொண்டு நிற்கின்றனர். இவை கி.பி. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்ப அமைதியைக் கொண்டு உள்ளன. பின்னர், மூன்று அடியார்கள் காணப்படுகின்றனர். முதலிருவர் ஆண்கள், ஒருவர் பெண். இப்பெண் அடியார் இக்கோயிலுக்குப் பலத்திருப்பணிகளைச் செய்த செம்பியன் மாதேவியராக இருக்கலாம் எனக் க ருதப்படுகின்றது. இவ்வடியார்களை அடுத்து, சப்தமாதர்கள், சாமுண்டா, இந்திராணி, வராகி, வைஷ்ணவி, மகேஸ்வரி, கௌமாரி, பிராமி ஆகியோருடன் ஐயனார், வீரபத்திரர் ஆகியோரது சிற்பங்களும் இருக்கின்றன. இவற்றின் உருவ அமைதியும் கி.பி. பதினோராம் நூற்றாண்டை ஒத்துள்ளன. இவற்றைத் தவிர வீரபத்திரர், சண்டிகேஸ்வரர் ஆகிய தனிச்சிற்பங்களும் உள்ளன.

முதல் திருச்சுற்றில் கி.பி. பதிநான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த நர்த்தன கணபதியும், முருகன் சன்னதியும், தனிச் சன்னதிகளாக உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் நுழைவு வாயிலில் முற்காலச் சோழற்காலத்திய ஜேஷ்டா சிற்பமும், நந்தி, பைரவர் ஆகிய தனித் தனிச்சிற்பங்களும் உள்ளன. முன்மண்டபத்தில் நடன மாதர்களின் பல நடன அசைவுகள் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ள தால், இது நடன மண்டபமாக இருக்கக்கூடும்.

முற்காலச் சோழர்களின் கலைப்பாணியுடன் கூடிய இக்கோயிலில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களும், சிற்பங்களும், காணப்படுவதால் இக்கோயில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வழிபாட்டில் இருந்துள்ளது எனத் தெரிகிறது.

கல்வெட்டுச் செய்திகள்

திருச்சேலூர் கோயிலில் 54 கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் முற்காலச் சோழர்கள் காலம் முதல் ஹோய்சாளர்கள் மற்றும் கன்னட அரசர்கள் காலத்திய கல்வெட்டுக்களும், கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டும் உள்ளன. எனவே கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை மிகவும் சிறந்த வழிபாட்டுத் தலமாக இருந்ததை, கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது. கல்வெட்டுக்களில் இவ்வூர் திருச்சேலூர் என்றும், தென்கரை பிரமதேயமான இராஜகேசரி நல்லூர் என்றும் வழங்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய ஊராகத் திகழ்ந்துள்ளதால் இவ்வூரின் பகுதிகளாகப் பல இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தற்போது இவ்வூருக்கு அருகில் உள்ள இராஜகேசரி நல்லூர்-இராஜகிரி என வழங்கப்படுகிறது. பண்டார வாடை எனத் தற்போது வழங்கப்படும் ஊர் முற்காலத்தில் பண்டித வச்சலச்சேரி என வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனோரமச்சேரி, கலகரச்சேரி, பரகேசரிச்சேரி, சோழகுலமணஞ்சேரி எனும் இடங்கள் இராஜகேசரி நல்லுரின் ஒரு பகுதியாக இருந்துள்ளன.

காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வூர், நித்தவிநோத வளநாடு என வழங்கப்பட்ட வளநாட்டு நிர்வாகப் பிரிவில் நல்லூர் நாடு எனப் பட்ட உட்பிரிவில், பிரம்மதேயமாக இருந்துள்ளது.

இவ்வூர் இறைவனுக்கு அரச, அரசியர்கள், கிராம மத்தியஸ்தர்கள் ஆளும் கணத்தார்கள், அரசு அலுவலர்கள், வணிகரின் மனைவி போன்ற பல்வேறு சமூகப்பிரிவைச் சேர்ந்தவர்கள் தானம் வழங்கியுள்ளனர். எனவே, இக்கோயில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது என இக் கல்வெட்டுக்கள் மூலம் தெரிகின்றது.

திருச்சேலூரில் கிடைக்கும் மிகப்பழமையான கல்வெட்டு இராஜகேசரி, முதலாம் ஆதித்தியன் (கி.பி. 871-908) காலத்தியது. முதலாம் ஆதித்தியன் மகன் முதலாம் பராந்தகன் காலத்திய 38-ஆம் ஆண்டு கல்வெட்டில் இராஜகேசரியின் பதினேழாம் ஆட்சி ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மற்றொரு கல்வெட்டில் இராஜகேசரியின் எட்டாம் ஆட்சி ஆண்டில் வேசாலிப்பாடி என்ற நாட்டுப்பிரிவைச் சேர்ந்த இலையூர் நாட்டில், சிறு வேலூர் என்ற ஊரில் இருந்த திருவடிகள் ஆயண்டி என்பவன் வழங்கிய தானம் பற்றியக் குறிப்பு, முதலாம் பராந்தகனின் ஐந்தாம் ஆண்டு கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் பல கல்வெட்டுக் களில் ஆதித்திய வாய்க்கால் என்று ஒரு வாய்க்காலுக்கு பெயர்வழங்கப்படுவதாலும், திருச்சேலூர் என்கிற இராஜகேசரிநல்லூர் எனவும் பெயர் வழங்கப் படுவதாலும், இவ்வூர் முதலாம் ஆதித்தியன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது எனக் கொள்ளலாம்.

முதலாம் பராந்தகன் (கி.பி. 907-954) காலத்திய 11 கல்வெட்டுக்கள் பல அரிய செய்திகளைத் தெரிவிப்பவையாக உள்ளன. இம்மன்னனின் 3-ஆம் ஆண்டில் (கி.பி. 910) கீழ்வேம்பை நாட்டில் ஏதங்குடி என்ற ஊரினைச் சேர்ந்த ஒருவன், இராஜகேசரி மங்கலத்தில், திருச்சேலூர் பெருமாள் கோயிலில் வேதங்களில் நன்கு தேர்ச்சி பெற்ற அந்தணர் ஒருவருக்கு 4 மா நிலம் தானமாக அளித்துள்ளான். இதே மன்னனின் 4-வது ஆட்சி ஆண்டில் கருவறையில் இறைவன் திருமுன்பு

விளக்கெரிக்க, ஆளும் கணத்தைச் சேர்ந்த அங்கத்தினரான ஆசூரி ஆதித்தபிடார கிரமவித்தன், நிலதானம் அளித்துள்ளான். பராந்தகனின் 5-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் மூன்று கிடைத்துள்ளன. இக்கோயிலில் உள்ள கணபதி பட்டாரகர் என்று வழங்கப்பட்ட இறைவன் கணபதிக்கு மார்கழி மாதம் ஆராதனை செய்ய மனோரமச்சேரி என்ற திருச்சேலூரின் ஒரு பகுதியைச் சேர்ந்த ஒருவன் ஒரு தொகையினை தானமாக வழங்கியுள்ளான். இதில் அக்கம் என்ற நாணயத்தின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. இம்மன்னனின் 9-ஆம் ஆண்டில் செம்பியன் வேசாலிப் பாடி நாட்டு முவேந்த வேளான் என்பவன் வெள்ளிதட்டும் சால்வரும், (திருமஞ்சனக் குடம்) தங்கத்தினால் ஆன கிண்ணமும் விசிறியும் கோயிலுக்கு வழங்கியுள்ளான். இதே மன்னனின் மற்றொரு கல்வெட்டில் நாள்தோறும் ஸ்ரீ பலி பூஜை நடைபெறும்போது இக்கிராமத்தினைச் சேர்ந்த மத்தியஸ்தன் ஒருவன் ஐந்து நபர்களுக்கு பாடல் இசைக்க வரி நீக்கப்பட்ட நிலம் தானமாக வழங்கியுள்ளான். கி.பி. 914 ஆம் ஆண்டில் திருச்சேலூர் இறைவனுக்கு சந்திவிளக்கு ஏற்றவும், குரலை என வழங்கப்பட்ட ஆற்றிலிருந்து நான்கு குடம் தண்ணீர் கொண்டு வந்து இறைவனின் நீராட்டுதலுக்கும் நிலம் தானமளிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள குரலை ஆறு என்பது தற்போதைய குடமுருட்டி ஆறாக இருக்கலாம். இதே மன்னன் காலத்தில் இவ்வூரின் தலைவனாக மத்தியஸ்தன், இக்கோயிலில் நடு ஜாம பூஜைக்கு சங்கு மற்றும் செண்டை, சேமக்கயம் என்ற கருவிகளை இசைக்க, நிலத்தினை வாங்கி தானமளித்துள்ளான். மற்றொரு கல்வெட்டில் மத்தியஸ்தன் ஆன நக்கன் அமுதனால் முதலாம் பராந்தகனின் 37-ஆம் ஆண்டில் ரிஷப வாகனப் பெருமாளின் நாள்தோறும் நீராட்டுதலுக்காகவும், நண்பகல் பூஜைக்கும் நிலதானம் வழங்கப் பட்டுள்ளது.

முதலாம் பராந்தகனுக்குப் பிறகு முதலாம் சுந்தரச் சோழன் (கி.பி. 957-973) காலத்திய கல்வெட்டுக்கள் 7 இங்குள்ளன. இம்மன்னனின் 3-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் திருச்சேலூர் இறைவன் கோயிலில், இறைவன் நீராட்டுதலுக்காக ஆற்றிலிருந்து நாள்தோறும் ஒரு பானை நீரினை, கொண்டு வர புல்லமங்கலம் என்ற இடத்தைச் சேர்ந்த ஒருவன் ஜீவிதமாக நிலம் வழங்கியுள்ளான். இறைவன் நீராட்டுதலுக்கு தண்ணீர் கொண்டு வருவது ஒன்றையே தொழிலாகக் கொண்ட ஜீவனத்திற்கு வழங்கப்பட்ட தானம் ஜீவிதம் எனப்பட்டது.

முதலாம் சுந்தர சோழன் காலத்தில் அவனது 6-ஆம் ஆட்சி ஆண்டில் அதாவது கி.பி. 963-இல் இவ்வூரில் ஒரு பெருமாள் கோயிலை கட்டியுள்ளான். இதே மன்னனின் 16-ஆம் ஆண்டில், பெருமாள் கோயிலுக்கு விளக்கு தானமளிக்கப்பட்டுள்ளது. இதில் இக்கோயில் இராஜகேசரி சதர்வேதி மங்கலத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முன்னர் குறிப்பிடப்பட்ட இம்மன்னனின் 6-ஆம் ஆண்டு கல்வெட்டில், முடிகொண்ட சோழநாட்டில், சிம்ம விஷ்ணு சதுர்வேதிமங்கலத்தில் பூமி சுந்தர விண்ணகர பரமசுவாமி என்ற விஷ்ணு கோயிலை, தொண்டை நாட்டைச் சேர்ந்த பல்குன்றக் கோட்டம் என்ற நிர்வாக அமைப்பில் கீழ் இருந்த வாழைப்பந்தல் நாட்டு வழைப்பந்தல் என்ற ஊரைச் சேர்ந்த கனந்தை அறிவனன். பூமிசுந்தரன் என்ற சுந்தர சோழ மூவேந்த வேளான் கட்டியுள்ளான். இக்கல்வெட்டின் மூலம் ''இராஜகேசரி நல்லூரான திருச்சேலூரின்'' பழைய பெயர் 'சிம்ம விஷ்ணு சதுர்வேதிமங்கலம்' எனத் தெரிகின்றது. சிம்ம விஷ்ணு என்ற பல்லவ அரசன் காலத்தில் நான்கு வேதங்களில் தேர்ந்த

பிராமணர்களுக்கு (சதுர்வேதம்) தானமளிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் குந்தமங்கலம் என்ற கிராமத்தினை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்து, பூமிசுந்தரன் என்பவன் தானமளித் துள்ளான். இவன் சுந்தரசோழ மூவேந்த வேளான் என வழங்கப்படுவதால், சுந்தர சோழனின் அரசவையில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்க வேண்டும். இவ்வூரில் ஒரு விஷ்ணு கோயில் இருந்துள்ளது என இக்கல்வெட்டின் மூலம் தெரிகின்றது.

சுந்தர சோழனின் 7-ஆம் ஆட்சி ஆண்டில் திருச்சேலூர் மகாதேவர் கோயிலில் இரண்டு நந்தாவிளக்கு எரிக்க ஆறு மா நிலத்தினை கூற்று மங்கலம் என்ற இடத்தைச் சேர்ந்த பாரடையன் பட்டன் சேந்தன் நக்கன் என்பவன் வழங்கியுள்ளான். இம்மன்னனின் 12-ஆம் ஆட்சி ஆண்டில், வண்டழில் வேலூர் கூற்றத்தில் குறும்பில் என்ற ஊரைச் சேர்ந்த பெண் ஒருவள் 12 ஈழக் காசுகளை, தென்கரை பிரமதேயமான இராஜகேசரி சதுர்வேதி மங்கலத்தில் திருச்சேலூர் மகாதேவர் கோயிலில் விளக்கெரிக்க தானமளித்துள்ளாள்.

கி.பி. 974 ஆம் (கி.பி. 74-ஆம்) ஆண்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் திருவாதிரை நாள் இரவு திருச்சேலூர் மகாதேவர் முன்பு ''ஜைமினிய சாமவேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கிழ்ப்பாதத்து ஒரு துருவும் கரைப் பறிச்ச பட்டம் கடத்துப் பிழையாமே சொன்னார்க்குப் பரிசு அளிக்க'' ஒருவன் இருபது காசு பொன் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. அவன் வைத்த அந்த இருபது காசு முதலுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டியான மூன்று காசைத்தான் ஜைமினிய சாமவேதத்தினை மேற்புறமாகவும், கீழ்புறமாகவும் எப்படி கூறச் சொன்னாலும், கூற வேண்டும் என்றும் அப்படி கூறி போட்டியில் வெற்றிப் பெற்றவர் களுக்கு அந்த மூன்று காசை வழங்க வேண்டும் எனவும் இவ்வாறு ஒரு முறை அதாவது முன் ஆண்டுகளில் பரிசு பெற்றவர், பின் ஆண்டுகளில் போட்டியிட முடியாது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே வேதவிற்பன்னர்களுக்கு உரிய மரியாதை வழங்கப் பட்டதையும் அதற்குரிய தேர்வும் நடைபெற்றதும், ஒரு முறை பரிசு பெற்றவர் மறுபடியும் போட்டியில் கலந்து கொள்ள இயலாது எனவும், அக்காலத்தில் நியாயமான முறையில் ஒரு முறை வெற்றி பெற்றவர் மீண்டும் கலந்து கொள்ள இயலாத வகையில் கல்வெட்டிலேயே வழிவகை செய்யப் பட்டுள்ளதைப் பார்க்கும்போது அக்கால மக்கள் நீதி, நேர்மை தவறாமல் இருந்தமை புலப்படுகின்றது.

இரண்டாம் பராந்தக சுந்தர சோழனை அடுத்து ஆட்சி புரிந்த உத்தம சோழனின் (கி.பி. 971-987) 6 கல்வெட்டுகள் உள்ளன.

உத்தமசோழனின் 8-ஆம் ஆண்டில் (கி.பி. 979) பூதி பல்லவப் பேரரையன் என்கிற வீரசிகாமணிப் பல்லவரையனால், நான்கு வேளை இறை வழிபாட்டிற்குத் தேவைான தைலம், சந்தனம் ஆகியவற்றிற்குத் தேவையான பொருளுக்காக நிலதானம் வழங்கப்பட்டுள்ளது. உத்தமசோழனின் தாயார் உடையபிராட்டியார், தமது மகன் கண்டராதித்தன் மதுராந்தக உத்தமசோழனுக்காக ஒரு நிலத்தினை தானமளித்துள்ளான். இதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு, சங்கராந்தி தினத்தன்று இறைவனின் நீராட்டுதலுக்கும் அதற்குத் தேவையான செப்புக் குடங்கள் 108 வாங்கவும், பூஜை நடத்துவதற்கும் பயன்படுத்தப் பட்டது.

உத்தமசோழனின் 11-ஆம் ஆண்டில் மதுராந்தத் தெரிஞ்ச கைக்கோளர் பிரிவைச் சேர்ந்த கோயில் நிலாவஞ்சி என்பவர் கோயிலில் நந்தாவிளக்கெரிக்க தானம் அளித்துள்ளார். இதில் குறிப்பிடப்பட்டுள்ள மதுராந்தகத் தெரிஞ்ச

கைக்கோளார் என்பது, உத்தம சோழனின் மற்றொருப் பெயரான மதுராந்தகன் என்ற பெயரில், அமைந்திருந்த கலாட்படையைக் குறிக்கும். அதாவது மதுராந்தகத் தெரிஞ்சகைக்கோளார் என்ற காலாட்படைப் பிரிவு, அக்காலத்தில் இருந்துள்ளது.

மதுராந்தக உத்தமசோழனுக்குப் பின்னர் முதலாம் இராஜராஜனின் (கி.பி. 985-1012) பல முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுக்கள் இங்குள்ளன. முதலாம் இராஜராஜனின் 9-ஆம் ஆண்டில் உத்தமசோழனின் தாயர் செம்பியன் மாதேவியார் தன்னுடைய மகனுக்காக வெள்ளித் தட்டும், செப்புத் தாங்கியும் இக்கோயிலுக்கு தானமளித்துள்ளார். தங்கக்குடம் ஒன்றை அதே தேவியார் உத்தம சோழனுக்காக தானமளித்துள்ளார்.

முதலாம் இராஜராஜனின் 16-ஆம் ஆண்டில் திருச்சேலூர் கோயிலில் உள்ள ரிஷப வாகனப் பெருமானின் இறைவியாருக்கு சில தங்க ஆபரணங்களை பண்டித வச்சலச்சேரி (பண்டாரவாடை) என்ற இடத்தைச் சேர்ந்த ஒருவன் தன் சகோதரிக்காகச் செய்து வழங்கியுள்ளான்.

முதலாம் இராஜராஜனை அடுத்து அவன் மகன் முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. முதலாம் இராஜேந்திரன் தன் தந்தை முதலாம் இராஜராஜனின் பல வெற்றிகளுக்குச் சமமாக தானும் கங்கை வரைச் சென்று வெற்றி கண்டவன் ஆவான். முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1012-1044) காலத்திய கல்வெட்டில், தஞ்சையில் இருந்த வைத்தியசாலை பற்றியும் , அதற்கு குந்தவைப் பிராட்டியார் அளித்த தானம் பற்றியும் பல செய்திகள் காணப்படுகின்றன.

முதலாம் இராஜேந்திரனின் இரண்டாம் ஆட்சி ஆண்டில் திருச்சேலூர் கோயிலில் நந்தா விளக்கெரிக்க 30 காசுகளை தஞ்சையில் இருந்த திரிபுவன மாதேவிப் பேரங்காடி என்ற வணிக வளாகத்தினைச் சேர்ந்த வணிகன் ஒருவனின் மனைவி வழங்கியுள்ளாள். இம்மன்னனின் 4-ஆம் ஆண்டில் இதே பேரங்காடியைச் சேர்ந்த வணிகன் மனைவி நிலன்தியாகி என்பவள் திருச்சேலூர் கோயிலில் விளக்கேற்ற 20 காசுகளை வழங்கியுள்ளார். இந்த 20 காசுகள் 10 கழஞ்சு பொன்னிற்குச் சமமாகும்.

முதலாம் இராஜேந்திரனின் அத்தையும், முதலாம் இராஜராஜனின் தமக்கையும் ஆன ஆழ்வார் ஸ்ரீ பராந்தகன், ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார் தன்னால் உருவாக்கப்பட்ட வைத்தியசாலையின் நிர்வாகத்திற்காக 9 மா நிலத்தினை வாங்கி வரி நீக்கி, இராஜகேசரி சதுர்வேதிமங்கலத்தல் உள்ள பெரிய அவையிடம் வழங்கியுள்ளான். இம்மன்னனின் 5-ஆம் ஆண்டில், நித்த விநோத வளநாட்டில், நல்லூர் நாட்டில், இராஜகேசரி சதுர்வேதிமங்கலத்தில் உள்ள திருச்சேலூர் மகாதேவர் கோயிலில் கருவறை இறைவன் முன்பு நாள்தோறும் நந்தா விளக்கு ஏற்ற, இரண்டு இடையர்கள் நெய் வழங்க, ஆழ்வார் ஸ்ரீ பராந்தகன் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியாரிடமிருந்து 90 ஆடுகளை பெற்றுள்ளனர். இராஜேந்திரனின் 6-ஆம் ஆண்டிலும், குந்தவைப் பிராட்டியார் இரண்டு விளக்குகளை தொடர்ந்து எரிக்க 90 ஆடுகளை வழங்கியுள்ளார். இக்கல்வெட்டி இராஜகேசரி என்ற ஒரு நாழீ அளவையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் இராஜேந்திரன் 7 ஆம் ஆட்சி ஆண்டில் ஆழ்வார் ஸ்ரீ பராந்தகன், ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார் தஞ்சையில் சுந்தர சோழ விண்ணகர ஆதுரச்சாலை என்ற பெயரில் அமைத்த வைத்திய சாலையின் நிற்வாகத்திற்காக திருச்சேலூலில் கலகரச்சேரி என்ற பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஒரு வீட்டு மனையினை விற்றுள்ளார். இது வைத்தியபோகமாக (வைத்தியசாலைக்கு வழங்கப் பட்ட தானம்) தஞ்சையில் உள்ள வைத்திய

சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலம் வைத்திய சாலையின் நிருவாகத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டால் அதனைப் போக்க வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த தானமும், முன்னர் இதே மன்னனின் 3 ஆம் ஆட்சி ஆண்டில் வழங்கப்பட்ட தானத்தையும், சத்திரியசிகாமணி வளநாட்டில் மருகல் நாட்டில், ்மருகல் என்ற ஊரைச் சேர்ந்த ஸ்வர்ணன் அரையன் மதுராந்தகன் எனபவனும் அவன் வழி வந்தவர்களும் அனுபவித்துக் கொள்ளவேண்டும் என்று இந்த இரண்டு ஆணைகளையும் இக்கோயிலில் கல்வெட்டாக வெட்டப்பட்ட செய்தியை பழையாறையல் இருந்த இளவரசியிடம் பெரும் சபையினர் தெரிவித்தனர். இந்த கல்வெட்டின் மூலம் தஞ்சையில் இருந்த வைத்தியசாலையின் பெயர் சுந்தர சோழவிண்ணகர ஆதுரசாலை என்று குந்தவைப் பிராட்டியார் தனது தந்தையின் பெயரால், தஞ்சையில் இருந்த சுந்தரசோழ விண்ணகரம் என்ற விஷ்ணு கோயிலில் இதனை ஏற்படுத்தி உள்ளார் எனவும் தெரிகின்றது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்வர்ணன் அரையன் மதுராந்தகன் இந்த ஆதுர சாலையின் தலைமை மருத்துவராக இருக்கலாம். இந்த தானங்களை இளவரசி பழையாறையில் இருந்தபோது அளித்துள்ள செய்தியையும் நோக்கும்போது, அக்காலத்தில் அரச குலப் பெண்கள் தாம் இருந்த இடத்திலிருந்தே பல அரசியல், சமூகநலங்களில் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்றும், அறிய முடிகின்றது. கோயில்களில் வைத்திய சாலையும் இயங்கியதால் இறை அருளுடன் கூடிய உடல் நலம் காத்தலை வலியுறுத்துவதாக உள்ளது.

முதலாம் இராஜேந்திரனின் மகன் முதலாம் இராஜாதிராஜன் (கி.பி.1028 - 1054) முப்பத்தெட்டாவது ஆண்டு கல்வெட்டில் நித்த விநோத வளநாட்டில், நல்லூர் நாட்டில் உள்ள இராஜகேசரிசதுர்வேதி மங்கலம் என்ற பிரம்மதேயத்தைச் சேர்ந்த பெரிய சபையைச் சேர்ந்தவர்கள் திருச்சேலூர் கோயிலை சேர்ந்தவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி, பூர்வதேசம் கங்கை,கிடாரம் ஆகிய இடங்களை வெற்றி கொண்ட பெரிய தேவரின் 28 ஆம் ஆண்டில் (முதலாம் இராஜேந்திரன்) கோயில் கருவூலத் திலிருந்து கடனாகப் பெற்ற தொகைக்கான வட்டியையும், இராஜாதிராஜதேவனின் 31 ஆம் ஆண்டில் வீட்டு மனைவாங்கப் பெற்றத் தொகைக்கான வட்டியும் மொத்தமாக 710 காசுகள் சேர்ந்துவிட்ட படியால் கோயில் நிலத்திற்காக ஊர் சபைக்குச் சேரவேண்டிய வரித் தொகைக்கு ஈடாக்க இசைவு தெரிவித்துள்ளனர். இந்த கல்வெட்டின் மூலம், திருச்சேலூர் மகாதேவன் கோயிலில் இருந்த கருவூலத்திலிருந்து கடன் வழங்கும் வழக்கமும், இராஜகேசரி நல்லூரைச் சேர்ந்த பெரும் சபையே தமக்குத் தேவையான தொகையைக் கடனாகப் பெற்றச் செய்தியும் கோயில் நிலங்களுக்கு வழங்கப்படவேண்டிய வரிக்காக, கடனாகப் பெற்றத் தொகை ஈடுசெய்யப்பட்டதையும் அறியும்போது அக்காலப் பொருளாதார நிலையும், கோயிலும், ஊர்சபையும் பொருளாதார ரீதியில் ஒருவருக்கு ஒருவர் தமக்குள் உதவிபுரிந்து கொண்டனர் எனத் தெரிகின்றது.

முதலாம் குலோத்துங்கனின் (கி.பி. 1070-1120) நான்கு கல்வெட்டுக்கள் 49 ஆவது ஆட்சி ஆண்டைச் சேர்ந்தவைகள் இக்கோயிலில் உள்ளன. நித்தவிநோதவளநாட்டில் நல்லூர் நாட்டில் பிரம்மதேயமான இராஜகேசரி சதுர்வேதி மங்கலத்து திருச்சேலூர் மகாதேவர் கோயிலில் பூஜைக்கு 7 மா நிலம் வாங்கப்பட்டு வரி நீக்கப்பட்டு தானமளிக்கப்பட்டுள்ளது. இந்த தானங்கள் அனைத்திலும், குலோத்துங்க சோழன் மூவேந்த வேளான் என்ற அரசனின் அதிகாரி குறிப்பிடப்பட்டுள்ளார்.

முதலாம் குலோத்துங்கனை அடுத்து அவனது புதல்வன் விக்கிரம சோழன் (கி.பி. 1118-1136) ஐந்தாம்

ஆட்சி ஆண்டில் சோழகுலமணிச்சேரியைச் சேர்ந்த ஒருவன் கோயிலுக்கு விற்ற நிலம் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

விக்கிரம சோழனின் மகன் இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133-1150) 2-ஆம் ஆண்டு கல்வெட்டில் ஒரு விளக்கு தாங்கியும் 80 காசும் திருச்சேலூர் மகாதேவர் கோயிலில் நந்தா விளக்கெரிக்க உய்யக்கொண்டார் வளநாட்டில் அம்பர்நாட்டில் மங்கலம் என்ற ஊரைச் சேர்ந்த நந்திவர்மன் என்பவன் தானமளித்துள்ளான்.

இக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்கனின் (கி.பி. 1178-1218) 13-ஆம் ஆட்சி ஆண்டில் , திருச்சேலூர் கோயிலில் காலை முதல் மாலை வரை விளக்கெரிக்க ஒரு தொகையினை இக்கோயிலைச் சேர்ந்த சிவபிராமணர்களுக்கு சேயமாணிக்க வளநாட்டு, திருவாரூர் கூற்றத்து வல்லம் என்ற ஊரைச் சேர்ந்தவன் தானமளித்துள்ளான். இதனை அடுத்த மூன்றாம் இராஜராஜனின் (கி.பி. 1216-1256) 15-ஆம் ஆண்டில், திருச்சேலூர் கோயிலின் முதல் பிரகாரத்திற்கு செல்லும் வழியில், நுழைவாயிலின் தென்புறத்தில் உள்ள கல்வெட்டில் காவிரி வளநாடாள்வான் என்பவன் தான் இக்கோயிலுக்கு வழங்கிய அழகிய கூத்தர் என்ற நடராஜர் திருவருவம் மற்றும் அவரது இறைவியின் திருவருவ வழிபாட்டிற்காக நிலத்தினை தானமளித்துள்ளான். இதே காவிரி வளநாடாள்வான் என்பவனுக்கு ஊழிய இறையிலியாக, சர்வபுவனச் சக்கரவர்த்தி போசல வீரராமநாத தேவனின் 12-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. போசல வீரராமநாதன் என்பவன் கன்னட நாட்டை ஆண்ட ஹொய்சால மன்னன். இவனின் தந்தை வீர சோமேஸ்வரன் என்பவன் சோழ மன்னர்களுக்குப் பலவகையிலும் உதவி புரிந்துள்ளான்.

சோழ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியில் கடைசியில் ஆண்ட மூன்றாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1246-1279) இக்கல்வெட்டில் இக் கோயிலைச் சேர்ந்த வீட்டுமனையினை விற்று, அதில் வந்த 4,000 காசுத் தொகையினை ''பெரியாழ்வார் பண்டாரம்'' என்ற கருவூலத்தில் செலுத்தப்பட்டதையும், இத்தொகையினைக் கொண்டு 'மனு விளங்கப் பிள்ளைப் பெற்றாள் மடம்' என்ற பெயரில் ஒரு மடத்தினை கட்டவும், கோயிலில் திருநாவுக்கரசு தேவருக்கு உருவம் ஒன்று வைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை பிள்ளை செழியக் கோனார் என்பவர் மூலம் செயல்படுத்த அரசன் ஆணையிட்டுள்ளான். 'மனு விளங்கப் பிள்ளை பெற்றான்' என்பது மூன்றாம் இராஜேந்திரனின் பட்டப் பெயராக உள்ளதால் இவன் பெயரால் மடம் நிறுவப்பட்டது. பெரியாள்வார் பண்டாரம், கோயிலில் இயங்கிய கருவூலத்தின் பெயராக இருக்கக்கூடும்.

இக்கோயிலில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டில், நடுவில் மண்டலத்தைச் சேர்ந்த திருமுனைப்பாடி நாட்டில், திருவிடையான்று என்ற இடத்தைச் சேர்ந்த அனுமனு மூலன் சூரியதேவன் என்கிற உடையார் கொங்கரையார் என்பவர் இக்கல்வெட்டு உள்ள (கிழக்கு சுவரின் வடக்கு வாயில்) பிராகாரச் சுற்றினை தானமளித்துள்ளார். எனவே, இந்தப் பிரகாரம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது.

முடிவுரை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டுகளில் பல அரிய செய்திகள் காணப்படுகின்றன. முதலில், சிம்ம விஷ்ணு சதுர்வேதிமங்கலம் என வழங்கப்பட்ட, தற்போதைய கோயில் தேவராயன் பேட்டை பின்னர் நித்த விநோதவள நாட்டில்

நல்லூர் நாட்டில் அடங்கிய இராஜகேசரித் சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டிருந்தது. பின்னர் விஜயநகர அரசர் தேவராஜ மகாராஜன் பெயரால் கோயில் தேவராயன்பேட்டை என வழங்கப் பட்டது. ஆனால் இராஜகேசரி நல்லூர்தான் பல ஆண்டுகள் வழக்கத்தில் இருந்த பெயராகும். இவ்வூர் சபை பெரிய சபை என்று குறிப்பிடப் படுவதால், இவ்வூரே மிகப் பெரிய ஊராக இருக்கக் கூடும். திருச்சேலூர், கோயிலும், பெரிய, சிறந்த வழிபாட்டுத்தலமாகவும் இருந்துள்ளது.

தஞ்சைக்கும், சோழ அரசர்களின் பழைய தலைநகரான, பழையாறைக்கும் இடைப்பட்ட ஊராக இராஜகேசரி நல்லூர் இருந்துள்ளதால், இவ்வூர் கோயிலுக்குப் பல தானங்களை அரச குடும்பத்தினரும், அதிகாரிகளும், அரச குடும்பப் பெண்களும் தானமளித்துள்ளனர். இக்கோயிலில் ரிஷப வாகனருக்கும், அவரது துணைவியாருக்கும், கணபதிக்கும், நடராஜர் அவரது இறைவிக்கும் பல நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. தஞ்சையில் இருந்த வைத்தியசாலை பராமரிப்புக்காக இவ்வூரில் தானம் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது பழமையான கலைப் பாணியைக் கொண்டும், வழிபாட்டுத் தலமாகவும், திகழும் கோயில்கள் அருகிவிட்ட நிலையில் கோயில் தேவராயன் பேட்டையில் உள்ள திருச்சேலூர் மகாதேவர் கோயில், பண்டைய கலைப் பாணியும், பல வரலாற்றுச் செய்திகளையும் கொண்ட கல்வெட்டுக்களுடன் கம்பீரமாக இன்னும் திகழ்வது மனதிற்கு இதமளிப்பதாக உள்ளது.

சப்த மங்கைத் தலங்கள்

என். செல்வராஜ், M.A., M.Ed., அய்யம்பேட்டை.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய எம்பெருமானுக்கு அடியார்கள் எடுக்கும் அநேக விழாக்களில் சப்தஸ்தானம் என்னும் ஏழூர் திருவிழாவும் ஒன்றாகும். திருவையாறு சப்தஸ்தானம் தரணிபுகழ்பெற்றது எனினும் குடந்தை, கரந்தை (தஞ்சை), சக்கராப்பள்ளி சப்தஸ்தானங்களும் தனிச்சிறப்புடையவை. திருச் சக்கராப்பள்ளி சப்தஸ்தானம் தலங்கள் சப்தமங்கையரோடு தொடர்புடையன என்பதால் இவ்விழா இப்பகுதியில் கூடுதல் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

திருச்சக்கராப்பள்ளி

முதல்தலம் தேவாரப்பதிகம் பெற்ற காவிரித் தென்கரைத் தலங்களுள் 121 வது தலம் திருஞான சம்பந்தர் பதிகம் பெற்றது. சப்த மாதர்களுள் பிராம்மி, பிரம்மனது சக்திவடிவம். பிரம்மனது சாபம் நீங்க இவ்வூர் சிவலிங்கத் திருமேனியை வழிபட்டதாக ஐதீகம்.

இறைவன் : ஸ்ரீ சக்கரவாகேசுவரர்
திருச்சக்கராப்பள்ளி உடைய
மகாதேவர்

இறைவி : ஸ்ரீ தேவநாயகி

தீர்த்தம் : காவிரி (குடமுருட்டி)
சக்கரதீர்த்தம்

விருட்சம் : வில்வம்

தஞ்சை குடந்தை நெடுஞ்சாலையில் தஞ்சையில் இருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள ஊர் சக்கராப்பள்ளி என வழங்கப்படுகிறது. ஞானசம்பந்தர் காலத்தில் வணிகப்பெருவழியில் அமைந்த பெரும் வணிக நகரம் செம்பியன் மாதேவி காலத்தில் கற்றளியாக மாற்றியமைக்கப்பட்டது. செம்பியன் மாதேவி இவ்வூர் இறைவனை மலர்கொண்டு வழிபடும் புடைப்புச்சிற்பம் இதனை உறுதிப்படுத்தும்.

பங்குனித் திருநாளில் இறைவனும், இறைவியும் சப்தஸ்தானம் எழுந்தருளும்போது உடன்வரும் வெட்டிவேர் பல்லக்கில் பவனிவருபவர்கள் அனவித்யை நாதசர்மா தம்பதிகள் இவர்களே இவ்வூர் பல்லக்கு திருவிழாவிற்குக் காரண கர்த்தர்களாக இருத்தல் வேண்டும். மேலும் தன் அடியார் தம்பதியை ஏழூர் இறைவன் அழைத்து செல்வது தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே என்பதற்குச் சான்றாக உள்ளது. இவ்வடியார்கள் சிறப்பு திருமுதுகுன்றம், மயிலாடுதுறை, காசிகேதார் கட்டம் ஆகிய தலபுராணங்களிலும் காணப்படுகின்றன என்பதிலிருந்து இவ்வந்தனத் தம்பதியரின் சிவத்தொண்டு சிறப்பானது என்ற உண்மைப் பெறப்படும்.

முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன் ராஜாதிராஜன், சுந்தரபாண்டியன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன. இவ்வூர் நித்தவினோத வளநாட்டு கிழார் கூற்றத்து அகழிமங்கலத்து பிரம்ம தேயம் திருச்சக்கராப்பள்ளி எனக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

அரியமங்கை :

2வது தலம் : மகேஸ்வரி மகேஸ்வரனுடைய (சிவன்) சக்திபூஜித்த தலம். ஹரிமங்கை என்னும் அரியமங்கை

இறைவன் : ஸ்ரீ ஹரிமுக்தீஸ்வரர்

இறைவி : ஸ்ரீஞானாம்பிகை

தீர்த்தம் : ஹரி தீர்த்தம்

இத்தலம் அய்யம்பேட்டை ரயில் நிலையத்திற்குத் தென்மேற்கில் 1 கி.மீ தொலைவில் உள்ளது. போக்குவரத்து வசதி கிடையாது. சக்கராப்பள்ளி சோழர் கல்வெட்டால் இவ்வூரின் ஒருபகுதியாக வள நகர் சக்கராப்பள்ளி இருந்ததாகக் குறிக்கப்படுவதால் இவ்வூரின் பெருமையும் அறிய

படும். கல்வெட்டில் காணப்படும் அகழிமங்கலமே மருவி இன்று அரியமங்கை என்னும் மிகச்சிறிய குடியிருப்புப் பகுதியாக உள்ளது.

இத்தலத்திற்குதிருச்சக்கராப்பள்ளி சப்தஸ்தானப் பல்லக்கு முதல் நாள் பிற்பகல் வந்து சேரும். இவ்வூருக்குப் பல்லக்கு இல்லாததால், கும்பத்தில் ஆவாஹனம் செய்த அரியமங்கை நாதர் முதல் தலத்து இறைவனை எதிர் கொண்டழைத்து செல்வார்.

சூலமங்கை :

3வது தலம்:		கௌமாரி-(முருகனுடைய சக்தி) பூஜித்த தலம் சூலமங்கலம் எனப்படும் சூலமங்கை
இறைவன்	:	ஸ்ரீ கிருத்திவாகேஸ்வரர் கரி உரித்தநாயனார் சுயம்புலிங்கம் உயரம் குறைவான பாணம்.
இறைவி	:	ஸ்ரீ அலங்காரவல்லி
தீர்த்தம்	:	சூல தீர்த்தம்
சிறப்பு	:	அப்பரின் க்ஷேத்தி ரக்கோவைத் திருத்தாண்டகத்தில் வைப்புத்தலம்

பசுபதிகோயில் ரயில் நிலையத்திற்குத் தென்பால் 100 மீ. தொலைவில் உள்ளது. இசை உலக வரைபடத்தில் இடம் பெற்ற ஊர். பாகவதமேளா நாட்டில் நாடகம் நடைபெற்ற ஊர். சோழர் கால கற்றளியில் மூன்றாம் குலோத்துங்கன், சுந்தரபாண்டியன், போசள வீரராமனாதன் கல்வெட்டுகள் நிவந்தங்கள் பற்றிய செய்தி களையும் சமூக பொருளாதார வாழ்க்கையையும் குறிப்பிடுகின்றன. அந்நாளில் சிறப்புடன் விளங்கிய பாசுபத சைவ நெறி தழைத்திருந்த ஊர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. சிற்பக் கலையின் சிறப்பிற்கு உச்சமாக இவ்வூரில் இருக்கும் சூலதேவர் சிற்பம் உள்ளது. கோஷ்டத்தில் உள்ள கணபதியும், சண்டி கேஸ்வரர் முன்னுள்ள தோரணவாயில் சிற்பங்களும், போசளர் பாணியில் இருப்பது போசா வீரராமனாதனின் கொடையாக இவை இருக்கலாம் என்ற யூகத்திற்கு இடமளிக்கிறது.

முதல்தலத்து இறைவனும் இறைவியும் அனவித்யை நஷசர்மாவுடன் இவ்வூர் நெருங்கும்போது அந்தி பொழுதாகிவிடுகிறது. இத்தலத்திற்கும் பல்லக்கு இல்லை. எனவே படிச்சட்டத்தில் எழுந்தருளி எதிர்கொண்டு அழைத்து வருகிறார்கள் இவ்வூர் உற்சவர்கள் உள்ளூர் தெருக்களை வலம் வருவர்.

நந்தி மங்கை :

4வது தலம்:		வைஷ்ணவி (மகா விஷ்ணு வினுடைய சக்தி) பூஜித்ததலம் நல்லிச்சேரி நந்திமங்கை
இறைவன்	:	ஸ்ரீ ஜம்புகேஸ்வரர்
இறைவி	:	ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
தீர்த்தம்	:	தேவகாத தீர்த்தம்
சிறப்பு	:	தஞ்சை குடந்தை நெடுஞ்

சாலையில் 13 கி. மீ. நெடுஞ்சாலைக்குக் கிழக்காக 1 கி.மீ தொலைவில் இத்தலம் உள்ளது. சப்தஸ்தானங்களிலும் இவ்வாலயமே மேற்கு பார்த்த சன்னதி உடையது. ஆனால் தெற்கு வாசல் வழிதான் செல்லமுடியும். மேற்கில் உள்ள திறப்பிற்கு நேர் எதிரில் இவ்வூர் அந்தணர்களின் ருத்ர பூமி உள்ளது. சுடலை ஒளி இறைவன் மீதுபடும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. பங்குனி சங்கடஹர சதுர்த்தியன்று மாலை சிவலிங்கத் திருமேனியை சூரியக்கதிர்கள் தழுவும்



சூரிய பூஜையும் நடைபெறுகிறது. நந்திதேவர் பூஜித்து பேறுபெற்றதால் நந்திமங்கை என்றும் நந்தி மங்கள க்ஷேத்திரம் என்றும் போற்றப்படுகிறது. சிதிலமடைந்த கல்வெட்டுகள் இக்கோயிலின் பழமைக்குச் சான்றாக உள்ளன. சப்தஸ் தானங்களுள் ஒன்றான திருப்புள்ளமங்கை சோழர் கல்வெட்டில் இவ்வூர் நடுவிற்சேரி எனக் குறிப்பிடப்படுகின்றது. சங்ககாலத்தின் எச்சங்கள் இங்கே கிடைப்பது இவ்வூரின் பழமைக்குச் சான்றாக உள்ளன.

நல்லிச்சேரியில் இருந்ததாக புள்ள மங்கையில் குறிப்பிடப்பெறும் சோழர் கால காளாபிடாரி கோயில் சுவடழிந்து விட்டது.

இவ்வூர் அக்ரகாரத்தின் மேற்கிலுள்ள ஸ்ரீராஜகோபாலசுவாமி திருக்கோயில் தஞ்சை நயக்கமன்னன் விஜயராகவ நாயக்கனால் எடுக்கப்பட்டது என்பதற்குச்சான்றாக அர்ச்சாவதார பெருமானை வணங்கிய நிலையில் விஜயராகவ நாயக்கனின் சிற்பம் உள்ளது.

பசுமங்கை :

5வது தலம்:		வராகியம்மன் பூஜித்த தலம் பசுபதிகோயில் பசுமங்கை
இறைவன்	:	ஸ்ரீ பசுபதீஸ்வரர்
இறைவி	:	ஸ்ரீ பால்வளநாயகி ஸ்ரீ லோகநாயகி
தீர்த்தம்	:	காமதேனு தீர்த்தம்

இருப்பிடம் : தஞ்சை - குடந்தை நெடுஞ் சாலையில் தஞ்சையில் இருந்து 14வது கி.மீ ல் பசுபதிகோயில் பேருந்து நிறுத்தம் அங்கிருந்து தெற்கில் 1/2 கி.மீ தொலைவில் ஆலயம் உள்ளது.

சிறப்பு : கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில்களில் ஒன்று. யானை ஏறமுடியாத படி படிக்கட்டுகளுடன் கட்டுமலைபோல் அமைந்த கோயில் சோழர் காலத்தில் பசுபதி சைவம் நிலைபெற்றிருந்த தலம். சோழர் காலத்து ஆலயம் பிற்காலத்தில் காவிரி வெள்ளதாலும் மாலிக்காபூர் ஆற்காடு நவாப் போன்றவர்கள் படையெடுப்பின் போதும் பேரழிவை சந்தித்திருக்கிறது. கடைசியாக தஞ்சை மாரட்டிய மன்னர்களால் திருப்பணி செய்யப் பட்டுள்ளது. ஏழுர் கோயில்களுள் மிகப்பெரிய ஏழடுக்கு ராஜகோபுரம் இங்கு மட்டுமே உள்ளது. சோழர்கால எழுத்தமைதி யிலான துண்டு கல்வெட்டுக்களும், கட்டுமானங் களும் ஜேஷ்டா தேவியின் சிற்பமும் சோழர்காலம் என்பதை உறுதிபடுத்துகின்றன. இங்குள்ள உச்சிஷ்ட கணபதி ஓர் அரிய சிற்பக்கலைப் படைப்பாகும்.

தாழமங்கலம் :

6வது தலம்	:	இந்திரனின் சக்தி இந்திராணி வழிபட்ட தலம். தாழமங்கை என்னும் தாழமங்கலம்.
இறைவன்	:	ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரர் பொன்னார் மேனியர்
இறைவி	:	ஸ்ரீ ராஜராஜேஸ்வரி
தீர்த்தம்	:	சந்திர தீர்த்தம்

இருப்பிடம் : தஞ்சை குடந்தை நெடுஞ் சாலையில் பசுபதிகோயிலுக்கு முன்பாக சாலையின் மேற்புறம் உள்ள மிகப் பழமையான தலம்.

சிறப்பிடம் : சோழர்களுக்கு முன் ஆண்ட முத்தரையர்கள் காலத்து ஆலயம் செந்தலைத்தூண் கல்வெட்டுகளில் காணப்படும் நித்தவினோத

வளநாட்டு கிழார் கூற்றத்து பவதாய மங்கலமே, மருவி இன்று தாழமங்கை எனப்படுகிறது. இதனை ஒட்டியே சுவடழிந்து போன சங்ககாலம் தொட்டுப் புகழ்பெற்ற பெருநகரமான கிழார் இருந்திருக்கிறது.

இவ்வாலயத்திற்குக் கிழக்கிலுள்ள திருக் குளத்தில் பூர்ண சந்திரனின் கிரணங்கள் பிரதி பலித்து ஆலயத்திலுள்ள இறைவனை பூஜித்த தாலேயே இறைவன் திருநாமம் ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் என்றாயிற்று என்பது தலபுராணம். இத்தலத்திற்கு வரும் பல்லக்கு நிற்கக்கூட நேரமின்றி தீபாராதனையுடன் புறப்பட்டுவிடும்.

புள்ளமங்கை :

7வது தலம்	:	சாமுண்டி பூஜித்த தலம் திருப்புள்ளமங்கை புள்ளமங்கலம்
இறைவன்	:	ஸ்ரீ ஆலந்துறைநாதர், பிரம்மபுரீஸ்வரர் புள்ளமங்கலத்து மகாதேவர்
இறைவி	:	ஸ்ரீ அல்லியங்கோதை சௌந்தர நாயகி
தீர்த்தம்	:	காவிரி (ஞானசம்பந்தர் காலம்) குடமுருட்டி (தற்காலம்)

இருப்பிடம்: தஞ்சை குடந்தை நெடுஞ் சாலையில் 14வது கி.மீ பசுபதிகோயில் பஸ் நிறுத்தம். இங்கிருந்து மேற்கே5நிமிட நடைதூரத்தில் ஆலயம் உள்ளது. ஊர்ப்பெயர் வெள்ளாளப் பசுபதிகோயில். கோயில் திருபுள்ளமங்கை முதற் பராந்தகசோழன் காலத்து அற்புதமான கலைப் படைப்பு திருஞானசம்பந்தரின் பதிகம் பெற்ற பதி. பிரம்ம தேய கிராமம்.

சப்தஸ்தான தலங்கள் படையெடுப்பாலோ, இயற்கையின் சீற்றத்தாலோ பகுதியாகவோ, முழுமையாகவோ அழிவை சந்தித்தபோது புள்ளமங்கலம் மட்டும் எந்தவித பாதிப்புமின்றி தப்பியுள்ளது. காலங்கள்தோறும் கரைகடந்த காவிரி திசைமாறி பாயும்போது குவிந்த மணல் மேட்டினுள் இவ்வாலயம் முழுவதுமாக மூழ்கி மிகவும் பிற்காலத்தில் வெளிப்பட்டிருக்க வேண்டும்.

கோஷ்டதேவதைகளான மகா கணபதி, லிங்கோத்பவர், பிரும்மா, துர்க்கை, தென்முகக் கடவுள் விமானத்தில் சமீபத்திய திருப்பணியில் வெளிப்பட்ட அர்த்த நாரீஸ்வரர் ரிஷபாரூடர் முருகன்போன்ற கலைச் செல்வங்களுக்கு இணை யானவை செம்பிலும், யானைக் கொம்பிலும்கூட வடிக்கப்படவில்லை. ஏழூர்த்தலங்களிலும் இதுவே சோழர்கால சிற்பக் கலைக் கூடமாக உள்ளது.

இங்குள்ள கல்வெட்டுகள் அன்று நிலவிய சமுதாய நிலை பொருளாதாரம் வரிவிதிப்பு முறைகள் அரசாணைகளைச் சொல்லும் ஆவணங்களாக உள்ளன. இன்று மலையாள மண்ணில் மணம் பரப்பும் சாக்கைக் கூத்து தமிழகத்துக்கு உரியது என்ற சாசனச் சான்றும் இங்கு உள்ளது.

நிறைவுரை: ஏழூர்த்தலங்களும் சோழர் காலத்தவை என்பதும் அதற்கான கல்வெட்டுச் சான்றுகளுடன் உள்ளன என்பதும் சிறப்பான செய்தி கி.பி. 8 ஆம் நூற்றாண்டை சேர்ந்தபெரும்பிடுகு காலத்து புலவர் குவாவன்காஞ்சன் வாழ்ந்த ஊர் தாழமங்கை (பவதாய மங்கலம்) என்பது அண்மமையில் கட்டுரை ஆசிரியரால் நிறுவப்பட்டுள்ளது. முதலும் முடிவும் ஞானசம்பந்தர் பதிகம் பெற்றவை. அனைத்துமே காவிரி தென்கரைத் தலங்கள். ஏழூர்விழா இங்கே இருநாட்கள் முழுமையாக நடைபெறுகின்றன. இத்தலங்களும் வரலாறுகளும்

முத்தரையர்கள், சோழர்கள், பாண்டியர்கள், போசளர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள் காலங்களுடன் தொடர்பு கொண்டவை. பங்குனித் திருவிழாவின் போது இறைவன் இறைவியுடனும் அனவித்ய நாதசர்மாவுடனும் ஏழூர்வலம் வந்தால் சப்தமங்கையின் அருள்பெற்று சகலதோஷங்களும் நிவர்த்தியாகும் என்பது காலங்கடந்து நிற்கும் நம்பிக்கை.



பேரேரியின் நடுவில் ஒரு சிவன்கோயில்

ச. பரணன், எம்.ஏ.,எம்.பில்., தொல்லியல் துறை, தஞ்சாவூர்.

தஞ்சை மாவட்டத்துக்கு உட்பட்ட உடையார்கோயில், தஞ்சை நாகப்பட்டினம் பேருந்து வழித்தடத்தில், தஞ்சையிலிருந்து 18 கி.மீ தொலைவில் காவிரி வடவாறு தென்கரையில் அமைந்துள்ளது.

திருக்களாஉடையார்

கோயில் முன் அமைந்துள்ள பேரேரி ஒரு காலத்தில் தீவு போல் சுற்றிலும் அமைய நடுவில் சிவன் கோயில் அமைந்திருந்தது. பின்னர் போக்குவரத்து வசதிக்காக இடது பக்கம் மட்டும் மண்கொண்டு மூடப்பட்டு தற்போது கோயிலின் மூன்று புறமும் பெரிய ஏரி காணப்படுகிறது. இவ்விதம் நீர் நிலையின் நடுவில் இக்கோயில் அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும். களாச்செடியை தல விருட்சமாக கொண்டதால் இறைவன் திருக்களாவுடையார் என அழைக்கப்பட்டார். 'கரவிந்தம்' என்னும் வட சொல்லுக்கு களாமரம் எனவும், கரந்தேஸ்வரம் என்பது கரந்தீஸ்வரர் என்று மருவி களாவுடையப் பெருமாள் என்று பொருளாட திருக்களாவுடையார் என்ற தமிழ்ப் பெயரிலே இவ்வூருக்கு உடையார்கோயில் எனப்பெயர் வந்துள்ளது.

இறைவன் பெயர் - கரவத்தீஸ்வரர் எனும் திருக்களாவுடையார்
இறைவியின் பெயர் - தர்ம வல்லி
தீர்த்தம் - திரிபுவன மாதேவிப் பேரேரி
தல விருட்சம் - திருக்களா (கரவிந்தம்)

இத்திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந் துள்ளது. மூன்று பிரகாரங்ளைக் கொண்டுள்ளது. முன் கோபுரம் ஐந்து நிலை களையும், (51 அடி உயரம்) அதனை அடுத்துள்ள உள் கோபுரம் இரண்டு நிலைகளையும் கொண்டது. கருவறையின் மூலவர் கிழக்கு நோக்கியும், உள் மண்டபத்தில் உள்ள அம்மன் சன்னதி தெற்கு நோக்கியும், இச்சன்னதிக்கு நேர் எதிரே உக்கிரசாந்தி விநாயகர் சந்நதி அமைந்துள்ளது. வசந்த மண்டபம் கோயிலுக்கு வெளியில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. சுற்றளவு கீழ்மேலடி நீளம் 243 அடி, தென்வடலடி அகலம் 166அடி, பரப்பு 40338 சதுர அடிகளாகும். உள் பிரகாரத்தில் மேற்கு வரிசையில் முக்குருணிப் பிள்ளையார், பிரும்மபுரீஸ்வரர், ஆனந்த புரீஸ்வரன், சதுர்தேவ புரீஸ்வரர், கஜலட்சுமி பூலோகநாதர் முதலிய சன்னதிகளும், வடக்கில் திருக்களாவிருட்சமும் சண்டிகேஸ்வரர் சன்னதியும், கிழக்கில் வாகன மண்டபம், மடப்பள்ளியும் அமைந்துள்ளன. இரண்டாம் பிரகாரத்தின் தெற்கில் நந்தவனம் அமைந்துள்ளது. கோயிலுக்கு எதிரில் திருக்குளமும் அமைந்துள்ளது. குளத்துக்கு வெளியே நான்கு தேரோடும் வீதிகள் உள்ளன. கருவறையில் தேவ கோஷ்டத்தில் ஆலமர் செல்வன், அடிமுடிகாணா அண்ணல், பிரம்மன் ஆகியன அமைந்துள்ளன. இக்கோயிலில் அலங்கார மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் மற்றும் கருவறை அமைந்துள்ளது.

திரிபுவன மாதேவிப்பேரேரி

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முந்தியது முதலாம் இராசேந்திரனின் 31- ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும். (கி.பி. 1045) இம்மன்னனின் கல்வெட்டில் ''நம்மூர் திரிபுவன மாதேவிப் பேரேரி உள்ளால் எழுந்தருளியிருந்த திருக்கிளாஉடையார் மகாதேவர் கோயிலில்'' என்று குறிப்பிடுவதிலிருந்து ஏரியின் நடுவில் இக்கோயில் அமைந்திருந்தது என்பதும், ஏரியின் பெயர் திரிபுவன மாதேவிப் பேரேரி என்றும் அறிய முடிகிறது.

ஸ்ரீபீடம் செய்ய கல் கிடைத்த மலை

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 18-ஆம் ஆட்சியாண்டு கல் வெட்டில் கருவறையில் உள்ள மூலவருக்கு ஸ்ரீபீடம் சாத்தாது ஆண்டுதோறும் பசுங்கூட்டாலே சீரணோத்தாரணம் பண்ண வேண்டியிருந்தது. இதனை மணலூர்வாதுவன்

ஆராவமுது மாதேவரான விக்கிரமசோழன் பிரம்மராயர் அரசனுக்கு அறிவித்து அதற்கு மன்னனும் ஆயிரம் காசு தந்து போதாமல் போனால் சீபண்டாரத்திலிருந்து எடுத்துக் கொள்ளுமாறு ஆணையிட்டான். நொடியூர்ப் பட்டணத்தில் கிள்ளியூர் மலையினின்றும் கல் கொண்டு வந்து, வந்து சாத்திரப்படியே ஸ்ரீபீடமும் செய்யப்பட்டது. இப்பீடம் சைவாச்சாரியர்களினால் கருவறையில் சாத்த முடியவில்லை. இதனை நிவரம்பூர் உடையான் தேவனான உதய திவாகரனும் அவன் மக்களும் (சிற்ப விற்பன்னர்கள்) அப்பீடத்தை சாத்தினர் இவர்களுக்கு இறையிலியாக சிற்றூர் வழங்கப்பட்டது. இங்கு குறிப்பிடும் கிள்ளியூர் மலை என்பது புதுக்கோட்டை அருகே உள்ளது.

ஆழ்வார்கோயில்

இக்கோயில் கல்வெட்டுக்களில் நித்த விநோதவள நாடு, வீர சோழ வளநாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வூர் சதுர் வேதி மங்கலம் ஆகும். முதலாம் இராசேந்திரன் ஆட்சிக்காலத்தில் இருந்து மூன்றாம் இராசேந்திரன் காலம் வரையிலும் இவ்வூர் சதுர் வேதி மங்கலம் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இவ்வூரில் பெருங்குறி மகாசபை ஒன்று இருந்தது. இச்சபையார் கோயில் காரியங்களை நிர்வாகம் செய்து வந்தனர் இவ்வூர் கல்வெட்டுகளில் இருந்து குலோத்துங்க சோழ விண்ணகர ஆழ்வார் கோயில் மற்றும் திருப்பாற்கடல் ஆழ்வார் கோயில் ஆகியன இருந்துள்ளதாக அறிய முடிகிறது. தற்போது சிவன் கோயிலிருந்து சுமார் 2. கி.மீ. தெற்கே ஒரு பெருமாள்கோயில் சிதிலமுற்ற நிலையில் நான்கு கைகளுடன் 6 அடி உயரத்தில் ஸ்ரீதேவி, பூதேவி உடன் நின்ற நிலையில் உள்ளது.

ஆதி சண்டேஸ்வரன் கட்டளை

இக்கோயில் மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றில் பின்வரும் பாடல் காணப்படுகிறது.

ஸ்வஸ்திஸ்ரீ

''தண்டீச்சரன் ஓலை சாகரம் சூழ்வையத்து
சண்டீச்சரன் கருமம் ஆராய்பின் - பண்டே

அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து
- ஆதி சண்டேஸ்வரன் ஆதேசம்

மேற்காணும் பாடலில் ஆதி சண்டேஸ்வரன் ஆதேசம் என்பது ஆதி சண்டேஸ்வரன் கட்டளை என்று பொருள்படும்.

மேலும் இக்கோயில் கல்வெட்டுகளிலிருந்து கௌசலைவதி, திருவரங்கவதி என்ற பெயர்களில் சாலைகள் இருந்துள்ளதும், இவ்வூரில் ஓடிய வாய்க்கால்களுக்கு உய்ய கொண்டான் வாய்க்கால், கங்கை கொண்ட சோழன் வாய்க்கால் என்ற பெயர்கள் இருந்ததும் விளை நிலங்களுக்கு சில்வரி, பெரிவரி, அந்தராயக்காசு என்ற வரிகள் விதிக்கப் பட்டிருந்ததும் அறிந்து கொள்ள முடிகிறது.

கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசேந்திரனின் காலத்தில் ஒரு பேரேரியின் நடுவில் சிவன் கோயில் கற்றளி அமைத்து புதுமையை புகுத்தி பெருமையுடன் இருந்த இக்கோயில் கால ஓட்டத்தில் போக்குவரத்து வசதிக்காக கோயிலின் வடக்குப் பகுதி ஏரியினை மண் கொண்டு மூடி இன்று முப்புறம் நீர் சூழ்ந்த நிலையில் அமைந்துள்ளது. இவ்வூரில் பிற கோயில்களாக ஒரு பழைய துண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெறும் பெருமாள்கோயில் ஒன்று கல்யாணி ஐயனார் கோயில், பொன்னியம்மன் கோயில், சுந்தரியம்மன் கோயில், பூலோக நாதர்கோயில், ஆல விநாயகர் கோயில் மற்றும் திருநாவுக்கரசர் மடம் ஆகியன பற்றிக் கூறுகின்றது.

மகாமகத் திருக்குளம்

டாக்டர். இராசு.பவுன்துரை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குருபகவான் சிம்ம ராசியில் இருக்கும்போது, மாசி மாதத்துப் பௌர்ணமியும், மக நட்சத்திரமும் கூடும் நாளே மகாமகத் திருநாள் என்றழைக்கப் பெறுகின்றது. இந்நாளைப் புனித நீராடும் திருநாளாகக் கும்பகோணத்து மகாமகப் பெருங்குளத்தில் கொண்டாடுகின்றனர். இத்தீர்த்தமாடும் விழா கும்பமேளா, புஷ்கரம் போன்ற வடபுலத்து பெருநீராட்டு விழாக்களுக்கு ஒப்பானதாகும்.

மகாமகக்குளம்

இந்தியத் திருநாட்டில் ஓடும் ஒன்பது புண்ணிய நதிகளில் நீராடினால் அனைத்து பாவங்களும் நீங்கித் தூய்மையான வாழ்வையும் வளத்தையும் அடைவர் என்பது இந்து சமய மக்களின் நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையின் காரணத்தால் நீர் நிறைந்த ஆறுகள், குளங்கள், நீர் ஊற்றுகள், கடல் சங்கமம் போன்றவை புனிதமானவை எனக் கருதப்படுகின்றன. கும்பகோணம் மகாமகத் திருக்குளத்தில் ஒன்பது நதிக் கன்னியர்களும் தீர்த்தமாடிய காரணத்தால் பாவம் நீங்கி தூய்மையாகினர் என்பது தொன்மச் சிறப்பாகும். உலகெங்கும் வாழ்கின்ற சமய நம்பிக்கைகளில் புனித நீராடுவது, புனித நீரில் உடலைச் சுத்தம் செய்து வணங்குவது என்பது ஒரு பெரும் நம்பிக்கையாகும்.

தீர்த்தங்களும் திக்பாலர்களும்

அபிமுகேசர் திருசந்நிதியிலிருந்து மகாமகக் குளத்தின் நான்கு கரைகளிலும் எட்டுத் திசைகளுக்குரிய இந்திரன், அக்னி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய திக்பாலர்களின் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

மகாமகக்குளமும் தீர்த்தங்களும்

மகாமகத் திருநாளன்று கும்பேச்வரர் முதலான சிவமூர்த்திகள் இக்குளத்தில் உள்ள திருக்கோயில் மண்டபங்களில் எழுந்தருளி புண்ணிய தீர்த்தத்தை அளிப்பர். அப்பொழுது பிரமதீர்த்தம் ஒன்றும் திக்பாலர்கள் தீர்த்தம் எட்டும், நதியாகிய கன்னியர்கள் தீர்த்தம் ஒன்பதும் மற்றைய தேவ தீர்த்தங்கள் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் இப்புனிதக் குளத்தில் கலந்து சிறப்பிப்பதாகக் கருதப்படுகின்றது.

மகாமகக் குளத்திசைக்குரியோர்

மகாமகக் குளமானது பன்னிரண்டு ராசிகளும் அவற்றிற்குரிய 30 டிகிரி கோண அளவு அமைப்பின் அடிப்படையிலும் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்ற சுற்று வடிவமைப்பில் 0 டிகிரி முதல் 360 டிகிரி என்னும் அளவுகளையும் இதன் சிறப்பு அளவாக அமைகின்றது. ஒவ்வொரு ராசிக்கும் அமைகின்ற தீர்த்தங்கள் அந்த ராசியின் சிறப்பைப் பெறுகின்றன. இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட ராசிகளும் அவற்றின் தீர்த்தங்களும் இம்மகாமகக் குளத்தின் வடிவமைப்பிற்குரிய காரணங்களாகின்றன.

1. மேஷம்	- 1 தீர்த்தம்
2. ரிஷபம்	- 2 தீர்த்தங்கள்
3. மிதுனம்	- 1 தீர்த்தம்
4. கடகம்	- இல்லை
5. சிம்மம்	- 1 தீர்த்தம்
6. கன்னி	- 2 தீர்த்தங்கள்
7. துலாம்	- 3 தீர்த்தங்கள்
8. விருச்சிகம்	- 2 தீர்த்தங்கள்
9. தனுசு	- 2 தீர்த்தங்கள்
10. மகரம்	- 1 தீர்த்தம்
11. கும்பம்	- 1 தீர்த்தம்
12. மீனம்	- 3 தீர்த்தங்கள்

என அவை 19 தீர்த்தங்களின் இணைப்பாகக் கருதப்படுகின்றன.

மகாமகக் குளத்திலுள்ள 19 தீர்த்தக் கிணறுகள் 12 ராசிக்குரிய திசைகளில் அமைந்துள்ள முறையால் இக்குளத்தின் கட்டுமானத் தொழில் நுட்பத்தில் ராசிகளின் அமைவு மையப்படுத்தப்பட்டுள்ள நெறிமுறை புலப்படுகின்றது. இக்கட்டுமானத் திறனில் இருபதாவது தீர்த்தமாக மையத்தில் ஒன்று

அமைகின்றது. இத்தீர்த்தம் ''அறுபத்தாறு கோடித் தீர்த்தம்'' என்றழைக்கப்படும் சிறப்பைப் பெறுகின்றது. மையத்தில் பிற ராசிகளையும் திசைகளையும் இணைக்கும் மையமாகவும் காவிரித் தீர்த்தமாகவும் அழைக்கப்படுகின்றது. சிவபெருமான் தனது ரிஷப லக்னத்தில் தோற்றம் அளிக்கும் புனித நாளுக்குரிய அருட்காலமாகப் பகல் 11.30 மணி அளவில் போற்றப்பெறுகின்றது.

இந்நகரில் காவிரித் தீர்த்தத்தில் ரிஷப ராசி இடம்பெறுவதால் மற்ற எல்லாத் தீர்த்தங்களைக் காட்டிலும் மகாமகத் தீர்த்தம் புனிதமும், புண்ணியமும் நிறைந்த தீர்த்தமாக இந்துக்கள் கருதுகின்றனர்.

மகாமகக் குளமும் கோயில்களும்

பல்வேறு திசைகளில் மகாமகக் குளத்துக் கோயில் மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் எட்டுக் கோயில்கள் கிழக்கு மேற்காகவும், நான்கு கோயில்கள் தெற்கு வடக்காகவும், இரண்டு கோயில்கள் தென்மேற்காகவும், தென்கிழக்கு, வடமேற்கு நோக்கி முறையே ஒவ்வொன்றாகவும் கட்டப்பட்டுள்ளன. ஆனால் தெற்கு நோக்கிய கோயில் இக்குளத்தில் இடம்பெறவில்லை. மகாமகக் குளத்தின் நான்கு கரைகளிலும் தஞ்சை நாயக்க மன்னர் இரகுநாதன் பதினாறு மண்டபங்களைக் கட்டியுள்ளார். இப்பதினாறு மண்டபங்களும் பல்வேறு திசைகளில், கோணங்களில் வடிவமைக்கப்பட்டதாகும். குளத்தின் தீர்த்தக் கிணறுகளும் திசைகளாலும் ராசியாலும் அமைகின்றன. எனவே, அவரவர் நட்சத்திரத்திற்குரிய பலன்களைப்பெற அதற்குரிய திசை, இடம் அறிந்து நீராடுவதே சிறப்பாகும்.

மகாமகத் தீர்த்தப்பாலகர் கோயில்கள்
மகாமகக்குள மண்டபங்கள்

மகாமகக்குள மண்டபங்கள் அனைத்தும் தஞ்சை நாயக்க மன்னர் விஜயரகுநாத மன்னன் அளித்த சோடசமகாதானத்தின் வாயிலாகக் கட்டப்பட்டன. குளத்தைச் செப்பனிட்டு மண்டபங்களைக் கட்டிமுடித்த பெருமை கோவிந்த தீக்ஷிதர் என்னும் தஞ்சை அரசின் மந்திரி ஆவார். இவர் மைசூருக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர். இவரது கோயிற்கலைப் பணியை கும்பகோணம் இராமநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம் கோயில் ஆகியவற்றில் காணலாம்.

விஜயரகுநாத நாயக்க மன்னன் சோடச மகாதானம் செய்ததாகவும், அதன் பொருட்செல்வங்களின் பயனால் பதினாறு மண்டபங்கள் கட்டப்பட்டன என்பதை வரலாறு கூறுகின்றது. பதினாறு மண்டபங்களும் பதினாறு தானங்களுக்குரிய கட்டடங்களாகக் கட்டப்பட்டன. அவை முறையே துலா புருஷதான மண்டபத்தைத் தொடர்ந்துவரும் மண்டபங்கள் கீழ்வருமாறு அமைந்துள்ளன.

1. ஸ்ரீமுகுந்தேச்சுரர் மண்டபம்
2. ஸ்ரீதானேச்சுரர் மண்டபம்
3. ஸ்ரீஇடபேச்சரர் மண்டபம்
4. ஸ்ரீபாணேச்சுரர் மண்டபம்
5. ஸ்ரீகோணேச்சுரர் மண்டபம்
6. ஸ்ரீதினேச்சுரர் மண்டபம்
7. ஸ்ரீபைரவேச்சுரர் மண்டபம்
8. ஸ்ரீஅகத்தீச்சுரர் மண்டபம்
9. ஸ்ரீவியாசேச்சுரர் மண்டபம்
10. ஸ்ரீஉமாபாகேச்சுரர் மண்டபம்
11. ஸ்ரீநைருதீஸ்வரர் மண்டபம்
12. ஸ்ரீபிரம்மேச்சுரர் மண்டபம்
13. ஸ்ரீகங்கேச்சுரர் மண்டபம்
14. ஸ்ரீமுக்தேச்சுரர் மண்டபம்
15. ஸ்ரீக்ஷேத்திரபாலேசர் மண்டபம்
16. ஸ்ரீபிரம்மதீர்த்தேச்சுரர் மண்டபம்

என்றமைகின்றன. பிரம்மதீர்த்த மண்டபத்திலுள்ள பதினாறு தூண்களும் பதினாறு தானங்களைக் குறிப்பதாகவும் அமைகின்றன. இம்மண்டபம் ''ஸித்தம்'' என்னும் வகையைச்சார்ந்துள்ளது. ஸித்த மண்டபம் என்பது பதினாறு தூண்களுடன் கூடியதாகவும் 7 x 7 அடி அளவுடன் மையத்தில் அங்கணத்துடன் (அங்கணமேடை) கூடியதாகவும் மத்தியக்கூடம் ஊர்த்துவக் கூடத்துடனும் கட்டப்பட்டுள்ளது. இக்குளத்து மண்டபங்களில் உள்ள 76 தூண்களும் சிற்ப அலங்காரத்துடனும் கும்பம், கலசம் குறியீடுகளைப் பெற்றுள்ளதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபங்களில் உள்ள கருவறைகள் 5 ½ x 5 ½ அளவில்

ஏகதள விமானக்கலைப் பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தியக் கட்டடக் கலையின் தனிப்பெரும் சிறப்புக்களையும் தொழில்நுட்ப மரபுகளையும் இங்கு காணமுடிகிறது. அத்தகு பாரம்பரியச் சிறப்புகளுடன் திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ள இத்திருக்குளம் உலக மரபுச் சின்னங்களின் வரிசையில் இடம் பெறக்கூடிய அனைத்துச் சிறப்புக்களையும் பெற்றுள்ளது.



1. இந்திர தீர்த்தம்
2. அக்கினி தீர்த்தம்
3. யம தீர்த்தம்...
4. நிருதி தீர்த்தம்

5. வருண தீர்த்தம்
6. வாயு தீர்த்தம்...
7. குபேர தீர்த்தம்

8. ஈசான தீர்த்தம்
9. பிரம தீர்த்தம்...
10. கங்கை தீர்த்தம்
11. யமுனை தீர்த்தம்
12. கோதாவரி தீர்த்தம்
13. நர்மதை தீர்த்தம்
14. சரசுவதி தீர்த்தம்
15. காவிரி தீர்த்தம்
16. குமரி தீர்த்தம்...

17. பயோடினி தீர்த்தம்
18. சரயு தீர்த்தம்
19. அறுபத்தாறு கோடி தீர்த்தம்
20. தேவ தீர்த்தம்

அயல் நாட்டுக் கோயில்களும் அவற்றின் தீர்த்தவாரிகளும்

வ.மகேசுவரன்
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

பரத கண்டத்திற்கு, குறிப்பாக தமிழகத்திற்கு மிக அண்மித்து உள்ளதே இலங்கைத் தீவாகும். இங்கு பௌத்தமதத்தைப் பின்பற்றும் சிங்களவர்களும், இந்துமதத்தைப் பின்பற்றும் தமிழர்களுமே தொன்மையான குடிகளாவர். இலங்கையில் நீண்டகாலம் சைவமரபு பின்பற்றப்பட்டு வந்ததால் இதனைச் சிவபூமி என்பர் திருமூலர். இராமாயணக் கதைமரபில் கூறப்படும் இலங்கையை அரசாண்ட இராவணேசன் சிறந்த சிவபக்தனாகக் குறிப்பிடப்படுகின்றான். பரதகண்டத்தில் உள்ளது போன்றே பல சைவத் திருத்தலங்கள் இங்கும் காணப்படுகின்றன. அவற்றுக்கான தொன்ம, பழமரபுக் கதைமரபுகளும், மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளும் இணைந்து காணப்படுகின்றன. இந்தவகையில் இங்குள்ள சைவத்தலங்களின் தகவல்களையும் அவற்றின் தீர்த்த வாரிகளையும் பற்றியே இக்கட்டுரை விபரிக்கின்றது.

இங்குள்ள தலங்களைச் சிவத்தலங்கள், முருகத்தலங்கள், பிள்ளையார் தலங்கள், அம்மன் தலங்கள் என வகைப்படுத்தலாம். வைணவ மரபு மிகக் குறைவாகவே இங்கு காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் வல்லிபுரம் எனுமிடத்தில் காணப்படும் வல்லிபுர ஆழ்வார் கோயிலும், பொன்னாலை என்னுமிடத்தில் உள்ள வரதராஜப் பெருமாள் கோயிலுமே தொன்மையான வைணவத் தலங்களாகும். தென்னிலங்கையில் தெவிநுவர என்னுமிடத்தில் பழமையான விஷ்ணு கோயில் இருந்தற்கான எச்சங்கள் உண்டு. சோழர்கள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்களது தலைநகரான ஜனநாதமங்கலத்தில் (இன்றைய பொலநறுவை) வைணவ ஆலயங்கள் சில இருந்தமைக்கான சுவடுகள் உண்டு. சிங்களமக்களது பௌத்த விகாரங்களில் விஷ்ணுவை வழிபடும் மரபு உண்டு. எனினும் சைவமரபே இங்கு பொதுவான பண்பாகத் தமிழர்களிடம் நிலைத்து வந்துள்ளது.

யாழ்ப்பாணம் : கீரிமலை நகுலேசுவரம், கிழக்கிலங்கை; திரிகோணமலை, கோணேசுவரம், வடமேற்கில் மாந்தை கேதீசுவரம், சிலாபம் முன்னேசுவரம் என்பவை வரலாற்றுப் புகழ்மிக்க சிவன் கோயில்களாகும். தெற்கே சந்திரசேகரேசுவரம் என்ற கோயில் இருந்ததாக வரலாறு உண்டு. ஆயின் அக் கோயில் தொடர்பான தடையங்களை அறியுமாறில்லை. இவற்றைவிட கிழக்கே மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீ சுவரம், வன்னியில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரம் என இரு தான்தோன்றீசுவரங்களும் உண்டு. தெற்கே கதிர்காமம், கிழக்கே மண்டூர், வடக்கே செல்வச்சந்நிதி, நல்லூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள முருகன் கோயில்கள் வரலாற்றுப் புகழ் மிக்கவை. இவற்றைவிட யாழ் மாவட்டத்தில் பல முருகன் கோயில்கள் உள்ளன. முருக வழிபாடு இங்கு சிறப்பாக நிகழ்த்தப்படுவதால் யாழ்பாணத்தைக் கந்தபுராணக் கலாசாரம் நிகழும் பூமி என்று சிறப்பித்துப் பேசுவர். கிழக்கே மட்டக்களப்பில் அமைந்துள்ள மாமங்கப் பிள்ளையார்கோயில் சிறப்புமிக்கது. இவற்றைவிட மட்டக்களப்புப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. மலைநாட்டில் பெருந் தோட்டத் தொழிலாளர் மத்தியில் கிராமிய வழிபாட்டுக் கோயில்களும், வியாபார குழுமங்கள் கட்டிய முருகன் விநாயகர் கோயில்களும் உண்டு. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் குறிஞ்சிக் குமரன் ஆலயம் உள்ளது. இவற்றில் புகழ்மிக்க தீர்த்தவாரிகள் உள்ள தலங்கள் மட்டுமே இங்கு விபரிக்கப்படுகின்றன.

மேற்குறித்த கோயில்களின் தீர்த்தவாரிகளாக ஆறு, கடல், குளம், கேணி, கிணறு என்பவை உள்ளன. கதிர்காமத்திற்கு மாணிக்க கங்கையும், முன்னேசுவரத்திற்கு தெதுறு ஓயா (மாயவன் ஆறு), செல்வச்சந்நிதிக்கு தொண்டைமான் ஆறு (கடல்நீரேரி) ஆகியவையும் புனித தீர்த்தங்களாகும். கீரிமலை நகுலேசுவரத்திற்கு கடலும் கடலை அண்மித்த நன்னீர் தீர்த்தக்கேணியும் புனித தீர்த்தங்களாகும். ஏனையவற்றிற்குத் தீர்த்தக் குளங்களும், கேணிகளும், கிணறுகளும் புனித

தீர்த்தங்களாக உள்ளன. இவை யாவற்றுக்கும் தொன்மங்களும், பழமரபுக்கதைகளும் உண்டு ஆடி அமாவாசையில் புனித தீர்த்தமாடல், பிதிர்க்கடன் செய்தல், நேர்த்திக்கடன் நிறைவேற்றல் ஆகியவற்றிற்காக இத்தீர்த்தவாரிகளை நாடிப் பக்தர்கள்வந்து புனித நீராடுதல் வழக்கம்.

திருக்கேதீசுவரம், திருக்கோணேசுவரம் என்ற தலங்கள் தேவாரப்பாடல் பெற்ற தலங்களாகும். திருக்கேதீசுவரத்தைச் சம்பந்தரும், சுந்தரரும் பாடியுள்ளனர். திருக்கேதிசுவரத்தில் கேது வழிபட்டு முத்தியடைந்ததாகத் தல புராணம் கூறும், மேலும் இராவணன் மனைவி மண்டோதரி வழிபட்ட தலம் இது என்றும் கூறப்படுகின்றது. மாந்தை என்ற புகழ்பெற்ற பண்டைய வணிக நகருக்கு அண்மித்து இத்தலம் அமைந்துள்ளது. 'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகர்'' என்று சம்பந்தர் இதனைப்பாடுகின்றார். சோழர் காலத்தில் இது இராசேசுவரம் என்று அழைக்கப்பட்டது. இதன் தீர்த்தத்தின் பெயர் பாலாவி ஆகும். ''பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி'' என்று சுந்தரர் இதனைக் குறிப்பிடுகின்றார். இத்தீர்த்தவாரி மகாசிவராத்திரி காலத்திற்கு மிகவும் முக்கியம் பெற்றதாகும். இக்காலத்தில் அடியார்கள் வெள்ளிக்குடங்களில் பாலாவித் தீர்த்தத்தைத் தாமே முகர்ந்து கொண்டுவந்து மகாலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்வர். இங்கு பிதிர்க்கடன் செய்வோர் காசி, கயா, காஞ்சி என்ற புண்ணிய சேத்திரவரிசையில் கயாவில் செய்த பலனைப் பெறுவர் என்பது மரபு. இத்தீர்த்தக்கரையில் ஆடி அமாவாசையிலும் அந்தியேட்டி (அபரக்கிரியை) தினங்களிலும் பிதிர்க்கடன் செய்வர்.

திருக்கோணேசுவரம் மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த மலையின் மேலமைந்துள்ளது. எனினும் கடல் நீர் இதன் புனித தீர்த்தமாக அமையவில்லை. இராவணன் இத்தலத்தினை வழிபட்டான் என்பது தொன்மம். ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'' என்பார் சம்பந்தர். பின்னாட்களில் சோழ அரசுகளாலும் இக்கோயில் போஷிக்கப்பட்டுள்ளது. இதன் தீர்த்தம் பாவநாச தீர்த்தமாகும். மலையின் தென்பக்கத்தில் அமைந்துள்ள ஆழமான கிணறே இத்தீர்த்தம் என்று கூறப்படுகின்றது. எனினும் இத்தலத்திற்கு 7 கி.மீ. தூரத்தில் கன்னியா எனுமிடத்தில் 7 வெந்நீர் ஊற்றுக் கிணறுகள் அமைந்துள்ளன. இவை இலங்கையில் புகழ்பெற்ற தீர்த்தக் கிணறுகளாக விளங்குகின்றன.

முன்னேசுவரம், முன்னை நாத சுவாமிகோயில் என்றும், முனி + ஈசுவரம், முனீசுவரம் என்றும் அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசங்களில் ஐயனார் வழிபாடு பிரசித்தமானதாகும். அந்தவழிபாட்டின் மேனிலையாக்கமாகவும் இக்கோயிலில் இடம் பெற்றிருக்கலாம். இக்கோயில் அறுபத்து நான்கு சக்திபீடங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இராமர் இலங்கைக்கு வந்து இராவண வதம் செய்ததன் பின்னர் இக்கோயிலில் சிவலிங்க பூசை செய்து பிரமகத்தி தோசத்தினைப் போக்கினார் என்றும் பாரதம் தொகுத்த வியாசரும் இக்கோயிலை வழிபட்டார் என்றும் தட்சிண கைலாச மான்மியம் குறிப்பிடுகின்றது. இலங்கையின் வரலாற்றுக் காலங்களில் சிங்கள அரசர்களால் போஷிக்கப்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. கோயில் நடைமுறைகள் சடங்குகள் என்பவை சமூக ஒருங்கிணைவு கொண்டனவாக, இடைக்காலத் தமிழகத்துக் கோயில்களைப்போல சமூக நிறுவனமாக இது இயங்கியுள்ளது. இன்றும் கோயிலில் பின்பற்றப்படும் செயற்பாடுகள் பழைய நடைமுறைகளின் எச்சங்களாகக் காணப்படுகின்றன. இலங்கையில் 63 நாயன்மார்களுக்கு பிரதிமைகள் உள்ளதும், பக்தோற்சவம், பிச்சாடனோற்சவம் என்பன நிகழ்வதும் இத்தலத்தில் மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தலத்தின் தீர்த்தம் மாயவன் ஆறு (தெதுறு ஓயா) என்பதாகும். இது இக்கோயிலிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. பிரம்மோற்சவத்தின் தீர்த்தத் திருவுலாவின் போது முன்னைநாதரும், வடிவாம்பிகையும் இப் புனிதத்தீர்த்தத்திற்கு எழுந்தருளி தீர்த்தமாடுவது வழக்கம். பௌத்த சமயிகளும் இத்தலத்தில் அதிகமாக வந்து வணங்குவர்.



யாழ்ப்பாண நகருக்கு வட மேற்குத் திசையில் அமைந்துள்ள நகுலேசுவரமும், அதன் தீர்த்தவாரியான கீரிமலைத் தீர்த்தமும் மிகவும் பிரசித்தமானவையாகும். இக்கோயில் தீர்த்தத்தின்தொன்மம் பற்றி மட்டக்களப்பில் கிடைத்த செப்பேடு ஒன்று குறிப்பிடுகின்றது. நகுலம் என்பது கீரியைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும். கீரிமுகச்சாயலுடைய முனிவர் ஒருவர் இந்தியாவில் இருந்தார் என்றும் அவர் திருத்தம்பாலை (நகுலேசுவரத்தின் பழைய பெயர்)க்கு வந்து புண்ணிய தீர்த்ததிலே (கண்ட தீர்த்தம்) நீராடித் திருத்தம்பலேசுரவரை வழிபட்டபோது அவருடைய கீரிமுகம் நீங்கி, மனிதமுகம் உண்டானது. திருத்தம்பலேசுவரர் நகுலமுனிக்குச் செய்த அற்புதத்தை நினைவு கூறும் முகமாகத் திருத்தம்பலேசுவரம் நகுலேசுவரமாகியது. இதனைத் தமிழில் கீரிமலை என்று அழைக்கும் வழக்கமுண்டு.

இத்தீர்த்தத்துடன் தொடர்புடைய பழமரபுக் கதையொன்றும் உண்டு. மதுரையைத் தலைநகரமாக கொண்டு ஆட்சி செய்த உக்கிரப்பெருவழுதி என்ற மன்னனுடைய மகளான மாருதப்புரவீகவல்லி என்பவள் குன்ம நோயினால் பாதிக்கப்பட்டமையால் அவள் உடல் மெலிந்தாள். முகம் மெலிந்து குதிரைமுகம் போலானது. எவ்வித மருத்துவமும் பயனளிக்கவில்லை. இறுதியாகச் சாந்தலிங்க முனிவர் என்பவரது வழிகாட்டலின்படி கீரிமலைக்குச் சென்று, அங்கே தவஞ் செய்து கொண்டிருந்த நகுல முனிவரை வணங்கி அவரின் ஆசியுடன் கீரிமலை புனித தீர்த்தத்தில் நீராடினாள். பின்னர் கோயில்கடவை எனுமிடத்திலுள்ள முருகனை வழிபட்டாள். இதனால் அவளுக்குக் குன்ம நோயும் குதிரைமுகமும் நீங்கி முன்பு போலானாள். அவளுக்கு குதிரைமுகம் நீங்கிய கோயில்கடவை முருகன்கோயில் என்ற இடம் மாவிட்டபுரம் எனப் பெயர்பெற்றது. (மா - குதிரை) அவ்விடத்திலே அவள் கோயில் ஒன்றை நிர்மாணித்து, தமிழகத்திலிருந்து முருகன் படிமம் ஒன்றைத் தருவித்து, அங்கு பிரதிஷ்டை செய்வித்தாள். இக்கோயிலே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலாகும். முருகன் படிமம் வந்து இறங்கிய இடம் காங்கேயன் துறையாகும். குதிரையுடன் தொடர்புடைய புரம் என்ற பெயரும், காங்கேயன் துறையும் அக்காலத்தில் அங்கு நிலைபெற்ற வணிகத்தையும், வணிக கணங்களின் குடியிருப்பையும், நடமாட்டத்தையும் நினைவூட்டியபோதும் தொன்மமும், பழமரபுக் கதையுமே மேலோங்கி நிற்கின்றது. இந்தியாவில் இருந்து வரவழைத்துக் குடியமர்த்தப்பட்ட பிராமணர்களின் வம்சாவழியினரே இன்றும் இங்கு பூசைகள்நிகழ்ந்துகின்றனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும், நகுலேசுவரத்திற்கும் புனித தீர்த்தம் ஒன்றே. இத்தலத்தில் ஆனி மாதத்தில் ஆரம்பமாகும் பிரம்மோற்சவம் ஆடி அமாவாசை தினத்தன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். மாவிட்டபுரத்தில் இருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ள கீரிமலைக்கு முருகன் எழுந்தருளி அங்கு தீர்த்தத்துறையிலே தீர்த்தோற்சவம் நடைபெறும். இவ்வுற்சவம் மிகவும் பிரபலம் வாய்ந்தது. அன்று தான் முன்னோர்களுக்கான பிதிர்க்கடன் செய்வதற்கு பல்லாயிரக்கணக்கான சைவ அடியார்கள் கீரிமலை நோக்கி வருவர். அங்கு தீர்த்த துறையில் நீராடி தமது கடன்களைநிறைவேற்றுவர்.

கீரிமலைத் தீர்த்தத்துறை கடல் நீரும், நன்னீரும் இணைந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடல் நீரேரி அருகிலேயே இது அமைந்துள்ளது. ஒருபுறம் உப்புக் கடல் நீரேரி, அதன் பக்கலிலே நன்னீர் ஊற்று, எனவே கடல் நீரும், நன்னீரும் சங்கமிக்கும் அற்புதமான தீர்த்தவாரி இதுவாகும். ஆடி அமாவாசை நாள் மட்டுமல்ல எல்லா நாட்களும் இங்கு திருநாளாக விளங்குகிறது. இறந்தவர்களுக்கான அந்தியேட்டி (அபரக்கிரியை) செய்வதற்கு தீர்த்தத்துறை புகழ் பெற்றது. அதனால் யாழ்குடா நாட்டில் பல்வேறு பக்கங்களிலிருந்தும் மக்கள் வந்து இங்கு அக்கடமைகளை நிறைவேற்றுவர். இக் கிரியைகளை வீரசைவ மரபினரே நடத்தி வைக்கின்றனர். பிணி நீக்கும்

மருந்தாகவும், பிதிர்க்கடன் செய்யும் புண்ணிய தீர்த்தமாகவும், நகுலேசுவரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றின் புனித தீர்த்தமாகவும் இது விளங்குகிறது. இலங்கையில் புகழ்பெற்ற சுற்றுலா மையமாகவும் இது விளங்கியது. கிழக்கிலங்கையின் தலைநகரான மட்டக்களப்பு நகரத்திற்கு அண்மித்தாய் அமிர்தகழி எனுமிடத்தில் மாமாங்கப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. மட்டக்களப்பில் சைவ மரபு வெகுவாகக் காலூன்றவில்லை. கண்ணகி வழிபாடும், பிற கிராமியப் பெண் தெய்வ வழிபாடுகளும் அதிகமாகவுள்ளன. எனினும் மாமாங்கம் என்ற சொல் இலங்கையில் இந்தப் பிள்ளையார் கோயிற் பெயரின் முன்னொட்டாக அமைந்திருப்பதாலேயே விசேட கவனத்திற்குள்ளாகின்றது, இக்கோயிலின் மூலவர் சிவலிங்கமாகவே காணப்படுகிறார். எனினும் அதன் மேல் விநாயகருக்குரிய அங்கியே சார்த்தப்பட்டுள்ளது. இதனால்தான் பிள்ளையார் கோயிலாக இது அழைக்கப்படுகின்றது. இங்கு உள்ள புனித தீர்த்தம் கோயிலின் அண்மையில் உள்ள புனித தாமரைக் குளமாகும். ஆடி அமாவாசையை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு இங்கு பிரமோற்சவம் இடம் பெறுகின்றது. மட்டக்களப்பு புனித தாமரைக் குளமாகும். ஆடி அமாவாசையை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு இங்கு பிரமோற்சவம் இடம் பெறுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் அநேக மக்கள் இத்தீர்த்தமாடுவர். மாசிச் சிவராத்திரியும் இத்தலத்தின் விசேட தினமாகும். இத்தீர்த்தத்தை இராமரே உண்டாக்கி தமது வில் அம்பு முதலியவற்றை நீராட்டி அவற்றைப் புனிதமடையச் செய்தார் என்பது தொன்மக் கதை மரபாகும். கீரிமலை தீர்த்தவாரியுடன் தொடர்புடைய பழமரபுக் கதையில் கூறப்படும் மாருதப் புரவீகவல்லி காலத்தவளான, ஆடகசவுந்தரி எனும் அரசகுமாரி இத்தீர்த்தத்திலே நீராடித் தன் உடற்குறை நீங்கப் பெற்றாள் என்ற கதை மரபும் இதற்கு உண்டு. எவ்வாறெனினும் 'மாமாங்கேசுவரம்' என்னும் இக்கோயிலின் பழைமையான பெயரும், ''மகாமகம்'' அல்லது ''மாமாங்கத் தீர்த்தம்'' என்ற அதன் தீர்த்தவாரியின் பெயரும் ஆழமான ஆய்வுகளுக்கு வழிசமைப்பனவாகும்.

மழைநீர் சேகரிப்பில் மன்னர்களின் பங்களிப்பு

மு. மதியழகன்,
தஞ்சாவூர்.

இயற்கையின் கொடையான மழைநீரை வீணே கடலில் கலக்காமல், அவற்றை ஏரி குளங்களில் தேக்கி பயன்படுத்துதல் என்பது தொன்று தொட்டு தமிழகத்தில் மேற்கொள்ளப் பெற்றுவரும் மழைநீர் சேகரிப்பு முறையாக இருந்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் ஏரிகள் குளங்கள் ஆகியவை முறையாகத் தூர்வாரப் பெறாததாலும் பாய்கால், வடிகால் பராமரிப்பு இன்மையாலும் நீர்நிலைகள் பெரும்பாலும் பாழ்பட்டன. நிலத்தடி நீர் குறைவு ஏற்பட்டமையால் இன்று மழைநீரை ஒவ்வொரு கட்டடங்கள் வாயிலாகவும் சேமிக்க அரசு முனைந்துள்ளது. ஒரு கட்டடத்தில் பெய்யும் மழைநீர் முழுவதையும் வீணாக்காமல் அப்படியே சேகரித்து பயன்படுத்தும் முறையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செயல் முறையில் செய்து காட்டியவன் மாமன்னன் இராஜராஜ சோழனாவான். அப்பேரரசன் செய்த மழைநீர் சேகரிப்பு முறை பற்றியும், பிற அரசர்கள் மழைநீர் சேகரிப்புக்கு ஆற்றிய பங்களிப்பு பற்றியும் காண்போம்.

தஞ்சையில் சிவ கங்கை

இராஜராஜேச்சரம், பெருவுடையார் கோயில் என்ற பெயர்களால் அழைக்கப்பெறும் தஞ்சைப் பெரிய கோயில் 500மீ ஐ 250மீ. பரப்பளவில் நான்குபுறமும் திருமதில்களோடு திருச்சுற்று மாளிகையையும் கொண்டு திகழ்கின்றது. உள்ளே 216 அடி உயரமுடைய ஸ்ரீவிமானம், அதனோடு இணைந்த மிகப்பெரிய மகாமண்டபம் ஆகியவற்றோடு இக்கோயிலை இராஜராஜசோழன் எடுப்பித்தான். மிக உயர்ந்த அந்த விமானத்தினை தட்சிணமேரு எனப்பெயரிட்டும் அழைத்தான். தென்னாட்டு மலை என அழைக்கப்பெற்ற அந்த விமானத்தை சிவபெருமான் உறையும் கயிலாயமலையாகப் பாவித்தான்.

சிவபெருமான் உறைகின்ற மகாமேருவை எப்போதும் ஆகாச கங்கை தன் நீரால் நனைத்துக் கொண்டே இருப்பாளாம். அந்நீர் முழுவதும் திரண்டு ஆங்காங்கே துரோணி எனும் நீர் நிலைகளை நிரப்பி வழிந்து ஒருங்கே ஒரு நதியாக ஓடுமாம். அதற்குச் சிவகங்கை எனப்பெயர் என்று தொன்மை நூல்கள் கூறுகின்றன. இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே தஞ்சைக் கோவிலாம் தட்சிணமேரு மீதும் ஆகாச கங்கை வர்ஷிக்க, அந்நீர் ஒருங்கு திரண்டு ஒரு கால்வாய் வழியாக ஓடி கோயிலின் வட மேற்கு மூலையில் அமைக்கப்பெற்றுள்ள குளத்தில் போய்ச்சேருமாறு செய்துள்ளான். அக்குளத்திற்கு "சிவகங்கை" எனப் பெயரிட்டுப் போற்றினான்.

அந்த உயர்ந்த விமானம் முழுவதும் பெய்யும் மழைநீர் ஒவ்வொரு தளத்திலும் சேர்ந்து ஆங்காங்கே உள்ள வடிகால் வழியாக வழிந்து கீழ்த்தளத்தில் வந்து வீழும். நீர் வழிந்து வருகிற பகுதியெல்லாம் துரோணிகள் உள்ளன என்பதைக் காட்ட கும்ப பஞ்சரம் எனும் சிற்ப அமைப்புகளை இடம்பெறுமாறு செய்துள்ளான். துரோணிகளாக விளங்கும் கும்பகுடங்கள் நீரால் நிரம்பி இருபுறமும் வழிய அதில் நீரோடு மலர்களும், செடிகளும், கொடிகளும் செல்வது போன்ற சிற்ப அமைப்பைக் காணலாம். கோயில் வளாகம் முழுவதும் இவ்வாறு சேகரமாகும் நீர் ஒருங்கு திரண்டு வடமேற்கு மூலையில் உள்ள ஒரு கால்வாய் வழியாக வெளியேறி சிவகங்கை எனும் குளத்தில் போய்ச் சேரும். கடுமையான மழைபெய்யும் காலங்களில் போய்ப் பார்த்தால் மழைவிட்ட 15 நிமிடங்களில் அவ்வளாகம் முழுவதும் சேர்ந்த நீர் ஒரேகால்வாய் வழியே சிவகங்கைக் குளத்தில் போய் வீழ்ந்து விடும். அந்த வகையில் தள அமைப்பும் கால்வாய் அமைப்பும் உள்ளன. ஒரு கட்டடம் முழுதும் பெய்யும் மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல், தூய்மையாகவும், பாது காப்பாகவும் உள்ள செங்கற் கட்டுமான கால்வாய்மூலம் ஒரு குளத்தில் சேகரமாகுமாறு அமைத்து, பின் அந்நீரை மக்கள் பயன்படுத்துமாறு வகைசெய்த இராஜராஜனின் பணி தமிழக வரலாற்றில் கட்டட மழைநீர் சேகரிப்பில் செயல்படுத்தபெற்ற ஒரு முன்னோடி திட்டம் என்பதில் ஐயமில்லை.

கங்கை காவிரி இணைப்பிலும் ஒரு முன்னோடி

மாமன்னன் இராஜஇராஜனின் மைந்தன் இராஜேந்திரசோழன் வடபுலத்து நாடுகள் பலவற்றை வென்றான் வங்க நாட்டை ஆட்சிசெய்த பாலர்களை வென்று வாகைசூடினான். அவ்வெற்றியை அவன் வங்கம் வென்றான் என்ற பட்டம் சூடி கொண்டாடியிருக்கலாம். ஆனால், அவனோ "கங்கை கொண்டான்" எனப்பட்டம் சூடிக்கொண்டான். அது மட்டுல்ல அந்நாட்டுக் கங்கையாற்றிலிருந்து குடங்களில் நீரை எடுத்து வந்து திரைலோக்கி சிவாலயத்தில்வைத்துப் பாதுகாத்தான். அப்போது கங்கைகொண்ட சோழபுரம் எனும் பெருநகரம் உருவாகிக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் அந்நகருக்காகப் பெரிய ஏரி ஒன்றினையும் வெட்டுவித்தான். சிவாலயம் ஒன்றும் உருவானது புதுநகரின் புகுவிழா நிகழ்ந்த போது தன் கங்கை வெற்றியைக் கொண்டாட ஜெயஸ்தம்பம் ஒன்றினை நாட்டுவதற்குப் பதிலாக தன் வீரர்கள் கொணர்ந்த கங்கைநீரை தான் வெட்டுவித்த பெரிய ஏரியில் கொட்டி ஜலஸ்தம்பமாக அதனைமாற்றி விழா கொண்டாடினான். அந்த ஏரிக்கு "சோழகங்கம்" எனப் பெயர் சூட்டினான். இதனை அவனது திருவாலங்காட்டுச் செப்பேடு

சோழகங்கம் இதி க்யாத்யா
ப்ரதிதஞ் நிஜ மண்டலே
கங்கா ஜலமயந் தேவஹ
ஜயஸ்தம்பம் வியதத்த ஸஹ

என்று கூறுகின்றது.

மிகச்சிறந்த மழைநீர் சேகரிப்பு ஏரியாக சோழகங்கம் எனும் பொன்னேரி இன்றும் விளங்குகின்றது.

திருக்கோகர்ணம் சுனையும் கங்கையும்

புதுக்கோட்டை நகரத்தின் ஒரு பகுதியாக விளங்கும் திருக்கோகர்ணம் சிவாலயம் இயற்கையாக அமைந்த குன்றினைக் குடைந்து உருவாக்கப் பெற்ற ஒரு குடை வரைக் கோயிலாகும். குடைவரையினுள் கோகர்னேஸ்வரர் இலிங்கமாக அருள் பாலிக்கின்றார். பக்கச் சுவர்களில் ஒருபுறம் கணபதியார் திருமேனியும், எதிர்புறம் கங்காதரர் திருவுருவும் உள்ளன. விண்ணிலிருந்து இறங்கும் கங்கை எனும் பெண்ணைத் தன் ஒற்றைச்சடையால் ஏந்துகிறார் அப்பரமன். மிக எழில் வாய்ந்த குடைவரைச்சிற்பமது.

அக்குடைவரைக்கு வெளியே அமைந்துள்ள படிக்கட்டுகள் வழியாக அக்குன்றின் மேலேறிச் சென்று காண்போமாயின் அங்கு இரண்டு மலைமுகடுகளுக்கு இடையே ஒருபள்ளம் இருப்பதும், அதற்கெனப் படிக்கட்டுகள் அமைக்கப்பெற்றிருப்பதையும் காணலாம். இயற்கையாக அமைந்துள்ள அப்பள்ளத்தில் அக்குன்று முழுதும் பெய்யும் மழைநீர் நிரம்பி சுனையாக விளங்குகின்றது. நீர் மிகுதியாக சேமிக்கப்பெறவேண்டும் என்பதற்காக மன்னர்கள் காலத்தில் கருங்கற்கள் கொண்டு ஒரு சுவர் எழுப்பியிருக்கிறார்கள். இதனால் குடை வரை கோயிலுக்கு மேலாக ஒரு குளமாக (மேல்நிலை நீர்த் தேக்கமாக) அச்சுனை திகழ்கின்றது. ஆண்டு முழுதும் பெய்யும் மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் அங்கு சேமிக்கப்பெறுகின்றது. அந்தநீர்தான் கோகர்ணேஸ்வரருக்கு திருமஞ்சன நீராகப்பயன்படுகின்றது.

மழைநீரால் அமைந்துள்ள அந்தச் சுனை கீழே குடைவரையில் அமைந்துள்ள கங்காதரர் சிற்பத்திற்கு நேர்மேலாகவுள்ளது என்பதைக் காணும்போது அச்சிற்பத்தினை வடித்த சிற்பி எத்தனை அர்த்தத்தோடு அந்த சிற்பத்தினைப் படைத்திருக்கவேண்டும் என்பது புரியும். பகீரதனின் தவத்திற்காக விண்ணிலிருந்து கங்கை ஆர்ப்பரித்து இறங்கியபோது தன் ஒற்றைச் சடையில் அவளைத் தாங்கி இப்புவியைக் காத்தவனல்லவா அப்பரமன். இங்கும் மேலே ஆகாச கங்கை மழையாய்ப் பொழிய திருக்கோகர்ண மலை தன்முடி மீது அதனைத் தாங்கி அந்த அண்ணலின் திருமஞ்சனத்திற்கு நீரையல்லவா தருகின்றது.

திருக்கோகர்ணேஸ்வரரின் திருமஞ்சனத்துக்கு மட்டுமல்ல காலங்காலமாக திருக்கோயிலுக்கு வருவோர் அத்தனை பேருக்கும் அந்த சுனையல்லவா அருந்த நீர் தந்து வருகிறது.

செவ்வப்பன் வாரியும்-ஏரியும்

தஞ்சைப் பெரிய கோயில், சிவகங்கைக் குளம் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறிய கோட்டைப் பகுதியை 1535 இல் அமைத்த செவ்வப்ப நாயக்கர் பின்பு 1550 இல் பெரிய கோட்டையையும் அரண் மனையையும் உருவாக்கி தஞ்சையின் முதல் நாயக்க அரசை அமைத்தார். சிவகங்கைக் குளத்து நீர்மட்டும் தான் அமைத்த பெரிய கோட்டைப் பகுதிக்கு போதாது எனக் கருதியவர், சிவகங்கைக்குளத்திற்கு மேற்காகக் கோட்டைக்கு வெளிப்புறம் ஒரு ஏரியை உருவாக்கினார். சுற்று வட்டாரத்தில் 10 மைல் சுற்றளவில் பெய்யும் மழைநீரை ஒரு வாரி மூலம் அந்த ஏரியில் சேமிக்க வழிசெய்தார். அவை முறையே செவ்வப்பன் வாரி என்றும் செவ்வப்பன் ஏரி என்றும் பெயர் பெற்றன.

சுற்றுவட்டாரத்தில் பெய்யும் மழைநீரை ஏரியில் சேமித்த அவ்வரசன் அங்கிருந்து பிரத்தியேகக் கால்வாய் மூலம் அகழியில் கலவாதவாறு சிவகங்கைக் குளத்தில் அந்நீர் வந்து சேருமாறு செய்தான். சோழர்காலத்திலிருந்து சிவகங்கைக் குளத்திற்கு வந்து சேரும் பெரிய கோயில் வளாகத்து நீரும், செவ்வப்பன் ஏரி நீரும் சிவகங்கையில் சங்கமிக்கும். அந்நீரை பூமிக்கு அடியில் அமைத்த சுடுமண் குழாய் அமைப்புகள் மூலமாகத் தஞ்சை நகரத்து நான்கு முக்கிய வீதியில் உள்ள வீட்டுக் கிணறுகள், நகரின் குளங்கள் ஆகிய அனைத்திற்கும் செல்லுமாறு வகை செய்துள்ளான்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நம்மவர்கள் செவ்வப்பன் வாரியைத் திசைதிருப்பி வடவாற்றில் விழுமாறு செய்துவிட்டார்கள். ஏரியைக் குடியிருப்புப் பகுதியாக மாற்றிவிட்டார்கள். இதனால் வாரி நீர் சிவகங்கைக் குளத்திற்குச் செல்ல வாய்ப்பில்லாமல் போய்விட்டது. தஞ்சைப்பெரிய கோயில் வளாகத்து மழைநீர் மட்டுமே சிவகங்கையில் சேகரமாகிறது. இன்றும் சிவகங்கை நீர் பூமிக்கடியில் உள்ள குழாய்கள் மூலம் தஞ்சை நகரில் உள்ள கிணறுகளில் வந்து விழுவதை மழைக் காலங்களில் காணலாம். மழைநீரை சேகரித்ததில் மன்னர்களின் பங்களிப்பையும், நீர்நிலைகளை மாசுபடுத்திக் கெடுத்ததில் நம்மவர்களின் பங்களிப்பையும் வரலாறு என்றும் மறக்காது.

தமிழகம் போற்றும் மாசி மகத்திருநாள்

வெ. இராமமூர்த்தி, எம்.ஏ., பி.எல்.,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை.

மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியினைத் தருவது திருவிழாக்கள். பண்டைத் தமிழர் தம் வாழ்வில் திங்கள் தோறும் திருவிழாக்களை நடத்தி இன்புற்றிருந்தனர். ஊர் ஒன்று கூடி உறவினர்கள் கலந்துரையாடி, இறைவனை வழிபட்டு, திருவிழாக்களை முறையே ஏழு நாட்கள், எட்டு நாட்கள், பதினோறு நாட்கள் நடத்தி இறுதியில் நீராட்டு விழாவினையும் சிறப்புறச் செய்தனர் என்பதற்கு கிடைக்கும் இலக்கியச் சான்றுகளும், கல்வெட்டுச்சான்றுகளும் நமக்கு ஏராளம்.

சித்திரைத் திருவிழா, வைகாசி விசாகம், ஆனிமூலம், ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம், புரட்டாசித் திருவோணம், ஐப்பசி விசு, கார்த்திகை - கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், தைப்பொங்கல், மாசிமகம், பங்குனி உத்திரம், என பன்னிரண்டு நட்சத்திரங்களை மையமாகக் கொண்டு பாங்குடனே விழாவினை நடத்திட்டார்கள்.

இம்மாசிமகநாளில் மாசி மகத்திருவிழாப் பற்றிய கல்வெட்டுச் செய்திகளைக் காண்பது இன்றைய தமிழக மக்கள் இவ்விழாவில் காட்டும் ஆர்வத்திற்கு ஒரு வரலாறு தரும் வகையில் அமைந்திடும். மாசித் திங்களில் மகம் நட்சத்திரம் கூடிய முழுமதிநாளில் கொண்டாடப்படும் விழா மகத்திருவிழா ஆகும். மாசித்திங்களில் வரும் மகத்தன்று இறைத் திருமேனிகளை (சிவன், திருமால்) கடல், ஆறு, குளம் முதலிய நீர்நிலைகளுக்கு எழுந்தருளச் செய்து நீராட்டுவது தொன்மையான ஆகம மரபாகும். இறைவன் மட்டுமல்லாது மனிதர்களும் தங்களது பிறந்த நட்சத்திரத்தன்று புனித நீராடிக் கொள்வதை இன்று ஆகம முறைப்படி நிகழும் மணிவிழா போன்றவற்றில் காண்கிறோம்.

சங்க காலந்தொட்டு இக்காலம் வரையிலும் கல்வெட்டுக்கள் மற்றும் இலக்கியங்களில் நீராட்டு விழா பற்றிய செய்திகள் நமக்கு நிரம்பக் கிட்டுகின்றன. மங்கல நீராட்டுவிழா ''நீரணிவிழவு'' என்று சிலப்பதிகாரத்தில் பேசப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி மருதனார் ''கழுநீர் கொண்ட எழுநாள் ஆந்தி ஆடுதுவன்று விழவின் நாடார்த்தன்றே'' என்று குறிப்பதன் மூலம் ஏழாம் நாள் இறுதியில் நீராடல் விழா அமைந்தது என்று அறிகின்றோம்.

ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த கோக்கரு நந்தடக்கன் எனும் ஆய்குல மன்னன் வழங்கிய செப்பேட்டில் திருமாலுக்கு விழாப்புறமாக ஏழுநாள் திருவிழாச் செய்து பங்குனி விசாகம் ஆறாடுவதாகவும் என்ற குறிப்பின் மூலமும் ஏழாவது நாள் வழக்கில் இருந்தது தெரிய வருகிறது. ஏழுநாட்கள் கொண்டாடப்பட்டு பின்னர் எட்டுநாட்களாகவும் அதன்பின்னர் பதினொருநாட்கள் என்ற வகையிலும் கொண்டாடப்பட்டுள்ளன. மாசிமக நீராடலை ''பிதுர் மாகஸ்நானம்'' என்று மகாபுராண அம்மானை கூறுகிறது. சங்க காலப் பாண்டிய மன்னன் ''முந்நீர் விழாவின் நெடியோன்'' என்று அழைக்கப்படுவதை, ஒன்பதாவது புறநானூற்றுப் பாடலில் காணலாம். முந்நீர் என்பது கடல் நீர் என்று கருதப்படுகிறது. கடல், ஆறு, குளம் ஆகியவற்றின் நீர் முந்நீர் என்று சொல்பவர்களும் உண்டு.

திருஞானசம்பந்தரின் பதிமயிலைப் பதிகம்

> **''மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்**
> **கடலாட்டுக் கண்டான் கபாலீச்சுரம் அமர்ந்தான்''**

என்று கபாலீசுவரரின் மாசிமகக் கடலாடு விழாவைத் தெளிவாகக் காட்டுகிறது.

முதலாம் குலோத்துங்கனது (கி.பி. 1070-1126) தளபதி நரலோகவீரன், சிதம்பரம் கோயிலில் செய்த பணிகளையெல்லாம் அழகான தமிழ்ப்பாடல்களாகவும், சமஸ்கிருதச் சுலோகங்களாகவும் சிதம்பரம் நூற்றுக்கால் மண்டபத்துத் தூண்களில் கல்வெட்டாகப்

மண்டபத்துத் தூண்களில் கல்வெட்டாகப் பொறித்துள்ளான். அவற்றில் ஒரு பாடல்

"மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்
பேசவற்றைப் பெருவழியும் ஈசற்குத்
தென்புலியூர்க் கேயமைத்தான் கூத்தன் திசையணைத்து
மண்புலியாணை நடக்கவைத்து"

என்று மாசிக் கடலாடலையும், அதற்காக அவன் அமைத்த மண்டபம், பெருவழி ஆகியவற்றையும் அது எடுத்துச் சொல்கிறது.

திருச்செந்தூரில் இரண்டாம் வரகுணபாண்டியரின் (கிபி 862) மூன்று அதிகாரிகள் 1400 காசினை மூலதனமாக வைத்து அங்கு பல விழாக்கள் நடத்த வகை செய்துள்ளனர். அவற்றில் ஒரு விழாவாக மாசிமகம் குறிக்கப்பட்டுள்ளது. இதுவே கல்வெட்டுகளில் காணப்படும் தொன்மையான மாசிமக விழா எனலாம்.

முதலாம் இராசராசனின் காலத்தில் (கி.பி. 1009) திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறை மகாதேவர்க்கு மாசிமகத்தன்று பெருந்திருவமது படைக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒன்றரை மா அளவு நிலம் நல்கப்பட்டு இரண்டு கல அரிசி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இராசேந்திர சோழனின் 4ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1016) நாகப்பட்டினக் கூற்றத்து ஊரார்கள் இறைவனது மாசி மகவிழாவின் ஆறாம் நாள் செலவுகளுக்காக நிலமளித்த செய்தி அவ்வூர்க் கல்வெட்டால் அறியமுடிகிறது. விழாவின் ஒரு நாள் செலவை, குறிப்பிட்ட ஊர் மக்கள் ஏற்றுச் செய்வதும் அதற்காக நிலம் ஒதுக்குவதும் பண்டைத் தமிழகத்தில் விழாக்கள் எந்த அளவு சிறப்பாகவும், அளவில் பெரியதாகவும், இடைவிடாதும் நிகழ்ந்தன என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) ஏழு நாள் கொண்டாடப்பட்ட மாசித் திருநாளின் போது இறைவன் மோகனதேவருக்கு நாள் ஒன்றுக்கு பதின் கலமாக எழுபது கலம் நெல் தானமாக அளித்திடும் வகையில் பாலையூர்கிழவன் நாரணன்காடன் நிலம் தந்துள்ளான். மேலும் அவனே இரண்டு ஆண்டுகளுக்குப்பின் மாசிமகத்துக்கு பெருந்திருவமது இறைவனுக்குப் படைத்திட வேண்டி இன்னும் கூடுதலாக நிலமளித்துள்ளான்.

மாசிமகவிழா சிவபெருமானை மையமாகக் கொண்டே நிகழ்ந்துள்ளது. எனினும் திருவரங்கத்தில் கி.பி 1531ஐச் சார்ந்த விஜயநகர் காலக் கல்வெட்டு உறையூரில் நடைபெற்ற மாசிமக விழாச் செய்தியைச் சொல்லுகிறது. இதனை

"தம்முடைய கைங்கரியமாக உறையூர்
வல்லிநாச்சியார் உத்ஸவபேரமும் எழுந்தருளுவித்து"

"பெருமாள் கிருஷ்ணராயர் கட்டளையான
மாசி எட்டாந் திருநாளில் எழுந்தருளும்படிக்கு
உறையூர் நாச்சியார் தோப்பாக"

என்ற கல்வெட்டு வரிகளின் மூலம் தெளிகின்றோம்.

மாசி மகவிழாவின்போது தெய்வங்கள் நீராடுவதும் அதன் பிறகு அருகில் அமைக்கப்பட்ட மண்டபம், தோப்பு ஆகியவற்றில் காட்சி தருவதும் அத்தெய்வங்களுக்கு ''பெருந்திருவமிர்து'' படையல் படைக்கப்படுவதும் மரபு என்று மேற்சொன்ன கல்வெட்டுச் செய்திகள் விளக்குகின்றன. குடுமியான் மலையில் உள்ள குலோத்துங்கன் மற்றும் பரகேசரி பட்டமுடைய மற்றொரு சோழமன்னன் ஆகியோரது கல்வெட்டுக்கள் மாசி மகநாளில் சிவனடியார்களுக்கு (மாகேஸ்வரர்) உணவு வழங்க 15 கழஞ்சு பொன் முதலாக வழங்கப்பட்டதைக் கூறுகின்றன.

இதைப்போல திருச்செங்கோட்டிலும் சோழர்காலத்தில் உத்தமன் கணவதி என்பான் 26 கழஞ்சு பொன் கொடுத்து மாசிமக நாளில் சிவனடியார்களை உண்பிக்கச் செய்துள்ளான். இவ்வாறு இறைவன் தீர்த்தமாடலும், வீதிவுலா, தேர் உலா வருகின்ற நிகழ்ச்சியும் நெடுங்காலமாக நடைபெற்று இன்றும் பல இடங்களில் நிகழ்ந்தும் வருகின்றன. இந்நிகழ்ச்சிகள் ஏன் உருவானது என்று நினைக்கும் போது ஊர் மக்கள் ஒற்றுமையோடும், மகிழ்ச்சியோடும் ஒன்றுபடுதலுக்கும், வயதில் முதிர்ந்தோர், நோய்வாய்ப்பட்டோர், ஊனமுற்றோர், அன்றைய

சமூக நீதி காரணமாக கோயிலுக்குள் வரஇயலாதோருக்கும், இறைவன் தானே உலா எழுந்தருளி அவர்கள் எல்லோருக்கும் காட்சியளிக்கும் நல்லெண்ணமாகவும் இவ்விழாக்கள் உருப்பெற்றனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. மாசிமகவிழாவின் போது இறைவனுக்கு மட்டுமல்லாது, அடியார்களுக்கும் உணவு வழங்கப்பட்டதை நாம் கவனிக்க வேண்டும். கால வெள்ளத்தில் இவ்வழக்கு மெல்ல மறைந்தபோதிலும் நாம் இன்று நலிந்தோருக்கு இவ்விழாநாளில் உணவளித்து பண்டைய விழாக்களின் நோக்கத்தை ஈடுசெய்வோமாக.



ஏட்டுச்சுவடிகளில் குடந்தைப் புராணம்

திருமதி. ச. திலகம், பி.லிட்., சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

*''அம்பிகைபாலா அரனார் திருக்குமரா
நம்பினோர்க் கருள்கண நாதா - கும்ப
கலசத்தாலுற்பவித்த குடந்தை நகர் பெருமை
உலகத்தி லுரைக்கத் துணைவா''*

புண்ணிய பாரதத்தில் புனிதக் கோயில்கள் நிறைந்தது நம் தமிழ்நாடு. தமிழ்நாட்டில் கும்பகோணம் என்று அழைக்கப்படும் திருக்குடந்தை நகரில் சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்களுமாகப் பல திருக்கோயில்கள் அமைந்துள்ளன. அக்கோயில்களுள் அருட் சிறப்புடைய திருக்கோயில்கள் சிலவேயாகும்.

குடந்தை நுண்கலைகளின் தாய் வீடாகும். கல்லிலும், செம்பிலும் சிலை வடிப்போர், கடவுள் உருவம் செய்வோர் வாழும் திருவிடம். ஓவியம் ஆட்சி செய்யும் ஓவிய நாளோலக்கம். காவியப் புலவரும், ஓவியப்புலவரும் ஒருங்கு கூடுமிடம். கலைஞரும், அறிஞரும், வணிகரும், செல்வரும் சேருமிடம். குடந்தை நலம் திகழ் திருநகர். ஆயகலைகள் செழிக்கும் அழகு நகர். தெய்வ மணம் சிறக்கும் கோயில்கள் நகர். எத்திக்கிருந்து நோக்கினும் கும்பம் தெரியும் ஒரே நகர். காவிரி புரக்கும் கவின் நகராகும். பல்லவர்களால் புகழ் பெற்ற காஞ்சி, கோயில் மிகுந்த நகரமாகத் திகழ்வது போல, சோழப் பேரரசர்களால் குடந்தை கோயில் நிரம்பிய நகரமாகத் திகழ்கிறது. இன்றும் என்றும் கூட உலகை ஆளுவேன் என்று ஆன்மீகச் செல்வத்தில் இந்த ஊர் தலைதூக்கி நிற்கிறது. ''வானுயர் கோபுரங்கள் எம் வரலாற்று முத்திரை'' என்று தத்துவப் பெருமை பேசுகின்றன. இக்குடந்தை மாநகரம் மொத்தத்தில் ஓர் அருங்காட்சியகமாகும் என்று கூறும் அளவுக்கு விஞ்சி நிற்கிறது.

இத்துணைச் சிறப்புவாய்ந்த குடந்தை திருநகரத்திற்குத் தல புராணங்கள் பல உள்ளன. அவற்றில் புகழ்பெற்ற தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் ''கும்பகோணப்புராணம்'' என்ற பெயரில் மூன்று சுவடிகளும், ''கும்பகோண க்ஷேத்திர மகாமகத் தீர்த்தச் சிறப்பு'' என்ற பெயரில் ஒரு சுவடியும் உள்ளது. இச்சுவடிகள் நூலகத்தின் தமிழ்த் துறையில் M.No.283; M.No.284; M.No.114 (a); M.No.803 (j) என்ற எண்களைக் கொண்டுள்ளன. இவற்றிலேயே ஒரு சுவடிக்கு, மற்றொரு சுவடி அத்தியாயம், சருக்கங்கள் மாறுபட்டுள்ளன. முதலில் M.283-இல் கூறப்பட்டுள்ள செய்திகளின் சுருக்கம்.

இந்நூலில் தலமகிமை, அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன் ஆசிரியர் சகஜி மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் என்பதும், ஆசிரியர் பெயர் தொண்டை நாட்டு அரசூர் சொக்கப்புலவர் என்பதும் பின்வரும் பாடலால் அறியலாம்.

''கொண்டல்கண் டுயிலுஞ் சோலைக்
குடந்தையிற் பலரு மேவத்
தண்டமிழ்ப் பனுவல் வெற்றித்
தாரைவேற் றானை மன்னன்
மண்டல் புரக்குஞ் செங்கோண்
மனுநிகர் சகசி வாழ்நாள்
தொண்டை நாட்டரைசு சொக்க
னரசவை சொற்ற தன்றே''.

இந்நூலில் கூறப்பட்டுள்ள அத்தியாயங் களாவன :

1. நைமிசாரணியச் சருக்கம்
2. திருக்கைலாசச் சிறப்புரைத்தவத்தியாயம்
3. கும்பகோணச் சிறப்புரைத்தவத்தியாயம்
4. சிவபூசை உபகரணங்கூறியவத்தியாயம்
5. சிவபுண்ணிய முரைத்தவத்தியாயம்

6. கிருதகம்பளவிதி கூறியவத்தியாயம்

7.சீதகும்பமுமதில் பூசைமுரைத்தவத்தியாயம்

8. சிவநாம மகிமையுரைத்தவத்தியாயம்

9. வாணலிங்க மகிமையுரைத்தவத்தியாயம்

10. வேடன் கதிபெற்றவத்தியாயம்

11. வாணலிங்கபூசை மகிமை கூறிய வத்தியாயம்

12. பதிநிர்ணயங்கூறிய வத்தியாயம்

13. வாணலிங்க தெரிசனவத்தியாயம்

14. சிவயோக விரதமுரைத்தவத்தியாயம்

15. சிவசரித்திரங் கூறியவத்தியாயம்

16. அபராதங்கூறியவத்தியாயம்

17. விபூதி மகிமை கூறியவத்தியாயம்

18. கலிவிடம்பனத்தியாயம்

19. காசியின் சிறப்புரைத்த வத்தியாயம்

என்பவையாகும். ஏடுகள் மிகச்சிதிலமாகச் சிதைந்த நிலையில் உள்ளன.

இப்புராணத்தின் மற்றொரு பிரதியான M.No.284-ஐ எண்ணாகக் கொண்ட கும்பகோணப் புராணச் சுவடியில் தலமகிமை, சருக்கங்களாகக் கூறப்பட்டுள்ளன.

இச்சருக்கங்களின் எண்ணிக்கை முதல் பெயர்கள் உட்பட முந்தைய புராணச் சுவடியினின்றும் முற்றிலும் வேறுபட்டுள்ளன. இதன் ஆசிரியர் அகோரமாதவர் என்பவர். இதன் செய்யுட்தொகை 1118 என்பதாம். இச்சுவடியில்,

1. கும்பகோணச்சிறப்புரைத்த சருக்கம் 113 பாடல்கள்
2. ஆதிகும்பேசச் சருக்கம் - 42 பாடல்கள்
3. பொற்றாமரைச்சருக்கம் - 13 பாடல்கள்
4. மாந்தாதாச் சருக்கம் - 34 பாடல்கள்
5. சத்தியகீர்த்திச் சருக்கம் - 20 பாடல்கள்
6. சோமநாதச் சருக்கம் - 45 பாடல்கள்
7. நாகநாதச் சருக்கம் - 79 பாடல்கள்
8. மடந்தை பாகர் திருநடவுரைத்த சருக்கம் - 535 பாடல்கள்
9. பாற்கரதீர்த்தச் சருக்கம் - 14 பாடல்கள்
10. காரோணச் சருக்கம் - 63 பாடல்கள்
11. அமுத்தீசுரச் சருக்கம் - 2 பாடல்கள்
12. மகாமக நியமச்சருக்கம் - 39 பாடல்கள்
13. ஆராவமுதச் சருக்கம் - 119 பாடல்கள்

என்ற பதிமூன்று சருக்கங்கள் உள்ளன.

மேலும், ''கும்பகோண க்ஷேத்திர மகாமகச் சிறப்பு'' என்ற சுவடி (M.No.803 j) உள்ளது. அச்சுவடியில் மூன்று ஏடுகளே காணப்படுகின்றன. முழுமையுடையதாக இல்லாமல் அபூர்த்தியாக உள்ளது. இதில் புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, கோதாவரி, காவேரி என்னும் நதிகளுக்கு உள்ள வேறு பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அப்பெயர்கள் வருமாறு.

கங்கையின் திருநாமம்

திரிபதகை, சீமதி, சாநவி, வீட்டுமமாதா, உலோகமாதா, சுவாத்துநீ, மேருசம்பவை,

திரிலோகதேவி, பூதை, சத்தாராசு, பாவகை எனப் பதினொன்றாம்.

யமுனையின் திருநாமம்

சூரிய சம்பூதை, காளிந்தி, யமசுவசா, சுத்தை, காமதை, சாந்தை, அநந்தை, சுபாங்கிணி, வசுப்பிரதை, வசுமதி, வசுப்பிரீதை எனப் பதினொன்றாம்.

நருமதையின் திருநாமம்

சோமோற்பவை, சோமுகி, சோமகேசரப் பிரியை, மருமரூபி, சுமாமார்த்தநிதரிசநி, சுபப்பிரபை, சுலபுண்யை, இரேவை, கீர்த்திமேகக்கன்னிகை, சருவநதியை எனப் பதினொன்றாம்.

சரசுவதியின் திருநாமம்

சாந்தனவை, சமரூபி, ஞானரூபி, அஞ்ஞானவிபேதிநி, மேருகோடாசம்பூதை, மேகநாதாவிர்த்தநி, பிரதீசி, சண்டீவகாட்டியை, மாயாவி, சேதகாரணி எனப் பதினொன்றாம்.

கோதாவரியின் திருநாமம்

கோதை, கௌதநாநி, நிருத்தசுரோதை, சத்தியவதி, சத்தியரூபி, சுவாசிநி, சலபை, சூக்குமதே காட்டியை, மலர்பகை, பத்தவிட்டதை எனப் பதினொன்றாம்.

காவிரியின் திருநாமம்

விதிசம்பூதை, கல்யாணி, காமதாயிநி, கலியாண தீர்த்தவி, சையாசல உற்பவை, உலோபா முத்திரை என்பனவாம்.

மேலே கூறப்பட்ட ஏட்டுச்சுவடி முழுமையானதாக இல்லாவிட்டாலும், பிற இடங்களில் கிடைத்துள்ள சுவடிகள் வாயிலாக சிந்து, சரயு, தாமிரபரணி ஆகிய நதிகளுக்குரிய பிற பெயர்கள் பற்றி அறியமுடிகிறது.

சிந்துவின் திருநாமம்

கன்னியாநதி, கனகாயை, சுருச்சை, கலாவதி, காமதை, காமப்பிரியா, வரப்பிரதை, காளி, காமப்பிரதை, காலதாயினி, கடாகவை.

சரயுவின் திருநாமம்

சண்டவேகாட்டியை, இட்சுவாகு குலவல்லபை, இராமப்பிரியை, சுபாராமதடத்து, வயவிராசிதை, சரப்பிரவிருத்தை, எக்யாங்கை, எக்கியபவதாயினி, சீரங்கவல்லபை, மேகதாயினீ, பூரணகாமதை, பத்தவிட்டதான சவுண்டீரை.

தாமிரபரணியின் திருநாமம்

பாபதூரிணி, பலகை, பரிமோதினி, பூரணை, பூர்ணவதி, மோகை, மோகாவதி, சுமைசுந்தரி, வேகவதி, வேகை, சர்வேச்சிற்பலப்பிரிதை.

இனி, இந்நதிகளில் மாகமகத் தினத்தன்று நீராடுதலின் சிறப்பைக் காண்போம்.

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினார்க்குஓர்வார்த்தை சொலச்
சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்ற தாயுமானவரின் வாக்கால் அறியலாம். பல்வேறு தீர்த்தங்களில் மிகப்பெரிய பயன்கள் கிடைத்ததாகத் தலபுராணங்கள் கூறுகின்றன. அதிலும் மாசி மகக் கடலாட்டுமுறை அக்காலம் முதல் இருந்திருக்கிறது என்பதை,

''மாசிக் கடலாட்டுக் கண்டான் கபாலீச்
சரம் அமர்ந்தான்''

என்ற ஞானசம்பந்தர் பாடலால் அறியலாம்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மகாமகம் என்பது தான் மருவி மாமாங்கம் என்று ஆகி இருக்கிறது. அகம் என்றால் பாவம் என்று ஒரு பொருள் உண்டு. மா என்றால் அனுகாது என்று பொருள். எனவே, மாஅகம்=மாகம் (மாமகம்-மிகப்பெரிய பாவ நீக்கம்).

பொதுவாக ஒருவரின் பாவம், புண்ணிய தீர்த்தத்திலே போகும். புண்ணியத் தலங்களில் பிறந்தோர் செய்த பாவம் காசியில் கங்கை நீராட்டினால் போகும். காசியிற் பிறந்தோர் செய்த பாவம் குடந்தையிற் போகும். இப்படி ஒவ்வோர் ஊரிலும் பாவநீக்கம் கூறினாலும் குடந்தையிற் பிறந்தோர் செய்த பாவம் மகாமகத்குளத்திலே குளித்தால் போய் விடுமாம். இப்படி ஒரு வடமொழிச் சுலோகம் கூறுகிறது.

''கும்பகோணக்ருதம் பாவம்
கும்பகோணே விநச்யதி''

என்பது அச்சுலோகத்தின் கடைசிப் பகுதியாகும்.

இதற்குச் சான்றாக ஒரு புராண வரலாறும் உண்டு. உலகத்தவரெல்லாம் தாம் செய்த பாவங்களைப் போக்கிக் கொள்ள, கங்கை முதலிய தீர்த்தங்களில் நீராடி வருகின்றார்கள். அவ்வாறு கழிக்கப்பட்ட பாவங்களையெல்லாம் கங்கை முதலிய கன்னிகைகள் நாள்தோறும் சுமந்து சுமந்து, சுமை தாங்கவியலாமல் வருந்தி அப்பாவச் சுமையைப் போக்க விரும்பினார்கள். ஒருநாள் கங்கை, யமுனை, நர்மதை, சரஸ்வதி, கோதாவரி, காவேரி, துங்கபத்திரா, கிருஷ்ணா, சரயு என்னும் ஒன்பது கன்னிகைகளும் கயிலைக்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டுக் கொண்டார்கள்.

சிவபெருமான், ''தென்னாட்டில் உள்ள கும்பகோணத்தில் தென்கிழக்குத் திசையில் ஓர் தீர்த்தமுண்டு. குருபகவான் சிம்ம ராசியில் நிற்க சந்திரபகவான் மாசி மாதத்தில் மக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் படியான மகாமகத் தினத்தன்று அத்தீர்த்தத்தில் நீராடுங்கள். உங்களுடைய பாவச் சுமைகள் நீங்கும்'' என்று கூறியருளினார்.

அதைக் கேட்ட நவகன்னியர்கள் ''எம்பெருமானே! அத்தலம் எங்குள்ளது? நாங்கள் அறியோம், தாங்கள் வழிகாட்டவேண்டும்'' என்று வேண்ட, எம்பெருமான், ''கன்னியர்களே நீங்கள் காசித்தலத்தில் தங்கி இருங்கள். அங்கே விசுவேசர் என்ற திருப்பெயருடன் யாமே தோன்றி அழைத்துப் போகின்றோம்'' என்று கூறியருளினார்.

அவ்வாறே நவகன்னியர்கள் காசியில் தங்கியிருக்க இறைவனும் விசுவேசர் என்னும் திருப்பெயரில் எழுத்தருளிவந்து அவர்கட்குக் காட்சி தந்து அவர்களை உடன் அழைத்துக் கொண்டு கும்பகோணம் வந்து ஆதிகும்பேசுவரரையும் மற்றும் பல திருக்கோயில்களையும் காண்பித்து வழிபடச்செய்து மகாமகக் குளத்தின் வடகரையில் கோயில் கொண்டு எழுந்தருளினார்.

கங்கை முதலிய நவகன்னியர்கள் அன்றிரவே சென்று மகாமகக் குளத்தில் வேத விதிப்படி மந்திரம் முதலியன செய்வித்து, துறைதோறும் நீராடினார்கள். நீராடி முடிக்கும் பொழுது, பொழுது விடிந்துவிட்டது. அதனால் தேவாம்சம் பொருந்திய அவர்கள் தேவலோகம் திரும்பமுடியவில்லை. உடனே காசியிலிருந்து வந்து விசுவேசர் எழுந்தருளிய திருக்கோயிலுக்குச் சென்று, அப்பெருமானிடம் விண்ணப்பித்தார்கள். தங்களுக்கு அடைக்கலம் கேட்டார்கள். அதனால் விசுவசேர் தமது காயத்துள் அந்நவகன்னியர்களை ஆரோகணம் செய்து கொண்டதால் இத்தலம் காயாரோகணம் என்று பெயர் பெற்றது.

இங்கு நீராடுவது மட்டுமின்றித் தானம் வழங்குவதும் மரபாக இருந்திருக்கிறது. இப்படித் தானம் வழங்குதலில் சிறப்பானது பொன்னைத் தானம் செய்வதேயாகும்.

சூரியனால் தான் பூமிக்குக் காந்த சக்தி வருகிறது. பொன்னிறமான குருபகவான் சிம்ம ராசியில் இருக்கும் பொழுது, சூரியன் தன் வீட்டில் பொன்கதிர் வீசப்பெறுவதையறிந்து தான் காந்த சக்தியை வெளியிடுகிறார். இதனால் சூரியனுக்கு ''ஹிரண்யகர்பன்'' என்றும் பெயராகும். ஹிரண்யம் என்றால் பொன்னாகும். இதனால் பொன்னை அன்று தானம் செய்யும் மரபு தோன்றியது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த தமிழகக் கோயில்களை முன்புபோல் இனிமேல் யாரும் உருவாக்க இயலாது. இத்திருக்கோயில்களைப் போற்றுவோர் ஒரு சமுதாய முதுகெலும்பை வளப்படுத்துகிறார்கள் என்றே கூறலாம். எனவே கலை, பண்பாடு, வரலாறு ஆகியவை பொதிந்துள்ள திருக்கோயில்களைக் காக்க முயல்வோம்.



கும்பேசமும் கோணேசமும்

சாஹித்ய சிரோமணி எஸ். இராஜலக்ஷ்மி, M.A.,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

மகாபிரளய காலம் முடிந்து மீண்டும் உயிர்கள் அனைத்தையும் தோற்றுவிக்க பரமேஸ்வரன் அமிர்தகுடம் ஒன்றைத் தோற்றுவித்தார். படைப்புக் காலம் வந்தபோது ஊழிக்கால வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த அந்தக்குடம் மூன்றாக உடைந்து முகபாகம் குடத்தின்வாய் தங்கிய இடம் கோணேசம் ஆயிற்று. ஆங்கே தான் கோணேசர் அருள்பாலிக்கிறார். நடுப்பாகம் கும்பகோணத்திற்கு மூன்றுமைல் தென்கிழக்கேயுள்ள கலயநல்லூரில் தங்கியது. அங்கு சுவாமி அமிர்தகலசநாதராக அமிர்தவல்லி அம்பாளுடன்கோயில் கொண்டுள்ளார். அடிப்பாகம் தங்கிய கும்பேசத்தில் கும்பேச்வரராக மங்களாம்பிகாவுடன் திருக்கோயில் கொண்டார். கோணேசமும், கும்பேசமும் அமிர்தகலசம் உடைந்தபோது தோற்றம் பெற்ற தலங்களாகும். இவை முறையே கும்பகோணம் கும்பேசர் கோயிலும், குடவாயில் கோணேசர் கோயிலும் ஆகும்.

மகாமகப்புராண வரலாற்றோடு தொடர்புடைய குடவாசல் கோணேசர் ஆலயத்தின் புராணப் பெருமையை விளக்கும் அரிய ஏட்டுச்சுவடி ஒன்று தஞ்சை அரண்மனை சரசுவதி மகால் நூலகத்தில் மன்னர்கள் காலத்தில் இருந்து பாதுகாக்கப்பெற்று வருகின்றது. சம்ஸ்கிருத மொழியில் கிரந்த எழுதுக்களில் எழுதப்பெற்ற இந்த சுவடி கோணேஸ்வர மாஹாத்மியம் என்ற பெயரால் விளங்குகின்றது. அம்மான்மியம் கூறும் செய்திகளை இனிக் காண்போம்.

கோணேஸ்வர மான்மியம்

நல்ல ஒளியுள்ளவராயும் இந்திரன் முதலிய தேவர்களால் வணங்கப்பட்டவராயும் ஸ்ரீ பார்வதி தேவியின் மகனாயும் யானைமுகத்தை உடையவருமான ஸ்ரீவினாயகப் பெருமானின் துதியுடன் இந்த மான்மியம் தொடங்குகிறது.

சௌனக மகரிஷி, சூதபுராணிகரைப் பார்த்து ''எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவிப்பதும் எல்லா உலகங்களைக் காட்டிலும் மிகப் பரிசுத்தமானதும், எல்லா பாபங்களையும் போக்கக் கூடியதும், எல்லாஐஸ்வர்யங்களையும், கொடுக்கக் கூடியதும், மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதும், தவத்திற்கு பயனளிக்கக் கூடியதும், மூன்று விதமான தாபத்தையும் போக்கக் கூடியதும், தேவர்களாலும், ரிஷிகளாலும் சேவிக்கக்கூடியதும், பல புண்ணிய தீர்த்தங்களால் சூழப்பட்டதுமான க்ஷேத்திரம் ஒன்று இருக்கு மேயானால் அதை நீங்கள் தான் சொல்லவேண்டும். ஏனெனில், நீங்கள் பதினெண் புராணங்களையும் அறிந்தவர்கள் அன்றோ கருணை நிறைந்த தாங்கள் என்மேல்கருணை வைத்து கும்பகோணம் மாஹத்மியத்தில் சுருக்கமாகக் கும்பத்திடைய காரணத்தையும் விசேஷமாக கோணத்தின் மகிமையைப் பற்றியும் சொல்லப் பட்டதைத் தாங்கள் விஸ்தாரமாகக் கூறவேண்டும்'' என்று கேட்டார்.

பார்வதி தேவி, அமிர்தம் என்ற புண்ணிய ஸ்தானத்தில் வாசம் செய்து சிவபெருமானை அடைந்தாள். பிரம்மன் முதலான தேவர்களும் அத்திருத்தலத்தில் வசித்து இன்புற்றனர். அத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தைப் பற்றி கோணேசரின் அருளால் எடுத்துக் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள் என்று கூறிய சூதபுராணிகர், ''பிரளய காலத்தில் உலகத்திற்கு முக்கியக் காரணமான அமிர்தம் நிறைந்த குடம் நீரின் நடுவே மிதந்து வந்தது. அது தெய்வ வசத்தால் அடிப்பாகம், நடுப்பாகம், வாய் என்று மூன்று பாகமாகி ஒவ்வொன்றும் லிங்க ரூபமாக அமைந்தது. கும்பத்தின் அடிப்பாகம் கும்பேசம் ஆயிற்று. அக்கும்பத்தின் வாய் பாகம் நிலைபெற்ற தலம் கோணேசம் என்றாயிற்று'' என உரைத்தார்.

உடன் பர்னாசனரும், '' மோக்ஷமடைய விரதானுஷ்டானங்கள் தவிர ஏதாவது சுலபமான வழி இருக்குமானால் அதைக் கூறுங்கள்'' என்று கேட்க, சூதபுராணிகரும், ''மோக்ஷமடைய சுலபமான வழி தீர்த்தயாத்திரை செல்வதேயாகும். யாத்திரை மேற்கொண்டு புண்ணிய தீர்த்தத்தில் முறைப்படி ஸ்நானம் செய்து, தலத்துறை நாதனைத் தரிசித்து வணங்கி, வலம்வந்து தானம் பல புரிவாயாக'' என்று கூறினார். அதைக்கேட்டு மகிழ்ச்சியுற்ற திருணாசனர் தீர்த்தயாத்திரையை மேற்கொண்டார். அதனடியாக நைமிசாரண்யத்தை அடைந்து, அங்குள்ள சிவபெருமானை வணங்கித் தோத்திரத்தால் மகிழ்வித்து பின்னர்கயை, புஷ்கரம், வேகவதி முதலிய தீர்த்தங்களுக்குச் சென்று நீராடி, ஆங்காங்கே அருள்பாலிக்கின்ற இறைவனைத் தொழுதார். திருணாசனர் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும் விபரீத எண்ணங்கள் மறையாது இருப்பன எண்ணி மனம் வருந்திய சமயம், நாரத முனிவரைச் சந்திக்கும் பேற்றை அடைந்தார். நாரத முனிவரிடம், பெரியோரே நான் மோக்ஷத்தை விரும்பி பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடினேன். இந்த சுதாதீர்த்தத்தின் பெருமையைக் கேட்டு, விபரீத எண்ணங்களிலிருந்து விடுபட ஸ்நானத்திற்காக இங்கு வந்துள்ளேன். க்ஷேத்திரபாலகரை வணங்கி, தீர்த்தத்தில் நீராடிய பொழுதும் விபரீத எண்ணங்கள் மறையவில்லை. இதற்கு என்ன காரணம்? மாய வாழ்க்கையில் இருந்து விடுபடுவது எப்படி? நிழலைத் தேடிச் சென்று பனை மரத்திற்கு அடியில் தங்கியவனுக்கு, பனையின் பழம் விழுந்து தலை நொறுங்கியது போல, மோக்ஷம் வேண்டிச் சென்ற எனக்கு இக்கதி ஏற்பட்டுள்ளது என அங்கு வந்த நாரதரிடம் திருணாசனர் கூறினார். அதைக் கேட்ட நாரதர், ''திருணாசனா ! மனம் கலங்காதே; காரணம் உரைக்கின்றேன், கேட்பாயாக. இந்தக் கோணேஸ்வர க்ஷேத்திரத்தில் உனக்கு மோக்ஷம் ஏற்படப்போகிறது. இதில் சிறிதும் ஐயமில்லை. முதலில் சுதாகுண்டத்தில் ஸ்நானம் செய்து கோணேஸ்வரரைத் தரிசித்து, பிறகு கும்பேசப் பெருமானையும் தரிசித்த மனிதன் மாய வாழ்க்கையில் இருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைகிறான்.

புண்ணியம் செய்தவர்களுள் சிறந்தவரே ! உம்முடைய பாவம் போவதற்குப் பிராயச்சித்தம் சொல்கிறேன். கோணேச்வரப் பெருமானின் வடக்குத் திக்கில் பாபத்தின் மூலகாரணத்தை அழிக்கக்கூடிய அக்னிகுண்டம் என்ற மகிமை வாய்ந்த புண்ணியத் தீர்த்தம் உள்ளது. அதில் ஸ்நானம் செய்த மாத்திரத்தில் அறிந்தும் அறியாமலும் செய்யப்பட்ட எல்லா பாபங்களும் அழிந்துவிடுகின்றன. இதில் சந்தேகமில்லை என்பதாய் திருணாசனருக்கு உபதேசித்து வைகுண்டம் போய்ச் சேர்ந்தார்.

நாரதர் சென்றவுடன், திருணாசனர் அக்னி குண்டம் ஏறி நீராடி, விபரீத எண்ணங்களிலிருந்தும் மாய வாழ்க்கையிலிருந்தும் விடுபட்டு ஸாயுஜ்யம் அடைந்தார்.

இவ்வாறு மகாபாபங்களையும் போக்கக் கூடிய சிறப்புடைய கோணேச க்ஷேத்திர மஹாத்மியத்தை கேட்பவர்கள் சிவலோகத்தை அடையப்பெறுவார்கள். கோணேஸ்வரம் மோக்ஷத் திற்கு முகத்துவாரம் ஆகும். கால பேதத்தால் அமிர்தகுடத்தினின்றும் பெருகிய அமிருதமானது இந்த க்ஷேத்திரத்தின் ஓர் இடத்தில் தங்கி, அதுதான் சுதாகுண்டம் என்ற புஷ்கரணி ஆயிற்று அந்த புஷ்கரணியில் நீராடுபவர்கள் உயர்ந்த நிலையை அடைவார்கள். இந்த சுதா குண்டத்தின் அருகில் இந்திரன் முதலிய தேவர்கள் வசிக்கிறார்கள். அக்குண்டத்தின் கீழ்க்கரையில் உள்ள மேற்கு முகமாக அமைந்துள்ள சிவபெருமானை தரிசிக்

கிறவர்கள் பல நன்மைகளை அடைவார்கள். சுதா குண்டத்தைப் பார்த்தவர்கள், அதன் ஜலத்தைத் தொட்டவர்கள் எல்லா பந்தங்களில் இருந்தும் விடுபடுகிறார்கள். இத்தகைய க்ஷேத்திரத்தில் வசிக்கின்ற வேதியருக்கு சுவர்ண (தங்கம்) தானம் செய்தால் பிள்ளைப்பேறு முதலியன கிட்டப் பெற்று நூறாண்டு காலம் வாழ்ந்தபின் சிவலோக ப்ராப்தி கிட்டும். சுதாகுண்ட ஸ்நானமும் இந்த க்ஷேத்திரத்தில் புரியும் முக்கடன்கள் ஆகியன மோக்ஷப்பயனை அளிக்கும். ஆகையால் கோணேஸ்வர க்ஷேத்திரத்திற்குச் செல்வதும், கோணேசரை வழிபட்டு, கும்பேசரை தொழுதடி பணிவதும், பெறற்கரிய பேற்றினைப் பெற்றுத்தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கும்பகோணம் இராமசுவாமி கோயில் ஒரு சிற்பக் கலைக்கூடம்

முனைவர். த. சந்திரகுமார்
சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கும்பகோணத்தின் பழம்பெரும் பெயர் குடமூக்கு என்பதாகும். அமுதகுடம் வந்து தங்கிய தலம் என்று புராணங்கள் கூறுகின்றன. பாம்பணையில் படுத்துக் கிடந்த பரந்தாமன் குடமூக்கைத் தேடிவந்து கோயில் கொண்டான் என்று ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பூதத்தாழ்வார் பாடினார்.

''படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணை மேல் சேர்ந்தாய் குடமூக்குக் கோயிலாய்க் கொண்டு'' என்று பாடுகிறார். இப்பதி தேவாரத்தில் குடந்தை என்றும், ஆழ்வார் பாசுரங்களிலும் குடந்தை என்றும் வழங்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

இந்த பழம்பெரும் பதியைப் பற்றி பெரியாழ்வார் (திருமொழி), திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி), திருமழிசையாழ்வார் (திருச்சந்தவிருத்தம்), ஆண்டாள் (நாச்சியார் திருமொழி), பூதத்தாழ்வார் (இரண்டாம் திருவந்தாதி), பேயாழ்வார் (மூன்றாம் திருவந்தாதி), நம்மாழ்வார் (திருவாய்மொழி) போன்றவர்கள் தங்கள் பாசுரங்களில் பாடி களிப்புறுகின்றனர். இப்பதியில் திகழும் வைணவத்திருக்கோயில்களுள் ஒன்றாக இராமசுவாமி திருக்கோயில் திகழ்கின்றது.

இராமசுவாமி கோயிலை ஒரு சிறு ''இராமாயண அருங்காட்சியகம்'' என்றே கூறலாம். இராமாயண நிகழ்ச்சிகள், கண்ணனின் லீலைகள் போன்ற பல அழ்கான சிற்பத் தொகுப்புகளாக உள்ளன. ஐந்து நிலைகளைக் கொண்ட இராஜகோபுரத்தை அடுத்துள்ள அலங்கார மண்டபத் தூண்கள் அனைத்திலும் நான்கு பக்கங்களிலும் சிற்பங்கள் உள்ளன. 62 தூண்களில் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வடக்கு நோக்கிய கருவறையில் மூலவர் இராமர்-சீதை பீடத்தில் அமர்ந்திருக்க, பரதன் குடை விரிக்க, இலக்குவன் அஞ்சலி பந்தத்துடன் நிற்கவும், சத்ருக்கனன் வெண்சாமரம் வீச, அனுமன் கையில் வீணையையும், சுவடியையும் ஏந்தியிருக்க அனைவரும் எழுந்தருளியுள்ளனர். இவை நல்ல கம்பீரமான கற்சிற்பங்கள் ஆகும். பங்குனி மாதத்தில் வரும் ஸ்ரீராமநவமி அன்று உத்ஸவம், வீதிஉலா போன்றவைகள் நடைபெறுகின்றன. இங்கு கோதண்டராமர் செப்புத்திருமேனியும் உள்ளது.

கி.பி.1600 - 1645 வரை தஞ்சையை ஆட்சி செய்த நாயக்க அரசர் இரகுநாத நாயக்கரால் இக்கோயில் எடுக்கப்பெற்றது. ஸ்ரீராமன் எனும் விஜயநகர பேரரசனுக்கு இரகுநாத நாயக்கர் கும்பகோணத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்ததின் நினைவாகவே இக்கோயிலை அவ்வரசன் எடுப்பித்தான்.

இங்குள்ள மகாமண்டபத்தை அலங்கார மண்டபம் என்று அழைக்கலாம். மண்டபம் முழுவதும் உள்ள தூண்கள் நுணுக்கமான வேலைப்பாடுகள் உடையவை. நல்ல கருங்கல்லில் படைக்கப்பட்ட நுணுக்க வேலைப்பாடுகளாகும். கர்நாடகத்தில் உள்ள ஹொய்சாளர் கோயில்களான பேளூர், ஹளிபேடு போன்ற கோயில்களை நினைவுபடுத்தும் வகையில் அலங்கார வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. தமிழகத்தில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவரங்கம், திருவானைக்கா, கோயம்பேடு, விருத்தாசலம், செங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், அரியலூர், மதுரை போன்ற இடங்களில் அமைந்திருக்கின்ற அலங்கார அமைப்பினை ஒத்துள்ளது.

இக்கோயிலில் பல அரிய உன்னத வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்கள் உள்ளன. இக்கோயிலில் வைகுண்டநாதர், யோகேஸ்வர விஷ்ணு, **(South Indian Images of Gods and Goddesses - H. Krishna Sastri, Fig. 38)** அரங்கநாதர், கஜேந்திர மோஷம் (*பாகவத மகாபுராணம், அத்தியாயம் 8:2-4*)

வரதராஜர் (ஆதிமூலம், கருடநாராயணா), திரிவிக்கிரமர், ஸ்ரீதேவி பூதேவி ஸமேத் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள், லக்ஷ்மி நாராயணர் போன்ற சிற்பங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. திருமாலின் தசாவதாரச் சிற்பங்களும் தூண்களில் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, இராமபிரானின் இராமாயணம் தொடர்பான வடிவங்கள் சிலவும் இடம் பெற்றிருக்கின்றன. இராமபிரானின் போர்க்கோலம் ஒரு தூணில் அழகாகக் காட்டப்பட்டிருக்கிறது. இராமருக்கு வசிஷ்டரும், விஸ்வாமித்திரரும் பட்டாபிஷேகம் செய்து வைக்கும் காட்சி, விபீஷண பட்டாபிஷேகம், சுக்ரீவ பட்டாபிஷேகம் போன்ற சிற்பங்களும் உள்ளன. இராமர், சீதை, லக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர், ஹனுமார் போன்ற சிற்பங்கள் அனைத்தும் ஒரே தூணில் உள்ளன. இராமரும் அவருடைய சகோதரர்களும் மட்டுமே காட்டப்பட்ட சிற்பங்களும் இருக்கின்றன. கிளியுடன் கூடிய சீதாதேவியை இரு முனிவர்கள் வணங்கும் கோலம், ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைத் தூக்கிச் செல்லும் காட்சி, சுக்ரீவனும் ஆஞ்சநேயரும் இராவண யுத்தத்தில் அசுரர்களுடன் பொருதும் காட்சி, ஆஞ்சநேயர் அசோகவனத்தில் சிம்சுபா மரத்தில் வீற்றிருக்கும் காட்சி போன்றவைகளும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ண லீலைகள் தொடர்பான வடிவங்களும் தூண்களில் காணப்படுகின்றன. ராஸக்ரீடை செய்த கண்ணபிரான் (பாகவத புராணம் அத்தியாயம் 10:29:46), (''குரவை பிணைந்தவர்'', திருவாய்மொழி 4-பத்து 2-திருமொழி 2-பாசுரம்), (ராதை கிருஷ்ணா), வேணுகோபாலன் (கானகோபாலன்), புள்ளின் வாய்பிளந்த கோலம் (பகாசுர வதம் : பாகவத புராணம், அத்தியாம் 10, பாடல் எண் : 49-53), ராதா ருக்மணி ஸமேத கிருஷ்ணன் போன்ற சிற்பங்களும், நவநீத கிருஷ்ணன், காளிய மர்த்தன கிருஷ்ணன் (பாகவத புராணம் 10:16; 28-31) (''காளியன்றன் சென்னி நடுங்க நடம் பயின்றவன்'', பெரிய திருமொழி 5-ம் பத்து, 1ம் திருமொழி, 10-பாசுரம்) போன்றவை சிற்றுருவ புடைப்புச் சிற்பங்களாகும். மேலும் கருடன் (பெரிய திருவடி), ஆஞ்சநேயர் (சிறிய திருவடி) சிற்பங்களும், கங்காதேவி சிற்பமும், வீணை ஏந்திய கணிகையர் (விறலியர்), வித்தியாதரர்கள், சாலபஞ்சிகைகள் (கொடிப்பெண்கள்), கந்தருவர்கள், அப்ஸரஸ்கள், ரிஷிகள் பலர் இறைவனுக்கு அஞ்சலி செலுத்துதல் போன்ற கோலங்களிலும், பல்வேறு விலங்கினங்களின் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.

மேற்கண்ட சிற்பங்களில் சில அரிய வகை புராணக் கதைகளை விளக்கும் வடிவங்கள் உள்ளன. அவற்றுள் உலகளந்த பெருமாள், கஜேந்திர மோக்ஷம், வேணுகோபாலர் சிற்பங்களைக் குறிப்பிடலாம்.

திருமாலின் மாணவ அவதாரமாக விளங்கிய வாமனரின் ஓங்கி உலகளந்த பெருமாளின் வடிவம் காட்டப்பட்டுள்ளது. இருக்கு வேதத்தில் திருமால் (1,22,17) மூன்றடிகளால் உலகை அளந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. முதலில் சூரியனிடம் தொடர்புபடுத்தப்பட்டது. காலையில் தோன்றுதல், உச்சி வேளை, சாயங்காலம் மறைதல் என்ற நிலையில் உள்ள சூரியதேவனே திருமால் ஆகும் என்பதை உணர்த்தும் இவ்வடிவம் இடம்பெற்றிருக்கிறது.

மஹாபலி சக்கரவர்த்தியின் கர்வத்தைப் பங்கம் செய்வதற்காகத் திருமால் எடுத்த அவதாரமே வாமனாவதாரமாகும்.

பலி நடத்திய யாகத்திற்கு குறளுருக்கொண்டு பலியிடம் மூன்றடி நிலம் யாசித்தார். யாசிப்பது திருமாலே என்றுணர்ந்த பலியின் குரு சுக்ராச்சாரியார் தானம் செய்வதைத் தடுத்தார். ஆனால் யாகத்தில் கேட்கப்படும் யாசகங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதால் பலி குருவின் சொல்லைக் கேட்காமல் தானம் செய்தான். முதலடியில் மண்ணையும், இரண்டாமடியில் விண்ணையும் அளந்தார். நட்சத்திர மண்டலம் அவருடைய தலையிலிருந்து

மெல்லமெல்ல பாதத்தை அலங்கரிக்கும் அளவிற்கு ஓங்கி உயர்ந்து விஸ்வரூபமாக வளர்ந்தார். மூன்றாவது அடிக்கு நிலம் இன்மையால் பலி தன் தலைமீது வைக்க கோரவே, அவன் தலைமீது பாதம் வைத்து அழுத்தி பாதாள லோகத்திற்குத் தள்ளினார் என்பர். குருவின் சொல்லைக் கேட்காத பலியைத் தண்டிக்கும் வண்ணமே திருமாலே அவனை பாதாளத்திற்கு அழுத்தினார்.

இங்குள்ள சிற்பத்தில் வலது காலை பலியின் கை மீது ஊன்றியவாறிருக்க, இடது காலை வைகானஸ ஆகமப்படி உயரே தூக்கியவாறும் செதுக்கப்பட்டு உள்ளது. தூக்கிய பாதத்தை பிரம்மன் கமண்டல நீர் கொண்டு பூஜிப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. வலப்பக்க நான்கு கரங்களில் சக்கரம், வாள், அம்பு போன்றவையும், ஒரு கை அபய முத்திரையுடனும் அமைந்துள்ளது. இடப்பக்க கைகளில் சங்கு, கேடயம், வில் போன்ற ஆயுதங்களும், ஒரு கை தூக்கிய இடக்காலுக்கு இணையாக தூக்கியவாறும் காட்டப்பட்டுள்ளது. தலையில் கிரீட மகுடத்துடனும், ஹாரங்கள், தோள்வளை, உதரபந்தம், யக்ஞோபவீதம், பீதாம்பரம் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்டும் காணப்படுகிறது. இந்த படிமத்தின் இடதுபுறம் மஹாபலிச் சக்கரவர்த்தி இடக்கையில் கமண்டலம் கொண்டு வலக்கையால் நீர்வார்த்து தானம் செய்வது போன்றும், அருகில் பலியின் மனைவி விந்தியாவளியும், அவர்களது புதல்வன் பாணனும் நின்றிருப்பது போன்றும் காட்டப்பட்டுள்ளது. திரிவிக்கிரம சிற்பத்தின் வலப்புறம் வாமனர் சிற்பம் வலது கை யாசிப்பது போன்றும், இடது கை குடை பிடித்தவாறும் அமைக்கப்பட்டுள்ளது. அருகில் கருடன் அஞ்சலி ஹஸ்தத்துடனும், கரண்ட மகுடத்துடனும் காணப்படுகிறது. இதேபோன்ற சிற்பம் கும்பகோணம் சார்ங்கபாணி கோயிலின் கருவறை தேவகோட்டத்திலும் இருப்பதைப் பார்க்கலாம்.

மேற்கண்டவாறு சிற்பங்கள் அழகிய வேலைப்பாடுகளுடன் வடிக்கப்பட்டுள்ளன. புராணக் கதையின் கருப்பொருள் சிதையாமல் கல்லிலேயே காவியமாக கதையில் வரும் பாத்திரங்கள் துணைக்கொண்டு அழகாகச்

இத்தகைய அரிய சிற்பங்கள் இடம்பெற்றிருக்கும் இக்கோயில் ஒரு கலைக்கூடம் என்று அழைத்தால் மிகப் பொருத்தமானதாகும். இராமாயணச் சிற்பக் காட்சிகள், பாகவத புராணக் காட்சிகள் போன்றவை இடம் பெற்றிருப்பதைப் பார்க்கும்போது இது மக்களின் திறந்த புராணப் புத்தகங்களாக உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். கல்லில் புராணங்களை காவியங்களாக வடித்து எழிலார்ந்த கல்லோவியங்களைப் படைத்த அச்சிற்பியை போற்றிப் புகழலாம். இக்கோயில் அரியதோர் சிற்பக்கலைக்கூடம் என்றால் அது மிகையாகாது.

திருச்சக்திமுற்றம் சிவக்கொழுந்தீசர் திருக்கோயில்

முனைவர். கி. கந்தன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழகத்தில் திருக்கோயில்களின் தொன்மை என்பது சங்க காலத்திலிருந்து அறியப்படுகிறது. சங்க கால கோயில்கள் பலவும் இன்றைய கோயில்கள் போலன்றி மரம், மண் போன்ற அழியக்கூடிய பொருள்களாலானவை. அவை இயற்கைச் சீற்றங்களைத் தாங்கிடாத வகையில் கட்டப்பட்டதாகும். இது போன்ற அமைப்பிலான கோயில்கள் தமிழகக்கலை வரலாற்றில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ச்சியாக வளர்ந்து வந்துள்ளன. கருங்கற்களால் கட்டப்படாத அத்தகைய கோயில்கள் பற்றி தேவாரப் பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. குறிப்பாக கி.பி.7-ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர் தனது தேவாரத்தில் திருஅடைவு திருத்தாண்டகத்தில் கோயில்களின் வகைகளைப் பட்டியலிட்டுக் குறிப்பிட்டுள்ளார்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்சேரும்
பெருங்கோயில் எழுபத்தெட்டு மற்றும் கரக்கோயில்
கடிபொழில் சூழ்ஞாழற்கோயில் கருப்பறியல்
பொருப்பனைய கொகுடிக்கோயில் இருக்கோதி
மறையவர்கள் வழிபட்டேத்தும் இளங்கோயில்
மணிக்கோயில் ஆலக்கோயில் திருக்கோயில் சிவனுறையும்
கோயில் சூழ்ந்துதாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே.

இது போன்ற இலக்கியங்களில் வகைப் படுத்தப்பட்ட கோயில்களின் வளர்ச்சி என்பது வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் குடைவரையில் தோற்றம் பெறத்தொடங்கியது. கற்றளியாக உருப்பெற்ற திருக்கோயில்கள் பல்லவர் காலத்தைத் தொடர்ந்து விஜயாலயன் காலம் தொடங்கி ஒரு முழுமையான வளர்ச்சியை நோக்கி வளரத்தொடங்கியது. பிற்காலச் சோழர் காலத்தில் இதன் வளர்ச்சி ஒரு முழுமையை எட்டியது எனலாம். கி.பி. 650-ல் தொடங்கி கி.பி.1400-க்கு இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் பல கோயில்கள் வடிவம் பெற்றன. இதனைக் கல்வெட்டுக்களும், தேவாரச் சான்றுகளும் உறுதி செய்கின்றன.

திருச்சக்திமுற்றம் திருக்கோயிலின் வரலாறு :

இதுபோன்று எடுப்பிக்கப்பட்ட கோயில்கள் பலவும் காவிரியின் இருகரைகளிலும் இன்றளவும் காணப்படுகின்றன. சோழ மண்டலத்தின் கோயில்கள் நிரம்பிய பகுதி என்ற பெருமைக் குரியது குடந்தை மாநகரமாகும். குடந்தை நகரமென்பது வரலாற்றுக்கு முந்திய காலத்தில் பெருங்கற்கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். இதனை குடந்தைக்கு அருகில் அகழாய்வு செய்யப்பட்ட நந்தன் மேடு என்ற இடம் உறுதி செய்கிறது. இதனருகில் சோழர்கள் கலைப்படைப்புகளான பழையாறை, தாராசுரம், பட்டீச்சுரம், திருச்சக்தி முற்றம் போன்ற கோயில்கள் அமைந்துள்ளன. திருச்சக்தி முற்றம் என்னும் இவ்வூர் குலோத்துங்கச் சோழவள நாட்டில் உள்ள திருநறையூர் நாட்டில் இருந்த முடிகொண்ட சோழபுரம் எனக் கல்வெட்டுகளால் குறிக்கப்படுகிறது.

திருச்சக்தி முற்றம் என்ற இத்திருக்கோயில் குலோத்துங்க சோழனின் வழித்தோன்றலான நிறைவுடை பெருமாதேவி மகனான இரண்டாம் இராஜாதிராஜனால் எடுப்பிக்கப்பட்ட திருக் கோயிலாகும். இம்மன்னின் ஆட்சியாண்டு என்பது கி.பி.1166-ல் தொடங்கியதாக கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறியப்படுகிறது. இக்கல்வெட்டுக்கள் இம்மன்னனை ''பூமருவிய திசை முகத்தோன்'', ''கடல் சூழ்ந்த பாரேழு'' என்னும் மெய்க் கீர்த்திகளால் புகழ்கின்றன. இம்மன்னனின் கலைக்கொடைகளான பல்வேறு திருக்கோயில்களில் திருச்சக்திமுற்றம் என்பது இலக்கியங்களால் புகழப்படும் திருத்தலமுமாகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பர் இத்திருக்கோயிலில் பதிகமொன்றினைப் பாடியுள்ளார். இதில் இத்திருத்தலம் திருச்சக்தி முற்றம் என்ற பெயரில் புகழப்பட்டுள்ளது. இத்திருத்தலத்தில் இறைவனைத் தன் தலையின் மீது திருவடிகளைச் சூட்டி அருளிட வேண்டும் என வேண்டியுள்ளார். இதனை அப்பர் குறிப்பிடும் போது, ''பூவார் அடிச்சுவடி என்மேல் பொறித்துவை'' என்றும் ''இம்மையில் உன்தாள் என்தன் நெஞ்சத்து எழுதிவை'' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரின் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டதை அப்பரின் நல்லூர் திருப்பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ''நனைந் தனைய திருவடி என்தலைமேல் வைத்தார். நல்லூர் எம்பெருமானார் நல்லவரே'' என்ற அடிகள் மூலம் அறியமுடிகிறது. இறைவனை அடையவேண்டி உமையவள் தவம் இருந்ததாகவும், தவத்தின் பலனாக உமையவள் இத்தலத்தில் அமைந்துள்ள சிவலிங்கத்தைத் தழுவி முத்தமிட்டதால் இத்தலம், அந்நாள் தொடங்கி திருச்சக்திமுத்தம் என வழங்கப்பட்டதாகத்தலபுராணம் கூறுகின்றது.

கட்டடக்கலை :

இத்திருக்கோயிலின் வளர்ச்சியை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். சோழர் காலத்துக்கு முந்தைய தேவாரக் காலத்தைச் சார்ந்த கோயில், திருக்கோயில் கற்றளியாக மாற்றப்பட்ட சோழர் காலம், திருக்கோயிலின் பல்வேறு கட்டுமானங்கள் வளர்ச்சி பெற்ற விஜயநகரர் காலம் எனலாம். கட்டடக்கலை அமைப்பு முறை என்ற வகையில் இத்திருக்கோயிலில் முற்காலச் சோழர் கலைப்பணிக்கான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. அதிட்டான அமைப்புமுறை உபபீடம், அதிட்டானம், பித்தி, பிரஸ்தரம், கிரீவம், கலசம் என்ற ஆறு அங்கங்களைக் கொண்ட ஷடங்க விமானமாக அமைந்துள்ளது. பிற்காலச் சோழர் கலைப்படைப்பாக அமைந்திருந்த போதிலும் இத்திருக்கோயிலில் முற்காலச் சோழர் கலைப்பாணியின் கலைக்கூறுகள் பலவும் காணக்கிடைப்பது அரிய ஒன்றாகும். உதாரணமாக கொடுங்கைப் பகுதியின் உட்பகுதியில் காணப்படும் கண உருவங்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

மேலும், ஏகதள விமானமாக அமைந்துள்ள இதன் அதிட்டானப் பகுதியைச் சுற்றிலும் ஏறக்குறைய ஐந்து அடி ஆழத்திற்குப் பள்ளம் ஒன்று அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற அமைப்பு ஆதித்தன் காலத்துக் கோயிலான திருக்குடந்தை நாகேஸ்வரன் திருக்கோயில், கண்டியூர், ஸ்ரீநிவாசநல்லூர், திருக்கருகாவூர், மேலப்பழுவூர் போன்ற இடங்களில் காணக்கூடிய ஒன்றாகும். இவ்வமைப்பு தொடர்பாக வல்லுநர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இச்சுற்றுப் பள்ளத்தில் நீர் நிரம்பி கருவறையில் உள்ள லிங்கத்தை அப்புலிங்கமாக வழிபடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்றும், இத்திருச்சுற்றுப் பள்ளம் திருக்கோயிலின் பூமியின் மேல்மட்டம், தொடர்ந்து வந்த காலங்களில் உயர்ந்ததால் ஏற்பட்ட பள்ளமென்றும் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. காவிரியின் வெள்ளப்போக்கால் மண்மேடு ஏற்பட்டமையே இதற்கான உண்மைக் காரணமாகும்.

இரண்டாவது திருச்சுற்றின் நுழைவாயிலில் ஐந்து நிலைகளைக் கொண்ட திருக்கோயில் அமைந்துள்ளது. இதன் உபபீடப் பகுதி உயர்ந்து கட்டுமான அமைப்பினை உயர்த்திக் காட்டி யுள்ளது. இதில் காணப்படும் அரைத்தூண் நீள்சதுர அடிப்பாகத்துடன், நாகபந்தமெனும் அமைப்பு, எட்டுப்பட்டை தண்டுப்பகுதியுடன், கலசம், கும்பம், இதழ், பலகை போன்ற உள்ளுறுப்புகளைக் கொண்டுள்ளது. இதன்



அதிட்டானம் பகுதி புடைப்பு மற்றும் உள்ளடங்கியப் பகுதி என்று மாறிமாறி அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஜகதிப் பகுதி உள்ளடங்கிய பகுதியிலும், இதே ஜகதிப் பகுதி புடைப்புப் பகுதியில் ஊர்த்துவ பத்மமாக அழகுடன் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலின் கோபுரத்தில் சகம் 1369-ம் ஆண்டு (கி.பி. 1447)ச் சேர்ந்த தேவராய மகாராயர் கல்வெட்டும், சகம் 1379-ம் ஆண்டு (கி.பி. 1457)ஐச் சேர்ந்த வீரபிரதாப தேவராய மகாராயரின் கல்வெட்டும் காணப்படுகின்றன. கோபுரத்தின் அடித்தளத்தில் உள்ள கல்வெட்டால் இக்கோபுரம் மகாமண்டலேசுவரர் கோபராய தேவமகாராயர் என்பவரால் எடுப்பிக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

சிற்பக்கலை :

சிற்பங்களின் வரிசையில் இக்கோயிலில் அமைந்துள்ள துவாரபாலகர், ஆலமர்க்கடவுள், லிங்கோத்பவர், நான்முகன், ஆடல்வல்லான், துர்கை, சக்தி தழுவிய லிங்கம், கங்காளமூர்த்தி, மயில்வாகனர் போன்ற படிமங்களும், திருக்காமக் கோட்டத்தில் அமைந்துள்ள பெரியநாயகி படிமமும் குறிப்பிடத்தக்கவைகளாகும். கருவறையை அடுத்து அர்த்தமண்டபத்தின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் ஏறக்குறைய ஆறு அடி உயரத்துடன் காணப்படுகின்றார்கள். இச்சிற்பங்களின் அமைப்பு முறை இது கோயிலின் சமகாலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று அறியமுடிகிறது.

தென்புறத்தில் அமைந்துள்ள ஆலமர்க் கடவுள் படிமம் சோழர் காலத்தின் கலைக்கூறு களுடன் அமைந்திருந்தாலும் இக்கோயிலின் சமகாலக் கலைப்பாணி கூறுகளுடன் அமைந்துள்ள மற்றொரு ஆலமர்க்கடவுள் படிமம் இக்கரு வறையின் தென்புறத்தில் வழிபாடின்றி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கோட்டப் படிமம் வீராசன நிலையில் நான்கு கரங்களுடன் அக்கமாலை மற்றும் சின்முத்திரை யைத் தாங்கி, வலது கால் முயலகன் மீது ஊன்றப்பட்டுள்ளது.

ஆடல்வல்லான் படிமம் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவற்றில் அமைந்துள்ளது. இப்படிமத்தின் அருகில் காளி சதுரத்தாண்டவக் கோலத்தில் எட்டுக்கைகளுடன் சிற்றுருவமாக அமைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வடபுற தேவகோட்டத்தில் கி.பி.14 அல்லது கி.பி. 15-ம் நூற்றாண்டைச் சேர்ந்த நான்முகன் படிமம் ஒன்று அழகுடன் அதிக ஆபரணங் களின்றி எளிமையாக அமைந்துள்ளது. இது போன்று திருக்கோயிலின் சமகாலத்தைச் சேர்ந்த துர்கை படிமம் ஒன்று மூடப்பட்ட நிலையில் உள்ள தேவகோட்டத்திற்கு வெளியே வைக்கப்பட்டு உள்ளது. இவ்விரண்டு படிமங்களும் இருவேறு பட்ட காலத்தின் கலைப்பாணிக்குச் சான்றாக அமைகின்றன.

இத்திருக்கோயிலின் தலபுராணத்தை விளக்கிடும் வகையில் சக்தி தழுவிய லிங்கம் (படிமம்) ஒன்று மகாமண்டபத்தின் இடதுபுறம் அமைந்துள்ளது. இதில் உமையவள் தனது வலது திருக்கரத்தால் லிங்கத்திருமேனியை ஆலிங்கனம் செய்தும், இடது கையினை மேலே தூக்கிய நிலையில் அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்படிமத்தின் (லிங்கத்தின்) பின்பகுதியில் தேவியானவள் தவக்கோலத்தில் நின்ற நிலையில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பெற்றுள்ளாள்.

திருக்காமக்கோட்டமெனும் உமையவளின் திருக்கோயில் மகாமண்டபத்தின் வலதுபுறம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. திருக்கோயில்

களில் உட்புறத்தில் திருக்காமக் கோட்டம் அமைத்திடும் மரபு என்பது இடைக்கால சோழர் காலத்திற்குச் சற்றே முன்னதாக தொடங்கி யிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இங்குள்ள திருக்காமகோட்டமும் பாண்டியர் காலத்தில் கலைப் படைப்பாக இருக்கலாம். இதன் அதிட்டானப் பகுதி புடைப்பு மற்றும் உள்ளடங்கிய பகுதியாக மாறிமாறி அமைந்துள்ளது. இதனை இக்காமகோட்டத்தில் அமைந்துள்ள அதிட்டான உறுப்புகள், தூண்கள் மற்றும் அரைத்தூண்களின் உள்ளுறுப்புகளும் உறுதி செய்கின்றன. இங்கு அமைந்துள்ள தேவக் கோட்டங்கள் படிமங்கள் ஏதுமின்றி உயரமான அமைப்பில் பாண்டியரின் கைவண்ணம் போன்று காட்சியளிக்கின்றன.

கோபுரத்தின் வெளியில் வடபகுதியில் சிதைவுற்ற நிலையில் மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இதில் காணப்படும் தூண்களின் அமைப்பு 32 பட்டைகளுடன் பூவேலைப்பாடு களோடு அமைந்துள்ளது. இவ்வமைப்பு நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட மண்டபங்களில் காணக்கூடிய ஒன்றாகும். மேலும் போதிகைப் பகுதியும் இதனை உறுதி செய்கிறது. இதனடிப்படையில் இம்மண்டபம் நாயக்கர் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட ஆயிரங்கால் மண்டபமாக இருந்திருக்கலாம்.

இங்கு அமைந்துள்ள கற்படிமங்களில் 26 படிமங்களும் விமான தேவதைகளாகக் காட்சி அளிக்கும் கல் மற்றும் சுதைப் படிமங்கள் பன்னிரண்டும், ரிஷபவாகனர், நடராஜர், சுப்ரமணியர், தேர்க்கால நடராஜர், தேவாரமூவர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் உள்ளிட்ட இருபது செப்புத் திருமேனிகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு தொடங்கி 17-ஆம் நூற்றாண்டு வரையிலுமான கால இடைவெளியில் சிற்பக்கலை எவ்வாறு கலைப்பாணியில் வளர்ச்சி மாற்றங்களைப் பெற்று உச்ச நிலையை எட்டியுள்ளது என்பதைத் தெளிவாக விளக்கும் வகையில் அமைந்துள்ளன. இதுபோன்று கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று மண்டபம், அலங்கார மண்டபம், கோபுரம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற கட்டட அமைப்புகள் ஏறக்குறைய 900 ஆண்டுக்கால கலை வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை விளக்கிடும் வகையில் அமைந்துள்ளன.

இக்கோயில் கல்வெட்டுகளில் இரண்டாம் இராஜாதிராஜன் கல்வெட்டு காலத்தால் முந்தியதாக இருப்பினும் இக்கோயிலின் விமான தேவதைகளின் அமைப்பினை வைத்து இக்கோயில் செம்பியன் மாதேவி மற்றும் முதலாம் இராஜராஜன் காலத்தை சேர்ந்ததாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இன்றளவும் வழிபாட்டு நிலையில் தனக்குரிய தனித்துவத் தன்மையுடன் பொது மக்களின் புண்ணியத்தலமாக இக்கோயில் திகழ்கின்றது.



தஞ்சை ஓவியம்

எஸ். ராதா
மரபு ஓவியர், தஞ்சாவூர்.

நாகரிகத்தின் வெளிப்பாடாகத் திகழும் கலை மரபில், ஓவியக்கலை மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாகும். மனித உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவும், வரலாற்று பதிவாகவும் விளங்கும் இக்கலை பரிணாம வளர்ச்சியில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பரிமாணங்களைக் கொண்டு விளங்குகின்றது. அந்த முறையில் தஞ்சையை ஆண்ட மராட்டியர்களின் காலத்தில் ஓவியக்கலை அடைந்த புதிய பரிமாணமே தஞ்சை ஓவியம். மலையும் மலைச்சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனத் திணை வகுத்த தமிழ் மண்ணில் கலையும் கலைச் சார்ந்த இடமும் தஞ்சையாகும்.

பொதுவாகவே மதக்கோட்பாடுகளின் வெளிப்பாடாகவே ஓவியங்கள் காலந்தோறும் தீட்டப்பெற்றன. மராட்டியர்கள் காலத்தில் தஞ்சையில் உருவான இவ்வகை ஓவியமும் மத வழிபாடுகளின் மூலமாக வேரூன்றிய நிலையில், கலை என்ற நிலைக்கு மேலாக, வழிபடு முறைகளை ஒட்டியும், மன ஒடுக்கமும் தியானமும் கைகூடும் வகைக்குமே முக்கியத்துவம் கொடுத்து வரையப்பட்டது.

ஓவியங்களின் பரிணாம வளர்ச்சியில் முதல் படியில் இருப்பது சுவரோவியங்கள். கோவில்களின் பிரகாரச் சுவற்றில் இதிகாச புராணங்களின் விளக்கங்களை ஓவியங்களாகத் தீட்டும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. தஞ்சையில் ஓவியக்கலை வேரூன்றியதற்கு சோழர்கால சுவரோவியங்கள் வித்தாக அமைந்தன.

ஏறக்குறைய தொள்ளாயிரம் ஆண்டுகால வரலாற்று பதிவாக சுவரோவியங்கள் தஞ்சை பெரிய கோவிலின் பிரகாரத்தில் திகழ்கிறது. முதலில் தஞ்சையை ஆண்ட சோழர்களின் காலத்தில் தீட்டப்பெற்ற ஃப்ரெஸ்கோ வகை ஓவியங்களும், பின்னாளில் ஆட்சி செய்த நாயக்கர் கால டெம்பரா வகை ஓவியங்களும், இறுதியிலாண்ட மராட்டியர்களின் ஓவியங்களும் ஆக கி.பி.900 முதல் 1850 வரையிலான ஓவியங்கள் இக்கோயிலில் இடம்பெற்றிருப்பது வேறெங்கும் காணக் கிடைக்காத தனிச்சிறப்பாகும்.

கருங்கற் சுவரில் சுண்ணாம்பு காறை பூசப்பெற்று, ஈரப்பதம் காயுமுன்னரே, இயற்கையான மூலப்பொருள்களால் ஆன வண்ணக் கலவைகளால் தீட்டப்பெற்ற ஓவியங்கள் ஃப்ரெஸ்கோ ஓவியங்கள். இம்முறையிலான ஓவியங்கள் பெரிய கோவிலின் கருவறையைச் சுற்றியுள்ள அறையின் சுவர்களில் காணப்பெறும் தக்ஷிணாமூர்த்தி சிவபெருமானின் திருமணக் காட்சி, திரிபுரதகனம், ராஜராஜன் தில்லைக் கோயிலில் வழிபடும் காட்சி போன்றவை. இவ்வகை ஓவியங்களில் வண்ணக்கலவை, சுண்ணாம்புக் காறையின் நுண்துளைகளில் ஊடுருவி நிலைத்த தன்மைப் பெற்றதால் பின்னாளில் சோழர் ஓவியங்களின் மேல் சுண்ணாம்பு அடித்து தீட்டப்பெற்ற நாயக்கர் கால ஓவியங்களை அகற்றும்போது (வேதிமப் பொருள்களால்) சோழர் கால ஓவியங்கள் பளிச்சிட்டு வெளிவருகின்றன.

கருவறையின் சுற்று அறை, தேவ கோஷ்டங்கள் ஆகிய இடங்களில் நாயக்கர் கால ஓவியங்கள் (1550-1675) உள்ளன. இவை இயற்கையில் கிடைக்கும் வண்ணப் பொடிகளின் கலவையால் படைக்கப்பெற்றவையாகும். சிவப்பு வண்ணப் பின்னணியில் அதிகமாக பூ வேலைபாடுகளுடன் காணப்படுகிறது. விஜய நகர கால ஓவியப் பாணியினை இங்கு காண முடிகிறது.

அம்மன் மண்டபத்து விதானத்தில் காணப்பெறும் தேவி மகாத்மியம் தெய்வத் திருமணக் காட்சிகளின் தொகுப்பு ஆகியவை ஏறத்தாழ 1800-ல் மராட்டிய மன்னர் முதலாம் சரபோஜி மன்னரின் ஆதரவால் தீட்டப்பெற்றவை. வெளி பிரகாரத்தில் காணப்பெறும் திருவிளையாடல் புராணக் காட்சிகள் மல்லப்ப நாயக்கர் மண்டபத்தில் காணப்பெறும் மராட்டிய

அரசர்களின் உருவ ஓவியங்கள் ஆகியவை 1850 கடைசி சிவாஜி மன்னரின் ஆதரவால் தீட்டப்பெற்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பெரிய கோவிலையுடைய தஞ்சையில் ஓவியக் கலையின் இரண்டாவது பரிணாமமாக ஓவியங்கள் மரப்பலகையின் மீது முப்பரிமாண உணர்வினைக் கொடுக்கக் கூடிய வகையில் கற்களும் முத்துக்களும் பதிக்கப்பெற்று படைக்கப்பட்டது. இவ்வகை ஓவியங்கள் சிலை வழிபாட்டிற்கு ஒரு மாற்றாக அறிமுகப்படுத்தப்பட்டதால் இவற்றில் சிலையின் அம்சமான முப்பரிமாண முறை இடம்பெற்றது. இறை பக்திக்கு முதலிடம் அளித்த மராட்டிய மன்னர்கள் தங்களின் இஷ்ட தெய்வத்திற்கு மாணிக்கம், வைரம், மரகதம், முத்துக்கள் உபயோகித்து ஓவியங்கள் வரைந்து கொண்டனர். இதுவே இந்நாளில் தஞ்சை பாணி ஓவியம் என்று சிறப்புடன் குறிப்பிடப்படுகிறது.

விஜய நகர நாயக்க மன்னர்களின் காலத்திய ஓவியங்களும் முகலாய ஓவியங்களும் சங்கமித்த ஒரு புதிய பாணியில் இம் மராட்டியர்கால ஓவியப்பாணி கி.பி. 1750ல் மலர்ந்தது. கி.பி. 1739 - 1763 வரை ஆட்சி புரிந்த பிரதாப சிம்மன் என்னும் தஞ்சை அரசரே இப்புதிய பாணி ஓவியங்களுக்கு ஆக்கம் தந்தவர். இவரது மகன் இரண்டாம் துளஜா பின்பு சரபோஜி மன்னர் ஆகியோர் இக்கலைக்கு மேலும் ஆதரவு நல்கி செழிக்கச் செய்தனர். சரபோஜி மன்னரின் முழு ஈடுபாட்டால் பல்லாயிரக்கணக்கான ஓவியப் படைப்புகள் தஞ்சையில் மலர்ந்தன. அவற்றில் சிலவற்றை சரஸ்வதி மகால் நூலகத்தில் இன்றும் நாம் காணலாம்.

இத்தகைய தஞ்சை ஓவியங்கள் பெரும்பாலும் வைணவ கடவுளர்களைக் கொண்டுள்ளது. தஞ்சாவூர் மராட்டிய மன்னர்கள் வைணவ சம்பிரதாயத்தைக் கடைபிடித்தது காரணமாக இருக்கக் கூடும். மராட்டிய மன்னர்களின் சமய குருவான சமர்த்த ராமதாஸ சுவாமிகளின் சீடர்கள் ஏற்படுத்திய மடங்களில் ராமர், கிருஷ்ணர், அனுமன் போன்ற கடவுள்களின் ஓவியங்களை நிறைய காணலாம். அடுத்ததாக சைவ சமய கடவுளர்களும், சமயக் குரவர்கள் நால்வர் ஆகியோரது ஓவியங்களும் சிறப்பாக காணப்பெறுகின்றன. ராமர், கிருஷ்ணர் ஓவியங்களில் ஹனுமான், கருடன் சப்த ரிஷி ஆகியோர்களும் நடராஜர், பசுபதி, தக்ஷிணாமூர்த்தி ஆகிய ஓவியங்களில் நந்தி, பதஞ்சலி, வியாகரபாதர், பிருங்கி ரிக்ஷி, நால்வர் ஆகியோர்களும் காணப்படுகின்றனர். நிலைத்தன்மை (static) கொண்ட படங்களை அதிகமாகக் கொண்டுள்ள இவ்வகை ஓவியங்களில் முக்கியத்துவம் பெற்ற முதன்மைக் கடவுள் ஓவியத்தின் மையத்தில் அளவில் பெரியதாக வரையப்படும். அவற்றைச் சுற்றி அந்த கடவுளர்களின் வேறுபட்ட அவதாரங்களோ, சக்தி வடிவங்களோ, பக்தர்களோ, ஊர்திகளோ அளவில் சிறியதாக அதன் முக்கியத்துவத்துக்கேற்ப வரையப்பட்டிருக்கும். இந்த மிகை யதார்த்த உத்தி (surrealism) வேறெந்த மரபு வழி ஓவியங்களிலும் இல்லாத தனிச்சிறப்பாகும்.

இவ்வகை ஓவியங்களில் திருவுருவங்கள், சற்றே பருத்தத்தோற்றமும், உயரம் குறைவாகவும், வெளிர் நிறமும், உருண்டையான முகமும், அகன்ற தாமரை இதழ்போன்ற கண்களும், திருத்தமான நாசியும், மெல்லிய இதழ்களுமாக மராட்டியர்களின் உருவத்தை ஒத்து இருக்கும். நத்து புல்லாக்கு, ஐம்படத்தாலி, நெல்மணி மாலை, போன்ற மராட்டியர்கள் அணியும் ஆபரணங்கள் காணப்படும்.

ஓவியத்தின் வண்ணப் பகுதி அழுத்தமான நீல நிறமும், வெளிர் மஞ்சள் நிறமும், பச்சை நிறமும், மட்டுமே கொண்டு முக்கிய உருவங்கள் வரையப்படுகிறது. பளீரிடும் நீல வண்ணமும், சிவப்பு வண்ணமும் பின்னணிக்கு அழகு சேர்க்கின்றன. மிகுதியாக நீலம்-சிவப்பு அல்லது பச்சை-சிவப்பு வண்ணங்களின் ஆதிக்கமே நிறைந்து காணப்படும். வண்ணங்களின்

கலவையோ (mixed colour) நிறத்தன்மையோ (shades) அதிகம் காணப்படாது. இதன் ஆழமான அழுத்தமான வெளிக்கோடுகள் (out lines) இவ் ஓவியங்கள் நீண்ட, வலிமையான மரபுவழியை பறை சாற்றுகின்றன. இறக்கைகள் கொண்ட வான் வழிப் பறக்கும் நிலையில் உள்ள கந்தர்வர்களின் உருவங்கள், மண்டபம், விதானம், மஞ்சம், தூண்களில் காணப்படும் யாளி, கிங்கரர்கள் போன்றவை இந்த மரபு வழி ஓவியத்திற்கு மேலும் மெருகூட்டுகின்றன. இவ்வகை ஓவியங்களில் மலர்கள் உண்மைத் தன்மையதாக (realistic) இல்லாமல் குறிப்புத் தன்மையதாக (symbolic) காணப்படுகிறது. மாலைகள் முழுமையடைந்த மாலைகளாகக் காணப்படாது, குஞ்சங்களை உடைய முனைகளுடன் திகழ்கின்றன. ஒழுங்கு முறையுடன் கூடிய வெண்புள்ளிகள் ஓவியத்திற்கு மேலும் அழகு சேர்க்கின்றன. ஆடைகள் பட்டுத் திரைச் சீலைகள், திண்டுகளில் காணப்படும் பூ வடிவங்கள் இதன் கலைத் தன்மைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு. இத்தகைய சிறப்புகளைக் கொண்டு விளங்கும் இவ் ஓவியங்கள் புனைய கற்பனைத் திறனைவிட அழகுணர்ச்சியும், நிதானமும், பொறுமையும் அதிகமாகத் தேவைப்படும்.

பழைய ஓவியங்களை விட தற்கால ஓவியங்களில் தங்கத்தின் ஆதிக்கம் நிறைந்து காணப்படுகிறது. உருவங்களின் எண்ணிக்கையைக் குறைத்தும், அளவைப் பெரியதாகவும் வரைகின்ற முறை பழக்கத்தில் உள்ளது. இந்தக் கலை, சங்கீத, பரதக் கலைக்கு ஒப்பானதாகும். கற்றுக் கொடுப்பவரும் இதைக் கற்றுக் கொள்பவரும் பொறுப்புடனும் பொறுமையுடனும் செயல்படுவதே நீர்த்து வரும் இந்தக் கலையை அழிவில் இருந்து காப்பாற்றக் கூடிய ஒரே வழியாகும்.

கலம்காரி ஓவியங்கள்

டாக்டர். ஆர். எம்பெருமாள்
ஓவியக்கலைஞர், சிக்கல் நாயக்கன்பேட்டை.

கலை எனில் நம் நினைவுக்கு உடன் வருவது ஓவியங்கள்தான். கலம்-தூரிகை, காரி-வரைதல் கலம்காரி எனில் துணிகளில் தூரிகைகளின் மூலம் ஓவியங்கள் வரைந்து அதற்கு மூலிகைச் சாயங்கள் மூலம் வண்ணம் தீட்டி அழகுபடுத்தும் ஓர் அற்புதமான, நுட்பமான ஓவியக்கலையாகும். இவ்வகை ஓவியங்கள் மிகுந்த உயிரோட்டம் உடையவை.

கலம்காரி

இந்த கலம்காரி ஓவியங்கள் பண்டைய கால ஓவிய முறைகளில் முதன்மையானதாகும். இவ்வகை ஓவியங்கள் தஞ்சை நாயக்க மன்னர்கள் காலத்தில் மிகவும் புகழ்பெறத்தொடங்கியது. பின்பு மராட்டிய அரசர்களாலும், ஜமீன்தார்களாலும், மடாதிபதிகள் மூலமும் வளர்க்கப்பட்டு தற்போது பல உள்நாடு மற்றும் வெளிநாடு வாழ்மக்கள் மூலம் பெரிதும் ஆதரிக்கப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக நமது தமிழக அரசும், மத்திய அரசும் மற்றும் தொடர்புடைய அரசு நிறுவனங்களும் இக்கலைக்கு பல்வகை விருதுகளையும், பாராட்டுக்களையும் வழங்கி கௌரவித்து ஆக்கமும் ஊக்கமும் அளித்துவருகிறது.

தஞ்சை நாயக்க மன்னர்கள் காலம் முதல் இன்றுவரை இந்த கலம்காரி ஓவியங்கள் இவ்வளவு புகழ் பெற்று அழியாமல் காப்பாற்றப்படுவதற்கு காரணம், பண்டைய நாட்களில் அரச குடும்ப விழாக்கள் ஆனாலும் சரி இன்றைய தினங்களில், திருக்கோயில் விழாக்கள் போன்றவற்றிலும் சரி இக்கலம்காரி முறையில் தயாரான தொம்பைகள், திரைச்சீலைகள், வாசல் மாலைகள், அஸ்மான கிரிகள் மற்றும் தெய்வீக ஓவியங்கள் இடம்பெற்று அழகு ஏற்படுத்துவதுதான், அந்த விழாக்களுக்கே மிகச்சிறப்பு சேர்க்கும் வண்ணம் ஓர் தெய்வீக அம்சத்தையும் உயிரோட்டத்தையும் அவை ஏற்படுத்திக் காண்பவருக்கு மகிழ்ச்சியும் வளமும், நலமும் தந்து விடுகிறது. எனவேதான் இன்றளவும் இவ்வகை ஓவியங்கள் காலத்தால் அழியாத வரம் பெற்று பெரும் வரவேற்பினை பெற்றுவருகின்றன.

''கலை'' என்பது தமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், கற்பனைகளையும் பல கண்டுபிடிப்புகளையும் சிறந்த மதிநுட்பத்துடன் பல புதிய உத்திகளை கையாண்டு அதே சமயம் கலைகளுக்கு உரிய நீதி மன்றம் நியமங்களுக்கு உட்பட்டு, சிறந்த கலைப்பண்புகள் மற்றும் கைவேலைப்பாடுகள் மூலம் வெளிப்படுத்தி அதனைக் காண்பவர்க்கு பெரும் மகிழ்ச்சியும் பரவசமும், ஆனந்தமும், மனநிம்மதியும், ஆச்சர்யமும் தரக்கூடிய ஓர் உன்னதமான செயல்பாடே கலையாகும்.

ஓவியங்கள் தயாராகும் முறை

இவ்வகை ஓவியங்கள் அழியாப் புகழ் பெற்று நிலைத்திருக்கக் காரணமே முதலில் வரையப்படும் துணிகளை தொழில்நுட்பத்துடன் தயார் செய்வதுதான். இவ்வகை ஓவியங்களைச்சாதாரணத் துணிகளில் மற்ற ஓவியங்களைப்போல வரைய இயலாது.

ஓவியத்துணி

சாதாரண பருத்தித்துணியைச் சாணிப்பால் கரைசலில் நனைத்துப் பலமுறை பிசைந்து அப்படியே ஓர் இரவு அந்தக் கரைசலில் ஊறவைக்கவேண்டும். மறுநாள் நீரில் துவைத்து அலசி காயவைக்கவேணடும்.

மறுநாள் காலை கரைசலில் சலவை செய்த துணியை பால், கடுக்காய்த்தூள், கஞ்சி மூன்றும் அடங்கிய கலவையில் நனைத்துப் பலமுறை பிசையவேண்டும். பின்பு கருங்கல்லில் துவைத்து மறுபடியும் அதே கலவையில் நனைத்துப் பிசைந்து புல் தரையில் காயவைக்கவேண்டும். பின்பு இந்தத்

துணி மரக்கட்டையின்மீது வைத்து மரகொட்டா புள்ளியால் அடித்து மிருதுதன்மை ஆக்கப்படுகிறது.

வரைகோட்டு உருவம்

பல்வேறு தொழில்நுட்பத்தால் உருவாக்கப் பட்ட துணியில் எரித்த புளியங்குச்சிகளைக் கொண்டு மாதிரி ஓவியங்கள் வரையப்படுகிறது.

துணியை முதலில் அளவிட்டு அதற்குரிய வடிவங்களுக்குரிய இடத்தையும் தேர்வு செய்ய வேண்டும். பார்டர், ஜமில் மற்றும் கடவுள் வடிவத்திற்கு எவ்வளவு இடம் வேண்டும் என்று பாகுபடுத்தப்படுகிறது. இது ஒரு மாதிரி திட்டவடிவம் ஆகும். பின்பு எரிந்த புளியங்குச்சி களைக் கொண்டு கோடுகள், பார்டர், கடவுள் வடிவம் எல்லாம் வரையப்படுகிறது. இந்த வரைகோட்டு மாதிரிப்படம் சரியான முறையில் நன்கு அமைத்தவுடன், அதன் கோடுகளின் மீது கருப்பு சாயத்தால் வரையப்படுகிறது. வரைவதற்குச் சாதாரண மூங்கில் குச்சிகளைக் கூர்மையாகச் சீவி முனையை இருபகுதிகளாய் பிளந்து நுனிக்கு சற்றே மேலே எடுத்து துணியைச் சுற்றி நான்கு நூலால் கட்டப்படுகிறது. இந்த கலைக்கு இதுவே எழுதுகோலாகும். இதுவே இந்த ஓவியத்திற்குக் கலமாகும்.

ஓவியத்தை வண்ணக்கலவையால் தீட்டுவதற்குரிய தூரிகைகள் இயற்கையாகக் கிடைக்கப்பெறும் ஈச்சன் சிம்புகள், பனை மட்டைகளில் இருந்து தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இயற்கையின் தொடர்பு கலம்காரிக்கு உண்டு.

ஓவியங்கள் கருப்பு சாயத்தால் வரைந்து, பின்பு எந்த இடத்தில் கருப்பு பூசவேண்டுமென திட்டமிடுகின்றோமோ, அந்த இடங்களில் கருப்பு பூசப்படுகிறது. சாயங்கள் யாவும் இயற்கைத் தாவரங்களின் பட்டைகள், தண்டுகள், வேர் முதலியனவற்றால் தயாரிக்கப்படுகின்றன. சில நேரங்களில் இந்த சாயங்களுடன் படிகாரமும் மேலும் சில உப்புகளும் சேர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு சாயமாக வரைந்த பின்பு துணியைத் துவைக்கவேண்டும். பொதுவாக கலம்காரிகளைத் துவைப்பதற்கு சிக்கல் நாயக்கன் பேட்டை அருகில் உள்ள கொள்ளிடத்திற்குச் சென்று துணியை துவைப்பது வழக்கம். இந்த நீரில் துவைப்பதால் துணிகள் சிறப்பாக இருக்கும். வண்ணங்களும் சிறப்பாக இருக்கும். இந்த இயற்கையான கொள்ளிடம் நீரில் உள்ள கால்சியமே காரணம் என்று இக்கலையின் பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கருதுகின்றனர்.

கலம்காரி ஓவியங்களை பரம்பரை பரம்பரையாகச் செய்து தஞ்சை மாவட்டம், திருப்பனந்தாளுக்கு அருகில் சிக்கல்நாயக்கன் பேட்டை கிராமத்தில் நாங்கள் பரம்பரையாகச் செய்துவருகிறோம். என் தந்தை எஸ். எம். இராதாகிருஷ்ண நாயுடு, மன்னார் நாயுடு மற்றும் முன்னோர்களும் இந்தத்தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றோம். இன்று நானும் என் மனைவி பானுமதி, மகன் ராஜ்மோகன் ஆகிய என் குடும்பத்தார் இந்த கலம்காரி தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். இந்த கலை மேலும் வளரவேண்டும் என்பதற்காக என் மகன் ஈடுபட்டு வருகிறார். என் மகனிடம் பரம்பரைக் கல்வியுடன் கல்லூரிக் கலைப்படிப்பும் சேர்ந்து இருப்பதால் பல புது மாற்றங்கள் ஏற்பட்டு எதிர்காலத்தில் கலம்காரி ஓவியத்தொழில் பல்வேறு வளர்ச்சிகளைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

திருவேரகத்தில் உருவாகும் திருவுருவங்கள்

க. மோகன்ராஜ், சுவாமிமலை

''உலோகச்சிற்பக் கலையின் பொற்காலம்'' என செம்பியன் மாதேவியார் எனும் அரசியார் வாழ்ந்தகாலம் அழைக்கப்படுகிறது. சோழ சாம்ராஜ்யத்தின் கலை மற்றும் இறைபக்தி ஆர்வலராக இருந்த இவரது காலத்தில்தான் பல நூற்றுக்கணக்கான ஆலயங்களுக்கு செப்புத் திருமேனிகள் பலநூற்றுக்கணக்கானவை வடித்து எடுக்கப்பட்டு ஆலயங்களில் ஸ்தாபிதம் செய்யப்பட்டன. அத்தெய்வ திருவுருவங்களை வடிக்கவும் ஆலோசனை வழங்கவும் வடிவம் பெறும் முறையை அவ்வப்போது கண்காணித்து தன் எண்ண எதிர்பார்ப்பை தெரிவிக்க அப்பெருமாட்டி அவற்றை வடிக்கும் சிற்பக் கலைஞர்களுடன் எவ்வளவு ஈடுபாடு ஆதரவு வைத்திருந்திருப்பார் என்பதனை அக்கால சிற்பங்களின் உயிரோட்டத்தைக் கண்டு நாம் உணரலாம்.

ஆம். அப்பெருமாட்டி ஆதரித்த சிற்பக்கலை மரபில் வந்த சோழர்கால சிற்ப பரம்பரையினர் இன்றும் தன் ''சிற்றுளி'' ஓசையை சுவாமிமலை எனும் சிற்பக்கலை நகரில் ஒலித்துக் கொண்டு சிற்பம் வடித்துக் கொண்டு உலகம் முழுதும் அனுப்பிக் கொண்டு உள்ளனர்.

காலங்கள் மாறினாலும் இந்த கலைகள் மாறவில்லை. அந்த சிற்பக்கலை செய்முறையை இங்கு காண்போம். உலகப் புகழ் பெற்ற மகாமக விழாவில் இக்கலையின் புகழும் அனைவரும் அறியப்படவேண்டியதே ! திருக்கோவில்களில் மூலவர் என்றும் உற்சவர் என்றும் சிலைகள் இடம் பெற்றுள்ளன. நடமாடும் மக்கள் தரிசனம் செய்ய அசையா மூலவர் திருக்கோவில் கர்ப்ப கிரஹத்தில் காட்சி தந்து அருள் பாலிக்கின்றார். நடமாடா வயதுமுதிர்ந்த பக்தர்களுக்கு அவர்களின் இல்லந்தேடி தெருவீதி உற்சவராக நடமாடுபவராக செப்புத்திருமேனியாக வந்து அருள்பாலிக்கின்றார். அந்த செப்புத் திருமேனிகள் வடிவம் பெறுவது முதலில் மெழுகில்.

குங்குலியம், பாரஃபின் மெழுகு எனும் கொழுப்பு மெழுகு, கடலை எண்ணெய் இவற்றின் கூட்டுத் தயாரிப்பே இம்மெழுகு. இவை வெளி இடங்களில் தயாராக கிடைக்காது. தக்க விகிதத்தில் இவற்றைக் கலந்து அரைத்து உருக்கி கலவையாக தயார் செய்து கொள்ள வேண்டும். இது வெட்டை மெழுகு (Hard wax) ஆகும்.

இப்பொழுது மூலவரின் உயரத்திற்கு ஏற்ப பொருத்தம் பார்த்து 3:1, 3:2 அல்லது 2:1 அல்லது மூலவரின் நேத்ர மட்டம், நாசி மட்டம், வாய் மட்டம், கழுத்து மட்டம், மார்புபுள்ளி மட்டம், தோள் மட்ட்ம், நாபி மட்டம் என ஏதாவது ஒரு அளவு அல்லது கர்த்தாவின் நட்சத்திரத்திற்கும் செய்ய வேண்டிய உற்சவரின் நட்சத்திரத்திற்கும் உரிய ஆயாதி பொருத்தம் பார்த்து (தாரபலன்) உயரம் நிர்ணயம் செய்யப்பட்டு இந்த உயரத்தினை தென்னை ஓலையில் எடுத்து அதனை பல்வேறு பாகங்களாக மடக்கி செய்யவேண்டிய சிற்பத்தின் அங்க அவயங்களின் அளவுகளை கண் இமைக்கும் நேரத்தில் பிரித்து விடுகின்றனர். இவ்வாறு அளவு எடுக்கப்பட்ட ஓலை ''ஒடி ஓலை'' எனப்படும் ஒடித்து அளவுகளை பெறப்பட்டதால் இதற்கு ஒடி ஓலை எனப்பெயர். இதுவே அளவுகோலாகும்.

இப்பொழுது மெழுகை நீரில் சிறு துண்டுகளாக உடைத்து போட்டு நன்கு சூடேற்ற நன்கு இளகும். பக்குவம் பெற்று விடும். ஒடி ஓலையை மூலமாக வைத்து அதற்கு ஏற்ப அளவுபடி மெழுகினை எடுத்து உருட்டி உடல், கால், புஜம், கை, விரல் என தனித்தனியாக பாகங்கள் உத்தேச அளவு அமைத்து அதனை குளிர்ந்த நீரில் இட அவை கெட்டியாகிவிடும். பின்னர் தேவையான சரியான அளவுக்கு அவற்றை அளவுப்படி வெட்டி அங்க அவயங்களின் மேடு பள்ளம் செதுக்கி சூட்டுக் கோலின் துணையுடன் பாகங்களை ஒட்ட உருவம் தயாராகிவிடுகிறது. இதன் மேல் நயமெழுகு எனப்படும் நீலமெழுகு (Nice wax) அணிகலன்கள்,

வஸ்திரங்கள் முதலானவை அமைக்க உபயோகிப்பர். பூர்த்தி அடைந்த மெழுப்படிமம் நமக்கு எப்படி அமைந்து உள்ளதோ அதே அமைப்புதான் வார்ப்பிலும் அமையும் என்பதால் மிக கவனத்துடன் தேவைக்கு அதிகமாக வைத்து செதுக்கி எடுத்து கொள்ளும் படியாக இப்படிமம் அமைக்கப்படுகிறது. இந்த மெழுகுப் படிமம் அமைக்க மெழுகு குச்சி எனப்படும் (Wax Stick) கருவி சிலை அமைப்பில் முக்கிய இடம் வகிக்கின்றது. பூர்த்தி அடைந்த மெழுகுப் படிவத்தினை நீண்ட நாட்கள் வைத்திருக்க இயலாது. அதனை தண்ணீர் தொட்டியில் இட்டோ அல்லது கருவாக(Mould)வோ செய்து விடவேண்டும். மெழுகு சிலையாதலால் தட்பவெப்ப நிலை காரணமாக வளைந்து விடும்.

இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட மெழுகுப் படிவம் வண்டல் மண்ணைக் கொண்டு முன்னும் பின்னும் பூசப்பட்டு (அடியில் ஒருதுவாரம் விட்டு) அதன்மேல் களிமண் மற்றும் மணல்கலந்த கலவையை இரண்டாவது பூச்சாக பூசி வெயிலில் காயவைக்கப்படுகின்றது. நன்கு பக்குவமடைந்த இந்த மண் பூச்சு கொண்ட மெழுகுப்படிமம் துவாரத்தின் வழியே உருகி வெளிவரும் நிலையில் அதனை செங்குத்தாக நிறுத்தி அதனை சூடேற்ற உள்ளே உள்ள சிலை முழுவதும் உருகி வெளியேறிவிடுகின்றது. வெளிவரும் மெழுகுக் குழம்பை அடுத்தடுத்து உபயோகித்துக் கொள்ள அதனை பாத்திரத்தில் பெறப்படுகிறது. மெழுகு வெளியேறிய பின்னர் அந்த மண் பூச்சு ''கரு'' (Mould) எனப்படுகின்றது. இது Negative Form ஆகும். இதனை பானை சூளை போடுவது போல இந்த கருவினையும் சூளை போட்டு கடினப்படுத்தப் படுகிறது. செம்பு, பித்தளை, ஈயம், தனிமம், வெள்ளி முதலான பஞ்சலோகக் கலவைகளை உருக்கி இந்த கருவினுள் உட்செலுத்தி பின்னர் தண்ணீரில் இட்டு குளிர்விக்கப்பட்டு இப்போது மண்பூச்சு உடைக்கப்படுகின்றது. மெழுகில் நாம் கண்ட அதே படிமம் இப்போது உலோகத்தில் நம் கண் முன்னே நிற்கிறது. இதனை சிற்றுளி கொண்டு செதுக்கி அரத்தினால் ராவி அதன்பின் சீவுலி கொண்டு சீவி மெருகூட்டப்பட்டு அதன்பின் உப்புக் காகிதம் (எமரிஷீட்) கொண்டு தேய்த்து அலங்கார வேலைப்பாடு செய்யப்படுகின்றது. பின்னர் பீடத்தில் ஜடிபந்தனம் செய்து அதன் பின்னர் முகம் வேலையில் கவனம் செலுத்தப்படுகின்றது.

''யத் பாவம் தத் பவதி''

அதாவது நாம் என்ன நினைக்கின்றோமோ அது எதிரில் நிற்கும் என்பது போல நம் உள்ளத்தின் வெளிப்பாடு சிற்பத்தின் முகத்தின் வெளிப்பாடாக அமையும். எனவே அமைதியான நேரத்தில் சந்தோஷமான சூழ்நிலையில் சிற்பத்தின் முக அமைப்பில் ஈடுபட்டு தீர்மானம் முடித்து பின்னர் மெருகூடப்படுகின்றது. நயனோன்மீலனம் எனப்படும் கண்திறப்பு (மானசாரம்) (நவதுவாரங் களையும்) திறந்து உரிய பூஜை செய்து வீட்டிலோ கோவிலிலோ உயிர் பெற்ற சிற்பமாக வழிபாட்டில் இடம் பெறுகின்றது. சிலைக்கு உயிர் உண்டா? என வினா எழும்பும் போது, ராமர் பாதம் பட்ட கல் அகலிகையாக உருபெற்றதை நம்பும் நாம் ஆத்மார்த்தமாக வடிக்கப்பெற்ற இச்சிலைக்கும் உயிர் உண்டு என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. மஞ்சள் தூளெடுத்து பிடித்து வைத்து அதற்கு பிள்ளையார் என அழைத்து குங்குமம் இட்டு வணங்குகிறோம். ஆனால் ஒரு சிலை செய்யும் முன் அதன் உருவத்தை மனதில் தியானம் செய்து மெழுகை எடுத்து உருட்டும் போது (மதுச்சிஷ்ட விதானம்) கால் ஜீவனும், அச்சிலை உலோகத்தில் வார்ப்பு செய்யும் போது அரைஜீவனும், கண் திறப்பின் போது முக்கால் ஜீவனும், ஆலயத்தில் உரிய கிரியைகளுக்குப்பின்

மந்திரோக்தமாக கண் திறந்து கும்பாபிஷேகம் செய்யும் போது முழு ஜீவனும் வருவதாக நம் சிற்ப சாஸ்திரத்தில் தெரிவிக்கின்றது. இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த சிற்ப கலைப்பணியை மரபு மாறாமல் இன்றளவும் மகாமகம் நடைபெறும் கும்பகோணம் அருகே சுவாமிமலையில் பல சிற்ப கலைஞர் குடும்பங்கள் கலைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் படைப்புகள் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா மட்டுமல்ல, உலகளவில் இடம் பெற்று வருவது குடந்தைக்கு பெருமை தானே !





டபீர்பண்டிதரும் கும்பகோணமும்

முனைவர் சு. சாந்தி, நடுக்காவேரி

தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாபசிம்மன் ஆட்சிக்காலத்தில் மிகச்சிறந்த அரண்மனை நிருவாக அலுவலராக விசுவநாத பண்டிதர் என்பவர் திகழ்ந்தார். அவரது நிருவாகத் திறமையால் மராட்டியர் ஆட்சியில் அமைச்சர் பதவி உயர்வு கிடைத்தது. அதன் பின்னர் அரசரின் அன்பான ஆதராவால் டபீர்பண்டிதர் என்று பெயரிட்டு அழைக்கப்பட்டார். டபீர் என்பது பாரசீகச் சொல் ஆகும் இச்சொல்லிற்குச் செயலர் (SECRETARY) என்று பொருள் கூறுவர். இவரது இயற்பெயர் நாரோ பண்டிதர் (Naroo Pandit) என்பதாகும். இவரது பேரன்களாக நாரோ விசுவநாத், நாநாஜி கங்காதர் ஆகிய இருவரும் வாழ்ந்துள்ளனர்.

டபீர் பண்டிதர் அமைச்சர் பதவி ஏற்றபோது ஆற்காட்டு நவாப்பின் படையெடுப்பால் தஞ்சையில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அதனால் கி.பி.1771 இல் ''அமானி'' என்ற முறை செயல்படுத்தப்பட்டது. அமானி முறையின்படி அரசு நில நிருவாக அலுவலர்கள் கடந்த பத்து ஆண்டின் மொத்த விளைச்சலைக் கணக்கிட்டு அரசுக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையை மொத்தமாக வசூல் செய்துகொள்வர். ஆனால் டபீர் பண்டிதர் புது செயல்முறையாக பத்து ஆண்டுகளின் மொத்த வருமானத்தை அறிந்து அதன் சராசரியைக் கணக்கிட்டு அதன்படி நிலத்தைப் பயிரிடுபவர் அரசிற்குத் தரவேண்டும் என்று ஆணையிட்டார். இவரது நிருவாகத் திட்டமானது ''டபீர்முறி'' எனப்பெற்றது.

கும்பகோணத்தின் சமய வரலாற்று நிகழ்வுகளில் ஒன்று சங்கரமடம் அமைக்கப் பட்டதாகும். பிரதாப சிம்மன் ஆட்சிக்காலத்தில் காஞ்சி பீடாதிபதிகள் காஞ்சியை விட்டு புறப்பட்டால் உடையார்பாளையத்தில் உள்ள மடத்தில் தங்குவர். இவர்களது நிலை அறிந்த தஞ்சை மன்னர் அவர்களை அழைத்து கும்பகோணத்தில் உள்ள டபீர் அக்கிரகாரத்தில் மடம் ஒன்றை காஞ்சி பீடாதிபதிகள் தங்குவதற்கு கட்டிக் கொடுத்து உதவினார். பீடாதிபதிகள் சமாதி ஆகும் பொழுது அந்த பீடத்திற்கு அவருடைய சிஷ்யரான ஸ்ரீசங்கராசார்ய ஸ்ரீமகாதேவேந்திர சரஸ்வதிசுவாமி அவர்களுக்கு பட்டம் கட்டினார். அதன் பின்னரே கும்பகோணம் சங்கரமடம் சிறப்படைந்தது எனக்கூறலாம். மகாமகத் தீர்த்த விழாக்களைத் தொடர்ந்து நடத்திவந்த பெருமை இம்மடத்திற்கு உண்டு. கும்பகோணத்தில் அமைந்துள்ள மற்றொரு மடம் வீரசைவமடமாகும். மகாமகக்குளத்தின் வடகரையில் அமைந்துள்ளது. இதற்கு ''பெரியமடம்'' என்றும் பெரியட்டழைப்பர்.

பிரதாபசிம்மரின் மந்திரியாகிய டபீர் பண்டிதர்கி.பி. 1763 ஆம் ஆண்டில் திருவையாற்றில் உள்ள திவான்வாடாவில் பணிமேற்கொண்டு வந்த பிராமணர்களுக்கு பிரதாபசிம்மரின் முயற்சியால் அங்கு அக்கிரகாரத்தை ஏற்படுத்தியுள்ளார். தஞ்சை மராட்டிய மன்னர்களின் அரண்மனை மோடி ஆவணக் குறிப்பால் இந்த அக்கிரகாரம் குறித்த வரலாற்றை அறியமுடிகின்றது. டபீர் பண்டிதரின் கிராமங்களாக முகாஸா கிராமம் சொக்கசூ, தளயனூர், நன்னிமங்கலம் ஆகியவை குறிப்பிடப் படுகின்றன. இக்கிராமங்கள் அனைத்தும் டபீர் பண்டிதரின் நேரடிப் பார்வையில் நிருவகிக்கப் பட்டவையாகும்.

பிரதாபசிம்மகரின் மகன் இரண்டாம் துளஜா காலத்தில் (1765) கும்பகோணத்தில் டபீர் பண்டிதரின் பெயரில் டபீர் அக்கிரகாரத்தை ஏற்படுத்தியதை மோடி ஆவணம் கூறுகின்றது. இவரது பெயரில் ''டபீர்குளம்'' ஒன்றும் உள்ளது. இக்குளத்தின் அருகில் பள்ளிக்கூடம் ஒன்று செயல்பட்டதையும் மோடிக்குறிப்பால் அறிய முடிகிறது. டபீர்பண்டிதர் அக்கிரகாரத்தை ''பைமாயேஷ்'' செய்வதற்கான சேவகனுடைய பிரார்த்தனையைப் பற்றிய செய்தியை 1847 ஆம்

ஆண்டு மராட்டியர் மோடி ஆவணம் குறிப்பிடுகின்றது.

''கும்பகோணத்தில் ரா. டபீர் அக்கிரகாரத்தை அளந்து பைமாயேஷ் செய்வதற்கு பைமாயேஷ் காரர் வந்திருக்கிறார். அவர் மேற்படி அக்கிரகாரத்தை வீடு கட்டும் நிலம் என்று எழுது வதற்காகச் சொல்லுகிறார். அதை சர்வமானியம் அக்கிரகாரமென்று எழுதச் சொன்னால் அதற்குள்ள ஆதரவுகளைக் காட்ட வேண்டி இருக்கிறது. அவர் அப்படி எழுத சம்மதப்படவில்லையாகையால் மேற்படி ஆதரவுகள் ரிகார்டு ஆபிசிலிருப்பதில் நகலை அனுப்பவேண்டும் என்று அந்த அக்கிரகாரத்தின் ஜனங்களை எல்லாம் நமக்கு கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார்கள் இவ்விசயத்தில் ரிகார்டு ஆபிஸர்களுக்கு உத்தரவிடவேண்டுமென்று சேவகனுடைய பிரார்த்தனை'' என வரும் தஞ்சை அரண்மனை அலுவலக நிருவாக நடைமுறைச்செய்தியை மோடி ஆவணம் கூறுகின்றது. இரண்டாம் சிவாஜியின் ஆட்சிக்காலத்தில் பைமாயேஷ் வேலை நடைப் பெற்றது. ''பைமாயேஷ் முறை 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சியாளர் இந்தியாவில் நடத்திய நில அளவுமுறைகளில் ஒன்றாகும். வீடுகள் கட்டுவதற்குரிய இடம் தேர்வு செய்யப்பட்ட பின்னரே வீடு கட்டும் இடம் தீர்மானிக்கப்பட்டது என்பதையும், அக்கிரகார வீடுகள் என்றால் அதற்குரிய உரிமையானது மன்னர்களின் அதிகாரத்திற்குரியது என்பதால் இடத்தொடர்பான ஆணைகள் கோரப்பட்டதையும் தஞ்சை மராட்டியரின் அரண்மனை மோடி ஆவணம் புலப்படுத்துகின்றது. மராட்டியர் காலத்தில் அக்கிரகார வீடு விற்பனை, வரி உரிமைகள் மன்னர்களே தீர்மானித்தனர் என்பதையும் ஊகிக்கமுடிகின்றது.

டபீர் பண்டிதர் அக்கிரகாரத்தில் சில வீடுகள் மட்டுமே தற்பொழுது பழமையுடன் காணப்படுகின்றது. இவ்வீடுகளின் திண்ணையில் அமைந்துள்ள மரத்தூண்கள் அழகிய வேலைப்பாடுகளுடன் உள்ளன. மற்ற வீடுகள் இடிக்கப்பட்டு புதிய வீடுகளாக மாற்றப்பட்டுள்ளன. குளம் செப்பனிடப்பட்டால் அந்த அக்கிரகாரத்தின் சிறபியல்புகளை அறியும் வண்ணம் அதன் சுற்றுச்சூழல் வெளிப்படும்.

விழாக்காலங்களில் அரிச்சந்திரநாடகம் நடத்தவும் சியாமளாதேவிக்கு கரகம் உக்கிரகாளிக்குப் பூஜைகள் நடத்தி இரவில் இரணிய நாடகமும் நடத்த கும்பகோணம் ''டபீர் குளம்'' சாலையில் உள்ள 40 வீட்டினர் உத்திரவு வேண்டியுள்ளனர் என்ற குறிப்பால் டபீர் அக்கிரகாரகுளத்தின் சாலையில் 40 குடும்பங்கள் இருந்துள்ளன என்பதை ஆவணச் செய்தியால் அறியமுடிகிறது. மேலும் குளக்கரையின் அருகே நாடகங்களை நிகழ்த்தியுள்ளனர் என்பதும் தெளிவாகின்றது. இதே போன்று கோட்டைக்கு வெளியே தஞ்சை கீழவாசல் பகுதியில் ''டபீர்குளம்'' டபீர் நாரோபண்டிதர் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தஞ்சை மேலவீதியில் டபீர் இராமசாமி கோயிலும் அமைந்துள்ளது.

கி.பி.1856-ஆம் ஆண்டில் நடைபெற்ற நில விற்பனை சாசனம் ஒன்று ''டபீர் தெருவிலிருக்கும் சங்கராச்சாரியார் அறிவேன்'' என்னும் குறிப்பால் அக்காலத்தில் கும்பகோணம் டபீர் அக்கிரகாரம் முக்கியமான குடியிருப்புகளில் ஒன்றாக இருந்துள்ளதை அறிமுடிகிறது.

விசயதசமி நாளில் (1768 இல்) டபீர் பண்டிதர் ''பூகண்ஜீ காசிதாஸ்'' ஸாவகாருடைய கடையில் 1000 வராகன் மதிப்புடைய வைரப்பதக்கம் ஒன்றை வாங்கி இரண்டாம் துளஜாவிற்குப் பரிசாக

கொடுத்தார் என்ற ஆவணக்குறிப்பால் மராட்டிய மன்னர்கட்கும் உயர் அலுவலர்கள் காணிக்கை கொடுக்கும் வழக்கத்தையும், சீமகத்திலிருந்த மரியாதையையும் அறியமுடிகிறது.

மேலும் காசிமடகுமரகுருபரத் தம்பிரான் (1756-90) என்பவரிடம் டபீர் பண்டிதர் இராமேஸ்வரம் தருமத்திற்காக தங்களிடம் வைத்திருந்த (டிபாஸிட்) மொத்ததொகை 3500-ல் மதுரைச்சக்கரமாக 2000 கொடுத்தார். இதன் வட்டி வருமானத்தினின்று இராமேஸ்வரத்தில் வேதாத்தியயனம், தண்ணீர்ப்பந்தல், நந்தவனம் போன்றவை எப்போதும் நடத்திவர தம்பிரான் அவர்கள் ஏற்றுக்கொண்டதையும் மோடி ஆவணம் கூறுகின்றது. இதனால் டபீர் பண்டிதர் சமயப்பணியிலும் நிருவாகப்பணியிலும் அதிக ஆர்வம் காட்டியவர் என்பதை அவரது அறக் கொடைகளும் பரிசுகளும் உணர்த்துகின்றன.

டபீர் பண்டிதர் பிரதாபசிம்மன், 2-ம் துளஜா ஆட்சிக்காலத்தில் நிதித்துறை மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றது மட்டுமன்றி துளஜா ஆட்சிக்காலத்தில் ஆற்காடு நவாப் முகம்மது அலி தன் மகன் உம்தத்உல்உமாரா தலைமையில் படையை அனுப்பி தஞ்சை மற்றும் வல்லம் கோட்டையைக் கைப்பற்றச் செய்தார். மன்னர் நவாபுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அவ்வுடன்படிக்கையின் படி 60 லட்சம் ரொக்கமும், நகைகளும் தஞ்சை சீமையின் பாதி பகுதியையும் அடமானமாக எழுதிக் கொடுத்தார் இவற்றை பெற்றுக் கொண்டு திருச்சி சென்ற ஆற்காடு நவாப் தஞ்சையின் சிறந்த சேவகாரகவும் நிருவாகியாகவும் திகழ்ந்த டபீர்பண்டிதருக்கு தஞ்சை ராஜ்ஜியத்தின் விசாரணை செய்யும் அதிகாரத்தையும் உரிமையையும் கொடுத்தார். ஒரு சமயம் தஞ்சை மானோஜிராவ் என்பவரின் முறையற்ற செயலால் அவரை தண்டிக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மன்னர் அவரை தண்டிக்காமல் பணிநீக்கம் செய்து இப்பிரச்சனைக் கான தீர்ப்பை டபீர்பண்டிதரிடம் ஒப்படைத்தார். அத்தகைய நிருவாகத்திறன் பெற்றவர் என்பதை இந்த வரலாற்று நிகழ்வு நினைவு கூறுகின்றது.

டபீர்பண்டிதர் தன் பெயரால் கும்பகோணத்தில் உருவாக்கப்பட்ட டபீர் அக்கிரகாரத்தில் சங்கரமடத்தை ஏற்படுத்த இடமும் வழங்கி மராட்டிய மன்னருக்கும் தம்பிரான்களுக்கும் பலகொடைகளையும் வழங்கியுள்ளார் என்பதையும் ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன. எனவே கும்பகோணத்தின் வரலாற்றில் தனித்ததொரு இடத்தை டபீர் பண்டிதரின் பணிகள் பெற்றுள்ளன என்பது தனி மனிதத்திறனுக்கும் தனிமனிதனுடைய சமய, சமூகத் தொண்டிற்கும் கிடைத்த பரிசாகக் கருதலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கும்பகோணம் மகாமகத்திருவிழா நடைபெறும் இடமாக விளங்குகிறது. இவ்விழா பன்னிரண்டு ஆண்டுகட் கொருமுறை நடைபெறும். மாசி மாதத்தில் குரு சிங்கராசியில் இருக்க முழுமதியோடு மகம் சேரும் நன்னாளில் இவ்விழா நடைபெறும். தஞ்சை கோட்டை வடக்கு வீதியில் உள்ள வீரப்பன், ஆறுமுகம், நாகன், பழனி போன்றோர் மன்னர் 2-ஆம் சிவாஜிக்கு பணிவுடன் எழுதிய விண்ணப்பத்தில் கும்பகோணத்தில் நடைபெறும் மகாமக விழாவிற்கு பணிகளைச் செய்வதற்கு ஆட்கள் தேவை என்பதை அறிந்தோம். மகாராஜா அவர்கள் பணிகளைச் செய்ய தங்களை நியமிக்க வேண்டும் என்று அவர்கள் எழுதிய கடிதத்தை மோடி ஆவணம் கீழ் வருமாறு கூறுகிறது.

''மகாராஜா சாயேப் அவர்கள் திவானத்துக்கு கோட்டை வெளிவடக்கு வாசல் தெருவிலிருக்கும் மருதை க. வீரப்பன், உ. ஆறுமுகம், கூனாகன், சு. பழனி தெண்டனிட்டு எழுதிக்கொடுத்த யாதி என்னவென்றால் மாமாங்க சவாரிக்கு வேலைக்கார சனங்களை சேவுகம் வைக்கிறதாய் நாங்கள் கேள்வி ஆகி வந்திருப்பதால் எங்களுக்கு என்ன வேலை தெரியுமென்றால் கரிதி மகாலில் கருதி பண்ணப்பட்ட தமுக்கு தட்டு, மட்டத்தட்டு, பெரியகூடை, மண்தட்டு, சிப்பாய்களுடைய தலப்பாய்ப் பொட்டி, வேட்டைக்குப் போனால் காடுகள் வெட்டி ஒழுங்குபடுத்துவோம். அரண்மனை தோட்டங்களில் மூங்கில் வெட்டுவோம். முள்ளுகழிப்போம். இந்த வேலைகள் எங்களுக்கு தெரிய வருமாகையால் அரண்மனையாறவர்கள் ஏழைகளாகிய எங்கள் பேரில் கிருபை செய்து வேலைகளுக்காக எங்களைச் சேவுகம் வைத்துச் செய்து...

சவரட்சனை	யிந்தக்கிறல் வீரப்பன்
சூஅளருடய	ஆறுமுகம்
பிப்ரவரி 10	னாகன்
	பழனி

என்ற செய்தியால் 1850-ல் மகாமக வேலைக்காக விண்ணப்பம் கொடுக்கப்பட்டச் செய்தியை அறிமுடிகிறது.

இவ்வாறாக தஞ்சை மராட்டிய மன்னர்கள் மகாமகம் விழாவை சிறப்பாகக் கொண்டாடி யுள்ளனர். விழாக்காலத்தின் போது மன்னர் தம் குடும்பத்தார்களுடன் கும்பகோணம் சென்று மகாமகப் புனித தீர்த்தத்தில் நீராடி வருவது வழக்கமாகும். மன்னர் ஷாஜி தனது தாய் தீபாம்பாளுடனும் சகோதாரர்களான முதலாம் சரபோஜி, துளஜா ஆகியோருடன் கும்பகோணம் சென்றுள்ளார். மன்னர் இவ்விழாவிற்குச் செல்லும் போது அவருடன் தஞ்சை அவைப் புலவர்களையும் அழைத்துச் சென்றுள்ளார் எனும் ஆவணக்குறிப்பு கிடைக்கின்றது.



மகாமகமும் மங்கல நீராடலும்

ஆ.பா. திருஞானசம்பந்தன், எம்.ஏ.,(வரலாறு) எம்.ஏ., (சமூகவியல்)
தொல்லியல் துறை, தஞ்சாவூர்.

கடவுள் என்ற 'பதி'யையும், உயிராகிய 'பசு'வையும் உலகமாகிய பாசத்தையும் முப்பொருளாகக் கொண்டு உருவானதே 'சிவ' சைவ சமயம். இவை எக்காலத்தும் நிலைத்து நிற்பவை. அதனால் 'அனாதி' எனப்படும். பதி என்ற கடவுள் உலகில் உள்ள எந்த உயிர்களையும் படைக்கவில்லை. உயிர்களும் கடவுளைப் போன்று அனாதியானவை யே. ஆனால் உயிரும் உலகமும் ஒன்றையொன்று தழுவி செயல்படுகின்றன. உலகம் தூய்மையற்று மாசுக்கள் நிறைந்திருப்பதால் அம்மாசு உயிர் மீது படிந்து அதன் சுயதன்மையை இழக்கச் செய்கிறது. அதாவது உயிராகிய பசுவின் மீது ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்கள் படிந்துள்ளன. அதனை நீக்க உயிரால் இயலாததால் கடவுள் என்ற பதியை நாடுகிறது.

நீரின்றி அமையா இவ்வுலகில் நீக்கமற நிறைந்திருக்கும் பதி என்ற இறைவன் தீர்த்த வடிவமாகவும் விளங்குகிறான். ''ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்'' என எம்பெருமானை திருமுறைகள் போற்றுகின்றன. ஆதலால் உயிராகிய 'பசு' மக்களாக உடல் கொண்டு பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி தம் மீது படிந்த பாசமாகிய மும்மலப் பாவங்களை நீக்க முற்படுகின்றன. இதனால் பல உயிர்களின் மாசுகளை தன்னிடத்தே பெற்ற கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சரஸ்வதி, காவிரி, குமரி, பயோஷினி (பாலாறு) மற்றும் சரயு ஆகிய ஒன்பது நதிகள்தம் புனிதத்தை இழந்தன. இந்நதிகள் தம்மீது படிந்த பாவச் சுமையின் வெப்பத்திலிருந்து வெளிப்பட நவகன்னியராக ஈசனை வேண்டி நீண்ட தவம் மேற்கொண்டனர். நவநதிகளின் தவப்பயனால் பரநிலையிலிருந்த எம்பெருமான் வேடன் உருத்தாங்கியுள்ளார். உலகின் பிரளத்திற்குப் பின்னர் பிரம்மனின் 'சிருஷ்டி பீஜம்' தாங்கிய குடந்தை அவ்வேடன் தன் கை அம்பால் உடைத்துள்ளார். அக்குடத்தின் மூக்கு பகுதி இருந்தவிடம் 'குடமூக்கு' எனப்பட்டது. இக்குடமாகிய கும்பத்திலிருந்து பெருக்கெடுத்து வெளிப்பட்ட சிருஷ்டி பீஜத்துடன் கூடிய 'அமிர்தம்' பூவுலகில் பரவி 'மகாமகத் தீர்த்தமாக' நிலை பெற்றது. ஊர்ப் பெயரும் குடந்தை என்ற கும்பகோணம் எனச் சிறப்புற்றது.

இம்மகாமகத் தீர்த்தத்தில் நவ கன்னியரான புண்ணிய நதிகள் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை நீராடி தம் மீது படிந்த பாசம் (பாவங்கள்) நீங்கப்பட்டு இறையருளால் புனித மடைகின்றனர். நதிகளின் சங்கமத்தால் புனிதமடையும் நன்னாளில் உயிர்களாகிய மக்களும் தம் பாசங்கள் நீங்கிட தீர்தமாட வேண்டும். அதனைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் எனத் திருவுளம் கொண்ட எம்பெருமான் உலகியல் சுழற்சியின் அடிப்படையில் மாசி மாத மகத்தை மனதில் நிறுத்தியுள்ளார். வருடந்தோறும் மாசி மாதத்தில் மகம் நட்சத்திரம் வரும் நாள் மாசி மகம் எனப்படும். ஆனால் குருவான வியாழ பகவான் வருடத்துக்கு ஒரு இராசி என பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை தான் சிம்ம இராசிக்கு வருவார். மாசிமாதத்தில் சூரியனும் கும்ப இராசியில் இருப்பதால் மாசி மாதத்து பௌர்ணமியில் மகம் நட்சத்திரமும் சேரும் நாள் ''மகாமகம்'' எனப்படும். அனைத்து புண்ணிய நதிகளும் இம்மகாமகத்தில் ஒன்றிணைவதால் பிரம்ம தீர்த்தம் முதலாக எண்திசைக் காவலர்களான இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் மற்றும் ஈசானன் போன்றோரும், தேவகணங்களும், முனிவர்களும் தம் பெயர்களில் பல தீர்த்தங்களை அமைத்துள்ளனர். ஆதலால் இம்மகாமகத் திருக்குளம் அறுபத்து ஆறுகோடி தீர்த்தங்களைக் கொண்டுள்ளதாக சிறப்பிக்கப் படுகிறது. இங்குள்ள தீர்த்தங்களில் நீராடுவதால் அனைத்து புண்ணிய நதிகளுக்கும் நேரில் சென்று பாவங்கள் நீங்கப் பெற்ற முழு நிறைவுடன் வாழ்வில் வளம் பெருகும்.

''சக்திமிக்க வியாழந்தான் சிங்கத்தி
லோராண்டு தங்க
மாசில்லா மாசித் திங்களிலே முழுமதியு
மிருதின மேய
கும்பத்துடன் ஆதவனும் உடனிருக்கும்
மகாமகமெனும் திருநாளில்
ஆறிரண்டாண்டிற்கோர் முறை புண்ணிய
பூமியாம்
குடந்தையில் சந்திக்கும் புண்ணிய
நீர்நிலைகளில் நீராடல்
மாந்தர் தம் தவப் பயனே''.

இம்மகாமகத் திருக்குளத்தின் கிழக்கே அபிமுகேஸ்வரர் எழுந்தருளியுள்ளார். வடக்கில் விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் திருக்கோயிலும், தென்மேற்கு மூலையில் கௌதமேஸ்வரர் திருக்கோயிலும் எடுப்பிக்கப் பட்டுள்ளன. அடுத்து திருக்குளக் கரையின் நான்கு புறமும் தீர்த்தவாரியாக பதினாறு சிற்றாலயங்கள் அமைந்து மேலும் பெருமை சேர்க்கின்றன. இத்திருக்குளத்தில் கன்னியா தீர்த்தம் மற்றும் அறுபத்தாறு கோடி தீர்த்தத்தை மையமாகக் கொண்டு நவநதிகள் ஒன்பது தீர்த்தமாகவும், எண்திசைக் காவலர்கள் எட்டு தீர்த்தமாகவும், பிரமன் நீராடிய பிரம்ம தீர்த்தமும் ஆக பத்தொன்பது தீர்த்தங்கள் இடம் பெற்றுள்ளன. அனைத்து தீர்த்தங்களிலும் நீராடும் நேரங்களில் தனித்தனியாக அந்தந்த தீர்த்தத்துக்கு உரிய தெய்வங்களை வணங்கி உத்தரவு பெற வேண்டும். சிவாகம விதிப்படி சங்கற்பம் செய்து, தான, ஸ்நானாதி விதிகளை கடைப் பிடித்து மனவொழுக்கத்துடன் சிவனை தியானித்து நீராடினால் இம்மை, மறுமை இன்றி பேரின்பத்தை துய்க்கலாம். அனைத்து தீர்த்தங்களிலும் நீராட இயலாதவர்கள்பன்னிரண்டு இராசிகளில் தமக்குரி ய இராசி தீர்த்தத்தில் நீராடி வீடு பேற்றினை அடையலாம். இறுதியில் பொற்றாமரை திருக்குளத் திலும், காவிரியிலும் கட்டாயம் நீராட வேண்டும்.

மனித உடலில் உயிர்களின் பிரவேசத்தால் ஏற்படும் ஜனனம் பன்னிரண்டு இராசிகளின் அடிப்படையிலேயே நிகழ்கிறது. மகாமகத் தீர்த்தத்தில் மையமாக இடம் பெற்றுள்ள கன்னியா தீர்த்தம் என்ற அறுபத்தாறு கோடி தீர்த்தத்தினை 12 கூறாகக் கொண்டு குளக்கரை வரை 30^0 கோணத்தில் அடையாளமிட்டால் ஒவ்வொரு இராசிக்கும் குறிப்பிட்ட பகுதிகளை நிர்ணயம் செய்யலாம்.

1. மகாமக திருக்குளத்தின் வடக்கே மையப் பகுதியிலிருந்து கிழக்காக 30^0 கோணத்தில் நவகன்னியரான ஒன்பது நதிகளுடன் இங்கு எழுந்தருளிய காசி விஸ்வநாதர் திருக்கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஒன்பது நதிகளும் இடம் பெற்று வழிபடப்படுகின்றன. திருக்குளத்தின் மகர இராசிக்குரிய இவ்விடத்தில் **குபேர தீர்த்தம்** இடம் பெற்றுள்ளது.

2. மகரத்துக்கு அடுத்து கும்ப இராசிக்கான வடகிழக்கு மூலையில் **கோதாவரி தீர்த்தம்** அமைந்துள்ளது.

3. மகாமகத் தீர்த்தத்தின் கிழக்குத் கரையில் அபிமுகேஸ்வரர் திருக்கோயில் எடுப்பிக்கப் பட்டுள்ளது. அக்கோயிலின் வடகிழக்கு அதாவது முதல் பாதியான ஈசானிய மூலை **மீன இராசிக்** குடையது. இப்பகுதியில் மகாமகத் திருக்குளத்தில் மூன்று தீர்த்தங்கள் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது மூலையில் **ஈசானிய தீர்த்தமும்,** தொடர்ந்து சிறிது தூரத்தில் தெற்கு நோக்கி **நர்மதை தீர்த்தமும்,** இறுதியாக அதன் மேற்கே மையப் பகுதியில் **இந்திர தீர்த்தமும்** இருக்கின்றன.

4. அடுத்த இராசியான **மேஷம்** தென்கிழக்கான அக்னி மூலையில் இருதீர்த்தங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக **சரஸ்வதி தீர்த்தமும்** முடிவான மூலையில் **அக்னி தீர்த்தமும்** அடையாள மிடப்பட்டுள்ளன.

5. கிழக்கிலிருந்து மேற்காக தென்திசையில் முதலிடம் பெறுவது **ரிஷப இராசியாகும்**. இப்பகுதியில் **காவேரி தீர்த்தம்** மட்டும் உள்ளது.

6. தென்திசையின் மையப் பகுதி வரை உள்ள **மிதுன இராசியில் யமன் தீர்த்தம்** நிறைந்துள்ளது.

7. அடுத்த இராசியான கடகத்திற்கான பகுதியில் தீர்த்தங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

8. தென்மேற்கே இறுதியாக **சிம்ம இராசி** இடம் பெறும். இது நிருதி மூலை என்பதால் **நிருதி தீர்த்தமும்,** ஆரம்பத்தில் குமரி தீர்த்தமும் கொண்டுள்ளது. இப்பகுதியின் திருக்குளக்கரையில் கௌதமேஸ்வரர் திருக்கோயில் உள்ளது.

9. மேற்கு திசையில் முதல் பாதியில் **பாலாறு தீர்த்தம்** மட்டும் **கன்னி இராசி**க்கான பகுதியில் அமைந்துள்ளது.

10. அடுத்த இராசியான **துலாம்** மூன்று தீர்த்தங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் முதலாவதாக **தேவதீர்த்தமும்,** மேற்கிலிருந்து வடக்காக **வருண தீர்த்தமும்,** இறுதியாக **சரயு தீர்த்தமும்** இடம்பெற்றுள்ளன.

11. வடக்கு திசையில் மேற்கிலிருந்து கிழக்காக உள்ள பகுதி **விருச்சிக இராசியின்** இருப்பிடமாகும். இது வாயு மூலை எனப்படுவதால் **வாயு தீர்த்தமும்,** தொடர்ந்து **கங்கை தீர்த்தமும்** இடம் பெற்றுள்ளன.

12. இறுதியாக **தனுசு இராசி**க்கான இடம் வடக்கு திசையில் மையப் பகுதி வரை, அதாவது கரையிலுள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயிலின் ஆரம்பம் வரை அடையாளமிடப்படுகிறது. இங்கு **பிரம்ம தீர்த்தமும், யமுனை தீர்த்தமும்** அமைந்துள்ளன.

ஆக பன்னிரண்டு இராசிகளுக்கும் பத்தொன்பது தீர்த்தங்கள் மகாமகத் திருக்குளத்தில் இடம் பெற்றுள்ளதால் அந்தந்த இராசியில் பிறந்தவர்கள் அதற்குரிய தீர்த்தத்தில் நீராடல் அவசியமாகும் அல்லது இத்திருக்குளத்தின் மையப் பகுதியில் உருவாகி அனைத்து தீர்த்தப் பலன்களையும் ஒருங்கே வழங்கும் அறுபத்தாறு கோடி தீர்த்தத்தில் நீராடி நலம் பெறலாம்.

இவற்றுடன் கோயில்களின் மாநகராக விளங்கும் குடந்தையில் பிரமணின் குடத்திலிருந்து சிதறிய அமிர்தம் மண்ணுடன் கலந்ததால் உருவான ஆதிகும்பேஸ்வரர், தொடர்ந்து எடுப்பிக்கப்பட்ட நாகேஸ்வரர், சோமேஸ்வரர், காசி விஸ்வநாதர், பாணபுரீஸ்வரர், அபிமுக்தீஸ்வரர், கோடீஸ்வரர், அமிர்தகலசநாதர், காளேஸ்வரர், கவுதமேஸ்வரர் மற்றும் கம்பட்ட விஸ்வநாதர் ஆகிய பன்னிரு சிவாலயங்களிலிருந்தும் உற்சவர்கள் மகாமகத் தன்று புனித நீராடலுக்காக மகாமக திருக்குளத்தில் எழுந்தருளி, தீர்த்தவாரி திருவிழாவில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இப்புனித மகநாளில் அனைவரும் குடந்தையில் கூடுவோம். மகாமகத் தீர்த்தத்தில் நீராடி உலக மாயையிலிருந்து விடுபட்டு இறையருள் பெறுவோம்.

SWASTIKA

T.L.Subash Chandira Bose - Trichy

In all over the world, irrespective the religions and culture, the swastika symbol is a common "Universal Sacred Symbol".

In this article, are discussed about the origin of the name Swastika and its hidden sacred meanings . The name of Swastika was different. Previously, it was spelt as Savastika, but later both English and French accepted the spelling Swastika.

The Oxford Dictionary-1984: Swastika (swo's)n. ancient symbol formed by cross with equalarms when all arms are continued as far again at right angle clockwise (esp. as symbol of Nazi) or counter-clockwise. {f.Skr. Svastika (Svasti well being f. su-good + asti - being)}

Little French Dictionary: Etymologically, Sanskrit word Savastika signifies hapiness, pleasure and good luck has a prefix Su, denotes the meaning"Good" and asti, as being or existence-Good existence or auspicious occasion, existing good, signifies "Good'" well excellence or prosperity. In Vedic texts, it occurs several times as noun in the sense of happiness and as adverb "well" or "haill".

We shall find the meaning for "Su" and "asti" But the meaning for the word "Ka" is missing in the above dictonaries. By knowing the importance of most sacred word "Ka", we are beginning our discussion.

Sun (Surya)

We would like to refer Navagraha-Kosa, (Volume I) pages-72-73, by S.K. Ramachandra Rao. " the Surya's is chariot is said to go round the mythical mountain, Mahameru, which is the centre of universe, golden coloured and more brilliant than the sun. This is situated according to puranic accounts in the midst of eight mountains of similar splendour: Tara and Devakuta to the east, pavamana and pariyatra in the west, Kailasa and karavira to the south, Trismga and Makaragiri to the north.

On the top of the Mahameru, there are nine settlements. The center one is called Brahma-Loka (Brahma-Puri), ten thousand Yojanas Square. Surrounding this in eight directions are quarters of the guardians of directions ("dikpalakas"), twenty-five yojanas in extend. Devadhandika or Amaravati in east (India). Tejovati in the south - east (Agni), Samayamani in the south (Yama), Krshnanjana in the south-west (Nirriti), Nimnalochani or Sraddhavati in the west (Varuna), Gandhavati in the north-west (Vayu), Vibhavari or Mahodaya in the north (Kubera), and Yosovati in the north-east (Isana)".

"While circulating the Mahameru, when Surya (Sun) makes his appearance in Devadhanika settlement of Indira in the east, it is dawn for us. When he moves over to Samyamani in the south (Tama's abode), it is

noon. When he arrives to at Nimna-lochani (Varuna's Settlement) in the west, we see the sun setting. When he comes to Vibhavari (Kubera's residence) in north, it is for us mid-night."

SWASTIKA

The symbol of Swastika is interpreted as representing the movement of sun in the east-west direction: the four arms stand for the position of the sun at midnight, sun-rise, noon and sunset.

In the above we find the word "dikpalakas: or "dik" + "Pala" + "Kas". Dik means disa or direction, pala means kumara and kas means Lords.

If the word "Asta" added, "asta-dikpalakas": Asta-Eight, Dik-Direction and palakas- quarters of the guardians of eight direction". The eight directions denoted as "astadik". Let us add the word "Sw" and "Ka" at the beginning and end respectively, Sw+asta+Dik+Ka or "Swastadikka" and which could be possibly become as "Swasthika" in later part.

In Sanskrit, the Swastika symbol is used for any auspicious object (Svastiko-mangala-dravya, medini Kosa 1.166). "Matsya-Purana" A study by Agarwal V.S. Enumerates Brahma as cosmic Svastika. Veda is associated with puranas with Brahama who enumerates the Vedic Knowledge in four-fold pattern or evolves the cosmos as a Svastika with four angels of 90 degree each, Rig Veda -1 155-6 Caturbhi Sakam navatim ca namabhih"

According to prof. Maxmueller " the origin of swastika symbol is from India and during panin's time(B.C. 450) he used the word swastika as the name of the particular sign in his old gramar.

SWASTISHREE

In india generally the word swastika is very common, In south India we find the word "Swastishree in the beginning of many ancient inscriptions. The word "Shree" used instead of "Ka"

We are surprised to observe the words "Swastishee" and shree" at the beginning of two Tamil scripts inscribed on a "Swastika shaped well constructed during 801 A.D. The inscriptions begins with which Swasthishree in fig. 1 and Shree in fig-2 are as under.

The word "Shree" will be always added in the name of the Gods, for example Shree Ganesha, Shree Muruga, Shreeman Narayan, Shree venkatachalapathi and shree. Lakshmi etc. The words "Shreeman" and "Shreemathi"

are the most respected words for male and female respectively.

SHREE OR SRI

In the secret Doctrine " Volume-I, P.380 - H.P. Blavatsky

"Then seated on a lotus

Beauty bright goddess, peerless Sri, arose

Out of the waves... Sir Monier Williams.

In the Secret Doctrine " Volume 2, P 76 H.P. Balavatsky Sri is the daughter of Bhrigu, one of the prajapatis and Rishis, the chief of the Bhrigus, the consumers " the aerial class of gods.

She is lakshmi, the wife of vishnu, and she is "the bride of Siva" (Gowri) and she is Sarasvathi, "the watery" the wife of Brahma, because the three gods and goddesses are one, under three aspects, Read the explanation by parasara in Vishnu Purana in BK. Ch, VIII (Vol. I, Wilson's translation, p.119) and you will understand

The Lord of Sri " is the moon, he says, and "Sri is the wife of Narayana, the Gods of Gods" Sri is lakshmi (Venus) is Indirani, as she is Sarasvathi, for in the words of parasara, "Hari (or Iswara "The Lord") is all the that is called male in the universe; Lakshmi is all that is termed female, There is nothing else than the Hence she is "female", and "God" is male Nature.

Cross :

In the book "Hidden Treasure of Vastu Shilpa Shastra and Indian Traditions" Derebail Muralidhar Rao, (P-23) It is also mentioned the importance of each directions in which the east (Poorva or Puurab) and North (Uttra) directions should not be blocked. Since it is the source of the East male and the North female issue. We also find in the above referred book the west (Paschima) is the source of Name, Fame and prosperity. The south (Dakshina) is the soruce of wealth, crops and happiness. The lines joining the all the four cardinal (N,E,W and S) directions is the formation of cross or plus (+) mark. The fig. 3 the symbol "+" (cross) with in a oblong found on a "Swastika" shaped well constructed during 801 A.D.

The Cross with in square divides a square into four parts, indicated in Mayamata chapter 7 "Diagrams" as pecaka (peca+ka) When we studied variuos ancient manuscripts we are surprised to know that "KA" is the "The One" in ancient numerical system and represents unity Since it is part of all numbers, it represents the ideal symbol of deity. It is the origin, the elementary.

The ancient numerical systems were initially orginated in India. and during the third Tamil Sangam period and in post Indus (Brahmi) numerals the number "One" was symbolized as plus (Cross) + mark. We have found many ancient inscriptions in Tamilnadu. in which the Tamil Letter "KA" is used for the number "One"

Ka the first consonant means the creation, crea which is marked by + symbol which denotes the unification of male and female energy or Siva and Sakti or truth and illusion. Shree Jaganatha Swamiji.

By knowing all this, our ancestors used the word " Swatishree" as an auspicious word at the beginning of the ancient inscriptions with the sacred meaning "let all the source of Name, Fame, prosperity, Wealth, crops and happiness flow "in" from all the four directions by the grace of the "Supreme"

Shree is Goddess of, and her self Fortune and prosperity.



SWASTIKA WELL - TIRUVELLARAI

THE SARASVATI MAHAL LIBRARY AND CONTRIBUTION OF RAJAH SERFOJI II

P.Perumal, B.Sc (Spl)., M.A., M.L.I.Sc.,
Conservator, T.M.S.S.M.Library, Thanjavur.

Thanjavur has been renowned as a great centre of Art, Culture and Literature for more than ten centuries. Successive generations of the Cholas, Nayaks and Maratha rulers have contributed and enriched the cultural greatness. Thanjavur is well known through out the world for its Brahadeswar Temple, magnficent Palace and the Sarasvati Mahal Library. The Sarasvati Mahal Library is one among the few medieval libraries that exists in the world. It is a treasure house of knowledge. It contains very rare and valuable collection of manuscripts, books, maps and paintings on all aspects of arts, culture and literature. The Encylopaedia of Britannica in its survey of libraries of world mentions this as" The most remarkable Library in India".

History of Library

During the reign of Nayaks of Thanjavur(1535-1675), the Library was formed and developed in the name of Sarasvati Bhandar. The Maratha rulers who ruled Thanjavur(1676-1832) has patronised and developed the royal palace Library. After the death of last Maratha queen, the Library was made as public Library in 1918 under the Charitable Endowment Act. After the visit of our former Prime Minister Mrs.Indira Gandhi, Goverment of India has constituted a three-member committee under the chairmanship of Dr.S.R.Ranganathan. The committee report was implemented in 1979 with generous funds received from the Government of India. In 1986 the Library was registered under the Tamilnadu Registered Societies Act 1975 with ex-officio members from State and Central Governments. The Library receives funds from Government of Tamilnadu for maintenance and fron Government of India for developmental activities. Among the Maratha Kings, Raja Serfoji II (1798- 1832) was an eminent scholar in many branches of learning. With great enthusiasm he took special steps for the enrichment of the Library.

At present it is a living monument for our culture and reflects the glory of Raja Serfoji II. It is a fitting tribute to the great collector Serfoji, that from 1918 the Library is named as the Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library. At present it is a living monument for our culture and reflects the glory of Indian culture.

Serfoli's Early Education

Raja Serfoji II was bom on 24-9-1777 and had his education under the guidance of Danish missionary father Schwartz. He was a scholar in English, French, Germany, Sanskrit, Tamil and Marathi languages. He came to power in 1798, but one-year only he ruled Tanjore. In 1799, he had a treaty with the British. Acording to the treaty the British appointed Collector for administration. He diverted his activities for the development of art and culture till his death in 8th March 1832.

Contribution to the Library

In India, most of the Palace Libraries were destroyed due to war. The famous King Tippu Sultan had a Library in his Palace. It was

taken away by the British, after the war with Tippu in 1799. We can find some of those Library books in the Asiatic Society Library, Calcutta. Raja Serfoji collected the descriptive catalogue of that Library prepared by Chrles Steuwert of Cambridge University and preserved in the library. It seems that Raja Serfoji's decision of making accord with British administrators helped to preserve this treasure house of knowledge.

Serfoji enriched the collection of this Library through various literary activities. He himself was author of quite a number of works in Sanskrit and Marathi. These manuscripts are preserved in this Library. He encouraged great Pandits in all branches of learning.

The Pandits well versed in Dharmasastra were appointed as Judges in his courts of Justice. A legal vade macum entitled "Vyavahara Prakasa" was compiled from varous smiriti texts for daily use in the conduct of administration and justice by the Pandits.

Raja Serfoji made a pilgrimage to Banaras in 1820. He took 300 people along with him, which included Pandits, copyists, artists and others. He employed Pandits to collect, buy and copy a vast number of works in Sanskrit from all the renowned centers of Sanskrit learning in the North and other areas. He commissioned his artist to draw the views of sixty-four bathing ghats of Banaras from East to West of the river Ganges in eight plates which is available in this Library.

The Maratha kings started Chattrams for catering and other physical needs of the pilgrims. Raja Serfoji started School attached to the most of the Chattrams under his control and imparted free education to village Children. For the use of little Children, Serfoji ordered to translate into simple Indian languages English books like Aesop's fables. He started the first printing press in 1805 in Thanjavur with Devanagari Script called "Navavidya KalasalaVarnayantra" for producing copies of all great works in languages for wider use and circulation among public. The Journal entitled "Indian Antiquary" vol.1 published in 1872 mentions that the Serfoji's printing press was the earliest printing press, which was started for Devanagari script printing in whole south India. The Types and Blocks were prepared using soft stone and hard wood. Even today the library preserves some of the books printed in press.

Raja Serfoji was running an Institution in Thanjavur called Dhanvantri Mahal. He devoted himself for the progress of research in Ayurveda, Siddha, and Unani in the Dhanvantri Mahal. Recipes of medicinal preparations were recorded in Manuscript form in 18 volumes. These manuscripts are embodied in the series of words named Sarabendra Vaidyamuraigal. Besides basic research in many ailments, excellent work had been done on disease like Cancer, Polio, Diabetes and Tuberculosis by this institution in Ayurvedic and Siddha field. The Library has published some in the Series.

There was an Opthalmic section in that Institution, which maintained the case history sheets for each patient with picture of the diseased eye, date of admission, types of treatment given and condition during discharge. The case historv sheets reveal that free treat-

ment was given to public and some amount was also given during discharge of the patients.

Raja Serfoji was a great composer and a musician and had left several musical compositions in Indian languages as well as in English. He collected nearly 150 musical notation books and more than thirty hand-written Indian musical notation copies are preserved in the library. Even now some of his compositions are performed in Maharastra.

Serfoji's Book collection

Raja Serfoji enriched this library by collecting not only manuscripts but also Books, Illustrated Manuscripts, Drawings, Atlases and Maps, Lithographic engravings, etc., Because of his multi-focal attraction he collected a large number of books in European languages. Now this Library has 3830 English books, 421 French books, 108 German books, 35 Danish books and few books in Dutch, Greek and Latin languages. Serfoji has autographed all the books in his collection. These books are mostly printed in London, Edinburgh and Paris and the year of printing is spanned from 1696 to 1830. These books dealt with all disciplines.

It has the richest collection on European languages and literatures, Medical Sciences, Chemistry, Astronomy, Geography, Explorations and Voyages, English Almanacs, Periodicals, Encyclopaedias etc., This collection has some rare and first editions of highly valued books.

Some are Dr.Johnson's Dictionary (5th edition, 1784 A.D.) in two volumes, A Pictorial Bible of 1791, Antoine Alaurent Lavoisier's Elements of Chemistry, first edition of Fourcroy' s major work, the General system of Cheimcal Knowledge in Eleven volumes, George Buffons 36 volumes of Natural History of the Earth (1749-1785).A catalogue for his book collection was also prepared in 1830. Under 27 Subject headings, titles are arranged alphabetically under each subjects.

Maps and Atlases

The Atlases and Maps collected by the Raja Serfoji are extraordinary important, which are preserved in the library. These Maps dealt with ancient History, Geographical details, Sea routes, Political divisions and their boundaries. The Maps were made with the compilation of land survey. In the Maps printed in 18th and 19th century, we can see the name of India as "Hindoostan" or the "Mogul Empire", Australia as New Holland, Japan as Nippon etc.,. The Oldest printed book available in this Library is an Atlas, in which the maps were printed in the years 1692,1693 and 1696.

An interesting and rare map of India of size 112x106 cms is available in the Library. The title and other details are "A Map of Hindoostan or the Moghul Empire" from the latest authority inscribed to Sir Joseph banks Bart, president of Royal Society which was produced by Mr.J Rennel, a pioneer in Map making on 1st Jan 1788. In this map, the coastal Tamilnadu and some portions extended up to Ongole in Andhra Pradesh are referred as the region of Carnatic. Hence the music flourished in this area has been called as Carnatic Music. It is sigificant to note that this map indicates Adams Bridge, which connects India and Ceylon. Maclean in his Glossary of

Madras Presidency Gazetteers (Vol III plate 5) mentions that the bridge was used for foot traffic till 1480 AD.

Later it was damaged by the breach. Some of the notable Atlases are Bengal Bihar Atlas, Geographial classica of Hermanmoll (1721) Atlas Coelets (1742) and other old and rare maps of Arrow Smith, Robert Orme, Tracks and discoveries of Captain Cook, James Rennel, Baker, R.Wilkinson , C. Mackenzie. They are available in this Library.

Pictures and Drawings

Serfoji collected many pictorial books on the views of scenarios , towns, temples, country sides, fort and battle, rivers etc. Some of the notable pictorial books are costumes of various countries, view of Burma, view of Mysore, Himalayan views, Chinese punishments etc.,

A notable and interesting pictorial book available in the Library is 'Human Physiognomy pictures". It is a series of Lithographic drawings by Charles-Le-Brun, a noted French Artist. It is an Illustrative drawing of relation between human face with beast and birds face. Another 48 pictures of Oriental scenarios of Hindoostan by Daniel brothers is also available in the Library.

Paintings and Drawings

Serfoji's court artists prepared some interesting colour drawings and paintings. These paintings are in the form of Illustrated Manuscripts, Pictorial books and other drawings. Some of the pictorial manuscripts are Aswasastra, Gajasastra, Rigveda samhita, Ramayan etc. Some of the pictorial books are Pictures of Ayurvedic plants, View of bathing ghats at Banares, Tanjore Military costumes, varieties of Palanquin, Pictures of birds etc., These paintings and drawings are available in the Library.

Catalogue preparation for Manuscripts

Even though the Library is originated in 16th Century, the earliest catalogue available in the Library belongs to Raja Serfoji's Period. The Catalogue of Palmleaf manuscripts was prepared in Palmleaf form and that of paper manuscripts in Paper form. The Palmleaf manuscript catalogues are three bundles in Telugu Script. The Palm leaf manuscript catalogue preparation work was started in 1801. The paper manuscript catalogue was prepared in 1807. It is an alphabetico-classified order. Now we can say that Serfoji's catalogue is the earliest catalogue available in India.

Thomas Robinson who accompanied Bishop Heber to meet Raja Serfoji on 30th March 1826 has written in the book" the last days of Bishp Heber" as. The Bishop paid a private visit to the Rajah, who received us in his library, a noble room with three rows of pilers, and handsomely furnished in the English style. On one side there are portraits of the Mahratta dynasty from Shahjee and Sivajee, ten book cases containing a very fair collection of French, English, German, Greek, and Latin Books, and two others of Maharatta and Sanskrit manuscripts. In the adjoining room is an airpump, an electrifying machine, an ivory skeleton, astronomical instruments, and several cases of books, many of which are on the subject of medicine, which was for

some years his favourite study. He showed us his valuable collection of coins, paintings of flowers and natural history, with each of which he seemed to have considerable acquaintance, particularly with the medicinal virtues of plants in his hortus siccus. When we took our leave his Minister showed us a noble statue of the Rajah by Flaxmn . . . His stables contain several fine English horses; but that of which he is most justly proud, as the rarest curiosity of an Indian Court, is an English printing press, worked by native Christians, in which they struck off a sentence in Mahratta in the Bishop's presence in honour of his visit. The British has given high regard to the King Serfoji II. He was included as a Honorary member of Royal Asiatic society of Great Britain and Ireland. In 1827 there were only four foreign dignitaries who were honorary members in the society. They are:

1. His Royal Highness the Duke Oeorleans
2. His majesty the King of Oude
3. His Royal Highness Abbas mirza, Prince Royal of Persia
4. His Highness the Rajah of Tanjore.

Raja Serfoji's multi-focal knowledge, recognition and good relationship with the British administrators caused him to collect more books and manuscripts. This Library currently lists over 46,000 manuscripts and 58,000 printed books, in which a good number of manuscripts and 4,500 rare books of collection are the 19th century especially by Rajah Serfoji II. This Library manuscripts and books are national wealth. It is our duty of one and all to preserve them for the use of future generation.

வானியலும் புனித நீராடலும்

இரா. சுவாமிநாதன், தொல்லியல் துறை, தஞ்சாவூர்.

முன்னுரை

வாழ்வியலின் அடிப்படை ''மதம்'' எனில் அது மிகையன்று ! இந்தியர்களால் பின்பற்றப்பட்டு வரும் இயற்கையின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட ஹிந்து மதத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்னிலை உணர பல நிலைகள் இருப்பினும்; அனைத்திற்கும் அடிப்படையெனத் திகழும் நீரால் அமையும் புறத்தூய்மையும், வாய்மையாற் அமையும் அகத்தூய்மையும் ஆகும். இவ்வுலகில் நீர் இயற்கையில் கிடைப்பது எனினும் அது வானியலில் கோள்களின் சுழற்சியினால் இப்புவியின் மேல் ஏற்படும் தாக்கத்தினால் குறிப்பிட்ட காலகட்டங்களில் மேலும் புனிதமுறும் என எண்ணுவது நம்பிக்கை மட்டுமின்றி அறிவியல் பூர்வமாகவும் நிகழக்கூடியதே !

வானியல்

தற்கால வானியற்கொள்கை சூரியனை மையமாகக் கொண்டு அனைத்துக் கோள்களும் நீள்வட்டப் பாதையில் சுழன்று கொண்டிருப்பதாலும், பூமி 22° 30' சூரிய அச்சிற்கு சாய்வான நிலையில் தன்னைத் தானே சுற்றிக் கொள்வதுடன், சூரியனையும் நீள்வட்டப்பாதையில் சுற்றி வருவதனாலேயே பூமியில் ஏற்படும் இயற்கை நிகழ்வுகட்கு காரணம் என்கிறது. ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த ஞானிகளாலும், ரிஷிகளாலும் பிரபஞ்சமானது அண்டம், பேரண்டம் என பகுக்கப்பட்டு, பேரண்டத்திலுள்ள அண்டமானது விண்மீன் கூட்டங்களால் சூழப்பட்டு, அதனுள் சனி முதல் சந்திரன் ஈறானக் கோள்களும், நடுவில் பூமி அமைந்துள்ளதனையும், கோள்கள் அனைத்தும் அவைகட்கு மேலீடாக அமைந்துள்ள விண்மீன் களின் இழுவிசைக் கேற்ப சுழன்று வருவதனையும், அதனாலேயே பூமி தன்னைத் தானே அண்டத்தின் மையப் புள்ளியில் நகராது சுழன்று வருவதனையும் கண்டறிந்துள்ளனர்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே அண்டத்தின் அமைவு முறையினை கண்டறிந்த ஞானிகளும், ரிஷிகளும், நிலைமாறா விண்மீன் கூட்டங்களாலும் பிற கோள்களின் சுழற்சியாலும் புவியின் மீது ஏற்படும் பலவித தாக்கங்களையும், உலகத்துயிர்கள் மற்றும் பொருட்களுடன் ஒப்பீடு செய்தது மட்டுமின்றி விண்மீன்கள் மற்றும் கோள்கள் ஆகியவற்றின் இயற்பியல், வேதியியல் மற்றும் குணநலப் பண்புகளையும் நெறிப் படுத்தினர். மேலும் அண்டத்தின் அமைவு நிலைக்கேற்ப புவியின் காலக்கணிப்பு மிகச் சிறப்பான முறையில், தான் சுவாசிக்கும் 'சுவாச காலத்தினை அடிப்படையாக் கொண்டு வினாடி, நாழிகை, நாள், மாதம், வருடம், நான்கு யுகங்கள் எனவும் 71 சதுர்யுகங்களைக் கொண்டது ஒரு மன்வந்தரமெனவும் 14 மன்வந்தரங்களைக் கொண்டது 1 கல்பமெனவும் ஆக 1 கல்பத்திற்கு 4,32,000 வருடங்கள் என வரையறை செய்துள்ளனர். இவ்வாறு 7 பல்வேறு விதமான கல்பங்களைக் கொண்ட காலகணிப்பின்படி, தற்போது இவ்விதமான 7 கல்ப்பங்களின் ஒரு சுழற்சி முடிவடைந்து மீண்டும் மறு சுழற்சியில் முதல் கல்பமான 4,32,0 00 வருடங்கள் தொடங்கி அதில் முதல் ஆறு மன்வந்தரங்கள் முடிவுற்று தற்போது ஏழாவது மன்வந்தரமாகிய வைவஸ்வதமன் வந்தரமாகும் சதுர் யுகங்களில் மூன்று முடிந்து நான் காவதாகிய கலியுகமும் நடைபெறுவதனைச் சோதிடவியல் அறிந்தோர் நன்குணர்வர்.

இக்காலக் கணிப்பின் அடியொற்றி இந்தியாவில் வானியற் கொள்கை தொடக்க காலத்தினை ஆய்வோமாகில் இன்றைக்குச் சுமார் மிகக் குறைந்தளவு 3024×10^6 ஆண்டுகட்கு முன்பாகவே வரையறை செய்யப்பட்டது

என்பதனை நம்ப மறுத்தாலும் உண்மை அதுவே எனலாம்.

இவ்வளவு பழமையுடைய இந்திய வானியற் கொள்கை பிற்காலங்களில் சோதிடக் கலையாக தற்காலம் வரை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆகையினால் கடந்த சில ஆயிரம் ஆண்டுகளாகவே நமது முன்னோர்களின் வானியற் கொள்கையின் படி அண்டத்தில் நிலைமாறா விண்மீன்களின் நிலைகள் பற்றிய உண்மையான விவரங்கள் மறந்ததால் தெளிவற்று போயின. இந்தியர்கள் கோள்கள் அனைத்தும் விண்மீன்கள் பாதையில் நகர்வதனை தம் அன்றாட வாழ்வியலில் பயன் படுத்திய போதும் தற்போது உள்ள சூரிய குடும்ப கொள்கையினை ஏற்பதோடு மட்டுமின்றி சோதிடக் கலைக்கும், வானியற் கொள்கைக்கும் உள்ள தொடர்பினை விளக்க வகையின்றி நம்பிக்கையின் அடியொட்டியே சோதிடக்கலை பின்பற்றப்பட்டு வருவது போலவும் அதில் அறிவியல் சார்ந்த சாத்தியக் கூறுகள் இல்லாதது போலவும் பெரும்பாலோரால் எண்ணப்படுகிறது. இருப்பினும் புவியில் அனைத்து நிகழ்வுகளும் வானில் கோள்கள் தத்தம் நிலைகளில் நிலைமாறா விண்மீன்களின் பாதை வழியே சுழன்று வருவதனாலேயே என்பதனை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே கண்டுணர்ந்து அவைகளை உலகத்துயிர்கள் எல்லாம் உய்ய வாழ்வியலில் இணைத்த நம் முன்னோர்களின் நுண்திறனை எவ்வளவு ஏற்றினும் தகும்.

புனித நீராடல்

இந்தியர்களின் வாழ்வியலில் நீராடல் என்பது அன்றாடம் கடைப்பிடிக்கப்படும் ஒரு நெறிமுறையாகும். ஆயினும் புனித நீரடலானது ஒவ்வொரு தனிமனித பிறப்பிலிருந்து இறப்பு வரை மேற்கொள்ளப்படுவதனை அனைவரும் அறிவர். மேலும் பொதுப் புனித நீராடல் மக்களனைவரும் பங்கேற்கும் வண்ணம் அந்தந்தப் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களில் வருடாந்திர திருவிழா முடிவடையும் நேரத்தில் இறைவன் இறைவி திருவுருவ நீராட்டலின் போது அப்பகுதி மக்களும் திருவுருவ நீராட்டலில் பங்கு பெற்று புனித நீராடுவர். அது போன்றே பல பகுதி மக்களும் திரண்டு நதி தீரங்களில் ஒன்று கூடி புனித நீராடுவது பண்டைய காலந்தொட்டு கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. தனி மனிதனானாலும், பொது நிகழ்வானாலும் அனைத்திற்கும் அடிப்படை வானியலையொட்டியே நிகழ்த்தப் பெறுகின்றன என்பதை அனைவரும் அறிவர்.

மாசிமகம், மகமேளா, துலாஸ்நானம் மற்றும் புஷ்கரம்

தென்னிந்தியாவில் கும்பகோணத்தில் மகாமகக் குளத்திலும் காவிரி பாயும் பகுதிகளில் ஐப்பசி மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும்; வட இந்தியாவில் அலகாபாத் ப்ரயாகை சங்கமத்திலும், கங்கைக் கரையிலும் கொண்டாடப்பெறும் மகமேளாவும் ஆண்டு தோறும் சிறப்புற கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இவை போன்றே புஷ்கரமெனும் புனித நீராடலும் கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிக்கரையில் அமைந்துள்ள ராஜமுந்திரி மற்றும் விஜயவாடா ஆகிய நகரங்களில் ஆண்டு தோறும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நதிகளின் சங்கமம்

கவிஞர் இரா . சுப்பராயலு தஞ்சாவூர்.

வானது பொய்ப்பினும் தானது பொய்யா
மலைத்தலை வைத்த கடற்கா விரியின்
புனல்வெள் ளம்மிகப் பொங்கு மிடத்தில்
அணையினை வைத்தார் கருநா டகத்தார் !
தவழ்ந்தும் நடந்தும் ஓடியும் வந்த
மடந்தை காவிரி கால்களில் தளையுடன்
கருநா டகத்தில் சிறைப்பட் டதனால்
தமிழகம் வறண்டது ; வானும் பொய்த்தது !
தாய்முகம் காணாச் சேய்போல் வாடிக்
கருகிடும் கதிர்கள் காணச் சகியா
உழவர் கண்களில் உதிரம் பெருக
நீதி மன்றம் நாடிச் சென்றனர்.
கங்கை காவிரி இணைப்புத்திட்டம்
ஐம்பது ஆண்டாய்ப் பேச்சில் இருந்து
உச்ச நீதி மன்ற ஆணை
வந்ததன் பின்னர் வரைவைக் கண்டது.
நதிகளின் இணைப்புத்திட்டம் பற்றி
நவின்றோர் தம்மை நகைத்தவர் எல்லாம்
விரைந்து இணைப்பைச் செயலாக் கிடவே
விழைவார், காலம் கடந்ததை யுணர்வார்!
காலம் காலமாய் மண்ணில் வழங்கும்
தொன்மம் என்பது மண்ணின் மரபு.
மண்ணின் மணமே மரபென் றிடுவார்.
மரபறிந் திட்டோர் தொன்மம் இகழார்.
குடமூக் கினிலே வழங்கும் புராணம்
குவலயந் தனக்கு வாழ்நெறி கூறும் !
நவநதி இணைப்பை நவின்றிடும் புராணம்
மகாமகம் பற்றி மறைநெறி கூறும் !
கங்கை காளிந்தி நருமதை சரயு
துங்க பத்திரை அருண சரஸ்வதி
கன்னி காவிரி நதிகள் ஒன்பதும்
பன்னிரண் டாண்டினில் முருக்கொடு துன்னிடும்
சங்கம மாமக தீர்த்தம் படிந்தோர்
பாவம் நீங்கித் தூய்மை யுறுவார்
என்பது தொன்மம் வழங்கும் நன்னெறி;
மன்பதை தனக்குப் பாவ மன்னிப்பு !
நதிகள் ஒன்பதும் பன்னிரண் டாண்டினில்
ஒருங்கே வருவதை மெய்ப்படுத் திட்டால்
கங்கை காவிரி ஒன்றாய் இணையும்;
தண்ணீர்ப் பஞ்சம் தவிர்ந்திடும் இங்கே!
தொன்மம் என்பது கற்பனை இல்லை;
தொன்று தொட்டுக் குவலயம் ஒருங்கே
வாழ்ந்திடு தற்கே வரைந்த பனுவல்!
உண்மை யுணர்ந்தார் போற்றுவ ரதனை!
மகாமக மான்மியக் கருத்தை யுணர்வோம்;
இணைப்போம் கங்கை காவிரி நதிகளை!
வடக்கும் தெற்கும் இணைந்து வாழ்ந்திட
நதிகளை இணைப்போம் நானிலம் போற்ற!



நவநதிகள் நாடிவரும் திருக்குடந்தை

கவிஞர் துரை. ஜெகதீசன்
தஞ்சாவூர்.

பன்னிரெண் டாண்டுகளுக் கொருமுறையே
புண்ணியக் கங்கைநதிக் கும்பமேளா!
எண்ணியீ ராறுவரு டந்தன்னில்
இன்னொருக் கோதாவரிப் புஷ்கரமாம்!
தண்டமிழ்த் தேடிவரும் காவிரியில்
துலாக்குளி யலொவ்வொரு ஐப்பசியில்!
புண்ணிய நதிக்குளியல் பாரதத்தின்
பண்பினில் சிறந்ததென உலகறியும்!

ஆண்டுப் பன்னிரெண்டில் மகாமகமாம் !
அதுவோ, நடக்குமிடம் குடந்தையிலாம் !
வேண்டி, நதியெல்லாம் இங்குவந்து,
மாமாங் கக்குளத்தி லூறியெழும் !
காணல் புண்ணியமாம் ! நல்தருணம்!
புனித நவநதிகள் நலந்தரவே,
நீண்டக் குளத்தினில் சங்கமிக்க,
நீரா டிநாம்நற் கதிப்பெறுவோம் !

கங்கை, யமுனா, சரஸ்வதி
கிருஷ்ணா, தப்தி, நர்மதா,
சிந்து, சீர்க்கோ தாவரி,
தெற்கே இன்னும் காவிரி,
வந்தேக் குடந்தைக் குளமதில்
வணங்கும் நாளே மகாமகம்!
சொந்தம் பந்தம் சூழவே,
சேர்வோம் குடந்தைத் திருக்குளம் !



தண்ணீர் தவம்

தஞ்சை - ராகவ் . மகேஷ்

மக நட்சத்திரம்
மகத்தான நட்சத்திரம்!

ஆண்டுபல கடந்த
பூமிப்பந்தை
ஆண்டுவரும்
புனித நட்சத்திரம்!

மாசு நீக்கும்
மாசி மாதத்தில்
மகாமகத்திருவிழா
தென்னகத்துக் கும்பமேளா!

குலபேதம் மறைந்து
மகாமகத் திருக்குளம்
மக்களால் நிறைந்திருக்கும்!

சனிக்கொடுமை
பிணிக்கொடுமை
தீர்த்தவாறு
தீர்த்தவாரி!

நிர்மூலம் செய்விக்கும்
பாவங்கள் யாவும்
நீர்மூலம் கழுவப்படும்!

மக மகிமையில்
மகப்பேறு வாய்க்குமென்று
குழந்தை வரம்வேண்டி
குடந்தை வரும்
பக்தர்கள்!

காசில்லாதோரின்
காசி...
கடல்தழுவாத
இராமேஸ்வரம்...
மகாமகக் குடந்தை!

புண்ணிய நதிகள் கூட
பாவங்கள் கரைந்தோட
மகாமகத் திருக்குளத்தில்
மகிழ்வோடு நீராடும்!

கும்பேஸ்வரர் திருவருளால்
பன்னிரெண்டு வருடத்திற்கொருமுறை
அபூர்வமாய் பூக்கும்
திரவக்குறிஞ்சி
மகாமக தீர்த்தத்துளி!



மகாமகத் திருவிழா - அரசு ஆற்றிய பணிகள்

சி.கோசலராமன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்.

திருக்கோயில்களின் இருப்பிடம் என்கிற பெருமைக்குரிய திருநகரம் குடந்தை மாநகரமாகும். இலக்கியம் போற்றும் குடந்தை சோழர் கால வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகக் கருதிப் போற்றப்படுகின்ற நிலைபெற்றுள்ளது. இங்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பக்திப் பெருவிழா மகாமகத்திருவிழா.

வடமாநிலத்தில் நடைபெறும் கும்பமேளாவைப்போல இத்திருவிழா மிகவும் சிறப்புடைய ஒன்றாகும். இவ்விழாவையொட்டி நாடு முழுவதிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வருகை தந்து குடந்தை மகாமகக் குளத்தில் நீராடி வழிபடுவதிலிருந்தே இந்தத் திருவிழாவின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்திட முடியும்.

மகாமகத் திருவிழாவின் முக்கியத்துவத்தையும்,இத்திருவிழாவினையொட்டி திருக்குடந்தையில் சங்கமித்திடும் மக்கள் கடலையும் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப தமிழ்நாடு அரசின் மூலம் மகத்தான ஏற்பாடுகள் செய்யப்பெற்றன.

மகாமகத் திருவிழாவையொட்டி செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்கள், அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள், ஆலய திருப்பணிகள், விழாவிற்கான பிற ஏற்பாடுகள் ஆகியவற்றைக் கண்காணிக்கவும், பணிகளை விரைவுபடுத்தி உரிய காலத்தில் செய்து முடிக்கும் வகையிலும், விழா ஏற்பாடுகள் சிறப்பாக அமைந்திட வழிவகுக்கவும் தலைமைச் செயலாளர் தலைமையில், பல்வேறு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் உள்ளடங்கிய 23 பேரைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு நிருவாக இயந்திரம் முழுமையாக முடுக்கிவிடப்பெற்றது.

மகாமகக் குளத்தில் தூர் எடுத்து, ஒரு அடி உயரத்திற்கு மணல் பரப்பி, பின்னர் தண்ணீர் விட்டு பக்தர்கள் நீராடுவதற்கு வசதி செய்து தரவும், மகாமகக் குளத்தின் படிக்கட்டுகளின் இணைப்புக்களைச் சீர் செய்யவும், ஏர் கம்பரசர் மூலம் படிக்கட்டுக்களின் இணைப்புக்களைச் சுத்தம் செய்யவும், மகாமகக் குளத்தில் உள்ள 20 புண்ணிய தீர்த்தவாரி ஊற்றுக் கிணறுகளைச் சீரமைக்கவும் மகாமகக் குளத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு ஆதாரமான அரசலாற்றில் தூர் எடுக்கவும், வரத்து வாய்க்காலைச் சீர் செய்யவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்தும் வெற்றிகரமாக முடிக்கப்பெற்றன.

மக்கள் காவிரியாற்றில் புனித நீராடுவதற்கு வசதியாக ரூ.10 இலட்சம் செலவில் புதிதாகப் படிக்கட்டுகள் கட்டப்பெற்றதோடு சக்கர படித்துறைகளைச் சீரமைக்கும் பணிகளும் நடந்து முடிந்துவிட்டன.

பழவாத்தான் கட்டளை வாய்க்கால், உள்ளூர் மற்றும் பெருமாண்டி வாய்க்கால் குடந்தை மாநகர எல்லைக்குள் செல்வதால் அவற்றை ரூ.23 இலட்சம் செலவில் தூர் வாரி செப்பனிடவும் மற்றும் சிறு பாலங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்று பணிகள் நிறைவுற்றன.

குடந்தை பொற்றாமரைத் திருக்குளத்தை சீரமைக்கும் பணிகள் ரூ.5 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

மகாமகத்திற்கு முன்பாக 17 சைவ மற்றும் வைணவ திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யவேண்டும் என்ற ஆகம விதிகளுக்கேற்ப 9 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே திருப்பணிகள் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேலும் 8 திருக்கோயில்களுக்கும் மகாமகக் குளத்தைச் சுற்றியுள்ள ஆலயங்களுக்கும் அண்மையில் திருப்பணிகள் செய்துமுடிக்கப் பெற்று, மங்கல நீராட்டும் நிகழ்த்தப்பெற்றன.



மகாமகம் தொடர்புடைய 17 திருக்கோயில்கள் மற்றும் 16 சோடசலிங்க கோயில்கள் ஆகியவற்றிற்கான திருப்பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான செலவினம் மொத்தம் ரூ.1.50 கோடியாகும்.

மகாமகத் திருவிழாவையொட்டி புறவழிச் சாலை அமைத்தல், பல்வேறு சாலைகளை அபிவிருத்திச் செய்தல் போன்ற பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று சிறப்பாக முடிக்கப்பெற்றன.

கும்பகோணம் புறவழிச் சாலைகள் 3 கி.மீ. நீளத்தில் ரூ.712.75 இலட்சம் மதிப்பிலும், மேலும் ஒரு புறவழிச்சாலை 3 கி.மீ. நீளத்திற்கு ரூ.645.40 இலட்சம் மதிப்பிலும், மற்றொரு புறவழிச்சாலை 2.76 கி.மீ. நீளத்தில் ரூ.657.30 இலட்சம் மதிப்பிலும் பணிகள் முடிக்கப்பெற்றன. காவேரி மற்றும் அரசலாற்றில் குறுக்கே 3 பாலங்கள் ரூ.394 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பெற்றன. இத்திட்டங்களால் 8.7 கி.மீ. தொலைவிற்கு புறவழிச்சாலையும், 3 பெரிய பாலங்களும், 45 சிறுபாலங்களும் என ஒரு மகத்தான பணி ரூ.24.09 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பெற்றுள்ளது.

மாநிலச் சாலைகளான திருவாரூர் - குடவாசல் - கும்பகோணம் சாலை 6.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.57.60 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் - மன்னார்குடி - அதிராம்பட்டிணம் சாலை 2 கி.மீ. நீளத்திற்கு ரூ.8 இலட்சம் மதிப்பிலும், கல்லணை - காவேரிப்பட்டினம் சாலை 3.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.27.30 இலட்சம் மதிப்பிலும், கல்லணை - காவேரிப்பட்டினம் சாலை 1.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் - சீர்காழி சாலை 3.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.32.40 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட சாலைகளான சுவாமிமலை இணைப்புச்சாலை 0.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.0.90 இலட்சத்திலும், கும்பகோணம் - கொள்ளிடக்கரைச்சாலை 1 கி.மீ. நீளத்திற்கு ரூ.5.30 இலட்சம் மதிப்பிலும் மேம்படுத்தப்பெற்றது. மொத்தம் 57 கி.மீ. நீளத்திற்கான சுற்றுச்சாலைகள் ரூ.3 கோடியே 90 இலட்சம் செலவில் அமைக்கப்பெற்றது.

இதர மாவட்டச் சாலைகள் 39.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.2 கோடியே 40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதர மாவட்டச் சாலைகளில் புளியஞ்சேரி - குடிதாங்கிச் சாலை 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.38.50 இலட்சம் மதிப்பிலும், காடச்சாம்பாடி சாலை 4 கி.மீ. நீளத்திற்கு ரூ.32 இலட்சம் மதிப்பிலும், கலம்பரம் சாலை 4 கி.மீ. நீளத்திற்கு ரூ.32 இலட்சம் மதிப்பிலும், கலம்பரம் சாலை 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.29.50 இலட்சம் மதிப்பிலும், மருதாநல்லூர் - அன்னல்கரம் சாலை 2.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.17.20 இலட்சம் செலவிலும், சுந்தரபெருமாள்கோயில் - மருதாநல்லூர்சாலை 4.80 கி.மீ. நீளத்திற்கு ரூ.31.20 இலட்சம் மதிப்பிலும், சுவாமிமலை இரயில்வே ஸ்டேஷன் ரோடு - பட்டீஸ்வரம் சாலை 2.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.11.70 இலட்சம் மதிப்பிலும், திருவிடைமருதூர் கோயிலாச்சேரி சாலை 5.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.29.70 இலட்சம் மதிப்பிலும், திருவிடைமருதூர் - கோயிலாச்சேரி சாலை 1.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பிலும், தேப்பெருமாள்நல்லூர் சாலை 2.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பிலும், திருநாகேஸ்வரம் - திருநாரையூர் சாலை 5.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.30.90 இலட்சம் மதிப்பிலும் சாலைப் பணிகள் நிறைவெய்தியுள்ளன. அனைத்து சாலை மேம்பாட்டுப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றன.

மகாமத்தையொட்டி, குடந்தை மாநகரம் பெறுகின்ற மகத்தான கட்டமைப்பு வசதி கும்பகோணத்திற்கும் தஞ்சாவூருக்கும் இடையே நடைபெறும் அகல இரயில் பாதை அமைக்கும் பணியாகும். ரூ.73 கோடி மதிப்பீட்டில் இப்பணி நிறைவெய்தியுள்ளது.

மகாமகத்தையொட்டி குடந்தை மேம்பாலத்திற்கு அருகாமையில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் மாபெரும் கலையரங்கம் கட்டிமுடிக்கப்பெற்றது.

மகாமகத் திருவிழாச் செம்மையாகவும், சிறப்பாகவும் நடைபெற மக்களுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை செய்துதர அரசு ஆணை பிறப்பித்து, அரசின் பல்வேறு துறைகளும் முடுக்கிவிடப்பட்டு போர்க்கால அடிப்படையில் பணிகள் நிறைவெய்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

நகராட்சியின் மூலம் ரூ.162.30 இலட்சம் மதிப்பீட்டில் 18 குடிநீர் அபிவிருத்தி பணிகளும், ரூ.51.92 இலட்சம் செலவில் வடிகால் சிறுபாலம் கட்டுவதற்காக 15 பணிகளும், ரூ.160.10 இலட்சம் செலவில் சாலைப் பணிகளும், நகராட்சி பள்ளிக் கட்டடப் பராமரிப்புக்காக 35 பணிகளுக்கு ரூ.66.45 இலட்சம் செலவிலும், புதிய கழிவறைகள் அமைத்தல் மற்றும் கழிவறை பராமரிப்புக்காக 65 பணிகளுக்கு, ரூ.117.90 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் செம்மையாக நிறைவுபெற்றன.

மகாம்கத் திருவிழாவினையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் பொதுமக்களுக்கு வசதியாக திருச்சி, திண்டுக்கல், சேலம், கோவை, வேலூர், ஈரோடு, புதுக்கோட்டை, காரைக்குடி, விழுப்புரம் ஆகிய போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 2,000த்திற்கும் மேற்பட்ட பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்றது.

கும்பகோணம் நகரில் பொதுமக்களின் வசதிக்காக 9 இடங்களில் தற்காலிகப் பேருந்து நிலையங்கள் அமைக்கப்பெற்றன. மகாமகத்திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதல் பணிகளை மேற்கொண்ட காவல்துறை மற்றும் பல்வேறு துறைகள் செம்மையாகப் பணிபுரிந்தமை பாராட்டுதலுக்கு உரியதாகும். மகாமகத் திருவிழாவின் பாதுகாப்புப் பணியில் 20,000க்கும் மேற்பட்ட காவலர்கள் பணி மேற்கொண்டனர்.

இந்தப் பாதுகாப்புப் பணிகள் ஐந்து காவல்துறை கண்காணிப்பாளர்கள், மூன்று கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர்கள், 8 துணைக் காவல்துறை கண்காணிப்பாளர்கள், 13 ஆய்வாளர்கள் உட்பட 29 காவல்துறை அதிகாரிகளைச் சிறப்பு அதிகாரிகளாகக் கொண்டு முறைபடுத்தப்பெற்றது.

தஞ்சை, திருச்சி, நாகை, திருவாரூர், நெல்லை, தூத்துக்குடி, மதுரை, புதுக்கோட்டை, கரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து காவலர்கள் வரவழைக்கப்பட்டு இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இத்தகைய பாதுகாப்புப் பணிக்கு வரும் காவலர்கள் மற்றும் அதிகாரிகள் தங்குவதற்காக 136 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பெற்றன.

மகாமகப் பணிகள், பாதுகாப்பு உட்பட பல்வேறு பணிகள் குறித்துத் திட்டங்களை கணினி மூலம் தயாரிக்க குடந்தை நகர கிழக்கு காவல் நிலையத்தில் தனி அலுவலகம் அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பெற்றன.

மகாமகத் திருவிழாவையொட்டி மொத்தம் ரூ.2.63 கோடியில் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பெற்றன. இவ்விழாவினையொட்டி 100 படுக்கைகள் கொண்ட தற்காலிக மருத்துவமனை ஒன்றும் அமைக்கப்பெற்றது.

600 மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் மருத்துவமனையில் பணி புரிந்தனர். மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு 24 மணி நேரமும் இவர்கள் பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்பெற்றது. 250 அவசர கால மருத்துவ ஊர்திகள் (ஆம்புலன்ஸ்) தயார் நிலையில் இருந்து பணிமேற்கொண்டன.

பொதுமக்களின் சுகாதார வசதியைக் கருத்தில் கொண்டு 500 இடங்களில் கழிவறை வசதி செய்து கொடுக்கப்பெற்றது.

மகாமகத் திருவிழாவையொட்டி ஒன்பது தற்காலிகப் பேருந்து நிலையங்கள் அமைக்கப்பெற்றதோடு மருத்துவ உதவி மையங்களும், மகாமகக் குளத்தைச்சுற்றி 13 உதவி மையங்களும் செயல்பட்டன.

மருத்துவத்துறைக்குச் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பெற்றது. மேலும் தஞ்சை, திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் இருந்து செயல்பட்டன. இந்த மருத்துவக் குழுவில் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மகாமகத் திருவிழாவையொட்டி வருகை தந்த இலட்சக்கணக்கான மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரும், நியாயமான விலையில் தரமான உணவுப் பொருள்களும் வழங்கப்பெற்றன.

குடந்தை மாநகரில் உள்ள பல்வேறு உணவகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உணவு தயாரிக்கும் இடம், சூழல் ஆகியவை பரிசோதிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் உரிமை பெற்றவர்கள் மட்டுமே உணவு மற்றும் தேநீர் நிறுவனங்கள் நடத்த அனுமதிக்கப்பெற்றது.

குடந்தை நகரிலும் குடந்தையைச் சுற்றியுள்ள திருவிடைமருதூர், திருப்பனந்தாள், பாபநாசம், அம்மாப்பேட்டை, வலங்கைமான் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளில் பழுதுகள் ஏற்பட்டால் உடன் சீர்செய்ய ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்றது.

மேலும் இப்பகுதியில் உள்ள நீர்தேக்கத்தொட்டிகளில் நாள்தோறும் குளோரினேசன் செய்யப்பெற்று சுகாதார குடிநீர் வினியோகம் செய்யப்பெற்றது.

குடந்தை நகர மக்கள் பயன்பெறும் வகையில் 46 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் விரைந்து முடிக்கப்பெற்றன.

குடந்தை மாநகரில் குவிந்திடும் குப்பைகளை அப்புறப்படுத்தி நகரின் தூய்மையைக் காத்திட 70 ஊர்திகளும், 400க்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு ஊழியர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மகாமகத் திருவிழாவையொட்டி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் கும்பகோணத்தில் பிப்ரவரி 15ஆம் தேதி முதல் மார்ச் மாதம் 15ஆம் தேதி வரை ஒருமாத காலத்திற்கு சிறப்பான பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. மகாமகத் திருவிழாவையொட்டி திருவிழா நடைபெறும் தருணத்தில் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் செயல்படுத்த சுமார் 2 கோடியே 19 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 60 மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்) அமைக்கப்பெற்றன.

கலைப்பண்பாட்டுத்துறை, தென்மண்டல பண்பாட்டு மையம் ஆகியவற்றின் துணையோடு பிப்ரவரி 27ஆம் நாள் தொடங்கி, மார்ச் 8ஆம் நாள் வரை நாள்தோறும் தேசிய உணர்வை வலியுறுத்தும் வண்ணம் பரதநாட்டியம், குச்சுபுடி, கதகளி, கதக், யக்ஷகாணம், ஒடிசி போன்ற பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கலை நிகழ்ச்சிகளும்; நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை வாயிலாக தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சாக்கோட்டை, தாராசுரம், திருநாகேசுவரம் ஆகிய இடங்களில் உள்ள துணை மின் நிலையங்களில் கூடுதலாக டிரான்ஸ்பார்மர்களை நிறுவி மின்சாரம் தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பெற்றது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கின்ற குறிஞ்சி மலர் புகழ்மிக்கதாகும். அதைப் போன்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடந்தை மாநகரில் சீருடனும் சிறப்புடனும் நிகழும் மகாமகத் திருவிழா உலக மக்களின் கவனத்தை ஈர்த்து உள்ளத்தை மகிழ்விக்கும் பெருவிழாவாகும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து ஏற்பாடுகளும் சீருடனும் செம்மையாகவும் செய்து முடிக்கப்பெற்றன.



மகாமகத் திருக்குளம்



18.02.1992 மகாமகம் - மக்கள் புனிதநீராடும் காட்சி

புதிதாகக் கட்டப்பெற்ற
கலையரங்கம்



புதிதாக அமைக்கப்பெற்ற
புறவழிச்சாலை

பழவாத்தான் கட்டளை வாய்க்கால்
சீரமைப்புப் பணி



மகாமகக்குளம்
தூர்வாரி மணலிடும் பணி

மகாமகக் குளத்துப்
புனித நீர்க்கிணறு
தூர்வாரும் பணி

பொற்றாமரைக் குளம்
தூர்வாரும் பணி

ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர்
மங்களாம்பிகை

ஸ்ரீ காசிவிஸ்வநாதர்
ஸ்ரீ விசாலாட்சி அம்பாள்

குடந்தை அரசினர் கவின்கலைக் கல்லூரி
மாணவர்களின் பார்வையில்...







நிலவொளியில் கங்கைகொண்ட சோழபுரம் கோயில்



ஓவியம்
சி.திருமுருகன்
(ஐந்தாம் ஆண்டு)



தாராசுரம் திருக்கோயில்

கே.ஈஸ்வரன்

(மூன்றாமாண்டு)

அர்த்தநாரீஸ்வரர் - தாராசுரம்

எஸ்.முருகதாஸ்

(இரண்டாம் ஆண்டு)



தாராசுரம் திருக்கோயில்
பி.மனோஜ்குமார்
(நான்காம் ஆண்டு)



குடந்தை
நாகேஸ்வரன் கோயிற்சிற்பம்
எம்.கார்த்திகேயன்

கங்காதேவி தாராசுரம்
எம்.ஜோதி
(நான்காம் ஆண்டு)



சுவாமிமலைத் திருக்கோயில்

என்.ராஜா

(மூன்றாம் ஆண்டு)

மகாமகக் குளக்கரை மண்டபம்

சி.உதயகுமார்

(நான்காம் ஆண்டு)



கங்கைகொண்ட சோழபுரம்

பி.மனோஜ்குமார்
(நான்காம் ஆண்டு)





பட்டீஸ்வரம் திருக்கோயில்

பி.மனோஜ்குமார்
(நான்காம் ஆண்டு)



தாராசுரம் திருக்கோயில் வாயிற்கோபுரம்

பி.இளஞ்செழியன்
(இறுதியாண்டு)

தாராசுரம் திருக்கோயில் வாயிற்கோபுரம்





மகாமகக் குளக்கரையில் மணிக்கூண்டு

சி.உதயகுமார்
(நான்காம் ஆண்டு)

தஞ்சைப் பெரியகோயில்

ஆர்.ரகு
(இரண்டாம் ஆண்டு)



சிக்கல் திருக்கோயில்

இரா.ஜெய்சங்கர்
(ஐந்தாம் ஆண்டு)



திருவேரகம்

ரவி.அரவிந்த்
(முதலாம் ஆண்டு)



தாராசுரம் சிற்பம்

எஸ்.சக்திவேல்
(மூன்றாம் ஆண்டு)

சமயபுரம் மாரியம்மன்

கே.ஆர்.கார்த்திகேயன்
(இரண்டாம் ஆண்டு)

யாளி பட்டீஸ்வரம்

எஸ்.முருகதாஸ்
(இரண்டாம் ஆண்டு)



ஸ்ரீ புவனேஸ்வரி

கே.ஆர்.கார்த்திகேயன்
(இரண்டாம் ஆண்டு)

தாராசுரம் ஐராவதீஸ்வரர் திருக்கோயில்

எச்.அப்துல் காதர்
(நான்காம் ஆண்டு)



உமையொருபங்கள் - மகாமகக்குளக்கரை மண்டபம்

பி.மனோஜ்குமார்
(நான்காம் ஆண்டு)



இராமசாமி திருக்கோயில் தூண் சிற்பம்

உ.முத்தமிழ்ச்செல்வன்
(ஐந்தாம் ஆண்டு)



தாராசுரம் திருக்கோயில்தேர்மண்டபம்
ஆர்.விஸ்வநாதன்
(நான்காம் ஆண்டு)

திருக்களிற்றுப்படி - தாராசுரம் திருக்கோயில்
ஆர்.விஸ்வநாதன்
(நான்காம் ஆண்டு)



இராமசாமி திருக்கோயில்

வீ.காந்தி
(நான்காம் ஆண்டு)



இராமசாமி திருக்கோயில்
மண்டபச் சிற்பங்கள்
வீ.காந்தி
(நான்காம் ஆண்டு)

நர்த்தன கணபதி

வீ.காந்தி
(நான்காம் ஆண்டு)



இராமசாமி திருக்கோயில் - சுக்ரீவன்

வீ.காந்தி
(நான்காம் ஆண்டு)



விபீடணன் பட்டாபிஷேகம்
இராமசாமி திருக்கோயில்

வீ.காந்தி
(நான்காம் ஆண்டு)

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்
அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில்

தஞ்சாவூர்

திருக்கோயில் பெயர் : அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில்.

திருக்கோயில் அமைவிடம் : அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில் தஞ்சையின் மையப் பகுதியில் தெற்கு வடக்காகச் செல்லும் பெரிய சாலையின் மேற்கில் விண்முட்டும் கர்ப்பகிரகத்துடன் மலையையே பெயர்த்தெடுத்து வைத்ததுபோல் தட்சிணமேரு என்ற விமானத்துடன் காட்சியளிக்கிறது. கோயில் கிழக்கு முகமாக அமைந்துள்ளது.

இறைவன் : ஸ்ரீ பிரகதீஸ்வரர், பெருவுடையார் என வழங்கும் ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார் இலிங்க வடிவில் உள்ளார். 54 அடி சுற்றளவுள்ள ஆவடையில் 13 அடி உயர பாணத்துடன் காணப்படுகிறார். உலகிலேயே மிகப் பெரிய இலிங்கம் இதுவேயாகும்.

இறைவி : ஸ்ரீ பிரஹன்நாயகி, பெரியநாயகி என வழங்கும் உலக முழுதும் உடையாள் ஆறு அடி உயரத்தில் நின்ற திருக்கோலம்.

பூஜை மற்றும் ஆகமம் : மகுட ஆகம விதிப்படி நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

ஸ்தல விருட்சம் : வன்னிமரம்

தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்

திருவிழா : சித்திரை பிரம்மோற்சவம் 18 நாட்களும், நவராத்திரி விழா 10 நாட்களும், வருடந்தோறும் மாமன்னன் இராசராசனின் பிறந்த தினமாகிய ஐப்பசி சதய விண்மீனன்று சதய விழாவும், வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் மார்கழித் திருவாதிரை விழா 10 நாட்களும், மகா சிவராத்திரி விழா ஒரு நாளும் என ஆண்டு தோறும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. மாதம் இருமுறை பிரதோஷம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

குடமுழுக்கு : 09.06.1997

பாடல் : கருவூரார் திருவிசைப்பா, அருணகிரிநாதர் திருப்புகழ்

தனிச்சிறப்பு : மாமன்னன் இராசராசனின் வெற்றிகளை பிரகடனப்படுத்தும் விதத்தில் முழுதும் கருங்கற்களாலேயே கட்டப்பட்ட இக்கோயிலை யுனெஸ்கோ நிறுவனம் உலக பாரம்பரியச் சின்னமாக அறிவித்து, அதற்குரிய பட்டயத்தையும் வழங்கியுள்ளது. வரலாற்று அறிஞர்களால் தேவலாயச் சக்ரவர்த்தி என இக்கோயில் புகழப்படுகிறது.

வரலாற்றுச் செய்திகள் : இத்திருக்கோயில் கருங்கற்களே கிடைக்காத தஞ்சையில் கி.பி.1003 - 1010 ஆம் ஆண்டுகளுக்கிடையில் சுமார் ஆறு ஆண்டுகளில் முதலாம் இராசராசனால் எழுப்பப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலுக்கு மராட்டா வளைவு, கேரளாந்தகன் வாயில், இராசரான் வாயில் என்று மூன்று நுழைவு வாயில்கள் உள்ளன. இராசராசன் நுழைவு வாயிலைத் தாண்டியவுடன் 800 அடி நீளம் 400 அடி அகலமுள்ள இடத்தைச் சுற்றி நான்கு புறமும் திருமாலைப்பத்திகள் உள்ளன.

கருவறைக்குச் செல்லும் வழியில் உயர்ந்த மண்டபத்தில் சுமார் 25 டன்கள் எடையுள்ள ஒரே கல்லினால் ஆன பெரிய நந்தி அமர்ந்துள்ளவாறு செதுக்கப்பட்டுள்ளது.

முகமண்டபத்தின் இருபுறங்களிலும் 18 அடி உயரமுள்ள துவாரபாலர் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. துவாரபாலர்களுக்கு அருகில் இருபுறங்களிலும் விநாயகர், துர்க்கை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

வாத்திய மண்டபம், வாகன மண்டபம், மகாமண்டபம் வழியாக சென்று கருவறையில் இலிங்கத்தைத் தரிசிக்கலாம். அர்த்த மண்டபத்தின் இருபுறமும் வாயில்கள் உள்ளன. கருவறை இலிங்கம் நர்மதை நதிக்கரையிலிருந்து கொண்டு வந்த கல்லினால் செய்யப்பட்டது. கருவறைக்கு மேலுள்ள 216 அடி உயரமுள்ள இரு தளங்களும் 13 அடுக்குகளும் கொண்ட விமானம் திராவிட பாணியிலான மாடக்கோயில் வகையைச் சார்ந்ததாகும். கருவறையைச் சுற்றியுள்ள அந்தராளத்தின் இரு சுவர்களிலும் சோழர் மற்றும் நாயக்கர் கால ஓவியங்கள் உள்ளன. மேல் தளத்தில் பரத நாட்டிய கர்ணங்களை சிவனே ஆடிக் காட்டுவது போல் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. திருச்சுற்று மாளிகையின் வடக்கு, மேற்குப் புறங்களில் 252 இலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

கல்வெட்டு : இத்திருக்கோயிலில் மாமன்னன் இராசராசன் கல்வெட்டாக 64 எண்ணிக்கையுடன் மற்றவர்களின் கல்வெட்டுகள் பலவும் காணப்படுகின்றன. சோழர், பாண்டியர், நாயக்கர் மற்றும் மராட்டியர் கால கல்வெட்டுகள், கொடைச் செய்திகளை மிக விரிவாகக் கூறுகின்றன. தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் இக்கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

வே.கோவிந்தராம் எம்.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர், பொருளாளர் & மேலாளர்
அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.

எஸ்.பாபாஜி ராஜா பான்ஸ்லே சத்ரபதி பி.இ.,
மூத்த இளவரசர், பரம்பரை அறங்காவலர்,
அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.



தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்

அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில்

(தாராசுரம்)

திருக்கோயில் பெயர் : அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில்.

கோயில் அமைவிடம் : தஞ்சை மாவட்டம் - கும்பகோணம் வட்டம் தாராசுரம் என்ற ஊரில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர் : ஸ்ரீ ஐராவதீஸ்வரர்

இறைவி பெயர் : ஸ்ரீ தெய்வ நாயகி (தனிக்கோயிலாக உள்ளது)

இறைவனின் பெயர்க் காரணம் : இத்திருக்கோயிலில் உள்ள சிவலிங்கத்தை, தேவேந்திரனின் ஐராவதம் என்ற யானை பூஜித்து வழிபட்டு வந்ததால் சிவபெருமானுக்கு ஐராவதீஸ்வரர் என்று பெயர் வழங்கப்பட்டது.

பூஜை : சைவ ஆகம சாஸ்திர விதிப்படி நான்கு கால பூஜைகள் இத்திருக்கோயிலில் நடைபெற்று வருகின்றன.

தலவிருட்சம் :வில்வம்

தீர்த்தச் சிறப்பு : இத்திருக்கோயிலின் எதிரில் உள்ள எமதீர்த்தம் என்ற திருக்குளம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. எமனுக்கு ஏற்பட்ட மேகநோய் இக்குளத்தில் நீராடியதால் பூரணமாக நீங்கியது. தேவலோக ஐராவத யானை ஒரு சாபம் காரணமாக கருமைநிறம் பெற்று பின்னர் இத்திருக்குளத்தில் நீராடி சாபம் நீங்கி மீண்டும் வெண்மை நிறம் அடைந்தது என்பதும் ஒரு புராணச் செய்தியாகும்.

திருவிழாக்கள் : பிரதோஷ நாளில் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. சங்கடங்களைத் தீர்க்கும் சரபேஸ்வர மூர்த்திக்கு ஞாயிறுதோறும் மாலை 4.30 மணி முதல் 6.00 மணிக்குள் (இராகு காலத்தில்) வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

தனிச்சிறப்பு : இத்திருக்கோயிலில் 63 நாயன்மார் வரலாறுகளின் புடைப்புச் சிற்பங்கள் சிறப்புடையனவாக காட்சியளிக்கின்றன. கருங்கல்லை சலவைக்கல்போல் செம்மைப்படுத்தி சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அருள்மிகு அன்னபூரணி அம்மன் சிலை நூற்றுக்கால் மண்டபத்தில் உள்ளது. சுற்றுப்புற திருமால்பத்தியில் ஒரு கல்லினால் ஆன சாளரங்களை வடிவமைத்திருக்கும் திறன் மக்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் உள்ளது. அம்மன் மற்றும் சுவாமி சன்னதிகள் தேர் வடிவில் சக்கரங்களுடனும், குதிரைகளுடனும் கல்லால் செதுக்கி இருக்கும் திறன் அற்புதமாக அமைந்துள்ளது. இத்திருக்கோயிலைத் தரிசிக்க வரும் மேலை நாட்டினர் இச்சிற்பங்களின் கலை நுணுக்கத்தைக் கண்டு வியக்கின்றனர்.

வரலாற்றுச் செய்தி : தஞ்சை மாவட்டத்தில் உள்ள சீரார் செந்நெல் கவரி வீசும் காவிரியும் அரசிலாறும் மாலையாகக் கொண்ட கும்பகோணத்தில் தென்மேற்கில் உள்ள இத்திருத்தலம், இரண்டாம் இராசராச சோழனால் (கி.பி.1146-1163)

(கி.பி.1146-1163) எழுப்பப்பட்ட கலைச்சிறப்புப் பெட்டகமாகச் சிறப்புற்று விளங்குகிறது. இத்திருக்கோயில் மிகவும் தொன்மை வாய்ந்ததும் பழமையானதும் ஆகும். இத்திருக்கோயில் தேசிய பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டு இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையினரின் பராமரிப்பில் உள்ளது.

கல்வெட்டுச் செய்தி : சோழர் கால கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன.

வே.கோவிந்தராம் எம்.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர், பொருளாளர் & மேலாளர்
அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.

எஸ்.பாபாஜி ராஜா பான்ஸ்லே சத்ரபதி பி.இ.,
மூத்த இளவரசர், பரம்பரை அறங்காவலர்,
அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்
அருள்மிகு புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயில்

திருக்கோயில் அமைவிடம் : தஞ்சை - நாகை சாலையில் ஐந்து கி.மீட்டர் தொலைவில் புன்னை நல்லூர் என்னும் இடத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

அம்மன் : ஸ்ரீ மாரியம்மன்.

பூஜை மற்றும் ஆகமம் : காமிகா ஆகம முறைப்படி நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

தலவிருட்சம் : வேம்பு

தீர்த்தம் : நித்திய புஷ்கரிணி, வெல்லக்குளம்.

திருவிழாக்கள் : அம்பாளுக்கு ஒவ்வொரு வருடமும் ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் திருவிழா நடைபெறும். ஆடி மாதம் முத்துப்பல்லக்கும், ஆவணி மாதம் கடைசி ஞாயிறு தேரோட்டமும் சிறப்புடன் நடைபெறும். புரட்டாசி மாதம் தெப்ப உற்சவம் மற்றும் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

திருக்குடமுழுக்கு : 06.07.1987 ல் நடைபெற்றது. தற்போது திருப்பணி நடைபெற்று வருகிறது. விரைவில் குடமுழுக்கு நடைபெற உள்ளது.

வரலாற்றுச் செய்திகள் : தஞ்சையை ஆண்ட சோழ அரசர் தஞ்சையைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் காவல் தெய்வங்களாக அஷ்ட சக்திகளை அமைத்திருந்தார். அதில் தஞ்சைக்கு கீழ்ப்புறத்தில் அமைந்திருக்கும் சக்தி புன்னை நல்லூர் மாரியம்மன் ஆகும், என்று சோழ சம்பு என்ற நூல் கூறுகிறது. 1680ஆம் வருடம் தஞ்சையை ஆண்டு வந்த ஏகோஜி எனப்படும் வெங்கோஜி மகாராஜாவின் கனவில் அம்பிகை தோன்றி தஞ்சைக்கு கிழக்கே புன்னைக் காட்டில் புற்று உருவாய் உள்ள தன்னை சேவிக்க கூறியுள்ளார். மன்னரும் இத்தெய்வத்திற்கு புன்னைநல்லூர் கிராமத்தை வழங்கினார்.

1727 முதல் 1735 வரை தஞ்சையை ஆண்ட துளஜா மகாராஜாவினால் அம்பிகைக்கு சிறிய அளவில் கோயில் ஒன்று கட்டப்பட்டது. திருச்சுற்று மாளிகையும் அமைக்கப்பட்டது. தபோபலம் மிகுந்த சாதசிவ பிரம்மேந்திர சுவாமிகளைக் கொண்டு புற்றுருவாய் இருந்த அம்பிகைக்கு மாரியம்மன் வடிவமைத்து சக்கரபிரதிஷ்டையும் செய்வித்தார். 1798 முதல் 1832 வரை ஆண்டு வந்த இரண்டாம் சரபோஜி மகாராஜா இத்திருக்கோயிலில் மகாமண்டபம், நர்த்தன மண்டபம், முன் கோபுரம், பெரிய இரண்டாவது திருச்சுற்று முதலியவற்றைக் கட்டி அம்பிகைக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தார். பின்னர் மூன்றாவது திருச்சுற்றும் வெளிமண்டபமும் கட்டப்பட்டன.

தனது தவ வலிமையால் மக்களின் நோய்களுக்கு திருநீறால் குணமளித்து வந்த இராமலிங்க சுவாமிகளின் நல்லாசிகளுடன் 1950ல் தஞ்சை மூத்த இளவரசர் ராஜாராம் ராஜா சாகேப் அவர்கள் பொதுமக்களின் உதவியுடன் மகா கும்பாபிஷேகம் நடத்தினார். 1987ல் மக்களால் கல்யாண மண்டபம், சமையல் அறை, பாட சாலை போன்றவை கட்டப்பட்டு அதே ஆண்டு ஜூலை 6ஆம் தேதி கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. பேச்சியம்மனுக்கு தனி சன்னதி உள்ளது. குழந்தைகள் பயந்து அழுவதை தடுப்பது இத்தெய்வம் என்பது பழங்காலம் தொட்டு வழங்கி வரும் நம்பிக்கையாகும்.

தனிச்சிறப்பு :

இத்திருக்கோயிலின் கருவறையில் அருள்பாலிக்கும் மாரியம்மன் புற்று மண்ணால் தான் உருவாக்கப்பட்டுள்ளது என்பது தனிச்சிறப்பாகும். எனவே, அம்பாளுக்கு நித்திய அபிஷேகம் நடத்தாமல் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மட்டும் தைலாபிஷேகம் ஒரு மண்டலம் (நாற்பத்தியெட்டு நாட்கள்) நடந்து வருகிறது. அந்த ஒரு மண்டல காலமும் அன்னையின் உக்கிரம் அதிகமாகும் என்பதால் தயிர்ப் பள்ளயம், இளநீர் வைத்து நைவேத்தியம் நடைபெறும். கோடை நாட்களில் அம்பாளுக்கு முகத்திலும், சிரசிலும் முத்து முத்தாய் வியர்வை வியர்த்து தானாகவே மாறி விடும் வழக்கம் இன்றுவரை நடந்து வருகிறது. அதனாலேயே இவ்வம்பிகை முத்து மாரியம்மன் என்று அழைக்கப்படுகிறார்.

வே.கோவிந்தராம் எம்.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர், பொருளாளர் & மேலாளர்
அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.

எஸ்.பாபாஜி ராஜா பான்ஸ்லே சத்ரபதி பி.இ.,
மூத்த இளவரசர், பரம்பரை அறங்காவலர்,
அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்.

அருள்மிகு

உத்வாகநாத சுவாமி திருக்கோயில்

திருமணஞ்சேரி - 609 801. மயிலாடுதுறை வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

திருமணம் கைகூடும் திருமணஞ்சேரி ஸ்ரீ கோகிலாம்பாள் சமேத கல்யாண சுந்தரர் ஆலயம்

அமைவிடம் :

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குத்தாலம் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ளது.

தேவார பாடல்கள் :

ஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசரால் பாடல் பெற்றவை.

திருத்தல மகிமை :

இறைவன், இறைவி பூலோகத்திற்காக திருமண புரிந்த திருத்தலம். இறைவி கோகிலாம்பாள், இறைவன் உத்தவாகநாதர் சுவாமியின் கோபத்தால் பசு சாபம் ஏற்று தபம் செய்து பின் சாபம் நீங்கி பரத்வாச ரிஷியின் மகளாகப் பிறந்து மீண்டும் இறைவனை மணம்புரிந்த தலம். இத்தலத்தில் ஸ்ரீ உத்வாகநாதர் மூலஸ்தானத்தில் மணமகன் கோலத்திலும், அம்பிகை மணப்பெண்ணாகவும் காட்சியளித்து இவ்வாலயத்தின் தெற்கு பிரகாரத்தில் இருவரும் மணக்கோலத்தில் இறைவன் கரம் பற்றி காட்சி தருகிறார்கள். இம்மணக்கோலநாதராகிய கல்யாண சுந்தரர் கோகிலாம்பாளுக்கு மாலை சாற்றி வழிபாடு செய்தால், பூர்வ ஜன்மாந்திர சாப, பாப தோஷங்களும் விரைவில் நீங்கி, திருமணம் கைகூடும்.

முக்கிய பிரார்த்தனைகள் :

திருமண பிரார்த்தனை, புத்திரபிராப்தி பிரார்த்தனை, பிரதி மாதம் அமாவாசை அன்று மட்டும் ராகு பகவான் சன்னிதியில் காலை 8.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறும். திருமண பிரார்த்தனை எல்லா நாட்களிலும் காலை 7.30 முதல் மதியம் 1.00 மணி வரை, மாலை 3.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறும். ராகு காலம், எமகண்டம், அஷ்டமி, நவமி, ஆகியன இவ்வாலயத்திற்கு கிடையாது.

சுபம்

மு.கண்ணபிரான் B.Sc.,
செயல் அலுவலர்

S.ஜெயராமன் B.A., B.L.,
தக்கார் / உதவி ஆணையர்



அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்

தென்குடித்திட்டை - தஞ்சாவூர் மாவட்டம்

ஸ்தல அமைவிடம் : தஞ்சாவூரிலிருந்து திருக்கருக்காவூர் செல்லும் வழியில் 10ஆவது கிலோமீட்டரில் தற்போது திட்டை என அழைக்கப்படும் தென்குடித்திட்டை கிராமத்தில் அ/மி. வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இது திருஞானசம்பந்தப்பெருமானால் பதிகம் பாடப்பெற்ற தலமாகும். காவிரியின் தென்கரையில் அமையப்பெற்ற சிறப்புமிக்க தலம்.

ஸ்தல வரலாறு : திட்டை என்ற சொல்லுக்கு திட்டு அல்லது மேடு என்பது பொருளாகும். மேடு என்பதை ஞானமேடு என்றும் பொருள் கொள்ளலாம். ஆதிப்பிரளய காலத்தில் இவ்வுலகம் முழுவதும் நீரால் சூழப்பட்டது. மும்மூர்த்திகளுழ் முக்குணங்களுக்குக் கட்டுப்பட்டு நீர் சூழ்ந்தும், இருள் கவிழ்ந்தும் இருந்த இந்த பிரமாண்டத்தைப் பார்த்து அஞ்சினர். பரம்பொருளை பலவாறு துதித்தனர். பார்வதி பரமேஸ்வரனின் அனுக்கிரஹத்தால் ஊழிப்பெருவெள்ளத்தின் நடுவே மேருமலைக்குத்தென்புறம் 10மைல் பரப்பள்வுள்ள மேட்டுப்பகுதியை கண்டு வியந்தனர். அம்மேட்டுப் பகுதியில் ஜோதி மயமான மகாலிங்கத்தைக்கண்டு பூஜித்தனர். இந்த லிங்கத்தினின்று காட்சிதந்த இறைவன் மும்மூர்த்திகளுக்கும் அபயமளித்து படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் அதற்கான சக்தி பெறும் அறிவையும் அவர்களுக்கு அருளினார்.

ஹம் மந்திர ஒலி தோன்றிய இடம்: பிரளயகாலத்தில் இறைவனும், இறைவியும் ஒரு இடத்தில் ஏறிவர அந்த ஓடம் தரைதட்டிய இடம்தான் திட்டை ஆகும். இத்தலத்தில் தான் ஹம் என்ற மந்திர ஒலியை இறைவனும், இறைவியும் ஏற்படுத்தினர்.

அதுமுதல் மும்மூர்த்திகளின் வேண்டுகோளுக்கிணங்க இத்தலம் தென்குடித் திட்டை எனவும், இறைவன் ஸ்வயம்பூதேஸ்வரர், (தான்றோன்றிப்பெருமான்) இறைவி லோகநாயகி எனவும் அழைக்கப்பட்டு வணங்கப்பட்டு வந்தனர்.

அழியா ஸ்தலம் : ஆதிகல்ப காலத்தில் இறைவனால் படைக்கப்பட்ட பல ஸ்தலங்கள் மீண்டும் பிரளயத்தில் மூழ்கி பின் தோன்றின. ஆனால் இத்தலம் மட்டும் இன்றளவும் அழியாமல் தொடர்ந்து நிலைபெற்று வருகிறது. ஊழிக்காலத்திலும், பிரளயக்காலத்திலும் அழியாத பெருமை உடையது இத்தலம்.

பஞ்சலிங்க ஸ்தலம் : கயிலாயம், கேதாரம், காசி, ஸ்ரீசைலம், காஞ்சி, சிதம்பரம் போன்ற சுயம்பு ஸ்தலங்களின் வரிசையில் 22வது ஸ்தலமாக விளங்குவது தென்குடித்திட்டை. இத்திருக்கோவிலின் நான்கு மூலைகளிலும் நான்கு லிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மத்தியிலுள்ள வசிஷ்டேஸ்வரர் ஐந்தாவது லிங்கமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளார்.

இது பஞ்சபூதங்களுக்கும் உகந்த ஸ்தலமாக உள்ளது. திருக்காளத்தி திரு அண்ணாமலை, திருவானைக்கோவில், சிதம்பரம், காஞ்சிபுரம் போன்ற பஞ்சபூத ஸ்தலங்களும் ஒருங்கிணைந்த ஸ்தலமாக தென்குடித்திட்டை அமைந்துள்ளது.

இந்த இறைவனை வணங்கி வரம் பெற்றவர்கள்: நவகோள்களில் மூன்று கிரகங்கள் இத்தல வரலாற்றில் இணைத்துப் பேசப்படுகின்றன. நவக்கிரஹங்களின் தலைவனான சூரியன் சிவபக்தரான சுமாலியைக்கொன்றதால் பாவம் வருமே என்று பயந்து இத்திட்டைக்கு வந்து வசிஷ்டேஸ்வரரைப் பூஜித்து கடுந்தவம் புரிந்தான். இறைவன் அவன் தவத்துக்கு இரங்கி நவக்கிரஹங்களின் அதிபதியாகவும், காலச்சக்கரத்தை நடத்திச்செல்லவும் அருள் புரிந்தார்.

சனி பகவான் :பார்வதி தேவியால் சபிக்கப்பட்ட சனிபகவான் திட்டைக்கு வந்து வேத முறைப்படி இறைவனைத்தொழுது ஆயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து கிரஹநாதனாக அருள் பெற்றார் எனவும் கூறப்பட்டுள்ளது.

ராஜகுரு பகவான் : குரு பகவான் இக்கோயிலில் தனி விமானத்துடன் தனி சந்நிதியில் ராஜ குருவாக அருள்பாலித்து வருகிறார். சுவாமிக்கும், அம்பாளுக்கும் இடையில் கோயில் கொண்டிருப்பது இன்னும் சிறப்பாகும். பெரும்பாலான இடங்களில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியே குருவாகப் பாவித்து வழிபடப்படுகிறார். இங்கு பகவானுக்கு தனி சந்நிதியே உள்ளது.

தென்குடித்திட்டையின் சிறப்புகள் : இத்திருக்கோயிலின் மூலஸ்தான விமானத்தில் இருந்து 25 நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு சொட்டுநீர் இறைவன் திருமேனி மீது விழுந்து, இறைவனை நித்யாபிஷேகம் செய்யும் அற்புதம் ஆதிகாலத்தில் இருந்து இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது வேறு எந்தக் கோவிலிலும் இல்லாத தனிச்சிறப்பாகும்.

இங்கு கோயில் கொண்டுள்ள சுயம்பு மூர்த்தியாகிய வசிஷ்டேஸ்வரரை சூரியன், சனி, குரு போன்ற கிரகங்களும் வசிஷ்டர், ஜமதக்னி போன்ற முனிவர்களும் அசுவினி குமாரர்கள் நந்தினி, கமலினி போன்ற தேவப்பசுக்களும் வணங்கி வழிப்பட்டுள்ளனர்.

இத்தலத்தின் எதிரில் அமைந்துள்ள சக்கரதீர்த்தம் மகா விஷ்ணுவின் சக்ராயுதத்தால் உருவாக்கப்பட்டது. சகல பாவங்களையும் தீர்க்கவல்லது. சிவ ஜோதியுடன் ஒன்ற வைக்கும் சக்தி பெற்றது.

கட்டண விபரங்கள் :

1. இலட்சார்ச்சனைக் கட்டணம் ரூ.100.00 (நூறு மட்டும்) : இது வருடந்தோறும் குருபெயர்ச்சியையொட்டி பரிகாரம் செய்ய வேண்டிய ராசிகளுக்காக இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. இதில் பங்கு பெற விரும்புபவர்கள் ரூ.100/- (நூறு மட்டும்) மணியார்டர் அல்லது டிராப்ட் மூலம் அனுப்பினால் அவர்கள் ஜென்ம நட்சத்திரத்திற்கு அர்ச்சனை செய்து பிரசாதத்துடன் குரு பகவான் உருவம் பதித்த 2 கிராம் வெள்ளி டாலர் அனுப்பி வைக்கப்படும்.

2. அபிஷேகக்கட்டணம் ரூ.500.00 (ரூபாய் ஐநூறு மட்டும்) : குரு பகவானுக்கு அபிஷேகம் செய்ய விரும்புகிறவர்கள் ரூ.500/- கட்டணம் செலுத்தினால் திருக்கோயில் மூலமாக அனைத்து அபிஷேகப் பொருள்களும் வழங்கப்பட்டு அபிஷேகம் செய்விக்கப்படும். நேரில் வர முடியாதவர்கள் திருக்கோயில் செயல் அலுவலர் பெயருக்கு ரூ.500/-க்கு மணியார்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) மூலம் அனுப்பினால் அவர்கள் ஜென்ம நட்சத்திரத்திற்கு அர்ச்சனை மற்றும் அபிஷேகம் செய்து தபால் மூலம் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

3. நித்ய ஆராதனைக் கட்டளைத்திட்டம் ரூ.2000.00 : இந்த திட்டத்தில் சேர விரும்புகிறவர்கள் ரூ.2000.00ஐ செலுத்தினால் அத்தொகை வங்கியில் நிரந்தர முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து வருடம் ஒருமுறை அவர்கள் விரும்பும் தினத்தில் அவர்கள் பெயரில் ஒரு கால பூஜை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

4. கட்டளை அர்ச்சனை ரூ. 240.00 : மாதாமாதம் அருள்மிகு. குருபகவான் அருட்பிரசாதம் பெற விரும்புகிறவர்கள் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு ரூ.240.00 செலுத்தினால் ஒவ்வொரு மாதமும் ஒரு வியாழக்கிழமை அல்லது அவர்கள் குறிப்பிடும் தினத்தில் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

5. திருக்கோயிலில் நேரில் வந்து அர்ச்சனை செய்து கொள்ள கட்டணம் ரூ.2.00 மட்டுமே : மணியார்டர் மற்றும் டிமாண்ட் டிராப்ட் மூலம் பணம் அனுப்புகிறவர்கள் தங்களுடைய முகவரியை பின்கோடு எண்ணுடன் தெளிவாக எழுதவேண்டும். எந்த திட்டத்திற்கு என்பதையும் குறிப்பிட்டு எழுதவேண்டும். மேலும், தங்கள் பெயர், ராசி, லக்னம், நட்சத்திரம் இவற்றுடன் குறிப்பிட்ட நாளில் அர்ச்சனை செய்ய வேண்டுமானால் அது பற்றியும், விபரம் தெரிவிக்கவேண்டும். நேரில் வருபவர்கள் ஆலய அலுவலகத்தில் தொகையை செலுத்தி அச்சு ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

அனைத்துத் திட்டங்களுக்கும் திருக்கோயிலுக்கு பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

செயல் அலுவலர்
அ/மி. வசிஷ்டேஸ்வரர் திருக்கோவில்,
(குருபகவான் பரிகாரத் திருத்தலம்),
திட்டை - 613 003.
தஞ்சாவூர் மாவட்டம்.

தொகுப்பு :
D.கோவிந்தராஜ் M.A.,
செயல் அலுவலர்

அருள்மிகு நீலகண்டபிள்ளையார் திருக்கோயில் - ஏந்தல்

பேராவூரணி நகர் & வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

தஞ்சை மாவட்டம் பேராவூரணி நகரின் முடப்புளிக்காடு, ஏந்தல் என்று அழைக்கப்படும் மையப்பகுதியில் அமைந்து உள்ளது அருள்மிகு நீலகண்டபிள்ளையார் திருக்கோயில்.

தீராத நோய்களை தீர்த்துவைக்கும் நீலகண்டபிள்ளையாராக பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். தஞ்சை துளஜா மகாராஜாவின் அமைச்சருக்கு நீரழிவு நோய் ஏற்பட்டு அதற்கு சிகிச்சை பெற திருப்பெருந்துரை செல்ல பேராவூரணி வழியாக அரச பரிவாரங்களுடன் வந்தார். அப்போது இரவு நேரமாகிவிட்டபாடியால் சாலை ஒரத்திலிருந்த அரசமரத்தடியில் தனது பரிவாரங்களுடன் தங்கினார். அப்போது பேராவூரணி ஏந்தல் என்னும் பகுதியில் திருக்குளக்கரையில் சிறிய கூரைக்கொட்டகையில் வீற்றிருந்த நீலகண்ட பிள்ளையாருக்கு அர்ச்சகர்கள் இருவர் பூஜை செய்வதையும், சுவாமியை தரிசனம் செய்வதற்கு கூடியிருந்த கூட்டத்தினரையும் கண்டார்கள். அப்போது அதனை விசாரித்த துளசேந்திர மகாராஜாவின் அமைச்சர் தனக்கு இருந்து வந்த தீராத நீரிழிவு நோய் பற்றி அர்ச்சகரிடம் தெரிவிக்க அர்ச்சகரும் "நீலகண்டபிள்ளையாரை வேண்டி திருநீறு கொடுத்து" இவ்விடம் இரவு தங்கி காலையில் இத்திருக்குளத்தில் நீராடி திருநீறு அணிந்து திருப்பெருந்துறை செல்லுங்கள் நோய் பூரணமாக குணமாகிவிடும் என கூறியுள்ளார்கள். அதே போல் அன்று இரவு தங்கி அதிகாலை எழுந்து நீராடி நீலகண்டபிள்ளையாரை வணங்கி திருநீறு அணிந்தவுடனேயே தீராத நீரிழிவு நோய் பூரணமாக குணமடைந்து விட்டது கண்டு அமைச்சரும் உடன் வந்த சகபரிவார வீரர்களும் அகமகிழ்ந்தனர்.

தனது அமைச்சருக்கு நீண்டகாலமாக இருந்து வந்து தீராத நீரிழிவு நோய் குணமாகியதால் திருக்கோயிலுக்கு அருகாமையிலிருந்த நிலத்தினை தானமாக திரு நீலகண்டபிள்ளையாருக்கு எழுதிக் கொடுத்தார் மகாராஜா. பின்னர் ஒரு நாள் திருநீலகண்டபிள்ளையார் துளசேந்திரமகாராஜாவின் கனவில் தோன்றி தனக்கு பூஜைக்கு நிலம் வழங்கியதை நினைவுபடுத்தியும் தனக்கு பூந்தோட்டம், பழத்தோட்டம் வேண்டும் எனக் கேட்டதாகவும் அதனால் பேராவூரணி இரயில் நிலையத்திற்கு அருகாமையிலிருந்த செங்கொல்லை எனப்படும் செம்மண் நிலத்தினை எழுதிக் கொடுத்தும், சிறிய கூரைக்கொட்டகையிலிருந்து வந்த திருநீலகண்டபிள்ளையாருக்கு திருக்கோயில் அமைத்து அதில் சுவாமியை பிரதிஷ்டை செய்ததாகவும் கூறப்படுகிறது.



அமைப்பு : துளசேந்திர மகாராஜாவால் சிறிய கோயிலாக அமையப்பெற்ற இக்கோயில். இடைப்பட்ட காலங்களில் ஆன்மீக சான்றோர்களின் முயற்சியால் மேலும் சிறு சிறு வளர்ச்சிப் பணிகளால் ஒரு விமானம், சிறிய இராஜகோபுரத்துடன் திருப்பணி செய்யப்பட்டு கடந்த 1983ல் மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டதை தொடர்ந்து கடந்த 2000-ஆம் ஆண்டில் துறையினர் அனுமதியோடு உபயதாரர்கள் மூலம் இரண்டு பெரிய முன்மண்டபங்களுடன் திருப்பணி செய்யப்பட்டு தற்போது மிகப்பெரிய திருக்கோயிலாக கிழக்கு நோக்கிய சன்னதியுடன் காணப்படுகிறது. திருக்கோயிலுக்கு வடபுறம் அழகிய தீர்த்த குளமும், மேல்புறம் ஸ்தலவிருட்சமான அரசு, வேம்பு ஆகிய மரங்கள் இணைந்து காணப்படுவது மிகவும் சிறப்பானதாகும்.

தீர்த்தம் : திருக்கோயிலுக்கு அருகாமையில் கோயிலை ஒட்டியே அழகிய தீர்த்தம் (திருக்குளம்) உள்ளது. இத்திருக்குளத்தில் நீராடி நீலகண்டபிள்ளையாரை வணங்கி திருநீறு அணிந்தால் தீராத வினையும், நோயும் நீங்கும் என்பது ஐதீகம். இதன் காரணமாக இப்பிள்ளையாருக்கு "தீராத வினைதீர்க்கும் திருநீலகண்ட பிள்ளையார்" என்று சிறப்பு பெயரும் உண்டு.

திருவிழா : இத்திருக்கோயிலில் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் "சித்திரா பௌர்ணமி" உற்சவம் மிகவும் சிறப்பானதாகும். இவ்வுற்சவம் 12 நாட்கள் சிறப்பாக நடைபெறும். அதில் 9ம் நாள் திருத்தேரோட்டம் நிகழ்ச்சி, அன்று காலை முதல் பெண்கள் கும்பிடுதனமும், ஆண்கள் அங்கபிரதட்சணமும் செய்வது அம்மன் ஆலயங்களில் நடைபெறுவதைக்காட்டிலும் இங்கு மிகமிக அதிக அளவில் பக்தர்கள் தங்களது பிரார்த்தனை செய்வது வேறு எங்கும் இல்லாத சிறப்பு ஆகும். அன்றைய தினம் காலை முதல் மாலை வரை காவடி பால்குடம் எடுப்பும் நடைபெறும். மாலை 5..00 மணி முதல் திருத்தேரோட்டம் மிகவும் சிறப்பாக நடைபெறும். அதில் சுமார் ஒரு லட்சம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள். அதனைத் தொடர்ந்து மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் அடுத்த நாள் தெப்பத்திருவிழாவும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

ஆலய சிறப்பு : இத்திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டு கடந்த 9.02.2000 அன்று மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இத்திருக்கோயிலுக்கு ராஜகோபுரம், திருமண மண்டபம் மற்றும் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவின்படி இத்திருக்கோயிலில் "அன்னதானத் திட்டம்" கடந்த 14.4.2003 அன்று தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனது ஒருமாத சம்பளத்தை 31.7.2003 அன்று இத்திருக்கோயிலுக்கு வழங்கினார்கள். மேற்படி தொகை வங்கியில் முதலீடு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாள் அன்று "அன்னதானம்" வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் வேறு எங்கும் இல்லாத அளவில் நிச்சயதார்த்த விழா, திருமணங்கள் மற்றும் காதணிவிழாக்கள் மிகவும் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. பிள்ளையார் திருக்கோயிலில் திருமணம் சுபமுகூர்த்த தினத்தில் அதிகபட்சமாக அறுபது திருமணங்கள் வரை இங்கு நடைபெறுவது வேறு எங்கும் இல்லாத தனிச்சிறப்பாகும்.

நிலங்கள் : இத்திருக்கோயிலுக்கு நஞ்சை 2 ஏக்கர் 88 செண்டும், புஞ்சை நிலம் 9 ஏக்கர் 62 செண்டும், மனை நிலம் 0.99 செண்டும் உள்ளது. நஞ்சையில் 19 குத்தகைதாரர்களும், மனையில் 83 நபர்களும் வாடகை தாரர்களாக உள்ளனர்.

பூஜை விபரம் : மிகவும் பழமை வாய்ந்ததும் சிறப்பு பெற்றதுமான இத்தலத்தில் அருள்மிகு நீலகண்டபிள்ளையார் மூலவராகவும் அருள்மிகு சுப்பிரமணியர், அருள்மிகு வள்ளி, அருள்மிகு தெய்வானையுடன் அமைந்துள்ளதற்கு இரண்டு கால பூ ஜை நடைபெற்று வருகிறது. உச்சிகால பூஜை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிர்வாக முறை : இத்திருக்கோயில் தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் மூன்றாம் நிலை செயல் அலுவலரால் நிர்வாகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. ஆண்டு வருமானம் கடந்த பசலி 1412-ல், ரூ.12,00,000/- (ரூபாய் பனிரெண்டு இலட்சம் மட்டும்) ஆகும்.

அருள்மிகு
கைலாசநாதர் திருக்கோயில்
திங்களூர் (சந்திரன் ஸ்தலம்)
திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.



அமைவிடம்

கும்பகோணம் - திருவையாறு வழித்தடத்தில் திருவையாற்றில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு.

இறைவன்	:	அருள்மிகு கைலாசநாத சுவாமி
இறைவி	:	அருள்மிகு பெரியநாயகி
தீர்த்தம்	:	சந்திரபுஷ்கரணி
பாடியவர்	:	திருநாவுக்கரசர்
தனிச்சிறப்பு	:	அருள்மிகு சந்திரபகவான் தனி சந்நிதி

தல வரலாறு

அப்பர் பெருமான் திங்களூருக்கு வரும்போது தனது பெயரில் பாடசாலை, கோசாலை, தர்மசாலை, தண்ணீர்ப்பந்தல், அன்னசாலை எனகண்டு வியப்புறுகிறார். இதனை அமைத்தவர் அப்பூதி அடிகள் என்பதை அறிந்து அவரது வீட்டிற்கு சென்றார். அப்பர் பெருமானுக்கு அமுது படைக்க, அப்பூதி அடிகள் தனது மகனை குருத்து வாழை இலை அறுத்து வர அனுப்புகிறார். வாழைத் தோட்டத்தில் பாம்பு கடித்து மகன் இறந்து விட்டதை மறைத்து, அப்பூதி அடிகள் அமுது உண்ண அழைக்கிறார். அப்பூதி அடிகளின் மகன் இறந்ததை கேட்ட அப்பர்பெருமான் இத்தலத்திற்கு வந்து பதிகம் பாடினார். இறந்த மகன் உறக்கத்தில் இருந்து விழித்தவனைப் போல எழுந்தான்.

சந்திர பகவானின் பிறப்பு

சந்திரனின் பிறப்பு பற்றி புராணங்களிலே மூன்று வகையான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. சந்திரன் திருமாலின் மார்பினிலே தோன்றியவன் என்பதை சந்திரமா மனஸே ஜாத : என்று புருஷசூக்தம் கூறுகிறது. மற்றும் ஓர் வரலாறு திருமாலின் மார்பிலிருந்து பிரம்மா தோன்றினார். பிரம்மாவின் மகன் அத்ரி, அத்ரியின் மகன் சந்திரன் ஆத்ரேய கோத்ராத் மஜாய நம; என்று சந்திரனைப் பற்றி அஷ்டோத்ரம் கூறுகிறது. பாற்கடலில் மகாலட்சுமிக்கு முன்னால் சந்திரன் பிறந்ததினாலேயே நவக்கிரக ஸ்தோத்திரத்தில் சந்திரனை குறித்து ஷிரோதார்ணவ சம்பவம் - அதாவது பாற்கடலைக் கடைந்தபோது உதித்தவன் என்று கூறுகிறது.

தலச்சிறப்பும் சிறப்பு நாட்களும்

பங்குனி உத்திரத்தன்று காலை உதயாதி 6.00 மணிக்கு சூரிய ஒளி சிவலிங்கத்தின் மேல் பிரவேசிப்பதால் அன்று சூரிய பூஜையும் மறுதினம் (பௌர்ணமி) பிரதமையில் மாலை 6.00 மணிக்கு சந்திர ஒளி சிவலிங்கத்தின் மேல் பிரவேசிப்பதால் அன்று சந்திரபூஜையும் நடைபெறும். சந்திரபகவானுக்கு தனி சன்னதி உண்டு. திங்களூரில் நாகம் தீண்டினால் கடிபட்டவர்களுக்கு விஷம் ஏறாது என்பது தனிச்சிறப்பு. தோஷமுள்ளவர்கள் அபிஷேகம், அர்ச்சனை, நெய்விளக்கு ஏற்றி சந்திரபகவானை வழிபட்டு பேறு பெறலாம்.

தோஷநிவர்த்தி

சந்திரபுஷ்கரணி தீர்த்தத்தில் நீராடி சந்திரனுக்குரிய மலர் வெள்ளரளி, தானியம் பச்சை அரிசி பொங்கல் அல்லது (பச்சரிசியும் வெல்லமும் மட்டும் கலந்தவை) காப்பரிசியாக செய்து மூலவர் சிவபெருமானுக்கு வெள்ளைநிற வஸ்திரமும், சந்திரனுக்கு வெள்ளைநிற வஸ்திரமும் அணிவித்து, நவரத்தினங்களில் ஒன்றான முத்துபதித்த ஆபரணமாகவோ, அல்லது நவரத்தினங்களில் ஒன்றான வெள்ளி ஈயகாப்பாகவோ விரல் மோதிரமாக நகை செய்து சுவாமிக்கு நெய்வேத்திய தீபாராதனைகள் செய்வித்து, சந்திரதோஷம் உள்ளவர்கள் பிரசாதத்தை உண்டு அணிகலன்களை அணியவும். தன் ஜாதகத்தில் சந்திரதோஷ காலவரை விரதங்கள் இருந்து தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

<u>சிறப்பு அர்ச்சனை விவரம்</u>

1. <u>கட்டளை அர்ச்சனை</u> ரூ.180/- இந்த தொகையை செலுத்தியவர்களுக்கு அவரவர் குறிப்பிடும் நட்சத்திரத்திற்கு - அர்ச்சனை செய்து பிரசாதம் 12 மாதங்கட்கு அனுப்பி வைக்கப்படும்.

2. <u>நித்திய கால பூஜை</u> ரூ.2000/-
இந்தத் தொகையை ஆண்டின் ஒரு நாளில் - தொகை செலுத்துவோர் - குறிப்பிடும் தினத்தில் - 1 நாள் பூஜை செய்து அபிஷேக அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பூஜைகளை செய்திட தொகையை நேரில் ரொக்கமாகவோ, வங்கி வரைவோலை (டிராப்ட்) மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

3. <u>அன்னப்பிரானசம்</u> - (குழந்தைகளுக்கு அமுதூட்டல் கட்டணம் ரூ.100/-)

<u>திருக்கோயில் முகவரி :</u>

செயல் அலுவலர்,
அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில்,
திங்களூர், திருப்பழனம் அஞ்சல், திருவையாறு - 613 204.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.

அருள்மிகு இராமலிங்க சுவாமி திருக்கோயில்

(108 சிவாலயம்)

(கீழை இராமேஸ்வரம்)

பாபநாசம்வட்டம், தஞ்சை மாவட்டம்.

தென்னாட்டின் தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள பாபநாசம் எனும் பாபவிநாசம் கீழை இராமேஸ்வரம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கே இராமபிரானின் தோஷம் நீங்க இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமலிங்க சுவாமி எனப்பெயர்பெற்ற ஈசன் எழுந்தருளியுள்ளார். 108 சிவலிங்கங்கள் ஒரே இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதால் மிக முக்கிய சுற்றுலாத்தலமாகவும் விளங்குகிறது.

இலங்கையில் இராவண சம்ஹாரம் செய்தத் தோஷம் அகல இராமேஸ்வரத்தில் புனித நீராடி திரும்பும்வழியில் தங்களை ஏதோ தோஷம் பின்தொடர்வதை உணர்ந்த சீதை இராமபிரானிடம் சொல்ல, இராவணனின் தங்கை சூர்ப்பனகையின் பாதுகாவலர்கள் ஹரன், துஷன் ஆகியோரை சம்ஹாரம் செய்ததை நினைவு கூர்ந்து அத்தோஷமே தங்களை பின்தொடர்ந்து வருகிறது என்பதை உணர்ந்தனர். தோஷம் அகல சிவலிங்க பூசை செய்வதே உத்தமம் என்று தீர்மானித்தனர். உடன் காசிக்குச் சென்று சிவலிங்கம் கொண்டுவர அனுமனை பணித்தார். காசி சென்ற அனுமன் திரும்பும் வரையில் சீதாப்பிராட்டி குடமுருட்டி ஆற்றில் மூழ்கி ஈரமணலை எடுத்து வரிசையாக சிவலிங்கங்களை செய்யலானார். சீதாப்பிராட்டி தமது கரங்களாலேயே நூற்றுக்கும் மேற்பட்ட மணல் லிங்கங்களை உருவாக்கினார். ஸ்ரீ அனுமன் காசியிலிருந்து திரும்பும் முன்னரே வில்வமரத்தடியில் பக்தி பரவசமுற்று சிவலிங்க பூசையை துவங்கிவிட்டனர். காசியிலிருந்து தான் வருமுன்பே பூசை தொடங்கி பூர்த்தியடையும் தருவாயில் இருப்பதை கண்ட ஸ்ரீ அனுமன் மூலவரான ஸ்ரீ இராமலிங்கத்தை பெயர்த்தெடுத்து விட்டு தான் கொண்டுவந்த காசிலிங்கத்தை மூலவராக பிரதிஷ்டை செய்யவேண்டுமென்ற நோக்குடன் ''தான்'' என்ற ஆணவத்துடன் தன் வாலால் கட்டி இழுக்கும் போது வாலறுந்து வடக்கே சென்று வீழ்ந்தார் (வாலறுந்து வீழ்ந்த இடமானது இன்றும் அனுமான் நல்லூர் என்று வழங்கப்படுகிறது). அனுமானுக்கு தனிக்கோயில் ஒன்றும் உள்ளது. தமிழகத்தின் பலபகுதிகளில் இருந்தும் நாள்தோறும் பாவ நிவர்த்திக்காகவும், பிதுர்தோஷ நிவர்த்திக்காகவும், பூர்வ ஜென்ம பாவ நிவர்த்திக்காகவும் பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

தென்னகத்தின் மிகப்பெரிய சூரியன் (6 அடி உயரத்தில்) தனி சன்னதியில் அமர்ந்து அருள் பாலிப்பது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும். சிவராத்திரி மற்றும் பிரதோஷ காலங்களில் இவ்வாயலத்தை 108 முறை வலம் வந்து 108 தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் பலன் உண்டு.

<u>கட்டண விபரம்</u>

மாத அர்ச்சனை (உள்நாடு) 1 வருடம்	-	ரூ.	180.00
மாத அர்ச்சனை (வெளிநாடு) 1 வருடம்	-	ரூ.	360.00
நிரந்தர கட்டளை (உள்நாடு) 1 வருடம்	-	ரூ.	2,000.00
நிரந்தர கட்டளை (வெளிநாடு) 1 வருடம்	-	ரூ.	5,000.00
பிரதோஷ கட்டளை (உள்நாடு) 1 வருடம்	-	ரூ.	360.00
பிரதோஷ கட்டளை (வெளிநாடு) 1 வருடம்	-	ரூ	720.00

<u>இத்திருக்கோயிலுக்கு தொகை அனுப்பவேண்டிய முகவரி</u>

செயல் அலுவலர்,
அருள்மிகு இராமலிங்க சுவாமி திருக்கோயில்,
108 சிவாலயம் - (கீழை இராமேஸ்வரம்),
பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். தொலை பேசி எண் : 04374 - 221095

அருள்மிகு
ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்
(குருபரிகார ஸ்தலம்)
ஆலங்குடி - 612 801.

வலங்கைமான் வட்டம் திருவாரூர் மாவட்டம்

அமைவிடம்

கும்பகோணத்தில் இருந்து நீடாமங்கலம் செல்லும் வழித்தடத்தில் கும்பகோணத்தில் இருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது.

தலப்பெயர்கள்

திருஇரும்பூளை / காசி ஆரண்யம் / ஆலங்குடி

இறைவன்

அருள்மிகு ஆபத்சகாயர் / காசி ஆரண்யேஸ்வரர்

இறைவி

அருள்மிகு ஏழவார்குழலி அம்மை / உமையம்மை
விசேட மூர்த்தி : அருள்மிகு குரு தெட்சிணாமூர்த்தி
தல விருட்சம் : பூளைச்செடி
தீர்த்தம் : அமிழ்த புஷ்கரணி
பாடியவர்கள் : திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்
வழிபட்டோர் : சுந்தரர், ஆதி சங்கரர், இந்திரன் மற்றும் சுவாகனன்

தலப்பெருமை

தேவர்கள் அமுதம் கடைந்த போது ஏற்பட்ட விஷத்தினால் அவதியுற்று, ஆண்டவனை வழிபட, ஆலமாகிய விஷத்தை குடித்துக் காத்தமையால் இவ்வூருக்கு ஆலங்குடி எனவும், இறைவனுக்கு ஆபத்சகாயர் எனவும் பெயர் வழங்கப்படுகிறது. இந்த ஊரில் அரவு தீண்டி மரித்தவர் இல்லை. கஜமுகாசுரனால் தேவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்கு கலங்காமற் காத்த விநாயகர் எனப்பெயர் உண்டாயிற்று. அம்மையார் தவம் செய்து இறைவனை திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமணமங்கலம் எனப்பெயர் வழங்கப்படுகிறது. மத்தியார்ச்சுன மகாலிங்கப் பெருமானுக்கு பரிவாரத்தலமாக உள்ளது. இத்தலத்தில் உள்ள குருமூர்த்தியை குருவாரத்தில் வணங்கி வழிபடுவோருக்கு சிவஞானம் எளிதில் கைகூடும்.

குரு தோஷ நிவர்த்தி மற்றும் வழிபடும் முறை

இத்திருக்கோயிலுக்கு 14 தலைமுறைகள் புண்ணிய பேறு பெற்றவர்களே வருகை தர இயலும். முதலில் கலங்காமற் காத்த விநாயகரை வணங்கி பின்னர் கொடி மரம் சென்று அங்குள்ள துவஜ கணபதியை வணங்கி நேராக சென்று சுவாமியை (ஆபத்சகாயேஸ்வரர்) தரிசித்து பின்னர் குரு தெட்சிணாமூர்த்தியை வணங்கி சங்கல்பம் செய்து அர்ச்சனை முதலியவைகளை முடித்து பிரகாரத்தில் உள்ள சோமாஸ்கந்தர், முருகன், மகாலெட்சுமி, துர்க்கை, சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள், உற்சவர் குருமூர்த்தியை முறையே வழிபட்டு, ஏலவார் குழலி அம்மை மற்றும் சனிபகவானைத் தொழுது கொடிமரத்தில்

சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வித்தல் வேண்டும். பின்னர் குருபரிகாரமாகிய இருபத்து நான்கு நெய் தீபங்களை தீபம் ஏற்றும் இடத்தில் ஏற்றி திருக்கோயிலை மூன்று முறை வலம் வந்து ஒவ்வொரு முறையும் கொடி மரத்தின் கீழ் வீழ்ந்து நமஸ்காரம் செய்து பரிகாரத்தை நிறைவு செய்தல் நமஸ்காரம் செய்து பரிகாரத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

இத்திருக்கோயிலில் தினசரியும் அருள்மிகு குருபகவானுக்குக் கீழ்க்கண்ட விவரப்படி மூலவருக்கும் உற்சவருக்கும் அபிஷேகம் நடைபெறுகிறது. கட்டணம் ரூ.250.00 (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) செலுத்தி பக்தர்கள் அபிஷேகம் செய்து குருவருள் பெற வேண்டுகிறோம்.

விவரம் :

அருள்மிகு மூலவர் குரு அபிஷேகம்
தினசரி அதிகாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை
அருள்மிகு உற்சவர் குரு அபிஷேகம்
காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை, பகல் 12.00 மணி முதல் 12.30 மணி வரை மற்றும் மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை.

மூலவர் குருமூர்த்திக்கு அதிகாலையில் மட்டுமே அபிஷேகம் நடைபெறும். மற்ற நேரங்களில் உற்சவர் குருமூர்த்திக்கு அபிஷேகம் நடைபெறும். அபிஷேகத்தில் கலந்து கொள்பவர்களுக்கு அருள்மிகு குருபகவான் உருவம் பதித்த இரண்டு கிராம் வெள்ளியிலான டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

சகஸ்ரநாம அர்ச்சனை செய்பவர்களுக்கும் அருள்மிகு குருபகவான் உருவம் பதித்த இரண்டு கிராம் வெள்ளியிலான டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

<u>கட்டண விபரம்</u>

வ.எண்	விவரம்	உள்நாடு		வெளிநாடு	
		ரூபாய்	பை.	ரூபாய்	பை.
1.	மாதாந்திரக் கட்டளை அர்ச்சனைக் கட்டணம் (ஒரு வருடத்திற்கு)	180	00	420	00
2.	பிரதி வியாழன் அர்ச்சனைக் கட்டணம் (ஒரு வருடத்திற்கு)	750	00	1,500	00
3.	அபிஷேகக் கட்டணம் ஒன்றுக்கு	250	00	--	--
4.	சகஸ்ரநாம கட்டணம் ஒன்றுக்கு	100	00	--	--
5.	நிரந்தர கட்டளை கட்டணம்	3,000	00	5,000	00
6.	பிரதோஷம் கட்டணம் (ஒரு வருடத்திற்கு)	360	00	--	--
7.	சங்கடஹர சதுர்த்தி கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு	180	00	--	--
8.	நித்திய பூஜை கட்டளை கட்டணம்	750	00	--	--
9.	அன்னதான கட்டளை (நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு)	1,000	00	--	--

அன்னதான கட்டளைக்காக ரூ.15,000.00 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) முதலீடு செய்து அதன் வட்டியினைக் கொண்டு திருமண நாள், பிறந்த நாள் மற்றும் தொழில் தொடங்கிய நாள் இவைகளில் ஏதேனும் ஒரு நன்னாளில் அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். இதற்கு வருமான வரி விலக்கு (80ஜி) உண்டு.

<u>திருக்கோயில் முகவரி :</u>

செயல் அலுவலர்,
அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்,
ஆலங்குடி - 612 801. வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம்
போன் : 04374 - 269407 E.mail : algguru@sancharnet.in

வலங்கைமான்
அருள்மிகு மகாமாரியம்மன் தலவரலாறு

அன்னையின் தோற்றம்

அன்னை பராசக்தியே உலகின் வெப்பம் நீக்கி உயிர்களைக் காக்கும் மழையைப் பொழிய மாரியம்மனாக தோன்றினாள் என்றும், பரசுராமனின் தாய் இரேணுகையே மாரியம்மன் என்றும், மாராசுரனை சம்காரம் செய்த சக்தியே மாரியம்மன் என்றும், கண்ணகி வழிபாடே மாரியம்மன் வழிபாடாக மாறிற்று என்றும் பலரும் கருதிய போதும் மக்கள் மாரியம்மனைப் பராசக்தியின் ஓர் அம்சமாக வெப்பம் தீர்த்து மழை தந்து உயிர்காக்கும் மகாசக்தியாகவே நம்புகின்றனர்.

இம்மகாசக்தி ஊர்தோறும் நோயில் கொள்ளுமுன் ஆங்காங்கு சில அற்புதங்கள் நடைபெற்றுள்ளன. வலங்கைமான் வரதராஜன்பேட்டையில் விளங்கிவரும் மகாமாரியம்மனுக்கும் ஓர் அற்புத வரலாறு வழங்கி வருகின்றது.

வலங்கைமான் வரதராஜன்பேட்டை தெருவில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் காதக் கவுண்டர் என்பவர் வசித்து வந்தார். அவர் மனைவி பெயர் கோவிந்தம்மாள். இருவரும் இறைபக்தி மிக்கவர்கள். காதக் கவுண்டர் விவசாய வேலை செய்து வந்தார். அவர் மனைவி பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று தின்பண்டங்கள் விற்கும் வியாபாரம் செய்து வந்தார். அவரால் புங்கஞ்சேரி என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட குழந்தையை, ''சீதளா'' என்று பெயரிடப்பட்டு வளர்த்து வந்தார். வைசூரி நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை இறந்து விட்டது. மாரியம்மனே குழந்தை வடிவில் வந்ததாக இத்தம்பதியரின் கனவில் தோன்றி ஒருநாள் அருள்வாக்கு கிடைத்ததால் குழந்தையை நல்லடக்கம் செய்த இடத்திலேயே பிற்காலத்தில் கோயில் எழுப்பப்பட்டது.

தல இருப்பிடம்

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்தைச் சேர்ந்தது. வலங்கைமான் நகர், குடந்தையிலிருந்து (இராச) மன்னார்குடிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் குடந்தைக்கு 9 கிலோ மீட்டர் தெற்கே குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயில் நெடுஞ்சாலையை ஒட்டி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

பெயர்க் காரணம்

மற்ற சிவாலயங்களில் உள்ள சிவபெருமான் திருவுருவில் இடது கையில் மான் இருக்கும். ஆனால், வலங்கைமானில் உள்ள சிவபெருமான் திருவுருவில் வலது கையில் மான் இருப்பதால் இவ்வூருக்கு ''வலங்கைமான்'' என்று பெயர் வந்ததாகச் சிலர் கூறுவர்.

சீதையின் விருப்பத்தினால் மாயமானை இராமபிரான் துரத்திச் சென்றபோது, அம்மான் அங்கு வலதுபுறமாக ஓடியதால் வலங்கைமான் என்று இவ்வூருக்குப் பெயர் வந்ததாகச் சிலர் கூறுவர்.

திருவிழாக்கள்

ஆவணி, பங்குனி ஆகிய இரு மாதங்களிலும் வலங்கைமான் மாரியம்மனுக்குத் திருவிழா நடைபெறுகின்றது.

ஆவணி மாதத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சீதளாதேவிக்குச் சிறப்பான விழாக்கள் நடைபெறுகின்றன.

ஆவணி மாதத்து இறுதி ஞாயிறன்று இரவு அம்பாளுக்குத் தெப்பத் திருவிழாவும் நடைபெறுகின்றது. அன்னை அன்ன வாகனத்தில் உலாவந்து, தெப்பத்தில் அமர்ந்து சுற்றிவரும் காட்சி பக்தர்களைப் பரவசப்படுத்தும்.

ஏழுநாட்கள் விழா நடைபெறும். எட்டாம் நாள் பிரசித்தி பெற்ற பாடைத் திருவிழாவும், ஒன்பதாம் நாள் புஷ்பபல்லக்கும் சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

நிர்வாகமும், வருமானம்

இத்திருக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சட்டப்பிரிவு 46 (111)ன் கீழ் உள்ள நிருவாகத்திற்கு உட்பட்டது. இக்கோயில் நிருவகிக்க ஒரு செயல் அலுவலரும் (முதல்நிலை) அவரின் கீழ் மேலாளர், கணக்கர் எனப்பல்வேறு பணியாளர்களும் உள்ளனர். இத்திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலர் நியமனம் கோரி நடைபெற்ற வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் **AS 65/85** என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது.

உண்டியல்கள், அர்ச்சனைச்சீட்டு முதலிய அனுமதிச்சீட்டுக்கள், காணிக்கையாகச் செலுத்தப்படும் கோழி, ஆடு, மாடுகளை ஏலம்விடுதல், கல்யாண மண்டபம் வாடகைக்கு விடுதல் ஆகிய வகைகளில் இத்திருக்கோயிலுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.25 இலட்சம் வருமானம் வருகின்றது. உண்டியல்களை மாதந்தோறும் திறந்து காணிக்கைத் தொகை எண்ணப்படுகிறது.

திருப்பணிகள்

வழிபடுவோர் தங்கும் விடுதி ஒன்றுக்கு ரூ.5 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. அலங்கார மண்டபம் ஒன்று உபயமாக ரூபாய் மூன்று இலட்சத்தது நாற்பதாயிரம் செலவில் கட்டப்பட்டு உள்ளது. உபயமாகப் பிரகார மண்டபம் சுமார் பத்து இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு உள்ளது. கல்யாண மண்டபத்தின் மேல்தளம் ரூபாய் ஏழு லட்சம் செலவில் கட்டப்பட்டு உள்ளது. திருக்குளத்தைச் சுற்றி மதிற்சுவர் மற்றும் கிரில் வேலைகள் உபயமாக ரூ.3 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. மேலும் மகாமண்டபம் ரூ.6 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத் திட்டம் இத்திருக்கோயிலில் 5.8.2002 முதல் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இத்திருக்கோயில் 1943ஆம் ஆண்டில் குடமுழுக்கு செய்யப்பெற்று, அதன்பின் சென்ற 22.4.1999 அன்று மீண்டும் குடமுழுக்கு சிறப்பாகச் செய்யப்பெற்றது. இத்திருக்கோயிலுக்கு மனை, நன்செய், புஞ்சையாக ஏ. 15 : 21 நிலம் உள்ளது. ஒரு திருக்குளம் உள்ளது. இத்திருக்குளத்தில் தான், ஸ்ரீ மகாமாரியம்மன் ஆவணி கடைசி ஞாயிறன்று தெப்பத்தில் உலாவருவது வழக்கம்.

சிறப்புத் திருவிழாக்கள்

இக்கோயிலில் கந்தர் சஷ்டி, நடராஜ அபிஷேகம், சோமவாரம், அஷ்டலிங்க பூஜை, பௌர்ணமி பூஜை, காளி சிறப்பு அபிஷேகம், அஷ்டமி கால பைரவர் பூஜை ஆகியன சிறப்பான நடைபெறுகின்றன.

திருவண்ணாமலை திருக்கோயிலில் நடைபெறுவது போன்று இத்திருக்கோயிலிலும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கிரிவலம் வரும்நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது.

அருள்மிகு முல்லைவனநாத சுவாமி திருக்கோயில்

திருக்கருகாவூர் - 614 302.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், திருக்கருகாவூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முல்லைவனநாத சுவாமி உடனுறை கருகாத்தநாயகி திருக்கோயில் பாடல் பெற்ற சிறப்பு வாய்ந்த பிரார்த்தனை தலங்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயிலில் சுவாமி, விநாயகர், நந்தி மூவரும் சுயம்பு மூர்த்திகளாவர். இத்தலத்தின் தலவிருட்சம் முல்லைக்கொடியாகும். சுவாமி புற்றுருவாக இருப்பதால் அபிஷேகம் செய்யப்படுவதில்லை. புனுகு மட்டுமே மாதந்தோறும் வளர்பிறை பிரதோஷ தினத்தில் சாத்தப்படுகிறது. புனுகு சாத்தி வணங்கினால் தீராத நோய்களும் தோஷங்களும் நிவர்த்தியாகி வருவது இன்றளவும் கண்கூடான உண்மையாகும்.

இத்தலத்து இறைவி கருகாத்தநாயகி குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் அம்பாள் பாதத்தில் வைத்து மந்திரித்து கொடுக்கப்படும் நெய் பிரசாதத்தை தொடர்ந்து 48 நாட்கள் தம்பதியர் சாப்பிட்டு வர குழந்தைபாக்கியம் பெறுகிறார்கள். கர்ப்பிணிப் பெண்கள் அம்பாள் பாதத்தில் வைத்து மந்திரித்து தரப்படும் விளக்கெண்ணை பிரசாதத்தை வயிற்றில் தடவி சுகப்பிரசவம் பெறுகிறார்கள். திருமணம் கூடிவராத கன்னியர்கள் அம்பாள் சன்னதி படியினை நெய்யால் மெழுகி கோலமிட்டு பிரார்த்தனை செய்து கொள்ள விரைவில் திருமண பாக்கியம் பெறுகிறார்கள். வம்சதோசம் நீங்க அம்பாள் சந்நிதியில் ஒவ்வொரு வியாழன் தோறும் நெய்தீபம் ஏற்றி வழிபடுதல் சிறப்பாகும்.

இத்தலத்து தீர்த்தங்கள் விசேடமானதாகும். இக்கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ள க்ஷீரகுண்டம் (பாற்குளம்) தெய்வப்பசுவாகிய காமதேனுவின் காலால் உருவாக்கப்பெற்ற சிறப்புடையதாகும்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய அருளாளர்களால் பாடல் பெற்ற அருஞ்சிறப்புடைய தலம். இத்தலம் சோமாஸ்கந்த அமைப்பில் உள்ளது ஆகும். சுவாமி, அம்பாள், சுப்ரமணியர் ஆகிய மூன்று சந்நிதிகளும் ஒரு சேர அமைந்துள்ளதால் இங்கு பிரார்த்தனை செய்து கொள்பவர்களுக்கு புத்திரப்பேற்றையும், அக்கருவை காத்தருளுகின்ற அருள்பேற்றையும் வழங்கும் தலமாக விளங்குகின்றது.

இத்திருக்கோயிலில் பிரார்த்தனை செய்து குழந்தைப்பேறு வேண்டுபவருக்கும், பிரார்த்தனை நிறைவேற்றுவதற்கும் தங்கத்தொட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அம்பாளிடம் வேண்டி குழந்தைப்பேறு பெற்றவர்கள் தங்களது குழந்தையினை தங்கத்தொட்டிலில் இட்டு அம்பாள் சந்நிதியை வலம் வந்து தங்களது பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு கட்டணம் ரூ.500/- ஆகும். நீண்ட நாட்களாக குழந்தைப்பேறு இல்லாதவர்கள் அம்பாள் சன்னதி அர்ச்சகரிடம் வெள்ளியினாலான ஸ்கந்தர் உருவத்தினை தங்கள் டியிலேந்தி தங்கத்தொட்டிலில் இட்டு அம்பாள் சந்நிதியினை



தங்கத் தொட்டில்

வலம் வந்து மீண்டும் ஸ்கந்தரை அம்பாள் சந்நிதி அர்ச்சகரிடம் கொடுத்து பிரார்த்தனை செய்து கொள்ள விரைவில் குழந்தைப்பேறு கிட்டும்.

நேரில் வர இயலாத வெளியூர் அன்பர்கள் கீழ்க்கண்டவாறு கட்டணங்களை மணியார்டர் (M.O.) அல்லது டி.டி. (D.D.) மூலம் அனுப்பிவைத்தால் அர்ச்சனை, அபிஷேகங்கள் செய்து பிரசாதம் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

கட்டண விபரம்

1.	மாத அர்ச்சனை (உள்நாடு) 1 வருடம்	-	ரூ.	180.00
2.	மாத அர்ச்சனை (வெளிநாடு) 1 வருடம்	-	ரூ.	360.00
3.	நிரந்தர கட்டளை அர்ச்சனை (உள்நாடு)	-	ரூ.	3,000.00
4.	நிரந்தர கட்டளை அர்ச்சனை (வெளிநாடு)	-	ரூ.	5,000.00
5.	புனுகு சாத்த	-	ரூ.	100.00
6.	நெய் மந்திரித்தல் (உள்நாடு)	-	ரூ.	75.00
7.	நெய் மந்திரித்தல் (வெளிநாடு)	-	ரூ.	200.00
8.	விளக்கெண்ணை மந்திரித்தல் (உள்நாடு)	-	ரூ.	75.00
9.	விளக்கெண்ணை மந்திரித்தல் (வெளிநாடு)	-	ரூ.	200.00
10.	அபிஷேகம்	-	ரூ.	400.00
11.	சகஸ்ரநாமம்	-	ரூ.	100.00
12.	நெய்தீபம் (வியாழக்கிழமை)	-	ரூ.	40.00
13.	தங்கத் தொட்டில் பிரார்த்தனை	-	ரூ.	500.00
14.	அன்னதானம் 1 நாள் மட்டும் (100 நபர்கள்)	-	ரூ.	1,000.00
15.	அன்னதானம் (வைப்பு நிதி வட்டியிலிருந்து) 1 நாள்		ரூ.	15,000.00

அன்னதானம்

மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நன்கொடையாளர்களுடன் கூடிய அன்னதானத்திட்டம் 15.08.2002 முதல் இத்திருக்கோயிலில் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்திற்கு வருமான வரிவிலக்கு 80 (ஜி) உண்டு.

இத்திருக்கோயிலுக்கு தொகை அனுப்பவேண்டிய முகவரி

செயல் அலுவலர்,
அருள்மிகு முல்லைவனநாதசுவாமி திருக்கோயில்,
திருக்கருகாவூர் - 614 302.
பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்,
தொலைபேசி எண்: 04374 - 273423

இணையதளத்தில் இத்திருக்கோயில் பற்றிய விபரங்களை அறிந்துகொள்ள:

www.garbaratchambigai.com

மின்அஞ்சல் மூலம் தகவல் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

enquiry@garbaratchambigai.com

அருள்மிகு பொது ஆவுடையார் (ஸ்ரீ மத்தியபுரீஸ்வரர்சுவாமி) திருக்கோயில்

பரக்கலக்கோட்டை - பட்டுக்கோட்டை வட்டம்

தஞ்சாவூர் மாவட்டம்

பார் புகழும் பரமன், பரக்கலக்கோட்டையென்னும் தென் சிதம்பரத்தில் வெள்ளால மரத்தின் கீழ் எழுந்தருளி அடுத்து வரும் அன்பர்களுக்கெல்லாம் அருள்பாலிக்கிறது அருள்மிகு. பொது ஆவுடையார்திருக்கோயில்.

திருத்தல மகிமை

தென்னாடுடைய சிவனே, எந்நாட்டவர்க்கும் இறைவனாகி பொன்னார் மேனியனாய்ப் பொன்னம்பலத்தில் ஸ்ரீ நடராஜனாய் ஆடல் புரிந்து அன்பர்களுக்கு அருள் பாலிக்க தில்லையம்பதிதான் சிதம்பரம். சிவனை வணங்குவோரின் கோயில் என்றாலே சிதம்பரம்தான். அங்கிருந்து அர்த்த ஜாம பூஜையானதும் இறைவன் தன் பரிவாரங்களுடன் தென்திசை நோக்கிப் புறப்பட்டார். சித்தமெல்லாம் சிவன் பால் வைத்த ஸ்ரீ வானுகோபர், ஸ்ரீ மகாகோபர் என்ற அருமறை முனிவர் இருவருக்கிடையே எழுந்த இல்லறம் சிறந்ததா? துறவறம் சிறந்ததா? என்ற வழக்கைத் தீர்த்து வைக்க திருவுளம் கொண்ட ஈசன், 'பிரதாப சிம்மபுரம்', 'தென்சிதம்பரம்' என்றெல்லாம் பெருமைபெற்ற 'பரக்கலக்கோட்டை' என்னும் இத்திருத்தலத்தில் உள்ள ஒரு வெள்ளால மரத்தில் சோமவார தினமொன்றில் இரவு இரண்டாவது சாமத்தில் தோன்றி திவ்விய தரிசனம் தந்தருளினார்.

இல்லறமே சிறந்ததென ஸ்ரீவானுகோபரும், துறவறமே சிறந்ததென ஸ்ரீமகாகோபரும் வாதிட்டதினைக் கேட்ட இறைவன், இல்லறம், துறவறம் இரண்டுமே சிறந்தவைதான். ஒன்றுக்கொன்று உயர்வு, தாழ்வு உடையவையல்ல என்று மத்தியஸ்தம் செய்து வைத்ததால் 'ஸ்ரீமத்தியபுரீஸ்வரர்' என்று வடமொழியிலும், முனிவர் இருவருக்கும் பொதுவாக இருந்து உண்மைப் பொருளை உணர்த்தியதால் அருள்மிகு பொது ஆவுடையார்' என்று அமுதத் தமிழிலும் அழைக்கப்பெற்று, பெருமையுடன் இத்திருத்தலத்தின் பாமர மக்களுக்கும், பொதுவிடையராக அரூபமாய் இருந்து அருள்பாலித்து வருகிறார்.

ஆலயங்களில் தலவிருட்சமாக பல்வேறு மரங்கள் இருப்பினும் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்த ஆலமரச் செல்வனுக்கு, ஆலமரமே மிகவும் ஏற்புடையதாகும். அனைத்திற்கு மேலாக ஆலமரமே தலவிருட்சமாய், அதுவே ஸ்தலமூர்த்தியாகவும் வழிபடப்பெறும் ஒரே திருத்தலம். தென்தில்லை என்னும் இந்த பரக்கலக்கோட்டை ஆகும். கயையில் ஆலமரத்தடியில் விஷ்ணு பாதமும், திருவெண்காட்டில் ஆலடியில் ருத்ரபாதமும் உள்ளதுபோல் இந்த ஆலமரத்தடியில் ஸ்ரீ நடராஜர் பாதம் அமையப் பெற்றுள்ளது. அதனால்தான் இந்த ஆலமரம் பார்ப்பதற்கு ஆலமரச் செல்வனின் திருமுடிபோல் கண்ணுக்கு விருந்தாகவும், அதன் இலைகள் அனைத்து நோய்களுக்கும் மருந்தாகவும் உள்ளது. பூஜை காலங்களில் இவ்வால மரத்தின் அடியில் முகப்பில் சந்தனம் சாற்றி அதன் மேல் வெள்ளியாலான நெற்றிப் பட்டம், கண்மலர்கள், நாசி, திருவாய் போன்றவை அணிவித்து முன்புறம் திருவாசி அமைத்து அலங்கரித்து இருக்கும் நிலையில், அரூபவடிவமான ஆலமரச்செல்வனை சிவலிங்க வடிவில் நாம் கண்டு வழிபடலாம்.

தீராத வினைகளெல்லாம் தீர்த்து வைக்கும் ஸ்ரீவீரசக்தி விநாயகர், திருக்குளத்தின் கரையில் மேற்கு நோக்கி தனி கோயிலில் அமர்ந்து அடியவர்க்கெல்லாம் அருள்பாலித்து வருகிறார். தில்லையுமைபாகன்

பரக்கலக்கோட்டை எல்லையில் எழுந்தருளக் காரணமாயிருந்த அருமறை முனிவர்கள், ஸ்ரீவானுகோபர் மற்றும் ஸ்ரீமகாகோபர் ஆகிய இருவரும் ஸ்ரீ வீரசக்தி விநாயகருக்கு எதிரில் புளியமர நிழலில் வடக்கு நோக்கி அமர்ந்து அருள்பாலிக்கின்றார்கள்.

தில்லைநாதன் திருவுளமிரங்கி ஒரு திங்கட் கிழமை (சோமவாரம்) இரவு இரண்டாவது சாமத்தில் தனது பரிவாரங்களுடன் இங்கு எழுந்தருளி அருமறை முனிவர்களுக்கும், அடியவர்களுக்கும் அருள்பாலித்ததால், ஒவ்வொரு சோமவாரத்தன்றும் இரவு அந்த இரண்டாம் சாமத்திலேயே ஸ்ரீ பொது ஆவுடையார்க்கு சிறப்பான பூஜை செய்து வழிபாடு நடைபெறுகிறது. கார்த்திகை மாதம் கடைசி சோமவாரத்தில் நடைபெறும் ஆண்டு உற்சவத்தன்று இறைவனுக்கு இரண்டாவது சாமத்தில் பூஜை நடைபெற்ற பின்பு விடியற்காலை சூரியோதயம் வரைதரிசனத்திற்காக சந்நிதி திறந்திருக்கும்.

ஆண்டுக்கு ஒரு நாள் ''தைப்பொங்கல்'' (சங்கராந்தி) அன்று மட்டுமே பகலில் காலை முதல் மாலை சூரிய அஸ்தமனம் வரை நடை திறந்து தரிசனம் நடைபெறும்.

இத்திருத்தலத்து இறைவனை அருள்மிகு. பொது ஆவுடையார் சுவாமியை தரிசித்து அவர்தம் திருநீறு, ஆலிலையையும் எடுத்துச் செல்வோர்க்கு தீராத வினையெல்லாம் தீர்த்து நன்மையே நடக்கும் என்பது கலியுகம் கண்ட உண்மை. அருள்மிகு. பொது ஆவுடையாரை தரிசித்துச் செல்வோர் குடும்பத்தில் நல்லவையெல்லாம் நடக்கிறது. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடுகிறது. மகப்பேறு இல்லாதவர்களுக்கு மகப்பேறு கிட்டுகிறது. வழக்குகளில் நல்ல தீர்ப்பு மகப்பேறு கிட்டுகிறது. வழக்குகளில் நல்ல தீர்ப்பு கிடைக்கிறது. மனிதனுக்கு மட்டுமா மகேசன் அருள்புரிகிறான் ? அவர்தம் திருநீற்றால் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களும், பயிர்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களும், பகலவன் முன் பனிபோல் பறந்து போகின்றன.

எல்லா இழப்புகளையும் ஈடு செய்து விடுகிறான் இந்த இறைவன். வேறென்ன வேண்டும் நமக்கு.

ஆகவே அனைவரும் வருக!
ஆலடிநாதன் அருள் பெறுக!

<u>அருள்மிகு. பொது ஆவுடையாருக்கு காணிக்கை அனுப்பும் முகவரி :</u>

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. பொது ஆவுடையார் திருக்கோயில்,
பரக்கலக்கோட்டை - *614 613.*
பட்டுக்கோட்டை (வட்டம்), தஞ்சாவூர் (மாவட்டம்)
போன் : *04373 - 283295*

அருள்மிகு பெரியநாயகி உடனுறை
அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில்
வலங்கைமான்
(அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயிலுடன் இணைந்த திருக்கோயில்)

தல வரலாறு

அறநிலையத்துறை ஆணையர் அவர்களது உத்திரவின்படி மேற்படி திருக்கோயில் அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயிலின் (வலங்கைமான்) உப திருக்கோயிலாக இணைக்கப் பெற்றுள்ளது.

தலம்	- மதுவனம் என்கிற வலங்கையம்பதி
சுவாமிபெயர்	- அருள்மிகு கைலாசநாதசுவாமி
அம்பிகையின் பெயர்	- அருள்மிகு பிரஹன்நாயகி என்கிற அருள்மிகு பெரியநாயகி அம்மன்
தீர்த்தம்	- கைலாச புஷ்கரணி
தலவிருட்சம்	- பவளமல்லி
நித்திய பூஜைகள்	- காலசந்தி, அர்த்த ஜாமம் (இரண்டுகால பூஜைகள்)

கோட்டத்திலுள்ள ஸ்ரீ விநாயகர், அஷ்டபுஜகாளி, மற்ற மூர்த்திகள், ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ தண்டாயுதபாணி, ஸ்ரீ தெட்சிணாமூர்த்தி, நால்வர், அஷ்டலிங்கம், லிங்கோத்பவர், ஸ்ரீ சுப்ரமணியர், வள்ளி, தெய்வானை, ஸ்ரீ துர்க்காம்பிகை, ஸ்ரீ சண்டிகேஸ்வரர் அண்ணாமலைச் சித்தர், ஸ்ரீ நவகிரகங்கள், தென்திசை பார்வையில் சனீஸ்வர பகவான்.

இவ்வலங்கையம்பதி தென்காஞ்சி என்றும், இத்திருத்தலத்தில் ஜீவ சமாதியில் அடங்கியிருக்கும் அண்ணாமலைச்சித்தர் திருவாரூர் மடப்புரம் ஸ்ரீ தெட்சிணாமூர்த்தி சுவாமிக்கு சிஷ்யராக மடப்புரம் என்றும், மதுவனம் என்ற இவ்வலங்கையம்பதியில் மதங்க மகரிஷி யோக நிஷ்டையில் இருந்தார் என்றும், சரபோஜி மகாராஜா காலத்தில் இத்திருக்கோயிலுக்கு செங்கல் திருப்பணியும், கருங்கல் திருப்பணியும் நடைபெற்றது என்றும் கூறப்படுகிறது.

ஸ்ரீ ஹேமாப்ஜ நாயகா சமேத தேவநாதசுவாமி

திருவகீந்திரபுரம், கடலூர் வட்டம்

கடலூர் மாவட்டம் & வட்டம், திருவகீந்திரபுரம் கிராமம் அருள்மிகு தேவநாத சுவாமி திருக்கோயில் திருமங்கையாழ்வாரால் பத்து பாடல்கள் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருத்தலம் ஆகும். 108 திவ்யதேசங்களில் ஒன்றான இத்திருத்தலம் நடுநாட்டுத் திருப்பதிகள் என வழங்கும் இரண்டில் ஒன்றாகும். (மற்றது திருக்கோயிலூர்).

இத்திருத்தலத்தில் அர்ச்சுனன் வந்து சேவித்ததாக வரலாறு கூறுவதிலிருந்து யுக யுகாந்திரமாக இத்திருத்தலம் உள்ளது என்பது தெரிய வருகிறது.

ஆதிசேஷனால் உருவாக்கப்பட்ட தீர்த்தமும் (தீர்த்தக்கிணறு), கருடனால் உருவாக்கப்பட்ட கருட தீர்த்தமும் (கெடில நதி) உள்ளது.

இத்திருத்தலத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு மும்மூர்த்தி சொரூபமாகக் காட்சியளிக்கிறார். தேவநாதன், அடியவர்க்கு மெய்யன், மேவுசோதி, மூவராகிய ஒருவன், தாசசத்தியன், அஹீந்திரபுரநாதன் எனப் பல பெயர்களால் வழங்கும் பெருமைக்கொண்டவர் ஸ்ரீதேவநாத சுவாமி.

வேதாந்த தேசிகர் சுமார் 40 ஆண்டு காலம் தங்கிருந்து ஆராதித்த இத்திருத்தலத்தில் தேசிகர் கருட மந்திர மூலம் கருடனை தரிசித்த ஔஷதகிரியும், கருட பகவானால் தரப்பெற்ற ஸ்ரீ யோக ஹயக்ரீவரும், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவராய் பெருமாள் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஹயக்ரீவர் சன்னதியும் இங்கு விசேடம்.

ஸ்ரீ ஹயக்ரீவர் கல்விக்கும், ஞானத்திற்கும், அதிபதியாக உள்ளார். தமிழ்நாட்டிலேயே ஸ்ரீ ஹயக்ரீவருக்கு கோயில் அமைந்துள்ள ஒரே இடம் திருவகீந்திரபுரம் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்திரையில் நடக்கும் பெருமாள் பிரம்மோற்சவமும், புரட்டாசியில் நடைபெறும் தேசிகர் பிரம்மோற்சவமும் இங்கு மிக விசேஷமாகும்.

வடகலை சம்ரதாயங்களுள் மிக புகழ்பெற்ற இத்திருத்தலத்தினை தரிசிக்கவும் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அமைவிடம் : கடலூர் பேருந்து நிலையத்திலிருந்து 6 கி.மீ.
தடம் எண் : 16, 3, 8 திருப்பாதிரிப்புலியூர்
புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ.

S. மதனகோபால், M.A., B.L.,
செயல் அலுவலர் மற்றும் தக்கார்



அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில்

திருப்பாதிரிப்புலியூர், கடலூர்-607 002.

திருப்பாதிரிப்புலியூர் : இது கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. பண்டைத் தமிழ் நாட்டில் நடுநாடு எனப்பெயர் பெற்ற இடத்தில் அமைந்துள்ள நடுநாட்டு சைவதலங்கள் 22ல் 18வது தலமாகும். இத்தலத்திற்கு பாதிரிப்புலிசை, கடைஞாழல், கன்னிக்காப்பு, கன்னிவனம், கன்னியம்பதி ஆதிமாநகர், பாடலிபுத்ரம் போன்ற பெயர்கள் வழக்கில் இருந்துள்ளன.

இறைவர் : பாடலீஸ்வரர், கன்னிவனநாதன், தோன்றாத் துணைநாதன், கடைஞாழலுடைய பெருமான், சிவக்கொழுந்தீசன், உத்தாரேசன், பாடலிநாதன், கறையேற்றும்பிரான் முதலியபெயர்களால் போற்றப்பெறுகிறார்.

இறைவி : பெரியநாயகி, தோகையம்பிகை, அருந்தவநாயகி, பிரஹந்நாயகி முதலிய பெயர்களால் போற்றப்பெறுகிறார்.

தீர்த்தம் : பிரம்மதீர்த்தம் (கடல்), சிவகரதீர்த்தம் (திருக்குளம்), பாலோடை, கெடிலநதி, தென்பெண்ணையாறு முதலியன இத்தலத்து தீர்த்தங்களாகும்.

தலவரலாறு : உலகத்து உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் திருவிளையாடல் நிகழ்த்த திருவுளங்கொண்டு இறைவியுடன் சொக்கட்டான் ஆடினார். பலமுறை ஆடியும் தோல்வி பெருமானுக்கே. ஆனால் வெற்றி தனக்கே எனக்கூறிய பெருமானின் திருக்கண்களை பிராட்டி தன் திருக்கரங்களால் புதைத்தாள். இதனால் உலகம், அனைத்து செயல்களும் நின்று போயின.

இதைக்கண்ட இறைவி தன் செயலால் ஏற்பட்ட இன்னல்கள் கண்டு மனம் வருந்தி தனக்குக் கழுவாய் வேண்டினாள். அதற்கு இறைவன் இறைவியை பூலோகம் சென்று அங்குள்ள சிவ தலங்களை பூசிக்கும்படியும், அவ்வாறு பூசிக்கும் போது எந்தத் தலத்தில் இடது கண்ணும், இடது தோளும் துடிக்கின்றதோ அந்தத் தலத்தில் ஆட்கொள்வதாக கூறினார். அதுபோல் இறைவியும் பலதலங்களைத் தரிசித்துவிட்டு இத்தலத்திற்கு வந்தபோது இடது கண்ணும், இடது தோளும் துடித்ததால் இத்தலத்திலேயே தங்கி அருபமாக (உருவமில்லாமல்) இறைவனை பூசித்து பேறுபெற்றதலம், இத்திருத்தலமாகும். இறைவன் சித்தர் வடிவம் பூண்டு மக்களின் துன்பங்களை நீக்கியதலம்.

அகத்தியர், வியாக்ரபாதர், மங்கணமுனிவர் உபமன்னியர், ஆதிராசன் ஆகியோர் பூசித்து பேறு பெற்றதலம், திருப்பாதிரிப்புலியூர் ஆகும்.

உற்சவம் : சித்திரை வசந்த உற்சவம், வைகாசி விசாகப் பெருந்திருவிழா, அப்பர் கறையேறிய ஐதீக விழா, ஆடிப்பூரவிழா, நவராத்திரி உற்சவம், மாசிமகம் கடலாடு விழா முதலியன சிறப்புடைய விழாக்கள்.

காலம் : கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்கு (அப்பர் காலத்திற்கு) முற்பட்டது.

அமைவிடம் : கடலூர் பேருந்து நிலையத்தில் இருந்து 1 கி.மீ. திருப்பாதிரிப்புலியூர் புகைவண்டி நிலையத்திற்கு அருகில் உள்ளது.

ரா. ராஜேந்திரன் B.Sc., B.L.,
தக்கார் / உதவி ஆணையர், கடலூர்

S. மதனகோபால், M.A., B.L.,
செயல் அலுவலர் (கூ.பொ)

அருள்மிகு
நாடியம்மன் திருக்கோயில்
பட்டுக்கோட்டை நகர் & வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம் - 614 602.

திருக்கோயில் இருப்பிடம் : இத்திருக்கோயில் பட்டுக்கோட்டை பேருந்து நிலையத்தில் இருந்து 1/2 கி.மீ தூரத்தில் உள்ளது. இத்திருக்கோயில் அமைந்துள்ள இடம் நாடியம்பாள்புரம் என வருவாய்த்துறை ஆவணங்களில் உள்ளது. காரைக்குடி, மயிலாடுதுறை ரயில் பாதையில், பட்டுக்கோட்டை ரயில் நிலையம் உள்ளது. ரயில் நிலையத்திலிருந்து சுமார் 1/2 கி.மீ. தூரம், மாவட்டத்தலைநகராகிய தஞ்சாவூரிலிருந்து சுமார் 45 கி.மீ. தூரம் உள்ளது.

தல அமைப்பு : இத்திருக்கோயில் இந்நகரின் தென்கோடியில் வடதிசை நோக்கி அமைந்துள்ளது. மிக நீண்ட நாட்களுக்கு முன் மராட்டியர் கட்டிடக்கலையின்படி கட்டப்பட்ட இத்திருக்கோயில், காலத்தால் சிதிலமடையவே, பழைய இருப்பிடத்திலேயே கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சோபன மண்டபம் ஆகியவை புதிதாக கட்டப்பட்டு 23.1.1994 ஆம் நாள் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. பின்னர் புதிதாக ஐந்து நிலை ராஜகோபுரம் எழுப்பப்பெற்று 11.2.01ல் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது.

தலச் சிறப்பு : இத்திருக்கோயில் இப்பகுதியிலேயே வடக்கு நோக்கி அமைந்து அம்பாள் அருள்பாலிக்கும் ஒரே தலம் ஆகும். அருள்மிகு நாடியம்மன் நான்குகரங்கள் கொண்டவளாக அருளாட்சி செய்கிறாள். வலது கையில் சூலம், இடது கையில் கேடயம், வலது கைமேல் புஷ்பகத்தி, இடது கை கீழ்ப்புறம் கபாலம் கொண்டு சுகாசன நிலையில் நான்கு கரங்களுடன், தன்னை நாடி வந்தோர்க்கும், தன்னை சரணடைந்தோர்க்கும் அபயமளிக்கிறாள். இத்திருக்கோயிலின் உற்சவ அம்மன் இந்நகர் அருள்மிகு சந்திரசேகர சுவாமி ஆலயத்தில் எழுந்தளியுள்ளது. உற்சவத்திற்கு எழுந்தருளச் செய்து காப்புக்கட்டி உற்சவம் முடிந்து கங்கணம் களைந்து மீண்டும் யதாஸ்தானம் சென்றடையும்.

தல விருட்சம் : இத்திருக்கோயில் பிரகாரத்தின் ஆலயத்தின் பின்புறம் நாகலிங்க விருட்சம் மிக நீண்ட காலமாக உள்ளது.

கோயில் திறந்திருக்கும் நேரம் : காலை 7.30 மணி முதல் 12.30 மணி வரை
மாலை 4.30 மணி முதல் 8.30 மணி வரை

பூஜை முறை : காமிக ஆகம முறையில் தினசரி 2 கால பூஜை நடைபெற்று வருகிறது. தீபாவளி, திருக்கார்த்திகை, நவராத்திரி, தனுர்மாத பூஜை, பொங்கல், தமிழ் வருடப் பிறப்பு ஆகிய மாத உற்சவங்கள் நடைபெறுகின்றன.

மாத உற்சவங்கள் : இத்திருக்கோயிலில் ஆடி மாதம் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பூஜை சிறப்பாக நடைபெறும்.

ஆண்டு உற்சவம் : ஆண்டுதோறும் பங்குனி மாதம் இரண்டாம் செவ்வாய்க்கிழமை காப்புக்கட்டி, 3ம் செவ்வாய்க்கிழமை இரவு முதல் உற்சவம் சிறப்பாக நடைபெறும். 10ம் நாள் வியாழக்கிழமை மாலை தேரோட்டம் சிறப்பாக நடைபெறும். பங்குனி மாதம் நடைபெறும் இத்திருவிழாவில் அம்மனுக்கு வரகரிசிமாலை போடும் நிகழ்ச்சி அதிவிமரிசையாக நடைபெற்று வருகிறது.

நிர்வாகம் : இத்திருக்கோயில் தஞ்சாவூர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர் மண்டலத்தில் உள்ள 3ம் நிலை ஆலயம் ஆகும். இத்திருக்கோயில் அறநிலைய சட்டப் பிரிவு 46(2)ன் கீழ் பட்டியலில் சேர்ந்த ஆலயமாகும். 3ம் நிலை நிர்வாக அதிகாரி உள்ளார். தஞ்சாவூர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் (நகை சரிபார்ப்பு அதிகாரி) அவர்கள் தக்காராக உள்ளார்.

பதினாறு பேறுகள் : புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பெண், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, நோயின்மை, வாழ்நாள், பெருமை, இளமை, துணிவு.



அருள்மிகு பாம்புர நாதர் (சேஷபுரீஸ்வரர்) ஆலயம்

திருப்பாம்புரம் (இராகு - கேது தலம்)

தென்காளஹஸ்தி

இத்தலம் குடந்தை காரைக்கால் நெடுஞ்சாவலையில் உள்ள கற்கத்தி எனும் ஊருக்குத் தெற்காக 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம், பேரளம், மயிலாடுதுறை ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வசதி உண்டு.

திருக்கயிலாயத்தில் ஒருமுறை வினாயகர் சிவனை வழிபட்ட போது அவர் கழுத்தில் இருந்த பாம்பு வினாயகர் தன்னையும் வணங்குவதாக எண்ணி கர்வம் கொண்டது. அதனால் சினமுற்ற இறைவன் நாக இனம் முழுவதும் தம் சக்தியனைத்தையும் இழக்க சாபமிட்டார். அதனால் உலகை தாங்கும் ஆதிசேடனும், இராகுவும், கேதுவும் அஷ்டமகாநாகங்களும் தம் சக்தியனைத்தும் இழந்து அல்லலுற்றன. சாப விமோசனம் வேண்டி ஈசனை அவை தொழுது நிற்க மனமிரங்கிய இறைவன் சிவராத்திரி நாளில் பூவுலகில் சேஷபுரி எனப்படும். திருப்பாம்புரம் சென்று தம்மை தொழுதால் சாப விமோசனம் கிட்டும் என அருளினார். அவ்வாறே நாகங்கள் ஆதிசேடன் தலைமையில் சிவராத்திரி முதல் சாமத்தில் குடந்தை நாகேஸ்வரனையும், இரண்டாம் சாமத்தில் திருநாகேஸ்வரம் நாகநாதரையும், மூன்றாம் சாமத்தில் பாம்பர நாதரையும் நான்காம் சாமத்தில் நாகூர் நாகநாதரையும் தொழுது சாப விமோசனம் பெற்றதாக புராண வரலாறு.

மூன்றாம் சாமத்தில் இறைவனை தொழு வந்த நாகங்கள் "ஆதிசேட தீர்த்தம்" எற்படுத்தி அதில் நீராடி, இறைவனுக்கு அணிவிக்க பூக்களின்றி, அகத்திப்பூவை ஆலம் விழுதில் தொடுத்து வழிபட்டு சாப விமோசனம் பெற்றனர். அதுமுதல் இவ்வூரில் அகத்தி பூப்பதில்லை; ஆலம் விழுது தரை தொடுவதுமில்லை. இத்தலத்தில் நாகங்கள் சிவனடியார்களாக உலவுவதால் யாரையும் தீண்டுவதில்லை. பாம்பு தீண்டி இவ்வூரில் யாரும் இறந்ததில்லை.

இத்தலம் குடந்தை, திருநாகேஸ்வரம், நாகூர், கீழ்ப்பெரும்பள்ளம் மற்றும் காளகஸ்பதி ஆகிய ஐந்து தலங்களின் பெருமை ஒருங்கே அமையப்பெற்ற தலம். ஈசனின் பஞ்சமுகங்களை குறிக்கும் வகையில் அமையப்பெற்ற பஞ்சலிங்க ஸ்தலம். எனவே, இத்தலம் சர்வதோஷ பரிகாரஸ்தலம் என புராணங்கள் கூறுகின்றன. ஆதி சேஷனுக்கு உற்சவர் விக்ரஹம் உள்ளது. சோழவளநாட்டின் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான இத்திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றாலும் சிறப்பு பெற்றது.

இத்திருக்கோயிலில் இராசராசன், இராஜேந்திரன், திரிபுவன வீரதேவன், குலோத்துங்கன், சுந்தரபாண்டியன், சரபோஜி ஆகியோர் காலத்து கல்வெட்டுக்கள் உள்ளன. இத்திருக்கோயில் ஏழாம் நூற்றாண்டில் எழுந்தருளப்பட்டது. சுவாமியை சுற்றி கல் அகழி உள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவராலும் பாடல் பெற்ற சிவஸ்தலமாகும்.

ஸ்ரீ ராகு, கேது ஏகசரீரமாக நெஞ்சில் இறைவனை வைத்து வழிபட்டதால் ராகு-கேது ஸ்தலம் எனப்படுகிறது. அஷ்ட ஐஸ்வர்யங்கள் வேண்டுவோர் இத்தலத்தில் அர்த்த ஜாமத்தில் வில்வ இலை கொண்டு அர்ச்சித்து சுவாமிக்கு பசும்பால் நிவேதனம் செய்தால் நவக்கிரக சம்பந்தப்பட்ட சகல தோஷங்களும் நிவர்த்தியாகி நலம் பெறுவர்.

P.S.கவியரசு M.Sc., B.Ed.,
நிர்வாக அலுவலர்
அருள்மிகு சேஷபுரீஸ்வரர் சுவாமி ஆலயம்
திருப்பாம்புரம், குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.



அருள்மிகு நீலாயதாட்சி அம்மன் உடனுறை காயாரோகண சுவாமி திருக்கோயில்

நாகப்பட்டினம் - 611 001.

அருள்மிகு காயாரோகண சுவாமி சமேத அருள்மிகு நீலாயதாட்சியம்மன் ஆலயம் நாகை மாவட்டத்தில் நாகை நகரில் வங்கக் கடலோரம் அமைந்துள்ள சிவன் கோயிலாகும். இவ்வாலயம் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இவ்வாலயம் நாகை புகைவண்டி சந்திப்பிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திலும், நாகை புதிய பேருந்து நிலையத்திலிருந்து 3/4 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்தள்ளது.

இந்த ஆலயம் அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது இரண்டாம் நிலை செயல் அலுவலரால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. அறங்காவலர் குழுவும் பதவி வகித்து வருகின்றனர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர்களால் பாடல்பெற்றது.

ஆலயத்தின் பெயர் அருள்மிகு காயாரோகண சுவாமி உடனுறையும் நீலாயதாட்சியம்மன் ஆலயம். இவ்வாலயத்தின் வேறு பெயர் சிவராஜதாணி - ஆதிபுராணர் - பார்ப்பதிர்சரம் - காரோண மூர்த்தி.

வினாயகர் பெருமான்கள் : நாகாபரண பிள்ளையார், மாவடி பிள்ளையார், குளத்தாங்கரை பிள்ளையார், சுவாமியின் பெயர் அருள்மிகு காயாரோகண நாதர் அல்லது காயாரோகண மூர்த்தி, அம்பாள் பெயர் கருந்தடங்கண்ணி என்கிற அருள்மிகு நீலாயதாட்சியம்மன் மக்களிடையே தனிச்செல்வாக்கோடு புகழ்பெற்று விளங்குகின்ற ஸ்ரீ நீலாயதாட்சியம்மன் பெயராலேயே இத்தலம் அழைக்கப்பட்டுள்ளது. கரிய அகன்ற கண்களை உடையவள் என்பதால் கருந்தடங்கண்ணி என வரலாறுகளில் சிறப்பித்து பேசப்படுகிறது. இங்கு அம்பாள் திருமணமாகாக் கன்னிப் பெண்ணாக விளங்குவதால் சுவாமிக்கு பக்கத்தில் அமையாது தனியாக அமைந்த கோயிலில் நீலாயதாட்சியம்மன் எழுந்தருளி அருள்பாலிக்கிறாள்.

ஐந்து அம்மைகளாகிய காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி, ஆரூர் கமலாம்பிகை அம்பாள் இந்த வரிசையில் நான்காவது அம்மையாக தோற்றமளிக்கிறார். தியாகராஜர் - சுந்தரவிடங்கர் என அழைக்கப்படுகிறார். சப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று.

ஆலயத்தின் தல விருட்சம் - புன்னை மரம்
தீர்த்தம் - தேவ தீர்த்தம், புண்டரீக தீர்த்தம்
திருத்தேர் - ஸ்ரீ தியாகராஜர், சுந்தரவிடங்கர் (மரத்தேர்)
ஆடிப்பக்ஷர சப்பரம் - பீங்கான் ரதம்

பூஜை நேரங்கள் :

உஷக்காலம் - 7.00 மணி
காலசந்தி - 9.00 மணி
உச்சிகாலம் - 12.00 மணி
சாயரச்சை - 5.00 மணி
இரண்டாம் காலம் - 8.00 மணி
அர்த்தஜாமம் - 9.00 மணி

இந்த ஆலயத்தில் மாண்புமிகு முதல் அமைச்சரின் சீரிய திட்டமாகிய அன்னதான திட்டம் நடைபெற்று வருகிறது.

என்.இராஜேந்திரன்
செயல் அலுவலர்



அருள்மிகு கோடீஸ்வரசுவாமி திருக்கோயில்

கொட்டையூர்

(சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயில்

சோழவள நாட்டில், காவிரியின் வடகரையில் திருவருள் பாலித்திருக்கும், சிவன் தலங்களில் கொட்டையூர் அருள்மிகு கோடீஸ்வர சுவாமி திருக்கோயில் 44வது திருத்தலமாகும். இத்தலத்து இறைவன் ஆமணக்கு கொட்டைச் செடியின் கீழ் தோன்றியதால், கொட்டையூர் என்ற திருப்பெயர் உண்டாயிற்று.

இத்தலத்து சிவபெருமான் திருமேனியில் பலாக்காய் முள்போன்று கோடிலிங்கங்களை தன்னகத்தே கொண்டு சுயம்பு மூர்த்தியாகவும், தன் சிரசியிருந்து கங்கை நீர் இன்றளவும் அரும்பும் நிலையில் காட்சியளிப்பது சிறப்பு அம்சமாகும். சைவ சமயக் குரவர் திருநாவுக்கரசர் தேவராத்திலும், அருணகிரிநாதர் திருப்புகழிலும் போற்றிப்பாடியுள்ளனர்.

இத்தலத்தில் பத்ரயோகி முனிவர் தரிசனம் செய்ய வரும்போது இறைவி பந்தாடும் கோலத்தில் காட்சியளித்தமையால் பந்தாடுநாயகி (கந்துகக்கிரீடாம்பிகை) என அம்பாள் பெயர் பெற்றாள்.

இத்தலத்து இறைவன், பத்ரயோகி முனிவர், தன் சினத்தால் இழந்த தவ பலத்தை மீண்டும் பெற தரிசிக்க வருங்கால், கோடி லிங்கமாகக் காட்சி கொடுத்தார். இத்தலத்தில் கோடி விநாயகர், கோடி முருகன், கோடி சண்டிகேஸ்வரர், கோடி தீர்த்தம் என சிறப்புற்று விளங்கி வருகிறது.

காவிரி வலஞ்சுழித்து, பிலத்துவாரத்தில் சென்றபோது, ஆத்ரேயமேகிரிஷி அத்துவாரத்தில் (ஹேரண்டமுனிவர்) இறங்கி, காவிரியை மேலே கொண்டுவந்த சிறப்புடையது. அம்முனிவர் இத்தலத்தில் தவம் செய்தமையால் இறைவருக்கு "ஏரண்டேஸ்வரர்" எனச் சிறப்பு பெயர் உண்டாயிற்று. இத்தலத்தில் ஹேரண்ட முனிவருக்கத் தனிச் சன்னதியும் உள்ளது.

இத்திருக்கோயிலில் ஆறுகால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. மாசி மாதம் 10 நாட்கள் பிரம்மோற்சவம் மற்றும் பங்குனி மாதத்தில் பங்குனி உத்திர திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றன. மகாமகத் திருவிழாவின்போது இத்தலத்து இறைவன் மகாமக குளத்திற்கு தீர்த்தவாரிக்கு எழுந்தருளல் சிறப்புடையது ஆகும்.

இத்தலம் கும்பகோணத்திற்கு மேற்கே மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் கும்பகோணம் - திருவையாறு நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன.

இத்தலத்து இறைவனை வேண்டி வழிபட்டால் வேண்டுவன அருளுவார். திருமணத் தடைகள் நீங்கி திருமணம் நடைபெறும். புத்திர பாக்கியம் கிடைக்கும், கல்வி, வேலை வாய்ப்பு அருளுவார். எல்லா நலன்களையும் இசைந்தருளும் எம்பெருமான் கோடீஸ்வரரை தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு பெற அழைக்கின்றோம். வாரீர்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

உதவி ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்
சுவாமிமலை - 612 302
தஞ்சாவூர் மாவட்டம்
தொலைபேசி எண் : 0435 - 2454421

செ.தனபாண்டியன் B.Sc., B.L.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

க.இராஜயாநாயகம் B.A., B.L.,
தக்கார் / இணை ஆணையர்
மயிலாடுதுறை.

அருள்மிகு அமர்ந்தாளம்மன் துர்க்கா பரமேஸ்வரி திருக்கோயில்

நாகை மாவட்டம் - மயிலாடுதுறை, சேந்தங்குடி

ஸ்தல சிறப்பு:

மாயூரம் என்ற சிறப்புப் பெயர் கொண்ட மயிலாடுதுறையின் புண்ணிய நதியாம் காவிரியின் வடகரையில் சேந்தங்குடியில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை அளிக்கும் புகழ் பெற்ற ஸ்ரீ அமர்ந்தாளம்மன் ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் / சப்தமாதா என்கின்ற ஸ்ரீப்ராம்ஹி, ஸ்ரீ மகேஸ்வரி, ஸ்ரீ கௌமாரி, ஸ்ரீ வைஷ்ணவி, ஸ்ரீ வாராஹி, ஸ்ரீ இந்திராணி, ஸ்ரீ சாமுண்டீஸ்வரி முறையே ஸ்ரீ மயூரநாதர், தருமபுரம், கருங்குயில்நாதன் பேட்டை, பசுபதீஸ்வரம், விஸ்வநாதர், ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர், ஆனதாண்டவபுரம் ஆகிய சேத்திர பரமேஸ்வரனை பூஜித்து இங்கு வந்து ஒன்றாக சேர்ந்து அமர்ந்ததால் அமர்ந்தாளம்மன் என்று பெயர் பெற்றாள்.

நவகிரஹ நாயகியான ஸ்ரீதுர்க்கை அம்மனுக்கு ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் ராகு காலத்தில் சிறப்பு வழிபாடு மற்றும் அபிஷேகம் நடைபெற்று வருகிறது. கல்வி, தனம், உத்யோகம், விவாகம், மக்கட்பேறு, வியாதி - நிவாரணம் போன்ற பல பிரார்த்தனைகள் செய்து பயன் அடைந்தோர் ஏராளம்.

இத்திருக்கோயிலின் திருப்பணி சிறப்பாக செய்யப்பட்டு 15.7.2000 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அருள்மிகு அம்மனை வேண்டி அருள் பெற வேண்டுகிறோம்.

அருள்மிகு அட்சயலிங்கசுவாமி திருக்கோயில்

கீழ்வேளூர் - நாகை மாவட்டம்

"கீழ்வேளூராளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே"

தமிழகத்துப்பொற்கோயில்

இருப்பிடம் : நாகப்பட்டினம் தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் திருவாரூருக்கும் நாகப்பட்டினத்திற்கும் நடுவே அமைந்துள்ளது.

இறைவன் பெயர்: அருள்மிகு கேடிலியப்பர் (அட்சயலிங்கசுவாமி)

இறைவி பெயர் : அருள்மிகு வலமுலநாயகி (சுந்தரகுஜாம்பிகை)

சிறப்பு மூர்த்திகள்: அருள்மிகு அஞ்சுவட்டத்தம்பாள், அருள்மிகு பாலசுப்பிரமணியர் (வடக்குமுகம்நோக்கி தவக்கோலத்தில்) அருள்மிகு குபேரர், அருள்மிகு வலதுபாத நடராஜர்

ஸ்தல விருட்சம் : இலந்தை

ஸ்தல சிறப்பு : கி.பி 7ம் நூற்றாண்டில் கோச்செங்கசோழ மாமன்னரால் கட்டப்பெற்ற யானை ஏறாத கருங்கல் திருப்பணி மாடக்கோயில். நாயன்மார்களில் ஞானசம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோர்களால் பாடல்பெற்றது. இத்திருக்கோயிலில் அருள்மிகு முருகப்பெருமாள் சூரசம்ஹாரத்தால் தனக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஹம் நீங்க ஆலய சந்நிதியில் சரவணபொய்கை என்ற தீர்த்தத்தில் நீராடி இறைவனை வேண்டி வடக்கு முகமாக கட்டுமலையின் முகப்பில் தவமிருக்கும் அற்புத காட்சி சிறப்புடையது. மைந்தனது தவத்தை காத்தருளவேண்டி இறைவனது அருளானையின் வண்ணம் அன்னை பராசக்தி காளி அவதாரம் கொண்டு நான்கு திசைகள் ஆகாயம் என ஐந்து வட்டத்திலும் இடையூரின்றி காத்துஅருள்பாலித்து வடக்கு முகமாக வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருவது சிறப்பு அற்புத காட்சி. சிவபெருமான் தளது திருமண கோலத்துடன் கால்மாறி நடனம்ஆடி (வலதுபாதம் தூக்கி) அகத்திய மாமுனிவருக்கு காட்சி தந்து அருள் பாலித்தது தனிச்சிறப்பு ஆகும்.

திருவிழாக்கள் விபரம் : அருள்மிகு முருகப்பெருமானுக்கு பிரதி ஆண்டும் ஐப்பசித் திங்களில் கந்தசஷ்டி பெருவிழா, அருள்மிகு அஞ்சுவட்டத்தம்பாளுக்கு பிரதி ஆண்டும் பங்குனி மாதம் 3-வது செவ்வாய்கிழமை முதல் தொடங்கி பத்து நாட்கள் திருவிழா மற்றும் திருத்தேர்விழா.

நித்திய பூஜை திட்டம்:இத்திருக்கோயிலில் தினசரி பூஜைக்கு ஒவ்வொரு நாளும் ரூ.300 வரைசெலவிடப்படுகிறது. எனவே இத்திருக்கோயிலில் நித்தியல் கட்டளை திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது. ரூ.5000- பணம் அனுப்பினால் மேற்படி தொகையினை வங்கியில் நிரந்திர முதலீட்டில் வைத்து ஆண்டுக்கொரு முறை கட்டளைதாரர் குறிப்பிடும் நாளில் அவர்கள் பெயரில்பூஜை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். மேலும் இத்திருக்கோயிலில் கோயில்கொண்ட குபேரனுக்கு அர்ச்சனை செய்து குபேரனாக விரும்புவோர் ரூ. 25 க்கு பணவிடை அனுப்பினால் அவர்கள் பெயரில் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அ /மி அட்சயலிங்கசுவாமி திருக்கோயில்
கீழ்வேளூர்- 611 104

கோ.தனசேகரன் எம்.ஏ.,
தக்கார்
என்.இராஜேந்திரன்
செயல் அலுவலர்.

ஸ்ரீ சாந்தநாயகி சமேத புனுகீஸ்வரர் சுவாமி திருக்கோயில்

நாகப்பட்டினம் மாவட்டம்-மயிலாடுதுறை, கூறைநாடு

மயிலாடுதுறையை மையமாக கொண்ட சப்த சிவாலய ஸ்தலங்களில் சிறப்பு பெற்ற அருள்மிகு ஸ்ரீசாந்தசாயகி சமேத புனுகீஸ்வரர் கோயில் புண்ணிய நதியாம் காவிரிக்கு தென்பால் கூறைநாட்டில் அமைந்துள்ளது.

சிவபெருமானை மதியாமல் தட்சன் நடத்திய யாகத்தில் கலந்து கொண்ட தேவேந்திரன் சாபம் பெற்று இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மிருகபதீஸ்வரர் மகிழும் வண்ணம் புனுகு பூனை உருவெடுத்து பூஜித்து சாப விமோசனம் அடைந்து, இழந்த இந்திர பதவியை மீண்டும் பெற்றான் என்பது இத்தல வரலாறு.

மேலும் இக்கோயிலில் உள்ள சனீஸ்வர பகவான் திருநள்ளாறில் அமைந்துள்ளது போல் கிழக்கு முகம் பார்த்து உள்ளது. இது சிகப்புக் கல்லால் ஆனது மிகவும் பிரசித்தி வாய்ந்தது.

மேலும் இத்திருக்கோயிலில் சிவனடியார்கள் திருக்கூட்டத்தினரால் தினமும் வார வழிபாடும், தை மாதம் வெள்ளிக்கிழமையன்று இலட்சத் தீப திருவிழாவும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

சித்திரை மாதம் 10 நாட்கள் பிரம்மோத்சவம் நடைபெறும். மேலும் ஒவ்வொரு மாதமும் பிரதோஷ வழிபாடு நடைபெறும். மேலும் பங்குனி மாதம் ரோகினி நட்சத்திரத்தில் நேசநாயனார் குருபூஜை மிகவும் சிறப்பாக நடைபெறும். தை மாதத்தில் தைப்பூச பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். மாசி மாதத்தில் மகாசிவராத்திரியன்று சகஸ்ரலிங்கத்திற்கு அபிஷேக ஆராதனையும், ருத்ரா அபிஷேகமும் மற்றும் நான்கு கால பூஜையும் வெகு விமரிசையாக நடைபெறும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அருளாசியோடு ஸ்ரீமுக ஆண்டு ஆனித்திங்கள் 10ஆம் நாள் (24.6.93) வியாழக்கிழமை மக நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை மணி 9.00க்கு மேல் 10.30க்குள் சிம்ம லக்னத்தில் திருக்கோவில் இராசகோபுரம் பஞ்சமூர்த்திகள் மற்றும் பரிவாரங்களுக்கும் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அருள்மிகு ஸ்ரீசாந்தநாயகி சமேதப் புனுகீஸ்வரரை வேண்டி அருள் பெற வேண்டுகிறோம்.

அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

எட்டுக்குடி - திருக்குவளை வட்டம் - நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம் - திருக்குவளை வட்டத்தில் நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் பெருவழிச் சாலையில் சீராவட்டம் - நிறுத்தத்திலிருந்து மேற்கே 4 கிலோ மீட்டர் தொலைவிலும், திருவாரூரிலிருந்து திருக்குவளை வழியாக வேதாரண்யம் செல்லும் பெரு வழியில் 28 கிலோ மீட்டர் தொலைவிலும், திருத்துறைப்பூண்டியிலிருந்து 19 கிலோ மீட்டர் தொலைவிலும், வடபுறம் தென்கிழக்கிலும், ஸ்ப்தவிடங்கர் ஸ்தலங்களும், மேற்கில் பாடல் பெற்ற சிற்றேமம் சொர்ணதாபனேஸ்வரர் ஸ்தலமும் சூழ அமையப்பெற்று எட்டுக்குடி எனும் சத்குசம்ஹார ஸ்தலம் காலத்தால் 15ம் நூற்றாண்டை சேர்ந்தது.

அருணகிரியாரால் 4 திருப்புகழ் பாடப்பெற்றது. அம்மை அப்பருக்கு இடையில் முருகன் அமைந்த சோமாஸ்கந்த அமைப்பு ஸ்தலமாகும்.

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விழாவும், ஆண்டில் கந்தசஷ்டி விழாவும், சித்திரை மாதம் பௌர்ணமி விழாவும் காலச்சிறப்புடையது. ஆறுகால பூஜைகள் சிவாகம முறைப்படி நடைபெறுகிறது.

நாள்தோறும் 50 நபர்கட்கு இலவச அன்னதானம் வழங்கப்படுகிறது. ரூ.1,200/- அல்லது ரூ.600/- கட்டி ஒரு நாள் அன்னபாலிப்பு செய்யலாம். ரூ.15,000/- கட்டி நிரந்தர நிதியாக வைத்து, அதிலிருந்து வரும் வட்டியை கொண்டு ஆண்டில் 1 நாள் அன்னதானம் செய்யலாம். நித்யபடி திட்டத்திற்கு வட்டி வரும் வகையில் ரூ.5,000/- நிரந்தர நிதி கட்டி பக்தர்கள் பயன்பெற வேண்டுகிறேன்.

இங்ஙனம்
கோ.தனசேகரன் M.A., செயலர் அலுவலர்
T.விஜயகுமார் M.A., B.L., தக்கார் / உதவி ஆணையர்



அருள்மிகு நவநீதேசுவரசுவாமி திருக்கோயில்

சிக்கல், நாகப்பட்டினம் வட்டம், நாகை மாவட்டம்.

இறைவன் பெயர் : அருள்மிகு நவநீதேசுவரசுவாமி (வெண்ணெய் நாதர்)

இறைவி பெயர் : அருள்மிகு சத்தியாயதாட்சி (மேல்நெடுங்கண்ணி)

கீர்த்திமிக்க இறைவன் : அருள்மிகு சிங்காரவேலவர்

வைணவ இறைவன் : அருள்மிகு கோலவாமனப் பெருமாள்

தல விருட்சம் : மல்லிகை

தீர்த்தம் : க்ஷேத்திரபுஷ்கரணி (பாற்குளம்)

இருப்பிடம் :

சிக்கல், நாகப்பட்டினத் திருநகருக்கு மேற்கே 3 கல தொலைவில் உள்ளது. நகர பஸ் வசதியும், ரயில் வசதியுமுண்டு. நாளுமின்னிசையால் தமிழ் பரப்பும் நற்றமிழ் வல்ல திருஞானசம்பந்தப் பெருமானால் தேவாரம் பெற்ற சிவப்பதி. அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றது. சுந்தரர் தமது க்ஷேத்திரகோவையில் பாடியுள்ளார்.

திருப்பணி :

இராமநாதபுரம் மாவட்டம் ஆத்திக்காடு தெற்கூர் திரு. கருமுத்து அழகப்ப செட்டியார் அவர்கள் 1899ம் ஆண்டு முதல் 1934 வரை சுமார் 35 ஆண்டுகள் வரை இக்கோயில் சிறப்பான முறையில் அறங்காவலராக செயல்பட்டு 05.06.1933ல் மகாகும்பாபிஷேகம் செய்வித்தனர். அதன் பிறகு 28.8.1960, 26.04.1991ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கருமுத்து மாணிக்கம் செட்டியார் ஆகியோர் பரம்பரை நியமன அறங்காவலராகவும் இருந்துள்ளார்கள். தற்போதைய மதுரை தொழிலதிபரும் பெரும் தனவந்தருமான கருமத்து தி.கண்ணன் அவர்கள் திரு. முருகப்ப செட்டியார் மற்றும் அழ.தியாகராஜ செட்டியார் அவர்கள் தமது முன்னோர்களின் ஈடுபாட்டை பின்பற்றி இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் பல செய்து வருகிறார்கள். தற்பொழுது திருப்பணி வேலைகள் சிக்கவலம் பொறியாளர் திரு. கந்தவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது.

இங்ஙனம்

T.விஜயகுமார் M.A., B.L., தக்கார் / உதவி ஆணையர்

கோ.தனசேகரன் M.A., செயலர் அலுவலர்



அருள்மிகு நாகேஸ்வரர் திருக்கோயில்

கீழ்க்கோட்டம்

திருக்குடந்தை (கும்பகோணம்)

தலம் :

தேவார முதலிகளின் பாடல்பெற்ற சோழவள நாட்டுக் காவிரித் தென்கரைத்ததலங்களுள் ஒன்று திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம். இவ்வூரின் நடுநாயகமாக விளங்குவது கும்பேச்வரத்திருக்கோயில். கோயிலுக்குக் கீழ்த்திசையில் அமைந்து இருப்பது அருள்மிகு நாகேஸ்வரர் திருக்கோயில். எனவே அது குடந்தைக் தீழ்கோட்டம் என்று அழைக்கப்படுகிறது. அருள்திரு திருநாவுக்கரசு பெருந்தகையார் கீழ்க்கோட்டத்துக் கூத்தனாரைப் போற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார்.

இறைவன் - நாகேசுவரர்
இறைவி - பெரியநாயகி

திருக்கோயில் அமைப்பு :

இராஜகோபுரம் ஐந்து நிலைகளுடன் திழக்கு நோக்கியுள்ளது. உள்ளே இடப்பக்கம் நந்தனவனம்,சிங்கமுக தீர்த்தக் கிணறு உள்ளது. வலபக்கம் பிருகந்நாயகி சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது உள்ளே சென்றால் இடது பக்கம் பதினாறுகால் மண்டபமும்,வலதுபக்கம் நடராஜ சபையும் உள்ளன. நடராஜ மண்டபம் ரத அமைப்பில் உள்ளது. இருபுறங்களிலும் உள்ள கல் (தேர்ச்) சக்கரம் கண்டு மகிழத்தக்கது. இச்சக்கரங்களின் ஆரங்களாக 12 ராசிகளும் இடம் பெற, இரண்டு குதிரைகளும் நான்கு யானைகளும் இழுக்கும் நிலையில் இத்தேர் மண்டபம் அமைந்துள்ளமை அழகாக உள்ளது. பெயரும் ஆனந்தத் தாண்டவ நடராஜ சபை. நடனத்திற்கு சிவகாமியம்மை தாளம் போடும் பாவனையும் மகா விஷ்ணு குழலூதும் காட்சியும் பேரழகுடையன.

கொடிமரத்தை வணங்கி உட்சென்று வாகன மண்டபம் கடந்து வலம் வரும்போது படைவெட்டி மாரியம்மன் சந்நிதி உள்ளது. பிரளயபால ருத்ரர்,வலஞ்சுழி விநாயகர்,ஐயனார்,சப்தமாதாக்கள்,சுப்பிரமணியர்,சப்தலிங்கங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன. வைத்தீஸ்வரர்,சூரியர்,சோமாஸ்கந்தர்,சண்டேசுவரர் சந்நிதிகளும் உள்ளன.

முன்மண்டபங்கடந்து சிவ சிவ ஒலி மண்டபமும் நவக்கிரக சந்நிதியும் கண்டு தொழுதவாறு சென்றால், நேரே மூலவர் தரிசனம் அருளுகிறார். கருவறை வாயிலில் தண்டூன்றிய விநாயுகர் உள்ளார். கோஷ்டமூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி. அர்த்தநாரீஸ்வரர், பிரம்மா முதலிய சந்நிதிகள் உள்ளன.

கிழக்கு இராஜ கோபுரத்தின் இடப்புறம் சிங்கதீர்த்தம் நாகராசன் புனித நீராடி பேறு பெற்றதால் இப் பெயர் பெற்றது. படிக்கட்டு அமைக்கப் பெற்று நன்கு பராமரிக்கப்படுகிறது.சூரிய பகவான் ஏற்படுத்தியதால் சூரியதீர்த்தம் எனப்பட்டது இது கோயிலின் தெற்குக் கோபுர வாயிலுக்கு எதிரே உள்ளது. கும்பகோணத்திற்கே பெருமை சேர்க்கும் இத் தீர்த்தம்,கோயிலின் தென்கீழ்த் திசையில் சிறிது தூரத்தில் உள்ளது. மாசி மகத்தன்று நாகேசப்பெருமான் இந்தத் திருக்குளத்தில் தீர்த்தவாரி கொண்டருள்வார். காரண ஆகம முறைப்படியே இத்திருக்கோயிலில் நாள்தோறும் ஐந்து கால பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

அருள்மிகு இராஜகோபால பெருமாள் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள

ஸ்ரீ திரிநேத்திர தசபுஜவீர ஆஞ்சநேய சுவாமி

அனந்தமங்கலம் - நாகப்பட்டினம் மாவட்டம்

நாகை - தரங்கம்பாடி - திருக்கடையூர் - மயிலாடுதுறை - பூம்புகார் நெடுஞ்சாலையில் தரங்கம்பாடிக்கும் - திருக்கடையூருக்கும் இடையே அனந்தமங்கலம் என்ற பசுமை நிறைந்த தலத்தில் அருள்மிகு திரிநேத்திர தசபுஜ வீர ஆஞ்சநேய சுவாமிக்கு பல நூறு ஆண்டுகட்கு முன்பு விஜயநகர மன்னர்கள் காலத்தில் மண்டலத் தலைவரால் கோயில் எடுப்பித்துள்ளார்கள்.

இலங்கை யுத்தம் முடித்து ஸ்ரீ ராமர் அயோத்திக்கு திரும்பிக்கொண்டு இருந்தார். வழியில் பரத்வாஜ மகரிஷி வரவேற்று ஆசிகூற ஆஸ்மரத்தில் ஸ்ரீ ராமர், சீதா பிராட்டி, லட்சுமணன், ஆஞ்சநேயர் ஆகியோர் தங்கினர். அப்போது அங்கு திரிகால ஞானியான நாரதர் வந்து சேர்த்தார். நாரதரை வணங்கி ஸ்ரீ ராமருக்கு ஆசி கூறிய நாரதர் ராமா! முக்கியமான விஷயமாகவே உன்னை சந்திக்க வந்தேன். இலங்கை யுத்தம் முடிந்தாலும் அது இன்னும் முற்று பெறவில்லை. உனது வில்லுக்கு இன்னும் வேலையுள்ளது என்று கூற திகைத்த ஸ்ரீ ராமர் நாரத மகரிஷியே! தாங்கள் என்ன கூறுகிறீர்கள்! விளக்கமாக கூறுங்கள் என்று வேண்டினார்.

ராமா, ராவணன் அழிந்தாலும் அரக்கர்கள் வாரிசுகள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். இலங்கை யுத்தத்துக்கு பழிக்கு பழி வாங்க சபதம் செய்துள்ளார்கள். இரக்த பிந்து, இரக்த ராட்சகன் என்ற இரண்டு அசுரர்கள் கடலுக்கு அடியில் அமர்ந்து தவம் செய்கிறார்கள். இவர்கள் தவம் பூர்த்தியானால் சக்தி மிகுந்த வரங்களை பெற்று விடுவார்கள். பிறகு அவர்களால் உலகுக்கு பெரும் அழிவு ஏற்படும். எனவே இவர்களை நீ உடனே சம்ஹாரம் செய்ய வேண்டும் என நாரதர் கூறினார்.

மகரிஷியே! நீங்கள் கூறுவதை ஏற்கிறேன். ஆனால் நான் இப்போது அயோத்தி செல்வதில் தாமதிக்க இயலாது. குறிப்பிட்ட நாளில் நான் அயோத்தி செல்லாவிடில் தம்பி பரதன் தீக்குண்டம் இறங்கி உயிரை விட்டுவிடுவான் என ராமர் கூற, அப்படியானால் சரி உனக்கு பதில் தம்பி லட்சுமணனை அனுப்பு என நாரதர் கூற அவன் என் நிழல் ஆயிற்றே என்னை விட்டுப் பிரியமாட்டேன் என்று சபதம் செய்துள்ளானே என்ற ராமர் கண்களில் அனுமார் பட அனுமாரை அழைத்தார். அன்பு ஆஞ்சநேய! இந்த சம்ஹாரம் உன்னால் நடக்கட்டும் என்று கூற அனுமார் தயாரானார்.

அரக்கர்களின் ஆணிவேரை அழிக்கும் யுத்தமல்லவா? தேவர்கள் வாழ்த்தினர். திருமால் சங்குசக்கரத்தை வழங்க பிரம்மா பிரம்ம கபாலயத்தை வழங்க ஒவ்வொருவரும் ஆயுதம் தந்தார். விரைவாக செல்ல கருடன் தனது சிறகுகளை தந்தான். அனுமார் புறப்படும் நேரம் சிவபெருமான் வந்து சேர்ந்தார். 10 கரங்கள், 10 கரத்திலும் ஆயுதங்கள் எதைத் தருவது? பார்த்தார் பரமசிவன்! தனது நெற்றிக் கண்ணையே தந்துவிட்டார்.

மூன்று கண்கள் 10 கரங்களுடன் புறப்பட்ட ஆஞ்சநேயர் இரக்த பிந்து, இரக்த ராட்சகனை சம்ஹாரம் செய்து வெற்றியுடன் திரும்பிக் கொண்டு இருந்தார். வழியில் ரம்மியமான, இயற்கை அழகுடன் தெரிந்த கிராமத்தில் ஆஞ்சநேயர் தங்கி சிறிது இளைப்பாறினார்.

வெற்றியுடன் ஆனந்தமான மனதுடன் ஆஞ்சநேயர் அமர்ந்த இடமே ஆனந்தமங்கலம். இன்று இந்த கிராமம் அனந்தமங்கலம் என அழைக்கப்படுகிறது.

இவ்வாலயத்தில் வியாழன், சனிக்கிழமைகளிலும் அமாவாசை நாட்களிலும் இங்குவரும் பக்தர்கள் கூட்டம் மிக அதிகம் உள்ளதால் பக்தர்கள் அமைதியுடன் வழிபட வேண்டுகிறோம்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம்
பந்தணைந்தநல்லூர்
அருள்மிகு பசுபதீசுவர ஸ்வாமி திருக்கோயில்
பந்தநல்லூர்

பந்தணைநல்லூர் பழமை வாய்ந்த பாடல் பெற்ற வரலாற்று சிறப்புமிக்க ஸ்தலமாகும்.மூர்த்தி,தலம்,தீர்த்தம் ஆகிய மூன்றாலும் உயர்ந்தது. இறைவன் சுயம்பு மூர்த்தி (தானே தோன்றிய தலமாகும்) பசுபதியாக எழுந்தருளியுள்ளார்.

நான்கு வேதங்களையும் பந்துகளாக்கி உமாதேவியார் தன் தோழிகளுடன் விளையாடியதால் சூரியன் அஸ்தமிக்காமல் இருப்பதைக் கண்டு தேவர்கள் ஈசனிடம் முறையிட ஈசன் சினம் கொண்டு தேவியை பசுவாகுமாறு சாபமிட்டார்.பின்னர் அண்ணனான ஆதிகேசவப் பெருமாள் துணையுடன் தேவி பசுவாக பந்து வந்தடைந்த இல்லத்தில் இருந்து சுயம்பு மூர்த்தியான பசுபதீஸ்வரர் மீது தன் குளம்புபட்டு சாப நிர்வத்தியாகிய வரலாறுச் சிறப்புமிக்க தலமாகும்.

அன்னை வடக்குநோக்கி தவமியற்றி இறைவனை அடைநதாள். மூலவர் மீது பசுவான அன்னையால் மிதிக்கப்பட்ட குளம்பு சுவடும்.பந்தின் சுவடும் இருப்பதை இன்றும் காணலாம்.இறைவனும்.இறைவியும் கல்யாணசுந்தரராக சிறப்பு அபிஷேக அர்சனை செய்து வழிபடுவோருக்கு திருமணபாக்கியமும்.புத்திரபாக்கியமும் சகல சௌபாக்கியங்களும் உடன் கிடைக்கும்.

மேலும் கந்துகாபுரம் (பந்தநல்லூர்) இந்த க்ஷேத்திரத்தில் புண்ணியம் செய்தவர்களுக்கும். பாவிகளுக்கும் க்ஷேத்திரவாஸப்பயனாக மறுபிறவியும்.யமலோகம் புகுதலும் கிடையாது. இத்தலத்தில் தங்கி சூரிய தீர்த்தத்தில் நீராடி பசுபதீஸ்வரரை வணங்கி வழிபாடு செய்வோர் சிவஸாலோக்யம் கிட்டப்பெறுவர். இந்திரன்,அக்னி,யமன்,நைர்ருதன்,வருணன்,வாயு,குபேரர் ஆகியோர் பசுபதீசரை வணங்கி அவர் அருளால் திசைப்பாலகராக பணி செய்கின்றனர். அரிச்சந்திரன்,நளன்,புரூரவன்,ஸரகன்,கார்த்தவீர்யன் ஆகிய சக்கரவர்த்திகளும் பசுபதீசரை வணங்கி நற்கதி அடைந்தனர். இக்கோயிலில் அன்னதானம் செய்தால் கயையில் 100 முறை திதி கொடுத்த பலனையும் பெறுவர்.

சூரியன் பசுபதீசரை வணங்கி தன் பெயரால் குளம்வெட்டி அதில் நீராடி ஈஸ்வரரை வணங்கி வந்தார். சூரியன் பாசுபதம்,அசுவமேதம் போன்ற வேள்விகளை புரிந்து ஆதித்யன் என ஈஸ்வரனால் அழைக்கப்பட்டார். மனு மற்றும் மறுபுத்திரர்கள் வேள்வி நடத்தி மோட்சமடைந்தார்கள். கிருதயுகத்தின் கடைசியில் இவ்வாலயம் தோன்றியதென கந்துகாபுரம் மகாத்மியம் கூறுகிறது.

ப.பெத்துராஜப்பிள்ளை
பரம்பரை அறங்காவலர், குழுத்தலைவர்

அ.பசுபதிபிள்ளை
பரம்பரை அறங்காவலர்

மு. கண்ணபிரான்
செயல் அலுவலர்

அருள்மிகு பைரவநாதசுவாமி திருக்கோயில்

தகட்டூர், வேதாரண்யம் வட்டம்

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம் தகட்டூர் என்னும் கிராமத்தில் இக்கோயில் அமைந்தள்ளது.

சுவாமி : அருள்மிகு பைரவநாதசுவாமி
தல விருட்சம் : நாவல் மரம்
தீர்த்தம் : காசி தீர்த்தம் (அ) கங்கா தீர்த்தம்

திருக்கோயில் வரலாறு மற்றும் சிறப்பு :

சிவபெருமான் எடுத்த 64 திருக்கோலங்களில் 38-வது திருக்கோலம் பைரவர் திருக்கோலமாகும். பைரவர் 8 வகையான வடிவங்களில் விளங்குகிறார். இலங்கையில் இராவணவதம் முடிந்தவுடன், அந்த தோஷம் நீங்குவதற்காக இராமேஸ்வரத்தில் இராமபிரான் சிவபூஜை செய்ய முற்படுகிறார். ஆஞ்சநேயரிடம் காசி சென்று சிவலிங்கம் எடுத்துவரும்படி உத்தரவிடுகிறார். காசி சென்று அனுமன் சிவலிங்கத்தை எடுத்துவரும்போது உடன் வந்த மகா பைரவருக்கு, இந்தத் தலத்திலே தங்க வேண்டுமென இசசை உண்டாகிறது. அனுமனை அசதியில் ஆழ்த்தி இந்தத் தலத்தில் உறங்கச்செய்தார். உறக்கத்தில் இருந்து எழுந்த அனுமன் இந்த மகாபைரவரையும், இந்த ஆலயத்தில் மகாமண்டபத்தில் வடபாகத்தில் நிறுவப்பட்டுள்ள காசி லிங்கத்தையும் இந்தத் தலத்திலேயே விட்டுச் சென்றுள்ளார். மேலும், இக்கோயில் மகாமண்டபத்தில் அமைந்துள்ள ஞானபீடத்தில் சிவபஞ்சாட்சர இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பெயர்க்காரணம் :

வடமொழியில் யந்திரபுரி என்றும், தமிழில் தகட்டூர் என்றும் அழைக்கப்படுகிறது. யந்திரத்தின் ஆளுகைக்கு உட்பட்டதால் யந்திரபுரி ஆயிற்று.

அமைப்பு :

கைகளில் சூலம், மண்டையோடு, கயிறு, உடுக்கை பாம்புகளால் அலங்கரிக்கப்பட்ட மேனியுடன் நிர்வாணமாகவும், நாய் வாகனத்துடனும் பிரதான மூர்த்தியாக பைரவர் காட்சி தருகிறார். மகா மண்டபத்தில் விஸ்வநாதர் விசாலாட்சி சன்னதி அமைந்துள்ளது. பிரகாரத்தில் கணபதி, சுப்ரமணியர், துர்க்கை, சண்டிகேஸ்வரர் சன்னதிகள் அமைந்துள்ளன. கோயிலுக்கு எதிரே தீர்த்தக்குளம் அமைந்துள்ளது. தீர்த்தக் குளத்திற்கு எதிரே ராவுத்தர் சன்னதி அமைந்துள்ளது. இந்தச் சன்னதியில் பக்தர்கள் ஆடு, கோழி போன்றவற்றை காணிக்கையாகச் செலுத்துகிறார்கள்.

பூஜை, திருவிழா :

இக்கோயிலில் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சித்ராபௌர்ணமி ஆண்டு உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது.

குடமுழுக்கு :

இக்கோயிலுக்கு திருப்பணி வேலை முடிவுற்று 27.8.2000 அன்று குடமுழுக்கு செய்விக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம்
தி.ஞானகுரு பி.ஏ.,
செயல் அலுவலர், (பொறுப்பில்)
அருள்மிகு பைரவநாதசுவாமி திருக்கோயில்,
தகட்டூர், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

அருள்மிகு மகா சரஸ்வதியம்மன் திருக்கோயில்

கூத்தனூர், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்

திருக்கோயில் கலையம்சம் :

இத்திருக்கோயில் முன்புறம் மூன்று நிலை இராஜகோபுரம் அமைந்துள்ளது. அதனை அடுத்து முன் மண்டபம் வேலைப்பாடுகளுடன் உள்ளது. அலங்கார மண்டபம் முகப்பில் அம்பாள் சுதை உள்ளது. கர்ப்பக்கிரக விமானம் கர்ண கூடுகள், அந்ராளம் உள்ள மாறுபட்ட விமானமாகும்.

தொல்பொருள் முக்கியத்துவம் :

இரண்டு பிற்கால கல்வெட்டுக்கள் மட்டும் உள்ளன.

தலத்தின் பெருமை :

இத்தலத்தில் ஒட்டக்கூத்தர் வழிபட்டு அம்பாள் அருள் பெற்றுள்ளார். இந்தியாவிலேயே சரஸ்வதிக்கென்று தனியாக வேறு எங்கும் கோயில் இல்லாத நிலையில் இது ஒன்று மட்டும் சரஸ்வதி அம்பாளுக்கு என்று உள்ள தனி கோயிலாகும்.

வழிபாட்டின் மூலம் சேவார்த்திகள் பெறும் பலன்கள் :

வழிபடும் பக்தர்களின் குழந்தை செல்வங்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். ஒவ்வொரு புதன்கிழமை, பௌர்ணமி போன்ற நாட்களில் குழந்தைகளுடன் வந்து அம்பாளுக்கு தேன் படைத்து அதனை பிரசாதமாக கொடுத்து வர குழந்தைகளின் வாக்கு வன்மை அதிகமாகும்.

பூஜைகள் :

தினமும் மன்று கால பூஜைகள் நடந்து வருகின்றன. நாள்தோறும் காலை 10.00 மணிக்கு அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று வருகின்றது. சர்க்கரை பொங்கல் நிவேத்தியம் செய்யப்படுகின்றது.

விழாக் கால பூஜை விபரங்கள் :

ஆண்டு தோறம் நவராத்திரி, சரஸ்வதி பூஜை மற்றும் வருடப் பிறப்பு ஆகிய நாட்களில் அம்பாள் வீதி உலா நடைபெற்று வருகின்றது.

சேவார்த்திகள் தாங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நிர்வாக அதிகாரி, அருள்மிகு மகா சரஸ்வதி அம்மன் ஆலயம், கூத்தனூர், பூந்தோட்டம் அஞ்சல் என்ற முகவரிக்கு அனுப்பிட வேண்டப்படுகிறது. நேரில் வர இயலாத பக்தர்களுக்கு தபால் மூலம் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

அருள்மிகு தியாகராச சுவாமி திருக்கோயில்

தென் திருவாரூர் (எ) இடைகால்

அம்பாசமுத்திரம் வட்டம் - திருநெல்வேலி மாவட்டம்

சோழநாட்டு திருவாரூர் தியாகராசசுவாமி திருக்கோயில் போன்றே திருநெல்வேலி மாவட்டத்து சிவத்தலங்கள் வரிசையில் இடைக்கால் தியாகராச சுவாமி கோயில் முக்கியத்துவம் பெற்ற திருக்கோயிலாகும். இங்கு சிவகாமி அம்மை உடனுறைய தியாகராசசுவாமி மூலவராகத்திகழ்ந்து அருள்பாலிக்கின்றார்.

இத்திருக்கோயிலில்அதிகாரநந்தி, சூரியன், சப்தமாதர், விநாயகர், சுரதேவர், தட்சிணாமூர்த்தி, கன்னிவிநாயகர்,கரியமாணிக்கப்பெருமாள்,வள்ளி தேவ சேனா சகிதராக சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர், சனீஸ்வரர், நாகதேவதை, காலபைரவர், சந்திரன் ஆகிய திருமூர்த்தங்கள் பிரகாரத்தில் திகழ்ந்து அருள் பாலிக்கின்றனர்.

சி.சண்முகப்பெருமாள்
தலைவர்,
பிரதோஷ கமிட்டி,
அ/மி. தியாகராஜ சுவாமி கோயில்,
இடைகால்.

ஆ.சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல்.,
தநடைமுறை நிர்வாகி,
தென் திருவாரூர் (எ) இடைகால்
அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 821.

ஸ்ரீ அலர்மேல் மங்கை ஸமேத அண்ணன் பெருமாள் திருக்கோயில்

திருவெள்ளக்குளம் - திருநல்லூர்

விமானம் - சுவேத விமானம்
புஷ்கரணி - சுவேத புஷ்கரணி
பிரத்யக்ஷம் - சுவேத மகாராஜனுக்கு
அவதாரம் - குமுதவல்லி நாச்சியார்
மங்களாஸாசனம் - திருமங்கையாழ்வார்
மூலவர் - அண்ணன்பெருமாள்
உற்சவர் - ஸ்ரீ நிவாஸப்பெருமாள்
மூலவர் - அலர்மேல்மங்கை
உற்சவர் - பத்மாவதி தாயார்
ஸ்தல விருக்ஷம் - வில்வம், புரசு

சுவேத மகாராஜனின் பெயரால் இக்குளத்திற்கு சுவேத புஷ்கரிணி (திருவெள்ளக்குளம்) என்று பெயர் ஏற்பட்டது. இக்குளத்தில் நீராடி ஸ்ரீநிவாஸனைஸேவித்து (8000) எண்ணாயிரம் முறை மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்தால் அவனுக்கு 'மருத்யு பயம்' இல்லை. சிரஞ்சீவியாக வாழ்வான். அண்ணன்பெருமாள் ஸன்னதியில் எல்லா பிரார்த்தனைகளையும் செலுத்தலாம். முடி இறக்குதல், காது குத்தல், அங்கப்ரதக்ஷணம் செய்தல், துலாபாரம் ஸமர்ப்பித்தல், திருக்கல்யாணம் செய்தல், சர்க்கரைப் பொங்கல் ஸமர்ப்பித்தல், ததீயாராதனம் செய்தல், ஆயுஷ் ஹோமம் செய்தல் மிகவும் சிற்புடையவை. அவரவர்கள் விரும்பும் பலன்களை எல்லாம் அடையலாம்.

S.R.மாதவ பட்டர்
அண்ணன்பெருமாள் கோயில்,
சீர்காழி (தாலுக்கா) - 609 109.
போன் : 04364 - 256534

அருள்மிகு சுவேதாரண்யேசுவரசுவாமி திருக்கோயில்

திருவெண்காடு - 609 114.
சீர்காழி வட்டம், நாகப்பட்டிணம் மாவட்டம்.
போன் : 04364 - 256424

அமைவிடம் :

திருவெண்காடு என்னும் திருத்தலம் நாகப்பட்டிணம் மாவட்டத்தை சேர்ந்த சீர்காழி வட்டத்தில் ஊள்ளது. சோழவள நாட்டில் காவிரிக்கு வடகரையில் அமைந்துள்ள தலங்களில் இது பதினோராவது தலமாகும்.

தல வரலாறு :

பிரம்மனிடம் பெற்ற வரத்தால் மருத்துவன் என்னும் அசுரன் தேவர்களுக்கு துன்பம் விளைவித்தான். சிவபெருமான் அருளியபடி தேவதர்கள் வேற்றுருவில் திருவெண்காட்டில் வாழ்ந்து வந்தனர். அசுரன் திருவெண்காட்டிற்கு வந்து போர் செய்தான். அசுரன் சிவனை நோக்கி தவம் இருந்து சூலாயுதம் பெற்று ரிடப தேவரை சூலத்தால் தாக்கி காயப்படுத்தினான். ரிடப தேவர் சிவனிடம் முறையிட சிவன் கோபம் கொண்டார். அப்பொழுது அவருடைய 5 முகங்களில் ஒன்றான ஈசான முகத்தினின்று அகோரமூர்த்தி தோன்றினார். இந்த அகோர உருவை கண்ட மாத்திரத்திலேயே அசுரன் சிவனிடம் சரணாகதி அடைந்து வணங்கினான். சரணடைந்த அசுரன் அகோர மூர்த்தியின் காலடியிலும் காயம்பட்ட ரிடப தேவர் சுவேதாரண்யஸ்வர் சுவாமி நிறுத்த மண்டபத்திலும் இன்றும் காணலாம். தென்னிந்தியாவின் மிகப் புகழ் பெற்ற சிறப்பு வாய்ந்த பிரார்த்தனை தலம் இது.

கல்வெட்டுக்கள் :

முதலாம் இராசராசசோழன் காலத்திய (கி.பி.985 - 1014) கல்வெட்டு இங்கு உள்ளது. ஆதலால் இக்கோயில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு இருக்கவேண்டும். இராசராசன் 1, இராசேந்திரன் 1, வீரராசேந்திரன் 2, குலோத்துங்கன், விக்கிரமசோழன் 1, குலசேகரபாண்டியன், கௌமாரபாண்டியன், விக்ரமபாண்டியன், ஐடாவர்மன், சுந்தரபாண்டியன், பராக்கிரம பாண்டியன், ஸ்ரீ வல்லபதேவன், விருப்பண்ண உடையார், கிருஷ்ண தேவராயர், துக்கோஜி முதலியவர்கள் காலத்திய கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு முடிய உள்ள கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

பிரார்த்தனை :

ஒன்பது கிரகங்களில் ஒருவரான புதன்.கல்வி. அறிவு.பேச்சுத்திறமை. இசை. சோதிடம். கணிதம். சிற்பம். மருத்துவம் மொழிகளில் புலமை ஆகியவற்றைத்தரவல்லவர். புதன் சன்னதிக்கு வந்து வழிபாடு செய்தால் குழந்தைப் பேற்றினைப் பெறலாம். இங்கு மூன்று தீர்த்தங்களில் மூழ்கி குழந்தைப் பேறுகளை பெறுகின்றனர்.

அருள்மிகு ரெத்தீனகிரீஸ்வர சுவாமி திருக்கோயில்

திருமருகல், நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்

இத்தலம் கும்பகோணம் - நாகப்பட்டினம் பேருந்து வழித்தடத்தில் நாகப்பட்டினத்திலிருந்து மேற்கில் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் சன்னாநல்லூரில் இறங்கி நாகப்பட்டினம் செல்லும் பேருந்தில் அத்தலத்தை அடையலாம். இத்தலத்தின் இருபுறங்களில் தெற்கே புத்தாறும் வடக்கே முடிகொண்டான் ஆறும் பாய்ந்து வளம் சேர்க்கின்றன இத்தலத்தின் மேற்கில் திருச்செங்காட்டான்குடி, திருக்கண்ணபுரம், வடமேற்கில் திருப்புகலூர், கிழக்கில் திருச்சாத்தமங்கை ஆகிய பாடல் பெற்ற தலங்கள் எழிலுற விளங்குகின்றன.

திருமருகல் தலத்தின் இறைவன் வடமொழியில் ரெத்தினகிரீஸ்வரர் என்றும், தமிழில் மாணிக்கவண்ணர் என்றும் வணங்கப்பெறுகின்றனர். இறைவி வடமொழியில் ஆமுதளநாயகி என்றும், தமிழில் வண்டுவார்குழலி என்றும் வணங்கப்பெறுகின்றாள். இறைவன் சுயம்பு மூர்த்தி. இறைவி தென்முகம் நோக்கி பெரிய உரு தாங்கி பேரழகியாய் ஜொலிக்கின்றாள். இறைவன் இருப்பிடம் சேர்க்கை மலை. அம்மன் கோவில் மகாமண்டபம்.

இக்கோவிலில் சோமாஸ்கந்தர், தெட்சிணாமூர்த்தி, அறுபத்தி மூவர் திருவுருவங்கள், பிரதான விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணியர், மகாலெஷ்மி, சண்டிகேஸ்வரர், துர்க்கை, நடராஜர், நவக்கிரகங்கள், பைரவர் உள்சுற்றில் சேர்க்கைமலைக் கோவிலில் விளங்கி அருள்புரிகின்றனர். வெளி சுற்றில் அருள்மிகு சுரம்தீர்த்த விநாயகர், சந்தான விநாயகர், மருகளுடையார் சௌந்திரநாயகி கோவில்களும் விளங்கி நம்மை பரவசப்படுத்துகின்றனர்.

செட்டிப் பெண்ணிற்காக அரவம் தீண்டி மாண்ட செட்டிப் பையனை இத்தல இறைவன் சடையாயி எனுமால் சரணி எனுமால் எனத் தொடங்கி செல்லும் திருப்பதிகம் மூலம் பாடி எழுப்பி அருளினார் திருஞானசம்பந்தர். இவ்வரலாற்றினை சேக்கிழார் சுவாமிகள் திருமருகல் நகரின் கண் எழுந்தருளி திங்களுடன் செங்கட்பாம்பு எனத் தொடங்கி செல்லும் 12 பாடல்களில் விளக்கி உரைக்கின்றார்.

அப்பர், சுந்தரர், சம்மந்தர் ஆகியோரால் இத்தலம் பாடல் பெற்றுள்ளது. அருணகிரிநாதர் தமிழ் தாதி மருதவனம், மறைக்காடு, திருமருகல், தனுக்கோடி வருக்குழகர் தருவாழ்வே என்ற பழனி திருப்புகழில் சிவத்தல வரிசையில் இத்தலத்தை வைத்து அழகு பார்க்கின்றர்.

இலக்குமி இக்கோவிலின் கிழக்கில் குளம் வெட்டி அதில் மூழ்கி மாணிக்கவண்ணரை வழிப்பட்டு திருமாலை அடைந்தார். அந்த இலக்குமி தீர்த்தத்தில் மூழ்கினால் பாவங்கள் தீரும், கடன் தொல்லைகள் நீங்கும், செல்வம் பெருகும் என்று கூறுகின்றனர்.

கோவிலின் தென்புறத்தில் சீராளன் கல்வி பயின்ற சாலையும், நீராடிய குளமும் இன்றும் சிறப்புற விளங்குகின்றன. இக்குளத்தில் ஐப்பசி, சித்திரை அமாவாசை நாள்களில் நீராடி இறைவி இறைவனை வணங்கி பிள்ளைப்பேறு பெறலாம்.

இங்ஙனம்

க.முத்துகுமரசுவாமி B.A.,
தக்கார் / செயல் அலுவலர்

கோ.தனசேகரன் M.A.,
செயல் அலுவலர்



அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்

(சர்வதோஷ பரிகாரத்தலம்)

திருவாரூர்

நாயன்மார்கள் பெரிதும் போற்றி வணங்கி நேசிக்கப்பட்டதும், தோன்றிய காலம் அறியப் படாததுமாகியது திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் ஆகும். கடவுள்களின் மகாராஜா என்றழைக்கப்படும் அருள்மிகு தியாகராஜ சுவாமியின் திருத்தேர் எல்லாத் தேர்களையும் விட மிகப் பெரிய தேராகும். தேவராப் பாடல் பெற்ற இத்திருத்தேரினை அப்பர் சுவாமிகள் ''ஆழித்தேர்'' எனவும் புகழ்ந்து பாடியுள்ளார். ஆழித்தேரோட்டம் ஆண்டு தோறும் ஏப்ரல் அல்லது மே மாதங்களில் நடைபெற்றுவருகிறது. பஞ்ச பூதத்தலங்களுள் பூமிக்குரியதும், சப்தவிடங்கத் தலங்களுள் முதன்மையானதும், சைவ சமயத்தில் தலைமைப் பீடமும், சைவ சமயத்தின் 'பெருங்கோயில்' என்று அழைக்கப்படுவதும், மகா விஷ்ணு, இந்திரன், பிரம்மா முதலிய தேவர்களும் ரிஷிகளும், சித்தர்களும் வழிபட்ட தலமும், பதினெண் சித்தர்களுள் கமலைச்சித்தர் முத்தி பெற்ற தலமும், 'தேவசாயரட்சை' எனப்படும் நித்திய பிரதோஷ க்ஷேத்திரம். கடன் தீர்க்கும் கடவுளாகவும், நோய் தீர்க்கும் கடவுளாகவும் வணங்கப்படும் அருள்மிகு ரு(ரி)ணகரேஸ்வரர் இத்திருக்கோயிலில் தனிச்சந்நதியில் எழுந்தருளியுள்ளார். சக்தி பீடங்களுள் ஞானசக்தி பீடமாக அருள்மிகு கமலாம்பாளும், இத்திருக்கோயிலில் அட்சரங்களே பீடமாகவும், சரசுவதிக்கு தனி சந்நதியும் கொண்டு ஞான சக்தி பீடமாகவும் உள்ளதால் தீபமிட்டு கல்விச் செல்வம் வேண்டி வழிபடுகின்றனர். ஸ்ரீ ராமனின் பாட்டனார் வழிபட்ட ராகுகால துர்க்கை எனப்படும் ரௌத்திர துர்க்கையாகிய ராகுபகவானின் அதி தேவதையாகிய இந்த ராகுகால துர்க்கையை வாரத்தில் எல்ல நாட்களிலும் ராகு காலத்தில் வழிபட்டு பயன்பெறலாம்.

1. இத்திருக்கோயிலுக்கு நேரில் வர இயலாத அன்பர்கள் அபிஷேக கட்டணம் நன்கொடைகளை இத்திருக்கோயிலுக்கான ICICI Bank A/c. No.60810108132-ல் செலுத்தி விபரம் தெரிவித்தாலும் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.
2. அபிஷேகத்திற்கான பொருட்களை அபிஷேகட்டணத்திற்குள் திருக்கோயிலே வழங்குகிறது.
3. இத்திருக்கோயில் பற்றி விவரங்களுக்கு இணை தளம் WWW.Srithiyagaratemple.orgபார்க்கலாம்.
4. இ-மெயில் : admin@thiyagarajatemples.org
5. தொலைபேசி எண் : 04366 - 242343

திரு. ட்டி.விஜயகுமார் எம்.ஏ., பில்எல்.,
தக்கார் உதவி ஆணையர்

திரு. ராம்.வி.தியாகராஜன் பி.டெக்.,
பரம்பரை அறங்காவர் உள்துறைக் கட்டளை

திரு. த.கஜேந்திரன் எம்.ஏ., பி.எல்.,
நிர்வாக அதிகாரி



ஸ்ரீ ஸௌந்தரராஜப்பெருமாள்
(நாகை அழகியார்)
நாகப்பட்டினம்

திருக்கோயில் பற்றிய சிறுகுறிப்பு :

நாகை ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் 108 வைணவ திவ்ய தேசங்களில் 19-வது திவ்ய தேசம். இப்பெருமாள் 4 யுகங்களில் நால்வருக்கு காட்சி அளித்ததாக புராண வரலாறு. கிருத யுகத்தில் ஆதிசேடனுக்கும், த்ரேதாயுகத்தில் பூ தேவிக்கும், துவாபரயுகத்தில் மார்கண்டேய மகரிஷிக்கும், கலியுகத்தில் சாலிசுக மகாராஜனுக்கும், நாகராஜனுக்கும் சாட்சியளித்துள்ளார். இந்த திவ்யதேசசேஷத்ரத்தில் பகவான் பக்த துருவனுக்கு கிருதயுகத்தில் காட்சி அளித்தார் என்றும், அதைத் தொடர்ந்து மேற்கண்ட யுகங்களில் மேற்கண்டவாறு காட்சியளித்துள்ளார். இந்த திருத்தலத்தில் திருமங்கையாழ்வார் நாகை அழகியார் என்று, இப்பெருமாளை திருக்குடந்தை திருமெய்யம், ஸ்ரீவைகுண்டம் திருமாரிரும் சோலை (அழகர்கோயில்), மதுரை (கூடலழகர்), காஞ்சிபுரம் திருநீர்மலை, திருக்கோயிலூர், உறையூர் (திருச்சி) ஆகிய திவ்ய தேசங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமாள்களுக்குச் சமமாகப் பாவித்து 10 பாடல்கள் பாடியுள்ளார். இத்திருக்கோயில் சிறப்பு தாயாருக்கு ஆனி மாதம் திருக்கொடி ஏற்றுவித்து 10 நாட்கள் உத்திரத்திருவிழாவும் ஆடி மாதம் ஆண்டாளுக்கு திருக்கொடி ஏற்றுவித்து ஆடிப்பூரத்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

மு.இளங்கோவன்
செயல் அலுவலர்

அருள்மிகு புத்துவாயம்மன் திருக்கோயில்
கோலியனூர், விழுப்புரம் வட்டம்

இருப்பிடம் :

இத்திருக்கோயில் சென்னை - பண்ணுருட்டி சாலையில் கோலியனூர் கூட்டுரோடுக்கு மேற்கே 1 கி.மீ. தொலைவிலும் விழுப்புரம் நகரிலிருந்து 6. கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

தலச்சிறப்பு :

ஜமதக்கினி முனிவரின் பத்தினியான ரேணுகை மகா மாரியம்மனாக அமைந்துள்ள திருத்தலங்களில் ஊஞ்சல் அமைத்து தாலாட்டு பாடப்பெறும் 5 தலங்களில் இத்திருக்கோயிலும் ஒன்றாகும். சித்திரை மாதத்தில் 11 நாள் பிரமோற்சவம் விமரிசையாக நடைபெறும். ஆடி மாதம் தை வெள்ளி கிழமைகளில் பிரார்தனைக்காக ஏராளமான பக்தர்கள் இத்திருக்கோயிலில் வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆடிமாதம் பொங்கலிட்டு தேர் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். சுயம்பு புற்றில் பாம்பாக அமர்ந்து தம்மை நாடிவரும் அன்பர்களின் குறைகளை தீர்த்து வைத்து அம்மன் அருள் புரிகிறாள்.

அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் திருக்கோயில்

திருக்கண்ணபுரம், நாகப்பட்டிணம் வட்டம்

நாகப்பட்டிணம் மாவட்டம் மற்றும் வட்டம், திருமருகலுக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. நன்னிலம் புகைவண்டி நிலையத்திற்கு கிழக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. நாகப்பட்டிணம் - கும்பகோணம் வழித்தடத்தில் திருப்புகலூருக்கு தெற்கே 2 கி.மீ. உள்ள ஸ்ரீவைகானஸ ஆகம ஸ்தலமாகும்.

108 திவ்ய தேசங்களில் பாடல்கள் வரிசையில் 3வது இடத்தில் உள்ளது.

மூலவர் - நீலமேபகப் பெருமாள்
தாயார் - ஸ்ரீதேவி, ஸ்ரீ பூதேவி
உற்சவர் - ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள்
தாயார் - ஸ்ரீ தேவி, பூதேவி, ஆண்டாள், பத்மினி
தனித் தாயார் - கண்ணபுரத்தாயார்

மங்களாசாசனம் 5 ஆழ்வார்கள். பாசுரங்கள் 129. ஸ்ரீ பெருமாள் பாத்ம புராணத்தின் படி 64 சதுர் யுகம் கண்டவர்.

பெருமாள் சிறப்பு :

அர்ச்சகருக்காக சோழ மன்னனுக்கு முடியுடன் காட்சி தந்தும், அஷ்டாச்சர மந்திர சித்தி பெற்ற ஸ்தலமாகவும், எட்டு சுயம் வியக்த க்ஷேத்திரங்களில் ஒன்றாகவும், பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்களில் ஒன்றாகவும் உள்ளது. விபிஷனருக்கு பிரதி அமாவாசை தோறும் நடையழகு செய்வித்தும் கருடன் மற்றும் தண்டமகரிஷிக்கு கர்ப்ப கிரகத்தில் காட்சிக் கொடுத்தும் உள்ளார். இந்திரன் பிரம்மகத்தி தோஷம் நீங்கிட இந்திரனால் நவக்கரகம் பிரதிஷ்டை செய்து தனிசுலோகம் இயற்றப்பட்டுள்ளது. விகடாசுரனை வதம் செய்ததால் சக்கரம் பிரயோகமாகவும், மகாபலி சக்கரவர்த்தயிடம் 3 அடி மண் யாசித்ததால் தான ஸ்தலமாகவும் உள்ளது. முயோதரனது சிரத்தை மற்றும் பக்தி மிக்க பொங்கலினை மானசீகமாக ஏற்றுக்கொண்டவர் அன்று முதல் இரவு முயோதரன் பொங்கல் நைவேத்யம் செய்யப்படுகிறது.

ஸ்ரீ பெருமாள் வைகுண்டத்திலிருந்து ஹஸ்த நட்சத்திரத்தில் ஆர்ப்பரித்ததால் பஞ்சபர்வ விசேஷங்களும் மற்றும் மாசி மகோற்சவம் வைகாசி பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. குழந்தைப் பேறு இல்லாதவர்கள், திருமணமாகதவர்கள் மற்றும் நோய் நொடி உள்ளவர்கள் நித்ய புஷ்கரணியில் நீராடி எம்பெருமானை தரிசிக்க எல்லா பலனும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

இவ் ஆலயத்தில் நித்ய கட்டளை திருமஞ்சனம் மற்றும் இதர காணிக்கைகளை நாகப்பட்டிணம் ICICI Bank A/c. No. 609401012829-ல் செலுத்தி விபரம் தெரிவித்தால் நேரில் வர இயலாத அன்பர்களுக்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

திரு. த.கஜேந்திரன் M.A., B.L.,
தக்கார்

திரு. எஸ்.கோவிந்தராஜுலு B.A.,
நிர்வாக அதிகாரி

மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான

ஸ்ரீ கற்பகாம்பாள் உடனுறையும் ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில்

(சுக்கிரன் ஸ்தலம்)

கஞ்சனூர் - 609 804. திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம்

நவக்கிரகத் தலங்களில் சுக்ர பகவானுடைய திருத்தலம் கஞ்சனூர் ஸ்ரீ கற்பகாம்பாள் சமேத ஸ்ரீ அக்னீவர சுவாமி திருக்கோயில். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்புப் பெயர் பெற்ற இத்தலம் திருநாவுக்கரசரால் பாடல் பெற்றது. சுமார் 1400 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோயில் மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமானது.

தலவிருக்ஷம் புரசு, தீர்த்தம் அக்னி தீர்த்தம், கம்ஸதீர்த்தம், சந்திர தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் ஆகியவை. பிரம்ம தீர்த்தமாகிய காவேரி இவ்வூரில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்ந்து ''உத்தர வாஹினீ'' என்றும் ''வடகாவேரி'' என்றும் பெயர் பெற்றது. இத்தலத்து இறைவனை திருமால், பிரம்மன், அக்னி, சந்திரன், பராசீரர் கம்ஸராஜ பாண்டியன் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றார்கள். பிரம்ம தேவருக்கு திருமணக் கோலம் காட்டியருளியதால் இறைவன் தமது வலப்பாகத்தில் இறைவியைக் கொண்டருள்கின்றார். பராசர முனிவருக்குத் தாண்டவக் கோலம் காட்டி முக்தியளித்தமையால் இக்கோயில் நடராஜப் பெருமான் முக்தி தாண்டவ மூர்த்தி என போற்றப்படுகின்றார். தமிழகத்தில் வேறெங்கும் காண்பதற்குரிய கற்சிலையினால் ஆன நடராஜரின் திருமேனி இக்கோவிலில் வணங்கி மகிழலாம். அசுர குருவான சுக்ர பகவானால் ஏற்பட்ட சாபம் நீங்க ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் இத்தலத்தில் ''ஹரதத்தர்'' என்னும் திருநாமத்தோடு ஸ்ரீ கற்பகாம்பாள் சமேத ஸ்ரீ அக்னீஸ்வர சுவாமியை வழிபட்டு சுக்ர தோஷம் நீங்கப் பெற்றார். மூலவர் ஸ்ரீ அக்னீஸ்வர சுவாமி சன்னதிக்குத் தென்புறம் சுக்கிர கிரஹம் வழிபாட்டுக்குரியவரகச் சிவபெருமான் உமாதேவியோடு அருள் பாலிக்கின்றாள்.

இத்திருத்தலம் தஞ்சை மாவட்டத்தில் கல்லணை - பூம்புகார் சாலையில் கும்பகோணத்திற்கு கிழக்கில் 18 கி.மீ. தொலைவிலும் மயிலாடுதுறைக்கு மேற்கில் 20 கி.மீ. தொலைவிலும் உள்ளது. கும்பகோணத்திலிருந்து நகர் பேருந்து எண் 2A, 2B, 38, 54 மற்றும் கும்பகோணம், மயிலாடுதுறையிலிருந்து கீரின், இராமலிங்கம், செல்வம் ஆகிய பேருந்து வசதிகளும் உண்டு.

மேலும் கும்பகோணம் மயிலாடுதுறை பிரதான சாலையில் ஆடுதுறையில் இறங்கினால் ஆட்டோ, டாக்சி மூலமாக சூரியனார் கோவில் வழியாக 5 கி.மீ. தூரத்தில் இவ்வூரை அடையலாம்.

விபரங்களுக்கு:

செயல் அலுவலர்
அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில் சுக்கிரத்திருத்தலம்
கஞ்சனூர் (Po), துகிலி வழி Pin - 609 804. தஞ்சை மாவட்டம்
போன்: (0435) 2473737

அருள்மிகு நெல்லுக்கடை ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில்

நாகப்பட்டினம் நகர் - வட்டம்

சிவராஜதானிய க்ஷேத்திரமாகிய திருநாகை மாநகரில் சர்வ சித்திகளையும் வழங்கி சர்வ ஆன்மாக்களையும் ஈடேற்றி தாயின் திருவுள நோக்கு சேயை குறித்தே என்று உறையும் நெல்லுக்கடை ஸ்ரீ மகாமாரி அன்னை ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் ஈசானிய பாகத்தில் அருள்கோவில் கொண்டவள்.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான சிறப்பு கொண்டவள் பெரியநாயகத்தம்மையார் என்னும் புனிதவதியிடம் நெல் வாங்க வருகை தந்து திருவிளையாடல் புரிந்து திருக்கோவில் கொண்டவள்.

இவ்வாலயத்தில் ஸ்ரீ எல்லையம்மன் தனிக்கோவிலாக அமையப்பெற்று எல்லா பரிவாரங்களையும் கொண்ட ஆலயம் ஆகும். இவ்வாயலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் திருவிழா நடைபெறும். மேற்படி திருவிழாவில் ஸ்ரீ காத்தவராய சுவாமி கழுவேறும் ஐதீகம் செடில் உற்சவமாக நடைபெறும். இவ்விழாவானது தமிழ் நாட்டிலேயே தொன்மையான சிறப்பு வாய்ந்த விழாவாகும். மேலும் காவடி மாவிளக்கு பால் அபிஷேகம் அங்க பிரதட்சனம், போன்றவை நடைபெறும் இந்த ஆலய விழாவானது நாகை நகரிலேயே முக்கிய திருவிழாவாக பொதுமக்களால் கொண்டாடப்படுகிறது. இந்த ஸ்தலம் முக்கியமான பிரார்த்தனை ஸ்தலமாகும்.

வயி.கு.ந.மு. தியாகராஜன்
பரம்பரை ஆதினகர்த்தா

அருள்மிகு பரிமள ரெங்கநாதர் திருக்கோயில்

திருஇந்தளூர், மயிலாடுதுறை நகர்

தல வரலாறு :

கன்னித் தமிழ்பாடி இறைவனை வாழ்த்திய ஆழ்வார்கள் பலர் வாழ்ந்த தமிழ்த் திருநாட்டில் கங்கையிற் புனிதமாகிய காவேரி கரையிலமைந்த வைணவத் தலங்கள் பலவற்றுள் ஐந்து அரங்கங்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவை. அவை முறையே திருவரங்கப்பட்டிணம், திருவரங்கம் (ஸ்ரீ ரெங்கம்) அப்பாலரங்கம் (கோயிலடி), கும்பகோணம் மத்யரங்கம், திருஇந்தளூர் பரிமளரெங்கம் என்பன.

திருஇந்தளூரில் அரங்கநாதர் நான்க்கு திருக்கைகளோடு வீரசயனமாக திருப்பாற்கடலில் பள்ளிக்கொண்ட வண்ணம் காட்சி அளிக்கின்றார். இறைவனது திருமேனி மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த பச்சைமரகதத் திருமேனியாக காண்போர் கண்ணையும் கருத்தையும் கவருவதாக அமைந்துள்ளது. இறைவனது திருமேனியழகை மறைத்திருந்த தைலக்காப்பு 1968-ல் நீக்கம் பெற்று ''இன்னவண்ணமென்று காட்டீர் இந்தளூரீரே'' என்று திருமங்கை ஆழ்வார் என்றோ பாடிய பாசுரத்திற்கிணங்க இன்று தன் திருமேனி அழகை எல்லோரும் கண்டு, வணங்கி, வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க ''போயப்பிழையும் புது திருவான் நின்றனவும் தீயினில் துசாக'' அருள் பாலிக்கின்றார்.

''பச்சைமா மலை போல் மேனி''
என்ற தொண்டரடிப் பொடி ஆழ்வார் வாக்குக் கிணங்க இன்று பரிமளரெங்கநாதர் பச்சை திருமேனியுடன் காட்சி அளிக்கின்றார்.

ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும், தல வரலாற்றிலும் இவ்வூருக்கு திருஇந்தளூர் என்றும், இந்துபுரீ, சுகந்தவனம் என்றும் பெயர்கள் உள்ளன. சந்திரனை 'இந்து' என்ற சொல் குறிக்கும். சந்திரனுக்கு கொடிய க்ஷய ரோகம் தோன்றவே, இவ்வூரை அடைந்து திருக்குளத்தில் ''நீராடி, இவ்வூர் பெருமாளை வழிபட்டு தனக்கு ஏற்பட்ட ரோகம் நீங்கப்பெற்றான். அதனால் திருக்குளத்திற்கு ''இந்துபுஷ்கரணி'' என்றும் ஊருக்கு ''இந்துபுரீ'' என்றும் அமைந்தது என்பார்கள்.

உலகினர் எல்லோரும் கங்கையில் மூழ்கித்தம் பாவத்தைப் போக்கிகொள்வார்கள். அத்தகைய கங்கை இங்கே துலா மாதத்தில் கடை முகத்தன்று கலந்து தம் தூய்மையைக்காத்து கொள்கிறாள். பெருமாள் சந்நிக் கருவறையில் பள்ளி கொண்ட அரங்கனின் உட்புரம் கங்கையும், தென்புறம் காவேரியும் அமர்ந்து பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகிறார்கள்.

ஆர்.சோமசுந்தரம் B.A.,
செயலர் அலுவலர்

ஆர்.ஜெயராமன் M.A., B.L.,
உதவி ஆணையர் / தக்கார்

அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்

மணவாளநல்லூர்

விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்

அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில் முருகன் குடிகொண்ட பிரார்த்தனைத் திருத்தலமாக விளங்கி வருகிறது. சேவார்த்திகள் தங்களின் எந்தவித நியாயமான கோரிக்கைகளையும் எழுத்து மூலம் பிராது கட்டி; கட்டிய நாளிலிருந்து 90 நாட்களுக்குள் கோரிக்கை முழுவதும் நிவர்த்தி பெறுவதும், தீராத நோய் உள்ளவர்கள் இத்திருத்தலத்தில் 1 மண்டலம் தங்கி அருள்மிகு கொளஞ்சியப்பரின் பாதத்தில் வைத்து பூஜித்து வழங்கும் வேப்பெண்ணையினை உடம்பில் சாத்தியும், அருந்தியும் பூரண குணம் அடைந்து செல்வதும், கொளஞ்சியப்பராக விளங்கி வரும் முருகன் உருவமின்றி அருபமாக இத்திருத்தலத்தில் எழுந்தளியிருப்பதும், திருக்கோயில் மாலை 6 மணி முதல் இரவு 8.30 மணி வரை இடைவிடாது நடைத்திறந்து இருப்பதும், குழந்தைகளுக்கு முடியெடுத்தல், காவடியெடுத்தல், காதுகுத்துதல், திருமணம் செய்தல், குழந்தைகளுக்கு காப்பிடுதல் போன்ற சுபகாரியங்கள் பெருமளவில் நடைபெறுவதும், திருக்கோயிலுக்கு சேவார்த்திகள் தங்களது வேண்டுதலாக கோழி, சேவல் கால்நடைகள் மற்றும் தானியங்களை காணிக்கையாக வழங்குவதும் இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பு அம்சங்களாகும்.

அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலில் 50 அனாதை சிறார்களை கொண்ட கருணை இல்லம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ க முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்னதானத் திட்டம் கடந்த 15.08.2002 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தினசரி 100க்கும் மேற்பட்ட சேவார்த்திகள் அமுதுண்டு பயனடைந்து வருகிறார்கள். 375 கிலோ எடையில் வெள்ளி ரத திருப்பணியும் நடைபெற்று வருகிறது.

இச்சிறப்புவாய்ந்த கலியுக வேந்தன் பிரார்த்தனை தெய்வம் அருள்மிகு கொளஞ்சியப்பரை தரிசித்து அவனருள் பெற்றுய்ய அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

க.இராஜநாயகம், பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர், மயிலாடுதுறை

கே.பி. அசோக்குமார், எம்.ஏ., பி.எல்.,
செயல் அலுவலர்

இரா.இராஜேந்திரன், பி.எஸ்சி., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்

அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில்

விருத்தாசலம் நகர் - வட்டம், கடலூர் மாவட்டம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றால் முறையாய் அமைந்த திருத்தலங்களில் ஒன்று அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில் என்பது மிகை ஆகாது. நடு நாட்டு சிவத்தலங்கள் 22ல் ஒன்பதாகப் போற்றப்படக்கூடிய தலமாகவும், காசியிலும் வீசம் அதிகம் என்பதால் விருத்தகாசி எனவும் வழங்கப்படுகிறது. சைவ சமயக் குரவர்கள் காலத்தில் இத்திருத்தலம் திருமுதுகுன்றம் என்றே அழைக்கப்பட்டுள்ளது. திருமுதுகுன்றம் என்றே அழைக்கப்பட்டுள்ளது. திருமுதுகுன்றம் என்ற தமிழ் சொல் பின்னர் வ்டமொழியில் விருத்தாசலம் என அழைக்கப்பட்டுள்ளது. இறைவன் குடிகொண்டுள்ள இந்த மலை ஆதியில் தோன்றியதால் பழமலை என வழங்கப்பட்டதாக ஞானக்கூத்தரின் விருத்தாசலம் புராண வழியாக அறியலாகிறது.

இறைவன் மற்றும் இறைவி :

திருமுதுகுன்றத்தில் கோயில் கொண்டு அருளாட்சி செய்பவர் அன்னை பெரியநாயகி உடனுறை அருள்மிகு பழமலைநாதர் ஆவார். பின்னர் இச்சொல் வடமொழியில் அருள்மிகு விருத்தாம்பிகை உடனுறை அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் என அழைக்கப்பெற்று இன்றும் அதே பெயர் நடைமுறையில் இருந்து வருகிறது.

கோயில் அமைப்பு மற்றும் சிறப்பு :

சைவ உலகுக்கு ''சிவாய நம'' என்ற ஐந்தெழுத்து எவ்வளவு முக்கியமானதோ அதேபோன்று ஐந்து என்ற எண்ணின் பெருமையுடன் இத்திருத்தலம் ஐந்து பிரகாரங்கள் ஐந்து கோபுரங்கள், ஐந்து தீர்த்தங்கள், ஐந்து கொடிமரங்கள், ஐந்து நதிகள் என பெருமையோடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும். இத்திருத்தலம் சமயக்குரவர்களில் ஞானசம்மந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவரால் போற்றி பாடப்பெற்றது என்பதும், அருணகிரிநாதர், ஞானக்கூத்தர், சிவப்பிரகாச சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், குரு நமச்சிவாயர் மற்றும் இராமலிங்க சுவாமிகள் போன்றோர்கள் இத்தலத்தின் சிறப்பை பல பாடல்கள் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தி உள்ளதும் தனிச்சிறப்பாகும்.

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்னதான திட்டம் கடந்த 15.08.2002 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தினசரி 100க்கும் மேற்பட்ட சேவார்த்திகள் அமுதுண்டு பயனடைந்து வருகிறார்கள்.

இத்திருக்கோயிலில் சுவாமி மற்றும் அம்பாள் வீதியுலா வர ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய மரத்தேர்களும் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு பழையத் தேர்கள் திருப்பணி செய்யப்பட்டும் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் புதிய வெள்ளி ரிஷப வாகனம் ஒன்றும் உபயமாக நிர்மாணிக்கப்பட்டு அவையாவும் வர இருக்கும் மாசி மகப்பெருவிழாவில் வீதியுலா நடத்தப்பட உள்ளது.

மேற்கண்டவாறு மிகச்சிறப்பு வாய்ந்த புன்னியத் திருத்தலமான அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை தந்து தரிசித்து அவனருள் பெற்றுய்ய அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

க.இராஜநாயகம், பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர், மயிலாடுதுறை

கே.பி. அசோக்குமார், எம்.ஏ., பி.எல்.,
செயல் அலுவலர் (கூ.பொ)

இரா.இராஜேந்திரன், பி.எஸ்சி., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்

அருள்மிகு சார்ங்கபாணிசுவாமி திருக்கோயில்

திருக்குடந்தை

ஆழ்வார்களால் பாடப் பெற்ற 108 வைணவத்திருத்தலங்களில் ஸ்ரீ ஆண்டாள் உட்பட ஏழு ஆழ்வார்களால் பாடப்பெற்ற ''சீரார்செந்நெல் கவரிவீசும் செழுநீர் திருக்குடந்தை'' உலகிலேயே திருவரங்கம், திருப்பதிக்கு அடுத்த மூன்றாவது திருத்தலமாயத் திகழ்கின்றது.

இங்கு ஸ்ரீதேவி, பூமிதேவிகளுடன் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மூவரில் முதல்வனாய ஒருவன் என்றும், பொன்னார் சார்ங்கமுடைய அடிகள் என்றும் பலவாறாக ஆழ்வார்களால் அழைக்கப்பெற்று வடக்கில் காவிரி, தெற்கில் அரசில் ஆகிய இரு புனித ஆறுகளுக்குகிடையில் அமைந்த பூலோக வைகுண்டமாய்த் திகழும், பொன்னிமணி கொழிக்கும் பூங்குடந்தையில் அந்தணர் மந்திரமொழியுடன் வணங்கும் ஆதிசேடன் மேல் அறிதுயிலமர்ந்த பரமனாகிய அருள்மிகு ஆராவமுதனின் திருவடியைத் தொழுவார்கட்கு வரும் இன்னல் இடுக்கண்களை இப்பிறப்புமட்டுமின்றி எப்பிறப்பிலும் நீங்கும் வண்ணம் ஏரார்கோலம் திகழ எழுந்தளியிருக்கும் ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமியை மனமுருகி வழிபடுபவர்கட்கு அனைத்து நலன்களும் கிடைக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

வட இந்தியாவில் நடக்கும் கும்பமேளாவைப்போல 12 ஆண்டுக்கொருமுறை குருபகவான் சிம்மராசியில் வரும்போது மாசிமாத மக நட்டசத்திரத்தன்று பல லட்சணக்கான மக்கள் இக்குடந்தை நகர் வந்து மகாமகக்குளம், பொற்றாமரைக்குளம் மற்றும் காவிரி நதியில் நீராடி, தங்கள் பாவங்களை போக்கி நற்பயனடைகின்றனர். தங்களிடம் நீராடும் அடியார்களின் பாபங்களைப் போக்க கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதா, கிருஷ்ணா, சிந்து, சரயு போன்ற நதிகளும் மகாமகம் வருவதற்கு ஓராண்டுக்கு முன்பே இத்தலத்தில் வந்து நீராடி இங்குள்ள எம்பெருமானை வழிபட்டு தங்களைப் புனிதர்களாக்கிக்கொள்கிறார்கள் என்பது ஐதீகம்.

பக்தர்களுக்கு அருள்பாலிப்பதில் இந்த எம்பெருமானுக்கு நிகர் இவரே என்பதற்கு சான்றாக இன்றும் இத்திருத்தலத்தில் ஐப்பசி மாத அமாவாசை தினத்தன்று ஸ்ரீ லக்ஷ்மிநாராயண சுவாமி கைங்கர்யம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஸ்ரீலக்ஷ்மி நாராயணன் என்ற ஒருவர் இந்த எம்பெருமானின் ராஜகோபுரம் முதல் பற்பல திருப்பணிகளை பலரிடம் கேட்டு செய்து இறுதியில் திருமணம் ஆகாமலேயே இயற்கை எய்திவிட்டபடியால் அவரது திதியானது (திவசம்) இன்றும் திருக்கோயில் சார்பாக தீபாவளி தினத்தன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அருள்மிகு புத்துமாரியம்மன் திருக்கோயில்

கடலூர் மாவட்டம் - வட்டத்திலுள்ள குறிஞ்சிப்பாடி

அங்கிங்கெனாதபடி எங்கும் பேரோளியாய் விளங்கும் சிவபரம் பொருளுடன் இரண்டறக் கலந்து அவன் அருள் சக்தியாக விளங்கும் அகிலாண்டநாயகி நல்வளம் பொருந்திய நற்றமிழ் நாட்டிலே வெள்ளாறு, தென்பெண்ணை நதிகளுக்கு இடையில், தேவாரத் திருப்பாடல்கள் பெற்ற திருத்தினை நகர், திருத்தில்லை, திருவதிகை, திருப்பாதரிப்புலியூர் முதலிய திவ்விய திருத்தலங்களுக்கு மத்தியில் கடலூரிலிருந்து 37 கிலோ மீட்டர் தூரத்திலும், வடலூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

வரலாறு :

ஜமதக்னி முனிவரின் வேண்டுகோளின்படி மாரியம்மனாக அவதரித்து அருள்பாலித்துவரும் அன்னை பெரிய புற்றின்கண் நாகதேவதையாக தோன்றி, வழிபடும் அடியவர்களின் இன்னல்களை அகற்றி நாகதோஷம் முதலான தோஷங்களை நீக்கி நல்லருள் புரிந்து வாழ்ந்து வருகின்றாள்.

சிறப்பு :

பிரார்த்தனை தலங்களில் சமயபுரம் அம்பாளின் சாயல் உருக்கொண்டு திருவேற்காடு, பெரியபாளையம் அம்பாள் அருள்பாலிப்பதை போலவும், திருமணம் ஆகாத ஆண், பெண்கள் குறிஞ்சிப்பாடி புத்துமாரியம்மன் கோயிலில் வந்து பலன் அடைவதும், புத்திரதோஷம், சர்ப்பதோஷம் ஆகிய தோஷங்களை நீக்கி அருள்பாலித்து வருகின்றாள். ஆடி மாதம் கடைசி வெள்ளி செடல் உற்சவமும், தேரோட்டமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

வெ.இராதாகிருஷ்ணன்
நிர்வாக அதிகாரி



அருள்மிகு வீரட்டானேஸ்வரர் திருக்கோயில்,

திருவதிகை

பண்ருட்டி வட்டம் - கடலூர் மாவட்டம்

(அப்பர் சுவாமிகளின் தமக்கையார் திலகவதி அம்மையார் திருத்தொண்டு செய்த திருத்தலம்)

பழம்பெருமை :

அதிகாபுரி என்று அழைக்கப்பட்ட திருவதிகையில் அமைந்துள்ள இத்திருக்கோயில் அட்டவீரட்டத்தலங்களில் மூன்றாவது வீரட்டமாக விளிங்குகிறது. திரிபுரதகனம் நடைபெற்ற திருத்தலம்.

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே"

என்று பட்டினத்தார் பாடியிருப்பதால் இராமாயண காலத்திற்கும் முதலிலேயே திரிபுரதகனம் நடைபெற்றுள்ளதை அறிமுடிகிறது. இறைவன் பெயர் அருள்மிகு வீரட்டானேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். இறைவி பெயர் அருள்மிகு பெரியநாயகி அம்மன் என்றும் திரிபுரசுந்தரி என்றும் அழைக்கப்படுகிறார்.

சிறப்பு :

இத்திருக்கோயிலில் இரண்டு இராஜகோபுரங்கள் உள்ளன. மூன்று பிரகாரங்களை உடையது. மூலவர் 16 பட்டைகளுடன் கூடிய லிங்க வடிவிலும், சுவாமி அம்மன் திருமணக்கோலக்காட்சியும் கருவறையில் காணப்படுகிறது. தீர்த்த சிறப்பு வாய்ந்த தலம் சிவபெருமான் சூலத்தால் தோற்றவித்த சூலதீர்த்தமும், சக்கரத்தால் தோற்றுவித்த சக்கர தீர்த்தமும் (திருக்குளம்) அமையப்பெற்றுள்ளது. தருமசேனர் என்ற பெயருடன் சமன மதத்தின் தலைவராக இருந்த அப்பர் சுவாமிகள் வயிற்றில் சூலை நோய் ஏற்பட்டு சொல்லென்னா துன்பத்தை அனுபவித்தார், தீர்த்தத்தை அருந்திய அப்பர் சுவாமிகளின் சூலை நோய் அக்கணமே நீங்கியது. அன்றுமுதல் அப்பர் சுவாமிகள் சைவ சமயத்தை தழுவி சைவ சமயம் தழைத்தோங்க அருந்தொண்டு ஆற்றினார்.

மூவரால் பாடல் பெற்றது :

அப்பர், சுந்தரர், சம்மந்தர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட திருத்தலமும், தேவாரத்தின் முதல் பாடலாகிய "கூற்றாயினவாறு விலக்ககலீர்" பாடல் தொடங்கி அப்பர் பெருமானானல் 11 பதிகங்கள் பாடப்பட்ட தலமாகும். மேலும், இத்தலத்தினை அருணகிரியார், வடலூர் இராமலிங்க வள்ளலார், தண்டபாணி சுவாமிகள் ஆகியோராலும் பாடப்பெற்ற தலமாகும். சுவாமி அம்மன் திருமண கோலத்தோடு அருள்பாலிப்பதால் திருமணம் தடைபடுபவர்கள் இத்திருக்கோயிலில் வந்து வழிப்பட்டால் திருமணத்தடை நீங்கும். தீராத வயிற்று வலி உடையவர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து சக்ரதீர்த்தத்தில் நீராடி சுவாமியை வணங்கி சூல தீர்த்தம் அருந்தினால் தீராத வயிற்று வலி நீங்கும் என்பது இன்றளவும் கண்கூடாகக் காணலாம். பக்தர்கள் திருக்கோயிலுக்கு வருகைதந்து அருள்பெற வேண்டுகிறோம்.

க.நாகராசன்
நிர்வாக அதிகாரி



அருள்மிகு சாரநாதப் பெருமாள் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சாரபரமேஸ்வர் திருக்கோயில்

திருச்சேறை-612 605, கும்பகோணம் வட்டம்.

தமிழ்கூறும் நல்லுலகத்தில் சோழ வள நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் கோயில் திருநகரமாம் குடந்தைக்கு தென்கிழக்கே (கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழித்தடத்தில்) 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது

திருச்சேறை என்றழைக்கப்படும் ஸ்ரீ சாரக்ஷேத்ரம் 108 வைணவ திவ்விய தேசங்களில் ஒன்றாகும். இதை பஞ்ச சாரக்ஷேத்ரம் என்றழைப்பர். பஞ்சசாரங்கள் என்பது ஸ்ரீ சாரநாதர், ஸ்ரீ சாரநாயகி, ஸ்ரீ சாரவிமானம், ஸ்ரீ சாரபுஷ்கரணி, ஸ்ரீ சாரஷேத்ரம் ஆகும். இத்திருத்தலத்தில் அருள்மிகு சாரநசதப் பெருமாள் -அஞ்சலட்சுமி சமேதராய் எழுந்தருளி காட்சியளிப்பது மிக முக்கியமானதாகும். இத்திருக்கோயில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது.

சாரபுஷ்கரணியின் தென்மேற்கு மூலையில் தலவிருட்சமான அரசமரத்திற்கு தெற்கில் சிலாரூபிபாய் மாமதலை பிரானாக முதலில் சேவை சாதித்த குழந்தையை அணைத்த வண்ணம் காணப்படுகிறார். பிர்மாவும், மகாவிஷ்ணுவும் மேற்படி சன்னதியில் சேவை சாதித்த வண்ணம் சிலாரூபியாக உள்ளனர்.

இத்திருக்கோயில் பாஞ்சராத்திர ஆகம முறைப்படியும், தென்ஆச்சாரிய சம்பிரதாயப்படியும் தினசரி பூஜை காரியங்களும், திருவிழாக்களும் நடைபெற்று வருகிறது. வைணவ திருத்தலங்களில் தைப்பூசப் பெருவிழா நடைபெறும் ஒரே தலம் இதுவேயாகும். தைப்பூசத்தன்று திருத்தேரோட்டம் நடைபெறுவது மிக முக்கிய அம்சமாகும். திரு அத்யாயன உற்வசம், வைகுண்ட ஏகாதசி, மணவாள மாமுனிகள் சாற்று முறை உற்சவம் மற்றும் ஏனைய வைணவ விழாக்களும் நடைபெற்று வருகிறது.

அருள்மிகு சாரபரமேஸ்வரர் திருக்கோயில் : இத்திருக்கோயிலின் ஈசான்யத்தில் செந்நெறியப்பர் என்ற பெயரில் அருள்மிகு சாரபரமேஸ்வரர் எழுந்தருளியுள்ளார். தேவார திருப்பதிகங்கள் பெற்ற 274 திருத்தலங்களில் இதுவும் ஒன்றாகும். மூவரால் பாடல்பெற்ற தலமாகும். சூரிய பகவான் ஆண்டுதோறும் மாசி மாதத்து 13, 14, 15 தேதிகளில் காலையில் சூரியனது கிரணங்கள் இத்தலத்து இறைவன் மீது முழுமையாகப் படுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இத்திருக்கோயில் தனி சன்னதி கொண்டு ஆறு கால பூஜையுடன் எழுந்தருளியுள்ள ருண விமோசன லிங்கேஸ்வரர் (கடன் நிவர்த்தீஸ்வரர்) நமது வாழ்க்கையில் படுகின்ற கடன்கள் மற்றும் நமது முன்னோர்களால் செய்ய முடியாமல் விடுபட்ட நிவர்த்தி கடன்களையெல்லாம் நிவர்த்தி செய்து வைக்கின்ற கண் கண்ட தெய்வமாய் அருள்புரிந்து வருகிறார். இவருக்கு 11 திங்கட்கிழமைகள் தொடர்ந்து அர்ச்சனை செய்து வந்தால் கடன்கள் நிவர்த்தியாகும் என்பது கண் கண்ட உண்மையாகும்.

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் (ஸ்ரீராகுஸ்தலம்)

திருநாகேஸ்வரம் - 612 204.

கும்பகோணம் வட்டம்-தஞ்சாவூர் மாவட்டம்

இத்தலம் தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில், காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள சிவத்தலம். இது நவக்கிரகத் தலங்களில் ஸ்ரீ ராகுஸ்தலமாக விளங்குகின்றது. கும்பகோணம் - காரைக்கால் சாலையில் கும்பகோணத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இத்தல புராணம் வடமொழியில் பௌடிக புராணத்தில் உள்ளது. அப்புராணம் இத்தலப் பெருமானை நந்தி தேவர், ஆரியன், சந்திரன், இந்திரன் முதலிய தேவர்களும், கௌதமர், பராசரர், வசிட்டர் முதலான முனிவர்களும், சித்திர சேனன், நளன், சம்புமாலி முதலிய மன்னர்களும் வழிபட்டு நலம் பெற்றனர் எனக் கூறுகிறது. இத்தலப் பெருமான் செண்பகவனத்தில் எழுந்தருளியிருந்தார். அப்பெருமானை சாகமன்னர்களான ஆதிசேடன், தக்கன், கார்க்கோடகன் ஆகியோரும் ஐந்தலை அரவமாகிய இராகு பகவானும் வழிபட்டதால் இத்தலம் நாகேச்சரம் எனப் பெயர் பெற்றது. தேவார ஆசிரியர் மூவராலும் பாடல் பெற்றதால் திரு என்னும் அடைமொழி சேர்ந்து திருநாகேச்சரம் எனப் பெயர் பெற்றது. இத்திருக்கோயிலை 10-ம் நூற்றாண்டில் கண்டராதித்த சோழன் கற்றளியாக்கினான். 12-ஆம் நூற்றாண்டில் அநபாயச் சோழ மன்னனின் முதலமைச்சராக விளங்கி, பெரிய புராணம் அருளிய தெய்வச்சேக்கிழாரின் ஆன்மார்த்த தலமாக விளங்கியதால், அவரால் திருப்பணிகள் பல செய்யப் பெற்று திருக்கோயில் விரிவிடைந்தது. அதன் பின்னர் 16-ஆம் நூற்றாண்டில் தஞ்சை ஆண்ட அச்சுதப்ப நாயக்கரின் முதலமைச்சர் கோவிந்த தீட்சதர் இத்திருக்கோயிலின் அலங்கார மண்டபத்தை எடுப்பித்தார்.

தல இறைவர் : செண்பகாரண்யர், நாகேச்சுரர், இறைவி : கிரிகுஜாம்பிகை, பிறையணியம்மை
தீர்த்தம் : சூரிய தீர்த்தம், தல விருட்சம் : செண்பகமரம்.

ஸ்ரீராகுஸ்தலம் :

இத்தலப் பெருமானை நவகோள்களில் ஒருவரான ராகுவழிபட்டுத் தன் சாப நீக்கம் பெற்றதால், ராகு பகவான் இத்தலத்தில் நிருதி மூலையில் தன்னிரு தேவியருடன் மங்கள ராகுவாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றார்.

திருஞானசம்பந்தர் திருநாகேச்சரத்துப் பெருமானை நாளும் வழிபட்டால், வழிபடுவோர்க்கு நட்சத்திரங்களாலும் கிரகங்களாலும் உள்ள தீங்குகள் நீங்கி நலமாக அமையும் என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள் என உறுதி கூறியுள்ளார்.

நாள்தோறும் உலகின் பல பாகங்களிலிருந்து மக்கள் வந்து வழிபட்டு கிரக தோஷங்கள் தீமையினின்று விடுபட்டு நலன் பெற்றுள்ளனர். சிறப்பாக இராகு தோஷம் உடையவர்கள் நாகதோஷம், புத்திர தோஷம், கள்திர தோஷம், மாங்கல்ய தோஷம் ஆகியவை நீங்கி நலம் பெற, இராகு பகவானுக்குப் பால் அபிஷேகம் இராகு கால வேளையில் செய்து நலம் பெற்று வருவது கண்டுகூடு.

திருக்கோயில் முகவரி :

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் (ஸ்ரீராகுஸ்தலம்)
திருநாகேஸ்வரம் - 612 204.
கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்,
போன் : 0435 - 2463354



அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

சுவாமிமலை

கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

அருள்மிகு முருகப் பெருமான் திருவருள் பாலித்திருக்கும் அறுபடை திருத்தலங்களுள், சுவாமிமலை நான்காவது படைவீடாகும். இது திருவேரகமென்று சிறப்பு பெயர் பெற்று, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்பு பெற்று விளங்குகிறது.

பிரபவ முதல் அட்சய ஈறாக அறுபது ஆண்டு தேவதைகளும், அறுபது படிகளாக அமையப்பெற்ற திருத்தலம். தந்தையாகிய சிவபெருமானுக்கு ''ஓம்'' என்னும் பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்து, சிவகுருநாதனாக விளங்கும் சிறப்பு பெற்ற திருத்தலம். நக்கீரரால் திருமுருகாற்றுப்படையிலும், அருணகிரிநாதரால் திருப்புகழிலும் பாடப்பெற்றுள்ளது.

இத்தலத்து முருகவேள் வேண்டுவோர்க்கு வேண்டுவன அருளும் கருணாமூர்த்தியாக விளங்கி வருகிறார். இத்திருக்கோயிலில் ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. கிருத்திகை நாட்கள், கந்த சஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

இத்திருத்தலத்தில் சேவார்த்திகளுக்காக குடிநீர், தங்கும் வசதி, திருமண மண்டபங்கள், விருந்து மண்டபம் ஆகியவை போதிய வசதிகளுடன் செய்து கொடுக்கப்படுகிறது.

இத்திருத்தலம் கும்பகோணத்திலிருந்து மேற்கே 8 கிலோ மீட்டர் தொலைவிலும், தஞ்சாவூரிலிருந்து 35 கிலோ மீட்டர் கிழக்கிலும் அமைந்துள்ளது. பேருந்து மற்றும் இரயில் வசதிகள் உள்ளன. இத்திருக்கோயிலில் உபய அபிஷேகங்கள், சண்முகார்ச்சனை, திரிசதை அர்ச்சனை தங்கரத புறப்பாடு, காவடி போன்ற பிரார்த்தனைகள் சிறப்பாக செய்து தரப்படுகின்றன. இத்தலத்தில் நாள்தோறும் வெளியூர்களிலிரந்து வரும் 100 சேவார்த்திகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கப்பட்ட அன்னதானத் திட்டத்தின் கீழ் தினசரி மதியம் அன்னதானம் வழங்கப்படுகிறது.

உபய அபிஷேகங்கள் செய்வோர் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

உதவி ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்
சுவாமிமலை - 612 302
தஞ்சாவூர் மாவட்டம்.
தொலைபேசி : 0435 - 2454421

சுவாமி மலைக்கு வாருங்கள். ஸ்ரீ சுவாமிநாதப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராக வேண்டுகின்றோம்.

செ.தனபாண்டியன் பி.எஸ்.சி., பி.எல்.,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

க.இராஜநாயகம் பி.ஏ., பி.எல்.,
தக்கார் / இணை ஆணையர், மயிலாடுதுறை

கும்பகோணம் வட்டம், நாச்சியார் கோயில்,
அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில்
(கல்கருட பகவான் திருத்தலம்)

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் நாச்சியார்கோயில், அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில் கி.பி.5-ம் நூற்றாண்டில் கோச்செங்கணான் என்னும் சோழ மன்னரால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும். 108 திவ்ய தேசத்தில் 14-வது தேசமாகும். திருவேங்கட திருப்பதிக்கு இணையானதும் பிரசித்திபெற்ற பிரார்த்தனை திருத்தலமுமாகும். இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கல்கருட பகவான் மிகவும் பிரசித்தமானவர். மூர்த்தி, தலம், தீர்த்தம் சிறப்புடையது. திருமங்கையாழ்வாரால் 100 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருக்கோயிலாகும். அரசலாற்று மற்றும் திருமலைராஜன் நதிகளுக்கு இடையே நறையூர் என்னும் ஊரில் அமைந்துள்ளது.

தற்போதும் மூலஸ்தானத்தில் ஸ்ரீ பெருமாள் தாயார் திருக்கல்யாண கோலத்தில் காட்சியளிப்பதை நாம் காணலாம். மேலும் திருக்கல்யாணத்தை நடத்தி வைத்த ஸ்ரீ பிரம்மனும் ஸ்ரீ பெருமாளின் வியூகங்களான ஸ்ரீ அனிருத்தன், ஸ்ரீ பிரத்யும்னன், ஸ்ரீ சங்கர்ஷன் மற்றும் ஸ்ரீ பலராமனும் நமக்குக் காட்சியளிக்கிறார்கள்.

ஸ்ரீ பெருமாளும், தாயாரும் நமக்கு திருக்கல்யாண கோலத்தில் காட்சியருள்பவராக மட்டுமே இருக்க ஸ்ரீ பெருமாள் தாயார் திருவுளப்படி ஸ்ரீ கல்கருட பகவான் இத்திருக்கோயிலில் தனி சன்னதி கொண்டு ஆறுகால பூஜையுடன் திருமேனியில் நவசர்பங்கள் தரிசித்து நவக்கிரக தோஷங்களை நிவர்த்திக்கும் பிரார்த்தனாவாதியாய் கண்கண்ட தெய்வமாய் அருள்புரிந்து வருகிறார். ஆண்டுக்கு இரண்டுமுறை பிரமோற்சவத்தில் நான்காம் நாள் திருவிழாவாக நடைபெறும் இவரது வீதியுலா புறப்பாடு உலகப்பிரசித்தி பெற்ற ''கல்கருட சேவை'' தரிசிப்பது பெரும்பேறாகும்.

அருள்மிகு கல்கருட பகவானுக்கு 7 வார அர்ச்சனை கட்டணம் ரூ.105

பக்தர்கள் அனைவரும் தொடர்ந்து ஏழு வியாழக்கிழமைகள் அர்ச்சனை செய்து ஏழாவது வாரம் அமிர்தகலசம் செய்விக்க பிரார்த்தனைகள் (திருமணத்தடை, குழந்தை பாக்கியம், உத்தியோகம், தொழில் அபிவிருத்தி) நிறைவேறும் என்பது கண்கண்ட உண்மை. நேரில் வர இயலாதவர்கள் ரூ.105/- அலுவலகத்தில் செலுத்தியோ அல்லது M.O. மூலம் அனுப்பினால் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

<u>தொகை அனுப்ப வேண்டிய முகவரி</u>

செயல் அலுவலர்,
அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோவில்
நாச்சியார்கோவில்-612 602. கும்பகோணம் வட்டம்.

அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்

கரம்பயம் - 614 626, பட்டுக்கோட்டை வட்டம்

ஸ்ரீ மாயமாதேவி என்னும் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் பட்டுக்கோட்டை தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் பட்டுக்கோட்டையிலிருந்து வடக்கே 8வது கிலோ மீட்டர் தொலைவில் எழில்மிகு கரம்பயம் என்னும் அழகிய கிராமம் உள்ளது. இத்தலம் ஜீவன் முக்தி தலங்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயில் பன்னெடுங்காலமாக ஸ்ரீ மாயமாதேவி என சிறப்பு வாய்ந்த தெய்வ பிரார்த்தனை ஸ்தலமாக விளங்கி வந்துள்ளது.

வீரமாநகர் என்னும் பட்டுக்கோட்டையில் பட்டு மழவராயன்கோட்டை கட்டி ஆண்டு வந்தார். அவரது உறவினர் ஒருவர் கல்லும் கரம்பையுமாக கிடந்த இடத்தை வசப்படுத்தி கோட்டை கட்டி ஆண்டு வந்தார். அவருடைய பண்ணையில் இருந்து கரம்பை வழியாக தினமும் ஆவின் பாலை வேறூருக்கு கொண்டு செல்வது வழக்கம். ஒரு நாள் அம்பாள் எழுந்துள்ள இடம் வந்ததும் கால்தவறி பாலைக் கொட்டிவிட்டான். வருத்தத்துடன் வீடு திரும்பிவிட்டான். மறுநாள் வழக்கம் போல் பால் கொண்டு வந்தான். அந்நாளும் சென்ற நாளைப்போல பாலைக்கொட்டிவிட்டான். அன்றும் வருத்தத்துடன் வீடு திரும்பிவிட்டான். மூன்றாம் நாள் பால் கொண்டு வரும்போது முந்தை நாட்களில் நடந்தது போன்றே நடந்தது. உடனே அந்த யாதவன் ஆத்திரத்தில் மண் வெட்டியைக் கொண்டு கால் இடறிய இடத்தை வெட்டினான். அவ்விடத்திலிருந்து இரத்தம் பீறிட்டு எழுந்தது. அவனது மெய்யெல்லாம் செம்முத்துக்கள் போன்று படிந்தது. வெட்டும்போது கல்லில் வெட்டுவது போன்று ஒலி கேட்டது. மீண்டும் வெட்டினான். உடனே செம்முத்துக்கள் போன்ற இரத்தம் அந்த யாதவன் உடம்பெல்லாம் தற்காலத்தில் மக்கள் அழைக்கும் அம்மை நோயாக மாறிவிட்டது. அம்மையின் வெம்மை தாங்கமுடியாது யாதவன் பெருங்குரலில் கதறினான். மக்கள் கூட்டம் பெருந்திரளாக வந்து அவனையும் அவன் வெட்டிய இடத்தையும் கண்டனர். உடனே அவ்வூர் தலைவர் சில ஆட்களை கொண்டு கீழே இருந்த கல்லை தோண்ட அது ஒரு சிலையாகக்காட்சி அளித்தது. அந்த சிலைதான் தற்சமயத்தில் கரம்பயத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன்.

தலைவரின் கட்டளையினால் தோண்டி எடுக்கப்பட்ட அம்மன் சிலையை முழுவதும் மேலே எடுக்க முடியாமல் திகைத்ததினால், மேற்படி சிலை சுத்த சுயம்பு என தெரியப்பட்டதினால் அத்தலைவர் அதே இடத்தில் வைத்து ஒரு கொட்டகை அமைத்து அதற்குரிய சடங்குகளை செய்து யாதவனின் உடம்பெல்லாம் முத்துக்களைத் தெளித்த சிலைக்கு ''முத்துமாரி'' என்று பெயர் சூட்டி ஊர் மக்களையும் வணங்கும்படி செய்துவிட்டு, அந்த யாதவனை அவனது இல்லத்திற்கு அனுப்பி வைத்து விட்டு இரவு தன் வீடு சென்று உணவு அருந்திப் படுக்கைக்கு சென்றார். இரவு அவரது கனவில் அம்பாள் தோன்றி யாதவன் என்னிடம் அறிவற்ற தன்மையில் நடந்து கொண்ட காரணத்தால் நாம் அவனை திருத்துவதற்காக அவன் பேரில் முதுக்களை வீசியுள்ளோம். ஐந்து தினங்களில் அவன் தன்னிலை அடைவான். நன்னிலையானவுடன் அதே ஞாயிறு நமது சன்னதியில் வந்து நம்மை வணங்கிச்செல்லும்படியாகச் செய்தால் எல்லாவித நன்மைகளையும் பெற்று இம்மையிலும், மறுமையிலும் எல்லாவித யோகங்களையும் பெற்று வாழ்வான் என்று கூற கண்விழித்த தலைவர் இச்செய்தியை ஊர்மன்றத்தில் தெரிவித்து அந்த யாதவனை அம்பாள் கூறியபடி ஞாயிறு அன்று அம்பாள் சன்னதிக்கு அழைத்துச்சென்று அவனுக்கு ஏற்பட்ட சலனத்தை போக்கி அம்பாளின் விபூதி குங்கும பிரசாதத்தை வழங்கி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்த நாள் பங்குனி மாதமாகும். அந்த காரணத்தினால்தான் இவ்வூர் அம்பாளுக்கு ஒவ்வொரு பங்குனித்திங்களிலும் உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு பக்த கோடிகளுக்கு மகிழ்வூட்டும் வண்ணம் அம்பாள் 12 தினங்கள் திருவுலா வந்து அருள் பாலிக்கின்றாள்.

அருள்மிகு ஆதிகும்பேஸ்வரசுவாமி திருக்கோயில்

கும்பகோணம்

அன்னை தமிழ்நாட்டில் தென் பகுதியில் கவின்மிகு தலைநிமிர் வானுயர் கோபுரங்களும் கலைவளம் நிலைநாட்டும் சிற்பங்களும் நிறைந்த திருக்கோயில்களும் நிறைந்தது குடந்தை. காவிரியும் அரிசில் ஆறும் மாலையிட்டு கண்ணின் மணியாகும் பாவையாய் நின்று எழில் கொழிக்கும் குடந்தை திருநகரின் மையப்பகுதியில் அமைந்து அருள்வழங்கும் திருக்கோயில்தான் இத்திருக்கோயில். சிவனார்தம் கரத்தினால் சிருட்டிக்கப்பட்டமையால் தலச்சிறப்பு அவரே மூலவர், வாணவர், மன்னவர் என யாவரும் பூசித்திருப்பதால் மூர்த்தி சிறப்பு, மூவுலகத்திலும் உள்ள புண்ணிய தீர்த்தங்கள் யாவும் ஒருசேரவந்து நீராடும் காரணத்தினால் தீர்த்தச்சிறப்பு ஆகிய முச்சிறப்புகளும் ஒருங்கே பொருந்தியது.

இத்திருக்கோயில் நகரில் மையப்பகுதியில் சூரியன் உதிக்கும் திசைப்பார்த்து 9 கண்களைக் கொண்ட இராஜகோபுரத்துடனும் மூன்று பிரகாரங்களுடனும் சிறப்புடன் விளங்குகிறது.

இறைவன் : அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர்

உலகிற்கு ஆதிகாரணமாகிய பராபரம் கும்பத்தில் இருந்து தோன்றியதால் ''ஆதிகும்பேஸ்வரர்'' என்றும் அமுதத்தில் உறைந்நததால் அமுதேசர் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் சுயம்பு மூர்த்தி. இவர் உயிர் படைப்பின் தொடக்கமானவர் என்பதாலும், படைக்கப்பட்ட, படைக்கப்படுகின்ற ஒவ்வொரு மனிதனும், மனித உயிர்களும், வாழ்நாளில் ஒரு முறையேனும் இம்முழு முதற்கடவுளை தரிசித்தல் பிறவிப் பெறும் பயனாகும்.

இறைவி : மந்திரபீடேஸ்வரி அருள்மிகு மங்களாம்பிகை

தம்மை அன்போடு தொழுவோர்க்கு திவ்யமங்களத்தை வாரிவழங்கும் மாட்சிமையால் ''மங்களநாயகி'' என்றும், சக்தி பீடங்களுள் ஒன்றாக விளங்குவதால் மந்த்ரபீடேஸ்வரி எனவும், தம்மை அன்போடு வணங்குவோருடைய நோய்களை போக்கச் செய்வதால் நோயறுக்கும்பரை என்ற பெயரும் வழங்கப்படுகிறது. 12 ஆண்டுகளுக்கொருமுறை குரு சிம்மராசியிலும், சூரியன் கும்ப ராசியில் வரும் மாசிமாத பௌர்ணமி நன்னாளில் வரும் மகாமகப் பெருவிழாவின் பன்னிரு சிவதிருக்கோயில்களில் இத்திருக்கோயில் முதன்மை திருக்கோயிலாகும். ஆறுமுகமும், ஆறு திருக்கரங்களும் கொண்ட அருள்மிகு கார்த்திகேயப்பெருமான் இத்திருக்கோயிலில் தனிச் சன்னதியுடன் விளங்குகிறார். அது சித்தர்கள் 64ல் முதன்மையானவரான கும்பமுனி சித்தர் ஜீவசமாதியாக அடங்கி அருள்நிலை சக்தியாக ஜீவதுடிப்புடன் இத்திருக்கோயிலில் விளங்குகிறார்.

இத்திருக்கோயிலில் தினசரி ஆறுகால பூஜைகள் சிறப்புடன் செய்விக்கப் பெறுகின்றது. நவராத்திரி, மாசிமகம், தெப்பம், சப்தஸ்தானம், திருக்கல்யாணம் போன்ற பெருந்திருவிழாக்களும் நடைபெறுகின்றன. இத்திருக்கோயில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் ஆகியோரால் பாடல் பெற்றுள்ளது.

தல விருட்சம்	:	வன்னி
தீர்த்தம்	:	1. மங்கள கூபம்
		2. குர தீர்த்தம்
தல மூர்த்தி	:	அருள்மிகு கிராதமூர்த்தி

மேலும் இத்திருக்கோயிலில் கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கருங்கல் நாதஸ்வரம் ஒன்றும் உள்ளது.

அ. இராமச்சந்திரன் எம்.ஏ., பி.எட்.,
செயல் அலுவலர்

தி. சுவாமிநாதன் பி.ஏ., பி.எல்.,
தக்கார் / துணை ஆய்வாளர்

அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோவில்

(ஸ்ரீ துர்க்காம்பிகை ஸ்தலம்)

பட்டீஸ்வரம் - 612 703. (கும்பகோணம் தாலுக்கா)

காவிரித் தென்கரைத் தல வரிசையில் 23வது திருத்தலம். காமதேனுவும் அவள் மகள் பட்டியும் வழிபட்டது. இராமபிரான் சாயாஹத்தி தோஷம் நீங்க வழிபட்டது. விசுவாமித்திரருக்கு காயத்திரி சித்திக்கப்பட்டது. ஞானசம்பந்தருக்கு முத்துப் பந்தல் வழங்கப்பெற்றது. நந்தி விலகியது. சோழர்களின் வெற்றி திருமகுடம். வடக்கு வாயில் ஸ்ரீ துர்க்காம்பிகை, விஷ்ணு துர்க்கை, துர்கா லெட்சுமி ஆவாள். வேண்டுவன நல்கும் பூலோகத்தின் கற்பக விருட்சம், இராகுக்கு அதிதேவதை துர்க்கை. இராகுதோஷம் நீங்க ஸ்ரீ துர்க்காம்பிகையை வழிபடுவது சாலச் சிறந்தது.

இத்திருத்தலம் கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

பேருந்து வழித்தடம்: 8, 11, 25, 52, 61, 67

கட்டளை அர்ச்சனை விவரம்

நிரந்தர நித்தியாராதனை கட்டளை அர்ச்சனை ரூ. 1000/-
மாதாந்திர ஜென்ம நட்சத்திர கட்டளை அர்ச்சனை ரூ. 150/-
நிரந்தர அன்னதானக் கட்டளை ரூ.15,000/-

அபிஷேகக் கட்டணம் ரூ.225/- (சாமான்கள் உள்பட)
சகஸ்ரநாம அர்ச்சனை ரூ.75/-
நெய் / எண்ணெய் / எலுமிச்சை விளக்கு 1 க்கு ரூ.1.50/-

Executive Officer
Sri Dhenupureswarar Temple
PATTEESWARAM PO. 612 703. Kumbakonam T.K. Thanjavur Dt.,
Ph:0435-2416976

S.ஜெயராமன் M.A., B.L.,
தக்கார்/உதவி ஆணையர்
இ.ச.அ.நி.ஆ.துறை
கும்பகோணம்

பெ.மோகன்தாஸ் B.A., B.G.L.,
செயல் அலுவலர்

அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில்

ஒப்பிலியப்பன் கோவில்

கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருத்தலம் 108 திவ்ய தேசங்களில் 13வது திவ்ய தேசமாகும். இந்த திவ்ய தேசம் பூலோக வைகுந்தம், தென்திருப்பதி என அழைக்கப்படும் சிறப்பு பெற்றது. இத்தல இறைவன் திருப்பதி பெருமாளுக்குத் தமையனார். அதனால் அவரது பிரார்த்தனைகளை இத்தலத்தில் செலுத்தலாம். இந்தத் தலத்தில் திருமஞ்சனம், திருக்கல்யாணம், கருடசேவை, தங்கரத உலா போன்ற பிரார்த்தனை உற்சவங்களை நிகழ்த்தி தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றுகிறார்கள். இப்பெருமான் திருவீதிப்புறப்பாட்டின்போது தனியாக செல்வது இல்லை. தாயாருடன் சேர்ந்துதான் செல்வார். தாயாருக்குத் தனி சன்னதி கிடையாது.

ஒவ்வொரு மாதமும் பெருமாளின் அவதார தினமாக சிரவணத்தன்று சிரவண தீபம் எடுத்து வலம் வரும்பொழுது பக்தர்களுக்கு அருள்வாக்கு கூறப்படுகிறது. 108 திவ்ய தேசங்களுள் இங்கு மட்டும்தான் பெருமாளுக்கு உப்பில்லாத நிவேதனம் செய்யப்படுகிறது. இதனால் இத்தல இறைவனுக்கு ''உப்பிலியப்பன்'' என்றும், இத்தல இறைவனுக்கு நிகரான வேறு தெய்வங்கள் இல்லை என்று நம்மாழ்வார் அருளியதால் ''ஒப்பிலியப்பன்'' என்றும் சிறப்புடன் வழங்கப்படுகிறது.

இத்திவ்யதேசத்தை நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ள இத்திருக்கோயிலில் நாள்தோறும் ஆறுகால பூஜை நடைபெற்று வருகிறது. இத் திருத்தலத்தில் ஆண்டு முழுவதும் பல்வேறு திருவிழாக்கள், உற்சவங்கள் நடைபெற்று வருகிறது. நாள்தோறும் ஆயிரக்கணக்கன பக்தர்கள் வந்து இத்தலபெருமானை தரிசித்து செல்கிறார்கள்.

இத்தலம் கும்பகோணம் - காரைக்கால் சாலையில் கும்பகோணத்தில் இருந்து 6 கி.மீ. தொலைவில் திருநாகேஸ்வரத்தில் இருந்து தெற்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதிகளும், தங்கும் வசதிகளும் உள்ளன.

அருள்மிகு ஸ்ரீசக்கரபாணி சுவாமி திருக்கோவில்

கும்பகோணம்

கோயில்கள் நிறைந்த குடந்தை மாநகரில் காவிரியின் தென்கரையில் திருமழிசை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்ய பெற்ற திருக்கோயிலாகவும் இந்திய துணைக்கண்டத்தில் ஸ்ரீ சக்கரராஜனுக்கு என்று அமைந்த ஒரே தனிக்கோயிலாகவும் விளங்குகின்றது.

ஸ்ரீ சக்கரபாணி மூன்று கண்களுடனும் அக்னிமயமான கேசத்துடனும் (சுதர்சன வல்லி சமேதராக) ஸ்ரீ சுதர்சன சக்கரம் பின்னால் விளங்க ஸ்ரீ சுதர்சனவல்லி தாயார் உடன் இருந்து அருள்காட்சி தருகின்றார். கருவறையில் இத்தலத்தில் வழிபட்ட பிரம்மா, சூரியன், அகர்புத்னிய மகரிஷி அக்னி பகவான், மார்க்கண்டேய மகரிஷி ஆகியோரும் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளனர். கருவறையை ஒட்டிய உள் திருச்சுற்றில் விநாயகப் பெருமானும் வடகிழக்கு மூலையில் பஞ்சமுக ஆஞ்சநேயரும் எழுந்தருளியுள்ளனர். கோட்டத்தில் தெற்கில் ஸ்ரீ லட்சுமி நரசிம்மன் சிறப்புற அமைக்கப் பெற்றுள்ளார். கிழக்கு தோட்டத்தில் லட்சுமி நாராயணரும் வடக்கில் வைகுண்டநாதரும் அமையப்பெற்றுள்ளனர்.

ஸ்ரீ சக்கரபாணி சன்னதிக்கு வடபக்கம் ஸ்ரீ விஜயவல்லித்தாயார் சன்னதி மாடக்கோயில் அமைப்புடன் கருவறை முன்மண்டபம் அர்த்த மண்டபம், மகா மண்டபம் அமைப்புடனும் தனிதிருச்சுற்று ஒன்றுடனும் சிறப்புற அமையப் பெற்றுள்ளது.

தலமூர்த்தி பெருமை :

கோள்களின் நாயகன் சூரியன். சூரியன் இத்தலத்து மூர்த்தியிடம் சரணாகதி அடைந்ததால், நவகோள்களால் வரும் துன்பங்களும் சகல தோஷங்களும் இத்தலத்து மூர்த்தியை வழிபட விலகுகின்றன. ஏழரை சனி - அஷ்டமத்து சனி, ராகு தசை மற்றும் ராகுபுத்தி கேது தசை மற்றும் கேதுபுத்தி இவைகளால் அல்லல் உறுபவர்கள் இத்தலத்தில் வந்து இறைவனை வழிபடின் இன்னல்கள் விலகப்பெறுகிறார்கள்.

இந்தக் தலத்தில் நியமத்துடன் திருச்சுற்று (பிரதட்சனம்) செய்பவர் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர். திருமண பாக்கியம், புத்ரபாக்யம் பெறவும், நோய்கள் நீங்கிய நல்வாழ்வு வாழவும் இத்தலத்தில் திருச்சுற்று செய்து நெய் விளக்கிட்டு வழிபடுவது சாலவும் சிறந்தது.

முக்கண் முதல்வனாக இறைவன் இத்தலத்தில் எழுந்தருளியிருப்பதால் இறைவனுக்குப் புஷ்பம், துளசி, குங்கும அர்ச்சனையுடன், வில்வ அர்ச்சனையும் செய்யப்படுகின்றது. இம்மூர்த்தியைச் சூரியன், பிரமன், மார்க்கண்டேய மகரிஷி அகர் புத்னிய ரிஷி அக்னி பகவான் அஷ்டதிக்கு பாலகர்கள் முதலியோர் வணங்கி அருள் பெற்றுள்ளனர் பிரார்த்தனை சுதர்சனஹோமம் இத்தலத்தில் செய்வது மிகவும் நலத்தைக் கொடுக்கின்றது.

அருள்மிகு இராமசாமி திருக்கோயில்

கும்பகோணம் நகர் - வட்டம்

தஞ்சாவூர் மாவட்டம்

கும்பகோணம் நகர் அருள்மிகு இராமசாமி திருக்கோயில் கி.பி.1620-ம் ஆண்டு ரகுநாத நாயக்க மன்னர் அவர்களால் கட்டப்பட்டதாகும்.

இத்திருக்கோயில் கும்பகோணம் நகரில் உள்ள வைணவத் திருக்கோயில்களுள் மிக முக்கியமான ஒன்றாகும். இத்திருக்கோயிலின் முன் முகப்பு மண்டபத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த கற்தூண்கள் காண்போர் மனதைக் கவரும் வண்ணம் அமைந்ததாகும்.

மூல மூர்த்தியாகிய ஸ்ரீஇராமபிரான் சீதா தேவியுடன் ஏக சிம்மாசனத்தில் அமர்ந்த நிலையில் இளையபெருமாள் லக்ஷ்மணன் கோதண்டத்தையும் தாங்கியபடியும், பரதன் குடை பிடிக்க, சத்துருக்குனன் சாமரம் வீச, அனுமான் ஒரு கையில் இராமாயண புத்தகம் தாங்கி மறு கையில் வீணை கொண்டு சுந்தரகாண்டம் பாராயணம் செய்யுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது மிகவும் அரிதான ஒன்றாகும்.

இத்திருக்கோயில் மகாமகத்திருவிழாவில் பங்கு கொள்ளும் ஐந்து வைணவத் திருத்தலங்களில் மிக முக்கிய ஒன்றாகும். ஸ்ரீஇராமநவமி பிரம்மோற்சவ திருவிழா இத்திருக்கோயிலின் மிக முக்கிய திருவிழாவாகும்.

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்
விழுப்புரம் நகர், விழுப்புரம் வட்டம்

தல குறிப்பு :

இறைவன் பெயர்	- அருள்மிகு கைலாசநாதர்
இறைவி	- பிரஹந்நாயகி என்கிற பெரியநாயகி
தலவிருட்சம்	- நாகலிங்கம்
பூஜை	- காமிக ஆகம முறைப்படி நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

இருப்பிடம் :

இத்திருக்கோயில் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகரில் ஈசான்ய பாகத்தில் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கிழக்காக 0.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

அமைப்பு :

இத்திருக்கோயில் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பு முதலாம் இராஜ இராஜ சோழ மன்னரால் கட்டப்பட்டு விஜய நகர மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டதும் மிகவும் பழமை வாய்ந்ததும் ஆகும். இத்திருக்கோயிலின் முன் மண்டபம் 40 கல்தூண்களை கொண்டு சோழர்கால பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் இராஜகோபுரம் மேற்கு புறமாக அமைந்து நுழைவு வாயிலாக இருந்து வருகிறது.

திருக்கோயிலின் வரலாற்று சிறப்பு :

இத்திருக்கோயில் மிகவும் பழமை வாய்ந்த சிவத்தலமாகும். விழுப்புரத்தில் உள்ள கல்வெட்டுகளில் விழுப்புரம் நகர் அருள்மிகு கைலாசநாதர் கோயிலில் உள்ள கல்வெட்டுகளே அதிகமாகும். இத்திருக்கோயிலில் 29 கல்வெட்டுகள் உள்ளன. இந்த நகரம் கி.பி.1265 முதல் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலம் முதலாக விழுப்புரம் என்ற பெயரில் வழங்கி வருகிறது. இதற்கு முன்பாக இவ்வூர் வடமொழியில் கஜேந்திரபுரம் என அழைக்கப்பட்டதாகவும், தமிழில் வேழபுரம் எனவும் பிற்காலத்தில் அது மருவி விழுப்புரம் என வழங்கப்படுவதாகவும் அறிஞர்கள் கருத்து.

ஆலயத்தின் சிறப்பு :

இத்திருக்கோயிலில் மூலவர் கிழக்கு நோக்கியும் அம்பாள் மேற்கு நோக்கியும் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். இத்திருத்தலத்தில் வழிபட்டு செல்வோருக்கு சகல தோஷங்கள் மற்றும் திருமண தடைகள் நீங்குவதுடன், வியாபார விருத்தி, நீண்ட ஆயுள், உத்யோக சிக்கல்கள் நீங்குதல் முதலிய நற்பலன்கள் ஏற்படுகின்றன.

நிர்வாகம்:

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

அருள்மிகு பாஸ்கரேஸ்வர சுவாமி திருக்கோயில்

பரிதியப்பர் கோவில் - 614 904.

(பித்ருதோஷ பரிகார ஸ்தலம்)

சுவாமி : அருள்மிகு பாஸ்கரேஸ்வரர், பரிதியப்பர்

அம்பாள் : அருள்மிகு மங்களாம்பிகை

ஊர் : பரிதியப்பர் கோவில் (பரிதி நியமம்)

தீர்த்தம் : சூரிய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி, கழங்குழி

ஸ்தல விருட்சம் : அரசு

பாடல். திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றது, மற்றும் நால்வரால்பாடல் பெற்ற ஸ்தலங்களில் 101வது ஸ்தலம்.

உற்சவம் : பிரமோற்சவம் 10 நாட்கள் பங்குனி உத்திர திருவிழா நடைபெறும். எட்டுக்குடி எண்கண் சிக்கல் ஆகிய திருமுருகன் ஸ்தலங்களுக்குச் சமமாக பங்குனி உத்திரம் உற்சவம் சிறப்பாக நிகழ்கிறது.

திருக்கோயிலை நிர்மாணித்தவர் : ஸ்ரீ ராமருடைய முன்னோர்களான சூரிய குலத்தில் தோன்றிய சிபி சக்ரவர்த்தி ஆவார்.

நாடு : இத்திருக்கோயில் தஞ்சாவூர் மாவட்டம், கீழ்வேங்கை நாட்டாருக்குச் சொந்தமானது.

ஸ்தல பிரார்த்தனை விசேஷம் :

பஞ்ச பாஸ்கர க்ஷேத்திரங்களில் ஒன்று (சூரியன் தன்னைத்தானே ஆத்ம பூஜை செய்து கொண்ட ஸ்தலங்களில் ஒன்று) இத்திருக்கோயிலில் பிரதி வருடம் பங்குனி மாதம் 17, 18, 19 தேதிகளில் காலை 6.00 மணி முதல் 6.15 வரை சூரியனுடைய ஒளிக்கதிர்கள் சுவாமிமேல் விழுந்து சூரிய பூசை நடைபெற்று வருகின்றது.

இத்திருக்கோயிலில் சூரிய பகவான் தட்ச யாகத்தில் சிவபெருமானுடைய அனுமதி இல்லாமல் கலந்து கொண்டதற்காக ஸ்ரீ அகோர வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டு அந்த தோஷ நிவர்த்திக்காக 16 சிவஸ்தலங்களில் பிரதிஷ்டை செய்து தோஷம் நிவர்த்தியடைந்துள்ளார். (சங்கரன் கோயில் தலைஞாயிறு சென்னை அருகில் உள்ள ஞாயிறு என்ற ஊர் ஆடுதுறை அருகில் உள்ள சூரியனார் கோயில், திருமங்கலக்குடி வட இந்தியாவில் உள்ள கோனார்க் ஸ்தலம் போன்றது)

மேலும் பித்ருகாரகனாகிய சூரியன் கெட்டிருந்தாலும் மேற்படி பரம்பரையில் ஏற்படும் பித்ருதர்ப்பணதோஷம் இங்கு பிரார்த்தனை செய்வதால் நிவர்த்தி ஏற்படுகின்றது.

மேலும் கார்த்திகை, உத்திரம் உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும், சூரிய திசை நடைமுறையில் உள்ளவர்களுக்கும், சிம்மம் லக்னத்தில் மற்றும் சிம்மம் ராசியில் பிறந்தவர்களுக்கும், ஞாயிற்றுக்கிழமையில் பிறந்தவர்களுக்கும், சூரியன் உச்சம் பெற்றவர்களும் (சித்திரை மாதம் பிறந்தவர்கள்) மேலும் பிரதி தமிழ் மாதம் முதல் தேதியில் பிறந்தவர்களும், இத்தலத்தில் எழுந்தருளி உள்ள விசேஷ மூர்த்திகளாகிய சூரிய பகவானையும், சிவபெருமானையும் பிரதி தமிழ் மாதம் சுக்ல பட்சம் வளர்பிறையில் வருகின்ற முதல் ஞாயிற்றுக்கிழமையில் வழிபடலாம்.

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்

(அருள்மிகு கேது ஸ்தலம்)
கீழப்பெரும்பள்ளம்
வாணகிரி அஞ்சல் - 609 105
தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டிணம் மாவட்டம்

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் (அருள்மிகு கேது ஸபுதலம்) நாகை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி வட்டம், கீழப்பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ளது.

கேது வரலாறு :

கேது பிறப்பினால் அசுரன். அவனுடைய இளமைப் பெயர் ஸ்வர்பானு. அவனுடைய தாத்தா காசிப முனிவர். தந்தை விபரசித்து, தாய் சிம்கிகை. சிம்கிகையின் மகனாதலின் அவனை சிம்கிகேயன் என்றும் அழைப்பர். தேவரும் அசுரரும் பாற்கடைக் கடைந்து அமிர்தத்தை எடுத்தனர். மோகினி உருவில் வந்த திருமால் அமிர்தத்தை தேவர்களுக்கு பரிமாறிக்கொண்டிருந்தார். அப்போது அமிர்தத்தைத் தானும் உண்ண விரும்பிய ஸ்வர்பானு தேவ வடிவெடுத்து சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் சென்றமர்ந்து அமிர்தத்தை வாங்கி உண்டான். இதனைச் சூரியனும் சந்திரனும் மோகினிக்குச் சொன்னார்கள். மோகினி கையில் வைத்திருந்த கரண்டியால் அசுரனின் தலையில் ஓங்கி அடித்தார். அசுரனின் தரை வேறாகவும் உடல் வேறாகவும் ஆயிற்று. தலை, பாம்பு உடலைக் கொண்ட கருநிற இராகுவாகவும், உடல் ஐந்து நாகத்தலைகளுடன் கூடிய செந்நிறமுடைய கேதுவாகவும் ஆயிற்று. பின்னர் இராகுவும், கேதுவும் தவம் செய்து கிகப் பதவி பெற்றனர். அதற்கு முன்பு இருந்த ஏழு கிரகங்களுடன் இவர்களையும் சேர்த்து நவக்கிரகங்களாக மக்கள் வழிபடலாயினர். கேதுவின் நிறம் சிவப்பென்தால், இவரைச் செந்நிற மல்களாலும், செந்நிற ஆடைகளாலும் அலங்கரிப்பர். கலப்பு நிற ஆடைகளாலும் பலவண்ண மலர்களாலும் அணி செய்வதுண்டு. இவருக்குரிய தானியம் கொள்ளு, சமித்து தர்ப்பை, சுவை புளிப்பு, ஆசனம் கொடி வடிவமுடையது. நவரத்தினங்களில் வைடுரியம் இவருக்குரியது. இவருக்கு உச்சவீடு விருச்சிகம், நிசவீடு ரிஷபம், திசை வடமேற்கு, சன்யும் சுக்கிரனும் நண்பர்கள். சூரியன், சந்திரன் செவ்வாய் ஆகிய மூவரும் இவருக்குப் பகைவர்கள். இவர் ஜைமினி கோத்திரத்தவர், கேதுவின் மனைவி பெயர் சித்ரலேகா. கேது அலிக்கிரகம். இவர் மேரு மலையை இடமாக சுற்றிவரக் கூடியவர். இராசி மண்டலத்தில் இவர் அப்பிரதட்சணமாக சுற்றுவார். கேது பகவானுக்கு இச்சிவாலயத்தில் தனி சன்னதி உள்ளது.

கேது தோஷம், புத்திர தோஷம், திருமண தோஷம், காலசர்ப தோஷம், பூர்வஜென்ம தோஷம் ஆகியவை இத்தலத்திற்கு வந்து வணங்குவோர்க்கு நீங்கும்.

நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி :
செயல் அலுவலர்
அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் (அருள்மிகு கேது ஸ்தலம்)
கீழப்பெரும்பள்ளம், வாணகிரி அஞ்சல் - 609 105.
தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டிணம் மாவட்டம்

அருள்மிகு விசாலாட்சி அம்பாள் உடனுறையும் அருள்மிகு காசிவிசுவநாதசுவாமி நவகன்னிகைகள் திருக்கோயில்

கும்பகோணம்

அலைகடலால் சூழப்பட்ட இப்பூலவுகில் ஊழிகாலத்திலும் அழியாது நின்று விளங்கிய திருக்குடமூக்கு என்னும் பெயர் பெற்ற இத்திருத்தலம் புண்ணிய நதிகளாம் காவேரியும் அரிசொல்லும் இத்தலத்தில் இரு புயங்களென அமைந்து இத்தலம் வாழ் மக்களை அரவணைத்து வளம் செய்து வருகின்றன. இப்பெருமைகளைப் பெற்ற இத்தலத்தின் இதயம்போல் விளங்கும் மகாமகத் திருக்குளத்தில் வடகரையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

முற்காலத்தில் கங்கை நதிதீரம் முதல் காவேரி நதிதீரம் வரையுள்ள நதிகளின் தீர்த்தத் தேவதைகள் ஒன்பதின்மரும், கைலாசபதிவாழ் கடவுளான உமாபதியிடம் சென்று ''எல்லோரும் தங்கள் பாவங்களைப் போக்க எங்களிடம் நீராடுகிறார்கள். அப்பாபங்களை நாங்கள் போக்கிக் கொள்வது எப்படி?'' என்று முறையிட்டு, அதற்கு உபாயம் வேண்டி நின்றனர். உலக பிதா உமாபதி, உபாயம் வேண்டி நின்ற கன்னியர் ஒன்பதின்மரையும், உழிகாலத்தில் மிதந்துவந்த சிருட்டிபீசம் அமைந்த குடத்தை, தான் வேடுவ உருதாங்கி உடைத்தபோது குடத்திலிருந்து அமுதம் தங்கிய இடமானதும் திருக்குடமூக்கு என்றும் பெயர் பெற்ற திருத்தலத்தில் அமைந்திருக்கும் மகாமக தீர்த்தத்திற்கு சென்று நீராடி பாப விமோசனம் பெறும்படி அருளினார். கன்னியர் ஒன்பதின்மரும் அத்தலமிருக்கும் இடமறியோம் என்றுகூற இவர்களை காசிக்குச் செல்லும்படிகூறி தானும் காசிக்கு சென்றார். பின்னர் இறைவன் இறைவியுடனும், தன் பிரதம கணங்களுடனும், கன்னியர் ஒன்பதின்மருடனும், இத்தலம் வந்தடைந்து தாம் மேற்கு முகமாக அமர்ந்து கன்னியர் ஒன்பதின்மரையும், மகாமகத்தீர்த்தத்தில் மூழ்கச்செய்து அவர்களது பாபத்தை போக்கியதாகவும் புராண வரலாறு கூறுகின்றது. அவ்வாறு பாப விமோசனம் அடைந்த கன்னியர் ஒன்பதின்மரும் இறைவன் அமைந்த இத்திருக்கோயிலில் நவகன்னிகைகளாக இடம்பெற்று, வணங்கி வழிபடுவோருக்கு வேண்டிய வேண்டியாங்கருளி வருகின்றார்கள். காசியிலிருந்து இறைவன் இங்கு வந்ததால் இறைவனுக்கு காசிவிசுவநாதர் என்றும், இறைவிக்கு விசாலாட்சி அம்பாள் என்றும் பெயர்.

மகாமகக் காலத்தில் நவநதி கன்னியர் இத்தீர்த்தத்தில் நீராடி தங்கள் பாபத்தை போக்கிக் கொண்டு எப்பொழுதும் நவதீர்த்தங்களாக இத்திருக்குளத்தில் தங்கியதால் இத்தீர்த்தத்திற்கு கன்னிகா தீர்த்தம் என்ற பெயரும் உண்டு.

இத்தீர்த்தத்தை ஒருமுறை வணங்கினால் தேவர்கள் யாவரையும் வணங்கிய புண்ணியமும், ஒருமுறை வலம் வந்தால் பூமியை நூறு முறைவலம் வந்த புண்ணியமும், ஒருமுறை நீராடினால் கங்கையில் நூறு வருடங்கள் வசித்த புண்ணியமும் உண்டாகும். ஒருவன் மகத்தன்று புனிதநீர் ஆடுவதால் அவனைச் சார்ந்த மனைவி, மக்கள் முதலான ஏழு கோத்திரத்தினரின் பாவமும் நீங்கும்.

இத்தலத்தில் அமைந்துள்ள ஸ்ரீநவகன்னியம்மனை வழிபடுவதால் உண்டாகும் பலன்கள் :

1. ருது ஆகாத பெண்கள் 12 வெள்ளிக்கிழமைகள் விரதம் இருந்து வந்தால் ருதுவாகும்.
2. திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்கள் ஸ்ரீநவக்கன்னியம்மனுக்கு 12 வெள்ளிக்கிழமை விரதம் இருந்து அர்ச்சனை செய்தால், திருமணம் நடைபெறும்.
3. குழந்தை பாக்கியமில்லாதவர்கள் மகாமக பொங்கல் செய்து 12 வெள்ளிக்கிழமை விரதம் இருந்து வந்தால், குழந்தை பாக்கியம் உண்டாகும்.
4. ஸ்ரீ நவக்கன்னியம்மனுக்கு அர்ச்சனை செய்தால், சகல கஷ்டங்களும் நிவர்த்தியாக நன்மைகள் உண்டாகும்.
5. பிரதி மாதம் மக நட்சத்திரன்று மகாமக திருக்குளத்தை ஒன்பது முறை மாலையில் வலம் வந்து, ஸ்ரீ நவக்கன்னியம்மனுக்கு பாலாபிஷேகம் மற்றும் நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் கஷ்டங்கள் நீங்கி, செல்வம் பெருகும்.



அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில்

திருவக்கரை

வானூர் வட்டம் - விழுப்புரம் மாவட்டம்

இருப்பிடம் :

இத்திருக்கோயில் திண்டிவனத்திலிருந்து மைலம் வழியாக பாண்டிச்சேரி செல்லும் பேருந்து பாதையில் பெரும்பாக்கம் என்னும் இடத்தில் இறங்கி தெற்கு நோக்கி 7 கி.மீ. தூரம் சென்றால் திருவக்கரையை அடையலாம்.

தலச்சிறப்பு :

இத்திருத்தலம் மிகப்பழமையும் பெருமையும் புனிதமும் வாய்ந்த புண்ணியத்தலமாம் தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி எனப்பாடிய சமயக்குரவர் நால்வருள் முதலாமவராக உள்ள பார்வதி தேவியிடம் ஞானப்பால் பருகிய திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற சிவதலங்களுள் இது முப்பதாவது ஸ்தலமாகும்.

இத்திருக்கோயில் வராக நதி என அழைக்கப்படும் சங்கராபரணி ஆற்றின் வடகரையில் உள்ள திருவக்கரையில் பெரிய இராஜகோபுரத்துடன் கம்பீரமாக அமைந்துள்ளது. இராஜகோபுரத்தை அடுத்த கோயிலின் உட்பகுதியில் இடப்பக்கமாக அருள்மிகு வக்கிரகாளியம்மன் சந்நதி உள்ளது. பொதுவாக காளிகோயில் ஊரின் எல்லையில் தான் இருக்கும். ஆனால் இங்கு ஊரின் நடுவில் இராஜகோபுரத்தின் நுழைவு வாயில் அருகிலேயே அமைந்து வக்கிரகாளியம்மன் என்ற பெயரில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறாள்.

பௌர்ணமி தினத்தில் இரவு 12 மணி பூஜையில் காளியம்மனை தரிசித்தால் காளியின் சாந்த சொரூபத்தை காணுவதுடன் எல்லாம்வல்ல இறையருள் பெற்று பயனடையலாம். பௌர்ணமி தினத்தில் கோவிலை சுற்றி கிரிவலம் வந்தால் நன்மை பயக்கும். நினைத்த காரியம் கைகூடும்.

தல குறிப்பு	கோயிலின் பெயர்	- அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில்
	கட்டியது	- ஆதித்ய சோழமன்னனால் கட்டப்பட்டது
	காலம்	- சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு
	இறைவன் பெயர்	- அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர்
	தேவாரத் திருப்பெயர்	- ஸ்ரீ சந்திரசேகர பிரயணி கொன்றையினான்
	இறைவி	- அருள்மிகு அமிர்தாம்பிகையம்மன்
	தேவாரத் திருப்பெயர்	- ஸ்ரீ வடிவாம்பிகையம்மன்
	தலவிருட்சம்	- வில்வம்
	ஆறு	- வராக நதி (எ) சங்கராபாணி
	தீர்த்தம்	- சூரிய புட்கரணி, சந்திர புட்கரணி
	நிர்வாகம்	- தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

குறிப்பு : இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட அன்னதானத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பக்தர்கள் இத்திட்டத்திற்கு நன்கொடை அளித்து அருள்மிகு வக்கிரகாளியம்மனின் அருளைப்பெற வேண்டுகிறோம்.

அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்

மேல்மலையனூர் - விழுப்புரம் மாவட்டம்

இருப்பிடம் :

அருளே உருவான அருள் அம்பிகையாம் அருள் தரும் ஸ்ரீ அங்காளம்மன் தலைமை தாய் என்றும், மூல சக்தி என்றும், முதல் சக்தி என்றும் ஆதி சக்தி என்றும் 56 தேசம் எங்கும் நிறைந்தவள் என்றும் நம் போற்றுதலுக்கும் புகழ்தலுக்கும் உரிய அங்காளபரமேஸ்வரியம்மன். மண்புற்றே சுயம்பு அம்மன் வடிவமாய், மல்லார்ந்த பாவனையாய் வயோதிக மாது குனிந்தபடி அமர்ந்த நிலையில் மானிட உருவமாய் எழுந்தருளி கேட்டவருக்கு கேட்ட வரத்தை கொடுக்கும் கலியுக கண்கண்ட தெய்வமாய் அங்காளம்மனாக அருள்புரியும் தலமே மேல்மலையனூர் ஆகும். விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்தில் திருவண்ணாமலையிலிருந்து கிழக்கே 35 கி.மீ. தூரத்திலும் செஞ்சிக்கு வடக்கே 20 கி.மீ. தூரத்திலும் சென்னையிலிருந்து தென்மேற்கே திண்டிவனம் வழியாக 160 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

தலச்சிறப்பு :

பிரம்மஹத்தி தோஷம் கொண்ட சிவன் பூங்காவனத்தாயின் இருப்பிடமான மலையனூருக்கு வந்து இரவில் தங்குவார். அந்த இரவை சிவன் இராத்திரி என்று அழைப்பதாக கூறுவர். பிரம்மஹத்தி விடுபடும் நேரம் நெருங்கிவிட்டது என்பதையே கரகம் கூடிப்போச்சு என்ற பழமொழிகள் வழக்கத்தில் தோன்றியதாகவும் கூறப்படுகிறது.

இத்திருக்கோயிலில் உள்ள சுயம்பு புற்று அம்மன் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்படுகிறது. மதங்க முனிவர் மற்றும் சன்னு முனிவரால் பாடப்பெற்றுள்ளது. மும்மூர்த்திகளில் முதல் மூர்த்தியாக சிவபெருமானுக்கே பிரம்மஹத்தி நீங்கிய இடமாக கருதப்படுவதால் அமாவாசை தோறும் தொடர்ந்து மூன்று முறை வருகை தந்தால் அவர்களை பிடித்துள்ள பிணிகள், பீடைகள், சகடைகள், தோஷங்கள், ஏவல், வைப்பு, பில்லி, சூனியம், காட்டேரி, சேட்டை எதுவாயினும் அம்மன் திருவருளால் தானாக விலகுகிறது. வேண்டியது வேண்டியபடி நடக்கிறது. கலியுக கண்கண்ட தெய்வம்அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி ஆதிபராசக்தி அங்காள பரமேஸ்வரியை காண மேல்மலையனூர் வந்து அருள்தரும் ஸ்ரீ அங்காளம்மனின் அருளைப் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

அருள்மிகு வில்லியாண்டவர் திருக்கோயில்

அணைக்கரை

திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

தலவரலாறு :

சோழவள நாட்டில் புண்ணிய நதிகளாம், காவிரியும் - கொள்ளிடமும் பாய்ந்து செந்நெல் வளம் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு வடபாலும், சோழ மாமன்னன், ராஜேந்திர சோழனால் நிர்மாணம் செய்யப்பட்ட கங்கைகொண்ட சோழிச்சரத்தின் தென்பாலும் தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களின் சந்திப்பிலும் அமைந்த இயற்கை எழில் சூழ்ந்த நாற்புறமும் நீர் சூழ்ந்த கீழணை எனும் அணைக்கரையில் நுங்கும் நுரையுடன் பொங்கிவரும் கொள்ளிடத்தை தன் கழுத்திலே மாலை போல் அணிந்து வெள்ள அபாயத்திலிருந்து அனைக்காத்து ஸ்ரீ குட்டி ஆண்டவர் என்னும் ஸ்ரீ வில்லியாண்டவர் (அய்யனார்) பூர்னா-புஷ்கலா நல்லநாயகி சமேத கோயில் கொண்டு தன்னை நம்பி வழிபடுபவர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

இவர் ஆற்றுத் தண்ணீரிலே குழந்தை வடிவத்தோடு மிதந்துவர என்னை காப்பாற்றுங்கள் என்று குழந்தை ஒலி கேட்டது. அம் மழலையின் ஒலி கேட்ட மக்கள் இவ்வாறு பெருகிய நீரில் இருந்து இக்குழந்தையை எவ்வாறு காப்பாற்றுவது என்று நினைத்த சமயம் முன்னே வற்ற பின்னை பெருகும் என்ற அருள்வாக்கின்படி மக்கள் செல்ல முன்னே நீர் குறைந்து,. பின்னே பெருகியது. அக்குழந்தையை தோளில் சுமந்து வர தோள் பாரம் தாங்காமல் ஏரழஞ்சி மரத்தடியில் வைத்தார்கள். அது முதல் ஸ்ரீ வில்லியாண்டவர் எனும் திருநாமத்தோடு சகல மக்களையும் காத்து வருகிறார். நல்லநாயகி என்ற பெண் ஸ்ரீ ஆண்டவரை காண வந்து அங்கேயே தங்கிவிட பெண்ணின் உறவினர்கள் தேடிவர தன் தென்புரத்தே கோவில் கொண்டு நல்ல நாயகி அம்மன் என்னும் திரு நாமத்தோடு விளங்குவாள் என்ற ஆண்டவன் அசரீரிப்படி ஆலயமும் அமைந்துள்ளது.

ஆங்கிலேயர்கள் ஸ்ரீ ஆண்டவரை நினையாது கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்டினார்கள். அது கட்ட கட்ட யானை அடியுடன் இடிந்துவிழ அது கண்ட ஆங்கிலேயர்கள் ஸ்ரீ வில்லியாண்டவருக்கு முன்னே சுமார் நாற்பது அடி உயரமுள்ள யானைச்சுதை கட்டுவித்து ஆண்டவனை வேண்டிட பாலமும் நன்கு அமைந்தது எனக்கூறும் பெருமையினை உடையது. ஆலயத்தை சுற்றி சேவார்த்திக்கள் வேண்டுதல் பலித்தம் தொடர்பாக செய்துவைக்கப்பட்ட ஏராளமான குதிரைச்சுதைகளும் உள்ளன.

திருக்கோயிலின் முன்புறம் உள்ள ஏரழுஞ்சி மரமே ஸ்தல விருட்சமாக வணங்கப்படுகிறது. மணிக்குடி ஜெயராம் அய்யர் உபயமாக ரூ.2500/- மற்றும் அரசு நிதியுதவி ரூ. 22.500/-ன் மூலம் ஒரு கால பூஜை நடைபெற்றுவருகிறது. இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தின் நிர்வாக அதிகாரியால் மயிலாடுதுறை இணை ஆணையரின் மேற்பார்வையில் நிர்வாகம் நடைபெற்றுவருகிறது. (அலுவலக இருப்பு - அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில் பந்தநல்லூர்)

அருள்மிகு வீரஆஞ்சநேயசுவாமி திருக்கோயில்

திருப்பாதிரிப்புலியூர் - கடலூர் -2.

கடலூர் மாவட்டத்தின் தலைநகராம் கடலூரில் திருப்பாதிரிப்புலியூர் என்னும் திவ்விய ஸ்தலத்தில் கெடில நதிக்கரையின் மேற்கே பேருந்து நிலையத்தின் அருகில் இத்திருத்தலம் அமைந்தள்ளது.

1. திருக்கோயில் தோற்றம் :

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் இத்திருக்கோயில் அமைந்துள்ள இடம் முட்புதர்களாக இருந்தது எனவும், அதில் கிடந்த ஒரு கருங்கல்லினைப் புரட்டிப்பார்க்கும் போது அதில் வீர அஞ்சநேயர் உருவம் இருந்ததால் அதனைக்கண்ணுற்ற புகைவண்டி நிலைய அதிகாரி ஒருவர் சிறிய கொட்டகை அமைத்து வழிபாடு செய்ததாகவும், நாளடைவில் சிறிது சிறிதாக கோயில் கட்டுமானம் நடைபெற்று மிக சிறப்பாக அமையப்பெற்றுள்ளது.

2. பிரார்த்தனை தலம் :

இத்திருக்கோவில் ஸ்ரீ வீரஆஞ்சநேயசுவாமியை பிரார்த்திக்க பிரதி வாரம் வியாழன், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சிறப்பானவை ஆகும். இங்கு வேண்டும் வரங்கள் கிடைக்கும் என்பது பிரசித்தம். இங்குள்ள அருள்மிகு வீர ஆஞ்சநேய சுவாமிக்கு வெண்ணை சாற்றி, வடைமாலை சாற்றி வழிபடுவது மிக்க சிறப்புடையதாகும்.

3. திருவிழாக்கள் :

பிரதி வருடம் மார்கழி மாத அமாவாசையன்று ஸ்ரீ அனுமத்ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஸ்ரீராமநவமியை அடுத்து பத்தாம் நாள் முதல் தொடங்கி பதிமூன்று நாட்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தமிழ் வருடப்பிறப்பான சித்திரை முதல் நாள் லட்ச தீப விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அன்றை தினம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஒன்று கூடி இலட்சம் விளக்குகள் ஏற்றி ஆஞ்சநேயரை வழிபடுகிறார்கள்.

4. அன்னதானதிட்டம் :

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின், சீரிய திட்டமான அன்னதானத்திட்டம் 22.9.2002 முதல் சிறப்புற நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் 31.1.2004 வரை மொத்தம் 27,931 பக்தர்கள் அன்னதானம் உண்டு அகமகிழ்ந்துள்ளனர்.

வேண்டுவோர்க்கு வேண்டுவரம் அளித்து அருள்பாலிக்கும் அருள்மிகு வீரஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு வருகைதந்து அருள்பெற அன்புடன் அழைக்கிறோம்.

க.கிருஷ்ணகுமார்
நிர்வாக அதிகாரி

திருமணம் பிரார்த்தனை ஸ்தலம்

அருள்மிகு பரிமள சுகந்த நாயகி சமேத மணவாளேஸ்வரர் திருக்கோயில்

திருவேள்விக்குடி - 609 801.

ஸ்தலம் இருப்பிடம் :

மயிலாடுதுறை வட்டம் திருவேள்விக்குடி அருள்மிகு மணவாளேஸ்வரர் ஆலயம் காவேரியாற்றின் வடகரையில் குத்தாலத்தில் இருந்து 1 1/2 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

தேவார பாடல்கள் :

திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் நாயன் மார்களால் பாடல் பெற்ற 23வது ஸ்தலமாக அமைந்தள்ளது.

திருத்தல மகிமை :

சிவபெருமானது திருவேள்வி நடந்த ஸ்தலமாதலின் இத்தலம் திருவேள்விக்குடி என்னும் பெயர் பெற்று விளங்குகிறது. உமா தேவியார்க்கு கங்கணதாரணம் செய்தபடியால் கௌதுகாபந்தன க்ஷேத்திரம் என்ற பெயரும் கௌதகேசன், கௌதகேசரி, கௌதுகா தீர்த்தம் என்று மூர்த்தி, தலம், தீர்த்தம் யாவும் கௌதுகா என பெயரோடு சிறக்க விளங்குகிறது. இறைவன் பெயர் மணவாளநாதர், கல்யாணசுந்தரர், கௌத கேசன் இறைவி பெயர் பரிமள சுகந்த நாயகி என்று பெயர் பெற்று விளங்குகிறது.

தீர்த்தம் :

சுவாமி, அம்பாள் இருவரும் திருமணத்திற்கு முன் மங்கல ஸ்தானம் செய்த படியால் இத்திருக்குளத்திற்கு கௌதுகா பந்தன தீர்த்தம் என்ற பெயரோடு கோவிலின் பின்புறம் உள்ளது. கோவிலுக்கு எதிரில் அக்கினி தீர்த்த திருக்குளம் உள்ளது. அக்கினி தீர்த்தத்தில் நீராடி வழிப்பட்டால் சகல வியாதிகளும் அகன்று நற்பலன் கிடைப்பது நிதர்சனம்.

சிறப்பு :

இறைவன், இறைவியின் திருமணம் நிகழ்ந்த தலம் ஆதலின் அனைத்து தேவர்களும் வந்திருந்து பரமேஸ்வரனுக்கும், பரமேஸ்வரிக்கும் பிரம்மாவால் வேள்வி செய்யப்பட்டு திருமணம் நிகழ்ந்த ஸ்தலமாதலால் இங்கு நவகிரகங்கள் கிடையாது. ஈஸ்வரனே ஈசான்ய மூலையில் நவகிரஹமாக அருள்பாலித்து வருகிறார். நவகிரஹ தோஷம் உள்ளவர்கள், நீண்டநாள் திருமணம் ஆகாமல் தடையாய் உள்ளவர்களும் இவ்வாயலத்திற்கு வந்து திருக்குளத்தில் நீராடி வழிப்பட்டால் திருமண தடை நீங்கப்பெற்று திருமணம் விரைவில் நடைபெறும். மாதந்தோறும் பௌர்ணமி அன்று காலை 10.00 மணி அளவில் சிறப்பாக நடைப்பெற்று வரும் யாகத்தில் பலர் கலந்து கொண்டு நற்பலன் பெற்று வருகிறார்கள். இவ்வாலயம் 2003ம் ஆண்டு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் திருமணம் பிரார்த்தனை செய்பவர்கள் அனைவரும் வந்து ஸ்ரீ மணவாளேஸ்வரர் மற்றும் அம்பாளை தரிசித்துப் பலன் பெற வேண்டுகிறோம்.

S.பிரேமா
தக்கார் / ஆய்வர்

மு.கண்ணபிரான் B.Sc.,
செயல் அலுவலர்

அருள்மிகு அனுமார் திருக்கோயில்
பெரிய கடைத் தெரு, கும்பகோணம் நகர், வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்

அமைவிடம் :

சோழ வள நாட்டின் தஞ்சை மாவட்டத்தின் முக்கிய நகரான குடந்தை மாநகரின் மையப்பகுதியில் உள்ள பொற்றாமரை தீர்த்தத்தின் மேல் கரையில் பெரிய கடைத் தெருவில் அமைந்துள்ளது அருள்மிகு அனுமார் திருக்கோயில்.

மூர்த்திகள் :

மூலவர் நின்ற திருக்கோலம். உற்சவ (உலோகத் திருமேனி) மூர்த்தியும் நின்ற திருக்கோலமேயாகும்.

பூஜை விவரங்கள் :

இத்திருக்கோயிலில் பாஞ்சராத்ர ஆகம முறையில் பூஜைகள் நடைபெற்று வருகின்றது. தினசரி இரண்டு கால பூஜை நடைமுறையில் உள்ளது.

நிர்வாகம் ;

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் மயிலாடுதுறை இணை ஆணையர் மண்டலத்திலும் கும்பகோணம் உதவி ஆணையர் பிரிவிலும் உள்ள இத்திருக்கோயில் செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

திருவிழாக்கள் :

இத்திருக்கோயிலின் முக்கிய திருவிழாக்கள் ஸ்ரீ அனுமத் ஜெயந்தி, நவராத்திரி திருவிழா, 12 கருட சேவை, மற்றும் சித்திரைத் திருவிழாக்கள் ஆகும்.

அருள்மிகு அனுமார் மகிமை ;

ஸ்ரீ வைகுண்டத்தில் சதா கைங்கர்யம் செய்யும் கருடனை பெரிய திருவடி என்றும், பூலோகத்திலிருக்கும் மனோ பலத்திலும், சரீரபலத்திலும், யுத்தத்திலும், தர்மத்ததை காப்பதிலும் தன்னை நம்பியவர்களுக்கு எல்லாவிதமான அருளையும் கொடுக்கும் ஸ்ரீ அனுமான் ஸ்ரீ சீதாராமனால் சிறிய திருவடி என்ற பெருமைக்குரியவர் ஆவார். அத்தனை பெருமைக்குரிய ஸ்ரீ அனுமாருக்கு திருமஞ்சனம் செய்வது உகந்த ஒன்றாகும். முக்கிய நாட்களில் ஸ்ரீ அனுமாருக்கு திருமஞ்சனம் செய்தால் அதன் பயனைப் பெற்று பெரு வாழ்வு வாழலாம் அதற்கு உகந்ததான உபகரணமான திரவியங்களைக் கொண்டு செய்தால் அவ்வவற்றிற்கும் தகுந்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கையாய் இருந்து வருகிறது.

கும்பகோணம் நகர் பெரிய கடைத்தெருவில் நடுநாயகமாக அமைந்திருக்கும் அருள்மிகு திருக்கோயிலில் உள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்ரீ இராமபிரானையே தியானித்துக் கொண்டும், அவரது நாமாவையே ஜெபித்துக் கொண்டும் அஞ்சலிஹஸ்தராய் எழுந்தருளியுள்ளார்.

இத்திருக்கோயில் மஹா சம்ப்ரோக்ஷணம் 1.9.2003 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

நன்கொடைகள், காணிக்கைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

செயல் அலுவலர்
அருள்மிகு அனுமார் திருக்கோயில்
பெரிய கடைத் தெரு,
கும்பகோணம் நகர் - வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

அருள்மிகு பிரசன்ன மாரியம்மன் திருக்கோயில்

வண்டிக்காரத் தெரு, மயிலாடுதுறை நகர், நாகை மாவட்டம்

இத்திருக்கோயில் நகரின் மையப் பகுதியில் பேருந்து நிலையத்துக்கு அருகில் கடைத் தெருவில் அமைந்துள்ளது. வர்த்தகப் பெருமக்கள் அனைவரின் வழிப்பாட்டிற்கு உரியதாகும். மயிலாடுதுறை வந்து செல்லும் பயணிகள் அனைவரின் வழிபாட்டிற்கு உரியதாகவும் உள்ளது. பக்தர்களின் வேண்டுதலுக்கு உடனடியாக அருள் பாலிக்கும் தெய்வமாகவும் அம்மை முதலான உடல் நோவு கொண்டவர்கள் விரதமிருந்து நோவுதீர்க்கும் தெய்வமாகவும் அருள்மிகு பிரசன்ன மாரியம்மன் கருணையே வடிவமாக விளங்குகின்றார்.

இத்திருக்கோயிலில் 22.3.02 முதல் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டம் சிறப்புற நடைபெற்றுவருகின்றது. திருமண நாள், வியாபாரம் துவங்கிய நாள், பிறந்த நாள், நீத்தோர் நினைவு நாள் ஆகிய நாட்களில் இத்திருக்கோயிலில் உபயமாக ரூ.1000/- (ஒரு ஆயிரம்) செலுத்தி ஒரு நாள் அன்னதானத்தை நடத்துவது சிறப்புடையது ஆகும். ரூபாய் 15,000/- (பதினைந்து ஆயிரம்) நிரந்தர வைப்பில் செலுத்தி வருடந்தோறும் ஒரு நாள் அன்னதானத்தை நடத்தி வைக்கலாம்.

எஸ்.ராஜேந்திரன் எம்.ஏ.,
செயல் அலுவலர்

தி.சுவாமிநாதன் பி.ஏ., பி.எல்.,
துணை ஆணையர் / நகை சரிபார்ப்பு தக்கார்

அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம்

வடலூர் - 607 303.

துய்ப்பினில் அனைத்தும் சுகம்பெற அளித்து எனக்கு
எய்ப்பெலாம் தவிர்த்த இன்புடைத்தாயே - வள்ளலார்

உலகில் சாதி, சமய, மத பேதமற்ற சன்மார்க்கம் தழைக்கவும், மக்களின் ஆன்மநேய ஒருமைப்பபாட்டுக்காகவும், பசிப்பிணியினைப் போக்கவும், ஞானஒளியைப் பரப்பவும் வேண்டி கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகே மருதூர் என்னும் கிராமத்தில் வள்ளல்பெருமான் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் அவதரித்தார்.

அவர் தோற்றுவித்த தருமச்சாலையில் தினந்தோறும் மூன்று வேளையும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

சத்திய ஞானசபையில் மாதப்பூசம், தைப்பூச நாட்களில் ஜோதி தரிசனம் காண்பிக்கப்படுகிறது.

இறைவன் ஒருவரே. அவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

நாம் அனைவரும் ஓர் உரிமையுள்ள சகோதரர்களே என்பதே வள்ளலார் வகுத்த நெறி.

திருவருட்பா பாடல்கள் மற்றும் உரைநடை இவைகளின் மூலம் இறைவனைப் பாடிப் பரவுகின்றார்.

திருஅருட்பா புத்தகங்கள் இவ்வறநிலையத்தால் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வறநிலைய அன்னதானப் பணிக்கு நன்கொடை வழங்குவோர் எம்.ஓ., டி.டி., மூலம் நிர்வாக அதிகாரி, வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர் என்ற பெயரில் அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அருள்மிகு வேதாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயில்
வேதாரண்யம் - 614 810, நாகப்பட்டினம் மாவட்டம்

திருமறைக்காடு என்று தமிழிலும், வேத ஆரண்யம் என்று வடமொழியிலும் வழங்கப்பெறும் இத்தலம் இன்றைய நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்து உள்ளது. தஞ்சையிலிருந்தும், நாகப்பட்டினத்திலிருந்தும் இத்தலத்தை எளிதில் சென்றடையலாம். திருத்துறைப்பூண்டியிலிருந்து ரெயில் பஸ் வசதி உண்டு.

இத்தலம் புராண காலத்திற்கும் முந்தையது. அகத்தியர் போன்ற முனிவர்களும், தசரதன், விசுவாமித்திரன், இராமபிரான், வசிட்டர் போன்ற இதிகாசக் காலத்து பெருமக்களும், முசுகுந்தச் சக்கரவர்த்தி போன்ற புராண காலத்து மன்னர்களும், பின்னர் வாழ்ந்த சேர சோழ பாண்டிய மன்னர்களாலும் வழிபடப்பெற்றது. சைவத் திருமுறைகள் இத்தலத்தை மறைக்காடு, மறைவனம், வேதவனம் என்று போற்றிப் புகழ்கின்றன. தேவாரத்தின் ஏழு திருமுறைகளிலும் பதிகம் பெற்ற சிறப்பான தலம் இது. வடமொழி -வேதங்கள் நான்கும் மனித உருக்கொண்டு இத்தலத்திற்கு அண்மையில் உள்ள நாலுவேதபதி என்கிற ஊரில் தங்கி அருகாமையில் உள்ள புஷ்பவனம் என்கிற ஊரில் மலர் எடுத்து இத்தலத்து இறைவனைப் போற்றி வழிபாடுகள் செய்தன. பின்னர் இத்தலத்தின் பிரதான வாயிலை அடைத்து விட்டுச் சென்று விட்டன. இன்றும் இத்தலத்தைச் சுற்றிலும் மரம், செடி வனமாக இருந்து இறைவனை வழிபாடு செய்து வருவதாகக் கருதப்படுகிறது. பிரதான வாயில் அடைக்கப்பட்ட பின்னர் பொதுமக்கள் பக்கத்திலுள்ள திட்டி வாயில் வழியாக வந்து இறைவனை வழிபட்டு வந்தனர். பின்னர் இத்தலத்திற்கு வருகைதந்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் தேவராத் தமிழ்ப்பதிகம் பாடித் திறக்கவும், மீண்டும் திருக்கதவு தாள் செய்யப்படுதலும் நிகழ்ந்தன. இவ்வாறு வடமொழியும், தென் தமிழும் வழிபாட்டு ஆற்றிலின் ஒன்றே என நிரூபணம் ஆகிய இடம் இவ்வூர். பரஞ்சோதியார், தாயுமானவர் அவதாரத் தலமாகும்.

அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் இவருக்கு ''மறைக்காட்டுறையும் மணாளா'' என்ற பெயரும் உண்டு வேதநாயகி அம்மன் இவருக்கு ''யாழைப் பழித்த மொழியாள்'' எனவும் ''வடமொழியில் வீணாவாத விதூஷணி'' என்ற பெயரும் உண்டு.

இத்திருக்கோவிலில் நித்தியபடி பூஜை உபயத் திட்டமும், அன்னதானத் திட்டமும் நடைமுறையில் உள்ளன. நாளும் 50 நபர்களுக்கு மதியம் உணவளிக்கப்பெறுகிறது. ஒரு நாளைக்கு ரூ.600 செலுத்த வேண்டும் நன்கொடை மற்றும் காணிக்கைகளை அனைத்து ICICI. வங்கி கணக்கு எண் 612801105380ல் செலுத்தலாம். மேலும் விபரங்களுக்கு இணைய தளம் WWW.VEDARNYESWARA SWAMY TEMPLE.COM மூலம் அறியலாம். நன்கொடைகளுக்கு 80G வருமான வரிவிலக்கு உண்டு. வருக திருவருள் பெறுக.

S.ஜோதி B.A.,
செயல் அலுவலர்

T.விஜயகுமார் M.A., B.L.,
தக்கார் / உதவி ஆணையர்

மகாமகம் 2004 மலர் சிறக்க வாழ்த்தும் வங்கிகள்

தனிப்பட்ட கடனுதவி

உங்களின் எல்லாத் தேவைகளுக்கும்,
எல்லா நேரங்களிலும்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்
மத்திய அலுவலகம் : 763, அண்ணா சாலை, சென்னை - 600 002.
www.iob.com

BUILD A BETTER LIFE AROUND US

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

सेन्ट्रल बैंक ऑफ इंडिया
Central Bank of India

கிளை - தஞ்சாவூர்

WELCOMES PILGEGRIMS TO MAHAMAHAM - 2004

SyndicateBank

REGIONAL OFFICE, CHENNAI
&
THANJAVUR BRANCH

Indian Bank

WISHING THE DEVOTEES ALL PROSPERITY AND HAPPINESS
Circle Office, Thanjavur. Ph:237524, 235358

In the Service of the people since 1907

மக்களின் பேராதரவைப் பெற
Indian Bank **இந்தியன் வங்கி**

மிகக் குறைந்த வட்டியில் வீட்டு வசதி கடன், வாகனக் கடன், உயர்கல்விக் கடன், வியாபாரக் கடன்
மற்றும் தங்கள் வளர்ச்சிக்கு பல கடன் வசதிகள் வட்டார அலுவலகம், தஞ்சை. போன் : 237524, 235358

बैंक ऑफ़ इंडिया
पथ प्रदर्शक सितारा
BANK OF INDIA
The Guiding Star

வாழ்த்திடும்
தஞ்சாவூர் கிளை

1904 CUB 2004
100years
A Legend in Customer Care

CITY UNION BANK LIMITED

Registered Office : Kumbakonam - 612 001.
E-mail : cubco_kmb@sancharnet.in
Website : http://www.cityunionbank.net

மகாமகம் 2004 மலர் சிறக்க வாழ்த்தும் வங்கிகள்

ICICI Bank
Easy FD
Fixed Deposit with
Debit Card Facility

For further details contact :
TANJORE BRANCH
2651, South Main Street,
Phone : 04362 - 234357 / 234257
www.icicibank.com

24 HOUR CUSTOMER CARE CENTRE - CALL : 98944 - 78000

WITH BEST COMPLIMENTS FROM
ING Vysya
BANK
THANJAVUR.

WITH PROSPERITY TO EVERYONE
Bank of Baroda
THANJAVUR.

உங்கள் வளர்ச்சிக்கு ஓர் உத்தம நண்பன்
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
தஞ்சாவூர் கிளை

WITH BEST COMPLEMENTS FROM

THE FEDERAL BANK LTD.,
REGD. OFFICE : ALWAYE-KERALA

2766, SOuth Ramport,
Thanjavur - 613 001.
Ph:04362 - 231312

E-mail : tjr@federalbank.co.in

தினசரி நகைக்கடன் வழங்கப்படுகிறது
குறைந்த வட்டி துரித சேவை
The Lakshmi Vilas Bank Ltd
THANJAVUR.



அரிய துவாரபாலகர் சிற்பம்
தஞ்சை கலைக்கூடம்

நேபாள நாட்டில் கும்பேசுவரர்



வெள்ளை விநாயகர் - திருவலஞ்சுழி



ஆலய திருக்களிற்றுப்படி